# இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள்

டாக்டர். கே. பகவதி

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

## (தொகுதி - இரண்டு)

டாக்டர் கே. பகவதி

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
டி. டி. டி. ஐ., தரமணி, சென்னை—600 113.

## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title of the book | **Ilakkiyattil Ūrppeyarkal (vol. II)** |
| Author | Dr. K. BHAGAVATHI<br>Senioı Fellow<br>International Institute of Tamil<br>Studies, Madras - 113. |
| Publisher | International Institute of Tamil<br>Studies, Madras - 113. |
| Publication number | 102 |
| Language | Tamil |
| Edition | First |
| Date of Publication | October, 1984 |
| Paper used | 16 kg. D/Demy, White Printing |
| Size of the book | 21 x 18 cms. |
| Printing types used | 10 points |
| Number of copies printed | 2200 |
| Number of pages | 354+viii = 362 |
| Price | **22/-** (Rupees Twenty Two only) |
| Printer | Meeraa press AE-103 Anna Nagar,<br>Madras - 600 040 |
| Binding | Paper back |
| Artist | Amudhone |
| Subject | Place Names in Tamil Literature |

டாக்டர். ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600113.

# முன்னுரை

புதிய ஆய்வாகவும், அதே நேரத்தில் ஆழ்ந்த ஆய்வுத் துறையாகவும் அமைவது ஊர்ப்பெயராய்வுத்துறை. இவ்வாய்வில் ஈடுபட்டு வெளியிட்டுள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு நூல்கள் மூன்று. ஒன்று-கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள், இரண்டு-தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள், மூன்று-தமிழ் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி ஒன்று. வெளியிட எண்ணியிருக்கும் இருபது நூல்களுள், மேற் சுட்டியவற்றைத்தொடர்ந்து நான்காவதாக வெளிவருகிறது இந்நூல்—தமிழ் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-தொகுதி இரண்டு.

பக்திக் காலம் என்று சுட்டப்படும் இடைக்காலத் தமிழகத்தின் ஊர்ப்பெயர்கள் இவண் ஆய்வு செய்யப்படுகின்றன. இக் காலத்து ஊர்ப்பெயர்கள் தொகுப்பிற்குத் தேவாரம் முதல் பெரியபுராணம் வரையிலுமான நூல்கள் தேர்ந்து கொள்ளப் பட்டிருக்கின்றன. இவற்றினின்றும் 385 ஊர்ப்பெயர்கள் கிடைக் கின்றன. இவையனைத்தையும் அகரவரிசைப்படுத்திப்பெயராய்வு செய்து, ஒவ்வொன்றின் பெயர்க் காரணத்தையும் உணர்த்த முயன்றுள்ளார் ஆய்வாளர். அடுத்து ஊர்ப்பெயர்களின்தோற்றக் காரணிகள், தோன்றியுள்ள முறைகள், பக்தியின் செல்வாக்கு போன்ற அனைத்தையும் விளக்குகின்றார். இறுதியில் ஊர்ப்பெய ராய்வுப் பயன்கள், இவ்வாய்வு புலப்படுத்தும் சில நெறிமுறை கள், தமிழகத்தின் வரலாறு தொடர்பான சில சிந்தனைகள் உரைக்கின்றார். பின்னிணைப்பு, அயல்நாட்டு ஊர்ப்பெயர் களைக் காட்டுவதுடன், இப்பெயர்களின் இன்றைய பெயர், மாவட்டம், தோற்றக் காரணம், பொதுக்கூறு, சிறப்புக்கூறு தரும் ஒரு அட்டவணையையும் உள்ளடக்கி அமைகிறது.

ஊர்ப்பெயராய்வு தனிப்பட்ட ஒரு பெயரின் ஆய்வாக, விளக்கமாக மட்டுமல்லாது எவ்வாறு ஒரு இடத்தின் வரலாற்றை

யும் விளக்கும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ முடியும் என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகிறது. ஊர்ப்பெயர்கள் காலந்தோறும் சமுதாயம் போன்ற பல சூழல்களுக்கும் ஏற்ப எவ்வாறு மாறுபடும் என்பதுடன், தமிழகத்தின் நிலையை, மக்கள் உணர்வைப் புரிந்து கொள்ளவும் இவ்வாய்வில் இடம் அமைகிறது.

இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - இரண்டாம் தொகுதியை, நன்கு உழைத்துச் செவ்வையாக ஆக்கித் தந்துள்ள டாக்டர் கே. பகவதி அவர்களைப் பாராட்டிப் போற்றி மகிழ்கின்றேன். இது போன்ற பல நல்ல நூல்களை அவர் தமிழுலகத்திற்குத் தருவார் என நம்புகின்றேன்.

இந்நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஊக்கமும், ஆக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்து.

அன்புள்ள
ச. வே. சுப்பிரமணியன்

# நன்றியுரை

ஊர்ப்பெயராய்வுத் துறையில் நான்காவது வெளியீடாக, இந்நூல் வெளிவர எல்லா நிலைகளிலும் துணை நின்றவர், எனது பேரன்பிற்கும், பெருமதிப்பிற்குமுரிய பேராசிரியர், நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள். அவர்கட்கு என் இதயம் நிறைந்த நன்றி.

இந்நூல் எழுதும்போது ஏற்பட்ட ஐயங்களின்போது தங்கள் சிறந்த எண்ணங்களை நல்கித் துணைபுரிந்தோர் திரு. ஆ. சிவலிங்கனார், திரு. மு. கோ. இராமன் இவர்கட்கும், இந்நூலுக்குரிய செய்திகள்திரட்டத் துணைபுரிந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகர்க்கும், இந்நூலினைச் சிறப்புற அச்சிட்டுத் தந்த மீரா அச்சகத்தினருக்கும் என் நன்றி உரித்து.

கே. பகவதி

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | முன்னுரை | டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் |
| | நன்றியுரை | கே. பகவதி |
| 1. | முகவுரை | 1—9 |
| 2. | ஊர்ப்பெயர்கள் | 10—277 |
| 3. | ஊர்ப்பெயர் அமைப்பு முறைகளும் தோற்றக் காரணிகளும் | 278—295 |
| 4. | முடிவுரை | 296—302 |
| 5. | பின்னிணைப்பு | 302 a, b |
| | ஊர்ப்பெயர்கள் — தமிழகத்தின் பிறபகுதி | 303—330 |
| | முதற் நூல் பட்டியல் | 331 |
| | துணை நூற்பட்டியல் | 332—338 |
| | சொல்லகராதி | 339—351 |

# இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

# முகவுரை

பெயர் ஒரு பொருளைச் சுட்டுகிறது. அதனைப் பிறிதொரு பொருளினின்றும் வேறுபடுத்துகிறது. இத்தகைய பெயரின் தோற்றம், மாற்றம், வளர்ச்சி போன்ற பலவற்றையும் ஆராயும் துறையே பெயராய்வுத் துறை.

நம் நாட்டைப் பொறுத்த வரையிலும் பெயராய்வுத் துறை விளக்கம் பெறத் தொடங்குவது இப்போதுதான் எனினும் பெயர் பற்றிய சிந்தனை பண்டே தமிழரிடம் இருந்தது என்பதற்குச் சான்றாக அமைவது தொல்காப்பியம்.[1]

---

1. தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் பெயரியல் என்று ஒரு தனி இயலை அமைத்து அதனுள் உயர் திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் என்ற மூன்றையும் விளக்குகின்றார். அகத்திணையியலில் முதற் பொருட்களாக நிலமும், பொழுதும் கூறி, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என நிலப் பெயர்களையும் சுட்டு கின்றார். மக்கள் பெற்ற பெயர் பற்றிய எண்ணமும் உண்டு. மரபியல் ஆண், பெண் இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் போன்றவற்றை எடுத்தியம்பு கின்றது. மரபியலில் கூறப்படும் நிலையில், இவற்றின் பழமையும் புலனாகும். அளவுப் பெயர், காலப்பெயர், மரப்பெயர், சுவைப் பெயர் போன்ற பலவும் காணக் கிடக் கின்றன. தவிர ஊர் என்ற சொல்லுண்டு. ஊர் பற்றிய எண் ணமுமுண்டு. எனினும் ஊர்ப்பெயர் சுட்டப்படாமைக்குக் காரணம் தேவையில்லை என்ற ஒரே காரணமாகவே இருக்க இயலும்.

பல வகைப் பெயர்களையும் மிகச் சிறப்பாக எடுத்தியம்பும் இந்நூலினின்றும் அன்றைய தமிழரின் பெயர்கள் பற்றிய எண்ணம், அவற்றை அவர்கள் முறைமையாகக் கையாண்ட திறன், அவையுணர்த்தும் சிந்தனை மேம்பாடு போன்ற பல வற்றையும் நாம் அறிந்து கொள்ள இயலுகிறது. இவ்வறிவு மேன்மையைச் சங்க இலக்கியங்கள் அரணாகி நின்று காட்டு கின்றன.

தமிழரின் ஊர் பற்றிய மேன்மையான எண்ணங்களையே இவற்றுள் பெறும்போது, அவர்களின் பெயர்த் தோற்றம் குறித்த எண்ணங்களை நாம் சான்றுகளின்மையால் சிந்தனை யையே அளவாகக் கொண்டு உணர்ந்து கொள்ள வேண்டிய தாக அமைகிறது. பெயர்த் தோற்றம் தமிழன் வாழ்வில் மட்டு மல்லாது மனித சமுதாயம் அனைத்திற்கும் பொதுவான நிலை யிலேயே தோற்றம் பெற்றிருத்தல் இயல்பான ஒன்று. இந்நிலை யில் பொதுவாக இதனை எண்ணிப் பார்க்கலாம். பெயரின் பயன் அல்லது அதன் முக்கியத்துவம் நாம் இன்று உணர்ந்த, உணரும் ஒரு நிலை. பெயரின்மையால் வரும் குழப்பங்களையும் நாம் சிந்திக்கும் பொழுது தெளியலாம். இந்த நிலையில் மனிதன் என்று ஒரு பொருளைக் குறிப்பிட்டு அதனைப் பிறருக்கு உணர்த்த விழைந்தானோ, என்று ஒரு பொருளைப் பிறிதொரு பொருளினின்றும் வேறுபடுத்த முயன்றானோ அன்றே பெயருக் கான விதைதூவப்பட்டு விட்டதுஎன்பது பொருத்தமானதாகும் எனினும் முதலில் பெயர் முழுமையாக உருவாகியிருத்தல் இயலாது. மேலும் முதலில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்ட பொருள் பின்னர் ஒரு தனித்துவத்தின் அடிப்படையில் தனித்த தொரு பெயரைப் பெறுகிறது. சிறிது சிறிதாக முன்னேறிய நிலையில், அப்பெயர் அப்பொருளுடன் ஐக்கியமாகிவிட, குறிப்பிட்ட அப்பெயர் பலருக்கும் தெரிந்து, விளக்கம் பெற்று அமைகிறது என்ற எண்ணம் இவண் சிறப்புடையதாகத் தோன்றுகிறது. இந்நிலையில் முதலில் சில பொருட்கள் பெயர் பெற பின்னர் மனிதன் இப்பயன் முழுமையையுணர்ந்து, தாம் கண்டுபிடித்த கண்டுபிடிக்கும் பொருட்களுக்கும் பெயரிடத் தொடங்கினான் - தொடங்குகின்றான் எனலாம். இப்பெயர் கள் பலவற்றுள் இடப் பெயர்களும் பரந்ததொரு வரலாற்றை யுள்ளடக்கி மிளிர்கின்றன.

**இடப்பெயர்கள்**

குறிப்பிட்டதொரு இடத்தை உணர்த்தியும், அந்த இடத் தைப் பிற இடத்தினின்றும் தனிப்படுத்தியும் மக்கட்கு அவ்விடம்

பற்றிய உணர்வை அளிப்பன இடப்பெயர்கள். ஆதி மனிதன் ஒரே இடத்தில் கூட்டமாக வாழ்ந்தபோது இடப்பெயர் தோற்றம் பெற்றிருக்க வாய்ப்பில்லை. என்று இடம் விட்டு இடம் பெயரத் தொடங்கினானோ அப்போதே இரு இடங்களையும் வேறுபடுத்தி எண்ணும் சிந்தனை வளர, பிறரிடம் அதனை விளக்கும் நிலையில் இடம் பற்றிய விளக்கம் பிறக்கிறது. இடப்பெயர் தோற்றம் பெறுகிறது. Encyclopaedia Britannica இடப்பெயர்கள் தோற்றம் பெறுவதற்குரிய பலவகைக் காரணங்களையும் கூறுகின்றது. இடப்பெயர் ஆய்விலும் இவை பலவாக அமைவதைக் காண்கின்றோம். இத்தகைய இடப்பெயர்கள் அனைத்தும் ஊர் என்ற சிறு பகுதி முதல் உலகம் என்ற பெரும் பகுதி வரையிலும் அடங்குகின்றன. இவற்றுள் ஒன்றான ஊர்ப்பெயர் பற்றி இவண் காணலாம்.

## ஊர்ப் பெயர்

இடங்கள் பெயர் பெற்ற விதம் பல. எனினும் இவற்றுள் மக்கள் வாழ்பகுதிகள் ஊர், பாடி, சேரி என்றபல பெயர்களாலும் இப்பல பகுதிகளின் இணைப்பு நகர், நாடு என்ற பெயர்களாலும் சுட்டப்பட்டன என்பது வரலாறு காட்டும் உண்மை. இன்று காணும் உண்மையும் இதுவே. இத்தகைய மக்கள் வாழ்பகுதிகள் பல பெயர்களால் சுட்டப்பட்டிருப்பினும் 'ஊர்' என்ற பெயர் இவற்றையனைத்தையும் சுட்டும் நிலையில் அமையக்காணலாம். இத்தகைய ஊர்ப்பெயராய்வு, தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்று கற்கும் தோறும் புதிய பல எண்ணங்களை நம்முன் கொணர்கின்றது. விலை மதிப்பற்ற பொருட்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கி அமைதியாகக் காட்சி தரும் கடல் போன்று, காட்சி தரும் இவ்வூர்ப் பெயராய்வில் நாம் பெறும் சிந்தனைகள் பல. இத்தகைய ஆழ்ந்த அகன்ற ஊர்ப்பெயராய்வுத் துறை, மக்கட்கு ஏற்ப, வாழும் நிலங்கட்கு ஏற்ப, சூழலுக்கு ஏற்ப, சிந்தனைக்கு ஏற்ப, ஊர்ப்பெயர்கள் எவ்வாறு வேறுபட்டன; இன்று வேறுபட்டு அமைகின்றன போன்ற பலவற்றையும் வெளிப்படுத்துகின்றது. காலந்தோறும் புதிதாகத் தோன்றி மறைந்து, அழியாமல் நின்று, மருஉவி வழங்கிய இப்பெயர்கள் மூலம் நாம் அடையும் பயன்கள் பல. அவற்றுள் சில.

1. மக்கள் வாழும் இயற்கை அமைப்பினையும். இயற்கைச் செழிப்பினையும் புரிந்து கொள்ளலாம்.

2. அரசியல், சமுதாயம் காலந்தோறும் மாறும் நிலைக்கேற்ப மக்கள் வாழ்வியல், உளவியல் மாற்றம் பெறுதலை விளங்கிக் கொள்ளலாம்.

3. பிற மொழியாளர்த் தொடர்பு தெரியலாம்.

4 பலவகைப்பட்ட பெயரிடும் முறையில், மக்கள் வாழ்வியலில் தொடர்புடைய பலப் பொருட்களை அறியலாம்.

இந்நிலையில் பொது நிலையில் பலவகைப்பட்ட வரலாற்று சிந்தனைகளையும் தரும் நிலையில் சிறந்ததொரு வரலாற்று மூலம் ஊர்ப்பெயர் என்பதில் ஐயமில்லை.

## ஊர்ப்பெயராய்வு அணுகு முறை

ஆய்வு என்பது பரந்தும், விரிந்தும், ஆழ்ந்தும் அணுகப்பட வேண்டியதொரு துறை. எந்த ஒரு ஆய்வும் மேற்கண்ட பார்வையிலேயே முழுமை பெறும். இன்று ஊர்ப்பெயராய்வில் பல வகைப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் பெரும்பான்மையும் இன்றைய நிலையில் உள்ள பெயர்களையே ஆய்வு செய்கின்றன. கிராமம், வட்டம், மாவட்டம் என, தமிழகம் பிரிக்கப்பட்டு நோக்கப்படுகின்றது. ஆயின் தமிழகத்தில் ஊர்ப்பெயர் ஆய்வு தொடக்கம் பெறுவது இப்போது தான் என்ற நிலையில் முதல் தேவை இதுவன்று. இன்றைய நிலையில் காஞ்சி என ஒரு நகரினைப் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளன் அதனைப் பற்றிய பல எண்ணங்களையும், அதன் தோற்றக் காரணம் பற்றியும் அறிய வரலாற்றை முதலிலேயே தேட வேண்டியிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆய்வாளனும் தனித்த நிலையில் அனைத்து வரலாற்றையும் நோக்கும்போது காலம், உழைப்பு, மிகுதியாகச் செலவு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆயின் நாம் தமிழகத்தின் பண்டைய ஊர்ப்பெயர்கள் முதல் அண்மைக்காலம் வரை ஆய்வு செய்து முடித்துவிட்டு இன்றைய நிலையைப் பார்ப்போம் என்றால், மிக எளிதில் ஆய்வு செய்ய இயலும். குறிப்பிட்ட நூல் 'காஞ்சி' என்ற ஊர்ப் பற்றிய அனைத்து எண்ணங்களையும் தரும் நிலையில் இன்றைய காஞ்சியின் நிலையை ஒரு வரலாற்றுக் கண் கொண்டு காண இயலும். மேலும் அந்நூல் அன்றைய சமுதாயம், சூழல், மக்கள், உளவியல் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு, அந்த ஊர்ப்பெயரை ஆயும் தன்மையில், ஊர்ப்பெயரின் தோற்றக் காரணத்தைத் தேடுவதும் ஓரளவுக்கு எளிமையாக அமையும். இவ்வாறு பார்க்கும்போது இன்றைக்குக் காணவியலும் ஊர்ப் பெயர்களின் தோற்றம் எந்தக் காலம் என்பதையும் எளிதில் உணரலாம். சான்றாக மதுரை, காஞ்சி போன்றன பண்டு

தொட்டே தமிழர் வாழ்வில் பெரும் சிறப்பு பெற்றிருந்தமையை யும், உறையூரின் சிறப்பு சிறிது காலத்திலேயே குன்றி விட்டமை யையும், இடைக்காலத்தில் சிராப்பள்ளி போன்றன சிறப்பு பெற்ற மையையும் போன்ற பல வரலாறுகள் தெளிவாக விளங்கும். இந்நிலையில் தமிழக ஊர்ப்பெயர்களைக் காலவாரியாக நோக்கு தல் முதல் தேவை என்பது உறுதிப்படுகிறது. இந்நிலையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சங்க இலக்கிய ஊர்ப்பெயர் களை ஆய்ந்து வெளியிட்டமையைத் தொடர்ந்து இடைக்கால இலக்கிய ஊர்ப்பெயர்கள் இவண் ஆய்வு செய்யப்படுகின்றன.

## இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்

பண்டைய தமிழர் வரலாற்றையுணர்ந்து கொள்ள மிகுதியான மூலங்கள் நம்மிடம் இல்லை. தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை என இலக்கியங்களே நமக்கு வரலாற்றையுணர்த்தும் நிலையில் அமை கின்றன. ஊர்ப்பெயர் நிலையிலும் இவை மிகுதியான பெயர் களையுணர்த்தவில்லை எனினும், கிடைக்கும் பெயர்கள் வழி நின்று, அன்றைய நிலையில் ஊர்ப்பெயர்களின் நிலையையும், பெயரிடும் முறையையும், வாழ்வியலையும் புரிந்து கொள்ளல் இயலுகிறது. இடைக்கால நிலை என எடுத்துக் காணின், பக்தி இலக்கியங்களையும் தவிர கல்வெட்டுகளும் மிகுதியாகத் துணை செய்கின்றன. பிற்காலத்தில் மேலும் பல வரலாற்று மூலங்கள் அமைகின்றன. இந்நிலையில் தமிழரின் ஊர்ப்பெயர் வரலாற் றுக்கு இம்மூலங்கள் அனைத்தையும் துணை கோடல் இன்றியமை யாத தேவை என்பது தெளிவு. இம்முழுமைப் பயனையும் பெறத் தனித்தனியே நோக்குதல் அடிப்படை என்ற நிலையில் இவண் இடைக்காலத்தில் உள்ள இலக்கியங்கள் உணர்த்தும் ஊர்ப்பெயர்கள் மட்டும் ஆய்வு செய்யப்படுகின்றன.

## இடைக்கால இலக்கியங்கள்

தமிழரின் இடைக்கால நிலையைத் தெரிந்துகொள்ள உதவும் இலக்கியங்களாக இவண் எடுத்துக்கொள்ளப்பட்டவை திரு மந்திரம், மூவர் தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்விய பிரபந்தம், பதினோராம் திருமுறை, பெரிய புராணம், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், முத்தொள்ளாயிரம், நந்திக் கலம்பகம், கலிங்கத்துப்பரணி ஆகியன.

**ஊர்ப்பெயர்கள் இலக்கியப் பயிற்சி நிலை**

அனைத்தும் காலந்தோறும் சூழலுக்கு ஏற்ப மாறுவது இயற்கை. ஊர்ப்பெயர்கள் இலக்கியங்களில் பயிற்சி பெறும் நிலையிலும் சங்க இலக்கியங்களினின்றும் இடைக்கால இலக்கியப் பயிற்சி நிலை மாறுபடுவதைக் காண்கின்றோம். சங்க இலக்கியத் தில் நகரம் விளக்கப்படலின் போதும், உவமை மூலமும், புலவர் பெயருடன் ஊர்ப்பெயர் சுட்டப்படும் நிலையிலும் ஊர்ப்பெயர் கள் பயிற்சி காட்டுகின்றன. இடைக்காலத்தில் பக்தி இலக்கியங் கள் பெரும்பான்மை பங்கு வகிக்கின்றன. இந்நிலையில் பாடற் பொருண்மை மாறுதலுக்கு ஏற்ப, இடம்பெறும் ஊர்ப்பெயர் களுடன் பயிற்சி நிலையும் மாறுபாடாக அமைகின்றன.

1. அடியார்கள் இறைத்தலங்களைப் பாடுகின்றனர். இதனால் கோயில் உள்ள ஊர்ப்பெயர்கள் சுட்டப்பெறுகின்றன.

2. ஊர் தோறும் சென்று இறையைப் பாடும் நிலையில் பல ஊர்கள் தெரியவருகின்றன. இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே பாடும் நிலையிலும் சில ஊர்ப்பெயர்கள் வெளிப்படு கின்றன.

3. அடியார்களின் வரலாறு சுட்டுமிடத்தில் அவர்கள் பிறந்த இடம், சென்ற இடம் தெரிய வருகின்றன.

4, ஒரே ஊரின் சிறப்பு பாடும் நிலையில், அதன் பல்வேறு பெயர்களும், தோற்றம் பெறுகின்றன. தவிர அரசியல் தொடர் பாகச் சில பெயர்கள் தெரியவருகின்றன.

இவ்வாறு பயிற்சிபெறும் ஊர்ப்பெயர்கள் வரலாற்றில் தெளிவாகத் தெரிவன ஊர்ப்பெயர்கள் மட்டுமே. இவை எந்த அடிப்படையில் தோன்றின என்பதன் தோற்றக் காரணம் இவண் புலப்படவில்லை. ஏனெனில் புலவர் நோக்கம் ஊர்ப்பெயர் விளக்கம் அன்று. எனினும் ஆய்வு நெறி முறைகளைக் கொண்டு காணும்போது சில எண்ணங்கள் தெளிவுபெறுகின்றன.

1. ஊர்ப்பெயர் ஆய்வுக்கு முதல் தேவை அப்பெயரின் பொருள் உணர்ந்து கொள்ளல் என்ற நிலையில், இங்கு கிடைக் கப்படும் ஊர்ப்பெயர்களின் பொருள் ஆராய்தல்.

2. தோன்றிய காலச் சூழலைக் கொண்டு எந்த அடிப்படை யில் பெயர் பெற்றிருக்கக் கூடும் என்பதை உணர்தல்.

3. புலவர் குறிப்பிட்ட ஊரைப் பாடும்போது சுட்டும் விளக்கங்கள், வருணனைகள் மூலம் அந்த ஊரைப்பற்றித் தெரிந்து கொள்வதுடன், அப்பெயரை இணைத்து நோக்கல்.

4. ஊர்ப்பெயருடன், சில கல்வெட்டுச் சான்றுகளையும் சேர்த்து ஆய்வு செய்தல்.

5. இன்று இருக்கும் ஊர்ப்பெயர் அமைப்புடன் இணைத்துப் பார்த்தல்.

6. முன்னைய, பின்னைய ஊர்ப்பெயர் தொடர்புகொண்டு காணல் என்ற நிலையில் ஆய்வு செய்து நோக்கின் சில பெயர்கட்கு விளக்கம் கிடைக்கின்றன. எனினும் இவை அனைத்து ஊர்ப்பெயர்கட்கும் கிடைக்க இயலாத நிலையில் பல பெயர்கள் தோற்றக் காரணம் புலப்படுமாறில்லை. எனவே ஊர்ப்பெயர் குறித்தே தடுமாற்றங்கள் எழுகின்றன. சங்க இலக்கிய ஊர்ப் பெயர்கள் 240 என்பதும், 300 என்பதும் என்ற இரண்டு வித எண்ணங்கட்கு இத்தகைய தெளிவு கிடைக்க இயலாமையே காரணம் ஆகும். மேலும் பல மூலங்கள் வழி நின்றும் ஆய்வு செய்தால் மேலும் தெளிவு கிடைக்கலாம்.

## ஆய்வு அமைப்பு

இலக்கியத்தில் ஊர்ப்பெயர்களின் வரிசையில் இரண்டாவதாக அமைகிறது இந்நூல். சங்க கால இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு, பெருங்கதை ஆகியவற்றைக் கொண்டு தெரியவரும் ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்யும் நிலையில் அமைவது முதல் நூல். ஒரு சிறந்த வளர்ச்சி பெற்ற சமுதாயத்தையே இந்நூல்களின் வழியாக, தமிழரின் முதல் நிலை வரலாறாக நாம் தெரிய வருகின்றோம். தொல்காப்பியம் தரும் வரலாற்றுக்கு, மிக முன்னைய வரலாறு நமக்குத் தெரிய இயலவில்லை. எனினும் இப்பெயர்களின் வழியாகத் தொன்மை பற்றிய சில எண்ணங்களை நாம் பெறும் வாய்ப்பு அமைகிறது. இயற்கைத் தொடர்பான பெயர்களுடன் குடியிருப்புப் பெயர்களையும் நாம் மிகுதியாக சங்க இலக்கிய ஊர்ப் பெயர்கள் மூலம் அறிகின்றோம். மேலும் நாடு, நகரம் அவற்றின் அமைப்பும சிறந்த ஊர் அமைப்புக் கலையை இவர்கள் உணர்ந்து இருந்த திறத்தைத் தருகிறது. எனவே இதற்கு முன்னைய நிலை என்று பார்க்கும்போது இயற்கைச் சார்ந்த இடங்களில் மிகுதியாக இருந்து பின்னர் குடியிருப்புப் பகுதிகளை உருவாக்கினர் என்பது தெளிவாக உரைத் தக்கதாக அமைகிறது.

மேலும் இடப்பெயராய்வாளர்கள் ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்ற ஊர்ப்பெயர்கள் என்று சொல்வதைக் கேள்வியுறும்போது, சங்க இலக்கியம் காட்டும் பல பெயர்கள் ஒரே சொல்லாக அமைவதும், சிறப்பாகத் தாவரப் பெயர்களாக அமைவதும் சுட்டத்தக்கன. (வஞ்சி, மதுரை, குறுக்கை, கச்சி, ஏழில்) இந்நிலையில் தாவரப் பெயர்களே முதன்மைப் பெயர் என்ற முடிவுக்கு அறிஞர் பலர் வருவதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். இந்நிலையில் இடைக்கால இலக்கியங்களை நோக்கும்போது, ஊர்ப்பெயர்களில் காலந்தோறும் ஏற்படும் மாற்றம் அல்லது புதுமை சிறப்புற விளக்கமாகிறது இயற்கையைத் தொடர்ந்து குடியிருப்புப் பெயர்கள் மிகுதியாக இடம் பெற, இடைக்கால இலக்கியங்கள் பக்தியின் செல்வாக்கைக் காட்டுகின்றன. இடைக்கால இலக்கியங்களில் இருந்து நாம் பெறலாகும் ஊர்கள் முந்நூற்று எண்பத்தைந்து. இவை அனைத்தையும் இவண், சில முறைகளில் ஆய்வு செய்து சில முடிவுகளைத் தரும் முயற்சி எடுக்கப் பட்டுள்ளது.

முதலில் பெயர் இடப்பெயர், ஊர்ப்பெயர் குறித்த அறிமுகம் ஒன்று அமைகிறது.

இரண்டவதாக, முந்நூற்று எண்பத்தைந்து ஊர்ப்பெயர்களும் அகரவரிசையில் நோக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஊரின் பெயர்க் காரணமும் அறிய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஊர்ப்பெயரின் பொருள் கொண்டு காரணம் அறியப்படுகிறது. இலக்கியப் பயிற்சியில் அவை பெயர்க் காரணம் தருகிறதா என நோக்கப்படுகிறது. பல பெயர்களின் காரணம் முழுமையாகத் தெரியப்படவில்லை. ஒரே ஊருக்குப் பல பெயர்கள் பல காரணங்களால் அமைகின்றதையும் இவண் காணக் கூடுகின்றது. இத்தகைய பெயர்கள் ஒரே பெயரின் கீழாகவே ஆய்வு செய்யப்படுகின்றன. சில முதற் பெயர் கொண்டும், சில இன்று செல்வாக்குடன் விளங்கும் பெயர்கள் கொண்டும் ஆராயப்படுகின்றன. மேலும் இவை அனைத்தும் இன்றைய அவற்றின் பெயர் கொண்டும், கல்வெட்டு சான்றுகள் கொண்டும், சங்க காலப் பெயர்கள் கொண்டும் காரணங்கள் முடிந்தவரையிலும் நோக்கப் படுகின்றன.

மூன்றாவதாக, கிடைக்கும் ஊர்ப்பெயர்களின் பொதுக்கூறு, சிறப்புக் கூறு ஆய்வு செய்யப்படுகின்றன. பொதுக்கூறு எவை மிகுதியாக அமைகின்றன என்றும், புதியதாகத் தோற்றம் பெற்றன எவை என்றும் காட்டப்படுகின்றன. சிறப்புக் கூறுகள் தரும் எண்ணங்களும் நோக்கப்படுகின்றன. ஒரே சொல்லாக

அமையும் ஊர்ப்பெயர்கள் எவை எனச் சுட்டப்படுகின்றன. இவற்றின் மூலம் ஊர்ப்பெயர்களின் அமைப்பும், தோற்றக் காரணிகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

நான்காவதாக, புலனாகும் சில உண்மைகள் சுட்டப்படுகின்றன. ஊர்ப்பெயர் ஆய்வு முறை என்று தெரியவரும் சில எண்ணங்கள் இயம்பப்படுகின்றன. தமிழக வரலாற்றுத் தொடர்பாகத் தெரியவரும் சில சிந்தனைகள் குறிப்பிடப்படுகின்றன.

பின்னிணைப்பில் ஊர்ப்பெயர், இன்றைய பெயர், மாவட்டம், காரணம், பொதுக்கூறு, சிறப்புக்கூறு, விளங்கிய வரையிலும் சுட்டப்படுகின்றன. தமிழ் நாட்டுக்கு அப்பால் தெரியவரும் சில ஊர்களும் குறிப்பிடப்படுகின்றன. இறுதியில் சொல்லகராதி அமைகின்றது.

# ஊர்ப்பெயர்கள்

## 1. அக்கரை

சங்க காலத்தில் அறிய இயலாத இவ்வூர், தேவாரப் பாடல் பெற்றது. மா. இராசமாணிக்கம் 'சம்பந்தப் பெருமான் பாடல் பெற்றது ஆகையால் இது கி.பி 7ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பதில் ஐயமில்லை' என்பார்[1]

இவ்வூர்ப் பெயரே அதன் காரணத்தைச் சொல்லுமாறு அமைகிறது. 'அந்தக்கரை' என்ற குறிப்பினை நாம் இதனுள் காண்கின்றோம். மேலும் மேற்குறித்த அறிஞர், தான் சென்று கண்ட இவ்வூர்ப் பற்றி எழுதும்போதே இப்பெயர்க்கான உண்மையையும் அறிய இயலுகிறது. 'வண்டி வழியில் இரண்டு சிற்றாறுகளைக் கடந்து ஆற்றங்கரை மீது நின்றது. நாங்கள் ஆற்றைக் கடந்து அக்கரையில் உள்ள திருவக்கரையை அடைந்தோம்' என்னும் இவர், மேலும் 'திருவக்கரை மிகச் சிறிய கிராமம். அங்கு நான்கு அல்லது ஐந்து தெருக்களே உண்டு. ஆற்றைக் கடந்து கோயிலை அடையும் பாதை நெடுக அழிந்த கற்சிலைகளின் பகுதிகளும் கற்பாறைகளும், கற்சிலைகளும், மரம் போன்ற கற்பாறைகளும் சிதறிக் கிடக்கும் காட்சி 'திருவக்கரை பழைமையும், பெருமையும் பெற்றிருந்த சிவதளி' என்பதை அறிவிப்பது போல் காரணப்பட்டது[2] என்று கூறிச் செல்லும் நிலை, இவ்வூரின் சிறப்பை விளக்க வல்லது. மட்டுமன்றி, ஆற்றுக்கு அந்தப் பக்கம் காரணமாக அக்கரை என்று சொல்லும் வழக்கம் முதலிலேயே இருந்திருக்கலாம். பின்னர்,

---

1. திருவக்கரை— வித்துவான் மா. இராசமாணிக்கம் செந்தமிழ்ச் செல்வி-19, பக். 275

2, ,, ,, ,, பக். 275

பக்தி இயக்க காலத்தில் அங்கு ஏற்கெனவே இருந்த அல்லது அக்காலத்தில்எழுப்பப்பட்ட சிவன் கோயில் பெருமை பெற, இவ் வூர்ப் பெயர் சிவத் தலமாக விளக்கம் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.மேலும் இவ்வறிஞர் காட்சியறிவின் படி, இத்தலம் சிவன் கோயிலுடன் பிற தெய்வ வணங்கங்களும் கொண்டு திகழ்ந்திருக்கிறது என்பதையும் அறிய இயலுகிறது.

ஆற்றுக்கு அந்தப்பக்கம் என்ற பொருளில் அக்கரை என்று ஊர்ப்பெயரை வைத்தல் தமிழரிடம் மரபாகத் திகழ்ந்த ஒன்று என்பதுடன் இன்றும் அவ்வழக்கினைச் 'சுசீந்திரம்' ஊரில் உள்ள அக்கரை (சுசீந்திரம் ஊரில் ஆற்றிற்கு அந்தப் பக்கம் உள்ள ஊர்)யால் உணரலாம்.

பல வகைப்பட்ட சிற்பங்கள், கோயில்கள் கொண்டு இதனைச் சிறந்த சிற்பக் கூடம் என்பர்.[1] பெரிய புராணத்தில் திருஞான சம்பந்தர் திருவக்கரையை அடைந்த தன்மையைச் சேக்கிழார் பாட, (திருஞா. 963, 964) ஞானசம்பந்தரின் தேவாரப்பாடல் (பதிகம்-318) இவ்வூர் சிறப்பினைத் தருகின்றது. அவர் காலத்தில் இத்தலத்தில் உள்ள மற்ற தெய்வங்களைவிட, சிவனே மிகவும் பெருமையுடன் திகழ்ந்து இருக்கலாம் என்ற எண்ணத்தையும் நாம் இங்குப் பெறுகின்றோம்.

சோழ நாட்டு ஊரான இது[2] இன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்ததாக அமைகிறது.

> கறையணி மாமிடற்றான் கரிகாடரங் காவுடையான்
> பிறையணி கொன்றையினான் ஒருபாகமும் பெண்ண
> மர்ந்தான்
> மறையவன தல் தலையில் பலிகொள்பவன் வக்கரையில்
> உறைபவன் எங்கள் பிரான் ஒலியார் கழல் உள்குதுமே
> திருஞா. பா—1

திருவக்கரை என்றே, இப்பெயரினையே எல்லோரும் சுட்டினாலும் கூட, இப்பெயராய்வினைச் செய்யும்போது திரு + அக் கரையே இணைந்து திருவக்கரை ஆகியிருக்க வேண்டும் என்பது தெளிவுறுகிறது.

---

1. ,, ,, பக். 279
2. தொண்டை நாட்டுத்தலம் என்பாரும் உண்டு. சேக்கிழார் வழியில் சிவத் தலங்கள், பக் 345

**2. அக்கீச்சுரம்**

ஆழ்வார்குறிச்சியை அடுத்தமையும் இத்தலம், அப்பரால் சுட்டப்படுகிறது. வன்னிக்கரந்தை இன்னொரு பெயர். அக்கினி தேவர் பூசித்தமையின் பெயர் பெற்றது என்ற கருத்து உண்டு[1]. கோயில் பெயராக இருந்து இன்று ஊர்ப்பெயராயிற்று எனத் தெரிகிறது.

**3. அகத்தியான் பள்ளி**

இப்பெயர் சங்க இலக்கியத்துள் இடம் பெறவில்லை. அகத்தியான் பள்ளி என்ற பெயரை நோக்க, அகத்தியனோடு தொடர்பு கொண்டதொரு பெயர் என்பது மேம்போக்காக நோக்கத் தெரிகிறது. வேதாரணியத்திற்குத் தெற்கில் உள்ள ஊராகிய இது, அகத்தியர் சுவாமியின் திருமணக் கோலத்தைத் தரிசிக்கும் பொருட்டுத் தங்கி வழிபட்ட தலம் என்பர்.[2] எனினும் இதற்குச் சரியான சான்று இல்லை. அகத்திய பக்த விலாசம் என்றதொரு நூலினை, சிவனடியார்கள் சரிதையை வடமொழியிற் கூறும் நூலினை அபிதான சிந்தாமணி சுட்டுகிறது.[3] எனவே இங்கு 'அகத்தியன்' என்பது சிவனுக்குரியதொரு பெயராக அமையக் காணலாம். இந்நிலையில் பக்தி இலக்கியங்களில் இடம் பெற்ற இவ்வூர்ப்பெயர் சிவன் உறையும் இடம் என்ற பொருளில் தோன்றியிருக்கவும் வாய்ப்புண்டு. ஆலயத்தில் அகத்தியர் உருவம் உள்ளமையினால் அகத்தியரோடு பொருத்தி இவ்வூர்ப் பெயரைக் குறித்திருக்கலாம்.

இன்றும் இப்பெயராலேயே குறிக்கப்படும் இவ்வூர் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர் இருவராலும் பாடப்பட்ட சிறப்புப் பொருந்தியது. இன்றைய வேதாரண்யத்திற்குப் பக்கத்தில் கடல் உள்ளது. எனவே அகத்தியான் பள்ளிக்கு அருகில் உள்ள கடலைப் பற்றிய குறிப்பு கிடைப்பது உண்மை விளக்கமாக அமைகிறது. திருநாவுக்கரசர் 'அகத்தியான் பள்ளி அமர்ந்த (239-6) நிலை'யைக் கூற, ஞானசம்பந்தர் தனியாகப் பதிகமே பாடியுள்ளார்.

---

1. தேவாரவைப்புத்தலம் - பக் 18
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் – பக். 323
3. அபிதான சிந்தாமணி - பக் 5

பெரிய புராணத்தில் சேக்கிழார்,

'தெண் திரை சூழ் கடற்கானல் திருவகத்தியான் பள்ளி
அண்டர்பிரான் கழல் வணங்கி (622) ஞானசம்பந்தர்

சென்றதைப் பாடுகின்றார்.

4. அகத்தீச்சுரம்

இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஊர் இது. குமரியிலிருந்து 3 மைல் தூரத்தில் உள்ளது சங்க இலக்கியம் சுட்டாத இவ்வூர்ப் பெயர் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளது. 'இறைவன் உறை சுரம் பலவும் இயம்புவோம் (பதி, 285-8) என்ற நிலையில் பல சுரங்களை யியம்பும் இவர் அவற்றுள் அகத்தீச்சுரத்தையும் ஒன்றெனக் குறிப்பிடுகின்றார். திருநாவுக்கரசு சுவாமிகளின் இப்பாடற் குறிப்பு இரண்டு பொருளை விளங்க வைத்து இவ்வூர்ப் பெயருண்மையை விளக்குகின்றது. முதலில் இவர் 'இறைவன் உறையும் சுரம்' என்று கூறும் நிலையில் இவன் அகத்தியன் என்பது சிவனைக் குறிக்கிறது என்பது தெளிவுபடுகிறது. அடுத்து 'சுரம்' என்ற கூறு 'காடு' என்னும் பொருளில் அமைந்து முதலில் இறைவன் எழுந்தருளிய பகுதி அல்லது இறைவனை எழுந்தருளச் செய்த பின்னர் ஊராக மாறியது என்பதும் விளக்கம் பெறுகிறது. கோயிற் பெயர் ஊருக்கு அமைந்த நிலை தெளிவுபடுகிறது. அகத்தியர் பூசித்த தலம் என்ற எண்ணமும் அமைகிறது[1] இதனைப் போன்றே பிற அயனீச்சுரம், அக்கீச்சுரம், இராமேச்சுரம் போன்றனவும் 'சுரம்' காரணமாகப் பெயர் பெற்றவையாகும்.

5 அச்சிறுபாக்கம்

தேவாரப் பாடல் பெற்ற இவ்வூர் பற்றிய எண்ணம் சங்க இலக்கியங்களில் இல்லை.

---

1. 'இத்தலம் கன்னியாகுமரியில் கன்னியாயுள்ள பகவதியைத் தரிசிக்க விரும்பிய அகத்தியர் தாம் தனிமையிற் செல்வது தகாதெனக் கருதி, தமது பத்தினியார் உலோபமுத்திரையாருடன் செல்லுகையில் பூசித்தது. சுவாமி பெயர் அகத்தீச்சுரர். அம்பிகை - அமுதவல்லி.'

–தேவாரவைப்புத்தல விளக்கம்-பக். 18

'அச்சு + இறு + பாக்கம் ← அச்சிறு பாக்கம். விநாயகரை வணங்காது திரிபுரம் எரிக்கச் சென்ற இறைவனது அச்சு முறிந்த இடம் என்பர்'[1] இன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள இத்தலம், அச்சரப்பாக்கம் என்று வழங்குகிறது. அந்த அல்லது அழகிய சிறு பாக்கம் என்ற பொருளில் பெயர் பெற்றிருக்கலாம் என்ற எண்ணமும் எழுகிறது. மேலும் சேக்கிழார் கூற்று இவ்வூர் பெயரைச் சுட்டிய போதிலும் (திருஞான-1132) ஞானசம்பந்தர் இத்தலம் குறித்து பாடிய போதிலும் (பதி 77, 175), இவ்வூர் பற்றிய விளக்கங்களையோ, ஊர்ப்பெயர் பற்றியோ நாம் எதனையும் அறிந்து கொள்ள இயலவில்லை.

### 6. அண்ணாமலை

இடைக்காலத்தில் பெரும் புகழ்பெற்ற இவ்வூர் பற்றிய எண்ணங்சள் இதற்கு முன்பு இல்லை.

திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், சேக்கிழார், போன்றோரால் பாடப்பட்டப் பெருஞ்சிறப்பு டைய இத்தலம் இன்று வரை பெருமை குன்றாது சிறப்புடன் திகழ்கின்றது. வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள இவ்வூர், உயர்ந்ததொரு மலையையும் கோயிலையும் தன்னுட் கொண்டு திகழ்கிறது.

'பிரம்மாவும், விஷ்ணுவும் அடி முடி காண இயலாத நிலை யில், அழலுருவாக நிற்கின்றான் சிவன். விஷ்ணு தன் தோல்வியை ஒப்புக் கொண்டதை மெச்சி அவருக்குத் தன் அடியையும் முடியை யும் காட்டுகிறார். அதற்காக அழல் உருவில் இருந்த இறைவன் மலையுருவில் குறுகுகிறார். அப்படிப் பொங்சழல் உருவினனாக இருந்த இறைவனே அண்ணாமலையானாக மாறி நிற்கிறார்'[2] என்று தலபுராணம் கூறும் வரலாறு அண்ணாமலை இறைவன் மேற்கொண்ட பக்தியின் வெளிப்படை சான்றாக அமைகிறது. இதனைத் தவிர்த்து, இங்குள்ள உயர்ந்த மலையையும் கோயிலை யும் கொண்டு மேலும் இப்பெயரை ஆராயின், அண்ணன்- உயர்ந்தோன் என்ற நிலையில் உயர்ந்தவனாகிய இறைவன்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் - பக். 358
2. வேங்கடம் முதல் குமரி வரை - பக்.18

இருக்கும் மலை என்ற பொருளையும், (அண்ணாந்து) உயர்ந்து பார்க்கும் அளவிற்கு உயரிய மலை என்ற பொருளையும் கொண்டு நோக்க உயர்ந்த மலை காரணமாகவும், உயர்ந்த மலையினை இடமாகக் கொண்டிருப்பவன் என்ற நிலையிலும் இப்பெயர்த் தோற்றம் பொருத்தமுறும்போல் தோன்றுகிறது.

சேக்கிழார் தம் பெரிய புராணத்தில்,

> அண்ணாமலை அங்கு அமரர் பிரான்
> வடிவு போல் தோன்றுதலும் (34-970)

என்று இறைவனின் உயர்வுக்கு ஒப்பிடுகின்றார்; மேற் கூட்டிய புராணக்கதை இக்கருத்தினின்றும் புனையப்பட்டதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

மேலும் அருணாசல புராணம், அருணைக்கலம்பகம் என்ற நூற்பெயர்களில் அருணாசலம் இம்மலை குறித்து வழங்குவதே. அண்ணாமலைக்குரிய வடமொழிப் பெயர்ப்பாக அருணாசலம் அமைகிறது. இவ்வூர் பற்றிய எண்ணங்களை இவ்வூர்க் கோயில் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன. முதல் இராஜேந்திரன் காலத்தில் (1038) திருவண்ணாமலை என்று குறிப்பிடப்பட்ட இவ்வூர் பின்னர் இராஜராஜ தேவர் காலத்தில் அண்ணா நாட்டுத் தனியூர்' என்று வழங்கப்பட்டு உள்ளதைக் காணுகின்றோம்[1]. அண்ணாமலை என்னும் பெயர் மக்கள் தொகை அதிகரித்து பெரும் ஊராக மாறியது காரணமாக அண்ணா நாடு என்று சுட்டினரோ எனத் தோன்றுகிறது. மேலும் அரசியல் காரணமாக அரசனால் சூட்டப்பட்ட இப்பெயர் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கினைப் பெறவில்லை என்ற எண்ணம், அண்ணாமலை என்ற பெயரே இன்றுவரை செல்வாக்குடன் திகழும் நிலையைக் காண எழும் ஒன்றாக அமைகிறது.

## 7. அத்தங்குடி

திருஞானசம்பந்தர் பாடல் மூலம் அறியப்படுகின்ற ஊர் அத்தங்குடி. ஞானசம்பந்தர் இறைவன் குடிகொண்டிருக்கின்ற பல ஊர்ப்பெயர்களைச் சொல்லிப்போகும் நிலையில் இதனை

---

1. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் - பக். 46, 191

யும் 'மருவும் அத்தங்குடி' (பதி 175-10) எனச் சுட்டுகின்றார். அத்தன் இறையைச் சுட்டி, இறை குடியிருக்குமிடம் என்ற பொருளில் அத்தங்குடி தோற்றம் பெற்றிருக்கலாம்.

## 8. அத்தீச்சுரம்

இறைவன் உறைகின்ற சுரங்கள் பலவற்றையும் தொகுத்துக் கூறும் திருநாவுக்கரசர், அத்தீச்சுரத்தையும் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். (பதி 285-8). அத்தனாகிய இறைவன் தங்கியிருக்கும் சுரம் என்ற பெயரில், அமைந்த கோயிற் பெயர், பின்னர் ஊர்ப் பெயராக அமைந்திருக்க வாய்ப்புண்டு. பொதிய மலையின் தொடர்பில் உள்ள, இது சிவசைலம் என வழங்குகிறது. ஈண்டு அத்திரிமுனிவர் பூசித்துப் பேறு பெற்றமையானும் அத்திரி முனிவர் ஆசிரமம் அம்மலையில் இருத்தலானும் அத்தீச்சுரம் எனலாயிற்று எனத்தேவாரலைப்புத் தல விளக்கம் (பக்-17) இதற்குப் புராணச் சார்பு காட்டுகிறது.

## 9. அதிகை

திருவதிகை என தென்னார்க்காடு மாவட்டத்தில் அமையும் ஊர். இது திருவதி என்றும் திருவீதி என்றும் கூட வழங்கப்படுகிறது. பண்ருட்டிக்கு அருகில் உள்ளது. அதிகமான் தொடர்பு காரணமாக அமைந்த ஊர் என்பது பெயரில் மட்டும் அல்லாது பிற சான்றுகளாலும் தெளிவுபடுகிறது.

அடியார்கள் பலரின் மனத்தையும் கவர்ந்தது இவ்வூர் என்பது பலரும் இங்குள்ள இறையைப் பரவும் தன்மை உணர்த்தும் நிலை. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் பாடிய தேவாரப்பதிகங்களுடன் பெரிய புராணத்திலும் பதினோராம் திருமுறையிலும் கலிங்கத்துப் பரணியிலும் (299) இவ்வூர் பற்றிய எண்ணங்கள் அமைகின்றன.

அதிகை எனவே பல இலக்கிய வழக்குகளிலும் அமைய, நாவுக்கரசர் அதியரையமங்கை அமர்ந்தானை எனப்பாடும் நிலை அமைகிறது. (பதி 217, 296) சிவபெருமான் திரு விரட்டை மணி மாலை அதிகை மங்கை என்ற பெயரைத் தருகிறது (12). கல்வெட்டுகளில் இப்பெயர் அதியரைய மங்கலம், அதிராச மங்

கலம் அதிராச மங்கலியபுரம் என வழங்கப்பட்ட நிலையையும் காண்கிறோம். மணவிற் கூத்தனான காலிங்கராயன் இக்கோயி லுக்குப் பொன் வேய்ந்து இறைவியார் எழுந்தருளி இருக்கும் கோயிலையும் கட்டுவித்தான் என்பது கல்வெட்டுச் செய்தி.[1]

இவற்றை நோக்க அதியரையமங்கலம் என்ற பெயரே இதன் பழம் பெயர். பின்னர் அது எளிமைப்படுத்தப்பட்டு, அதியரைய மங்கை, அதிமங்கை என்றாகி அதிகை என்று நிலைபெற்றதோ எனத் தோன்றுகிறது. மங்கலம் என்ற பொதுக் கூறு பற்றிப் பேசும்போது கி. நாச்சிமுத்து, இது குடியிருப்பினை உணர்த்தும் சொல்; வடமொழிச் சொல் எனக் குறிப்பிடுவர். அதியமான் பெயர்த்தொடர்பாக, அம்மன்னர் மரபுத் தொடர்பாக அமைந் தது இப்பெயர் என்பதற்குப் பிறர் பலரின் கருத்தும் அரணாக அமைகிறது.

'சங்க காலத்தில் பெரிய வீரனும், ஔவை முதலியோர் களால் அருமையாகப் பாராட்டப் பெற்றவனுமாகிய அதிக மான் நெடுமான் அஞ்சி என்ற வள்ளலின் வரலாறு பலரும் நன்கு அறிவர். இவ்வதிகமான் வமிசத்தவர்களைப் பற்றிய சாசனங் கள் சில நமக்குக் கிடைத்துள்ளன. சேலம் மாவட்டம் திருச்செங் கோட்டுத் தாலுகாவில் உள்ள தர்மபுரி என்றுள்ள ஊரே இவரது தலைநகரம். இத்தர்மபுரியை அடுத்துள்ள அதமன் கோட்டை அதியமான் கோட்டையாகும். இவரை அதிராசன், அதியரையன் அதியேந்திரன் எழினியவனிகா என்று சாசனங்கள் வழங்கும்' எனவும்,

'திருமுனைப்பாடி நாட்டில் உள்ளதும் அதிராசமங்கலம் அதியரையன் மங்கலம் என்பதன் மரூஉவாய்ச் சாசனங்களில் வழங்குவதுமாகிய அதிகை என்ற தலம் இவ்வரசர் பெயர் பெற்ற ஊரேயாகும்' எனவும் கூறுகின்றார் மு. இராகவையங் கார்[2]. அதிகமான் வாழ்ந்த இடமே இவ்வூர் என்பது தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் எண்ணம்.[3]

எனவே அதியமான் என்ற பெயர்த்தொடர்பாகத் தோற்றம் பெற்ற ஊர்ப்பெயர் இது என்பது தெளிவு. இலக்கியப் பயிற்சி கள் அனைத்தும் இங்குள்ள இறையைப் புகழ்வதுடன், இவ்வூர்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்- பக்-18
2. இலக்கிய சாசன வழக்காறுகள் – பக். 16
3. வேங்கடம் முதல் குமரிவரை-பக். 46

பற்றிய சில எண்ணங்களையும் தருகின்றன. கொடில நதியாயும் இதன் சிறப்பை, 'கெடில வடகரைத்தே யெந்தை வீரட்டமே' என்று இயம்புகின்றார் நாவுக்கரசர் (105). மேலும் தென்றிசைக் கெங்கை எனவும் இந்நதி சுட்டப்படுகிறது (திருஞா. பதி 10—2). சேக்கிழார்,

'செய்தவ மாதவர் வாழும் திருவதிகை' என்ற நிலையில் இங்குப் பிறத்தல் சிறப்பு என்பதைச் சுட்டுகின்றார். மேலும் அதிகை மூதூர் (திருநா. பதி 15-3), அதிகை மாநகர் என்ற எண்ணங்கள் இவ்வூரின் பழமையையும், பெருமையையும் எடுத்தியம்பும் நிலையில் அமைகின்றன.

## 10. அம்பர்

'அம்பர்' என்றதொரு ஊர்ப்பெயர் சங்க காலம் தொட்டே தெரியவருகின்றது. 'அம்பர்' தொடர்பாக இக்காலத்து மூன்று ஊர்ப்பெயர்களைக் காண்கின்றோம். அம்பர், அம்பர் மாகாளம் இன்னம்பர் என்பன அம்மூன்றும். மூன்றுமே தஞ்சையைச் சார்ந்தன. இவற்றுள் அம்பர், அம்பர் மாகாளம் இரண்டும் அருகருகேயுள்ள ஊர்கள்.

'அம்பர்' இன்றும் 'அம்பர்' என்றே வழங்கப்படுகின்றது. தலமரம் புன்னையாக அமையும் 'இக்கோயில்' கோச்செங் கட்சோழன் கட்டிய மாடக்கோயிலாகும்.[1] என்ற எண்ணம் கோயில் பழமையுணர்ந்தும் ஒரு சான்றாகும். எனவே இதனை வைத்து சங்க காலம் சுட்டும் அம்பர் இன்று காணப்படும் அம்பர் இரண்டும் ஒன்றாக இருக்கக் கூடும் என்ற எண்ணத்திற்கும் நாம் வரலாம். சங்ககாலச் சான்றுகளை நோக்க கோயில் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே, பின்னர் சோழன் கட்டிய கோயில் இங்கு உள்ளது என்பது பொருத்தமாகிறது. அரிசிலாற்றங் கரையில் உள்ள இதனை,

வம்பு அணி உயர்கொடி அம்பர் சூழ்ந்த
அரிசில் அம் தண் அறல் அன்ன இவள்
விரி ஒலி கூந்தல் விட்டு அமைகலனே (நற் 141)
காவிரி அணையும் தாழ்நீர் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன் (புறம் 385)

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் - பக். 207

எனவும் இப்பாடல் காட்டும் தன்மை அரிசிலாற்றங் கரையில் உள்ளமையை உணர்த்துகின்றன. இதனை நோக்க அம்பர் நீர்த் துறையினுள் அமைந்த இடமாகத் தெரிதலையும், அப்பு நீரைக் குறிக்கும் பெயர் என்பதையும் நோக்க, நீரோடு இப்பெயர்த் தொடர்பு கொண்டமைந்திருக்கலாம் என்ற எண்ணம் தோன்று கிறது.

வண்டு என்பது வண்டர் என்று அமைந்தாற்போன்று, 'அம்பு' என்ற சொல் அம்பர் என்று நின்றதோ எனவும் கருதலாம். இந் நிலையில் வேட்டுவர் தொடர்பானதாக இப்பெயர் அமையும்.*

அம்பர், அம்பர் மாகாளம் என்ற இரு ஊர்களும் அடுத் தடுத்து அமைவதைக் காண, முதலில் 'அம்பர்' என்ற ஊரிலேயே அம்பர் மாகாளமும் அமைந்து, பின்னர் அக்கோயிற் சிறப்பு காரணமாக அதனைத் தனித்து அம்பர் மாகாளம் எனச் சுட்டும் தன்மை அமைந்ததோ என்ற எண்ணமும், எழுகின்றது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது. நாவுக்கரசரும் இவ்விறை வனைக் குறிப்பிடுகின்றார். (பதி-301—3) 'அம்பர் நகர்' என்ற சேக்கிழாரின் கூற்று. (34-529-4) அம்பர் தனிப்பகுதியாகச் சிறந்து விளங்கியது என்பதை யுணர்த்தவல்லது. கல்வெட்டும் அம்பர் நாடு என்று சுட்டுவது இணைத்து நோக்கத்தக்கது.

11. அம்பர் மாகாளம்

இன்றுகோயில் திருமாகாளம் என்று வழங்கும் இப்பெயர், 'அம்பர்' என்ற ஊரில் உள்ள இக்கோயிலைத் தனித்துணர்த்த அம்பர் மாகாளத்தினின்றும், கோயில் மாகாளம் என்று குறிக்கப்பட்டதாக இருக்கலாம். மேலும் இங்குள்ள கோயிற் சிறப்பையும் இப்பெயர் காட்டுகிறது. 'அம்பன், அம்பாசூரன் என்னும் அசுரர்களைக் கொன்ற பாவம் தீர, காளி இறைவனைப் பூசித்துவழிப்பட்டதலம்'[1] என்ற, எண்ணம் மேலும் ஒருகருத்தை யும் தருகிறது. அதாவது 'அம்பர்' என்ற ஊர்ப்பெயர் மிகப் பழமையானதொன்றாக, அமைய, இப்புராணக்கதை, சைவ சமய மலர்ச்சி பெற்ற இக்காலத்து எழுந்ததொரு புராணக்கதை என்பதை இவண் வெளிப்படையாகக் காண்கின்றோம். 'காளி' தொடர்பாக மாகாளம் என்ற பெயர் அல்லது மாகாள ரிஷி பூசித்தமை காரணமாக, மாகாளம் என்ற பெயர் கோயிலுக்கு அமைந்து இருக்கக்கூடும்.

இத்தலம் முதற் குலோத்துங்கன் காலத்தில் 'அம்பர் நாட்டு அம்பர் திரு மாகாளம் எனவும், இராகசேசரி

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் - பக் 26
* திரு. சிவலிங்கனாரின் கருத்து

வர்மனான குலோத்துங்கள் காலத்து 'பூபால குலவல்லி வள நாட்டு அம்பர் நாட்டு அம்பர் மாகாளம் எனவும் வழங்கப் பட்டது' என அறிகின்றோம்.[1]

எனவே அம்பர் நாட்டின் நடுப்பகுதியாக மாகாளம் இருந்தது தெளிவாகின்றது. தனிப்படுத்தவே 'கோயிற் மாகாளம்' எனப் பின்னர் குறிப்பிடத் தொடங்கினர் என்பதும் தெளிவாகிறது. இரண்டு ஊர்களும் சம்பந்தர் பாடல் பெற்று சிறக்கின்றன.

'அம்பர் மாகாளம்' அரிசிலாற்றங் கரையில் இருக்கும் ஊர் என்பதை ஞானசம்பந்தரின்,

'மல்கு தண்டுறை யரிசிலின் வடகரை வரு புனல் மாகாளம்' (239—1) எனக் காட்டுகிறது.

## 12. அயனீச்சுரம்

அகத்தீச்சுரம், அத்தீச்சுரம் போன்று திருநாவுக்கரசரால் சுட்டப்படும் தலம் (பதி 285—8). இறைவன் குடி கொண்ட நிலையில் சிவன் உறை இடத்தைக் குறிப்பிடுகிறது. அயன் வழி பட்ட தலம் என்ற நிலையில் இப்பெயர் தோற்றம் பெற்றதா? இல்லை, ஐயன் (சிவன்) ஈச்சுரம் அயனீச்சுரமாயிற்றா என்பது சிந்திக்கத்தக்கது.*

## 13. அரங்கம்

பண்டு தொட்டு இன்றுவரை, பேரும் புகழும் பெற்ற வைணவத் தலங்களுள் சிறப்பிடம் பெற்று விளங்குவது அரங்கம், ஸ்ரீரங்கம் என்று இப்போது வழங்கப்படும் இவ்வூர் சிலப்பதி காரத்திலேயே சிறப்பிடம்பெற்ற இடமாக அமைந்தது. (சிலம்பு 10-156) இங்குள்ள அரங்கன் பற்றி பல புராணக்கருத்து

---

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் - பக். 67

* இவை முதலில் கோயிற் பெயராக அமையினும், பின்னர் அவை ஊர்ப்பெயராக அமையும் பொதுத் தன்மை காரணமாக இவண் எடுத்துக் கொள்ளப் பட்டன.

கள் வழங்குகின்றன. எனினும் மக்கள் மனத்தில் இவன் மிகுந்த இடம்பற்றிக் கொண்டான் என்பதையே இவை அனைத்தும் உணர்த்துகின்றன. மிகப்பெரிய கோயிலையும், ஏழு பிரகாரங்களையும், இருபத்தொரு கோபுரங்களையும் கொண்ட இவ்வரங்கன் மீது ஆழ்வார் பலரும் பாமாலை பொழிந்துள்ளனர்.

ஆற்றின் நடுவே உள்ள இடைக்குறைக்கு அரங்கம் என்றும் துருத்தி என்றும் பெயர் உள்ளன. ரங்கம் வடமொழிப் பெயர். (ஊரும் பேரும் பக். 18) அரங்கத்தில் பள்ளி கொண்டமையால் போலும்.[1] அரங்கநாதன் என்ற பெயரையும் பெற்றான். இத்திரு அரங்கம் சிறப்பு பெற்று திகழ்ந்தமை ஆழ்வார் பாடல் அனைத்தாலும் தெளிவு பெறுகிறது. இக்கோயிலின் பெயர் பின்னர் அத்தலம் முழுமையும் குறித்து ஊர்ப்பெயராக அமைந்தது என்பது விளக்கமாகத் தெரிகிறது. திருச்சியில் காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் அமைந்துள்ளமையால் இப்பெயர் அமைகிறது. அரங்கத்திற்குரிய போகமண்டபம் பூலோக வைகுண்டம் போன்ற பெயர்களும் இதன் சிறப்பு நோக்கி எழுந்தவை.[2] மேலும், சைவத்தில் கோயில் என்பது தில்லையைக்குறிப்பது போன்று, வைணவத்தில் கோயில் என்றால் திருவரங்கத்தைக் குறிப்பது இதன்பெருஞ்சிறப்பு உணர்த்தும் நிலையாகும். பல கல்வெட்டுகளில் இக்கோயில் பற்றிய பல செய்திகளும், அரசியல் தொடர்புடையச் செய்திகளும், அரசர் செய்த பணிகளும் சுட்டப்படுகின்றன.

### 14. அரசிலி

ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற இத்தலம் இன்று ஒழிந்தியாபட்டு என்று வழங்கப்படுகிறது.[3] விரிசடையில் ஆறணிந்

---

1 அயோத்தியில் முடிசூட்டு விழாவிற்கு வந்த விபீஷணனுக்குப் பரிசாக இராமன் தான் வணங்கிய அரங்கநாதனை அளிக்கின்றான். காவிரிக்கரைக்கு வந்ததும் விமானம் எடுக்க முடியாது அங்கேயே இருந்துவிடுகிறது. வெறுங்கையனாக விபீஷணன் இலங்கை திரும்ப அவன் வேண்டிக் கொண்டபடி இலங்கையை நோக்கிய வண்ணமாகக் காவிரிக் கரையில் சயனித்து விடுகின்றான் அரங்கன். வேங்கடம் முதல் குமரி வரை—காவிரிக்கரையிலே—பக். 194

2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 159

. கல்வெட்டுகளில் ஊர்ப்பெயர்கள் பக். 192

தார் மகிழ்ந்த திரு அரசிலியைச் சென்றடைந்த ஞானசம்பந்தர் பற்றி சேக்கிழார் பாட (1134, 1135), ஞானசம்பந்தர் பத்துப் பாடல்களாலும் சிறப்பிக்கின்றமையை அவரது தேவாரப்பாக்கள் இயம்புகின்றன. இப்பெயர் பற்றி ஆயும்போது அரசு இலி என்ற நிலையில் அரசமரத்தின் அடியில் இருக்கும் சிவன் என்ற பொருளைத் தருகிறது. தனக்கு மேலானவன் இல்லாதவன் என்ற பொருளையும் தரும் தன்மையிலே அமைகிறது. தொண்டை நாட்டுத் தலமாகிய இது சிறந்ததொரு ஊர் என்பதனை ஞானசம்பந்தர் பாக்கள் இயம்புகின்றன.

'அல்லி நீள் வயல் சூழ்ந்த அரசிலி' என்பது சம்பந்தர் தேவாரம் (231—11) இன்று அரசிலி என்ற பெயர் மாறி ஒழுந்தியாபட்டு என்ற பெயர் வந்தமைக்குரிய காரணம் தெரியவில்லை. அன்றிருந்த கோயில் செல்வாக்கு இன்று இல்லாமையையும் காட்டலாம்.

## 15. அரதைப்பெரும்பாழி

'பாழி' என்ற சொல்லாட்சியைப் பண்டு தொட்டே காணினும் இவ்வூர்ப் பெயரை நாம் இடைக்காலத்தில்தான் காண்கின்றோம்.

இவ்வூர் சோழநாட்டுத் தலமாகும்; இதனை இன்று 'அரித்துவார மங்கலம்' என்று அழைக்கின்றனர்[1] பாழி என்பதற்குரியப் பல பொருட்களுள் கோயில், நகரம், மருத நிலத்தூர், குளம் என்பனவும் உள. கோயில் என்று பார்க்கும்போது, பெரும்பாலும் திருமால் தொடர்பாக அமைவதைக் காணலாம். ஆயின் நாயன்மார் பாடும் நிலை சிவன் கோயிற் சிறப்பு காட்டும் நிலையில் அமைகிறது. எனவே இவ்வூர்ப் பெயர், இயற்கைத் தொடர்பான பெயராக இருக்கவே வாய்ப்பு அமைகிறது. 'அரத்தை' என்பதனைத் தமிழ் லெக்ஸிகன், செடிவகை, எனக் குறிப்பிடுகிறது எனவே இச்செடிகள் நிறைந்த பெரிய இடமாகவோ குளக்கரையாகவோ இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. ஆயின் பின்னர், 'பாழியை'த் திருமால் தொடர்பாகக் கொண்டு அரித்துவாரமங்கலம் என்று பெயர் சூட்டினரோ என்னும் எண்ணம் ஏற்படுகிறது. இங்கு விஷ்ணு கோயில் உள்ளதா என்பது போன்ற கருத்துகள் தெளிவாயின் இவ்வூர்ப்பெயர் மேலும் விளக்கம் பெறலாம். வைணவப்பாடல்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 294

பெற்ற தலமில்லாமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது. ஞானசம் பந்தர் பாடல்பெற்ற இத்தலம் சேக்கிழாராலும் சுட்டப்படு கிறது. பெரும் பாழி என்றே இதனைச் சுட்டினரோ என்ற எண்ணம் ஞானசம்பந்தர் பாடும் நிலையில் அமைகிறது.[1] எனவே அரதை ஊர்ப்பெயராகவும் 'பெரும்பாழி' கோயில் சுட்டும் நிலையிலும் அமைந்திருக்க வாய்ப்பு அமைகிறது.

## 16. அரிசிற் கரைப்புத்தூர்

சங்க இலக்கியம் 'அரிசில்' என்ற ஊர்ப்பெயரைச் சுட்டுகிறது. பதிற்றுப் பத்தின் எட்டாம் பத்தினைப் பாடியவர் அரிசில் கிழார் என்றபுலவர். அரிசில் என்ற ஊர் கொங்கு நாட்டு ஊர் என்பது மயிலைசீனி வேங்கடசாமி கருத்து[2] 'அரிசிலாறு' என்ற ஆறு பற்றிய எண்ணத்தையும் காண்கின்றோம். காவிரியாற்றின் கிளை குடந்தைக் கருகில் பிரியும் நிலையில் இப்பெயர் பெறுகிறது எனக் காணவும் (தமிழ் இலக்கியத்தில் ஆறு. பக். 2) அரிசிற்றென் கரை அழகார் திருப்புத்தூர்(9) என சுந்தரர் பாடலும் இன்று கும்பகோணத்திற்குத் தென் கிழக்கில் இத்தலம் உண்மையையும் உணர.[3] அரிசில், அரிசிற்கரைப் புத்தூர் இரண்டின் நெருக்கம் தெரியவருகிறது. எனவே சங்ககாலத்தில் அரசில் என்று குறிப் பிடப்பட்ட ஆற்றுப் பெயரே ஊர்ப்பெயராக வழங்கிய நிலை யில், பின்னர், கரையும், புத்தூரும் இணைந்த ஊர்ப்பெயர் உரு வாகியிருக்கலாம். மட்டுமல்லாது மூவராலும் பாடப்பட்ட இத் தலத்தை புத்தூர், அரிசிற்கரைப் புத்தூர், திருப்புத்தூர், அரிசிற் தென்கரை அழகார் திருப்புத்தூர் என்ற பெயர்களா லும் சுட்டுகின்றனர். திருநாவுக்கரசர் அரிசிலாற்றங்கரையில் உள்ள அரசிற் கரைப்புத்தூர் என்று கூறிய நிலை யினின்றும், அழகார் புத்தூர் என்ற அவரது கூற்றே நிலை பெற்ற வழக்காக அமைகிறது. இவ்வூருக்கு 'அரிசில்' என்ற பெயர் அடிப்படை என்பதை இவண் உறுதியாகச் சொல்ல

---

1. கொங்கு நாட்டு வரலாறு பக். 180
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 40
3. முத்தூரும் புனற் மொய்யரிசிற் கரைப்புத்தூர் திருநா 175—1

புத்தூர் — திருநா. 175.2
திருப்புத்தூர் — ,, 175—5

லாம். ஆயின், 'அரிசில்' என்ற பெயர் நதிப்பெயரா அல்லது இவ்வூரின் பழம் பெயரா என்பது ஆராயத் தக்கது. அரிசில் பழைய ஊராக அமைய அரசிற் கரைப்புத்தூர், சிவன் கோயில் பக்கத்தில் அமைந்த புதிய ஊராகவும் இருக்கலாம். நதிப்பெயரா யினும், இடப்பெயராயினும் அதன் தொன்மை காணல் முக் கியம். 'அரிசில்' என்பதற்கு மூலம் அரிசியாக இருத்தல் அவ் விடத்தைப் பொறுத்தவரைப் பொருத்தமில்லாது இருக்கின்றது. 'அரிசிப்புல்' என்ற புல்வகையினைத் தமிழ் லெக்ஸிகன் சுட்டு கிறது. (Species of millet-Vol I பக்-126) இப்புல் இவ்வாற்றின் கரையில் நிறைந்து வளர்ந்து காணப்பட்டிருக்கலாம். எனவே 'அரிசிப்புல்' அரிசிலுக்கு அடிப்படையாயிற்று எனக் கொள்ளலாம். அடுத்து, 'தமிழ் இலக்கியத்தில் ஆறு' என்ற நூலில் கி. நாச்சிமுத்து அவர்கள், ஆறுகள் பெயர் பெறும் நிலைக்குரிய பல காரணங் களை அலசியிருக்கிறார்[1]. அவற்றுள் ஆற்றினுள் விளையும் பொருட்களால் பெயர் பெறும் நிலையையும், ஊர்ப்பெயர் காரணமாக ஆறுகள் பெயர் பெறும் நிலையையும் சுட்டுகிறார். இந்நிலையில் 'அரிசில்' என்ற பெயர் காவிரியின் கிளை நதிக்குக் கொடுக்கப்பட்டுள்ளதால், இது கரையில் நின்ற அரிசிப்புற்களால் பெயர் பெற்றிருக்கலாம் அல்லது அந்த இடம் அரிசிப்புல்லால் முதலில் பெயர் பெற்று, பின்னர், அப்பகுதி ஆறும் அப்பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

அரிசொல் அரிசில் என்றாயிற்று என்றும் விஷ்ணுவின் சொற் படியே இவ்வாறு ஓடியது என்றும் அதனால் பெற்ற பெயர் என்றும் இதனைப் பற்றிய எண்ணமொன்றும் வழங்குகிறது.[2] திருநாவுக்கரசர் 'அரிசிற் பெருந்துறை' எனவும் இறைவன் தல மொன்றைக் குறிப்பிடுகின்றார். இதனைச் சுட்டும்போது,

'அத்தன் காண் புத்தூரில் அமர்ந்தான் கா
ணரிசிற் பெருந்துறையே யாட்சி கொண்ட
சித்தன் காண் சித்தீச்சரத்தான் காண் (பதி 301 — 4)'

என்று பாடுகின்றார். புத்தூர் வேறு அரிசிற் பெருந்துறை வேறு என்பது இவண் விளக்கம் பெறுகிறது. ஒருவேளை அரிசிலிற் காணப்பட்ட இன்னொரு சிவன் கோயிலாக இருக்கலாம் அரிசில் பெருந்துறை, சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் என்ற நூலிலோ அல்லது தஞ்சாவூர் மாவட்டம் பற்றி ஆய்வு செய்த பிறரோ

---

1. தமிழ் இலக்கியத்தில் ஆறு பக். 292, 996
2. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் பக். 181

அரிசிற் பெருந்துறையை ஒரு தலமாகச் சுட்டாததால் அரிசிற் கரை மக்களை முழுமையாகக் கவர்ந்து கொண்ட சித்தன் எனச் சுட்டியிருக்கலாம். மட்டுமல்லாது புத்தூர் பகுதியைச் சார்ந்த இடமாகவே இது இருக்கவேண்டும் என்பதற்கு, அரிசிற்கரைப் புத்தூருக்கு 1½ கி மீ. தொலைவில் உள்ள சித்தீச்சரத்தை அடுத்துச் சுட்டுவதை இயம்பலாம்.[1]

'அழகா புத்தூர் என்றழைக்கப்படும் அரிசிற் கரைப் புத்தூருக்கு செருவிலி புத்தூர் என்னும் பழம் பெயர் உண்டு' என்ற கருத்தும் அமைகிறது.[2]

## 17. அல்லிக்கேணி

இன்று திருவல்லிக்கேணி என்று அழைக்கப்படும் தலம் இது. அல்லி மலர்கள் மிகுந்த கேணி காரணமாகப் பெயர் பெற்ற இடம். இதற்குத் திருமால் கோயில் பெருமை சேர்க்கும் நிலையில் அமைகிறது. பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் பாடல்கள் இதன் புகழை யியம்புகின்றன. இப்பதிக்குத் துளசிவனம் என்னும் பெயரும் உண்டு. திருவல்லிக்கேணி மயிலையுள் அடங்கியிருந்த ஒரு பகுதி என்பர். இங்குள்ள கோயிலின் முன்னேயுள்ள குளம் இன்றும் 'அல்லி புட் கரணி'[3] என்றுசுட்டப் படுவது இப்பெயர்த் தோற்றத்தைத் தெளிவாகத் தருகின்றது.

'குரவமே கமழும் குளிர் பொழிலூடு
குயிலொடு மயில்கள் நின்றால்
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக்கேணி கண்டேனே—நாலா - 1073

என்பது திருமங்கையாழ்வார் கூற்று.

## 18. அவளிவணல்லூர்

சங்ககாலத்துத் தெரியவியலாத இவ்வூர், இன்னும் இப் பெயராலேயே வழங்கப்படுகிறது. புதுமையாக அமையும் இப் பெயர்க் காரணம் தெளிவாக இல்லை. இதனைக் குறித்த

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 41
2. ஆனந்த விகடன் 14-6-81 பக். 71
3. புனித கோயில்களும் புண்ணிய தீர்த்தங்களும் பக். 202

புராணக் கதை ஒன்று உள்ளது.[1] எனினும் இப்பெயர், கல்வெட்டில் 'அவளிவளநல்லூர்' என்று குறிப்பிடப்படுமாற்றை நோக்க அவளிவளநல்லூர் என்னும் இப்பெயரமைப்பு[2] வளநல்லூருக்கு சிறப்புக்கூறாக அடையாக 'அவளி' என்ற சொல் அமைந்ததோ என்ற எண்ணத்தை எழுப்புகிறது. அவல் என்பது காளானையும் அவணம் கொட்டைப்பாக்கின் மிகுதியையும் குறிப்பிடும் நிலையில் (தமிழ் லெக்ஸிகன் vol-I Part I பக். 151, 152) இப்பொருட்களின் செல்வாக்கில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கலாமா? என்பது ஆய்வுக்குரியது.

எனினும் 'அவளிவளநல்லூர் என்ற ஊரில் சிவன் கோயில் மிகவும் சிறப்புடன் திகழ்ந்தது என்பது, சம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல் பெற்ற தலமாக இது விளங்குவதினின்றும் தெரிய இயலுகிறது. (திருஞா. பதி 340, திருநா பதி 59), சேக்கிழாரும் அதிர் சிலம்படியார் மகிழ் அவளிவளநல்லூர் என இதனைப் போற்றுகின்றார் (திருஞான. 373).

## 19. அவிநாசி

இன்று அவிநாசி என்று அழைக்கப்படும் ஊரின் பழம் பெயர் புக்கொளியூர். கோயம்பத்தூர் மாவட்டத்தில் உள்ளது. இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் நாமமே அவிநாசி. இன்று ஊருக்கே அவ்விறைப்பெயர் அமைந்து வழங்கிவருகிறது. 'ஊழிக்காலத்தும் விநாசமின்றி இருப்பதால் புக்கொளியூரனுக்கு அவிநாசியப்பர் என்று பெயர். நாசம் எனில் கேடு. விநாசம் எனில் பெருங்கேடு' என்று அவிநாசி என்ற ஊர்ப்பெயர் விளக்கம் சொல்கின்றனர்[3]. கொல்லி நாட்டில் உள்ள இவ்வூரின் பழம் பெயருக்குரிய காரணம் தெரியவில்லை. மேலும், 'காசி விசு

---

1. இவ்வூர் கோயில் குருக்கள் மகளை மணந்திருந்த அந்தண இளைஞர் ஒருவர், தீர்த்த யாத்திரை சென்று திரும்பி வந்தவர் தன் மனைவியின் தமக்கையைத் தன் மனைவி என்று மயக்கமாக எண்ணிவிட, கோயில் இறைவன் உன்னுடைய மனைவி என்று மூத்தவளை அவள் இவள் என சுட்டிக் காட்டியதால் இவ்வூருக்கு அவளிவணல்லூர் எனப் பெயர் ஏற்பட்டது என்ப.

—தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள் - பக். 192

2. இராஜராஜதேவர் ஆட்சியாண்டு 10. S i i, vol. Viii No. 201 —கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் - பக். 51

3. கொங்கு நாட்டுக் கோயில்கள் - பக். 87

வேசுவரிடம் இருந்து ஒருவேர் கிளைத்து ஓடி அவிநாசியப்பராய் முளைத்ததென்று தலபுராணம் மொழியும் என்றும் திருப்புக்கொளியூர் முதன்முதலில் கோயிலுக்கும், குளத்திற்கும் தென்பால் இருந்தது. மறைந்த அவ்வூரின் பெயர் புக்கொளியூர் நத்தம் என இப்போது காணப்படுகிறது.[1] என்ற எண்ணத்தைக் காணும்போது புக்கொளியூர் என்ற பெயர் புக்கொளியூர் நத்தம் என்ற பெயர் அடைந்து, அவ்வூர்ச் சிறப்பு குன்றி, அதன் ஒரு பகுதியாக இருந்த கோயிற் பகுதியே இறைப்பெயரால் செல்வாக்கு பெற்று இன்று திகழ்கின்றது எனக் கருதலாம். மேலும் புக்கொளியூர் என்னும் பகுதி தற்போது வெட்டவெளியாக உள்ளது. அருகில் ஏரி உள்ளது என்ற கூற்றும்,[2] இப்பகுதி சிறப்பிழந்து வீட்டமையைக் காட்டும் எனினும் புக்கொளியூருக்குரிய தோற்றக் காரணம் தெரியவில்லை.

இவ்வூர், தேவார மூவராலும் பாடப்பெற்ற சிறப்புடையது.
திருநாவுக்கரசர்

'அவிநாசி கண்டாய்' (பதி287-7) என்று இறைவனைக் குறிப்பிடுவது இப்புராணக் கதையுண்மையைப் புலப்படுத்துகின்றது.

## 20. அழுந்தூர்

சிவனும் விஷ்ணுவும் சேர்ந்து வாழும் புகழ்மிகு தலம் அழுந்தூர். மாயவரத்துக்குத் தென்கிழக்கில் இப்பகுதி உள்ளது. தஞ்சாவூர் மாவாட்டத்தைச் சார்ந்தது. மட்டுமன்றி திருமங்கை ஆழ்வாராலும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் இருவராலும் பாடல் பெற்ற இத்தலம், அழுந்தை எனவும் வழங்கப்பட்டுள்ளது.

சோழ நாட்டு இத்தலத்தைத் 'தேரழுந்தூர்' என்ற பெயராலும் குறித்துள்ளனர். இன்றும் இப்பெயரே அமைகிறது. இப்பெயர்க் காரணத்திற்கு ஒரு புராணக் கதைக் காரணமாக அமைகிறது.[3] எனினும் இப்புராணக்கதைப் பின்னர் எழுந்ததோ

---

1. கொங்கு நாட்டுக் கோயில்கள்- பக். 88
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 107
3. 'அகத்திய முனிவன் கீழே இறைவனை வழிபட்டு இருந்ததையுணராது ஊர்த்துவரதன் என்ற அரசன் ஆகாயத்தில் செலுத்திய தேர் செல்லாது அழுந்தியதால் பெற்ற பெயர் என்ப- தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 192

தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள் பக். 192

என்றதொரு எண்ணம் இப்பெயராய்வில் எழுகின்ற ஒன்று. அழுந்தூர் என்றும் திரு அழுந்தூர்[1] என்றும் இலக்கிய ஆட்சிகள் இவ்வூரைக் குறிக்கின்றன.

'அலைபுனல் திருஅழுந்தூர் மாடக்கோயில் அடைந்தோர்'
பெரிய. 434

அழுந்தூர் உள்ளார் திருஞா-265-8
அழுந்தை மறையோர்
வழிபாடு செய் மாமாடமன்னியே திருஞா. 156-1

கல்வெட்டிலும் இவ்வூர் செயங்கொண்ட சோழநாட்டுத் திரைமூர் நாட்டு திரு அழுந்தூர்[2] என குறிக்கப்படுதலைக் காண்கின்றோம். எனவே முதலில் அழுந்தூர் எனவும் அழுந்தை எனவும் குறிக்கப்பட்ட இவ்வூர், பின்னர் இங்குள்ள கோயில், சிறப்பு பெற்ற பின்னர் திருஅழுந்தூர் என்றாகிப் புராணக் கதையின் செல்வாக்கு காரணமாக, தேர் அழுந்தூர் எனப் பெயர் பெற்றிருக்க வாய்ப்புண்டு.

மேலும் சோழநாட்டைச் சார்ந்த 'இத்தேரழுந்தூர்' தான் சங்க கால இலக்கியங்கள் சுட்டும் அழுந்தூர், அழுந்தையா என்பதும் ஆய்வுக் குரியது. இடைக்காலத்தில் காணப்படும் இவ்விரு பெயர்களையும் சங்க கால இலக்கியங்களே சுட்டுகின்றன.

கடுந்தேர் திதியன் அழுந்தை—அகம்—196
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றை
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே—அகம்—246

பிற எண்ணங்கள் இவண் இல்லை. சைவ நிலையில் மட்டுமல்லாது வைணவ நிலையிலும், புராணக் கதை ஒன்று 'தேர் அழுந்தூர்' என்ற ஊர்க்குரிய பெயர்க் காரணமாக கருதப்படுகிறது. 'உபரி சரவசு' என்ற ஓர் அரசன். இவனிடம் இருந்த ஒரு தேர் வானவீதியில் உருண்டோடும் தன்மையது. இவன் தேவர்கட்கும் இருடிகட்கும் இடையில் எழுந்த வழக்கில் ஒரு தலைச் சார்பாகத் தீர்ப்புக் கூறியதில் முனிவர்கள் அவன் தேர் 'பூமியில் அழுந்தட்டும்' என்று சாபமிட்டனர். அவர்கள் சாபம்

---

1. தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்- பக்.192

2. கலைவளமும் கல்விவளமும் செல்வ வளமும் தெய்வ வளமும் செறிந்த ஊராக விளங்கியதால் திருஅழுந்தூர் திருவழுந்தூர் என்ற பெயர் அமைந்தது. புகழ் மணக்கும் வைணவத் தலங்கள் பக். 88

இவ்வாறு பலித்தது. ஒரு சமயம் அவன் வானவீதியில் சென்ற பொழுது. இவ்வூர்த் திருமால் திருக்கோயிலுக்கு நேராக இவன் தேர் செல்ல நேர்ந்தது. இதனைச் சிறிதும் பொறுக்க இயலாத பெரிய திருவடி (கருடன்) தம் மந்திர ஆற்றலால் தேரை இழுத்து பூமியில் அழுந்த வைத்து விடுகின்றார். என்பது அப் புராண வரலாறு.[1]

இவ்விரண்டு கதைகளையும் நோக்க தேரழுந்தூர் என்ற பெயருக்கு இணங்க கதையை அமைந்து இருக்கிறார்களே தவிர, அழுந்தூர் என்ற பெயருக்கு வேறு ஏதோ காரணம் இருக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது.

## 21. அளப்பூர்

திருநாவுக்கரசு சுவாமிகளின் பாடலில் இடம் பெற்ற இத் தலம், சிவன் கோயில் பெற்றதொரு ஊர் என்று மட்டுமே தெரிய வருகிறது 'ஊர்' என்ற பொதுக் கூறு கொண்டு முடிவது என்பது, பிற ஊர் பொதுக் கூறுகள் கொண்டு முடியும் பெயருடன் இதனையும் இவர் சுட்டிச் செல்வதால் தெரிய வருகிறது. மேலும் அளம் என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன் உப்பளம், நெய்தல் நிலம், களர் நிலம், என்று பொருள் கூறுவதை நோக்க இவ்வூர் (vol I part. 1 பக். 168) கடற்கரை சார்ந்த ஊராக அமைந்து 'அளம்+ஊர்' எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

'அண்ணாமலை யமர்ந்தார் ஆரூர் உள்ளார்
அளப்பூரார்' திருநா பதி - 265-3
அளப்பூர் ஓமாம்புலியூர் ஒற்றியூரும்—''-285-4

## 22. அறப்பள்ளி

'பள்ளி' என்ற பொதுக் கூறு கொண்டு முடியும் இவ்வூர்ப் பெயர் திருஞானசம்பந்தர் பாடல் வழி தெரியவருகிறது. சிவன் கோயில் கொண்ட இத்தலத்தை யுணராய் மடநெஞ்சமே உன்னி நின்றே என்று பாடுகின்றார் இவர். (175—4) அறம்+பள்ளி→ அறப்பள்ளி ஆகியிருக்கலாம். 'பள்ளி' என்ற பொதுக்கூறு, பொதுவாகக் குடியிருப்புப் பகுதியை யுணர்த்தும் நிலையில் அமைய, சிவன் குடிகொண்ட இடம் காரணமாக,

---

1. சோழநாட்டுத் திருப்பதிகள் பக். 92

அரன்+பள்ளி→ அரன்பள்ளி ஆகி, பின்னர் அரன் பள்ளி அறப்பள்ளியாகத் திரிந்ததோ எனத் தோன்றுகிறது.

## 23. அறையணி நல்லூர்

இன்று அரகண்ட நல்லூர்[1] என்று குறிக்கப்படும் இத்தலம் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்ததாக அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம், (பதி-213) சேக்கிழா ராலும் சுட்டப்படுகிறது. இன்று, 'தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவலூருக்குப் பக்கத்தில் பெண்ணையாற்றின் கரையில் ஒரு சிறிய மலைமேல் கோயில் உள்ளது,'[2] என்பதையும்,

> 'கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர் குரைகழல் பணிந் தேத்தி
> ஆலின் ஐந்துகந் தாடுவார் அறையணி நல்லூரை
> அணைந்தேத்தி' என சேக்கிழார், ஞானசம்பந்தர் (34—968)

சென்ற தலச் சிறப்பு கூறுவதையும் ஒப்பிட கோவலூருக்குப் பக்கத்தில் உள்ளது இவ்வூர் என்பது ஐயமின்றி விளக்கம் பெறு கிறது. மேலும் 'மலைமேல் இக்கோயில்' இருப்பதைக் காண (அறை-பாறை) அறையின் மேல் கோயில் அணிபெறும் சிறந்த ஊர் என்ற அடிப்படையில் இப்பெயர் தோன்றியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இன்று அரகண்ட நல்லூர் என்று, அறை யணி நல்லூர் திரிந்து வழங்குகிறதா அல்லது இதற்கு அடிப் படைக் காரணம் வேறு ஏதாவது உள்ளதா என்பது விளக்க மாகவில்லை. எனினும் நல்லூர் திரியாது நிற்பதை நோக்க அறையணி நல்லூரே திரிந்திருக்க வேண்டும் எனத் தோன்று கிறது.

## 24. அன்பில் ஆலந்துறை

திருமாலயன் துறை, கீழம்பில், அன்பில் என்றெல்லாம் சுட்டப்படும் ஊர் இது. திருச்சி மாவட்டத்தில் உள்ளது. சம்பந் தர் அப்பர் இருவரும் இத்தலத்து இறைவனைப் பாடுகின்றனர்.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 346
2. ,, ,, ,,

பிணைமா மயிலும் குயில் சேர் மடவன்னம்
அணையும் பொழில் அன்பின் ஆலநதுறை யாரே
—திருஞா 33.-

எனவும்,

நீருண் கயலும் வயல் வாளைவராலோ
டாரும் புனல் அன்பின் ஆலந்துறை யாரே திருஞா—33-3

எனவும்

இதன் இயற்கை வளம் பாடும் சம்பந்தர் பாடல்கள் ஊர்ப் பெயர்பற்றிய எந்த விளக்கத்தையும் தரவில்லை. எனினும் அன்பில் ஊர்ப்பெயர் என்பதும் ஆலந்துறை கோயிற் பெயர் என்பதும் தெரிகிறது. எனினும் அன்பில் என்ற ஊர்ப் பெயர்க் குரிய பொருளும் விளங்குமாறு இல்லை. எனவே இதனை மரூஉப் பெயராகக் கொள்ளலாமோ எனத் தோன்றுகிறது. 'மரூஉ' என்றால் இச்சொல்லின் மரூஉவாக எது இருக்கலாம் என்ற கேள்வி எழுகிறது. சங்க இலக்கியத்தில், பல இடங்களில் அழும்பில் என்ற ஊர்ப்பெயர் ஒன்றைக் காண்கின்றோம். (பத்து 344, அகம் 44, புறம் 283, சிலம்—25-177) இதனை நோக்க அழும்பில் என்பது அம்பில் என்றுத் திரிந்து அன்பில் ஆகியிருக்கக் கூடுமா எனத் தோன்றுகிறது சோழநாட்டைச் சார்ந்தது அழும் பில் என்பது சங்க இலக்கியம் கொண்டு ஆய்வாளர் சுட்டும் உண்மை[1]. இங்கும் அம்பில் திருச்சி மாவட்டத்திலேயே அமை கிறது. அடுத்து, புதுக்கோட்டைச் சீமையில் உள்ள அம்புக் கோயிலே அழும்பில் என்பார் ரா.பி. சேதுப்பிள்ளை. எனவே மேலும் பல சான்றுகள் கிடைப்பின் இவ்வூர் பற்றிய தெளிவு கிடைக்கலாம்.

25. அன்னியூர்

இன்று 'பொன்னூர்' என்று சுட்டப்படும் தலம். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. 'அன்னிகுடி' என்றதொரு ஊர் இம் மாவட்டத்தில் உண்டு.[2] இதனை அன்னி என்ற சங்ககாலக் குறுநில மன்னனோடு தொடர்பு படுத்துவர். இப்பெயரைப் போன்று அன்னியூரும் அமைந்திருக்கலாம்.

---

1. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-பக். 65
2. தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 192

ஆறுவைத்த சடை யன்னியூரே

—திருநா-122-1

மன்னியூரிறை சென்னியார் பிறை
அன்னியூரமர் மன்னு சோதியே

—திருஞா-96-1

எய்தி போந்தன்னியூர் சென்று போற்றி

—பெரிய -34-289

## 26. ஆக்கூர்

இன்றும் 'ஆக்கூர்' என்று வழங்கப்படும் இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. மாடக்கோயில் கொண்ட இத்தலம் சைவர் பலராலும் பாடல்பெற்ற சிறப்புடன் திகழ் கிறது. (திருநா—255-6, 272—3, 283-7, திருஞான 178, பெரிய -திருஞா-536, திருநா-248) இவர்களின் பாடல்கள், இவ்வூர் வளத் தையும், சிறப்பையும் அறியத் துணைபுரிகின்றன.

'அவனியில் கீர்த்தித்தென் ஆக்கூர்' என நம்பியாண்டார் நம்பி, தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் (42) சிறப்புலி நாயனார் பிறந்த ஊர்பற்றி பேசும்போது குறிப்பிடுகின்றார். தேர் மன்னும் மணிவீதிகளையுடையது இவ்வூர் என்பது சேக்கிழார் கூற்று (27—248—4). மேலும் தான் தோன்றி மாடம் என்று வழங்கப்படும் இக்கோயிலின் இறைவன் சுயம்புலிங்கமாகக் கருதப்படுகின்றார். இக்கோயிலின் தொன்மையினை, 'தொல் கோயில்' (பதி-178-2) என்று சுட்டும் ஞானசம்பந்தர் குறிப்பும் தருகின்றது. மேலும்,

'வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கு
தாளாளர் ஆக்கூரிற்றான் தோன்றி மாடமே'

(திருஞான பதி 178-3) என்ற எண்ணத்தைப் பார்க்கும்போது இவ்வூர்ப்பெயர்கள் காரணமும் புலனாவதுபோல்தோன்றுகிறது. அன்று வேளாளர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர் என்பது தெளிவான ஒன்று. இந்நிலையில் உணவு ஆக்கும் பணி யில் ஈடுபட்டஇவர்கள் வாழ்ந்த ஊர் காரணமாக 'ஆக்கூர்' என்ற பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 27. ஆடானை

"திருவாடானை" என்று வழங்கப்படும் இவ்வூர் பாண்டிய நாட்டைச் சார்ந்து இராமநாதபுர மாவட்டத்தில் அமைகிறது. வருணனின் புதல்வர் துருவாச முனிவரை அவமதித்தமையின்

ஆட்டுத் தலையும், யானை உடலும் அடையும்படி அவர் இட்ட சாபம் இத்தலத்தில் தீர்ந்தது. இறைவனுக்கு இதனால் ஆடானை நாதர் என்று பெயர்.[1] என்ற புராணக் கதை நம்பிக்கையில் இவ்வூர்ப் பெயர் எழுந்துள்ளது என்ற எண்ணம் முதலில் இறைப் பெயராக அமைந்த இப்பெயரை மக்கள் இவ்வூருக்கு வழங்கியுள்ளனர் என்பதைக் காட்டுகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது. (பதி 248)

28. ஆதனூர்

''நாவார் புகழ்த் தில்லை அம்பலத்தான் அருள்பெற்று நாளைப்
போவானவனாம் புறத்திருத் தொண்டன் தன் புலை போய்
மூவாயிரவர் கை கூப்ப முனியாயவன் பதிதான்
மாலார் பொழில் திகழ் ஆதனூர் என்பர் இம்மண்டலத்தே'
(20)

என்பது நம்பியாண்டர் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி சுட்டும் பாடல். ஆதனூரில் பிறந்த திருநாளைப் போவாரின் ஊராக ஆதனூர் அமையக் காணலாம். சங்க இலக்கியம் ஆதனூர் என்ற பெயரைச் சுட்டாவிடினும் 'ஆதன்' என்ற பெயரைத் தொல்காப்பியத்திலேயே காண இயலுகிறது. இதனைத் தமிழ் லெக்ஸிகன், மக்கள் இயற்பெயருள் ஒன்றாகச் சுட்டுகிறது. ((vol I Part I பக் 227) எனவே 'ஆதன்' என்பது பண்டு தொட்டே தமிழர் சுட்டிய பெயருள் ஒன்று என்பது தெளிவாகின்றது.

பெரிய புராணத்தில் இவ்வூர்,

'பகர்ந்துலவு சீர் போற்றும் பழைய வளம் பதியாகும்
திகழ்ந்த புனற் கொள்ளிடம் பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்
முகந்து தர இருமருங்கும் முளரி மலர்க் கையேற்கும்
அகன்பணை நீர் நன்னாட்டு மேற்கா நாட்டாதனூர்
(24—1)

எனச் சுட்டப்படுகிறது. எனவே 'கொள்ளிடக்கரை' என்ற நிலையில் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்ததாக அமைகிறது. மேலும் தஞ்சாவூரில் வேதாரண்யம் வட்டத்தில்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் – பக். 339

உள்ள 'ஆதனூர்' என்ற ஊர் ஒன்றையும் காண்கின்றோம்.[1] தவிர கல்வெட்டுகளில் ஆதநூர். ஆதனூர்; ஆதனூர்க் கோட்டை என்ற முப்பெயர்களுள் புதுக்கோட்டை திருமய்யம், ஆலங்குடி வட்டத்துள் உள்ள வேறு வேறு ஊர்களையும் தெரிய வருகின்றோம்.[2]

வை. சதாசிவப் பண்டாரத்தார் தம் கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள் நூலில், சேக்கிழார் சுட்டும் ஆதனூர் சிதம்பரம் தாலுக்காவில் உள்ள, ஓமாம்புலியூருக்கு மேற்கே ஒன்றரை மைல் தூரத்தில் கொள்ளிடக் கரையில் உள்ள ஆதனூரே நந்தனார் பிறந்தருளிய இடம் என்பதை ஆய்ந்து சுட்டுகின்றார் (பக்—50).

சங்க இலக்கியத்தில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து (ஏழாம் பத்து பதிகம்) இவற்றுள் 'ஆதன்' என்ற சேர மன்னர் (செல்வக் கடுங்கோ வாழியாதன்) பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. கழக உரையாசிரியர், ஐங்குறுநூறு (வேட்கைப்பத்து மருதம்) முதற் பாடலுக்கு எழுதும் உரையில், 'இவனுக்குப் பின்னர் இவன் பெயரால்ஒரு பழங்குடி நிலவியது என்று தெரிகிறது. ஆதனவினி, ஆதன் எழினி, ஆதன் அழிசி என வரும் சேரமான்களின் பெயர்கள் இதற்குச் சான்றாகும்' (பக். 6) என்று எழுதிச் செல்கின்றார். எனவே சேர மன்னருள் ஒரு குடியினர் ஆதன் குடியினர் என்பது தெளிவு பெறுகின்றது. சங்க இலக்கியத்தை நோக்க அச்சேர மன்னன் வாழ்ந்த அல்லது ஆண்ட இடம் சேர நாடு (சேரலர் மருக 3-16) என்பது புலப்படுகிறதே ஒழிய பேர் தெரியவில்லை. பதிற்றுப்பத்தில் ஒரு பாடலில் (7-7)

'கடும் பறைத்தும்பி சூர் நசைத் தாஅய்ப்
பறைபண்ணழியும் பாடுசானெடுவரைக்
கல்லுயர் நேரிப் பொருநன்
செல்வக் கோமாற் பாடினை செலினே

நேரிமலை காவலனாக இவன் காட்டப்படுகின்றான். நேரி மலைக்குத் தமிழ் லெக்ஸிகன் பொருள் எழுதும் போது 'நேரி தமிழ்நாட்டில் உள்ளதும் சோழர்க்குரியதுமான ஒரு மலை' எனப் பதிற்றுப்பத்து 40ஆம் பாடலைச் சுட்டிக் காட்டுகிறது. இப்

1. தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள் பக். 127
2. கல்வெட்டுகளில் ஊர்ப்பெயர்கள் பக். 53

பாடலில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் காப்பியாற்றுக் காப்பியனார் என்ற புலவரால்,

'நீரிமிழ் சிலம்பின் நேரியோனே' எனச் சுட்டப்படுகின்றான். எனவே இம்மலைப் பகுதியைச் சேரமன்னர்கள் ஆண்டு வந்தனர் எனக் கருத இடமுண்டாகிறது. இந்நிலையில், இவர்கள் ஆண்ட ஊர் வழி வழியாகப் பின்னர் ஆதனூர் என்று பெயர் பெற்றிருக்கவும், இல்லையெனில் இவர் மரபினர் வாழ்ந்து வந்த பல ஊர்கள் இப்பெயரால் சுட்டப்பட்டிருக்கவும் வாய்ப்பு அமைகிறது. எனினும் 'சேர சோழ உறவைக் காட்டும்' நிலையில் அக்காலத் தமிழக நிலையை உணர்த்துகின்றது இவ்வூர் எனவும் கருதலாம்.

## 29. ஆப்பனூர்

ஆப்புடையார் கோயில் எனச் சுட்டப்படும் இவ்வூர் இன்று மதுரை மாவட்டத்தில் அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம். 'மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் வைகையாற்றின் அண்மையில் உள்ளது என்ற குறிப்பு[1], புராணக்கதை அடிப்படையில் சிவன் பெயர் ஊர்ப்பெயராகி இருக்கிறது என்ற எண்ணத்தை உணர்த்துவதாக உள்ளது. 'சோழாந்தகன் என்ற பாண்டியன் பொருட்டு ஓர் ஆப்பினிடத்தில் இறைவன் தோன்றிய தலம்' என்ற கருத்து[2] இதனையுரைக்கிறது. சேக்கிழாரும் சம்பந்தர் அணி ஆப்பனூர் அணைந்த செய்தியைப் (885) பாடுகின்றார். மதுரையின் ஒரு பகுதியாக இருந்தவிடம், கோயிலால் இன்று சுட்டப்படுவது இதனின்றும் தெரிகிறது.

## 30. ஆப்பாடி

பாடி என்ற பொதுக் கூற்றுடன் முடியும் இவ்வூர் இன்று திருவாப்பாடி[3] என்று அழைக்கப்படுகிறது. அப்பர் பாடல் பெற்றது இத்தலம். 'ஆப்பாடியார்' என்று அப்பர் தம் பாடலுள் குறித்துச் செல்ல, ஐயடிகள் காடவர் கோனும் தம் பாடலில் (க்ஷேத்திரத் திருவெண்பா—19)

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 335
2. ,, ,, ,,
3. தஞ்சாவூர் மாவட்டம்

'உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன்—கொள்ளிடத்தின்
தென்திருவாப் பாடியான் தெய்வமறை நான்கனையும்
தன்திருவாய்ப் பாடியான் தான்'

எனவே இயம்புகின்றர். இப்பாடலில் இன்றைய திருவாய்ப்பாடியே என்பது கொள்ளிடக்கரையின் தெற்குப் பாகம் எனச் சுட்டும் நிலையில் தெளிவுறுகிறது. 'ஆய்பாடி' ஆப்பாடியாகியிருக்கலாமோ என்ற எண்ணம் அமைகிறது. பாடி பொதுக் கூறாக இடத்தைக் குறிப்பிட்டு, 'ஆ' என்பது தமிழ் லெக்ஸிகன் குறிப்பிடுவது போன்று ஒருவகை மரவகையாக அமைந்து இம்மரங்கள் நிறைந்த இடம் என வந்திருக்கலாமோ என்பது சிறிது பொருத்தமாக அமைகிறது. மேலும், இங்குள்ள கோவில் தல விருத்தமாக 'அத்தி'[1] அமைவது அத்திமரங்கள் நிறைந்த இடமாக இருந்திருக்குமோ என்ற எண்ணத்தைத் தருகிறது.

## 31. ஆமாத்தூர்

'திருவாமாத்தூர்' என்ற பெயரில் தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். விழுப்புரத்திற்கு மேற்கே நான்கு கல் தொலைவில் உள்ள இவ்வூர் பெயர்க் காரணத்திற்குப் புராணத்தைச் சுட்டுகின்றனர் முன்னோர். 'காமதேனு நந்தி பசுக்கள் எல்லாம் மற்ற விலங்குகளின் தாக்குதலை எதிர்க்க வேண்டி இறைவனைப் பல வருஷங்கள் தவம் கிடந்து கொம்பு பெற்றன என்று கூறும் தலபுராணம். அதனால் தான் இந்த தலத்துக்குத் தாயூர் என்றும் ஆமாத்தூர் என்றும் பெயர் வழங்கியிருக்கிறது. இதனையே கோமாதுருபுரம் எனப் புராணம் விவரித்துக் கூறுகிறது'[2] என்றும் கேள்விப்படுகின்றோம். 'உயிர்களுக்கு, பசுக்களுக்குத் தாயாக இறைவன் அருளும் தலம்' என்ற கூற்றும் உண்டு. எனவே புராணக்கதைகளும் பல வழங்குகின்றதைப் பார்த்தால், இவ்வூர்ப் பெயருக்கு அவரவர் சமய விருப்பம் போன்று பெயர்க்காரணம் சுட்டுகின்றனரே தவிர, உண்மைக் காரணம் வேறாகத்தான் இருக்கவேண்டும் என்பதையுணர இயலுகிறது. ஆமா பசுக்கள் நிறைந்த இடம் என்ற நிலையிலும் இப்பெயர் வந்திருக்கலாம் ஆமா + ஊர் → ஆமாவூர் → ஆமாத்தூர். தேவார மூவர்களாலும் பாடல் பெற்ற சிறப்புடையது இவ்வூர்.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 171
2. வேங்கடம் முதல் குமரி வரை - பக். 12

இங்குள்ள சிவன் கோயில் பழமையும், சிறப்பும் பொருந்தியது என்பதனை அறியும்போது ஊரும் பழமை கொண்டது என்பதை உணர முடிகின்றது.

## 32. ஆமூர்

சங்ககாலத்தில் இருந்தே தெரியவரும் ஊர்ப்பெயர்களுள் ஒன்று ஆமூர்.

பெண்ணையாற்று வளம் பெருகிய திருமுனைப்பாடி நாட்டுள் உள்ள ஊர்களுள் ஒன்று ஆமூர் என்பது பெரியபுராணம் சுட்டும் செய்தி. இங்கு, திருநாவுக்கரசர் பிறந்த செய்தியையும் சேக்கிழார் உரைககின்றார். இவ்வூர்ச் சிறப்பை அவர்,

'இவ்வகைய திருநாட்டில் எனைப் பலவூர்களும் என்றும்
மெய்வளங்கள் ஓங்க வரும் மேன்மையன ஆங்கு அவற்றுள்
சைவ நெறி ஏழுலகும் பாலிக்கும் தன்மையினால்
தெய்வ நெறிச் சிவம்பெருக்கும் திருவாமூர் திருவாமூர்(12)

என்கின்றார், எனவே பண்டு தொட்டே இருந்து வந்த இவ்வூர், இடைக்காலத்தில் சைவ சமயம் மலர்ச்சி பெற்றதொரு ஊராகவும் இருந்தது என்பது தெரியவருகிறது.

## 33. ஆய்ப்பாடி

'ஆர்வநன் மொழி ஆய்' எனச் சிறுபாணாற்றுப் படையில் 'ஆய்' என்ற கடையேழு வள்ளலுள் ஒருவனைக் காண்கின் றோம். மேலும், 'ஆய்' என்பது இடையர்களையும் குறிக்கும். எனவே ஆயர்கள் வாழ்ந்த இடம் ஆய்ப்பாடி என்பது பொருத்த மாக அமைகிறது. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஆழ்வார்கள் இதனைப் பாடுகின்றனர்.

## 34. ஆரூர்

திருவாரூர் என தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. 'ஆர்' என்ற மலரைப்பற்றி ஆத்திமாலையைப் பற்றித் தொண்டு தொட்டே கண்டாலும், இவ்வூரின் பெருஞ்சிறப்பை இடைக் காலத்தேதான் காண்கின்றோம், திருவாரூரை மனுநீதிச் சோழன்

ஆண்டான் என்றக் குறிப்பு[1]. சங்க காலத்தே இவ்வூர் சிறப்புடன் திகழ்ந்துள்ளது என்பதையுணர்த்தும். 'ஆரூர்' என்ற இப்பெயரைக் காண இது ஆத்திமரங்கள் நிறைந்த ஊராக இருக்கலாம் எனவே தோன்றுகிறது.[2] பிற பெயர்க்காரணங்களைக் காட்டிலும்இதுவே பொருத்தமாகவும் அமைகிறது சோழமன்னர்களால்பெருஞ்சிறப்பாகக்கருதப்பட்ட, இவ்வூரின் சிறப்பு காட்டும் நம் இலக்கியச் சான்றும் மிகுதியாக அமைகின்றன. கல்வெட்டிலும் திருவாரூர் என்றே இத்தலம் பெயர்படும். தேவார மூவர்களால் மட்டுமல்லாது சேக்கிழாராலும் மாணிக்கவாசகர், நம்பியாண்டார் நம்பியாலும், பரணதேவநாயனார், ஐயடிகள் காடவர்கோன், கபில தேவநாயனார், சேரமான் பெருமாள் நாயனார் போன்ற பலராலும் பாடப்படும் தன்மை இதன் மதிப்பினைத் தெளிவாக்கும். அல்லல் நோய் தீர்க்கும் அரு மருந்தாக இங்குள்ள சிவனை மக்கள் கருதிய நிலையும் (சிவபெருமான் திருவந்தாதி-20) சிவபுரியென அதனைக் கருதிய நிலையும் (பெரிய கழற்-2) தேனமர்ச் சோலையுடன் இது திகழ்ந்தமையினையும் (திரு கீர்த்தி 73-4) செம்பொற் புரிசையுடன் காணப்பட்டமையினையும் (சிவபெருமான் திருவந்தாதி-98) நோக்க, இவ்வூர் பற்றிய மக்கள் மனநிலையும் வெளிப்படும். இவ்வூர்ப் பழமையையும், சிறப்பையும்

சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமலராள் வழிபட்டது
வன்னியாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னியார் திருவாரூர்த் திருநகர் - பெரிய-4-1
காதன் மங்கை யிதயகமலமாம்
மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால்

(பெரிய 2-33)

நில மகட்கு அழகார் திருநீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 27

2. திருமகள் இவ்வூர் இறைவனை வழிபடும் பொருட்டு இங்கு இருத்தலின் திருவாரூர் என்ற பெயர் பெற்றதென்ப. செல்வம் நிறைந்த அழகிய ஊர் என்ற பொருளும் உண்டு. —தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 40

மலர் மகட்கு வண்தாமரை போல்மலர்ந்
தலகில் சீர் திருவாரூர் விளங்குமால்
(பெரிய 4-12)

போன்ற பாடல்கள் விளக்க வல்லன.

'மஞ்சாடும் பொழிலுடுந்த மலர்த்தடங்கள் புடைசூழும்
செஞ்சாலி வயல் மருதத் திருவாரூர்
(பெரிய ஏயர்—124)

என்பதும் இவ்வூரின் செழுமைக்குச் சான்று.

மேலும் சுந்தரர்' திருவாரூர்ப் பிறந்தார்க்கெல்லாம் அடியேன் தேவாரம் 39—10) என்று கூறும் நிலை, அங்குப் பிறப்பதை மிகவும் புண்ணியமெனக் கருதிய மனநிலையைத் தெளிவுபடுத்துகிறது. இதனையே, முந்திதரும் தலங்களுள், காண முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காசி; பிறக்க முத்தி தருவது ஆரூர்[1] என்ற எண்ணமும் உரைக்கின்றது.

இவ்வூர்ப் பழமையை; தமிழர் பண்டு தொட்டே இவ்வூரில் வாழ்ந்தனர் என்பதனை, அப்பர் பாடல் ஒன்று மூலமும் நாம் அறிய இயலுகிறது.

மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை மணி
திகழும் அம்பலத்தே
பன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ?
அணியாரூர்
கோயிலாய்க் கொண்ட நாளே.

## 35. ஆலங்காடு

இன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் காணப்படும் ஆலங்காடு. திருவாலங்காடு என்று அழைக்கப்பெறுகிறது பெயரிலேயே ஊர்ப்பெயர்க் காரணத்தை உள்ளடக்கிய இவ்வூர் பழையனூர் பக்கத்தில் இன்றும் உள்ளதைக் காண[2] இலக்கியச் சான்றுகள் உரைக்கும் இதனைப் பற்றிய விளக்கம் உணர ஏதுவாகின்றது. இதனைப் பழனமூதூர் நிலவிய ஆலங்காடு' (பெரிய காரைக்—61)

---

1. வேங்கடம் முதல் குமரி வரை—காவிரிக் கரையினிலே
-பக்-85
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக் 96

என்றும், 'பழையனூர் ஆலங்காடு' (திருஞான-பதி 45) என்றும் 'பழையனூர் மேய அத்தா ஆலங்காடா' (சுந்—பதி 52) என்றும் சுட்டுகின்றனர். எனவே பழையனூரின் ஒரு பகுதியாக ஆலங் காடு இருந்தது என்பது தெரிகிறது. பின்னர் இங்குள்ள சிவன் கோயில் சிறப்புற்று, இத்தலம் தனியே 'திருவாலங்காடு' எனச் சிறப்பு பெறும் பெருமை பெற்றது என்பதை யுணரக் கூடுகின் றது. காரைக்காலம் மையாரால் முதலில் சிறப்புற்ற இத்தலம், பின்னர் மேலும் பலரால் சிறப்பிக்கப்படும் பெருமை பெற்றது என்பதையும் காண்கின்றோம். திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகத்தையே காரைக்காலம் மையார் தந்து இங்குள்ள இறைச் சிறப்பை வெளிப்படுத்தக் காணலாம்.

## 36. ஆலம்பொழில்

திருநாவுக்கரசர் பாடல்பெற்ற இத்தலம் இடைக்காலத் திலேயே தெரியவருகிறது. தாவரப்பெயர் கொண்டு பெயர் வைத்தலில் 'ஆல்' மரமும் தமிழகத்தில் மரபாக வழங்கிய ஒன்று என்பதைப் பண்டு தொட்டே ஆலங்குடி, ஆலத்தூர் போன்ற பெயர்கள் சுட்டுவதனைப் போன்று ஆலங்காடும் ஆலம் பொழிலும் சுட்டுவதை இங்கு காண்கின்றோம்.

'அணிதிரு ஆலம் பொழில் (பெரிய திருஞா—351) என்று சேக்கிழாரால் போற்றப்படும் இத்தலம் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.

## 37. ஆலி

திருவாலி என்று அழைக்கப்படும் தலம். தஞ்சாவூர் மாவட் டத்தில் உள்ள, வைணவக் கோயில் தலம் இது. திருமகள் எம் பெருமானை ஆலிங்கனம் செய்தமையால் ஆலி ஆயிற்று என்பர் (நாலா—பக். 835) 'ஆலிநகர்க் கதிபதியே' (நாலா-725) என குல சேகராழ்வார் இத்தலத்து இறையைப் பாடுகின்றார்.

சோலைத்தலைக் கணமாமயில் நடமாட
மழைமுகில் போன்றெழுந்து, எங்கும்
ஆலைப்புகை கமழும் அணியாலி அம்மானே
(நாலா—1189)

புன்னைமன்னு செருந்தி வண்பொழில்வாய்
அகன்பணைகள் கலந்தெங்கும்
அன்னம் மற்றும் வயலணி ஆலி யம்மானே
(நாலா—1191)

என திருமங்கையாழ்வார் பாடல்களில், இவ்வூரின் செழிப்பு தெரிய வருகிறது. ஆலைகள் இருந்தன என்பதை நோக்க ஆலையே ஆலியாயிற்றோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

## 38. ஆவடுதுறை

'ஆவடு தண்டுறை' எனவும் அழைக்கப்பெறும் இவ்விடம் இன்று 'திருவாவடுதுறை' எனப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள இவ்வூர்ப்பெயர் கோயில் தொடர்பால் ஏற்பட்டது எனத் தோன்றுகிறது. துறை, தண்டுறை போன்றன நீர்த்துறையைக் குறிக்க, துறையில் அமைந்துள்ள கோயிலால் இப்பெயர் வந்திருக்கலாம். 'அம்பிகை வழிபட்ட தலம்' எனவும், இதனைச் சுட்டுகின்றனர்[1] எனவே இதனை நோக்க செழிப்பான பகுதி ஆகையால் பசுக்கள் நிறைந்திருக்கலாம். இவை நீர் அருந்தும் துறை என்ற நிலையில் 'ஆ அருந்தும் துறை என்ற பெயர் ஆவடு துறை என மாற்றம் பெற்றிருக்குமோ என்ற எண்ணமும் ஏற்படுகின்றது. திருமூலநாயனாருடன் இத்தலம் தொடர்புடையதாக அமையும் நிலையும்[2] 'ஆவோடு' இவ்வூரைத் தொடர்புபடுத்த ஏதுவாகிறது. ஆவடுதுறை கோயில் பற்றியுரைக்கும் நிலையில் இது கோயில் பெயர் என்பதும், சாத்தனூர் ஊர்ப்பெயர் என்பதும் தெரிய வருகிறது[3] திருமூலர் பிறந்த இடமாகச் சுட்டப்படும் நிலையில் சாத்தனூர் அமைகிறது. இன்றும் சாத்தனூர் என்ற பெயருடன் அமையும் ஊர் காணப்படுகின்றது. இரண்டும் ஒன்றா என்பதும் ஆய்வுக்குரியது.

குடிமன்னு சாத்தனூர் கோக்குலம் மேய்ப்போன்
நம்பி-திருத் - 36

அந்தணர் தம் சாத்தனூர் ஆமேய்ப்பார் குடி தோன்றி
மூந்தை முறை நிரை மேய்ப்பார்
பெரிய-திருமூல-11

## 39. ஆவூர்

ஆமூர் போன்று பண்டு தொட்டே தெரியவரும் ஊர் ஆவூர். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. அங்கணர்க் கிடமாகிய பழம்பதி ஆவூர் (34—376-4) என்ற சேக்கிழார் கூற்றும் இவ்வூர்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 42
2. ,, ,,
3. கல்வெட்டுகள் உணர்த்தும் உண்மைகள் பக். 86

பழமையை உணர்த்தும் ஞானசம்பந்தர் பாடல் பெற்று, இங்குள்ள சிவன் கோயில் சிறப்பைச் சுட்டுகின்ற தலம் (பதி—8). மேலும், சிவபெருமான் திருவந்தாதியில் கபில தேவநாயனாரும் இவ்வூரைச் சுட்டுகின்றார். (13) 'ஆ வழிபட்டமையாலும் இறைவன் பெயராலும் (பசுபதீஸ்வரர்) பெற்ற பெயர். கோயில் பெயரே ஊருக்கும் வழங்கப்படுகிறது' என்ற எண்ணத்தையும் காண்கின்றோம்.[1] இன்று தஞ்சை மாவட்டத்தில் உள்ள இவ்வூர்ப் பெயர் பற்றி நம் பண்டை இலக்கியந்திலும் எண்ணங்கள் உண்டு. பழம்பதி என்று சேக்கிழார் கூறும் தன்மை, ஒன்றாக இருக்கலாம் என்ற எண்ணத்தைத் தருகின்றன. இதனைப்பற்றிப் பேசும் போது ஆ என்பது பசுவையும், ஆச்சா மரத்தையும் குறிக்கும் சொல். எனவே விலங்குப் பெயர் அல்லது மரப்பெயர் அடிப் படையில் தோன்றியதாக இருக்கவேண்டும். என்பர்.[2]

'ஆவின் அருங்கன்றுறையும் ஆவடு தண்டுறை'

(பெரிய திருமூல-9)

'ஆவுக்கருளும் ஆவடு தண்டுறையார் பாதம்

(பெரிய 27-293)

என்று சுட்டுவதும் இத்தொடர்பை வலியுறுத்த வல்லன. திரு மந்திரத்தில் 'சீருடையார் சிவனாவடு தண்டுறை, சீருடையான் பதம் சேர்ந்திருந்தேனே' (139) எனப்போற்றப்படும் இவ்வூர், பின்னர், ஞானசம்பந்தர், சுந்தரர் திருநாவுக்கரசர், நம்பியாண் டார் நம்பி போன்ற பலராலும் சிறப்பிக்கப்பட்டுள்ளதையும் காண்கின்றோம். சாத்தனூரில் உள்ள கோயில் ஆவடுதுறை என்பார் தி.வை சதாசிவப்பண்டாரத்தார். எனினும் இன்று ஆவடுதுறை என்ற கோயிற் பெயரே செல்வாக்கு பெற்றுவிடக் காண்கின்றோம்.

## 40. ஆறைமேற்றளி

சேக்கிழார் ஏயர்கோன் நாயனார் சென்ற திருத்தலங்களுள் ஒன்றாக திரு ஆறை மேற்றளியைக் குறிப்பிடுகின்றார்.

தேடும் இருவர் காண்பரியார் திருவாறை மேற்றளி

சென்றார்' (43)

---

1. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்—பக்-193
2. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்—பக்-74

செம்பொன் மேருச் சிலை வளைத்த சிவனார்
ஆறை மேற்றளியில்
நம்பர் பாதம் பணிந்து இறைஞ்சி (94)

என்ற பாடலடிகள் ஆறை மேற்றளியில் குடிகொண்ட சிவன் பற்றி காட்டுகின்றன. 'ஆறை' என்பது கோட்டை என்ற பொருளில் 'தளி' கோயிலைச் சுட்டும் நிலையில் 'கோட்டை போன்ற கோயில்' என்ற பொருளில் கோயில் பெயர் ஊர்ப்பெயராகி இருக்கலாம். அல்லது அறை (பாறை) மேல் கோயில் என்ற பொருளில் அறை மேற்றளி, ஆறை மேற்றளியாகி இருக்கலாம்.

## 41. ஆனைக்கா

காவிரிக் கரையில் காவிரிக்கும் கொள்ளிடத்துக்கும் இடையில் உள்ள தலம். ஸ்ரீரங்கம் பக்கத்தில் உள்ளது திருவானைக்காவல் என்ற பெயருடன் இன்று திருச்சி மாவட்டத்தில் உள்ளது. ஆனை + கா என்பதற்குப் பொருள் ஆனைகள் நிறைந்த சோலை என்பது. இப்பெயர் பின்னர் இங்குள்ள இறைச் சிறப்பும் கோயில் சிறப்பும் செல்வாக்கு பெற, பிறிதொரு பெயர்க் காரணத்தையும் கொள்கிறது. இங்கு முத்தி பெற்ற யானையின் ஞாபகார்த்தமாகவே இத்தலம் ஆனைக்கா ஆகிறது. சிலந்தி மறுப்பிறப்பில் கோச்செங்கட் சோழனாகப் பிறக்கிறது. அந்தப் பிறவியிலும் யானைமீது கொண்டு இருந்த பகையை மறக்காமல் யானைமீது ஏறஇயலாதமாடக் கோயில்களாக எழுபது கட்டுகிறான்[1]. மேலும் இக்கோயில் தலமரமாகிய வெண் நாவல் காரணமாக இத்தலத்தை 'ஜம்புகேஸ்வரம்' என்றும் சுட்டுகின்றனர். (ஜம்பு—நாவல்) சம்பந்தர்சுந்தரர் பாடலும் இத்தலத்திற்கு உண்டு. மேலும் இங்குள்ள கோயிலின் பழமையைத் திருநாவுக்கரசரின்,

'ஆச்சிராமம் நகரும் ஆனைக்காவும்

முன்னமே கோயிலாக் கொண்டான் தன்னை'

என்ற குறிப்பு சுட்டுகிறது. (236-4)

கோயில் பழமையுடன், இக்கதைப் பழமையையும் இவ்விலக்கியச் சான்றுகள் காட்டுகின்றன.

'சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தல் செய்து
உலந்துஅவண் இறந்தபோதே கோச்செங்கணனுமாக

---

1. வேங்கடம் முதல் குமரி வரை பக். 206

கலந்த நீர் காவிரி சூழ் சோணாட்டு சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டானாரே
திருவானைக் காவிலோர் சிலந்திக்கு அந்நாள்·
கோச் சோழர் குலத்தரசு கொடுத்தார் போலும்

திருநா - 289-8

நிலையிற் பெருகுந் தரு மிடைந்த நெடுந்தண் கான
மொன்றுளதால்

பெரிய - 74-1

அப்பூங்கானில் வெண்ணாவல் அதன் கீழ் முந்நாளரி
தேடும்
மெய்ப்பூங் கழலார் வெளிப்படலும் மிக்க தவத்தோர்
வெள்ளானை
கைப்பூம் புனலும் முகந்தாட்டிக் கமழ் பூங்கொத்து
பணிந்திறைஞ்சி
மைப்பூங் குவளைக் களத்தாரை நாளும் வழிபட்
டொழுகுமால்

,, 74-2

ஆன செயலால் திருவானைக்கா என்றதற்குப் பெயராக

,, 74-3

அப்பர் சுந்தரர் ஞானசம்பந்தர் தவிர, பரணதேவநாயனார் சிவபெருமான் திருவந்தாதியிலும் (20) ஐயடிகள் காடவர்கோன் க்ஷேத்திரத் திருவெண்பாவிலும் (11) இவ்வூர் பற்றிய சுட்டு தலைக் காண்கின்றோம்.

## 42. இடும்பாவனம்

இன்று வரை இப்பெயரிலேயே வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.[1] ஞானசம்பந்தர் பாடல்பெற்ற இவ்வூர் சேக்கிழாராலும் (34—623) சுட்டப்படு கிறது. இடும்பன் வழிபட்ட தலம் என்பது எண்ணம்.[2] காரைக் குடி மயிலாடுதுறை இருப்புப்பாதையில் கடிகுளத்திற்குப் பக்கத்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-324

2. இடும்பன் என்ற அரக்கன் இவ்வூர்க் கோயில் இறைவனை வழிபட்டு உயர்ந்தமையால் பெற்ற பெயர் என்பர்- தஞ்சாவூர் மாவட்டக் கோயில்கள்-பக்-194

தில் இன்று இருப்பதாகத் தெரியவரும் இவ்வூர்[1] அன்று மலைக் குன்றில் மேல் அமர்ந்த கோயிலை மட்டும் சுட்டி இன்று பக்கத் தில் உள்ள இடத்தையும் குறிக்கும் நிலைக்குச் செல்வாக்குப் பெற்றிருக்குமோ என்ற எண்ணம், ஞானசம்பந்தர் தம் பதிக் கத்தின் பல பாடல்களில் குன்றில் மேல் இடும்பாவனம் எனப் பாடும் நிலையால் எழும்புகின்றது.

'சினமார் தரு திறல் வாளெயிற் றரக்கன் மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவனமிதுவே' 17—1
'கலையார் தரு புலவோரவர் காலன் மிகு குன்றில்
இலையார் தரு பொழில் சூழ்தரு மிடும்பாவனமிதுவே'
17—2
'கொந்தார் மலர் புன்னைமகிழ் குரவங்கமழ் குன்றில்
எழிலார் தரு மிறைவர்க் கிடம் இடும்பாவனமே' 18—5

இடும்பன்-முருகனின் கணத்தலைவன் என்ற பொருளைக் காண்கின்றோம். இடும்பாவனம் → இடும்பன் வனம் அல்லது இடும்பு வனம் என்ற நிலையில் இணைந்தது. இடும்பு என்பதற் குரிய பொருட்கள் இவண் பொருத்தமாகவில்லை.[2] எனவே இறைச் சிறந்த காரணமாக, பக்திக் கதை அடிப்படையில் இவ் வனம் பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 43. இடைக்குளம்

சிவன் கோயில் கொண்ட ஆறு, குளம், களம், கா பெயர் கள் இடம்பெற்ற பெயர்களுள் ஒன்றாக இதனைத் திருநாவுக் கரசர் குறிப்பிடுகின்றார் (285—10) நடுவில் அமைந்த குளம் என்ற நிலையில், ஏற்பட்ட பெயராக அமையலாம். பின்னர் இவ்விடத்தில் கோயில் ஏற்பட்டு இருக்கலாம். 'இடைக்குளம் என்பது தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுகாவில் உள்ள மருத்துவக்குடி என்பதாகும். என்ற எண்ணத்தை இராக வையங்கார் தருகின்றார்.[3]

## 44. இடைச்சுரம்

திருவிடைச்சுரம் என வழங்கப்படும் இவ்வூர் இன்று செங்கற் பட்டு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. காட்டின் இடை

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 324
2. அகந்தை, கொடுஞ்செயல், சேட்டை—தமிழ் லெக்ஸிசன் Vol I part I பக். 284
3. ஆராய்ச்சித் தொகுதி—பக்-293

யில் அமைந்த கோயில் காரணமாகக் கோயில் இடைச்சுரமெனப் பெயர்பெற்று, ஊரும் இப்பெயர் அடைந்ததோ என்ற எண்ணம்,

வரிவளரவிரொளி யரவரதாழ வார்சடை முடிமிசை
வளர் மதிசூடிக்
கரிவளர் தருகழல் கால்வலனேந்திக் கனலெரியாடுவர்
காடரங்காக
விரிவளர் தருபொழி லிளமயிலால வெண்ணிறத் தருவிகடி
ண்ணென வீழும்
எரிவளரினமணி புனமணி சார லிடைச் சுரமேவிய
விவர் வணமென்னே–திருஞா–78-1

போன்ற இவரது பாடலைக் காண ஏற்படுகிறது. அரங்கமாகக் காட்டைக் கொண்டிருந்தவர் என்பது இப்பெயர்க் காரணத்தை யுணர்த்தும் நிலையில் அமைகிறது. சேக்கிழாரும் இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் (பெரிய 34—1125, 1126),

தெள்ளாறும் வளைகுளமும் தளிக்குளமு நல்
லிடைக் குளமுந் திருக்குளத்தோ டஞ்சைக் களம்
விள்ளாத நெடுங்களம் வேட்கள நெல்லிக்கா
கோலக்கா வானைக்கா வியன் கோடிகா
கள்ளார்ந்த கொற்றையானின்றவாறுங்
குளங்களங்காவென அனைத்தும் கூறுவோமே.

## 45. இடைப்பள்ளி

ஞானசம்பந்தர், 'வெள்ளச் சடையான் விரும்பும் இடைப் பள்ளி' (ஞான-1-75—4) என இத்தலம் பற்றிக் குறிப்பிடுகின் றார். பிற எண்ணங்கள் தெளிவுறவில்லை. இரண்டு ஊர்களுக்கு இடைப்பட்ட ஊராக இருக்கலாம்.

## 46. இடைமருதூர்

திருவிடை மருதூர் எனச் சுட்டப்படும் இவ்வூர், இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் தேவாரம் பாடப்பட்ட சிறப்புடையது. மருதமரங்கள் காரணமாகப் பெயர் பெற்ற ஊர். இக்கோயில் தலமரமும் மருதமரமே. 'ஸ்ரீசைலம்-மல்லிகார் ஜுனம். நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திலிருந்து 5கி.மீ தொலைவில் உள்ள தாமிரவருணி ஆற்றங்கரையில் திருப்புடார்ஜீனம்

உள்ளது. மத்திய அர்ஜுனம் இடைமருது' என்ற எண்ணத்துடன்,[1] சிவபெருமானுடன் இத்தலத்தின் தொடர்பு பற்றிய எண்ணம் மேலும் பிறவும் அமைகின்றன.[2] இவ்வெண்ணங்களை நோக்க, 'மருத' மரம் அடிப்படையில் பெயர் பெற்ற ஊர்கள் பல இருந்தமையும் அவற்றைக் குறிப்பிட்டுக் காட்டும் பொருட்டு அவற்றை இடம்நோக்கி குறித்தனர் என்பதும் புலனாகும். மேலும் 'மருதூர்' என்றே முதலில் வழங்கிய பெயர் பின்னர் மேலும் விளக்கத்திற்காக அடைசேர்க்கப்பட்டு இடைமருதூர் என்று ஆகி, பின்னர் தலச்சிறப்பு காரணமாக திருவிடைமருதூர் என்றாயிற்று என்பதும் தெள்ளிதின் விளங்கும்.

'இன்றும் ஊரைச் சுற்றிலும் மருத மரங்கள் சூழப்பெற்ற இயற்கை அமைப்பினையுடையது' என்ற எண்ணம் அங்கு மருத மரச் செழிப்பை உணர வல்லதாக அமைகிறது. காவிரியின் தென்கரைத் தலமாகிய இவ்வூரை இன்று 'திருவிடமருதூர்' என்று ரயில்வே காரர்கள் குறித்திருப்பதை நோக்க,[3] இப்பெயர் இன்று வழங்கும் வழக்கு புரிகிறது. மக்கள் எளிமை கருதி 'திருவிடைமருதூர்' என்பதற்குப் பதில் 'திருவிடமருதூர்' என்று சுட்டும் நிலையே இதற்குக் காரணமாகும்.

---

1 சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக்-42

2. 'சிவ பெருமானுக்கு விருப்பமான மருத மரத்துடன் கூடிய மூன்று தலங்கள் தென்னாட்டில் உள்ளன என்றும், அவை வடக்கே கிருட்டிணை ஆற்றின் கரையில் இருப்பது ''ஸ்ரீமல்லிகார்ச்சுனம்'' தெற்கே தாமிரபருணி ஆற்றின் கரையில் உள்ள ''திருப்புடை மருதூர்'' (புடார்ச்சனம்) அம்பா சமுத்திரத்தின் அருகேயுள்ளது. இவ்விரண்டின் இடையில் இருப்பதால், இடைமருதூர் எனப்பட்டு திரு எனும் அடைமொழி சேர்க்கப்பட்டு இப்பெயர் பெற்றது'— தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்—பக்-47

மருதமலர்கள் நிறைந்த சோலை நடுவே இறைவன் தோன்றி உரோமச முனிவருக்கு ஜோதிர்லிங்கமாகக் காட்சி கொடுத்ததால் இடைமருதூர் எனப்பெயர் பெற்றது என்பர். வேங்கடம் முதல் குமரி வரை — பொன்னியின் கரையிலே பக்-263

3. தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்—பக்-47

அரசியல் நிலையில் இவ்வூருக்கு 'வீரசோழபுரம்' என்ற பெயர் இருந்தது எனத் தெரிகிறது [1] எனினும் இன்றில்லை.

மாசில் வீணை மாலைமதியம் போன்றவற்றின் தன்மையை ஒத்தது ஈசன் எந்தை இணையடி நீழல் என்று பாடிய அப்பர், அவன் எவ்வாறு இனிமையுடையவன் என்பதையும்,

கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர் குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆழும் அரசினும்
இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதன்

எனப்பாடும் முறை இவ்விறைச் சிறப்பை யுணர்த்தவல்லது. காவிரியின் அருகில் இருக்கும் நிலையை,

'எறிபுனல் பொன் மணி சிதறும் திரைநீர்ப்பொன்னி
இடைமருதைச் சென்றெய்தி' என்ற சேக்கிழார்

வாக்கு (திருஞா 192) உணர்த்துகிறது. திருவிடை மருதூர் மும் மணிக் கோவையில் பட்டினத்தார் இவ்விறைச் சிறப்பைத் தரு கின்றார் (பதினோராம்—28). மருதிடம் கொண்ட ஒரு தனிக் கடவுளாக இவர் அமைவதை இயம்புகின்றார் (70). கருவூர்த் தேவர் பாடலும் இதற்கு உண்டு. பல சிற்றிலக்கியங்களும் இக் கோயிற் தொடர்பாக எழுந்துள்ளன. அனைத்தும் இவ்விறைச் சிறப்புடன், ஊர்ச் சிறப்பையும் இயம்ப வல்லனவாக அமை கின்றன. இச்செல்வாக்கினை, அரசர்களும் பல பணிகள் செய் திருப்பதன் மூலம் தெரிய வருகின்றோம்.

### 47. இந்தளூர்

திருமங்கையாழ்வாரால் பாடல் பெற்ற இடம். இன்றைய சோழநாட்டைச் சார்ந்தது. 'மாயூரம் நகரின் வடக்கு முனை யில் உள்ளது இத்திவ்விய தேசம் என்ற குறிப்பு'[2] அமைகிறது. எனவே தஞ்சாவூர் மாவட்டம் சார்ந்தது என்பது தெரிகிறது.

இவ்வூர்ப் பெயருக்கு விளக்கம் சொல்வோர், 'இந்திரன் சாப விமோசனம் ஆனதால் ஊருக்கு இந்தளூர் எனப்பெயர் உண்டா

---

1. வீரசோழன் இங்குள்ள காடுகளை வெட்டி நிலத்தைப் பண் படுத்தி ஆலயத் திருப்பணி செய்த காரணத்தால் இதனை வீர சோழபுரம் என்றும் கூறுவர்.
வேங்கடம் முதல் குமரிவரை - பொன்னியின் கரையிலே பக். 263

2. சோழ நாட்டுத் திருப்பதிகள்—பக். 29

யிற்று' எனச் சுட்டுகின்றனர்.[1] 'மயிலாடுதுறை' என்ற ஊரின் அருகேயுள்ள இவ்வூர் திருமால் கோயில் சிறப்பு காரணமாக, புராணக்கதை தொடர்பாக இப்பெயரால் செல்வாக்கு பெற்றதா அல்லது,

'நாடுதும் வாநெஞ்சமே! நாராயணன் பதிகள்
கூடுதும் வா மெய்யடியார் கூட்டங்கள்— சூடுதும் வா
வீதியிந்தளத் தகிலின் வீசு புகை வாசம் எழும்
ஆதியிந்தளூரான் அடி'[2]

என்ற பாடல் கருத்து தரும் 'இந்தளப் புகை நிரம்பிய அடி' என்று குறிக்குமாற்றான் 'இந்தள மரங்கள் நிரம்பிய காடு' என்ற நிலையில் 'இந்தளூர்' எனச் சுட்டப்பட்டு, திருமால் கோயில் சிறப்புடன், புராணக் கதையை இதனுடன் இணைத்து விட்டனரா என்று நோக்கின், தாவரப்பெயர் காரணமாக இப் பெயர் தோன்றியிருக்கக்கூடும் என்பதே பொருத்தமாக அமை கிறது. புராணக்கதை சார்பாக இங்குள்ள குளத்தை 'இந்து புட்கரணி' என்று அழைக்கின்றனர். மேலும் வாசனை மரம் மிகுந்த இடம் என்பதற்கு ஏற்றாற் போன்று, சுகந்தாரணிய க்ஷேத்திரம்' என்ற வடமொழிப் பெயரும் அரணாகின்றது.[3] எனினும் இதற்கும் புராணக் கதையையே சுட்டுகின்றனர்.[4]

## 48. இராமனதீச்சுரம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஊர். இராமன் சிவனை வழிபட்டமை காரணமாக உண்டாக்கிய பெயர் இராமனதீச்சரம். இன்று இராமேச்சுரம் என்று வழங்கப்

1. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-57
 புகழ் மணக்கும் வைணவத்தலங்கள்—பக்-141
 சோழநாட்டுத் திருப்பதிகள்—பக்-39
2. சோழ நாட்டுத் திருப்பதிகள்-பக்.38
3. தென்னாட்டுக் கோயில்கள். பக். 59
4. அரக்கர்களால் துர்நிலை அடைந்த வேதங்கள் பரமனை நோக்கித் தவம் புரிந்து, காவிரித் தீர்த்தத்தில் நீராடிப் பரிமளம் வீசப் பெற்றதால் இப்பதிக்குச் சுகந்தாரணிய ஷேத்திரம் என்ற பெயர் உண்டாயிற்று, புகழ் மணக்கும் வைணவத்தலங்கள் பக் - 140

படுகிறது. இராமனது கதைபற்றிய சில செய்திகளைச் சங்க இலக்கியத்தில் காணினும் இவ்வூர் பற்றிய எண்ணம் அவண் இல்லை. எனினும் கம்பராமாயணத்திற்கு முன்னரேயே இவ்வூர், தன் கோயிற் சிறப்பால் பெருமை பெற்று விட்டது என்பதனை, இவ்வூர் பற்றிய இலக்கியக் குறிப்புகள் காட்டுகின்றன.

நற்றொண்டருடன் நாளும் போற்றிச் செல்வாராகிய ஞானசம்பந்தர்,

'விண்ணவரைச் செற்றுகந்தான், இலங்கை செற்ற மிக்க
பெரும் பாதகத்தை நீக்க வேண்டித்
திண்ணிய பொற் சிலைத் தடக்கை இராமன் செய்த
திருவிராமேச்சுரத்தைச் சென்று சேர்ந்தார்'

என, சேக்கிழார் பாடுகின்றார். எனவே இராமன் வணங்கிய கோயில் எனத் தெளிவாகச் சேக்கிழார் சுட்டும் தன்மையிலும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற பல சிவனடியார் பாடல்பெற்ற தன்மையிலும்[1] இதன் பழம்பெருமை விளக்கம் பெறுகிறது. மேலும் இதன் கடற்கரை சார்ந்த நிலையை 'அந்தண் கானல் இடுதிரை இராமேச்சுரம்' என்ற அடி குறிப்பிடுகிறது. (திருநா – 285 - 8)

49. இருக்கு வேளூர்

' திருக்கிளர் சீர் மாடங்கள் திருந்து பெருங்குடி நெருங்கிப்
பெருக்கு வடவெள்ளாற்றுத் தென் கரைப்பால் பிறங்கு பொழில்
வருக்கை நெடுஞ்சுளை பொழிதேன் மடு நிறைத்து வயல் விளைக்கும்
இருக்கு வேளூர் என்பது இவ்வுலகில் விளங்குபதி'

என பெரிய புராணம் கணம்புல்ல நாயனாரின் ஊர்பற்றிய விளக்கத்தை அளிக்கிறது (பா.1). வெள்ளாற்றின் தென்கரையில் அமைந்த ஊர் என்பது இப்பாடலில் விளக்கம் பெறுகிறது. பெருங்குடிகள் கெழுமிய ஊர் என்ற நிலையில் பழமை பொருந்திய ஊர் எனவும் கொள்ளலாம்.

---

1. இராமேச்சுரத்தனின்பனீயே - திருநா. தே. 255 – 7
இலைவளர் தாழைகள் விம்முகானலிராமேச்சுரம்-268-1
விரைமருவும் கடலோதமல்கு மிராமேச்சுரம் - 268-4
மன்னு விராமேச்சரத்து மாமணி - பெரிய - கழறிற்-109

## 50. இரும்புதல்

தமது திருத்தாண்டகம் பதிகத்தில் திருநாவுக்கரசர், இரும்புதலார் இரும்பூளையுள்ளார் என இறைவன் உறையுமிடம் சுட்டுகின்றார்.

இரும்புதல் என்ற தலம் பற்றி தனது ஆய்வில், 'இரும்புதல் என்பது தஞ்சாவூர் ஜில்லா பாவநாசந் தாலுக்காவில் இரும்புதலை எனவழங்கும் ஊரே என்பது அவ்வூர்ச் சிவாலயத்தே முதல் இராஜராஜ சோழன் முதலியோர் காலத்து அமைந்த சாஸனங்களிலே,

' மனுகுல சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்துத்
திரு விரும்புதலுடைய மஹாதேவர்

எனவருந் தொடரால் தெளிவாகின்றது' என்று எழுதிச் செல்கின்றார் மு. இராகவையங்கார்.[1] இரும்புதல் என்ற சொல்லை நோக்க, அடர்ந்த புதற்பகுதியாக இருந்தவிடம், அங்கு சிவன் கோயில் அமைய, குடியிருப்பாக மாறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 51. இரும்பூளை

'பூளை' பூக்களின் மிகுதியால் பெயர்பெற்ற இடம்[2] இன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமையும் இவ்வூர் சம்பந்தர் பாடல் பெற்று அமைகிறது. சேக்கிழாரும் (பெரிய 34 - 399) நாவுக்கரசரும் இவ்வூரைச் சுட்டுகின்றனர் (265 - 6). இன்று இவ்வூர் 'ஆலங்குடி' என்று அழைக்கப்படுகிறது. 'பூளை'ச் செடிகளுடன் ஆலமும் நிறைந்திருக்கலாம் என்ற நிலையில் பின்னர் 'ஆலங்குடி' செல்வாக்கு பெற்று திகழ்ந்திருக்கலாம் அல்லது இறையிருந்த கோயில் இரும்பூளை என வழங்கப்பட்டு மக்கள் வசித்த பகுதி ஆலங்குடி என்றே வழங்கப்பட்டிருத்தலும் கூடும். புராணக் கதையும் தொடர்பாக

---

1. ஆராய்ச்சித் தொகுதி - பக் - 293
2. பூளை - Red silk Cotton - இலவு,
செடிவகை, வெற்றிப்பூ
தமிழ் லெக்ஸிகன் Vol I பக் - 2853

அமைகிறது.[1] கிழக்கே பூளைவள ஆறு உள்ளது என்ற நிலையில் ஆற்றின் பெயரும் பூளை பூக்கள் மிகுதியை இயம்புகிறது.[2]

## 52. இரும்பை மாகாளம்

இன்று தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர் முன்னைய பெயரிலேயே இன்று வரை வழங்குகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம். 'மாகாளர் வழிபட்ட தலம்' என இதனை இன்று சுட்டினும், சம்பந்தர் பாடல் மேலும் சில விளக்கங்களைத் தருகிறது. இவர் தம் 253 ஆம் பதிகத்தில் 11 பாடல்களில் இத்தலத்து இறைவனைப் பூசிக்கின்றார். எனினும் அனைத்துப் பாடலிலும் இரும்பைதனுள் காணப்படும் மாகாளமே என்றே விளித்துப்பாடுகின்றார்.

சான்றாக,

> எண்டிசையும் புகழ் போய் விளங்கும் இரும்பைதனுள்
> வண்டு கீதம் முரல் பொழில் சுலாய் நின்ற மாகாளமே - 1
> இட்டமாக இருக்கும் இடம் போலிரும்பை தனுள்
> வட்டந் சூழ்ந்து பணிவார் பிணிதீர்க்கும் மாகாளமே - 8
> குரவமாரும் பொழிற் குயில்கள் சேரும் இரும்பைதனுள்
> மருவி வானோர் மறையோர் தொழுகின்ற மாகாளமே - 9

என்பதைக் காட்டலாம். இப்பாடலைப் பயிலும் போது 'இரும்பை' ஊர்ப்பெயர் என்பதும். 'மாகாளம் (இறைவன் மாகாளேச்சுவரர் என்பது இறைப்பெயர் அல்லது இறைவன் வீற்றிருக்கும் இடம் குறித்த பெயராக அமைந்து இன்று இறைச் சிறப்பு காரணமாகச் செல்வாக்கு காரணமாக) 'இரும்பை மாகாளம்' என ஊர் வழங்கப்படத் தொடங்கியிருக்கலாம் எனச் சுட்டலாம்.

'இரும்மை' என்ற சொல்லை ஆராயும் போது அது 'இருப்பை' என்பதன் திரிவுவடிவமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இருப்பை என்பதற்கு இலுப்பை என்ற இன்னொரு பெயரும் உண்டு; இலுப்பை - இலுப்பை மரத்

---

1. பாற்கடலைக் கடையும் போது உண்டாகிய விஷத்தினால் துன்புற்ற தேவர்கள் சிவபெருமானிடம் தஞ்சமடைய, அவர் ஆலமாகிய அந்த நஞ்சை நெஞ்சில் அடக்கிக் காத்த தலமாதலால் இது ஆலங்குடியாயிற்று அதன் காரணமாக பாம்பு விஷத்தினால் இந்த ஊரில் யாரும்இறப்பதில்லையாம் — ஆனந்தவிகடன் 7-6-81 பக்-69

2. மேற்படி இதழ் ,, ,,

தையும், நெல்வகையையும் குறிக்கும் நிலை (தமிழ் லெக்ஸிகன் Vol I Part I பக். 331) இதுவும் தாவர அடிப்படையில் பெற்ற பெயராக இருக்கலாமோ என்ற எண்ணத்தைத் தருகிறது. எனினும் சம்பந்தர் பாடல்,

'இடமெழில் கொள் சோலை யிரும்பை' (254 - 3)
'இரும்பை தனுள்
மஞ்சில் ஓங்கும் பொழில் சூழ்ந்த அழகாய மாகாளம்'
(254 -4)
குரவமாரும் பொழிற் குயில்கள் சேரும் இரும்பை' (254–10)

என்று, சோலைகள் சூழ்ந்த இரும்பையின் வளத்தைச் சுட்டு மாற்றான் இப்பகுதி இலுப்பை மரங்களால் நெருங்கியதாக இருந்திருக்கவாய்ப்பு அமைகிறது. 'மாகாளன்' என்று நோக்க, 'சிவகணத்தலைவரில் ஒருவன்' என தமிழ் லெக்ஸிகன் (Vol V Part I - பக். 3143) குறிக்கின்றது. எனவே சிவன் தொடர்பாக மாகாளம் என்ற இச்சொல் இங்கு அமைந்து இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 53. இலம்பையங் கோட்டூர்

இப்பெயரிலேயே இன்று செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது இவ்வூர். சம்பந்தர் பாடல் பெற்றது இத் தலம். இவ்வூர் பற்றிய விளக்கம் தெரியவில்லையாயினும், சிறப்பான, செழிப்புடையதொரு ஊர் இது என்பதனைச் சம்பந்தர் பாடல்கள் நிறுவுகின்றன.

பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்—76-1
இருமலர்த் தண் பொய்கை யிலம்பையங் கோட்டூர்—76-2
ஏலநாறும் பொழில் இலம்பையங் கோட்டூர் 76-3
புனமெலா மருவிகளிருவி சேர்முத்தம்
பொன்னொடு மணிகொழித் தீண்டிலந்தெங்கும்
இனமெலா மடைகரை யிலம்பையங் கோட்டூர்—76-7
பண்முரன்னு அஞ்சிறை வண்டினம் பாடும்
ஏருளார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர் 76-7

இவற்றை நோக்க பொழில் சூழ்ந்த தொரு ஊர் என்பது தெளிவு படுகிறது. இச்செழிப்பை கொண்டு, இவ்வூர்ப் பெயரைக் காணின் இலம்பை என்பதற்குத் தரித்திரம், துயர நிலை எனப்

பெயர் காணும்போது, அழகிய ஊருக்கு அடையாக இது அமையாது எனத் தோன்றுகிறது. மேலும் ஊருக்குப் பெயர் வைக்கும் போது சிறந்த பெயரை மக்கள் மனம் நாடுமே ஒழிய, துன்பம் தரும் சொற்களால் பெயர் வைப்பர் என்பது எதிர்பார்க்க இயலாதது. எனவே இலம் பயம் என்பது மற்றொரு பொருளைத் தருவதாகவே கொள்ளவேண்டியுள்ளது. 'இலவமலர்' என்பதனின் இடைக்குறையாக 'இலமலர்' எனக் காண்கின்றோம். (இலமலரன்ன வஞ்செந் நூலின்—அகநா-142) எனவே 'இலவம்' 'இலம்' என அமைய வாய்ப்பு அமைகிறது. இந்நிலையில் இலம் பயம் என்பது 'இலவம் பயன் தரும் அழகிய வளைந்த ஊர்' என இவ் வூரைச் சிந்திக்க ஓரளவுக்குப் பொருத்த முறுகிறது. இன்றைய நிலையில் இவ்வூரைக் குறிக்கும்போது இது, "திருவிற் கோலம் என்னும் கூவத்திற்குப் பக்கத்தில் உள்ளது. கூவம் ஏரிக்கரை வழியே சென்று இத்தலத்தை அடையலாம். செம்மையான வழி இல்லை என்று கூறும் கருத்துடன்[1] இவ்வூர்ப் பெயர் பொருத்தமாக அமைகிறது. ஆற்றங்கரையில் அமைந்த ஊராகையால் ஆறு வளைந்து செல்லும் நிலை காரணமாக ஊரும் வளைந்து காணப்படும் எனவே ஆறும், பொழில்களும் இப்பொருளையே இவ்வூர்ப் பெயருக்குரிய காரணங்களாகத் தருகின்றன.

## 54. இளையாங்குடி

சேக்கிழார் இளையான் குடிமாற நாயனார் புராணத்தில் இப்பதி பற்றி குறிப்பிடுகின்றார்.

'இம்பர் ஞாலம் விளக்கினார் இளையான் குடிப்பதி
மாறனார்'(10-1)

இளையாங்குடி என்றதொரு ஊரினை, குலோத்துங்கச்சோழர்[2] கல்வெட்டும் சுட்டுகிறது. இவையிரண்டும் ஒரே ஊராக இருக்கலாம்.

## 55. இன்னம்பர்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த ஊர் இன்னம்பர். கும்பகோணத்திற்கு அருகில் உள்ள ஊர் குறித்து சம்பந்தர், அப்பர் பாடல்கள் அமைகின்றன. இன்று இன்னம்பர் என்றே

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-351
2. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள்—பக்-60

இவ்வூர் அழைக்கப்படுகிறது.[1] 'அம்பர்' என்ற பிற ஊர்ப் பெயரினின்றும் தனித்தறிய 'இன்' என்ற அடையைச் சேர்த்தனர் எனலாம். சம்பந்தர் அப்பர் பாடல் பெற்ற தலம். சேக்கிழாரும் தவிர சுந்தரரும் இவ்வூரைக் குறிப்பிடுகின்றார்[2] இப்பாடல்களில் பெரும்பாலும் 'இன்னம்பர் ஈசர் புகழ்பாடுதல் இருக்கின்றதே தவிர ஞானசம்பந்தரின் ஒரு சில பாடல்களிலேயே 'இன்னம் பரை' புகழும் நிலையைக் காண்கின்றோம். இப் புகழ்ச்சியும் ஒரு சில நிலையிலேயே அமைகிறது.

'எண்டிசைக்கும் புகழ் இன்னம்பர் - 353-1
'இடி குரல் இசைமுரல் இன்னம்பர் (353-4)
எழி றிகழும் பொழில் இன்னம்பர் - 353-7
ஏத்தரும் புகழணி இன்னம்பர் 353-8
ஏரமர் பொழிலணி யின்னம்பர் 353-10

இவை பொழில் சூழ்ந்த செழிப்பான இடம் என்ற ஒரே ஒரு 'சிறப்பையே காட்டுகின்றன. நம் தமிழ் நாட்டில், அம்பர், இன்னம்பர் நல்லம்பர் என்ற ஊர்கள் இருத்தலைப் பலர், அறிந் திருத்தல் கூடும்' எனக் கூறும் அறிஞர் கருத்தில்[3] பல ஊர்கள் இருப்பதை அறிகின்ற போது அப்பு-நீர் இதனின்றும் அம்பர் என்ற சொல் பிறந்திருக்குமோ எனத் தோன்றுகிறது.

## 56. ஈங்கோய் மலை

'திருவிங்க நாத மலை[4] என இன்று அழைக்கப் பெறும் இவ்வூர் இன்று திருச்சி மாவட்டத்தைச் சார்ந்ததாக அமை கிறது. குன்றின் மேல் சிவன் கோயில் உள்ள தலம். எனவே 'மலை' என்பது இங்கு 'குன்று' குறித்தமைகிறது. ஈங்கை என்ப தற்கு விளக்கம் தரும் நிலையில் தமிழ் லெக்ஸிகன் 'இண்டஞ் செடி' (ஈங்கைப் பைம்புதல் அணியும் - ஐங் 456) எனக் கூறு கிறது (vol I part I பக். 374). எனவே இண்டஞ்செடிகள் மிகுந்த மலை என்ற பொருளிலேயே இப்பெயர் அமைந்திருக்கக் கூடும். 'அகத்தியர் ஈவடிவில் சென்று சுவாமியைத் தரிசித்த தலம்'

---

1. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 113
   கல்வெட்டுக்கள் உணர்த்தும் உண்மைகள் பக். 87
2. ஏரின் மருவும் இன்னம்பர் மகிழ்ந்த ஈசர்-பெரிய,ஏயர்-95
   'அங்க மோதியோ ராறை மேற்றளி நின்றும் போந்து
3. வந்தின்னம்பர்த் தங்கி - சுந். 35-1
4. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் - பக்.16

என்பது புராணக் கதை[1] பின்னர் 'திரு ஈங்கோய் நாதன் மலை' என்று கோயில் செல்வாக்கு காரணமாக அடைந்த பெயர் இன்று 'திருவிங்க நாதமலை' எனத் திரிந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது (70).

பறையும் குழலும் கழலுமார்ப்பப்படு காட்டெரியாடும்
இறைவர் சிறைவண்டறை பூஞ்சாரலீங்கை மலையாரே-4

திருநாவுக்கரசரும் இம்மலையின் சிறப்பை 'ஏலமண நாறு ஈங்கோய் என்று (231-3) நவில்கின்றார். மேலும் மாணிக்கவாசகர் 'ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி' (போற்றித் 158) என வழிபடுகின்றனர். பட்டினத்துப் பிள்ளையார் தம் திருவேகம்பமுடையார் திருவந்தாதியில் 'வையார் மழுப்படை ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனம்' (16) என இதனைச் சுட்டுகின்றார். சேக்கிழாரும் இதனைக் காட்டுகின்றார் (34-322-4). எனவே பலரின் மனத்தையும் கவர்ந்ததொரு தலமாக இது விளங்கியது என்பது தெளிவாகின்றது.

## 57. உசாத்தானம்

இன்று கோயிலூர்[2] என்று வழங்கப்படும் இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. இராமர் இலக்குவர் போன்றோர் வழிபட்ட இத்தலம் சம்பந்தர் பாடல் பெற்றது.

முல்லையார் புறவணி முதுபதி நறைகமழ்
தில்லை யானுறைவிடம் திருவு சாத்தானமே—291-2

இங்குள்ள கோயிலின் செல்வாக்கு காரணமாகப் பிற்காலத்தில் 'கோவிலூர்' என்று வழங்கப்பட்டு இருத்தல் கூடும். சூதவனம் என்பது இன்னொரு பெயர்.[3]

## 58. உடுப்பூர்

கண்ணப்ப நாயனார் புராணத்தில் கண்ணப்பரின் பிறந்த இடம் பற்றிப் பேசுகையில் சேக்கிழார், பொத்தப்பி நாட்டில்,

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 56
2. ,, ,, பக். 324
3. இலக்கிய சாஸன வழக்காறுகள்—பக். 102

இத்திரு நாடு தன்னில் இவர் திருப்பதி யாதெனில்
நித்தில அருவிச் சாரல் நீள் வரை சூழ்ந்த பாங்கர்
மத்த வெங்களிற்றுக் கோட்டு வன் தொடர் வேலி கோலி
ஒத்த பேரரணம் சூழ்ந்த முதுபதி உடுப்பூராகும் (16-2)

என இப்பதியின் தன்மை உரைக்கின்றார். 'குன்றவர் அதனில் வாழ்வார்' என்றுஅடுத்த பாடலில் இப்பதியின் தன்மை கூறும் நிலை, இது மலைப்பகுதி என்பதைத் தெளிவாக்கும். எனவே அரணம் சூழ்ந்த முதுபதி ஆகையால் 'உடுப்பூர்' என்ற பெயர் அமைந்திருக்கலாம் அல்லது மலையில் வாழும் உடும்புகள் நிறைந்த பகுதியாக இருக்கலாம். பிற எண்ணங்கள் இது தொடர்பாக இல்லை.

59. உத்தரகோசமங்கை

மாணிக்கவாசகர் பாடல்பெற்ற தலம் இது. இன்று இராம நாதபுர மாவட்டத்தில் உள்ள இவ்வூர் பற்றிய கதை சுவையாக அமைகிறது. வேதம் படிப்பதற்காகப் பார்வதியைப்பூலோகத்தில் அவதரிக்கச் செய்து, வேதம் படிக்க வைத்து, மீண்டும் வேதப் பொருளை அவருக்கு உபதேசிக்கின்றான். 'இப்படி வேதத்தில் திரும்பவும் உபதேசம் பெற்ற மங்கை கல்யாண சுந்தரியாகக் கோயில் கொண்டிருக்கும் தலம் தான் உத்தர கோசமங்கை' (உத்தரம் என்றால் திரும்பப் பெறும் விடை; கோசம் என்றால் வேதம் என்று பொருள்)[1]

உத்தர கோசமங்கை யுளிருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பு திரு-கீர்த்தி-48-49
உத்தரகோசமங்கைக் கரசே திரு-நீத்தல்-3
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருந்தாளிணை பாடி (திரு -திருப்பொன்)

என, பண்ணின் மொழியாளொடு உத்தரகோசமங்கை மன்னி இருக்கும் சிவன் புகழ் பாடுகின்றார் மாணிக்கவாசகர். மாணிக்க வாசகரால் மிகச்சிறப்பாகப் பல இடங்களில் குறிக்கப்பெறும்

---

1. வேங்கடம் முதல் குமரிவரை- பொருநைத்துறையிலே -பக்.87

இவ்விறையைப் பற்றி, பிறமூவரும் ஏன் பாடவில்லை அல்லது சுட்டவில்லை என்பது தெளிவாகவில்லை. எனினும் மங்கை என்பது மங்கலம் என்ற பெயரின் மரூஉவாக இருக்க வாய்ப்பு இருக்கும் நிலையில் சிறப்பு அடை புராணக் கருத்து சார்ந்து இப்பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 60. உத்தராபதி

'உத்தராபதியுள்ளோம்' (42-40) என்று சேக்கிழார் சிவன் வாய் மொழியாக உரைக்கும் நிலையில் இப்பெயர் அமைகிறது. பிற எண்ணங்கள் தெளிவில்லை.

## 61. உறந்தை

உறந்தை, உறையூர், கோழியூர் போன்ற பல பெயர் பெற்ற ஊர். பல பெயர்கள் இதன் சிறப்பையும் செல்வாக்கை யும் காட்டும். சங்க காலத்திலேயே சோழமன்னர்களின் பெரு மதிப்பினைப் பெற்று, அவர்களின் தலைநகராகத் திகழும் வண்ணம் சிறப்புடன் விளங்கிற்று. சேக்கிழார், சோழனுடன் உறந்தையின் நெருக்கம் கண்டே 'உறையூர்ச் சோழன் மணியா ரம் சாத்தும் திறத்தை' (ஏயர்—76) எனப்பாடிச் செல்கின்றனர். இவ்வூர்ப் பெயர், பண்டு தொட்டே உறந்தை என்றும் உறையூர் என்றும் வழங்கிவருவதால் இடைக்காலத்தும் இவ்விரு பெயர் களையும் புலவர் சுட்டும் நிலை இயல்பாக அமைகிறது. எனினும் 'உறையூரே' முதல் பெயர் உறந்தை மரூஉப் பெயர் என்பதை யும் நாம் அறிகின்றோம்.[1] இது காவிரிக் கரையில் உள்ளதொரு ஊர். எனவே அப்பகுதியில் முதலில் மக்கள் உறைவதற்குத் தேர்ந்தெடுத்த ஊர் என்ற நிலையில் மக்கள் உறைவதற்கு ஏற்ற ஊர் என்ற பொருளில் இப்பெயர் தோன்றியிருக்கலாம்.

உறந்தை என்ற ஊர் மக்களின் சிக்கனம் போன்ற பல காரணங் களால் பின்னர் மருவி வழங்கினும், மக்களிடம் 'உறையூர்' என்ற பெயரும் செல்வாக்கு இழக்கவில்லை என்பதையே இப்பெயரின் வாழ்வு காட்டுகிறது. 'கோழியூர்' சோழன் வரலாறு தொடர் பாக அமைகிறது. இந்த உறந்தை நகரில் விளங்குகின்ற சிராப் பள்ளி எனத் திருநாவுக்கரசர் குறித்த நிலையினைக் (15-4) காண் கின்றோம். ஆயின் இன்று, திருச்சிராப்பள்ளி செல்வாக்கு பெற, 'உறையூர்' அதனுள் ஒரு பகுதியாக விளங்கக் காண்கின்றோம்.

---

1. இடப்பெயராய்வு—பக். 81

முத்தொள்ளாயிரமும், (46, 81, 85, 88, 96)

சிவபெருமான் திருவந்தாதி,
'விரையார் புனற் கங்கை சேர் சடையான் பொன்னார்
விரையார் பொழில் உறந்தை மேயான்' (65)

எனவும் உறந்தை பற்றி உரைக்கின்றன. உறந்தையில் உள்ள கோயில் முக்கீச்சுரம் எனப்படும். உறையூரை வடமொழியில் உரசபுரம் என்று அழைத்ததாகத் தெரிகிறது.[1]

## 62. ஊற்றத்தூர்

திருநாவுக்கரசர் ஊர் என்று முடியும் திருத்தலத் தொகுதியுள் ஒன்றாக இதனையும் உரைக்கின்றார்.

உறையூரும் ஒத்தூரும் ஊற்றத்தூரும் (285-4)

## 63. ஊறல்

'தக்கோலம்' என வழங்கப்படும் இத்தலம்,[2] வடஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்து இன்று அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம் குறித்துச் சேக்கிழார் சுட்டுகின்றார். 'ஏயர் கோனும்' இங்குச் சென்றதாகக் குறிப்பு கிடைக்கிறது 'திருவூறல் அமர்ந்திறைஞ்சி' (பெரிய-ஏயர்-28?) 'நந்தி தீர்த்தம் உள்ளது. பக்கத்தில் கல்லாறு ஓடுகிறது.'ஒரு காலத்தில் நந்தி வாயிலிருந்து நீர் விழ்ந்து கொண்டு இருந்தது' என்ற கருத்து[3] நீர் ஊறிக் கொண்டிருந்த காரணத்தால் ஊறல் என்ற பெயர் அமைந்ததோ என்ற எண்ணத்திற்கு வழி வகுக்கிறது. இவ்வூர் வளம் குறிக்கும் நிலையில் மிகச் சிறப்பாகச் சம்பந்தர் பாடல்கள் அமைகின்றன.

'தேறல் இரும் பொழிலுந் திகழ் செங்கயல் பாய் வயலும்
சூழ்ந்த
ஊறல் அமர்ந்த பிரான் 106-1
'கொண்டல்கடங்கு பொழிற் குளிர் பொய்கைகள் சூழ்ந்து
நஞ்சையுண்ட பிரான்அமரும் திருவூறல் (106-5)

---

1. பௌத்தமும் தமிழும் பக். 31
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 16
3. ,, ,, பக். 97

## 64. எதிர் கொள்பாடி

'மேலைத் திருமணஞ்சேரி' எனச் சுட்டப்படும் இவ்வூர் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்து இன்று அமைகிறது. சுந்தரர் பாடல் பெற்றது இத்தலம். 'திருவேள்விக் குடியிலிருந்து 3கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூரின் கிழக்கே கீழைத் திருமணம் சேரி உளளது. அரசகுமாரன் ஒருவன் திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் தன் நகர் செல்லும்போது அவனுடைய அம்மானைப்போல் இறைவன் இத்தலத்தில் இருந்து அவனை எதிர் கொண்டு அழைத்துச் சென்றமையால் எதிர் கொள்பாடி என்னும் பெயர் வந்தது' என்ற கருத்து இப்பெயருக்கு அமை கிறது.[1] 'தேனாரும் மலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த திரு எதிர் கொள்பாடி' என, சேக்கிழார் வருணனை அமைகிறது. (35-120-4)

## 65. எயினனூர்

'புண்டரிகம் பொன் வரைமேல் ஏற்றிப் புவியளிக்கும்
தண் தரள வெண்கவிகைத் தார் வளவர் சோணாட்டில்
வண்டறை பூஞ்சோலை வயல் மருதத் தண்பணை சூழ்ந்
தெண்டிசையும் ஏறியசீர் எயின் மூதூர் எயினனூர்'

என, சேக்கிழார் பெரிய புராணம் எயினனூர் பற்றிக் குறிப் பிடுகிறது. 'எயின் மூதூர்' என்ற சொல்லினால் அமைந்த ஊராக இருக்கலாம் என்பதனையே எயின் மூதூர் எயினனூர் என்ற ஆட்சி விளக்குகிறது. எயில் பெற்ற பழம் பதி என்பது இதன் பொருள்.

மேலும் சோழநாட்டைச் சார்ந்த மருதநில, செழிப்பு மிக்க தொரு இடம் என்பதும் இவண் விளங்குகின்றது. இதனைத் தவிர, எயில் உடைய பிறபகுதிகளையும் 'எயின் மூதூர்' எனக் குறித்தனர் என்பதனை, கஞ்சாறூர் என்பதனை எயின் மூதூர் என்று குறிப்பிடும் நிலையும் (பெரிய-18-36) பன்னிரண்டு பேர்படைத்த பூந்தராயில், நுழையும்போது 'ஏழிசையினுடன் பாடி எயின் மூதூர் உட்புகுந்தார்' எனச் சுட்டும் தன்மையும் (34—1148) விளக்குகின்றன. இவ்வாறு எயில்பதிகள் மிகுதியாக இருக்கும் நிலையிற் சிறப்பாக இதனைச் சுட்டிய தன்மையினை நோக்க எயினர்கள் வாழ்ந்த பகுதியாக இது இருந்திருக்குமோ என்ற எண்ணமும் தோன்றுகிறது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 69

## 66. எருக்கத்தம் புலியூர்

இன்று 'ராஜேந்திர பட்டணம்' எனச்சுட்டப்படும் இவ்வூர் தென்னாற்காடு மாவட்டந்தைச் சார்ந்து அமைகிறது. 'எருக்கு' என்ற தாவரப் பெயர் அடிப்படையில் இவ்வூர் பெயர் பெற்றிருக்கலாம். இக்கோயிலின் தலமரம் வெள்ளெருக்கு[1] என்ற உண்மையும் மேற் சுட்டியக் கருத்திற்கு அரணாகிறது. 'ராஜேந்திர பட்டணம்' அரசர்களின் செல்வாக்கு காரணமாக மாற்றப்பட்ட பெயராக இருக்கலாம். சம்பந்தர் இவ்விறையை ஒருபதிகத்தில் பாடுகின்றார் (89) நம்பியாண்டார் நம்பியும் தம் திருத்தொண்டர் திருத்தொகையில் (83) இவ்வூர் பற்றிய எண்ணம் தருகின்றார். எருக்கத்தம் புலியூர் மன்னிவாழும் திருநீலகண்டர் பற்றி பெரியபுராணம் தருகிறது (திருநீல - 1)

## 67. எவ்வுளூர்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். திரு எவ்வுளூர் என்று வழங்கப்பட்ட ஊர் இன்று திரு வெள்ளூர் என்றபெயர் பெற்ற நிலை அமைகிறது. இன்று திருவள்ளூர் எனவும் அமைகிறது. திரு எவ்வுள்ளூர் என்ற பெயர் திருவுள்ளூர் என்று மருவி திருவெள்ளூர் என திரிந்து வழங்கியிருக்க வேண்டும்' என்ற கருத்து இது குறித்து காணப்படுகிறது.[2] மேலும், 'எம்பெருமான் தாம் சயனித்துக் கொள்ள வேண்டிய உள் எவ்வுள் என்று வினவ, முனிவரும் இவ்வுள்ளிலேயே திருக்கண் வளர்ந்தருள்க என்று விண்ணப்பிக்க எம்பெருமானும் அவ்விடத்தில் சயனித்துக் கிடந்தமையால் எம்பெருமானுக்கு 'எவ்வுள் கிடந்தான்' என்று திருநாமம் வழங்கலாயிற்று' என்பது இவ்வூர் பற்றிய புராணக் கருத்து. எனவே இறைவன் இருந்த கோயில் பெயர் பின்னர் ஊருக்கும் ஏற்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

திருமங்கையாழ்வாரும், திருமழிசைப் பிரானும் இத்தலம் பற்றிப் பாடுகின்றனர்.

பாலனாகி ஞாலமேழுமுண்டு பண்டு ஆலிலை மேல்
சாலநாளும் பள்ளி கொள்ளும் தாமரைக் கண்ணன்,
எண்ணில்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் - பக். 263
2. தொண்டை நாட்டுத் திருப்பதிகள் - பக். 130
   வீஷாரண்யம் - வடமொழிப்பெயர் - பக். 127

நீலமார் வண்டுண்டு வாழும் நெய்தலந் தண் கழனி
ஏலநாறும் பைம்புறவில் எவ்வுள் கிடந்தானே (1058)

என எவ்வுள் இறைபற்றிபாடுகின்றார் திருமங்கையாழ்வார். மேலும் நாகத்தணை கொண்ட இவன் நிலையை,

'நாகத்தணை க்குடந்தை வெஃகா திருவெவ்வுள்

நாகதிதணையரங்கம் பேரன்பில்' (3519) என்று சுட்டுகின்றார் திருத்மழிசையாழ்வார்.

## 68. எறும்பியூர் மலை

'திரு எறும்பூர்' எனவழங்கப்படும் இவ்வூர் இன்று திருச்சி மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது, 'தேவர்கள் எறும்பு வடிவம் கொண்டு வழிபட்டனர் எனவே இப்பெயர் என்பது புராணக் கருத்து[1], எனினும் மலைமேற் கோயில் இருந்தது என்பது அப்பர் பாடல்வழி புரிகின்ற ஒன்று.

திருவெறும்பியூர் மலைமேல் மாணிக்கம் என அவர் விளித்துப் பாடுவதைக் காண்கின்றோம் (305)

எறும்பியூர் மலை இன்று எறும்பூர் ஆக எளிமை கருதி திரிந்தது போலும். கோயில் செல்வாக்கு பெற்ற காரணத்தால் அம்மலைப் பெயரிலேயே ஊர்ப்பெயரும் அமைந்தது எனத் தோன்றுகிறது.

## 69. ஏடகம்

இன்று 'திருவேடகம்' என்று சுட்டப்பட்டு வரும் இவ்வூர் மதுரை மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது. 'ஞானசம்பந்தர் சமணர்களோடு செய்த புனல் வாதத்தில் அவர் வைகையில் இட்ட 'வாழ்க அந்தணர்' என்னும் தேவாரப் பதிகம் எழுதிய ஏடு நீரை எதிர்த்துச் செல்ல, நாயனார் வன்னியும் மத்தமும் என்ற திருப்பதிகம் பாடியவுடன் அவ்வேடு ஒதுங்கி நின்ற தலம். இதனால் ஊரின் பெயர் ஏடகம் ஆயிற்று,[2] என்னும் கருத்து இவ்வூர் பற்றி அமைகிறது. திருஞானசம்பந்தரே தம் தேவாரத்தில்,

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் - பக். 216
2. மேற்படி நூல் - பக். 333.

'கோடு சந்தனம் அகில்கொண்டு இழி
வைகை நேர் ஏடு சென்று அணைதரும்
ஏடகத்து ஒருவன்' எனக் குறிப்பிடுகின்றார்.

வைகையின் வடகரையில் உள்ள தலம் இது.

## 70. ஏமப்பேறூர்

வையம் புரக்கும் தனிச்செங்கோல் வளவர் பொன்னித் திருநாட்டுச்
செய்ய கமலத் தடம்பணையும் செழுநீர்த் தடமும் புடையுடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அருமறை நூல் புரிந்த சீலப் புகழதனால்
எய்தும் பெருமை எண்டிசையும் ஏறூர் ஏமப் பேறூரால்

என்ற சேக்கிழார் பாடல் (பெரிய. 33 - 1) சோழநாட்டு, மிகவும் செழிப்பு மிக்கதொரு 'ஊர்' எனக் காட்டுகின்றது இச் செழிப்பு மக்கள் வாழ்க்கையைச் சீரியதாக இருக்கச் செய்த நிலையில் இது 'ஏமப்பேறூர்' எனத்திகழ்ந்திருத்தல் திண்ணம். 'இன்பம் தரும் சிறப்புபெற்ற ஊர்' என்ற நிலையில் இவ்வூர் பொருள் அமைகிறது. நம்பியாண்டாரின் திருத்தொண்டத் தொகை இவ்வூரை 'எழில் ஏமப்பேறூர்' (31) எனக் குறிக். கின்றது.

## 71. ஐயாறு

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமையும் ஊர் 'திருவையாறு' என்றே வழங்கப்படுகிறது. தேவார மூவரும் பாடிய பதிகங்கள் பெற்ற ஊர் இது. மாணிக்கவாசகரும் இவ்வூரைச் சுட்டுகின்றார். சிவபெருமான் திரு இரட்டைமணி மாலையும் (30) ஷேத்திரச் கோவையும் (3) இதனைச் சுட்டுகின் றன. இவை, ஐயாறு காவிரிக் கரையில் இருக்கும் நிலையையும் சிறந்த நகரமாகத் திகழ்ந்த நிலையையும் காட்டுகின்றன.

மிடையும் நீள் கொடி வீதிகள் விளங்கிய ஐயாறு
பெரிய திருஞா. 373
அழகியப் பங்கய வாவி ஐயாறு பெரிய திருஞா. 299
மாடவீதி மணிவீதித் திருவையாறு
ஆடலொடு பாடல் அறா அணிமூதூர் ,, ,, 300

வடகரையில் திருவையாறு எதிர்தோன்ற
கடல் பரந்ததென பெருகும் காவிரி பெரிய சுழறிற் - 131
பொன்னிசூழ் ஐயாற்றெம் புனிதன் தே. திருநா. 298
அத்தன் ஐயாறன் அம்மானைப்பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே - திருவா - திருப் பொற் - 1-4
அலையத் தடம் பொன்னிசூழ் திருவையாற்றருமணியே-
பட்டி - திருஏகம் - திருவந்தாதி 56

மேலும் இவ்வூர் காவிரிக் கரையில் உள்ளது என்னும் போதே இதன் செழிப்பு பற்றி ஐயம் எதுவும் இல்லை.

'முத்திசையும் புனற் பொன்னி
மொய்பவளம் கொழித்தந்தப்
பக்தர் பலர் நீர் மூழ்கிப்
பலகாலும் பணிந்து ஏத்த
எத்திசையும் வானவர்கள்
எம்பெருமான் என இறைஞ்சும்
அத்திசையாம் ஐயாறு

என அப்பரும்,

வலம் வந்த மடவார்கள் நடம் ஆட
முழவு அதிர மழையென் றஞ்சி
சில மந்தி அலமந்து மரம் ஏறி
முகில் பார்க்கும் திருவையாறு

என ஞானசம்பந்தரும் ஐயாற்றின் பெருமையைப் பாடுகின்றனர்.

ஐயாறு பற்றிய பல பாடல்களிலும் பொன்னிவளமும் சிறப்பிக்கப்படுகின்றது. இதன் பெயர்க்காரணம் கூறும்போது, பல கருத்துகள் சுட்டப்பட்டாலும்[1] அழகிய ஆறு ஓடி அப்பகுதியை மிகவும் செழிப்புக்குள்ளாக்கியிருக்க வேண்டும் என்ற நிலையில்

---

1. தஞ்சையிலிருந்து திருவையாறு வரும் வழியில் வடவாறு. வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி, காவிரி என்ற ஐந்து நதிகள் கலப்பதால் ஐயாறு என்ற பெயர்.
வேங்கடம் முதல் குமரி வரை - காவிரிக் கரையிலே பக். 178

லேயே இப்பெயர் அமைந்திருக்க வேண்டும். மேலும் 'ஐயாறு' என்ற பெயர் பின்னர் இடைக்காலத்திய சிவன் கோயில் சிறப்பு பெற்ற நிலையில் திருவையாறு என்றே சுட்டப்படத் தொடங்கியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. கல்வெட்டுகளில் ஐயாறுடைய அடிகள் என்று சுட்டும் தன்மையைக் காண்கின்றோம்.

## 72. ஒற்றியூர்

'திருவொற்றியூர்' எனும் பெயராக, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது இவ்வூர்.[1] தேவார மூவராலும் பாடல் பெற்ற தலம் இது. கடற்கரை அருகேயுள்ள ஊர் இது என்பதனை,

'உருவேற்றார் அமர்ந்துறையும் ஓத வேலை ஒற்றியூர்
பெரிய-34-1030

'பாட்டும் பாடிப்பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமுந் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றியூரே'

போன்ற பாடல்கள் காட்டுகின்றன. மேலும் பெரிய புராணம் இதனை 'ஒற்றி நகர்' என்றும் சுட்டுகின்றது (34-1032) ஒற்றியாக நிலத்தை வைத்த பின்னர் மீட்டதன் காரணமாக ஒற்றியூர் என பெயர் வந்திருக்குமோ? இக்கோயில் தலமரம் மகிழமரம். இதற்கு ஆதிபுரி என்ற பெயரும் உண்டு.

## 73. ஒத்தூர்

திருவத்தூர் என்றும் திருவத்திபுரம் என்றும் செய்யாறு என்றும் சுட்டப்படும் இவ்வூர் இன்று வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலத்தில் ஆண்பனை பெண்பனையாயிற்று. ஒத்து - வேதம் இறைவன் வேதத்திற்குப் பொருள் சொன்ன இடம் என்ற கருத்து ஊர்ப்பெயர்க் காரணமாக அமைகிறது. திருவோத்தூர் என்ற பெயர், மக்கள் மொழி எளிமை கருதி மருவிய நிலையில் திருவத்தூர் எனவும், திருவத்திபுரம் எனவும் மாறி அமைகிறது. கல்வெட்டுகளிலும் 'ஒத்தூர்' என்றே சுட்டப்படுகிறது. சேயாற்றங்கரையில் உள்ளமையால்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 91
2. ,, ,, பக். 347

'செய்யாறு' எனப் பெயர் வழக்கு அமைகிறது. ஓதக்கூடிய அந்தணர் வாழ்ந்த இடமாகவும் ஒத்தூர் இருக்கலாம்.

தொண்டைத் திருநாட்டில் திங்கள் முடியார் இனிது அமரும் திருவோத்தூர் (34-973) என சேக்கிழார் பாடல் அமைகிறது.

## 74. ஓமாம் புலியூர்

ஓமாம் புலியூர் என்றே இன்று வரை வழங்கப்படும் இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்து இன்று அமைகிறது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது. 'நட்டம் ஆடும் எம் விகிதர் விருப்பொடும் உறைகின்ற இடம், ஓங்கிய புகழார் ஓமமாம் புலியூர்' என்பது இவ்வூர்ச் சிறப்பு தெரிவிக்கும் பாடல். தி. வை. சதாசிவப்பண்டாரத்தார், சோழ மண்டலத்திலிருந்த உள்நாடுகள் எல்லாவற்றையும் கல்வெட்டுகளின் துணை கொண்டு துருவி நோக்குங்கால், 'மேற்கா நாடு என்ற பெயருடைய நாடு ஒன்று கொள்ளிடத்தின் வடகரையில் முன்னர் இருந்தது என்று தெரிகிறது. கொள்ளிடத்தின் வடகரையில் உள்ள பாடல் பெற்ற தலமாகிய ஓமாம் புலியூர் அம்மேற்கா நாட்டில் உள்ள ஒரு திருப்பதி என்பது கல்வெட்டுகளினால் அறியப்படுகிறது' என்பார்.[1]

## 75. கச்சி

கச்சி, காஞ்சி, காஞ்சீபுரம், கஞ்சிபுரம், ஏகம்பம் போன்ற பல பெயர்கள் 'காஞ்சி'யைக் குறித்து அமைகின்றன. இன்று செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்து அமைவது இவ்வூர். தமிழர் வரலாற்றுக் காலம் தொட்டு, இன்று வரைத் தன் புகழில் மாற்றமின்றித் திகழும் ஊர் இது. சமயக் குரவர்களாலும் அரசியல் வல்லுநராலும் போற்றப்பட்ட ஊர் இது. இன்று தமிழரின் பண்பாட்டு மேன்மை உலகு எங்கும் போற்றப்படும் நிலையில் பட்டு உற்பத்தியில் முன்னிற்கின்ற ஊர் இது. தொண்டை நாட்டின் கண் எனத் திகழும்பதி என்றியம்பும் நிலை[2] இதன் சிறப்பை எடுத்தியம்பும். வஞ்சி மரங்களால் பெயர் பெற்ற வஞ்சி மாநகரம் போன்று காஞ்சி மாங்களால் பெயர் பெற்றது

---

1. கல்வெட்டுக்கள் உணர்த்தும் உண்மைகள்—பக். 51
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 84

காஞ்சி[1] காஞ்சனபுரம் என்பதே காஞ்சிபுரம் என மருவிற்று போன்றபிற பல எண்ணங்களும் உண்டு.[2] இதனுள் அமைந்த பல கோயில்கள் மேலும் பல பெயர்களையும் இதற்கு வழங்கியிருக்கக் காண்கின்றோம்.

### ஏகம்பம்

ஏகம்பர நாதர் கோயில் பெரிய கோயில் என்று அழைக்கப்படும் கோயில் நிலையில் எழுந்த பெயர் 'இங்கு தலமரம் மா. தலவிருஷமாகிய மாவடியின்கீழ் எழுந்த பிரான். ஏகம்+ஆம்ரம் —மாமரம்=ஏகாம்ரம்—ஏகாம்ரநாதர்—ஏகாம்பரநாதர் என்றாயிற்று' என்று 'ஏகம்பம்' என்ற பெயர்க் காரணம் குறிப்பர்.[3]

### காமக்கோட்டம்

தேவி காமாஷியின் கோயில் அமைந்த இடம். மக்கள் விரும்பும் நிலையில் அமைந்த பகுதி காரணமாகக் 'காம கோடி' என்ற பெயர் அமைந்தது. 'காஞ்சி காமாஷி' என்பது மிகவும் சிறப்பாகச் சமயக் குரவர்களால் மதிக்கப் பெறும் கோயில் அம்மனாகும்.

### கச்சி மேற்றளி

மூவர் பாடலும் பெற்ற இத்தலத்தில் ''திருமேற்றளி' உறையும் சிவபெருமான் அமைகின்றார். 'திருமேற்றளி' மேல் கோயில் என்ற பெயரில், கச்சியில் உள்ள சிறப்புடைய கோயில் என்ற நிலையில் இப்பெயர் அமைந்தது.

### கச்சி நெறி காரைக் காடு

காரைச் செடிகள் நிறைந்த கச்சி அருகில் உள்ள தலம். சம்பந்தர் பாடல் பெற்றது. 'காஞ்சி வருவதற்கு இதுதான்

---

1. காஞ்சி என்பது ஆற்றுப்பூவரசு மரம் காரணமாகப் பெற்ற பெயர். மதிற் சூழ்ந்த நகரைப் புரம் என்ற நான்மரபு பற்றிக் காஞ்சிபுரம் என்றாகி அதுவே இன்றும் வழங்கி வருகிறது என்பது ஔவை துரைசாமிப் பிள்ளை எண்ணம்

   —தமிழ் இலக்கிய வரலாறு-பக் 508

2. வடமொழியில் காஞ்சி தென் மொழியில் கச்சியாயிற்று- திருக்கோயில் - பக் 365

3. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 84

வாயில்' என்ற எண்ணம்[1] கச்சி நெறி காரைக்காடு என்ற பெயரின் பொருளையும் உணர்த்துகிறது. இன்று காரைககாடு திரிந்து திருக்காலிமேடு என்று வழங்குகிறது[2].

**ஓணகாந்தன் தளி**

சிவன் கோயில் கொண்டமை காரணமாகப் பெற்ற இன்னொரு பெயர். ஓணன், காந்தன் என்னும் இருவரும் வழிபட்டமை காரணமாக இப்பெயர் அமைந்தது என்பர்.

**கச்சி அநேகங்காவதம்**

கச்சியில் உள்ள இன்னொரு சிவத்தலம்.

இன்று பொதுவாகக் 'காஞ்சிபுரம்' என்று வழங்குவதைவிடக் கஞ்சிபுரம் என மக்கள் வழக்கில் எளிமைப்படுத்தப்பட்டு வழங்குகிறது.

காஞ்சியில் சிவன் கோயில் பெற்ற நிலையில் இப்பெயர்கள் அமைய (1) திருக்கச்சி அத்திகிரி (2) திருவெஃகா (3) அட்டபுயகரம் (4) வேளுக்கை (5) திருத்தண்கா (6) ஊரகம் (7) நீரகம் (8) காரகம் (9) கார்வானம் (10) பரமேச்சுவர விண்ணகரம் (11) பவளவண்ணம் (12) நிலாத் திங்கள் துண்டம் (13) கள்வனூர் (14) பாடகம் என்ற 14 தலங்களையும்[3] ஆழ்வார் பாடல்கள் சுட்டுகின்றன. இவை அனைத்தும் இங்குள்ள விஷ்ணுகோயில் அடிப்படையில் எழுந்தவையாகும்.

**வெஃகா:**

பெருமான் நாமம். வேகா சேது வேகவதிக்கு அணையாய்க் கிடந்தவர் என்பது பொருள். வேகா என்பதே வெஃகா என்றாயிற்று.

**அட்டபுயகரம்:**

எட்டு திருக் கரங்களிலும் எட்டு ஆயுதங்களை ஏந்தியுள்ளமையால் அட்டபுயன் என்பது சுவாமிக்கு நாமம் அவன் எழுந்தருளியுள்ள இடம் அட்டபுய அகரம். அஃது அட்டபுயகரம் என மருவிற்று.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 350
2. கோயில் ஈசன் பெயர் காரணமாகச் 'சத்திய விரத க்ஷேத்திரம்' என்ற பெயரும் இத்தலத்திற்கு உண்டு
மேற்படி நூல் பக். 350
3. திருக்கோயில் பக். 305

**வேளுக்கை**

வேள் இருக்கை - வேளுக்கை என மருவிற்று வேள்-காமம் அதாவது இச்சை. அதனால் எழுந்தருளியிருக்குமிடம் வேளிருக்கை (காமகோட்டம் இதனோடு தொடர்புடையதா என்று சிந்திக்கலாம்)

**திருத்தண்கா**

குளிர்ந்த சோலை.

**பாடகம்**

பாடு-அகம். பெருமை தோற்ற எழுந்தருளியிருக்கும் தலம்.[1]

**ஊரகம்**

சங்க இலக்கியம் சுட்டும் 'ஏரகம்' போன்று 'ஊரகம்' அமைகிறது. ஆயின் பொருள் நிலையில் மாறுபடுகிறது.

இங்குத் திருமால் நின்ற கோலத்துடன் காட்சி தருகிறார் என்பதைத் திருமழிசைப்பிரான்,

குன்றிருந்த மாடநீடு பாடகத்துமூரகத்தும்
நின்றிருந்து வெஃகணைக் கிடந்த தென்ன நீர்மையே-814
நின்ற தெந்தை யூரகத்திருந்ததெந்தை பாடகத்து
அன்று வெஃகணை கிடந்த தென்னிலாத முன்னெலாம் (815)

மேலும் திருமங்கையாழ்வார், இவ்வூரை

'நிறைந்த கச்சி ஊரகத்தாய் (2069)
காமரு பூங்கச்சி யூரகத்தாய் (2064)
மதிள் கச்சி ஊரகமே (3775-70)

எனப்பாடும்போது 'கச்சியுள் அமைகின்ற திருமால் கோயில் பெயரே 'ஊரகம்' என வழங்கப்பட்டது என்பது தெளிவு பெறுகிறது. ஆதிசேடனின் வடமொழிப் பெயரான உரகம் ஊரகம் என்று ஆயிற்று என்றும் கூறுவர்.[2] காஞ்சிக்குரிய பிற பெயர்களும் இவ்வாறு கோயிற் பெயரால் அமைந்தன என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது.

பெரும்பாணாற்றுப்படை காஞ்சியைத் தாமரைப் பொகுட்டில் காண் வரத் தோன்றி... விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர் (397, 411) என்று சுட்டும் தன்மை அன்றே இதனை மிகச் சிறப்பான நகரமைப்புக் கலை அடிப்படையில் உருவாக்கிய நிலையைக் காட்டவல்லதாக அமைகிறது.

1. திருக்கோயில்-பக். 305-308
2. மேற்படி நூல்-பக்-305-308

## 76. கச்சூர்

திருக்கச்சூர் என்று இன்று சுட்டப்படும் இத்தலம் செங்கற் பட்டு மாவட்டத்தில் அமைகிறது. சுந்தரர் பாடல் பெற்ற தலம். சேக்கிழாராலும் சுட்டப்படுகிறது (ஏயர் 174, 177). கச்சூரில் உள்ள கோயில் 'ஆலக் கோயில்' எனச் சுட்டப்படுகிறது.

'மாலை மதியே மலைமேல் மருந்தே மறவேனடியேன்
வயல் சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர் ஆலக் கோயிலம்மானே'

எனப் பாடுகின்றார் சுந்தரர் (41-5)

'திருமால் அமுதம் வேண்டி ஆமையாயிருந்து பூசித்த காரணத்தாலும் ஆலமரம் இத் தலத்துக்குரிய விருட்சமாக இருத்தலாலும் இப்பெயர் பெற்றது. (கச்சபம் - ஆமை) கச்சப ஊர் கச்சூர் என்றாயது போலும் என்பர் திரு. சதாசிவச் செட்டியாரவர்கள்[1] இதனை நோக்க முதலில், ஆலமரங்களின் மிகுதி காரணமாகக் கோயில் 'ஆலக் கோயில்' என்ற பெயர் பெற்று, பின்னர் இறை செல்வாக்கு பெற்று, புராணக்கதை காரணமாக, கச்சப ஊர் என வழங்கப்பட்டு, பின்னர் கச்சூர் என்று வழக்கில் அமைந்தது போல் தோன்றுகிறது.

## 77. கஞ்சனூர்

கஞ்சனூர் என்றே இன்றும் வழங்கப்படும் இவ்வூர் இன்று தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. அப்பர் பாடல் பெற்றது இத்தலம். கஞ்சன் பிரமன் வழிப்பட்டதால் இப் பெயர் என்பர்.[2] பெரிய புராணத்திலும் இவ்வூர் குறிப்பிடப் படுகிறது (34, 292-4).

## 78. கஞ்சாறூர்

'மலை செய் மதிற் கஞ்சை மானக் கஞ்சாறன் என்னும்
வள்ளல்'
(நம்பி-திருத்தொண்டர்-13)

---

1. சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரம் திருப்பதிகங்கள் - பக். 10
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 191

என்று இவ்வூரைக் கஞ்சை எனக் குறிப்பிடுகின்றார் நம்பியாண் டார் நம்பி. கஞ்சாறூரில் பிறந்தவர் மானக் கஞ்சாறனார்.

இதனை,

மேலாறு செஞ்சடை மேல் வைத்தவர் தாம் விரும்பியது
நூலாறு நன்குணர்வார் தாம்பாடும் நோன்மையது
கோலாறு தேன்பொழியக் கொழுங்கனியின் சாறு ஒழுகும்
காலாறு வயற் கரும்பின் கமழ் சாறூர் கஞ்சாறூர்

எனப் பாடுகின்றார் சேக்கிழார் (18-1). இப்பாடலின் இறுதியடி கள் இப்பெயர்க்குரியதொரு காரணத்தைச் சுட்டும் தன்மை போன்று அமைகின்றன.

'வயற் கரும்பின் கமழ் சாறூர் கஞ்சாறூர்'

கமழ் சாறூர் கம்சாறூர் கஞ்சாறூர் எனத் திரிந்து கரும்புவளம் பற்றி இப்பெயர் வந்திருக்கலாம் என்பது இவண் தோற்றம் பெறுகிறது. மேலும் பின்னர் அமையும் பாடல்களும் இவ்வூர்ச் சிறப்பைக் காட்டும் வண்ணமே அமைகின்றன.

## 79. கடந்தை

பெண்ணாகடம் என்றும் பிறிதொரு பெயரைக் கொண்டு திருக்கடந்தை என, இன்று தென்னார்க்காடு மாவட்டத்தில் அமையும் ஊர் இது. அப்பர், சம்பந்தர் பாடியுள்ள தூங்கானை மாடமாகிய, சிவன் கோயிலைக் கொண்ட ஊர் இது.

துன்னார் கடந்தையுட் தூங்கானை மாடச் சுடர்க்
கொழுந்தே (110-1)

என்றும், 'இருஞ்சோலை திங்கள் தடவும் கடந்தை' எனவும் அப்பர் இவ்வூர் பற்றிச் சுட்டுகின்றார். இவர் கடந்தை என்று இவ்வூரைக் குறிப்பிடுகின்றார்.[1] எனினும் பிறிதொரு பதிகத்தில், 'பெண்ணாகடத்துப் பெருந்தூங்கானை மாடத்தார் (265-3) எனச் சுட்டும் தன்மை, இரண்டு பெயர்களும் அன்றே இருந்தன என்பதைக் காட்டும் தன்மையில் அமைகிறது. சம்பந்தரும்,

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 184

'கடந்தைத் தடங்கோயில் சேர், தூங்கானை மாடம் தொழுமின் களே' என்று சுட்டும் நிலை அமைகிறது. நம்பியாண்டார் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில், 'மனைவி கையைத் தடிந்தவன் பெண்ணாகடத்துக் கலிக் கம்பனே (53) என இந் நாயனாரது வரலாறு தருகின்றார்.

இந்நிலையில் தூங்கானை மாடம் இறைவன் கோயில் குறித்தது என்பது தெளிவு. கடந்தை என்ற பெயர், பெண்ணாகடம் என்ற பெயர் இவை எந்த அடிப்படையில் தோன்றின எனப் பார்க்கும்போது பெண்ணாகடம். 'தேவகன்னியரும் காமதேனுவும் வெள்ளையானையும் வழிபட்ட தலமாதலின் (பெண்+ஆ+கடம்) இப்பெயர் பெற்றது' என்பர். எனவே இப்பெயர் பக்தி அடிப்படையில் பிறந்த பெயர் எனக் காண, கடந்தை முதல் பெயராக இருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

ஞானசம்பந்தர் இவ்வூர்ச் சிறப்பை,

கிடங்கும் மதிலும் சுலாவியெங்கும்
கெழுமனை கடோறு மறையின் னொலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் (59-1)

பிறை சூழ் அலங்கலிலங்கு கொன்றை
பிணையும் பெருமான் பிரியாத நீர்
துறை சூழ் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் (59-7)

எனப் பல நிலையில் பாடுகின்றார். இந்நிலையில் கடந்தை என்பதை நோக்க, இது மரூஉப் பெயராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. நீர்த்துறையில் அமைந்தது என்பதனையும் நோக்க, கடப்பமரங்கள் நிறைந்த துறையாக இருந்தமையால் கடப்பந்துறை கடந்தையாயிற்றோ எனத் தோன்றுகிறது.

## 80. கடம்பந்துறை

இன்று குழித்தலை என்று வழங்கப்படும் இவ்வூர் திருச்சி மாவட்டத்தில் அமைகிறது. கோயில் கடம்பர் கோயில் என்று வழங்கப்படுகிறது. அப்பர் பாடல் பெற்றத்தலம் கடப்ப மரங்கள் நிறைந்த நீர்த்துறை என்ற பொருளில் பெயர் கொண்ட

தன்மையை இவ்வூர்ப் பெயரே காட்டுகின்றது.[1] தலமரம் கடம்பு என்பதும் இணைத்து நோக்கத்தக்கது. கோயிலின் சிறப்பு காரணமாகக் 'கடம்பர் கோயில்' என்ற வழக்கு அமைந்தது எனத் தோன்றுகிறது. இதனை,

'வண்ணநன் மலரான் பலதேவரும்
கண்ணனும் அறியான் கடம்பந்துறை
நண்ண நம்வினையாயின நாசமே'

என்று பாடுகின்றார் அப்பர் (132-4). 'குழித்தண்டலையே குழித்தலை என்று குறுகியிருக்கிறது.[2] இன்று மக்கள் வழக்கிலும் இப்பெயரே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

## 81. கடம்பூர்

இன்று மேலைக் கடம்பூர் எனச் சுட்டப்படுகின்ற இத் தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. ஞானசம்பந்த ராலும், அப்பராலும் பாடல் பெற்ற தலம் இது. இத்தலமும் கடப்ப மரங்கள் நிறைந்த தன்மையால் பெயர் பெற்றிருக்கலாம் என்பது இவ்வூர்ப் பெயரைப் பார்க்கத் தோன்றுகிறது. கடம்பு+ ஊர் →கடம்பூர். கடம்பூரில் உள்ள கோயில் கரக் கோயில் என்று சுட்டப்படுகிறது.

கடம்பூர் கரக் கோயில் (சுந் - தே 2-5). கரக் கோயில் என்பதற்குப்பல காரணம் கூறினாலும்[3], 'சக்கரக் கோயில் என்ற

---

1. காவிரியின் கரையில் கோயில் இருக்கிறது - வேங்கடம் முதல் குமரி வரை காவிரிக் கரையிலே-பக். 226

2. ,, ,, பக். 227

3. 'இத்தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன் உலகத்திற்குக் கொண்டு போக நினைத்துப் பாதாளம் வரை தோண்டியும், அஃது அப்பாலும் ஊடுருவி போனது கண்டு அஞ்சி, முன்போல அமைத்துப் பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரம் பெற்றனன்' என்ற வரலாறு கருதிக்கரக்கோயில் எனப்படும்.

—திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 54

கி. நாச்சிமுத்து அவர்களின் கருத்தே பொருத்தமானதாகத் தோன்றுகிறது. ஏனெனில் கோயில் கர்ப்ப இல்லின் அடிப்பாகம் இரத வடிவில் குதிரைகள் பூட்டிய நிலையில் உள்ளது.[1] என்ற எண்ணத்தைக் காணும்போது இரதத்தின் மேல் கோயில் அமைந்த காரணம் கருதி, சக்கரக் கோயில் எனப்பட்டு. கரக் கோயில் என நின்றிருக்கலாம். மேலும் இரதக் கோயில் என்பது கரக் கோயிலாகத் திரிந்திருக்குமோ என்பதும் ஆய்வுக்குரியது.

இதுவும் காவிரிக் கரையில் உள்ளதொரு ஊர். எனவே கடப்ப மரங்கள் நிறைந்த பிற ஊர்ப் பெயரினின்றும் இதனைப் பிரித்துணர்த்த இதனைக் கடம்பூர் என்றும், முன் குறிப்பிட்ட தனைக் கடம்பந்துறை எனவும் பெயர் சுட்டி வழங்கினரோ எனவும் எண்ணக் கூடுகிறது.

'திரைக்கும் தண்புனல் சூழ் கரக் கோயில்' என்பது திருநாவுக் கரசர் தேவாரப் பாடல் (134-11).

கடம்பூர் கரக்கோயில் பற்றிய எண்ணம் சுந்தரரிடமும் அமைகிறது (2-3). கடம்பூர் மேவிய விடங்கா போற்றி எனப் பாடுகின்றார் மாணிக்கவாசகர் (போற்றித் - 160).

82. கடவூர்

திருக்கடவூர் திருமெய்ஞ்ஞானம் என்று இன்று இரண்டு பெயரிலும் சுட்டப்படும் இவ்வூர் மூவர் பாடலும் பெற்றதாக அமைகிறது.

இவ்விலக்கியக் குறிப்புகள் கடவூர் வீராட்டானத்தையும், கடவூர் மயானத்தையும் தெரிவிக்கின்றன. எனவே கடவூரில் அமைந்திருந்த இரண்டு கோயில்கள் இவை எனத் தெரிகின்றன. இன்று கடவூர் வீரட்டம் என்பது கடவூர் என்று நின்க, கடவூர் மயானம் என்பது மெய்ஞ்ஞானம் என்று சுட்டப்படும் தன்மை யைக் காண்கின்றோம். இரண்டும் $1\frac{1}{2}$ கிலோமீட்டர் தொலைவி லேயே இருப்பதால் இரண்டும் முதலில் ஒரே ஊராகத்தான் இருந்திருக்க வேண்டும்; அதற்காகத்தான் வீரட்டானம், மயானம் என்று தனித்து குறிப்பிட்டிருக்கின்றனர் என்ற எண்ணம்

---

1. மேற்படி நூல் பக். 54

வெளிப்படையானது. மேலும் 'மயானம்' என்ற சொல்லை நோக்க அன்றும் மக்கள் இதனுள் வசித்திருக்க மாட்டார்களோ கோயில் மட்டுமே இங்கு அமைந்திருக்கக் கூடுமோ என்று எண்ணத்தோன்றுகிறது. மேலும் சுந்தரர் பாடலைக் கொண்டு நோக்கவும் இவ்வெண்ணம் உறுதிப்படுகிறது.

> பாயும் விடையொன்றது வேறிப் பலி தேர்ந்துண்ணும்
> பரமேட்டி
> பேய்கள் வாழு மயானத்துப் பெரிய பெருமான்
> (53-3)

என, பேய்கள் வாழும் மயானம் என்று கூறிய இவர் மேலும்,

> பறையார் முழவம் பாட்டொடு பயிலும் தொண்டர்
> பயில் கடவூர்ப்
> பிறையார் சடையார் மயானத்துப் பெரிய
> பெருமான் (52-4)

என. கடவூரில்தான் மக்கள் தொண்டர் இருந்தமையினைக் குறிப்பிடுகின்றாரே தவிர, மயானத்தில் இல்லை. மேலும், இன்று இவ்வூர் பற்றி குறிப்பிடும்போது, 'திருக்கடவூர் கோயிலுக்குக் கிழக்கில் 1½ கி.மீ. தொலைவில் உள்ளது. மணற்பாதை. கோயில் மட்டுமே உள்ளது. ஊர் எதுவும் இல்லை''[1] என்று சுட்டும் தன்மையும் அன்று முதல் இன்று வரை இதன் நிலை காட்டும். மயானம் என்ற பெயரே இன்று மெய்ஞ்ஞானம் என்று திரிந்து வழங்குகிறது எனக் கூறலாம்.

காராரும் பொழிற் சூழ் கடவூர் வீரட்டம் அங்குள்ள கோயில் குறிக்கும் தன்மையில் அமைகிறது. கடவூர் வீரட்டானம் என்றும் அதனைச் சுட்டினர். இதனை, 'களியினார் பாடல் ஓவாக் கடவூர் வீரட்டமென்னும் தளியினார் எனச் சுட்டுகின்றார் திருநாவுக்கரசர் (54-5). மேலும் மாணிக்க வாசகர், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பி போன்றோரும் இத் தலத்து இறைவனைப் பரவுகின்றனர். இவ்வூர்ப் பெயரும் கடப்ப மரம் காரணமாகப் பெயர் பெற்று 'கடவூர்' என்றாகியிருக்கலாம்.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 73

## 83. கடிக்குளம்

இன்று கற்பகனார் கோயில் என்றும் கற்பகனார் குளம் என்றும் சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. இன்றைய இப்பெயர் சிவனின் பெயரான 'கற்பகேஸ்வரர்' என்பதன் செல்வாக்குக் காரணமாக ஏற்பட்டது என்பது தெளிவான ஒன்று. கடிக்குளம் என்பது 'மணம்கொண்ட குளம்' காரணமாக எழுந்தது என்பது சம்பந்தர் பாடல் வழிப் புலனாகின்றது.

'பொடி கொள் மேனி வெண்ணூலினர்
தோலினர் புலியுரி அதளாடை
கொடி கொள் ஏற்றினர் மணிகிணின் என வரு
கடிகொள் பூம்பொழில் சூழ் தரு கடிக்குளத்
துறையும் கற்பகத்தைத் தம்
முடிகள் சாய்த்தடி வீழ் தரும் அடியரை
முன்வினை மூடாவே

என்ற பாடலில் கடிகொள் பூம்பொழில் சூழ் கடிக்குளம் எனச் சுட்டுகின்றார் சம்பந்தர் (240-1). எனவே குளத்தைச் சுற்றியிருந்த பொழில்களில் உள்ள மண மிகு மலர்கள் வீழ்ந்து மணம் வீசிக் கொண்டு இருக்கும் குளக்கரையில் இருந்த ஊர் காரணமாகக் கடிக்குளம் என்ற பெயர் அமைந்தது எனத் தெளிவாகக் கூறலாம். மேலும் இன்று கற்பகனார் கோயில் என்று சுட்டினாலும், குளம் என்றும் சுட்டும் நிலை இக்குளத்தின் பெருமையைச் சுட்டும் தன்மையில் அமைகிறது. மேலும் இங்குள்ள கோயில் தீர்த்தத்தின் பெயரும் 'கடிக்குளம்' என்றே சுட்டப்படக் காண்கின்றோம்.[1]

## 84. கடிகை

வைணவர் போற்றும் திருமால் கோயில் தலம். இன்று சோளங்கிபுரம் எனச் சுட்டப்படுகிறது.

'தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே (1731)

---

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 56

என, கடிகைத் தடங்குன்று பற்றியும் சுட்டுகின்றார் திருமங்கை யாழ்வார். எனவே மலைத்தலம் இது என்பது தெளிவு.

—வண்டு
வளங்கிளரும் நீள் சோலை வண்பூங்கடிகை
இளங்குமரன் றன் விண்ணகர் (3444)

என்பது பேயாழ்வார் பாடல்.

கோயில் இன்றும் 400 அடி உயரமுள்ள மலை மேல் இருக்கிறது என்பது மங்கையாழ்வார் கடிகைத் தடங்குன்று என்று சுட்டுவதற்குப் பொருத்தமாக அமைகிறது. மேலும், 'கடிகை' கலா சாலையைக் குறிப்பதும், இங்கு இன்றும் ஒரு வடமொழிக் கல்லூரி இருப்பதும் ஊர்ப்பெயர்க் காரணத்தைச் சுட்டவல்லது. சோழஸிம்ஹபுரம் சோழபுரம் என மருவிற்று எனவும் காண்கின்றபொழுது, 'கடிகை' என்பது கலாசாலைக்குப் பின்னர் செல்வாக்குப் பெற்று திகழ்ந்திருக்க வேண்டும் எனக் கூறல் பொருத்தமாகும்.

## 85. கடித்தானம்

நம்மாழ்வாரால் பாடப்பட்ட தலம். இன்று மலையாள நாட்டைச் சார்ந்து அமைகிறது. செங்கணாச் சேரியிலிருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. பதினொரு பாசுரங்களில் திருமாலைப் பரவுகின்றார் ஆழ்வார். செல்வர்கள் வாழும் திருக்கடித்தானம் (2909) பூத்த பொழில் தண் திருக்கடித்தானம் (2914 என இவர் இவ்வூரின் சிறப்பு காட்டுகின்றார். மணத்தையுடைய இடம் எனப் பொருட்படும் இவ்வூர்ப் பெயர் என்கின்ற கருத்து ஏற்புடையது.[1]

## 86. கடுவாய்க் கரைப்புத்தூர்

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆண்டார் கோயில், ஆண்டாங் கோயில் என்று அழைக்கப்படுகின்றது இவ்வூர். திருநாவுக்கரசர் இத்தலத்து இறை பற்றிப் பாடிய ஒரு பதிகம் தேவாரத்துக்கு அமைகிறது. இப்பெயர்க் காரணத்தை ஓரளவு ஊகிக்கும் தன்மையில் இப்பாடல்கள் அமைகின்றன.

ஒருத்தனை மூவுலகொடு தேவர்க்கும்
அருத்தனை அடியேன் மனத்துள் அமர்

1. மலை நாட்டுத் திருப்பதிகள்-பக். 89

கருத்தனைக் கடுவாய்ப் புனலாடிய
திருத்தனைப் புத்தூர்ச் சென்று கண்டுய்ந்தேனே 176-1
வெண்குழைக் காதனைக்
கடுவாய்க் கரைத் தென்புத்தூர் - 176-4

என்னும் இரு நிலையில் இவ்வூர் விளக்கம் அமைகிறது.

கடுவாய்க்கரை - கடுவாய்ப்புனல் என்ற குறிப்புகள் ஆற்றைக் குறிக்க, 'புத்தூர்' ஊர்ப்பெயர் என்பதையும் ஆற்றின் தென் கரையில் இவ்வூர் அமைந்திருந்தது என்பதையும் இப்பாடலில் உணர இயலுகிறது. எனவே 'புத்தூர்' என்ற ஊர்ப்பெயர் முதலில் அமைந்து அதனைப் பிற புத்தூர்களினின்றும் தனிப்படுத்தக் 'கடுவாய்க் கரைப்புத்தூர்' எனச் சுட்டியிருக்கலாம் அல்லது கடுவாய்க் கரையில் சிவன் கோயில் காரணமாகப் புதிதாகத் தோன்றிய ஊர் எனவும் இதனைக் காணலாம். கடுவாய் என்பது குடமுருட்டி ஆறு. இதன் கரையில் உள்ளதால் இப்பெயர் பெற்றது என அறியும்போது ஆற்றுப் பெயரும் இன்று மாறியிருக்கக் காண்கின்றோம். மேலும் 'ஆண்டார் கோயில்' என்ற இவ்வூர் பெயர் மாற்றத்தைக் காண, கோயிலின் சிறப்பு செல்வாக்குக் காரணமாக ஊர்ப்பெயரும் மாறியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 87. கடைமுடி

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற 'கடைமுடி' குறித்து இரண்டு வழக்குகள் அமைகின்றன. சோழ நாட்டில் அமையும் கீழூர், கீழையூர் என்பதே இது என்பர் ஒரு சாரார்[1]. ஆயின் மு. இராகவையங்கார் கடைமுடி கீழூர் இல்லை என மறுக்கின்றார். தஞ்சாவூரிலேயே இருக்கிறது என்று இவரும் குறிப்பிட்டாலும் கோவிலடி என வழங்கும் பேருருக்குப் பக்கத்தில் கிழக்கே $1\frac{1}{2}$ மைலில் உள்ள சென்னப் பூண்டியே என்கிறார் இவர்.[1] இந்நிலையில் பெயர் பற்றிய விளக்கம் தெளிவாகவில்லை. சம்பந்தர்,

'திரை பொரு நுரை பொரு தெண் சுனைநீர்
கரை பொரு வளநகர் கடைமுடியே'

என இதன் சிறப்பினைப் பாடுகின்றார். (111-2)

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 272
2. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் திருமுறை-பக். 111

## 88. கடையக்குடி

திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகம் என்னும் பகுதியுள் (தே-285) சிவத்தலங்களுள் போற்ற இடர் போகும் தலங்களாகக் குடி என்ற பொதுக் கூறு கொண்ட தலங்களைக் குறிப்பிடுகின்றார்.

'கருந்திட்டைக் குடி கடையக்குடி காணுங்கால் (3)

## 89. கண்டியூர்

திருக் கண்டியூர் என வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது[1] நாவுக்கரசர், ஞானசம்பந்தர் இருவராலும் பாடல் பெற்ற தலம் இது. கண்டியூர் என்றால் வல்வினை போம் என்பது நாவுக்கரசர் கூற்று (307-7). இதன் செழிப்பினைச் 'செங்கயல் பாய் வயல் ஓடை சூழ்ந்த திருக்கண்டியூர் என்கின்றார் சேக்கிழார் (பெரிய 34 351-4). பாடல்களினின்றும் இவ்வூர்ப் பெயர்க் காரணம் விளங்கவில்லை. எனினும், கண்டி என்பதற்கு மந்தை என்றும் எழுபத்தைந்து ஏக்கருள்ள ஒரு நில அளவை என்றும் தமிழ் லெக்ஸிகன் குறிப்பதைக் காண மந்தை வெளியாக இருந்திருக்கலாமோ எனத் தோன்றுகிறது. (vol II pa I பக் 689) சிவபெருமான் பிரமாவின் தலையைக் கொய்த இடம் ஆதலால் பெற்ற பெயர் என்பர்.[2] திருமங்கையாழ்வார் பாடலும் இவ்வூர் பற்றி, இங்கு திருமால் குடிகொண்டு இருக்கும் நிலை பற்றி பேசுகிறது. (திருக்குறுந்-19)

## 90. கண்ணங்குடி

திருமங்கையாழ்வார் பாடல் பெற்ற தலம் திருக் கண்ணங்குடி.

குவளை நீள் முளரி குமுதமொண் கழுநீர்
கொய்ம்மலர் நெய்தல் ஒண்கழனி
திவளு மாளிகை சூழ் செழுமணிப் புரிசைத்
திருக் கண்ணங் குடியுள் நின்றானே (1749)

போதலர் புன்னை மல்லிகை மௌவல்
புதுவிரை மதுமலர் அணைந்து
சீதவொண் தென்றல் திசைதொறும் கமழும்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக் 215
2. தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 199

திருக் கண்ணங் குடியுள் நின்றானே (1750)
சிகர நன்மாடத்திருக் கண்ணங்குடி (1751)

போன்ற அனைத்துப் பாடல்களிலும் கண்ணங்குடியின் இயற்கை வளத்தைச் சிறப்பிக்கின்றார் ஆழ்வார். இவ்வூர்ப் பெயரையும் திருமால் கோயில் சிறப்பையும் நோக்க, கண்ணங்குடி யிருக்கு மிடம் என்ற நிலையில் கண்ணன்குடி எனற பெயரே கண்ணங் குடி என்றாயிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

**91. கண்ணபுரம்**

திருக்கண்ணபுரம் என்று வழங்கப்படும் ஊர் தஞ்சையைச் சார்ந்து அமைகிறது. ஐந்து கிருஷ்ணன் கோயில் தலங்களுள் இதுவும் ஒன்று.[1] இவ்வூர் வைணவ மக்கள் மனத்தைப் பெரி தும் கவர்ந்தது என்பதும், இங்குள்ள திருமால் பெருஞ்சிறப்புடை யவனாகக் கருதப்பட்டான் என்பதும் இதைப் பற்றிக காணப்படும் மிகுதியானப் பாடல்கள் சுட்டும் நிலையாகக் கொள்ளலாம். பெரியாழ்வார், ஆண்டாள், குலசேகரப்பெருமாள், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் ஆகியோரால் இத்தலமும் சுட்டப்படு கின்றது. கணபுர நகர் என்றும் (நாச்சி-535) கணபுரம் என்றும் (குல-719) கண்ணபுரம் என்றும் (திருமங் (1648) இவ் வூர் பல நிலைகளில் சுட்டப்படுகிறது. கன்னி மாமதிள் புடை சூழ் கண்ணபுரம் (1650) கார்வானம் நின்றதிரும் கண்ணபுரம் (1651) கடிக்கமலம் கள்ளுகுக்கும் கண்ணபுரம், (1652) கற்ற நூல் மறையாளர் கண்ணபுரம் (1655) போன்ற பல பாடலடிகள் கண்ணபுரத்தின் சிறப்பு சுட்டும் சில சான்றுகள். கிருஷ்ணன் காரணமாகப் பெயர் பெற்ற ஊர் இது என்பது 'கண்ண(ன்) புரம் என்ற பெயரிலேயே தெரிகிறது. 'கண்ணன் மிகமிக மகிழ்ந்து நித்திய வாசம் செய்யத் தேர்ந்தெடுத்த தலம் ஆனதால் இதற்குக் கண்ணபுரம் என்று பெயர் எனவும், கிருஷ்ண ரண்ய ஷேத்திரம், அஷ்டாஷர மகாமந்திர, சித்தி ஷேத்திரம் எனப் பிறப்பல பெயர்கள் உடையது எனவும் அறிகின்றோம்.[2]

**92. கண்ணார் கோயில்**

'குறுமாணக் குடி' என்ற பெயரில் இன்று தஞ்சை மாவட்டத் தில் அமைகிறது இவ்வூர். 'வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் பக்கத்

---

1. சோழநாட்டுத் திருப்பதிகள்-பகுதி-2 பக். 70
2. வேங்கடம் முதல் குமரி வரை—(II) பக்-193

தில் உள்ளது. இந்திரன் சாபம் நீங்கப் பெற்றத் தலம். இறைவன் கண்ணாயிர நாதர். தீர்த்தம், இந்திரதீர்த்தம்[1] போன்ற எண்ணங்கள் இத்தலத்துடன் இந்திரனுக்குரிய தொடர்பு காட்டும் நிலையில் அமைகிறது. மேலும் மாவலிபால் சென்று மூவடி மண் கேட்ட வாமன மூர்த்தி ஆகிய குருமானி வழிபட்டமையால் பெற்ற பெயர் என்றும் அறிகின்றோம்[2]. இதனை நோக்க திருக்கண்ணார் கோயில் என்பது இங்குள்ள சிவன் கோயில் சிறப்பு நிலையில் கோயிற் பெயரால் ஊர்ப்பெயர் சுட்டும் நிலையில் அமைந்தது எனினும் இதன் பழம்பெயர் இப்போதைய பெயரே எனத் தோன்றுகிறது. இப்பெயர் பற்றி நோக்கும்போது இன்று 'குருமாணக் குடி' எனச் சுட்டப்படினும், கல்வெட்டில் 'குருவாணியக்குடி'[3] என்ற பெயர் காணப்படுவதை நோக்க வாணியர்கள் நிறைந்த இடம் என்ற பெயரில் அமைந்த 'வாணியக் குடி' என்ற பெயர், சிறு கிராமத்தைக் குறிக்கும் நிலையில் 'குறு வாணியக் குடி' என்றழைக்கப்பட்டு, இன்று 'குறுமாணக் குடி' என்று திரிந்து வழங்கப்படுகிறது எனல் பொருந்தும்.

ஞானசம்பந்தரும்,

> மறுமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
> செறு மாவலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
> குறுமாணுருவன் றற்குறியாகக் கொண்டாடும்
> கறுமாகண்டன் மேயது கண்ணார் கோயிலே (101—5)

என்று பாடும் நிலையில், 'குறுமாணக் குடி' என்று வாணியக் குடி'யை எண்ணும் நிலை அவர் காலத்திலேயே தோன்றியதோ என்ற எண்ணம் ஏற்படுகிறது.

## 93. கண மங்கலம்

முத்தி நாயனார் பிறந்த ஊரான இது இன்று கணமங்கலத் திடல் என வழங்கப்படுகிறது.

திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற திருத்தண்டலை நீணெறி என்ற சிவன் கோயில் தலத்தைப் பக்கத்தில் கொண்ட ஊர். இன்று இக்கோயிற் பகுதி தண்டலைச் சேரி என வழங்கப் படுகிறது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக்-271
2. தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக்-99
3. ,, ,, ,,

வரும்புனற் பொன்னி நாட்டொருவாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
விரும்பு மென் கனுடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன் பொழியும் கணமங்கலம் (19-1)

என சேக்கிழார் இத்தலத்தைப் பாடுகின்றார். 'கண்ணமங்கை' என்றதொரு ஊர்ப்பெயரைக் காண நாம், இவ்வூரும் திருமால் கோயில் காரணமாகக் 'கண்ணமங்கலம்' என்று அமைந்து, கண மங்கலம் எனச் சுட்டப்பட்டிருக்கலாமோ என்று நினைக்கலாம்.

### 94. கரம்பனூர்

'கரம்பனூர் உத்தமன்' என, திருமாலை, திருமங்கையாழ்வார் பாடும் நிலையில் இவ்வூர் பற்றி அறிகின்றோம்.[1] 'உத்தமன் கோயில்' என்ற பெயரையும் இதற்குக் காண்கின்றோம். இதனை நோக்க, கரம்பனூர் ஊர்ப்பெயர் என்பது தெரிகிறது.

### 95. கரவீரம்

'கரவீரம்' என்பது 'கரையபுரம்' என்று வழங்கப்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் இன்று அமைகிறது. 'கரவீரம்' என்பது பொன்னிறப் பூக்களைத் தருகின்ற ஒரு மரத்தின் பெயர். பொன்னலரி என்றும் அதனைக் குறிப்பதுண்டு. இன்றும் கரவீரம் கோயிலில் பொன்னலரியே தலவிருட்சமாகப் போற்றப்படுகின்றது என்ற எண்ணத்தை இப்பெயர் குறித்துத் தருகின்றார் ரா.பி சேதுப்பிள்ளை.[2] சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலத்தைப் பற்றி (58) திருநாவுக்கரசரும் குறிப்பிடுகின்றார் (265-6).

### 96. கருக்குடி

'மருதாந்த நல்லூர்' என இன்றுச் சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் சார்ந்து அமைகிறது. ஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம் (279). 'மஞ்சுறு பொழில் வளர் மலி கருக்குடி' என இதன் வளத்தை நாம் உணருகிறோமே தவிர, பெயரின் பொருள் தெளிவுறவில்லை. 'மருதாந்த நல்லூர்' மருத நிலம் அல்லது மருதமரம் காரணமாக ஏற்பட்டதாக இருக்கலாம்.

---

1. நாலாயிர திவ்விய பிரபந்தம்-பக். 837
2. ஊரும் பேரும்-பக். 11

## 97. கருகாவூர்

கருகாவூர் இன்று காளாவூர் எனச் சுட்டப்படுகிறது. தஞ்சையைச் சார்ந்தது. ஞானசம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது இத்தலம் (304, 229).

ஆதரவில்லாத ஒரு பெண்ணுக்கு இறைவி மருத்துவம் பார்த்து அவள் கருவைக் காத்ததனால் இத்தலம் 'கருகாவூர்' எனப் பெயர் பெற்றது என்பர் என்ற எண்ணத்தைக் கேட்கின்றோம். இலக்கியப் பாடல்களின் நிலையில் இப்பெயர்க் காரணம் தெளிவாகவில்லை.

## 98. கருந்திட்டைக் குடி

'குடி' என்று முடியும் ஊர்ப்பெயர் வரிசையில் அமைகிறது இப்பெயர் (திருநா-285-3).

## 99. கருப்பறியலூர்

இன்று, மேலைக் காழி என்றும் தலைஞாயிறு என்றும் அழைக்கப்படும் இந்த ஊர் தஞ்சையில் உள்ளது. ஞானசம்பந்தராலும், (167) சுந்தரராலும் பாடல் பெற்ற தலம் இது. 'கருப் பறியலூர்க் கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட, மயிலாடும் கொகுடிக் கோயில்' என சுந்தரர் பாடும் பாடல் (30-1) கருப்பறியலூர் ஊர்ப்பெயர் என்பதையும் கொகுடிக் கோயில் என்பது சிவன் கோயிலைக் குறித்தது என்பதையும் தெளிவாகத் தருகிறது. மேலும் இவர்,

> விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி
> வினைபோக வேலி தோறும்
> கருந்தாள வாழை மேற் செங்கனிக
> டேன் சொரியும் கருப்பறியலூர்' (30-4)

என்றும் பாடிச் செல்லும் தன்மையில் இவ்வூர்ச் செழிப்பு தெரிகிறது. எனவே 'இப்பெயரும்' கரும்பு அடிப்படையில் 'கரும்பு அரியும் இயல்புடைய ஊர்' என்ற நிலையில் கரும்பின் மிகுதி பற்றி வந்ததோ என்ற எண்ணம் தோன்றுகிறது. சீர்காழிக்கு மேற்குத் திசையில் உள்ள நிலையில் இது சிவன் கோயில் சிறப்பு காரணமாக மேலைக் காழி எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

## 100. கருவிலி

இப்பெயராலேயே இன்றும் வழங்கப்படும் இவ்வூர் தஞ்சையில் அமைகிறது.

அப்பரால் பாடல் பெற்ற இத்தலம் (183) கருவிலி என்றும் 'கொட்டிட்டை' எனவும் சுட்டப்படுகிறது. கருவிலிக் கோலவார் பொழிற் கொட்டிட்டை-183-2 கருவில் பிறவாதவன் என்ற பெயரில் சிவன் பெயரே இவ்வூர்ப் பெயருக்குக் காரணமா என்பது ஆய்வுக்குரியது. கல்வெட்டிலும் இப்பெயரே காணப்படுகிறது.[1]

## 101. கருவூர்

'கரூர்' எனச் சுட்டப்படும் இவ்வூர் திருச்சி மாவட்டத்தில் உள்ளது.எறிபத்தர், புகழ்ச்சோழர், கருவூர்த் தேவர் பிறப்பிடம். இக்கருவூர் ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம். மேலும் இவ் விலக்கியங்கள் இதனை மணிமதிற் கருவூர் (பெரிய - புகழ்ச்-12) என்றும், எயில் சூழ் கருவூர் (நம்பி- திருத்-9) என்றும் சுட்டுவதை நோக்கவும், சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து தலங்களுள் ஒன்றாக இதனைச் சுட்டுவதையும் நோக்க,[2] இக் கருவூர் அரசியல் நிலையிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தது எனத் தெரிகிறது. மேலும் பல கல்வெட்டுகளும் இவ்வூரில் அமைகின்றன. கற்பம் தோறும் தவம் செய்த பிரமன் படைப்புத் தொழில் செய்யக் கரு உற்பத்தி செய்த இடம் ஆதலின் ஊர் கருவூர் எனப்பெயர் பெற்றிருக்கிறது என்பர்.[3].

இங்குச் சுட்டப்பட்ட கருவூரே, சேரர்களின் தலைநகரான வஞ்சி என்பது பலர் எண்ணமாக அமைகிறது[4] இக்கருவூர்ப் பகுதி வஞ்சி மரங்கள் அடர்ந்த காடாய் இருந்ததால் வஞ்சுளாரண்யம் என்று வழங்கப் பெற்றது, நகரமான பின் வஞ்சி மாநகரம் என்ற பெயர் வந்தது[5] என்பர்.

---

1. இரண்டாம் இராசாதிராசன் காலத்து நான்காம் ஆண்டு கல்வெட்டு இவ்வூரை உய்யக் கொண்டார் வள நாட்டு வெண்ணாட்டுக் குலோத்துங்கச் சோழ நல்லூராகிய கருவிலிக் கொட்டிட்டை என்று குறிப்பிட்டுள்ளது. திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவார திருப்பதிகங்கள் ஐந்தாம் திருமறை-பக். 3.
2. காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர் என்பன பிற-வேங்கடம் முதல் குமரி வரை (III) பக். 237.
3. வேங்கடம் முதல் குமரி வரை III பக். 237
4. கருவூரே வஞ்சி-பக். 46
5. கொங்கு நாட்டுக் கோயில்கள் - பக், 212

மேலும் இவ்வூர்க் கோயில், இறைச் சிறப்பு காரணமாகப் பசுபதீச்சரம், பாஸ்கரபுரம், கருவூர்த் திருவானிலை என்றெல்லாம் சுட்டப்படுகிறது.

**102. கலய நல்லூர்**

சாக்கோட்டை என்று சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சுந்தரர் பாடல் பெற்ற தலம் இது. அரிசிலாற்றின் தென் கரையில் உள்ள இவ்வூரின் இயற்கை வளம் சுந்தரர் பாடல்கள் மூலம் சிறப்பாகத் தெரிய வருகிறது.

அரும்பருகே சுரும்பருவ வறுபதம் பண்பாட
வணிமயில் கணடமாடு மணிபொழில் சூழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கண் முகமலரும் கலய நல்லூர் காணே
(சுந். 16-1)

கருமேதி புனன்மண்டக் கயன்மண்டக் கமலங்
களிவண்டின் கணமிரியும் கலய நல்லூர் காணே
(சுந். 16-2)

கண்டவர் கண் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடும் கலய நல்லூர் காணே
(சுந். 16-3)

இப்பாடல்கள் அனைத்திலும் 'கமலம்' மிகச் செழித்து வளர்ந்த நிலையும், தாமரைப் பொய்கை மிகுந்த நிலையும் குறிப்பிடப் படுதல் நோக்கத் தக்கது. இன்று இவ்வூர் பற்றிப் பேசும்போது "இங்குள்ள கோயில்கள் நான்கு பக்கங்களிலும் தாமரைப் பொய்கைகளால் சூழப்பட்டுள்ளது என்பது, 'தண்கமலப் பொய்கை புடை சூழ்ந்து அழகார் தலத்தில்' என்னும் இத்தலத்துத் தேவாரப்பாடல் அடியால் விளங்குகின்றது. இக்காலம் கிழக்குப்பக்கத்துப் பொய்கை மக்களால் தூர்க்கப்பட்டுள்ளது[1]" என்ற எண்ணத்தைக் காண்கின்றோம். எனவே இன்றுவரை தாமரைப் பொய்கைகள் நிரம்பிய இவ்வூரின் நிலை தெளிவுறுகிறது. இந்நிலையில் இடைக் காலத்துக்கு முன்பேயே இப்பொய்கைகளின் பெருக்கு எண்ணற்குரியது. எனவே இதன் காரணமாக, கமல

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக் 12

நல்லூர் என்ற பெயரை இதற்கு மக்கள் அளித்திருக்கலாம். பின்னர் அப்பெயர் 'கலய நல்லூர்' எனத் திரிந்திருக்கும் எனத் தோன்றுகிறது. இடைக்காலத்திலேயே இத்திரிபினை நோக்க, இவ்வூர் பழைமைப் பொருந்தியதாகவும் இருந்திருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. 'உயிர்களை அடைத்த கும்பத்தின் கலயம் பிரளய வெள்ளத்தில் தங்கிய இடமாதலின் கலய நல்லூர் எனப் பெயர்' எய்திற்று என்ற கருத்து புராணக் கருத்தாக அமைகிறது.[1]

## 103. கலிக்காமூர்

இன்று அன்னப்பன் பேட்டை எனச் சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்றது இத்தலம். கடற்கரையைச் சார்ந்து அமைந்திருக்கிற தன்மையை இவர் பாடல்கள் விளக்குகின்றன.

மடல் வரையின் மது விம்மு சோலை வயல் சூழ்ந்து
அழகாரும்
கடல் வரை ஓதம் கலந்து முத்தம் சொரியும் கலிக்காமூர்
363-1

மைவரை போற்றிரையோடு கூடிப்புடையே மலிந்தோதங்
கைவரையால் வளர் சங்கு மெங்கு மிகுக்கும் கலிக்காமூர்
363-2

குன்றுகள் போற்றிரை யுந்தியந்தண் மணியார் தரமேதி
கன்றுடன் புல்கியா யம்மனை சூழ் கவினார் கலிக்காமூர்
363-4

கடல் அருகே இருந்த இவ்வூரில் உப்பங்கழிகள் இருந்த நிலையையும் காண, கழிகள் நிறைந்த விரும்பத் தக்க ஊர் என்ற நிலையில் இவ்வூர்ப் பெயர் அமைந்து கழிக்காமூர் என்பது பின்னர் கலிக்காமூர் என்றாயிற்றோ என எண்ணத் தோன்றுகிறது.

## 104. கழிப்பாலை

தென் ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்து கழிப்பாலை என்ற ஊர் அமைகிறது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும்

---

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகள். பக். 12.
2. வானிடை வாண்மதி மாடந்திண்ட மருங்கே கடலோதம்
கானிடை நீழலிற் கண்டல் வாழும் கழிசூழ் கலிக்காமூர்
—திருஞா-363-5

பாடல் பெற்ற தலம் இது. இதனைப் பாலை என்று சுட்டிப்பாடு கின்றார் மாணிக்கவாசகர்.

அந்தரத்திழிந்து வந்தழகமர் பாலையும், சுந்தரத் தன்மை யொடு துதைந்திருந்தருளியும் (கீர்த்தி-98-99) என இவர் அழகு வாய்ந்த ஊராக இதனைக் குறிக்கின்றார். திருநாவுக்கரசர், கறங்கோத மல்கும் கழிப்பாலை (6-3) கழியுலாம் சூழ்ந்த கழிப் பாலை (6–5) கண்ணன் பூஞ்சோலை கழிப்பாலை (6-6) கதிர் முத்தம் சிந்தும் கழிப்பாலை (6-7) கைதைமடற் புல்குதென் கழிப்பாலை (107-1) தாட்பட்ட தாமரைப் பொய்கை யந்தண் கழிப்பாலை (107-3) போன்று பலவாறு சித்திரிக்கின்றார். சுந்தரர், கடற் சாரும் கழனிக் கழிப்பாலை என்கின்றார் (23-8). ஞானசம்பந்தர், கடல்சூழ் கழிப்பாலை (175-1) மலங்கள் வந்துல வும் கழிப்பாலை (302-8) பாய்புனல் சூழ் கழிப்பாலை (302–11) கடல் நண்ணும் கழிப்பதி (157–5) கடியார் பொழில்சூழ் (157,2) என்கிறார். சேக்கிழாரும், கன்னாரும் எயில் புடை சூழ் கழிப் பாலை (பெரிய-ஏயர்-166) என்கிறார்.

இவற்றை நோக்க கடல் பக்கம் அமைந்த ஊராக இது இருந்திருக்கும்போல் தோன்றுகிறது. எனினும், இவ்வூர் பற்றி பேசும்போது. 'தில்லையிலிருந்து 5 கி.மீ. உள்ள திருநெல்வாயில் என்னும் சிவபுரிக் கோயிலுக்கு மிகவும் அருகில் தனி ஆலயமாக உள்ளது. பாடல் காலத்திலிருந்த பழைய கோயில் தில்லைக்குத் தென் கிழக்கில் 11 கி.மீ. தொலைவில் திருக்கழிப்பாலை என்ற இடத்தில் இருந்ததாகவும் அது கொள்ளிட நதியால் கொள்ளப் பட்டமையால் இங்கு அமைக்கப்பட்டதாகவும் சொல்லப் படுகிறது' என்ற எண்ணம் அமைகிறது.[1] மேலும் இது முன்பு கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் காரைமேடு என்னும் இடத்தில் இருந்தது. அங்கு இருந்தபொழுது கொள்ளி டத்தின் வெள்ளப் பெருக்குத் திருக்கோயிலை முற்றிலும் பாழ் படுத்திவிட்டது. படுகை முதலியார் குடும்பத்தில் திரு பழனியப்ப முதலியார் என்பவர் சிவபுரிக்குத் தெற்கில் கோயில் கட்டி அதில் கழிப்பாலை இறைவரையும் இறைவியாரையும் ஏனைய பரிவாரத் தேவதைகளையும் எழுந்தருளிவித்துள்ளனர். இது சிதம்பரத்திற் குத் தென்கிழக்கு சுமார் 3 மைல் தூரத்தில் இருக்கிறது[2] என்ற

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-79
2. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவார திருப்பதிகங்கள்-பக். 58

கருத்தும் இதனோடு தொடர்புடையதாக அமைகிறது. எனவே இடைக்காலத்தில் சுட்டப்படும் கழிப்பாலை என்ற ஊர் இன்று இருக்கும் ஊர் அன்று என்பது தெரியவருகிறது. மேலும் கடற் கரைத் தலமாக இலக்கியங்கள் சுட்டும் இவ்வூரினைக் கொள்ளிட ஆற்றின் கரையில் இருந்தது என்று கூறும் தன்மையும் ஆராய்தற் குரியது. எனினும் ஊர்ப்பெயர் 'கழி'யுடன் தொடர்புடையது என்பது திண்ணமாக விளங்கி நிற்கிறது. எனினும் 'பாலை' என்பதற்குரிய பொருள் விளக்கம் பெறவில்லை.

### 105. கழுக்குன்றம்

திருக்கழுக்குன்றம் என்று வழங்கப்படும் இவ்வூர் செங்கல் பட்டு மாவட்டத்தில் அமைகிறது. கழுகு காரணமாகப் பெற்ற பெயர். இரண்டு கழுகுகள் பூசித்துப் பேறு பெற்றமையின் கழுக் குன்றமாயிற்று[1] என்பர். வேதமே மலையாக நின்றலின் வேதகிரி எனவும் அழைப்பர்.[2]

மூவராலும் பாடல்பெற்ற ஊர் இது.[3] மாணிக்கவாசகரும் தம் போற்றித் திருவகவலில் 'திருக்கழுக்குன்றிற் செல்வாபோற்றி' எனப் பாடுகின்றார். (191) கழுகு பற்றிய எண்ணத்தைத் திருப் புகழ் தருகிறது (கழுகு தொழு வேதகிரி—திருப்-325).

### 106. கள்ளில்

திருக்கள்ளம், திருக்கண்டலம் எனச் சுட்டப்படும் நிலையில் இன்று அமையும் இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டம் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது.

'முள்ளின் மேய முது கூகை முரலும் சோலை
வெள்ளின் மேல விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளின் மேய அண்ணல்'

என இவர் தம் முதற்பாடலை அமைத்தாலும், (119-1) கடியார் பூம்பொழிற் சோலைக் கள்ளின் மேயான் (119-7) என்றும்,

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 81
2. ,, ,, ,, பக். 81
3. கன்றினொடு பிடிசூழ் தண்கழுக் குன்றம் — சுந்-81-1
   கழையாடு கழுக்குன்றமமர்ந்தான் கண்டாய்—திருநா-295-7

   காடுடையான் காதல் செய் கோயில் கழுக்குன்றே—திருஞா-103-1

கருநீல மலர் விம்மு கள்ளில் (119-7) என்றும் பாடும் தன்மையில், முதலில் காடு போன்ற இடம்பின்னர், இறைவன் திருக்கோயிற் சிறப்பால் மக்கள் வசிக்கத் தொடங்கிய நிலையில் செழிப்பு பெறத் தொடங்கியதோ என்ற எண்ணம் எழுகிறது. மேலும் கள்ளிச் செடிகளின் நிறைவால் பெற்ற பெயராக இது அமையலாம் என்ற எண்ணமும் அமைகிறது. கள்ளம், கண்டலம் கள்ளின் திரிபாக இருக்கலாம்.

## 107. களந்தை

சுந்தரர் பாடல் உணர்த்தும் ஊர்ப்பெயராக இது அமைகிறது. 'ஆர் கொண்ட வேற் கூற்றன் களந்தைக் கோன் அடியேன்' (39-6). இவ்வூர் மரூஉப் பெயர் போன்று தோன்றுகிறது. இன்று 'களத்தூர்' என்றதொரு பெயரைக் காண்கின்றபோது களந்தையும் களத்தூர் போன்றதொரு ஊர்ப்பெயர்த் திரிபாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 108. களர்

திருக்களர் என்று சுட்டப்படும் இவ்வூர் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம். சேக்கிழாரும் சிறப்பாக இவ்வூரைச் சித்திரிக்கின்றார்.

'கோங்குலா மலர்ச்சோலை வண்டினங்
கிண்டி மாமதுவுண்டிசை செயத்
தெங்கு பைங்கமுகம் புடைசூழ்ந்த திருக்களர்'

என்பது சம்பந்தர் பாடல் (188 -5). 'களர்' நிலத்தில் அமைந்த கோயிலை உடைய ஊராதலின் திருக்களர் என்னும் பெயர் எய்திற்று' என்பர். தலவீருட்சம் பாரிஜாதம் காரணமாகப் பாரிஜாத வனம் என்னும் பெயர் உண்டு.[1]

## 109. கற்குடி

இன்று உய்யக் கொண்டான் மலை என்ற பெயரில் அமையும் இத்தலம் திருச்சி மாவட்டத்தில் உள்ளது.[2] கோயில் மலையின்

1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவார திருப்பதிகங்கள்-பக். 60
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 320

மீது உள்ளது. மூவர் பாடலும் பெற்ற தலம் இது. மலைத்தலம் என்பதனை ஞானசம்பந்தர் பாடல் விளக்கங்கள் காட்டுகின்றன.

போர கலந் தரு வேடர் புனத்திடையிட்ட விறகில்
காரகிலின் புகை விம்மும் கற்குடி மாமலை யாரே
(43-3)

வண்டிசை யாயின பாட நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயிலாடும் கற்குடிமாமலையாரே (43-9)

கற்குடி என்ற ஊர்ப்பெயர் மட்டுமே திருநாவுக்கரசர் பாடலில் அமைகிறது. (285-3) சுந்தரர், பூம்பொழில்கள் (27-1) சோலைகள் (27-2) கரும்பாரும் வயல்கள் (29-9) போன்றவை சூழ்ந்து காணப் படும் இவ்வூர் வளத்தினைச் சிறப்பிக்கின்றார். இந்நிலையில் மலைப்பகுதியைச் சார்ந்த ஊர் காரணமாகக் 'கற்குடி' என்ற பெயர் அமைந்து இருக்கும் எனத் தோன்றுகிறது. பின்னர் இறை வன் சிறப்பு காரணமாக 'உய்யக் கொண்டான் மலை' என்று வழங்கத் தொடங்கிற்று எனக் கருதலாம். கல்வெட்டு இரண்டு பெயரையும் சுட்டுகிறது.[1]

## 110, கறைச்காடு

கறைக்காட்டுக் கண்டனார் என சிவன் கோயில் தலமாகச் சுட்டப்படுவது இவ்வூர் (திருஞா. (265-7). காரைக்காடு என்பது கறைக்காடாக மாறியிருக்க வாய்ப்புண்டு.

## 111. கன்றாப்பூர்

கண்ணாப்பூர் என்று வழங்கப்படும் இவ்வூர் இன்று தஞ்சை மாவட்டத்தில் அமைகிறது. திருநாவுக்கரசர் பாடல் பெற்ற தலம் இது (275)[2] இவரின் பாடல்களினின்றும் இவ்வூர்ப் பெயர் விளக்கம் தெரியவில்லை. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் நூலாசிரியர் (பக் 203) 'சைவப் பெண் ஒருத்தி வைணவனுக்கு வாழ்க்கைப்பட்டு மாமியார் வீட்டார் காணாதபடி கன்றுக்குட்டி கட்டி இருந்த முளை (ஆப்பு)யைச் சிவமாகப் பாவித்து வழி பட்டு வந்தாள். ஒரு நாள் கணவன் அதைக் கண்டு, கோடாரியால்

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 57
2. கடிமலர் தூய்த் தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே (275-2)

வெட்ட அதிலிருந்து சுவாமி வெளிப்பட்டார். அதனால் கன்றாப்பூர் என்று பெயர் பெற்றது' என்கின்றார். பிற எண்ணங்கள் தெளிவுறவில்லை.

## 112. காட்கரை

நம்மாழ்வாரால் பாடல் பெற்ற வைணவத் தலம். கேரளத்தில், எர்ணாகுளத்திலிருந்து பத்து கல் தொலைவில் உள்ளது இவ்வூர். காவிகமழ் திருக்காட்கரை என்றும் (நாலா 301ɔ) சுனை சொள் பூஞ்சோலைத் தென் காட்கரை (நாலா 3020) என்றும், இயற்கைவளம் நிரம்பிய இடம் என்பது மட்டும் சிறப்பாக இவர் பாடலில் விளக்கம் பெறுகின்றது. காவிக்கரை காட்கரை என்றாயிற்றோ அல்லது கழுநீர்க்கரை, காட்கரை என்றாயிற்றோ என்றுதான் எண்ணம் தோன்றுகிறதே தவிர, பிற எண்ணங்கள் இவ்வூர் பற்றி அறியக் கூடவில்லை.

## 113 காட்டுப்பள்ளி

காட்டுப்பள்ளி என்று தேவாரம் சுட்டும் தலத்தை, இன்று இரண்டு ஊராகச் சுட்டுகின்றனர். மேலைத் திருக்காட்டுப்பள்ளி கீழைத் திருக்காட்டுப்பள்ளி என. ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற நிலையில் 'காட்டுப்பள்ளி' என்ற குறிப்பும், அங்குள்ள சிவன் கோயில் சிறப்பும் மட்டுமே விளக்கம் பெறுகின்றன. 'சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்' என்ற நூலாசிரியர், இன்றைய நிலையில் மேலைத் திருக்காட்டுப் பள்ளி, கீழைத்திருக்காட்டுப்பள்ளி என இரண்டு கோயில்களையும் சுட்டி, அவை திருக்காட்டுப்பள்ளி, ஆரணியேசுரர் கோயில் என்ற இரண்டு ஊர்களாக, தஞ்சையில் அமைந்திருக்கும் நிலையையும் விளக்குகின்றார். குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் உள்ளது முதல் தலம். சம்பந்தர் அப்பர் பாடல் பெற்றது. இரண்டாவது தலம், திருவெண் காட்டுக்கு அருகில் உள்ள தலம் என்கின்றார்.[1]

ஆயின் ஞானசம்பந்தர் பாடல் பெற்ற பதிகள் கீழைத் திருக்காட்டுப்பள்ளி (5) மேலைத்' திருக்காட்டுப்பள்ளி (287) எனத் தொகுத்தோர் குறிப்பிட்டாலும் பாடலில் 'காட்டுப்பள்ளி

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 272, 287

என்றே இரண்டு பதிகங்களிலும் அமைவதும்[1], காவிரியின் வளம், காவிரிக் கரையில் இது அமைந்திருந்த தன்மை இவற்றை இரு பதிகங்களும் சுட்டுவதும், அன்று காட்டுப்பள்ளி என்று பாடல் பெற்ற தலம் இன்று குடமுருட்டி ஆற்றின் கரையில் இருந்த தாகத் தான் இருந்திருக்கவேண்டும். பின்னர், கீழைத் திருக் காட்டுப்பள்ளி சிறப்புபெற, இதனைத் தொகுப்பாசிரியர்கள் இரண்டாகச் சுட்டியிருக்க வேண்டும் எனவும் கருதலாம். மேலும், சான்றுகள் வழி இதனை ஆராயின் உண்மை தெளிவாகும். மேலைத் திருக்காட்டுப் பள்ளி என்ற காவிரிக் கரைத்தலமே இன்றும் திருக்காட்டுப் பள்ளி என்று சுட்டப்பட, கீழைத்திருக் காட்டுப்பள்ளி ஆரணியேசுவரர் கோயில் என்று சுட்டப்படும் தன்மை ஆரணியேசுவரர் கோயிலே கீழைத்திருக் காட்டுப்பள்ளி எனச் சிலரால் குறிப்பிடப்பட்டு இருக்கவேண்டும். எனினும் செல்வாக்கின்மை காரணமாக ஆரணியேசுவரர் கோயிலே வழக்கில் அமைந்தது எனவும் நினைக்கத் தோன்றுகிறது. காட்டில் பள்ளி கொண்ட நிலையிலேயே இப்பெயர் பொருத்தம் அமைய வல்லது.

### 114. காட்டூர்

ஊர் என்று முடியும் சிவன் கோயில் தலம் இது. இதனை ஞான சம்பந்தர் திருவூர்க் கோவையுள் சுட்டுகின்றார் (175-7). காட்டுப் பகுதியில் அமைந்த ஊர் என்ற நிலையில் இப்பெயர் அமைந் திருக்கலாம்.

### 115. காம்பீலி

'பார்வளர் புகழின் மிக்க பழம்பதி மதி தோய் நெற்றிக் கார்வளர் சிகரமாடக் காம்பீலி (நேச-1) எனப்பெரியபுராணம் குறிப்பிடும் காம்பீலி பற்றிய பிற எண்ணங்கள் தெளிவு பெறவில்லை.

---

1. திரைகளெல்லா மலருஞ் சுமந்து செழுமணி முத்தொடு
பொன் வரன்றிக்
கரைகளெல்லா மணி சேர்ந்துரிஞ்சிக் காவிரி கால்பொரு
காட்டுப்பள்ளி
திருஞான—கீழைத் திருக்காட்டுப் பள்ளி பதி. 5-2

வரையுலாஞ் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலாமிகு மணல் சூழ்ந்த காட்டுப்பள்ளி
திருஞான—மேலைத் திருக்காட்டுப் பள்ளி பதி 287-5

## 116. காரிக் கரை

வடதிசை மேல் வழிக் கொள்ளும் நிலையில், திருக்காளத்திக்கு முன்பாகத் திருநாவுக்கரசர் சென்ற இடமாகக் காரிக்கரை அமைகிறது.[1] எனவே திருக்காளத்திக்கு முன்னர் இவ்வூர் அமைந்திருக்கக் காண்கின்றோம். சிவன் கோயில் தலம் என்பது மட்டும் தெரிகிறது. கரை என்று வரும் தன்மையால் ''காரி'' என்பது ஆறாக இருக்கலாம். காரியாற்றங்கரையில் உள்ள தலம் என்ற நிலையில் காரிக்கரை எனப் பெயர் பெற்றிருக்கலாம். திரு. நாச்சிமுத்து ஆற்றின் நீரின் கறுப்பு நிறத்தால் பெயர் பெற்ற ஆறுஒன்று காரியாறு எனச் சுட்டப்படுகிறது என்கின்றார்.[2] எனவே காரிக்கரையும் இதனைப் போன்று பெயர் பெற்றிருக்க வாய்ப்பு அமைகிறது. சங்க இலக்கியத்திலும் காரியாறுஎன்ற ஒரு இடம் அமைகிறது.

## 117. காரூர்

'காரூர் களிவண்டறையான்' எனச் சிவனைப்பாடும் சுந்தரர் வாக்கு 'காரூர்' என்ற பெயரைத் தருகிறது.

ஆரூரன் உரைத்தன நற்றமிழின் மிகுமாலை யொர்பத்திவை
கற்றுவல்லார்
காரூர் களிவண்டறை யானை மன்னவராகி யோர் விண்
முழுதாள்பவரே. சுந்-3-10

## 118. காரைக்கால்

காரைக்கால் அம்மையார் பிறந்த ஊராக அமைந்த காரண மாகப் பெருஞ்சிறப்பு பெற்று திகழும் ஊர்.

'செழுந்தேன் கொம்பின் உகு காரைக்காலினில் மேயகுல தனமென' நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருத் தொகையில் சுட்ட (28) சேக்கிழார் இவ்வூர்ச் சிறப்பை மிக் அழகாகத் தருகின்றார்.

---

1. மரு ஆர்வம் பெற வணங்கி வடதிசை மேல் வழிக் கொள்வார். பெரிய-27-343

பல்பதியும் நெடுங்கிரியும் படர்வனமும் சென்றடைவார்
செல்கதி முன் அளிப்பார் தந்திருக் காரிக்கரை பணிந்து
தொல்கலையின் பெருவேந்தர் தொண்டர்கள் பின்
உம்பர் குழாம்
மல்கு திருக் காளத்தி மாமலை வந்தெய்தினார்
—பெரிய 27, 343

2. தமிழ் இடப்பெயராய்வு-பக். 91

கூனல் வளை திரை சுமந்து கொண்டேறி மண்டு கழிக்
கானல் மிசை உலவு வளம் பெருகு திருக் காரைக்கால்
(பெரிய 30-1)

வங்க மலிக் கடற்காரைக்கால் (30-2) என்றும் சுட்டும் தன்மையில் இவ்வூரின் அமைப்பு ஓரளவு புரிகிறது. கடற்கரைச் சார்ந்த ஊர்; வளம் மிக்க ஊர் என்ற நிலையில் தெரியவரும் இவ்வூர் காரைச் செடிகளின் மிகுதி காரணமாக இப்பெயர் பெற்றிருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது.[1] காரைக்காயல் என்பது காரைக்கால் என்றாயிற்று என்ற எண்ணமும் உண்டு. காரைக்கால் அம்மையார் தம் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் தம்மைக் 'காரைக்காற் பேய்' (2-11) என்று சுட்டும் தன்மையில் அவர் காலத்திலும் 'காரைக்கால்' என்றே இவ்வூர்ப்பெயர் அமைந்திருந்தது என்பதை அறியக் கூடுகின்றது.

### 119. காவிரிப்பூம்பட்டினம்

தமிழர் பழம் பெருமையை நிலை நாட்டிக் கொண்டு இருந்த பெரு நகரங்களுள் காவிரிப்பூம்பட்டினம் ஒன்று. புகார், பூம்புகார் போன்றன பிற பெயர்கள். காவிரி ஆற்றின் கரையில் அமைந்த பட்டினம் காரணமாக, காவிரிபுகும்பட்டினம் காரணமாகக் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் அமைந்ததா அல்லது சோலைகள் நிறைந்த மலர்கள் நிரம்பிய பட்டினம் அருகில் ஓடிய ஆறு காவிரி என்று அழைக்கப்பட்டதா என்பது ஆய்வுக்குரியது. இங்குள்ள சிவன் கோயில் பல்லவன் வழிபட்டதன் காரணமாகப் 'பல்லவனீச்சரம்' என்று சுட்டப்பட்டது என அறிகின்றோம்.[2] ஞானசம்பந்தர் பட்டினத்துப் பல்லவனிச்சரம் (65-2) புகாரிற் பல்லவனீச்சரம் (65-9) என்று சுட்டும் தன்மையால் இப்பெயர்கள் தொடர்ந்து இருந்த வழக்கினைத் தெரிய இயலுகிறது.

சங்க காலத்தில் 'காவிரிப்பூம்பட்டினம்' என்ற பெயரையும் புகார்என்ற பெயரையும் காண்கின்றோம். சோழநாட்டின் துறை முகப்பட்டினமாகவும் தலைநகராகவும் இருந்தது. இத்தலத்தின் முதல் பெயர் காவிரிப்பூம்பட்டினமாக இருக்கலாம் என்பதனை அப்பெயர் மிகுதி காட்டுகிறது. காவிரிப்பூம்பட்டினம் ஊர்ப்

---

1. காரை-காட்டுச் செடிவகை. கால்-இடம்-தமிழ் லெக்ஸிகன் vol II பக் 889, 890
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக், 259

பெயர் இணைந்த புலவர் பலர் காணப்படுகின்றனர். இதனுடன் புகாஅர் என்ற பெயரும் பழமையானது. பரணரின் அகநானூற்றுப் பாடல் (181)

'மகர நெற்றி வான் தோய் புரிசைச்
சிகரந் தோன்றாச் சேணுயர் நல்லில்
புகாஅர் நன்னாடு'

என்கின்ற நிலையில் இப்பெயரின் பழமை தெரிகிறது. மயிலை சீனி வேங்கடசாமி, ''காவிரியாறு கடலில் கூடுகிற இடமாதலின் இந்நகரம் புகார் என்றும் பூம்புகார் என்றும் பெயர் பெற்றது என்பர் மேலும்,

'தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்
மலியோதத்து ஒலிகூடல்'

என்ற பட்டினப்பாலை (97-98) வரிகளுக்கு உரை கூறுகின்ற நச்சினார்க்கினியர், 'தெளிந்தகடலில்திரையோடே காவிரி தலை கரக்கும் ஓதத்தினால் ஒலிமலிந்த புகார் முகம்' என்று விளக்குகின்றார். எனவே காவிரியாறு கடலில் புகுகிற இடமாதலின் இதற்குப் புகார் என்று பெயர் வந்தது என்பது தெளிவாகிறது என்கின்றார்[1] இப்புகார் பின்னர் அழகிய புகார், பூக்கள் மலிந்த புகார் என்ற நிலையில்பூம்புகார் என்ற பெயரினை அடைந்திருக்க வேண்டும். சிலம்பிலேயே பூம்புகார் தோற்றம் கொள்கிறது. மணிமேகலை பதிகம், நாவலந்தீவின் காவற்தெய்வமாக நாவன் மரத்தின் கீழ் இருந்த சம்பாபதியை (சம்பு-நாவல்) அகத்தியன் தன் கரகத்தைத் கவிழ்த்தலால் வெளிப்போந்த காவிரி வணங்க, அந்தொன் மூதாட்டி,

'செம்மலர் முதியோன் செய்த வந்நாள்
என் பெயர்ப்படுத்த இவ்விரும் பெயர் மூதூர்
நின் பெயர்ப்படுத்தேன் நீ வாழிய என
இருபாற் பெயரிய உரு கெழு மூதூர் '(பதி 29-22)

எனக் குறிப்பிடும் நிலையில் இவ்வூர் இரு பெயரினையுடையது என்பதை விளக்குகின்றது. இது கதையாக இருப்பினும் 'காவிரிப் பூம்பட்டினம்' எனபதே இவ்வூரின் முதற்பெயர்என்பது இங்கு விளக்கம் பெறுகிறது.

---

1. சங்க காலத்துக் காவிரிப்பூம்பட்டினம்-பக். 527

காவிரிப்பூம்பட்டினம் என்னும் பழம் சிறப்பு பொருந்திய இடம் இன்று சிறியதொரு கிராமமாக அமைகிறது. 'பூம்புகார்' இன்று அரசின் தலையீடு காரணமாகத் தம் கலைப் பெருமையை எடுத்தியம்பும் நிலையில் நின்று சிறக்கிறது. காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாகவும், வணிபத்தலமாகவும் அன்று விளங்கி இடைக்காலத்திலேயே கடல் கொண்ட நிலையில், அதன் சிறப்பும் மூழ்கி விட்டது. சேக்கிழார் அடிச்சுவட்டில் நூலாசிரியர் (பக்-85) சேக்கிழார் போன்ற பிறர் இதனைப்பற்றிச் சிறப்பாகப் பாடாமை காரணம் காட்டி, இந்நகரின் சிறப்பிழந்த நிலையைக் காட்டுகின்றார்.

இந்நகரம் சிறந்த நகரமாக விளங்கிய நிலையையும், மக்கள் இந்நகரினைச் சிறப்புற அமைத்த அமைப்பு முறையையும் தெளிவாக்குகிறது சிலப்பதிகாரம். பூம்புகாரின் அமைப்பு முறையை நாம் அறிய சிறந்ததொரு சான்றாக அமைகிறது. கடற்கரையைச் சார்ந்த மணல் பரந்த இடம் நெய்தலங்கானல், அதை அடுத்து மருவூர்ப் பாக்கம் (வணிகர்கள் தங்குமிடம்) அடுத்து நாளங்காடி பின்னர் சோழ மன்னர்கள், பெருங்குடி மக்கள் வதிந்த பட்டினப் பாக்கம் என்ற மிகச் சிறப்பான ஊர் அமைப்பு முறையினை நோக்க, இவ்வூரின் தொன்மையும், பெருமையும் தெளிவாக விளங்குகிறது. நகரமைப்புக் கலை எட்டு வகையானது என்ற எண்ணத்திற்குள் தாமரைப்பூ வடிவத்தைக் காஞ்சியும் மதுரையும் தர, இவ்வூரின் அமைப்பு வேறு நிலையில் அமைந்து, அன்றைய தமிழரின் நகரமைப்புக் கலையுணர்வினைத் தருகின்றது எனலாம். இங்குக் காணப்பட்ட கோயில்களின் பெருக்கமும் மக்கள் இங்கு நெருங்கி வாழ்ந்த தன்மையை யுணர்த்து மாற்றான் அமைகிறது. சாய்க்காடு, பல்லவனீச்சரம் என்பன இங்குள்ள கோயில்கள் இருக்குமிடம். சாய்க்காடு இன்று சாயாவனம் என்று அழைக்கப் பெறுகிறது.

பௌத்தர்கள் இங்கு செல்வாக்குடன் வாழ்ந்து இருந்தனர் என்பதும், பாலி மொழியில் உள்ள பௌத்த நூல்களில் இப்பட்டினம் கவீரப்பட்டினம் என்று கூறப்படுகிறது என்பதும், மயிலைச் சீனிவேங்கடசாமியின் பௌத்தமும் தமிழும் நூல்தரும் எண்ணம்.[1]

---

1. பௌத்தமும் தமிழும்-பக். 19

பதினொராம் திருமுறையிலும்,[1] சேக்கிழாராலும்[2] சுட்டப் படும் தலம், அப்பர் ஞானசம்பந்தர் பாடல் பெற்று அமைகிறது.

சாய் என்பது கோரைப்புல்லின் வகை. பஞ்சாய்க் கோரையில் பாவை செய்யும் நிலையைச் சங்கப் பாக்கள் இயம்பும். எனவே இக்கோரைகள் மிகுந்த பகுதியாக இருந்த இடம் என்பது தெளிவு. கோயில் எழும்பிய பின்னர், இப்பகுதியில் மக்கள் வசிக்கத் தொடங்கியிருக்கலாம். இன்று மக்கள் வழக்கில் 'சாய்' என்பது சாயா எனப் பொருளே மாறி அமையும் நிலையைக் காண்கின்றோம். 'ஆதிசேடனது நாகமணி ஒளிவீசியதால் இப்பெயர் பெற்றது என்பர். இப்பொருட்குச் சாய்ஒளி என்பர்' என்ற எண்ணமும் அமைகிறது.[3]

காவிரியாற்றின் கரையில் இருக்கும் இத்தலம் பூம்புகாரின் ஒரு பகுதியே என்பது ஐயடிகள் காடவர் கோன் பாடல்களில் மிகவும் தெளிவாக அமைகிறது.

—நெஞ்சமே
போய்க்காடு கூட புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழு நீ சார்ந்து
தண்புகார்ச் சாய்க்காடு—176—1
பூம்புகார்ச் சாய்க்காடு—177-2
காவிரிப் பூம்பட்டினத்துச் சாய்க்காடு—177-4

## 120. காழி

'சீர்காழி' என்று இன்று வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. சமய வாதிகளால் மிகவும் பாராட் டப் பெற்ற தலம் இது என்பதனை, இதன் பன்னிரு பெயர் தெளிவுபடுத்தும். ஞானசம்பந்தர் வாழ்க்கையில் முக்கியத்துவம்

---

1. —சேரும்
திருச்சாய்க்காட்டாடு வரேல் செய்தக்க என்றும் திருச் சாய்க்காட்டே நின் உருவு-பரணர்-சிவ திரு-92
2. பொன்னிசூழ் புகாரில் நீடு புனிதர்தம் திருச்சாய்க்காட்டு மன்னு சீர்த் தொண்டரெல்லாம் மகிழ்ந்து எதிர் கொள்ளப் புக்கார்—34-12
3. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரத் திருப்பதி கங்கள்—பக்-87

பெற்றமையும் இதன் சிறப்புக்குக் காரணம் எனலாம் (ஞானப் பால் பெற்றமை இங்குள்ள சிவன்கோயில் குளக்கரையில் தான்). இப்பன்னிரு பெயரையும் இலக்கியங்கள் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன.

காவிரியின் கழிமுகப் பகுதியில் இன்று 'சீர்காழி வட்டமாக' அமைந்துள்ளது.

தார் கெழு தண்டலைத் தண்பணை தழீஇக்
கற்றெகு புரிசைக் காழி நம்பி. ஆளுடை திருக்-1
தலமல்கிய புனற் காழி - திருஞான-15-11
கடற்காழியர் கோன் - திருஞான-5-11
கல்லுயர் மாக்கடனின்று முழங்கும்
கரை பொரு காழியமூதூர் - திருஞான - 40-11
கடலார் புடைசூழ் தரு காழி - திருஞான - 34-1

இவ்வூரின் பெருஞ்சிறப்பினைக் கூறும் நம்பி ஆரூரர்,

பார் விளங்கு
செல்வம் நிறைந்த ஊர் சீரில் திகழ்ந்த ஊர்
மல்கு மலர் மடந்தை மன்னும் ஊர் சொல்லினிய
ஞாலத்து மிக்க ஊர் நானூற்றவர்கள் ஊர்
வேலொத்த கண்ணள் விளங்கும் ஊர் - ஆலித்து
பன்னிருகால் வேலை வளர் வெள்ளத்தும்பரொடும்
பன்னிருகால் நீரில் மிதந்த ஊர் - மன்னும்
பிரமனூர் வேணுபுரம் பேறொலி நீர்ச் சண்பை
அரன் மன்னு தன் காழி அம்பொற் - சிரபுரம்
பூந்தராய் கொச்சை வயம் வெங்குருப் பொங்கு புனல்
வாய்ந்த நல் தோணிபுரம் மறையோர் ஏய்ந்த
புகலி கழுமலம் பூம்புறவம் என்றிப்
பகர்கின்ற பண்புற்ற தாகி (4)

என இப்பெயர்கள் பன்னிரண்டையும் எடுத்தியம்புகின்றார். கன்னி மதிற் கழுமலம் நாம் கருதுமூர் எனச் சிறந்த பன்னிரண்டு பெயர் (பெரிய-34-754) என்ற பலரின் சுட்டும் இவ்வூரின் 12 பெயர்கள் பற்றிய எண்ணத்தைத் தருகிறது.

ஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் 63, 117வது பதிகங்களில் திருப்பிரமபுரம் முதல் 12 பெயர்களையும் அமைத்து வரிசையாகப் பாடுகின்றார்.

பிரமபுரம்—பிரமன் வழிபட்டதால் பெற்ற பெயர்[1]

1. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக்-50

வேணுபுரம்—இந்திரன் மூங்கில் உருவில் மறைந்திருந்தமையால் பெற்ற பெயர்.[1]

தோணிபுரம்—பிரளய காலத்தில் தோணிபோல மிதந்தது[2] சீகாழி எனவே தோணிபுரம் என்ற பெயர். இதனை திருநாவுக்கரசர் (83),

'அலையும் பெருவெள்ளத்தன்று மிதந்த இத்தோணிபுரம்' என அமைத்துப் பாடுகின்றனர்.

சண்பை நகர்-சண்பைப் புல்லின் மிகுதி காரணமாக இருக்கலாம். யாதவ குமாரர் சண்பையாக முளைத்தமையின் பெற்ற பெயர் என்பது புராணக்கதை[3]

புகலி—தேவர்களின் புகலிடமாதலால் பெற்ற பெயர்.[4]

வெங்குரு—சுக்கிரனும், இராமனும் பூசித்ததால் பெற்றபெயர்.[5]

பூந்தராய்—திருமால் பூக் கொண்டு வழிபட்டமையால் பெற்ற பெயர்.[6]

சீகாழி—காளியினால் பூசிக்கப்பட்ட தலமாதலின் ஸ்ரீகாளி புரம் எனப்பட்டு, அதுவே நாளடைவில் சீர்காழி ஆயிற்று என்பர்.[7]

புறவம்—சிபி புறாவாகி வழிபட்ட தலம் என்பர்.[8]

சிரபுரம்—திருமாலால் வெட்டப்பட்ட சிலம்பன் என்ற அசுரன் தலை, இராகுவாக நின்று பூசித்தமையால் பெற்ற பெயர்.[9]

கழுமலம்—பழங்காலத்தில் கழுமலம் என்ற பெயரே வழங்கியது. காவிரிபூம்பட்டினத்தை அடுத்திருப்பதால் சோழர்களின் பட்டத்து யானையை இங்கே கட்டி வைத்திருப்பது வழக்கம் அதன் காரணமாகவே கழுமலம் என்ற பெயர்உண்டாயிற்று என்பர். உயிர்களின் மலங்கள் போக்கும் தன்மையால் பெற்ற பெயர் என்ற எண்ணமும் உண்டு.[10]

இப்பன்னிரு பெயர்களிலும் சண்பை என்ற பெயரும் கழுமலம் என்ற பெயரும் தவிர, பிற பெயர்கள் இறைவன மேற்கொண்ட பக்தியின் அடிப்படையில் எழுந்த புராணக் கதையில் பிறந்தவையாகத் தோன்றுகின்றன. சண்பை புல்லின் காரணமாகப் பெற்ற பெயராகச் சண்பை அமைய, இதன் முதன் பெயராக, பழம் பெயராக அமைந்திருந்தது

1—10. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்—பக். 50

கழுமலம் என்பதைப் பண்டுதொட்டே இதன் செல்வாக்கு தரும் எண்ணமாகக் கொள்ளலாம்.

**121. காறாயில்**

இன்று திருக்காறை வாசல் என அழைக்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம். கல்வெட்டுகளும் இத்தலத்தை இப்பெயரிலேயே காட்டு கின்றன. சம்பந்தர் பதிகங்களினின்றும்

சீர்திகழும் திருக்காறாயில் 151-1
நீர் வயல் சூழ் திருக் காறாயில் 151-2
கடிபொழில் சூழ் திருக்காறாயில் 151-3

என இவற்றின் வளம் மட்டுமே தெரிய வருகின்றன. இவ்வூர் பற்றிய விளக்கம் புலனாகவில்லை. எனினும் இப்பெயரினை நோக்க காரை + எயில் → காரெயில் என்று ஆகி காறாயில் என திரிந்ததோ என்ற எண்ணம் மேலும் ஆய்வுக்குரியது.

**122. கானப்பேர்**

இன்று காளையார் கோயில் என்று சுட்டப்படும் ஊர், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. மதுரையிலிருந்து ஒன்பது மைல் தூரத்தில் உள்ளது. ஞானசம்பந்தராலும் சுந்தரராலும் பாடல் பெற்றது இத்தலம். கானப்பேரூர், கானப்பேர்[1] என்ற இரண்டு வடிவிலும் அமையும் ஊர்ப்பெயர், பின்னர் கோயில் சிறப்பு சைவப்பற்று காரணமாகப் புராணககதை தொடர்பாகக் 'காளையார் கோயில்' என்று அழைக்கப்பட்டு, பின்னர் ஊர்ப்பெயரே அவ்வாறாயிற்று என்பது தெரிகிறது[2] காட்டுப்பகுதியில் அமைந்த ஊராக இது இருந்ததனைக் கானப் பேர் என்ற பெயர் சுட்டுகிறது. மேலும் பண்டு தொட்டே இதன் சிறப்பு, சங்க இலக்கியச் சான்றுகள் வழி தெளிவுறுகிறது.

---

1. கானப் பேராளர் —திருஞான-பதி-130
   கானப் பேரூர் கட்டியை —சுந் - 15-2
2. இறைவன் காளை வடிவம் கொண்டு கையில் பொற் செண்டும், திருமுடியில் சுழியும் கொண்டு உடைய வராய் சுந்தரருக்குக் காட்சி கொடுத்த தலம் காரண மாகப் பெற்ற பெயர்.
   —சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்–பக். 235

இவ்வூர் சிறப்பாக அன்று காணப்பட்டது என்பதனைக் 'கற்றார்கள் தொழுதேத்தும் கானப்பேர்' என்ற சேக்கிழாரின் கூற்று தெளிவாக்கும் (பெரிய- திருஞா-886). காவார்ந்தபொழிற்சோலை கானப்பேர் என்பது திருஞானசம்பந்தர் கூற்று (313-7). கார் வயல் சூழ் கானப்பேர் உறைகாளையே என்பது சுந்தரர் பாடல் (84-1). மேலும் சிவபெருமான் திருவந்தாதியிலும் (51) இவ்வூர் சுட்டப்படுகிறது.

கல்லாட தேவநாயனார் தம்முடைய தேவர் திருமறத்தில்,

வாய்க்கலசத்து மஞ்சன நீரும்
கொண்டு கானப்பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை அடியாற் நீக்கி (21—2)

என்று சுட்டிச் செல்லக் காண்கின்றோம். இப்பாடலில் குறிப்பிடப்படும் சிவன் காளத்தியிலுறைபவன். எனவே இங்குக் கானப் பேருறை' என்பது, கானகத்தில் உறையும் சிவன் எனக் கருதவே இடம் அமைகிறது. இந்நிலையில் 'கானப்பேரூர்' என்பது காட்டுப் பகுதியில் எழுந்த புதிய குடியிருப்பே என்பது தெளிவாக அமைகிறது. மேலும், சங்க காலத்திலேயே 'கானப் பேரெயில் உக்கிரப் பெருவழுதி' என்ற எண்ணமும் இவ்வூர்ப் பெயருக்கு விளக்கம் தருகிறது. கானப்பேரெயில் என்பது ஊரைச் சுற்றிக் கானகத்தில் இருந்த பெரிய கோட்டையாக அமையலாம். இக் கோட்டைப் பகுதி பின்னர் தனி ஊராக பெயர் பெற்றிருக்கலாம். எனவே 'கானப்பேரெயில்' என்ற பெயர் பின்னர் 'கானப்பேர்' என்றும் 'கானப்பேரூர் என்றும் சுட்டப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும் 'கானப்பேர் என்பது பழமையான ஊர் என்று தெரிகிறது.[1] என்ற எண்ணமும் இவண் நோக்கத்தக்கது.

'இத்தலம் சங்க காலத்தில் மிகவும் புகழ்பெற்று ஒரு கோட்டையாக விளங்கியது. அஃது உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய வேந்தனுக்கு உரியதாகத் திகழ்ந்தது. வேங்கை மார்பன் என்னும் சிற்றரசனிடம் இருந்து உக்கிரப் பெருவழுதி இதனைக் கைப்பற்றினான் எனப் புறநானூறு கூறுகிறது.' புறநானூற்றுப் பாடல்,

---

1. வேங்கடம் முதல் குமரி வரை IV—பக்-59
2. பாண்டி நாட்டுத் தலங்கள்-பக். 104

நிலவரை இறந்தகுண்டு கண் அகழி
வான் தோய்வு அன்ன புரிசை விசும்பின்
மீன் பூத்தன்ன உருவ ஞாயில்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
அரும் குறும்பு உடுத்த கானப் பேரெயில்
—(ஐயூர் மூலங்கிழார்)

என்பது.

காளையார் கோயிலையே திருநாவுக்கரசர் காளேச்சுரம் என்றும் குறிப்பிட்டாரோ எனத் தோன்றுகிறது (285-8).

## 123. கானாட்டு முள்ளூர்

சுந்தரர் பாடல் பெற்ற இவ்வூர் இன்று கானாட்டம் புலியூர் என வழங்குகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. கொள்ளிடம் ஆற்றின் வடகரையில் இருக்கிறது. கல்வெட்டில் இவ்வூரின் பெயர், விருதராச பயங்கர வளநாட்டு கீழ்க் கானாட்டு முள்ளூராகிய திருச்சிற்றம்பலச் சதுர்வேதி மங்கலம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.[1] சுந்தரர் பதிகம் (40) இவ்வூரின் வளத்தை ஒவ்வொரு பாடலிலும் சுட்டுகின்றது.

சடையானை விடையானைச் சோதியெனும் சுடரை
அரும்புயர்ந்த வரவிந்தத் தணிமலர்க ளேறி
யன்னங்கள் விளையாடு மகன்றுறை யினருகே
கரும்புயர்ந்து பெருஞ் செந்நெல் நெருங்கி விளை
கழனிக்
கானாட்டு முள்ளூரிற் கண்டு தொழுதேனே
(40-3)

என்பது ஒரு பாடல்பகுதி. முள்ளூர் என்பது தாவர அடிப்படைப் பெயர் என்பது வெளிப்படை. மேலும் இப்பெயரை நோக்க, முதனிலையில் இவ்வூரின் பெயர் முள்ளூர் என்பதும் மேலும், பிற முள்ளூரினின்றும் இதனைத் தனிப்படுத்த, கானாட்டு முள்ளூர் எனச் சுட்டினர் என்றும் கொள்ளலாம். சங்ககால இலக்கியம் சுட்டும் முள்ளூர் என்ற ஊர்ப்பெயரும் முள்ளூர் ஊர்ப்பெயராக அமைந்த நிலையைக் காட்டும். மேலும் பழம் ஊரான இந்த முள்ளூரே, பின்னர் கானாட்டு முள்ளூர் என்று சுட்டப்பட்டதோ என்பதும் ஆய்வுக்குரியது

1. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக். 14

### 124. கானூர்

திருக்கானூர் என்ற பெயரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது இவ்வூர். சம்பந்தர் (பதி 73) அப்பர் (பதி 190) பாடல் பெற்ற ஊர் இது. கொள்ளிடக் கரையில் திருக்காட்டுப்பள்ளி அருகில் உள்ள ஊர் இது என்பதனை நோக்க, காட்டுப்பகுதியில் அமைந்த ஊர் என்பது வெளிப்படையாக அமைகிறது.

### 125, குடந்தை—குடமூக்கு

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் எனச் சுட்டப்படும் ஊர். அன்று இவ்விரு பெயர்களாலும் வழங்கப் பட்டதாகத் தெரிகிறது. குடமூக்கின் வடமொழிப் பெயர் மாற்றமே கும்பகோணமாயிற்று. அதுவே இன்று செல்வாக்குடன் திகழ்கின்றது. வைணவக் கோயில்களும் சைவக் கோயில்களும் நிறைந்த இடம். கோயில் பெருத்தது கும்பகோணம் என்பது பழமொழி. இங்குள்ள மூன்று கோயில்கள் தேவாரப்பாடல் பெற்றவையாக அமைகின்றன. ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற கும்பகோணம் கும்பேசுவர சுவாமி கோயில் (சுவாமி கும்பம் போன்றவர்[1]) குடந்தைக் காரோணத்தில் உள்ள காசி விசுவநாதர் கோயில் (சம்பந்தர்) குடந்தைக் கீழ்க் கோட்டத்தில் உள்ள கும்பகோணம் நாகேஸ்வர ஸ்வாமி கோயில் (அப்பர்) என்பன அவை.

ஐயடிகள் காடவர் கோன் குடந்தை கீழ்க் கோட்டம் இறைவன் பற்றி,

> 'பாழ்க் கோட்டம் சேராமுன் பன்மாடத் தென் குடந்தைக்
> கீழ்க் கோட்டம் செப்பிக் கிட' (2) எனப் பாடும்

தன்மையைக் காண்கின்றோம்.

இவ்வூர்ப் பெயர்க் காரணத்தை ஆராயும்போது, முதலில் குடமூக்கு என்றே வழங்கப்பட்டு, பின்னர் குடந்தை என்றும்,

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 47

இன்று கும்பகோணம் என்றும் வழங்கப்படுகிறது. இவ்வூர்ப் பெயருக்குரிய காரணங்கள் பல என்பர்.[1]

ஞானசம்பந்தரும் அப்பரும் சுட்டும் நிலையில் குடந்தை என்றும் குடமூக்கு எனவும் இரு பெயர்களாலும் வழங்கப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

*கூரார் மழுவொன் றேந்தியந்தண் குழகன் குடமூக்கில்*
*காரார்கண்டத் தெண்டோ ளெந்தை காரோணத்தாரே-72-1*
*கொடியார் விடையார் மாடவீதிக் குடந்தைக் குழகாரும்*
*கடியார் சோலைக் கலவ மயிலார் காரோணத்தாரே-72-2*

'இவற்றுள் குடமூக்கு என்ற பெயரை இடைக்காலத்திலேயே தான் காண்கின்றோம். குடமூக்கில் வைணவக் கோயில்கள் பல உள. சிறப்பு பெற்றது சாரங்கபாணிக் கோயில். பெரியாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரால் பாடல் பெற்ற கோயில் இது.

இடைக்காலத்தில் குடமூக்கு என்ற பெயர்பற்றிய எண்ணம் வரினும், 'குடந்தை' என்ற பெயரைப்பற்றிய எண்ணம் சங்க காலத்திலேயே அமைய இரு குடந்தையும் ஒன்றா வேறா என்ற எண்ணம் எழுகின்றது.[2] எனினும் இவை 'குடக்கு' என்ற திசைப் பெயர் காரணமாக எழுந்த பெயர்கள் என்பது தெளிவான ஒன்று.

---

1. நகரத்தின் மேற்குப்பகுதியாக, மேற்கு வாயிலாக இருந்தமையின் பெற்ற பெயர் என்பர். ஊழிக் காலத்தின் போது வைக்கப்பட்ட அமுத கலசத்தை — குடத்தை இறைவன் வேட வடிவு கொண்டு இங்கே வந்து அம்பினால் அடிக்க உடைந்த மூக்கின் வழியே அமிர்தம் நான்கு பக்கங்களிலும் பரந்து நிலை பெற்றதால் குடமூக்கு என்ற பெயர் பெற்றது. படைப்புக் காலத்திலேயே இறைவன் அமிர்த குடத்தில் எழுந்தருளியமையால் இறைவனுக்கு ஆதி கும்பேசுரர் என்ற பெயர் ஏற்பட்டது எனவும் தலபுராணம் கூறும்.
   தஞ்சாவூர் மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 45, 46
2. 'குடவாயில்' பார்க்க-பக்-105

## 126. குடப்பாச்சில்

குடப்பாச்சில் உறைகின்ற சிவன் பற்றிய எண்ணம் தேவாரத்தில் அமைகிறது.

குடப்பாச்சில் உறை கோக் குளிர்வானே
கோனே கூற்று தைத்தானே (15-6)

## 127. குடவாயில்

இன்று குடவாசல் எனத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது (பதி 158, 194). இன்று கும்பகோணம்-திருவாரூர் நெடுஞ்சாலையில் கும்பகோணத்திலிருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது என்ற எண்ணம் இது தொடர்பானது. குடவாயில் இன்று குடவாசல் என்று வழங்கப்படினும் சங்ககாலம் தொட்டே வழங்கிய பெயர்களாகக் குடவாயிலுடன் குடந்தைவாயில் குடந்தை என்பனவும் அமைகின்றன. திருணபிந்து முனிவர் வழிபட இறைவன் குடத்தில் இருந்து வெளிப்பட்டு அவருடைய நோயைத் தீர்த்தருளிய தலம். எனவே குடவாயில் எனப் பெயர் பெற்றது என்ற எண்ணம் அமைகிறது.[1]

குடந்தை, குடந்தை வாயில், குடவாயில் என்ற ஊர்ப்பெயர் பற்றிய எண்ணங்களுடன் குடந்தை குடமூக்கு கும்பகோணம் பற்றிய எண்ணங்களையும் இணைத்து நோக்கின் சில எண்ணங்கள் தோன்றுகின்றன.

இன்றைய குடவாயில் கும்பகோணத்தில் (குடமூக்கில்) இருந்து 10 மைல் தூரத்தில் உள்ளது ஒரு நிலை. அடுத்து இரண்டும் குடந்தை என்ற பெயர் பெறுகின்றன. சங்க இலக்கியத்தில் அமைவது குடந்தை, குடந்தை வாயில் எனவும் சுட்டப்பட்ட குடவாயில் உரையாசிரியர் அனைவரும் குடந்தை என்ற சொல்லுக்குக் குடவாயில் என்றே பொருள் கூறுகின்றார்.[2] குடமூக்கு அல்லது கும்பகோணம் என்ற பெயர்கள் சங்க இலக்கியங்களில் இல்லை. ஆயின் குடவாயிலைக் குறித்து குடந்தை என்ற பெயர்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 200
2. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் முதல்தொகுதி-பக். 110

குடமூக்குக்கு உண்டு. மேலும் 'குடவாயில்' என்பது ஒரு ஊரின் எல்லை போன்று அமைகிறது. எனவே அன்றைய நிலையில் தேர் சோழர்வண் குடந்தை வாயில் (நற் 379) என்ற எண்ணம் சோழ ரின் குடந்தைக்குரிய வாயில் என்ற நிலையில் 'குடந்தை' ஒரு பெரிய நகரமாகவும் அதன் வாயில் சிறப்புடன் திகழ்ந்தமையின் அது குடந்தைவாயில் என்றும் குடவாயில் என்றும் அழைக்கப்பட்டு இருக்கக் கூடும் என்றும் எண்ணத் தோன்றுகிறது. பின்னர், குடந்தையில் தனியே சிறந்த கோயில்கள் பல தோன்ற, குடந்தை யின் ஒரு பகுதி குடமூக்கு என்று சுட்டப்பட்டு பின்னர் கும்ப கோணமாகி விட்டது என்றும், குடந்தையின் வாயிற் பகுதி குட வாயில் குடவாசலாக இன்று திகழ்கிறது எனவும் கருத இட மேற்படுகிறது. மேற்கு வாசல் பகுதி என்பது குடவாசலுக்குரிய பொருளாக அமைய, 'குடந்தையின் மேற்கு' என்ற திசைப்பெயர் அடிப்படையில் பிறந்த ஊர் என்பது மட்டும் உறுதிப்படுகிறது. குடவாயில் என்பதற்கு வரையார் மதில் சூழ் குடவாயில் என்று சம்பந்தர் பாடும் நிலை சிறப்பாகப் பொருத்தம் காட்டுகிறது. (158-8) மேலும் 'தேர் வண் சோழர் குடந்தை (நற் - 379-7-9) என்று சோழரின் குடந்தையாகச் சுட்டும் நிலையிலும் கொற்றச் சோழர் குடந்தை வைத்த நாடு தரு நிதியினும் செறிய அருங் கடிப் படுக்குவள்; (அகம் 60-13-15); தண் குடவாயில் அன்னோள் (அகம் 44-17-19) போன்று குடந்தையுடன் தலைவியை உவமிக் கும் நிலையிலும் குடந்தை மிகச் சிறப்பானதொரு, பெரியதொரு நகரமாகத் திகழ்ந்திருக்கும் வாய்ப்பு அமையும் நிலையிலும், குடந்தை பெரியதொரு நகரமாகத் திகழ்ந்திருக்கும் வாய்ப்பு அமைகிறது. பின்னர் இதன் ஒரு பகுதி கோயில் சிறப்பால் குட மூக்கு என பெருமை பெற்றது என்பது பொருத்தமாகிறது.

## 128. குண்டையூர்

சேக்கிழாரின் பெரிய புராணம் சுட்டும் ஊர் இது (ஏயர் கோன் 10, 17, 18).

## 129. குரக்குக்கா

இன்றும் குரக்குக்கா என்றே சுட்டப்படும் இவ்வூர், இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. காவிரியின் கரையில் உள்ள தலம் இது என்பதனை அப்பர் பாடல்கள் (பதி 189) சுட்டுகின்றன.

மிக்கனைத்துத் திசையு மருவிகள்
புக்குக் காவிரி போந்த புனற்கரைக்

கொக்கிளம்பயில் சோலைக் குரக்குக்கா
நக்கனை நவில்வார் வினைநாசமே

என்ற நிலையில் அமைகின்றன. மேலும் கோல மஞ்ஞைகளா லும் குரக்குக்கா எனப் பல வளம் பற்றியும் சோலை பற்றியும் பேசும் நிலையில் குரங்குகளின் மிகுதி காரணமாக அமைந்த பெயர் இது என்பது தெளிவாகிறது. அனுமார் பூசித்த தலம் என்பது புராண எண்ணம்.[1]

## 130. குரங்கணில் முட்டம்

இன்றும் இப்பெயருடனேயே வழங்கப்படும் ஊர், வட ஆர்க் காடு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்றது இவ்வூர். குரங்கணில் முட்டம் என்ற பெயருக்கு, குரங்கு அணில் முட்டம் என்ற மூன்றும் தரிசித்த தலம் எனப் புராணக் கதை கூறுவர். எனினும் விலங்குப் பெயரால் ஊர்ப்பெயர்கள் அமைவது உண்டு என்ற பொது விதி நோக்கிப் பார்க்க, குரங்கு பெயரால் இவ்வூர், பெயர் பெற்றிருக்கலாமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

முட்டம் என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன் இடம், ஊர், காகம் என்ற முப்பொருட்களையும் தருகிறது. எனவே குரங்குகள் மிகுந்த இடம் என்ற பொருளில் குரங்கணிமுட்டம் பெயர் பின்னர், குரங்கணில் முட்டம் என்று புராணக்கதை செல்வாக் கில் திரிந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும் சம்பந் தரின் தேவாரம் இப்பகுதியை மிகவும் வளப்படுத்தும் சோலைகள் நிறைந்து இருந்ததொரு நிலையில் காட்டுவது,[2] இப்பெயர்க் காரணத்திற்குப் பொருத்தம் தருகிறது. முட்டம் என்பது பிற ஊர்ப்பெயர்களில் பொதுக்கூறாக இருப்பதும் இவண் சுட்டத் தக்கது. (இரணிய முட்டம்).

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 191
2. கோலப் பொழில் சூழ்ந்த குரங்கணின் முட்டத்
தேலங் கமழ்புன் சடை யெந்தை பிரானே— 31-3
கலவம் மயில் காமுறு பேடை யோடாடிக்
குலவும் பொழில் சூழ்ந்த குரங்கணின் முட்டம்
நிலவும் பெருமான் அடி நித்தனினைந்தே—31-6

## 131. குரங்காடு துறை

வடகுரங்காடு துறை, தென் குரங்காடு துறை என்ற இரு தலம் பற்றிய பாடல்கள் அமைகின்றன. இன்று தஞ்சை மாவட்டத்தில் காணப்படும் இரு தலங்களும் முறையே குரங்காடு துறை, ஆடுதுறை என இரண்டு பெயர்களால் சுட்டப்படுகின் றன. காவிரியின் தென்கரையில் உள்ளது தென் குரங்காடு துறை. வடகரையில் உள்ளது வடகுரங்காடு துறை. எனவே குரங்காடு துறை என்பதே இரண்டு ஊர்களுக்குமுரிய முதல் பெயர். பின்னர் தனிப்படுத்தப்பட வட, தென் அடைகள் இணைக்கப்பட்டன என்பது தெளிவு. குரங்குகளின் மிகுதி காரணமாகவே குரங்காடுதுறை என்ற பெயர் அமைந்தது. எனினும் வாலி, போன்றவர்களால் பூசிக்கப்பட்ட தலம் என்றெண்ணத்தை ஞானசம்பந்தரின் பாடல் தருகிறது.[1] எனவே அவர் காலத்திலேயே இப்புராணக் கதை மக்களிடையே செல் வாக்கு பெற்று, உண்மைக் காரணம் மறைந்துவிட்டது என்பது தெளிகிறது.

மேலும் இவ்வூரும் மிகச் செழிப்பும், சோலைகளும் சூழ்ந்த ஊராகக் காட்டப்படும் நிலையும் 'குரங்காடு துறை' என்ற பெயருக்குப் பொருத்தமாக அமைகிறது.

கோங்கமே குரவமே கொழுமலர்ப்புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்மு பாதிரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடை குரங்காடு துறை
வீங்கு நீர்ச் சடைமுடி யடிகளரிடமென விரும்பினாரே
திருஞான - 349-1

கரையார்ந்திழி காவிரிகோலக் கரை மேல்
குரையார் பொழில் சூழ் குரங்காடு துறையே
திருஞான-171-8

## 132. குருகாவூர்

இன்று திருக்கடாவூர் எனச் சுட்டப்படும் இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல்

---

1. நீலமாமணி மிடற்று அரக்கனை இருபது கரத்தொடு ஒல்க வாலினால் கட்டிய வாலியால் வழிபட மன்னு கோயில்
திருஞான 349—8

பெற்றது இத்தலம். கோயில் பெயர் வெள்ளடை. பொழில்கள் நிறைந்தது இவ்வூர் என்பதை,

விண்ணமர் பைம்பொழில் (382-1), விரை கமழ் தண்பொழில் (382-2) விளங்கிய தண்பொழில் (382-3) விரி தரு பைம்பொழில் (382-5) தேன் மலர் மேவிய தண்பொழில் (382-6) என்ற பல அடைகள் விளக்குகின்றன. எனவே குருகுகள் நிறைந்த சோலை என்ற பொருளில் குருகாவூர் எனப் பெயர் அமைந்திருக்கலாம். பொழில்களின் நிறைவைச் சம்பந்தர் தர, சுந்தரர் இங்குள்ள நீர் நிலை அழகையும் காட்டுகின்றார்,

வாவியிற் கயல்பாயக் குளத்திடை மடைதோறும்
காவியும் குவளையும் கமலஞ் செங்கழுநீரும்
மேவிய குருகாவூர் 29-2
அரும்புடை மலர்ப்பொய்கை அல்லியும் மல்லிகையும்
விரும்பிய குருகாவூர் 29-5
வளங்கனி பொழில் மல்கு வயலணிந்தழகாய
விளங்கொளி குருகாவூர் 29-10

மேலும் ஞானசம்பந்தர் தம் திருவூர்க் கோவையுள் ஊர் என்று முடியும் ஊர்ப்பெயர்களை உரைக்கின்றார் (175). அதனுள் குரு காவூர் என்பது இல்லை. எனினும் குருகாவையூர் என்ற ஒன்றைச் சுட்டுகின்றார். இரண்டும் ஒன்றாக இருக்கலாம். அழகான ஊர் என்பது 'ஐ' என்பதால் சுட்டப்பட்டிருக்கலாம்.

## 133. குருகூர்

இன்று ஆழ்வார் திருநகரி எனச் சுட்டப்படும் தலம். திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. நம்மாழ் வார் பிறந்த இடம். எனவே ஆழ்வார் திருநகரி எனப் பெயர் பெற்றது. நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் இவரது பாடல் இங் குள்ள திருமால் பற்றி அமைகிறது.

பாண்டிய நாட்டில் தாமிரபரணி நதிக்கரையில் உள்ள ஒன்பது திருமால் கோயில்களில் ஒன்று இக்கோயில். 'குருகு என் னும் சொல் தமிழில் நாரை கோழி குருக்கத்தி என்பனவற்றைக் குறிக்கும். இங்கே குருகு என்று பெயர் கொண்ட பட்சியின் பெயரால் விளங்கும் ஸ்தலமாகக் கொள்வது ஏற்புடைத்து'[1]

1. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-244

என்ற எண்ணம் பொருத்தமானது. குருகன் என்ற அரசன் ஆட்சி புரிந்த ஸ்தலம் என்ற குருபரம்பரை வரலாறும் உண்டு.[1]

## 134. குருந்தங்குடி

ஞானசம்பந்தரின் பாடலில் திருவூர்க்கோவை என்ற பதிகத்தில் (175-10) குடி என்ற தலப்பெயர்களைத் தரும் நிலையில் இப்பெயரும் இடம் பெறுகிறது.

குருந்து என்ற மரம் சங்க நூல்களிலேயே சுட்டப்படும் ஒன்று. இதன் பூ நறுமணமுடையது. எனவே இதனைத் தலையில் அணியும் நிலையையும் காண்கின்றோம்.

குருந்தங்கண்ணிக் கோவலர்
பெருந் தண்ணிலைய பாக்கமு முடைத்தே - ஐங்குறு—439

இவற்றை நோக்க, குருந்த மரங்கள் நிறைந்த பகுதியில் உள்ள மக்கள் வாழ் குடியிருப்பு என்ற நிலையில் இவ்வூர்ப் பெயர் அமைந்தது எனக் கருதலாம். 'புனல் சூழ் குருந்தங்குடி' என்று இவ்வூரின் நீர்வளம் மட்டும் சுட்டுகின்றார் சம்பந்தர். இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 'குருந்தங்கோடு' என்றதொரு ஊர்ப்பெயர் இதனைப் போன்று அமைகிறது.

## 135. குளந்தை

நம்மாழ்வார் பாடல் வழித் தெரியவரும் வைணவத்தலம். இன்று 'பெருங்குளம்' என்று அழைக்கப்படும் ஊர்.

'மாடக்கொடி மதிள் தென் குளந்தை
வண்குடபால் நின்ற மாயக்கூத்தன்'

என்பது நம்மாழ்வார் குறிப்பு (2868) 'குளத்தின் சிறப்பு காரணமாகப் பெற்ற பெயராக' இருக்கலாம்.

## 136 குற்றாலம்

இன்றும் குற்றாலம் என்றே வழங்கப்பட்டு வரும் ஊர் பாண்டியநாட்டில்.திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்றது இத்தலம். திருநாவுக்கரசர்,

---

1. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-244

மாணிக்கவாசகர்[1] பட்டினத்தார் போன்ற பிறரும் இத்தலத்து இறையைப் புகழ்கின்றனர். குருமணிகள் வெயிலெறிக்கும் குற்றாலம் எனப்பாடுகின்றார் சேக்கிழார் (கழறி-106).

சம்பந்தர் தம் ஒவ்வொரு பாடலிலும் குற்றாலத்தின் இயற்கைவளத்தைக் காட்டுகின்றார். இன்றும் இவ்வளத்தை நாம் நேரிடையாகக் காணமுடிகிறது.

வம்பார் குன்றந் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டி யாழ் செய்குற்றாலம்
99-1

செல்வ மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்பீனும் குற்றாலம் 99-3
பக்கம் வாழைப் பாய்கனியோடு பலவின்றேன்
கொக்கின் கோட்டுப்பைங்கனி தூங்கும் குற்றாலம் 99-4

ஒரு ஊரின் பல பெயர்கள் அவ்விடத்தின் பெரும் சிறப்புக்குச் சான்று பகர்கின்றன என்ற ஊர்ப்பெயர் ஆய்வு உண்மைக்கு, குற்றாலம் பற்றிய 21 பெயர்களும் ஒரு சான்றாகின்றது. குறும்பலா தான் இங்குள்ள தலவிருட்சம் எனினும் கோயில் பெயர் 'குற்றாலம்' என்று அமைகிறது.

''குற்றாலம் என்னும் ஒருவகை ஆலமரத்தைத் தல விருட்சமாக உடைமையால் இப்பெயர் பெற்றது'' ''குறும்பலா என்னும் ஒருவகை மரத்தைத் தலவிருட்சமாக உடைமையால் அம்மரத்தாலேயே இக்கோயில் குறும்பலா என்றும் பெயர் எய்திற்று'' என்ற கருத்தும்,[2] அமைகிறது. மேலும்

---

1. குற்றலத்தெம் கூத்தா போற்றி - திருவா- போற்றி - 150
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா உன் குரை
கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே
திருவா.

2. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்.73

திரிகூடமலை — மூன்று சிகரங்களையுடைய மலை காரணமாக அமைந்த பெயர்.[1]

செண்பகக்கா — மலையில் செண்பக மரங்கள் மிகுதி காரண மாகப் பெற்ற பெயர்.[2]

குற்றாலம் — இறைவன் குற்றாலம், கோவிதாஸ், சமருகம் என்ற பெயருடைய ஆத்தி மர நிழலிலே எழுந்தருளி இருத்த லால் அம்மரத்தின் பெயரே தலத்தின் பெயர் ஆயிற்று.[3]

குறும்பலா — குறும்பலாவின் அடியின் ஈசன் கோயில்.[4]

எனப் பல நிலைகளில் குற்றாலம் பெயர் பெற்ற நிலையை அறிய இயலுகிறது. இதனை நோக்க, ஒரு இடத்தின் பல சிறப்புகளும் பல பெயர்களை அந்தந்த குறிப்பிட்ட இடத்திற்கு அளிக்க, இறுதியில் அவ்வனைத்துப் பெயர்களும் அந்த ஊர் முழுமையும் குறிக்கும் நிலை, ஊர்ப்பெயர்களின் ஒரு வகை முறை எனல் பொருந்தும்.

இதன் 21 பெயர்களாக, மது உண்டான் உயிர் மீட்ட புரம், பிதுர் கண்டன் தீர்த்த புரம், பவர்க்க மீட்டபுரம், வேழம் பூசித்த புரம், வேடன் வலம் செய்த புரம், சிவத் துரோகம் தீர்த்தபுரம், வசந்தப் பேரூர், கங்கை வந்த புரம், நதி முன்றில் மாநகரம், முனிக்குருகும் பேரூர், குறும்பலா வேத சக்தி பீட புரம், ஞானப்பாக்கம், நன்னகரம், திருநகரம், விசேடபுரம், சிவ முகுந்தபுரம், முத்துவேலி, புடார்ச்சுனம், தேவகூடபுரம் என்பவற்றைத் திருக்குற்றலத் தலவரலாறு தருகிறதாகக் காண் கின்றோம்.[5] இங்குக் குற்றாலம், திரிகூடமலை போன்ற பெயர் களைக் காண இயலவில்லை. எனவே, பிற்காலப் புராணக் கதை களின் இணைப்பாக இவற்றைக் கொள்ளலாம். திருக் குற்றாலத் தல வரலாறு நூல், குற்றாலம் என்ற பெயர் வந்த காரணம் என, திருக்குற்றாலத்தில் முழு முதலிறைவன் உமா தேவியினிடத்து உலகமெல்லாம் உண்டாவதற்குக் குற்றாலம் கோவிதாரம் சமருகம் என்ற மூன்று பெயருடைய வரையாத்தி மரநிழலிலே எழுந்தருளி இருத்தலால் அம்மரப் பெயரில் ஒன்றாகிய குற்றாலம் என்பது

---

1—4 வேங்கடம் முதல் குமரி வரை-IV-பக்-154 55

5. திருக்குற்றால தலவரலாறு—பக்-41, 42

குற்றால மலையின் பெயராகி, பின் இறைவன் பெயராகி, பின் இத்தலத்துக்கும் மக்களுக்கும் பெயருமாயிற்று.

### 137. குறுக்கை

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து இவ்வூர் அமைகிறது. அட்ட வீரட்டத் தலங்களுள் காமனை எரித்த தலமாதலின் திருக் குறுக்கை வீரட்டம் என்று வழங்குகிறது என்ற எண்ணம் உண்டு.[1] அப்பர் இக்கோயில் இறைவனை அடைவுத் திருத் தாண்டகம் என்ற பகுதியுள் பாடுகின்றார். வீரட்டம் என்ற முடிவு கொண்ட தலப்பெயர்களைச் சுட்டும்போது, 'குறுக்கை வீரட்டத்தையும்' சுட்டுகின்றார். எனவே வீரட்டம் கோயில் என்பதும், குறுக்கை என்பதே ஊர்ப்பெயர் என்பதும் தெளிவாகிறது. இதனையே சேக்கிழாரும் 'குறுக்கைப் பதி' என்று அமைக்கின்றனர் 'குறுக்கைக் குடி' என்றதொரு குடிப் பெயர் அமைகிறது. சங்க இலக்கியத்தில் அதுவே இப்பெயர்க் காரணம் எனலாம் (34-288).[2] குறுக்கை என்னும் ஒரு வகைத் தாவரம்[3] பற்றிய எண்ணம் அதுவே இப்பெயருக்குரிய காரணமோ என்ற எண்ணம் எழுப்புகிறது. மேலும், கடுக்கா மரம் தலவிருட்சமாதலின் கடுவனம், இறைவன் அம்மை யாரைப் பிரிந்து யோகஞ் செய்த இடம் காரணமாக யோகீசபுரம், காமனைத் தகித்த இடமாதலின் காமதகனபுரம், இலக்குமி யினது நடுக்கத்தைப் போக்கியதால் கம்பகரபுரம்; தீர்க்கலாகு முனிவர் இத்தலத்து இறைவனை அபிடேகித்ததற்குக் கங்கா நீரினை விருப்பித் தமது கரங்களை நீட்டக் கரங்கள் நீளாது குறுகினமையால் குறுக்கை எனவும் பெயர்கள் வழங்கப்படு கின்றன.[4]

### 138. குறுங்குடி

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளதொரு ஊர். திருமால் கோயில் சிறப்பு பெற்றது. பெரியாழ்வார், திருமழிசை ஆழ் வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் பாடல்கள் பெற்ற

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக்-189
2. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-பக்-114
3. திருநாவுக்கரசு நாயனார் அருளிச்செய்த தேவார திருப்பதிகங்கள் - பக்-81
4. „ „ 81

தலம் இது. 'குறளன் தோன்றிய தலம் தான் குறுங்குடி. குறுகிய வடிவினனான வாமனன் பிறந்த குடியே குறுங்குடி என்றாகிறது. வாமன க்ஷேத்திரம் என்று பெயர் பெறுகிறது'[1] என்ற எண்ணம் இவ்வூர் பற்றி அமைகிறது. எனினும் இவ்வூரில் வைணவக் கோயில் சிறப்பு பெற்ற பின்பு ஏற்பட்ட புராணக் கதை மூலம் இப்பெயர் பெற்றது இவ்வூர் என்பதை விட, குறுகிய அல்லது சிறிய குடியிருப்பு பகுதி என்று நிலையில் இப்பெயர் அமைந்த தாக இருக்கலாம் என்பது மேலும் ஆய்வுக்குரியது.

கரண்டமாடு பொய்கையுள் கரும்பனைப் பெரும்பழம்
புரண்டு வீழ வாளை பாய் குறுங்குடி -திருமழி-813

கோலமயில் பயிலும் புறவில் குறுங்குடி —(திருமங்-1790)

சிரமுன் ஐந்தும் ஐந்தும் சிந்தச் சென்று அரக்கன்
உரமும் கரமும் துணித்த வுரவோன் ஊர்போலும்
இரவும் பகலும் ஈன் தேன் முரல, மன்றெல்லாம்
குரலின் பூவே தான் மணம் நாறும் குறுங்குடியே
—திருமங்-1801

குளனார் கழனிசூழ் கண்ணன் குறுங்குடி-நம்-2393

## 139. குறும்பொறையூர்

சேக்கிழாரின், புகழ்ச் சோழநாயனார் வரலாற்றின் வழி தெரியவரும் ஊர் குறும்பொறையூர்,

வடிவேலதிகன் படை மாளவரைக்
கடி சூழரணக் கணவாய் நிரவிக்
கொடிமாமதில் நீடுகுறும் பொறையூர்
முடி நேரியனார் படை முற்றியதே - 47-27

## 140. குன்றியூர்

ஞானசம்பந்தரின் திருவூர்க் கோவையுள் இடம்பெறும் ஒரு ஊர். (175) சிவன் கோயில் தலம் என்பது வெளிப்படை. நீரூர் வயனின்றியூர் குன்றியூரும் என இவர் இவ்வூரைக் குறிப்பிடுகின்றார். 'குன்றி' மரம் காரணமாகப் பெற்ற பெயராக இருக்கலாம்.

1. வேங்கடம் முதல் குமரி வரை IV பக். 234

**141. கூடலூர்**

ஆடுதுறைப் பெருமாள் கோயில் எனச் சுட்டப்படும் தலம், தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. திருமால் கோயில் உள்ள ஊர். 'தேவர்கள் கூட்டமாகக் கூடி இத்தலத்து எம்பெருமானை வணங்கி வாழ்த்தியமையால் இத்திருத்தலம் கூடலூர் என்று திருநாமம் பெற்றதாகக் கூறுவோர் பெரியோர்'.[1] திருமங்கை ஆழ்வார் பாடல்கள் இத்தலத்து இயற்கைச் செழிப்பைத் தரு கின்றன.

கள்ள நாரை வயலுள், கயல்மீன்
கொள்ளை கொள்ளும் கூடலூரே—நாலா-1360
வண்டலலையுள் கெண்டை மிளிர
கொண்டல் அதிரும் கூடலூரே— ,, - 136
எக்கலிடு நுண்மணல் மேல் எங்கும்
கொக்கின் பழம் வீழ் கூடலூரே — ,, - 1363

கூடலூர் என்ற பல பெயர்கள் அமையும்போது 'கூடும்தன்மை' அமைவதைக் காண்கிறோம். ஆறுகள் கூடுமிடம் என்ற நிலையில் இப்பெயர் அமைந்திருக்கக் கூடும் என்ற எண்ணம் 'ஆடுதுறை' என்ற இன்றைய பெயரினைக் காண எழுகின்ற ஒன்று.

**142. கூடலையாற்றூர்**

இன்றும் கூடலையாற்றூர் என்றே சுட்டப்படும் இவ்வூர் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது 'மணி முத்தாறு நதியும், வெள்ளாறும் கூடுமிடத்தில் கோயில் உள்ளது. என்னும் எண்ணம்[2] இப்பெயரின் காரணத்தையும் சுட்டிவிடு கின்றது. 'ஆறுகள் கூடும் இடம்' என்ற பொருள் கூட்லை யாற்றூருக்குப் பொருத்தமாக அமைகிறது.

'தம்பிரான் அமர்ந்த தானம் பலபல சார்ந்து
கொம்பனார் ஆடல் நீடு கூடலையாற்றூர் சார' (ஏயர்-100)

என சேக்கிழாரின் பெரியபுராணம் சுட்டும் இவ்வூர் சிவன் பற்றி சுந்தரர் பாடல்கள் அமைகின்றன. இவ்வூர் மிகவும் செழிப்பு

---

1. சோழநாட்டுத் திருப்பதிகள்-பக். 214
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக்-62

கொண்டது என்பதனைச் சுந்தரர் பாடல்கள் தெரிவிக்கின்றன. (85)

கொடியணி நெடுமாடக் கூடலையாற்றூர் - 85-2
கொய்யணி மலர்ச் சோலைக் கூடலையாற்றூர்-85-3
கொந்தணவும் பொழில் சூழ் கூடலையாற்றூர்-85-4
கோதிய வண்டறையும் கூடலையாற்றூர்-85-5
கொத்தலரும் பொழில் சூழ் கூடலையாற்றூர்-85-6

போன்ற சில இக்கருத்தின் விளக்கமாக அமைகின்றன.

143. கூரூர்

ஞானசம்பந்தரின் திருவூர்க் கோவை சுட்டும் ஊர்ப்பெயர், நல்ல கூரூர் (175-1)

144. கைச்சினம்

கச்சினம் என்று இன்று வழங்கப்படும் ஊர். தஞ்சை மாவட்டத்தில் அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்றதலம். இந்திரன் மணலால் இலிங்கம் அமைத்து வழிபட்டு அதை அப்புறம் எடுத்து வைககும் போது அவன் கை அடையாளம் சுவாமி மீது படிந்தது எனவே கைச்சின்னம் எனப் பெயர் பெற்றது என்பது இப்பெயர் குறித்த எண்ணம். தற்போது கச்சினம் என வழங்கப்படுகிறது[1] என்ற கருத்து இவ்வூர் பற்றி அமையக் காண்கின்றோம். எனினும் இடைக் காலத்திலேயே கச்சினம் என்ற பெயரினைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. இக்கோயிலில் அமையும் கல்வெட்டுகள் இவ்வூர்ப்பெயரினை முதலில் கச்சினம் என்றும் பின்னர் கச்சினப்பற்று என்றும் சுட்டுகின்றன[2] எனவே 'கைச்சினம்' என்ற இறைபற்றிய

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 317
2. இவ்வூர் இரண்டாம் இராசாதிராசன் கல்வெட்டில் இராசேந்திசோழ வளநாட்டு ஆர்வலக் கூற்றத்துக் கச்சினம் எனவும், விசயநகர பரம்பரை வீரப்பண்ண உடையார் கல்வெட்டில் இராசேந்திரசோழ வளநாட்டு வடக்கால் வெண்டாழை வேளூர்க் கூற்றத்துக் கச்சினப் பற்று எனவும் குறிக்கப் பெற்றுள்ளது.

   திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 78

எண்ணம் காரணமாக உண்டான பெயர் பின்னர் கச்சினம் என்று ஆயிற்றா அல்லது கச்சினம் என்ற பழைய பெயர் இடையில் கைச்சினம் என்று ஆயிற்றா எனப் பார்க்க, எளிமைப்படுத்துதல் மக்கள் வழக்கில் பொதுவான நிலை என்ற நிலையில் காண, கைச்சினமே முதல் பெயர் பின்னர் கச்சினம் என்று ஆயிற்று எனக் கொள்ளலே பொருத்தமாகிறது. கைச்சினம் பற்றிய வேறு காரணங்கள் அறியக் கூடவில்லை. எனவே பிறவிளக்கமும் தெளிவுறவில்லை.

கண்ணுதலான் மேவியுறைகின்ற கோயில் கைச்சினம்
(181-9)

என்பது மட்டுமே சம்பந்தர் பாடல் தரும் விளக்கம்.

**145. கொட்டையூர்**

திருநாவுக்கரசர் பாடல் பெற்ற தலம். இன்றும் கொட்டையூர் என்றே சுட்டப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. ''ஆமணக்குச் கொட்டைச் செடியின் கீழ் இலிங்கம் வெளிப்பட்டதனால் ஊர்ப்பெயர் கொட்டையூர் ஆயிற்று. சோழ மன்னனுக்குக் கோடி லிங்கமாகக் காட்சி தந்ததனால் கோடீச்சரம் என்ற பெயர் கோயிலுக்கு அமைகிறது.''[1] என்ற எண்ணம் இப்பெயர்க் காரணத்தைத் தருகிறது. இந்த ஊர்ச்செழிப்பையும் மக்கள் வாழ் நிலையையும் தருகின்றார் நாவுக்கரசர்.

குலைத் தெங்கம் சோலை சூழ் கொட்டையூரிற்
கோடீச்சரத் துறையும் கோமான் றானே 287-2
குணமுடை நல்லடியார் வாழ் கொட்டையூர் 287-7
கொண்டாடு வேதியர் வாழ் கொட்டையூர் 287-10

இங்குள்ள கோயிலைக் கோட்டீச்சுரம் என்றனர். இதனையே திருநாவுக்கரசர் 'நன் கான கோடீச்சுரம் (258-8)' என்று குறிக்கின்றாரோ எனத் தோன்றுகிறது,

**146 கொடிமங்கலம்**

கொடிமங்கலம் என்ற ஊரினைத் திருவாசகம் குறிப்பிடுகிறது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 198

## 147. கொடிமாடச் செங்குன்றூர்

இன்று சேலம் மாவட்டத்தைச் சார்ந்து அமையும் தலம். திருச் செங்கோடு என்று வழங்கப் பெறுகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது. மலையின் சிவப்பு நிறம் காரணமாக இப் பெயர் அமைந்தது என்பர்.

*கொந்தணவும் பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற*
*அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே*

திருஞான-107-1

மேலும் சிவபெருமான் திருவந்தாதியில் இவ்வூர், சிவன் மேய செங்குன்றூர் என்றும் (95) எனவும், கொண்டல்பயில் நெடும் புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர் என, பெரிய புராணத்திலும் அமைகிறது. இக்குன்றிலிருந்து பார்த்தால் காவிரியாறு தெரியும் என்ற எண்ணத்தை,

'தெண்திரை நீர்த்தடம் பொன்னித் தடம்
கரையாங் கொங்கினிடை
வண்டலைலையும் புனற் சடையார் மகிழ்
விடங்கள் தொழுதணைந்தார்
கொண்டல் பயில் நெடும்புரிசைக் கொடிமாடச்
செங்குன்றூர்'

என்ற சேக்கிழார் கருத்துடன் ஒப்பிட்டு நோக்கலாம். 'செங்குன் றூர்' என்ற மலைநாட்டு வைணவத் தலம் அன்று சிறப்புற்றிருந் தது என அறியும்போது, அந்தச் செங்குன்றூரினின்றும் இதனைத் தனிப்படுத்த, இதனைக் கொடிமாடச் செங்குன்றூர் எனச் சுட்டினரோ எனத் தோன்றுகிறது.

நம்பியாண்டார், 'நீடு தென்றல் வீசும் பொழில் திருச் செங்குன்றம் மேய விறன் மண்டலனே' எனப்பாடும் நிலை (திருத்தொண்டர்-6) திருச்செங்குன்றமே குன்றூர் ஆகியதோ என்ற எண்ணத்தை எழுப்புகிறது.

நாகவடிவாக இம்மலை இருப்பதால், 'நாககிரி' என்ற பெயரும் இதற்கு அமைகிறது.[1]

## 148. கொடுங்குன்றம்

இன்று பிரான் மலை என வழங்கும் பகுதி இராமநாதபுர மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம், பெயரிலேயே காரணத்தையும் கொண்டு அமைகிறது. வளைந்த மலைப்பகுதி காரணமாக இப்பெயர் அமைந்திருக்கக் கூடும். பாரிவள்ளலின் பறம்பு மலையே இது என்பர்.[2] பறம்பு மலை என்ற பெயரே பிரான் மலை ஆகிவிட்டதோ எனத் தோன்றுகிறது. பாடல் பெற்ற கோயில் மலையடிவாரத்தில் உள்ளது. மலைமீதும் மற்றொரு கோயில் உள்ளது எனக் காண்கின்றோம்.[3] இம்மலையின் சிறப்பு ஞானசம்பந்தர் பாடல்கள் முழுவதும் மணக்கிறது குன்றம் என்ற பகுதியின் வளம் சிறப்பாக இவண் தெரிகிறது.

வானிற் பொலிவெய்தும் மழை மேகம் கிழித்தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற் கொடுங்குன்றம் - 14-1
மயில் புல்கு தண்பெடையோடு உடனாடும் வளர்சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலை கொடுங்குன்றம் - 14-2

'சாரல்' என்ற சொல்லினின்றும் மலைப்பக்கத்தில்இருந்த ஊர் என்பது தெளிவாகிறது. முதலில் திருக்கொடுங்குன்றம் என்று சுட்டப்பட்ட தலம், விஜய நகராட்சியில் பிரான் மலைச் சீமை என வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.[4]

## 149. கொடும்பாளூர்

கொழுந்துணர் கோதிக் கொண்டு குயில்நாடு கோனாடு
குருகுறங்கும் கோனாட்டுக் கொடிநகரம் கொடும்பாளூர்-1, 2

---

1. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு—5 பக்-24
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-324
3. ,, ,,
4. பாண்டி நாட்டுத் தலங்கள்—பக்-98

என, பெரியபுராணம் இடங்கழி நாயனார் புராணத்தில் இவ்வூர்ப் பெயரைச் சுட்டுகிறது.

## 150. கொள்ளம்பூதூர்

இன்றும் இப்பெயரிலேயே தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர். ஞானசம்பந்தர் இவ்வூரினை,

கொட்டமேகமழும் கொள்ளம்பூதூர் (264-1)
கோட்டக்கழனிக் கொள்ளம்பூதூர் (264-2)
குலையினார் தெங்கு சூழ் கொள்ளம்பூதூர் (264-3)
குவளை கண் மலரும் கொள்ளம்பூதூர் (264-4)
கொன்றை பொன் சொரியும் கொள்ளம்பூதூர் (264–5)
ஓடம் வந்தணையும் கொள்ளம்பூதூர் (262-6)
ஆறு வந்தணையும் கொள்ளம்பூதூர் (264-7)
குரக்கினம் பயிலும் கொள்ளம்பூதூர் (264-8)
பருவராலுகளும் கொள்ளம்பூதூர் (264-9)
நீரகக் கழனிக் கொள்ளம்பூதூர் (264-10)

என அதன் நீர்வளம் நிலவளம் சுட்டிப்பாடுகின்றார். எனவே ஆற்றின் கரையில் உள்ள தலம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் ஆசிரியர் இது செய்யாற்றின் கரையில் உள்ளது (பக்-340) என்கின்றார். ஊர்ப்பெயர் பற்றிய பிற எண்ணங்கள் தெளிவுறவில்லை. எனவே வெள்ளம் புதூர் என்ற பெயரே 'கொள்ளம் பூதூர்' எனறு ஆயிற்றோ என்ற எண்ணம் எழுகிறது. திருநாவுக்கரசர் தேவாரமும் (516-1) இவ்வூர் பற்றிச் சுட்டுகிறது.

## 151. கோகழி

கோகழி யாண்ட குருமணியைத் தம் திருவாசகத்தில் மிகுதியாகப் போற்றிப் பாடுகின்றார் மாணிக்கவாசகர். கோகழியாண்ட கோவே போற்றி எனப் போற்றித் திரு அகவலில் பாடுகின்றார். (157) கோகழி என்ற ஊர் திருப்பெருந்துறை என்ற பெயரையும் உடையது.

சீரார் பெருந்துறை—திரு-சிவ-15
திருவார் பெருந்துறை—திரு-கீர்த்-54-55
தென்னன் பெருந்துறை—திரு-திருபொற்-9-2

தென்னன் பெருந்துறை என்ற சொற்றொடர், இது பாண்டி நாட்டைச் சார்ந்தது என்பதைத் தெரிவிக்கும்.

ஆவுடையார் கோயில் என்றும் காளையார் கோயில் என்றும் சுட்டப்படும் தலம் மாயவரம்-காரைக்குடி புகை வண்டிப் பாதையில் உள்ள அறந்தாங்கி ரயில் நிலையத்தில் இருந்து ஒன்பது மைல் தூரத்தில் விளங்குகின்றது. மாணிக்கவாசகர் இதனைச் சிவபுரம் எனவும் குறிப்பிடுகின்றார். இதற்கு, மேலும் அநாதி மூர்த்தி தலம், ஆதி கயிலாயம், உபதேசத் தலம், குருந்த வனம், சதுர்வேத புரம், ஞானபுரம், திரிமூர்த்திபுரம், தட்சிணக் கயிலைபுரம், தென்கயிலை, யோகவனம், யோகபீடபுரம் எனப் பிற பெயர்களும் அமைகின்றன.[1] மாணிக்கவாசகர் பல இடங்களில் குறிப்பிடும் 'கோகழி என்பது திருப்பெருந் துறையையே என்பது மு. அருணாசலம் அவர்கள் கருத்து. இவர் பிறர் கூறும் பல பொருள்களையும் ஆய்ந்து இம் முடிவினை வழங்குகின்றார்[2]. பெருந்துறை ஊரைக் குறிப்பது என்பதும் அங்குள்ள கோயிலே கோகழி என்பதும், குருந்த மரத்தின் கீழ் சிவன் என்ற பொருள் இதற்கு என்பதும் இவரது எண்ணங்கள்.

## 152. கோட்டாறு

இன்று கொட்டாரம் என்று வழங்கப்படும் ஊர். காவிரியின் தென்கரையில் சிறப்புற்ற ஊர் இது. வெள்ளையானை பூசித்து பேறு பெற்ற தலமாக இதனை, ஞானசம்பந்தர் பாடுகின்றார்.[3] இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாற்றங்கரையில் உள்ளதொரு இடம் 'கோட்டாறு' எனப் பெயர் அமைவது போன்று இதுவும் காவிரிக்கரையில் அமைந்த நிலையில் இப் பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 153. கோட்டியூர்

இராமநாதபுரத்தைச் சார்ந்து அமையும் ஊரான இதனை நாலாயிரத் திவ்விய பிரபந்தம் சுட்டுகின்றது. எனவே வைணவ சமயப் புகழ் பெற்றது என்பது தெளிவு. பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் பாடல் பெற்றது இத்தலம், 'ஹிரண்யனை' ஒழிப்பதற்

1. புனித கோயில்களும் புண்ணிய தீர்த்தங்களும்-பக். 320
2. திருவாசகம்-ஆராய்ச்சிக் குறிப்புகள்-பக். 30
3. நின்று மேய்ந்து நினைந்து மாகரி நீரொடும் மலர்
   வேண்டி வான் மழை
   குன்றினேர்ந்து குத்திப் பணி செய்யும் கோட்டாறு
   (188-2)

குத் தேவர்கள் கோஷ்டியாக ரஹஸ்ய ஆலோசனை செய்த இடம் கோஷ்டியூர்' என்ற எண்ணம் அமைகிறது[1].

'செந்நெலார் வயல் சூழ் திருக் கோட்டியூர்
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை'யைப் (2-10)

பெரியாழ்வார் திருமொழி சுட்டுகிறது. திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி இவ்வூர் வளம் பற்றிக் காட்டுகிறது.

பொங்கு தண்ணருவி பதம் செய்யப்
    பொன்களே சிதறும் இலங்கொளி
செங்கமல மலரும் திருக் கோட்டியூர் -1838
    நாறு சண்பக மல்லிகை மலர் புல்கி
இன்னிள வண்டு நன்னறுந்
    தேறல் வாய் மடுக்கும் கோட்டியூர் -1841

பாண்டிய நாட்டுத் தலங்களுள் மிகச் சிறந்ததாக இத்தலம் கருதப்படுகிறது. கோடு—கொம்பு என்ற நிலையில் வளம் குறித்து எழுந்த பெயராகவும் இது அமையலாம். அல்லது வளைந்த அமைப்பு குறித்தும் பெயர் பெற்றிருக்கலாம்.

## 154. கோட்டூர்

தஞ்சை மாவட்டத்தில் அமையும் ஊர். ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம். இரண்டு சிவன் கோயில்கள் கொண்ட ஊர்.

கருவூர்த் தேவரும் திருவிசைப்பா இது குறித்துப் பாடியுள்ளார்.

...துன்று பைம் பொழில்கள் சூழ்ந்த ழகாய
கோல மாமலர் மணங்கமழ் கோட்டூர் நற் கொழுந்தே

என, ஞானசம்பந்தரின் தேவாரப் பாடலைக் காணும்போது அழகிய கொடிகள் படர்ந்த இவ்வூர்ச் செழிப்பு காரணமாகக் கோட்டூர் என்று பெயர் பெற்றிருக்கலாமோ எனத் தோன்றுகிறது. சேக்கிழார், 'செம்பொன் மதில் கோட்டூர்' என இதனைச் சுட்டுவர் (34. 574). கல்வெட்டுகளும் இவ்வூரைக் கோட்டூர் என்றே குறிப்பிடுகின்றன.

---

1. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்—பக்-839

## 155. கோடி

குழகர் கோயில் என்று இன்று சுட்டப்படும் இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. கோடிக் குழகர் என்ற சுந்தரர் பாடல் நிலையினின்றும்[1] 'கோடி, என்பது இடம் என்பதும் 'குழகர்' என்பது சிவன் பெயர் என்பதும் தெளிவாக அமைகிறது. எனவே 'குழகர்' என்ற இறைச்சிறப்பே 'குழகர் கோயில்' என்ற இன்றைய பெயருக்குக் காரணமாக அமைகிறது எனலாம். 'கோடிக்கரை' என்ற இத்தலம் கடற்கரை ஓரமாக அமைந்த காரணமே 'கரை ஓரம்' என்ற பொருளில் ஊர்ப் பெயர் எழக் காரணமாக அமைந்திருக்கிறது.

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தாற் குற்றமாமோ' சுந்—32–1

என்ற பாடல் கடற்கரை சார்ந்த இவ்விடம் பற்றிய எண்ணம் தருகிறது.

## 156. கோடிகா

திருக்கோடிகா என்று வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.[2] சோலையின் இறுதி அல்லது இறுதியில் உள்ள சோலை என்ற பொருளில் இப்பெயர் அமைந்திருக்கலாம்.

சம்பந்தரும், திருநாவுக்கரசரும் இங்குள்ளக் கோயில் இறையைப் பரவுகின்றனர்.

கோடிகாவுடைய கோவே எனத் திருநாவுக்கரசர் பாட (51) கொந்தணிகுளிர் பொழிற் கோடிகா என (235-10) சம்பந்தர் பாடுகின்றார்.

திருவிடை மருதூருக்கு அப்பால் ஆற்றுக்கு அப்பால் உள்ளது[3] என்ற எண்ணம் இதன் செழிப்பையும் சோலையையும் நம் கண்முன் கொணர்கிறது.

'பருக்கோடி மூடிப்பலர் அழா முனம்
திருக்கோடிகா அடை நீ சென்று' (6)

என்பது ஷேத்திரக் கோவை வெண்பா.

---

1. குன்றாப் பொழில்சூழ் தரு கோடிக் குழகா 32-1
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் —பக்-21
3. ,, ,, —பக்-192

கல்வெட்டுகள் கோடிகா என்ற பெயரைக் குறிப்பிடுகின்றன. மேலும் 'திருக்கோடிகாவாகிய கண்ணமங்கை' என்ற குறிப்பு, கண்ணமங்கை என்ற பெயரையும் சுட்டுகிறது.[1]

கிருஷ்ணர் கோயில் கொண்ட எட்டு ஊர்களுள் ஒன்று திருக் கண்ணமங்கை. திருமங்கை ஆழ்வார் பாடல் பெற்ற தலம் இது. கழுநீர் மலரும் வயல் கண்ணமங்கை. (1643) கருநெல் சூழ் கண்ணமங்கை (1848) போன்ற பல எண்ணங்கள் கண்ண மங்கையின் செழிப்பு பற்றி அமைகின்றன. மேலும் கண்ண மங்கை நகராளன் (2008) கணமங்கை (3775-71) என, பிற, பெயர மைப்புகளும் தெரிய வருகின்றன. தஞ்சை மாவட்டத்தில் திருவா ரூருக்கு அருகில் இருக்கும் இத்தலம், திருக்கண்ணமங்கை என்று வழங்கப்படுகிறது என்ற எண்ணம் இது தொடர்பானது.

'மங்கலம்' என்ற பெயர் விகுதியை, பொதுக் கூற்றினைச் சங்க இலக்கியம் முதற்கொண்டே காண்கின்றோம். 'மங்கலம்' என்ற கூறு, 'மங்கை' என்று மருவி வழங்கும் நிலையை அதி யரைய மங்கலம் அதியரைமங்கை என்றாகிப பின்னர், அப்பெய ரும் மருவி அதிகை என மருவியதில் கண்டோம். அந்நிலையில் இப்பெயரும் 'கண்ணமங்கலம்' என்றிருந்து பின்னர் கண்ண மங்கை என்று திரிந்திருக்க வாய்ப்பு அமைகிறது. மேலும், 'மங்கலம்' என்று மட்டும் பெயர் வைத்தல் காணப்படவில்லை. எனவே கண்ணன் கோயில் கருதி 'கண்ணன்மங்கலம்' என்று பெயர் சூட்டிய பின்னர், இடைக்காலத்திலேயே 'கண்ணமங்கை' என்று மருவி இருக்கலாம் எனத் தோன்றுகிறது இந்நிலையில் கோடிகா, கண்ணமங்கலம் இரண்டும் ஒரே ஊர்க்குரிய பெயர் களாக அமைகின்றன.

## 157. கோத்திட்டைக்குடி

'கோத்திட்டைக் குடி' என்ற ஊர் இறைப்பற்றி சுந்தரர், திருநாவுக்கரசர் பாடல குறிப்பிடுகின்றது.

---

1. திருஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரத் திருப் பதிகங்கள்—பக்-78

கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீர்
சுந்—2-1

கோத்திட்டைக் குடி வீரட்டானம் இவை கூறி
திருநா—285-2

திட்டு என்பது மேட்டைக் குறிக்கும் நிலையில் மண்மேடான பகுதி காரணமாக இப்பெயர் அமைந்திருக்கலாம்.

## 158. கோலக்கா

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமையும் ஊர். சீர்காழிக்கு 1½கி.மீ. தொலைவில் உள்ள தலம்[1] எனக் காண கோயில் அமைந்த இடம் 'கோலக்கா' என்று சுட்டப்பட்டது என்பது தெரிகிறது. மேலும் இன்று கோயில் பெயரால் திருத்தாளமுடையார் கோயில்[2] என்றே இவ்விடத்தைக் சுட்டும் தன்மை கோயில் செல்வாக்கு பெற்று திகழ்ந்தமைக்குச் சான்று. அழகிய சோலைகளின் காரணமாக இப்பெயர் அமைந்திருக்கலாம். சேக்கிழார் கூறும் இவ்விடத்தின் அழகினைத் தரும் நிலையில் அமைகிறது.

பெருங் கோலிட் டலை பிறங்கும் காவிரி நீர் பிரசமலர்
தரளம் சிந்த
வரிக் கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர்
வாவித்
திருக் கோலக்கா எய்தி (34-101)

ஞானசம்பந்தர் இத்தலத்தை,

'மடையில் வாளைபாய மாதரார் குடையும் பொய்கைக்
கோலக்கா' (23-1)

எனப்பாடுகின்றார். சுந்தரர்,

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-25
2. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருமுலைப்பால் உண்டருளிய மறுநாள் இத்தலத்திற்கு எழுந்தருளிக்கை யினால் தாளமிட்டுப் பாடினார். அப்போது இறைவன் திருவருளால் திருவைந்தெழுத்து எழுதப்பெற்ற பொற் றாளம் இவர் கை வந்தருளப் பெற்றது.
திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்-34

'கொங்குலாம் பொழிற் குரவெறி கமழும் கோலக்கா'
(62-2)

என்பார்.

159. கோவலூர்

திருக் கோயிலூர் எனச் சுட்டப்படும் இவ்வூர் இன்று, தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் அப்பர் பாடல் பெற்ற தலம் இது. பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ளது இவ்வூர். ஊர் மேலூர், கீழூர் என்ற இரு பகுதி களாக அமைகிறது. கீழூரில் சிவன் கோயிலும், மேலூரில் திருமால் கோயிலும் உள்ளன. இவ்வூரின் வளம் குறித்து நாயன்மார் ஆழ்வார் இருவரும் பாடியுள்ளனர்.

கோவலூர் என்ற ஊர் 'கோவல் என்ற பழம் பெயரை யுடையது. சங்க இலக்கியம முதற் காணப்படும் இவ்வூர்ப் பெயர் ஊரின் பழமையையும் தருகின்றது.

மலையமான் திருமுடிக்காரி இந்நாட்டை ஆண்டு வந்த தன்மையை அகநானூறு 30ஆம் பாடல் தருகிறது.

'துஞ்சா முழவிற் கோவற் கோமான்
நெடுந்தேர்க்காரி கொடுங்கான் முன்றுறைப்ப
பெண்ணையம் பேரியாற்று நுண்ணறல் கடுக்கும்

என்ற பகுதி 'கோவல்' என்ற ஊர்ப்பழமையைச் சுட்டும். புற நானூறு 99ஆம் பாடல் கோவலூர் நூறிய அதியமானின் வெற்றி சுட்டும்.

மலையமான் ஆண்ட நிலையில் இந்த நாடு மலையமான் நாடு என்றும் மலாடு என்றும் சுட்டப்பட்டது.

கொடிக்குலவும் மதிற் கோவலூர் வீரட்டம்

என்பது சிவபெருமான் திருஇரட்டைமணிமாலை (34) காட்டும் எண்ணம்.

வளங் கொள் பெண்ணை வந்துலா வயல்கள் சூழ்ந்த
கோவலூர்
விளங்கு கோவணத்தினான் வீரட்டானஞ் சேர்துமே
(236-5)

என்பது சம்பந்தர் பாடல்.

'கொழித்து வந்து அலைக்கும் தெண்ணீர்க் கோவல்
வீரட்டனீரே' (69-3)

என்கின்றார் அப்பர் ஆழ்வார் பாடல்களும் இவ்வூரின் வளத்தை சிறப்பாகக் காட்டுகின்றன.

கோங்கு அரும்பு சுர புன்னைக் குரவு ஆர் சோலைக்
குழாம் வரிவண்டு இசைபாடும் பாடல் கேட்டுத்
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த திருக்கோவலூர்
பெரிய-திருமொழி-2, 4, 10

இவ்வாறு பல எண்ணங்கள் அமையினும் ஊர்ப்பெயர் காரணம் தெளிவு பெறவில்லை. இங்குள்ள பெருமாள் கோயிலில் உள்ள கொடி மரம் சமணருடைய மானஸ்தம்பம் போன்றிருக்கிறது. ஆகையால் இது ஆதியில் சமணக் கோயிலாக இருந்திருக்கக் கூடும் என்று ஐயுறுகின்றனர். இங்கு அரசாண்ட அரசர்களில் பலர் சமணராக இருந்தனர் என்றும் கருதத்தக்கது என்ற எண்ணம் இவ்வூர் தொடர்பானது.[1]

## 160. கோழம்பம்

கோழம்பம் என்றே இன்றும் சுட்டப்படும் ஊர் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தராலும், அப்பராலும் பாடல் பெற்ற தலம் இது.

பொழில் சூழ்ந்த கோழம்பத்தின் சிறப்பே இருவராலும் சுட்டப்படுகிறது.

குளிர் பொழில் கோழம்பம் மேவிய ஏற்றானை
—திருஞான-149-1

பாடலாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூடலாக்கிடும் குன்றின் மணற்கொடு
கோடல்பூத்தலர் கோழம்பத் துண் மகிழ்ந்தாடும் கூத்தன்
திருநாவு-178-4

## 161. கோளிலி

தஞ்சாவூர் மாவட்டத்தில் 'திருக்குவளை' என்ற பெயருடன் திகழ்கிறது இவ்வூர்.

மூவர் பாடலும் பெற்ற இவ்வூர்ப் பெயர் குறித்து எண்ணங்கள் தெளிவுறவில்லை. 'நவகோள்கள் பூசித்துப் பேறு பெற்ற

1. சமணமும் தமிழும்-பக். 120

மையால் கோளிலி என வழங்கப் பெறுகிறது' என்ற எண்ணம் அமைகிறது.[1] திருஞானசம்பந்தர்

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோ மடநெஞ்சே யரனாமம்
கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலி யெம் பெருமானே
(62-1)

எனப்பாடுகின்றார். எனவே 'கோளிலி' என்ற பெயர் இறைவன் பெயராக அமைந்து பின்னர் ஊர்ப்பெயராக அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும்

முத்தினை முதலாகிய மூர்த்தியை
வித்தினை விளைவாய விகிர்தனைக்
கொத்தலர் பொழில் சூழ்தரு கோளிலி
அத்தனைத் தொழநீங்கு நம்மல்லலே (170-2)

என்று நாவுக்கரசரும்

'எம்பெருமான் உனையே நினைந் தேத்துவன் எப்பொழுதும்
வம்பமருங் குழலா ளொரு பாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகை சூழ் திருக்கோளிலி எம் பெருமான்
அன்பது வாயடி யேற்கவையட்டித் தரப்பணியே' (20-7)

என்று சுந்தரரும் இவ்விறையைப் பாடுகின்றார்.

கோளி என்ற சொல்லின் பொருளை நோக்குமிடத்து தமிழ் லெக்ஸிகன், ஆல், அத்தி என்பனவற்றைப் பிங்கல நிகண்டிலிருந்து காட்டி, 'பூவாது காய்க்கும் மரம்' என்ற பொருளையும் தருகிறது (vol I பக். 1203).

'கொழுமென் சினைய கோளியுள்ளும்' என்ற நிலையில் கோளி என்ற சொல் பெரும்பாணாற்றுப் படையில் இடம்பெறுகிறது. இதற்கு உரை எழுதும் உ. வே. சா அவர்கள், 'கொழுவிய மெல்லிய கொம்புகளினிடத்தனவாகிய இமும் என்னும் ஓசையையுடைய புறவினுடைய திரளுகின்ற சுற்றத் திரட்சியை உடைய பூவாமற் காய்க்கும் மரங்களில் விசேடித்தும் பழத்தின் இனிமையால் மேலாகச் சொல்லும் பலா மரத்தை ஒக்க' என்ற பொருள்

---

1. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவார திருப்பதிகங்கள்—பக். 94

எழுதுகின்றார். எனவே பூவாது காய்காக்கும் மரங்களுள் பலா சிறப்பாகக்கருதப்பட்டது என்பது தெரிகிறது.[1] இந்நிலையில் இப் பெயரை நோக்கப் பூவாது காய்க்கும் மரத்தின் அடியில் இருந்த நிலையில் இவ்விறையைச் சுட்டும் நிலையில் 'கோளிலி' எனப் பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. அரசமரத்தின் அடியில் இருப்பதால் அரசிலி என்ற பெயர் அமைந்தது போன்று இப்பெயரும் நோக்கத் தக்கது.

### 162. சக்கரக் கோட்டம்

கலிங்கத்துப் பரணியில் காட்டப்படும் ஊர்.

விருதராச பயங்கரன் முன்னோர் நாள் வென்ற
சக்கரக் கோட்டத்திடை—கலிங்-147

எனினும் ஊர்ப்பெயர் விளக்கம் தெரியவில்லை.

### 163. சக்கரப்பள்ளி

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த ஊர். தற்போதைய ஊர்ப் பெயர் ஐயம்பேட்டை. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் (பதி-285).

நலமலி கொள்கையார் நான் மறை பாடலார்
வலமலி மழுவினார் மகிழுமூர் வண்டறை
மலர் மலி சலமொடு வந்திழி காவிரி
சலசல மணிகொழி சக்கரப்பள்ளியே—285-4

### 164. சங்கமங்கை

சேக்கிழார் பாடலில் இடம்பெறும் தலம். சாக்கிய நாயனார் புராணத்தில்,

---

1. இழுமென் புள்ளினீண்டு கிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளியுள்ளும்
பழமீக் கூறும் பலா அப்போல -பெரும்-406-8

தாளாளர் திருச்சங்க மங்கையினில்
தகவுடைய வேளாளர் குலத்தில்

என்று வரும் நிலை இப்பெயர் சுட்டும். எனவே சாக்கிய நாயனார் பிறந்த ஊர் இது என்பது தெரிகிறது. இப்பெயர் குறித்து மயிலை சீனி வேங்கடசாமி,

இந்த ஊரின் பெயரே இது பௌத்தரது ஊர் என்பதைத் தெரிவிக்கும். சங்கம் என்பது புத்த, தர்ம, சங்கம் என்னும் மும் மணிகளில் ஒன்று. அதாவது பௌத்த பிக்ஷுக்களுக்குச் சங்கம் என்று பெயர். எனவே சங்க மங்கை என்ற பெயர் பௌத்தச் சார்பானதென்பதைத் தெரிவிக்கிறது[1] என்கின்றார்.

165. சண்டியூர்

சேக்கிழாரின் பெரிய புராணம் காட்டும் ஒரு ஊர். கழறிற்றறி வார் புராணத்தில் அமைகிறது.

பொன்பரப்பி மணி வரன்றிப்புனல் பரக்கும் காவேரித்
தென்கரை போய் சிவன் மகிழ்ந்த கோயில் பலசென்
றிறைஞ்சி
மின் பரப்பும் சடையண்ணல் விரும்பு திருச்சண்டியூர்
அன்புருக்கும் சிந்தையுடன் பணிந்து (130)

என, காவிரிக் கரைத் தலங்கள் வணங்கி, திருச்சண்டியூர் சென்ற நிலையைச் சுட்டும் தன்மை இதனையும் சோழநாட்டுத் தலமாக எண்ணச் செய்கிறது 'சண்டீஸ்வரர்' என்ற இறைப் பெயரால் இப்பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

166. சாத்தங்குடி

சாத்தங்குடி என்ற ஊர், திருநாவுக்கரசர் தேவாரம் சுட்டும் ஊர். சேக்கிழாரும் குறிப்பிடுகின்றார்.

'எல்லாரும் தளிச் சாத்தங் குடியிற் காண
இறைப்பொழுதிற் திருவாரூர் புக்கார் தாமே' என்கின்ற

அடியைக் காணும்போது தளி என்பதைக் கோயில் என்ற பொருளில் காண்கின்றோம். சாத்தங்குடியில் உள்ள கோயில் என்ற பொருளில் தளிச்சாத்தங்குடி என்ற பெயர் அமைந்திருக்கலாம்.

---

1. பௌத்தமும் தமிழும்-பக். 38

'சாத்தர்' என்ற சொல் வணிகரைக் குறிப்பதை. 'அதர் கெடுத்தலறிய சாத்தரொடாங்கு' என அகநானூறு (39) தருகிறது. எனவே வணிகர்கள் சேர்ந்து வாழ்ந்த குடியிருப்பு என்ற நிலையில் சாத்தங்குடி என்ற பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 167. சாத்தமங்கை

திருச்சியாத்த மங்கை என்று மக்களால் வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது'.

பூத்த பங்கயப் பொகுட்டின் மேற் பொருகயல் உகளும்
காய்த்த செந்நெலின் காடுசூழ் காவிரி நாட்டுச்
சாத்த மங்கை என்று உலகெலாம் புகழ்வுறுத் தகைத்தாய்
வாய்த்த மங்கல மறையவர் முதற் பதி வனப்பு

என சேக்கிழார் இத்தலச் சிறப்பு சுட்டுகின்றார் (திருநீல-1). திருஞான சம்பந்தரும், சங்கையில்லா மறையோர் அவர் தாம் தொழும் சாத்தமங்கை (316-10) என்று பாடும் நிலையைக் காண, மறையவர் நிறைந்த இடம் இது என்பது தெரிகிறது.

எனினும், 'சாத்தமங்கை' என்ற பெயரைக்காண, இதுவும் 'சாத்தங்குடி' போன்று வணிகர் நிறை பகுதி காரணமாகச் சாத்த மங்கலம் எனப் பெயர் பெற்று பின்னர் சாத்தமங்கையாகியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மட்டுமல்லாது இது 'உலகெலாம் புகழ்வுறு தகைத்தால்' எனச் சேக்கிழார் சுட்டும் தன்மையில் மூதூராக இருந்திருக்கும் வாய்ப்பு அமைகிறது. சிறப்புடைய ஊராக இருந்திருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது. எனவே முதலில் வணிகர் பதியாயிருந்த சாத்தமங்கை பின்னர் கோயிற் சிறப்புக் காரணமாக மறையவர் பதியாகவும் திகழ்ந்தது எனக் கூறல் பொருத்தமாக அமையும். மேலும் சாத்தமங்கையும் 'சாத்தை' என்று வழங்கிய வழக்கை[1] நம்பியாண்டார் திருத்தொண்டர் தொகை (30) காட்டுகிறது.

---

1. நான் மலர்க் கமலவாவிக் கழனி சூழ் சாத்தமங்கை
நான் மறை நீலநக்கர் திருத் தொழில் நவிலல் உற்றேன்
பெரிய. 31-45.

நீதித் திகழ் சாத்தை நீலநக்கன் எனும் வேதியனே இன்றுசியாத்த மங்கை எனத் திரிந்து வழங்கும் நிலை அமைகிறது.

மங்கலம் என்ற பொதுக்கூறு குடியிருப்புப் பகுதி எனவும் பார்ப்பனக் குடியிருப்பு எனவும் சங்க இலக்கிய நிலையில் நின்று விளக்கும் நிலை கி. நாச்சிமுத்துவிடம் தெரிகிறது.[1]

இந்நிலையில் பார்க்க அன்பளிப்பாக அளிக்கப்பட்ட பகுதிகள் 'மங்கலம்' என முதலில் பெயர் சூட்டப்பட்டன. முதலில் மறையவர்க்கும் பின்னர் பிறருக்கும் அளிக்கப்பட்டன. பின்னர் யாவரும் வசிக்கும் ஊர்ப்பொதுச் கூறாக அமைந்தது எனத் தோன்றுகிறது. இந்நிலையில் வணிகர்க்கு அளிக்கப்பட்ட இடம் அல்லது வணிகர் குடியிருப்பு பகுதி என்ற நிலையில் இப்பெயர் அமைந்திருக்கலாமா? என்பது மேலும் சிந்திக்கத்தக்கது. இங்குள்ளகோயில் 'அயவந்தி' எனச் சுட்டப்பட்டது. திருநாவுக்கரசர் தம் பாடலில் (265-8, 301-3) அயவந்தி ஈசனைப் புகழ்கின்றார்.

மயிலை சீனிவேங்கடசாமி திருத்துறைபூண்டி பற்றி கூறும் போது, இவ்வூரில் மருந்தீச்சுரர் கோயிலின் மண்டபத்திலுள்ள திரிபுவன சக்கரவர்த்தி இராசராசத் தேவர் III உடைய 11-வது ஆண்டில் (கி.பி 1227 மே 15) எழுதப்பட்ட சாசனத்தில் சாத்தமங்கலத்தைச்சார்ந்த பள்ளிச் சந்தம் குறிக்கப் பட்டுள்ளது. இதனால் இவ்வூருக்கருகில் இருந்த சாத்தமங்கலத்தில் சமண கோயிற்குரித்தான நிலங்கள் இருந்த செய்தி அறியப் படுகிறது என்கின்ற போது இரண்டும் ஒன்ருக இருக்கலாமோ எனத் தோன்றுகிறது.[2]

## 168. சாந்தம்புத்தூர்

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் சுட்டும் ஊர்ப்பெயர் இது.

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் (திரு. கீர்த்தித்-31-32)

சாந்தம் புத்தூர் என்ற பெயரை நோக்க, சந்தனம் நிறைந்த காட்டில் அமைந்த புதிய குடியிருப்பாக இருக்கலாம் என்ற எண்ணம் அமைகிறது.

---

1. இடப்பெயராய்வு-பக் 134, 139
2. சமணமும் தமிழும்-பக். 139

## 169. சிக்கல்

இன்றும் சிக்கல் எனச் சுட்டப்படும் பெயர் சம்பந்தர் பாடல் பெற்றது. வசிட்டர் காமதேனுவின் வெண்ணையினால் சிவ லிங்கம் அமைத்து வழிபட்டார். பூசை முடிவில் அதை எடுக்க முயன்றபோது முடியாமல் சிக்கிக் கொண்டமையால் சிக்கல் எனப் பெயர் பெற்றது என்ற எண்ணம் இவ்வூர்ப் பெயர் பற்றி அமைகின்றது.[1]

ஞானசம்பந்தர் இத்தலத்தின் மிகுந்த செழுப்பினைப் பாடு கின்றார்.

மடங்கொள் வாளை குதிகொள்ளுமணமலர்ப் பொய்கைசூழ்
திடங்கொண் மாமறையோரவர் மல்கிய சிக்கல் 144-2

நீல நெய் தன்னிலவம் மலருஞ் சுனை நீடிய
சேலும் மாலுங்கழனிவ் வளமல்கிய சிக்கல் 144-3

இப்பாடல்களை நோக்க வளங்கள் சிக்கிக் கிடக்கும் தன்மை காரணமாக இப்பெயர் பெற்றதோ என எண்ணத் தோன்று கிறது.

## 170. சிராப்பள்ளி

சங்க காலத்தில் உறையூர் மிகப் புகழ்பெற்றிருந்த நிலையைக் காண்கின்றோம், இடையில் சிராப்பள்ளிக் கோயில் நிலையில் புகழ்பெற, இன்று உறந்தை புகழ் மறைந்து திருச்சிராப்பள்ளி மிகுந்த புகழுடன் அமையும் நிலை அமைகிறது.

உறைவதற்கு ஏற்ற இடம் என்ற நிலையில் காவிரிக்கரையில் மிக்க புகழுடன் இருந்த நிலையைச் சங்க இலக்கியம் காட்டும், அரசியல் நிலையிலும், மன்னர் வாழ்விடமாக இது அமைந்தது.

"சிராப்பள்ளி" என்ற பெயர் இன்று திருச்சிராப்பள்ளி என்றுவழங்கினாலும் திருச்சி என்ற குறுக்கமே பெரும்வழக்காக அமைகிறது. 'பள்ளி' பொதுவாக வாழ்விடம் குறித்து அமையி னும், இப்பெயரோடு தொடர்புடைய வரலாறுகளைக் காண சமணர் தொடர்புடையதாகவே இது அமைந்திருக்கலாம் எனத் துணியலாம்.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்பக். 205

மூன்று தலைகளைப் பெற்று இருந்த அசுரன் வழிபட்டமை யால் திருச்சிராப்பள்ளி என்று பெயர் பெற்றது என்பர்.[1] போன்ற பலஎண்ணங்கள் இது குறித்து வழங்கின. எனினும், இவ்வூர் பற்றிய தோற்றம் நோக்க தெளிவு கிடைக்கின்றது. முதலில் பழமை நிலையில் காணலாம். சிராப்பள்ளி என்ற பெயர் பண்டு இல்லை.

உறந்தை என்ற பெயரே முதலில் இருந்தது. உறந்தையைச் சார்ந்த இன்று அமையும் மலைப் பகுதியைக் குறிக்கும் அக நானூற்றுப் பாடல்,

கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது

நெடும் பெரும் குன்றத்து என இக் குன்றம் பற்றி இயம்பு கின்றது. எனவே இப்பெயரின்மை உறுதிப்படுகின்றது.

சிராப்பள்ளியைப் பற்றிய ஆய்வு செய்யும் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், இவ்வூர்ப் பின்னணியை நன்கு ஆய்கின்றார். இவ்வாய்வில் இவர், 'கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் குன்றின்மேல் சில சமண முனிவர்கள் தங்கித் தவம் புரிந்துக் கொண்டிருந்தனர் என்பது நன்கு தெரியப்படும். அவர்களுள் 'சிரா' என்ற முனிவர் ஒருவர் இருந்தமை அங்குள்ள கல்வெட்டுகளால் அறியப்படுகிறது அம்முனிவர் அத்தவப்பள்ளியின் தலைவராயிருந்தமை பற்றி அது சிராப்பள்ளி என்று முதலில் வழங்கத் தொடங்கி, அவர் காலத் திற்குப் பின்னரும் அப்பெயரோடு நின்று நிலவுவதாயிற்று'' என சுட்டிச் செல்வது இப்பெயரைப்பற்றிய தெளிவைத் தருமாறு அமைகிறது.[2] மகேந்திரவர்மன் சிராப்பள்ளி பெருங் குன்றைக் குடைந்து அங்கே சிவபெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தவன் என்பது ஆராய்ச்சியில் பெறப்படுகிறது என்றும் இவர் குறிப்பிடுகின்றார் சிராப்பள்ளி கோயிலைப் பாடியவர்கள் சம்பந்தர், அப்பர், 'சென்றடையாத திருவுடையானைச் சிராப் பள்ளி குன்றுடையானைக் கூற என்னுள்ளம் குளிருமே' (98-1) என்கிறார் சம்பந்தர்.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-217
2. கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள் பக் 83, 85.

## 171. சிரீவரமங்கை

இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. நாங்குநேரி, வானமாமலை என்று பிற பெயர்கள் இருப்பினும், நாங்குநேரியே செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது. திருமால் கோயில் கொண்ட நிலையில் 'ஸ்ரீ' என்ற அடையுடன் கொண்ட 'மங்கலம்' என்ற பெயர் பின்னர் சிரீவரமங்கை ஆகியிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மலை, ஏரி பிற இரண்டின் காரணங்களாக அமையலாமெனத் தோன்றுகிறது.

நம்மாழ்வார் இத்தலத்திலுள்ள திருமாலைப் புகழ்கின்றார்.

'சேற்றுத் தாமரை செந்நெலூடு மலர்
சிரீவர மங்கல நகர்' (நாலா-2590)
திங்கள் சேர் மணிமாடம் நீடு
சிரீவர மங்கல நகர் (நாலா—2591)

போன்றன இந்நகரின் பெருமைக்குரிய சில சான்றுகள்.

## 172. சிவபுரம்

சிவபுரம் என்ற பெயரிலேயே இன்றும் சுட்டப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. திருமால் வராகமாய் உருக்கொண்டு இறைவனைப் பூசித்ததலம் இது. ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்றது.

சிவன் கோயில் காரணமாகச் சிவபுரம் எனப் பெயர் பெற்று இருக்கலாம்.

பதும நன்மலரது மருவிய சிவனது சிவபுரம் நினைபவர்
திருஞான 21-2

மேலும் நதிக்கரையில் இதன் இருப்பிடத்தை,

இன் குரலிசைக் கெழும் யாழ் முரலத்
தன் கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொரு பழங் காவிரியின்
றென் கரை மருவிய சிவபுரமே திருஞான 112-1
மலைமகண் மறுகிய மதகரியைக்
கொலை மல்க உரி செய்த குழகனகர்
அலை மல்கு மரிசிலின தனயலே

சிலைமல்கு மதிளணி சிவபுரமே திருஞான 112 - 3

எனப்பாடுகிறார்.

சிவனவன் காண் சிவபுரத் தெஞ் செல்வன் றானே எனப் பாடுகின்றார் அப்பர் (301 - 1).

மேலும் சிவபுரநகர் என ஞானசம்பந்தர் (21) சுட்டும் நிலை இவ்வூர் சிறந்து விளங்கியதொரு தன்மைக்குச் சான்று.

## 173. சிற்றேமம்

சிற்றாய்மூர், சிற்றாம்பூர், எழிலூர், நேமம் எனப் பவாறாக வழங்கப்படுகின்ற இவ்வூர் தஞ்சைமாவட்டம் சார்ந்தது என்பர்.[1] ஆயின் தம் ஆராய்ச்சித் தொகுதியில் மு. இராகவையங்கார் இக் கோயிலிலுள்ள சாசனங்கள் இதனைச் சிற்றாய்மூர் என்றேவழங்கு கின்ற காரணத்தால் தேவாரம் குறிக்கும் ஊர் இதுவன்று என்றும் இம்மாவட்டத்திலேயே உள்ள திருச்சிற்றம்பலம் என்ற தலமே சிற்றேமம் எனவும் சுட்டுகின்றார். எனினும் பெயர்க் காரணம் புரியவில்லை. சிறை வண்டியாழ் செய்பைம் பொழிற் பழனஞ் சூழ் சிற்றேமத் தான் 300-1 எனவும்,

படு வண்டியாழ் செய்பைம் பொழில் பழனம் சூழ் சிற்றேமத் தான் 300 - 3 எனவும் இதன் வளம் சுட்டுகின்றார் சம்பந்தர்.

## 174. சிறுகுடி

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து இன்றும் இப் பெயரிலேயே அமைகிறது. 'சிறுகுடி' என்பது சிறிய குடியிருப்புப் பகுதியைக் குறித்து அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலமுடையது.

செறி பொழில் தழுவிய சிறுகுடிமேவிய
வெறி கமழ் சடை முடியீரே
வெறி கமழ் சடைமுடியீருமை விரும்பி மெய்ந்
நெறியுணர் வோருயர்ந்தோரே (355 - 7)

## 175. சிறுபுலியூர்

தஞ்சை மாவட்டத்தில் சிறுபுலியூர் என்றே இன்றும் சுட்டப் படும் இடம் இது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத் தலங்கள் பக் - 319

மாயூரம் ரயில் நிலையத்திலிருந்து எட்டு மைல் தொலைவில் உள்ள இடம். இடப்பெயர் சிறுபுலியூர் என அமைய, திருமால் கோயில் பெயர் சலசயனம் எனச் சுட்டப் பெறுகிறது. எம் பெருமான் புலிக்கால் முனிவருக்கு, பாலசயனமாய்ச் சேவை சாதித்த தலமாதல் பற்றி இவ்வூர் சிறுபுலியூர் என வழங்கப் பெற்றதாகக் கூறுவர்.[1] இதன் சிறப்பை ஆழ்வார் பாடல்கள் சிறப்பாக இயம்புகின்றன.

வெள்ளம் முது பரவைத்திரை விரிய கரை எங்கும்
தெள்ளும்மணி திகழும் சிறுபுலியூர்

என்கின்றார் திருமங்கையாழ்வார்.

'முழு நீலமும் அலராம்பலும் அரவிந்தமும் விரவிக்
கழுநீரொடு மடவார் அவர் கண் வாய் முகம் மலரும்
செழுநீர் வயல் தழுவும் சிறுபுலியூர்'

புலியூர் என்ற ஊர்ப்பெயர் மிகுதியாக அமையும்போது அனைத்து இடங்களிலும் இப்பெயர்க் காரணமே சுட்டப்படுகிறது. புலித் தோலையுடைய சிவன் இருக்கும் ஊர் என எண்ணின், இங்கு திருமால் கோயிலே சிறப்பாக உள்ளதாக அறிகிறோம். எனவே இப்பெயர்க்குரிய காரணம் தெளிவு பெறவில்லை. இயல்பாக விலங்குப் பெயர்க் காரணம் பொருத்தமாக அமையலாம்.

### 176. சுழியல்

திருச்சுழி என்ற பெயரில் இன்று இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது இவ்வூர். சுந்தரர் பாடல் பெற்ற தலம். சேக்கிழாரும் இத்தலம் பற்றி பாடுகின்றார்.

### 177. செங்காட்டங்குடி

இன்றும் இப்பெயராலேயே தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது இவ்வூர். இத்தலம் பற்றிய புராணக்கதை, 'கஜமுகா சுரன் என்பவன் தேவர்களுக்கு இடுக்கண் செய்ய, அவனை ஒழித்துக்கட்ட சிவகுமாரனான விநாயகர் யானை முகத்துடன் அவதரித்து அவனைச் சம்ஹரித்திருக்கிறார். இந்த கஜாமுகா சுரனைச் சம்ஹரித்தபோது அவனது இரத்தம் செங்காடாய்ப் பெருகிய காரணத்தால் செங்காட்டங்குடி என்ற பெயர் நிலைத்

---

1. சோழநாட்டுத் திருப்பதிகள்-பக். 53

திருக்கிறது. இந்தப் பழி நீங்க இத்தலத்தில் இறைவனைக் கணபதி வழிபட்ட காரணத்தால் கணபதீச்சுரம் என்ற பெயர் பெற்றிருக்கிறது"[1] என்றமைகிறது. இதனைக் கந்த புராணம்,

ஏடவிழ் அலங்கல் திண்டோள் இபமுகத்தவுணன் மார்பில்
நீடிய குருதிச் செந்நீர் நீத்தமாய ஒழுகும் வேலைப்
பாடுறவருங்கான் ஒன்றிற் பரத்தலின் அதுவே செய்ய
காடெனப் பெயர் பெற்றின்னும் காண்டக இருந்ததம்மா
மீண்டு செங்காட்டில் மேவி மெய்ஞ்ஞானத் தும்பர்
தாண்டவம் புரியும் தாதை தன்றுருத் தாபித் தேத்திப்
பூண்ட பேர் அன்பிற் பூசை புரிந்தனன் புவியுளோர்க்குக்
காண்டகும் அனைய தானம் கணபதிச்சரம தென்பர்

எனக் குறிப்பிடுகிறது

எனினும் 'ஆத்திமரம்' தலவிருட்சம் எனக் காணும்போது செங்காடுடன் இதனைத் தொடர்புபடுத்த முடியுமா? எனக் காணலாம். செங்காட்டில் உள்ள குடியிருப்பு என்ற பொருளில் இப்பெயர் அமைந்திருக்க, இங்குள்ள கோயில் இறைச் சிறப்பால் கணபதீச்சரம் எனப்பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்று கிறது.

மேலும் இத்தலம் 'மருகல்' என்ற பகுதியுள் அடங்கி பின்னர் பக்கத்தில் உள்ள செங்காட்டங்குடியில் மக்கள் குடியேறிய நிலை யில் இப்பெயர் அமைகின்றது என்ற கருத்து, 'மருகல் செங் காட்டங்குடி' என்ற தொடர்புண்மை புலப்படுத்தும் ஒன்று.

ஞானசம்பந்தரின் தேவாரப்பதிகம் (6) இரண்டையும் ஒரே பதிகத்தில் பாடும் தன்மை இரண்டின் அருகாமையை உணர்த் தும் நிலையாக அமைகிறது[2] மேலும் இன்றும் மருகலிலிருந்து இரண்டு மைலில் அமைகிறது செங்காட்டங்குடி என,

---

1. வேங்கடம் முதல் குமரி வரை II பக். 186
2. அங்கமும் வேதமும் ஓது நாவரந்தணர் நாளுமடி பரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி மருகனிலாவியமைந்த
சொல்லாய்
செங்கயலார் புனல் செல்வ மல்கு சீர்கொள் செங்
காட்டங்குடியதனுள்
கங்குல் விளக்கெரி யேந்தியாடும் கணபதியீச்சரம்
காமுறவே திருஞான-6-1

சுட்டக் காண்கின்றோம்.[1] கல்வெட்டுச் சான்றும் இதனை உறுதிப்படுத்துகிறது.[2]

கருநாட்டக் கடைசியர் தம் களிகாட்டும் காவேரித்
திருநாட்டு வளங் காட்டும் செங்காட்டம் குடியாகும்

என சேக்கிழார் இவ்வூர்ச் சிறப்பு தருகிறார். (சிறுத்தொண்-1)

அப்பராலும் பாடல் பெற்ற இத்தலம் பரணராலும் பாடப் பட்டுள்ளது.

—சிவனந்தம்
சேரும் உருவுடையீர் செங்கா அட்டாங்குடி மேல்
சேரும் உருவுடையீர்செல் சிவபெரு—திருவந்—69

என்ற பாடல் 'செங்கா அட்டங்குடி' என இவ்வூர்ப் பெயரைத் தருதல், செங்காடுக்கு வேறாகப் பொருள் தருவதுபோல் தோற்றம் தருகிறது. 'அடுதல்' சமைத்தல், போரிடுதல் என்ற பொருளைத் தரும் நிலையில் போருடன் தொடர்பு கொண்ட பெயராக இது அமையலாமோ எனவும் பார்க்கலாம்.

178. செங்குன்றூர்

மலைநாட்டுத் தலம் செங்குன்றூர். கொடிமாடச் செங்குன்றூர் போன்று நிறம் காரணமாகவும், குன்று காரணமாகவும் பெயர் பெற்ற தன்மை அமைகிறது. நம்மாழ்வாரால் பாடல் பெற்ற தலம் இது. திருமால் கோயில் 'சிற்றாறு' என்ற ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. இவ்வூர் சிறந்தும், செழித்தும் காணப்பட்டது என்பதனை, நம்மாழ்வார் பாடல் தருகின்றது.

---

1. வேங்கடம் முதல் குமரி வரை பக்—185

2. கய மாணிக்க வளநாட்டு மருகல் நாட்டுத் திருச் செங் காட்டங்குடி என அழைக்கப்பெறுகிறது. முதல் இராஜ ராஜன் காலத்திய கலவெட்டு மும்முடிச் சோழ வள நாட்டு மருகல் நாட்டுச் திருச்செங்காட்டங்குடி எனக் காட்டுகிறது.— திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக்-12

செங்கயல் உகளும் தேம்பணை புடைசூழ்
திருச் செங்குன்றூர்த் திருச் சிற்றாறு -நம் - 2888
தென்திசைக் கணிகொள் திருச்செங்குன்றூர் ,, - 2889
நல்ல நான் மறையோர் வேள்வியுள் மடுத்த
நறும்புகை விசும் பொளி மறைக்கும்
நல்ல நீள் மாடத் திருச் செங்குன்றூரில்
திருச்சிற்றாறெனக்கு நல்லரணே ,,-2891

## 179. செம்பொன்பள்ளி

செம்பொன்னார் கோயில், செம்பொனார் கோயில் என்றும் சுட்டப்படும் இவ்வூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. அப்பர் சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம் (ஞான 25, திருநா 29, 150), முதலில் கோயில் பெயராக அமைந்து, பின்னர் ஊர்ப் பெயராக மாறியிருக்கலாம். செம்பொன்னால் வேயப்பட்ட கோயில் என்ற பொருளில் இப்பெயர் அமையலாம். செம்பொன் பள்ளி என்று தேவாரம் சுட்டிய இவ்வூர்ப் பெயர், கல்வெட்டு களில், செம்பொன்னார் கோயில், செம்பொன்னாதர் கோயில் எனச் சுட்டப்படும் நிலை,[1] பள்ளியைக் கோயிலாக்கினரோ என்ற எண்ணத்தையும் அளிக்கிறது. காவிரியின் கரையில் இருக்கும் இத்தலத் திறையைச் சம்பந்தர்,

வரையார் சந்கோடகிலும் வருபொன்னித்
திரையார் செம்பொன் பள்ளி மேவிய
நரையார் விடை யொன்றூரு நம்பனை
உரையாதவர் மேல் ஒழியா வூனமே (25-3)

எனப்பாடுகின்றார்,

கானறாத கடி பொழில் வண்டினம்
தேனறாத திருச் சொம்பொன் பள்ளியன்
ஊனறாத தோர் வெண்டலை யிற்பலி
தானறாததோர் கொள்கையன் காண்மினே

என்பது திருநாவுக்கரசர் கூற்று (150-1).

## 180. சேய்ஞலூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் சேங்கனூர் என்று இன்று அழைக்கப்பெறுகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற தலம் (48).

1. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்-36

'சேயாம் குமரக் கடவுள் தாம் விரும்பி உறைவதற்கு நல்ல ஊர் என்று தேர்ந்து எடுக்கப்பட்ட தலம் அது. சேய் நல் ஊர் தான் சேய்நலூர் என்று பின்னால் பெயர் பெற்றிருக்கிறது' என்ற கருத்து இத்தலம் குறித்து அமைகிறது[1]. கொள்ளிடத்திலிருந்து பிரியும் மண்ணியாற்றின் கரையிலே சேய்ஞலூர் அமைகிறது. கோச் செங்கணானுடன் தொடர்பு உடையதாக இருக்கலாம் என்பது சம்பந்தர் தேவாரம் சுட்டும் ஒரு எண்ணம்.[2] சேக்கிழார் இவ்வூரினை,

'செய்த்தலை பணில முத்தீனும் சேய்ஞலூர்' (34—242) என்றும், 'சீலம் திகழும் சேய்ஞலூர் (திருக்-58) என்றும் பாராட்டுகின்றார். முருகக் கடவுள் இத்தலத்தில் சிவபெருமானை வழிபட்டுச் சூரசம்ஹாரத்திற்குத் துணையாகச் சர்வ சங்காரப் படைக்கலத்தைப் பெற்றார் என்ற எண்ணமும் இவ்வூர் பற்றி அமைகிறது.[3] முருகன் வழிபட்ட தலமாதலின் 'சேய்நல்லூர்' எனப் பெயர் பெற்ற தலம் இது என்ற எண்ணத்தை நோக்க முருகனுடன் தொடர்புடையதாக இப்பெயர் அமையக் காண்கின்றோம். 'சேய்' என்பது பண்டைத் தமிழ் மக்களிடையே முருகனைக் குறிக்க வழங்கியது என்பது தொல்காப்பியம் சங்க இலக்கியம் காட்டும் நிலை. எனவே முதலில் இது முருகன் தலமாக இருந்து பின்னர் சிவத்தலமாக மாறியதோ என்ற எண்ணம் இவண் எழுகின்றது.

181. சேலூர்

பெரிய புராணம் சம்பந்தர் வழிபட்ட ஊர்பற்றிய பாடல்களுள், அவரது சேலூர் வழிபாடு பற்றியும் இயம்புகிறது. புள்ளமங்கைப் பதியில் உள்ள ஆலந்துறை கோயிலை அணைந்து,

---

1. வேங்கடம் முதல் குமரி வரை—II-பக்-239
2. காடடைந்த வேனமொன்றின் காரணமாகி வந்து
வேடடைந்த வேடனாகி விசய னொடெய்த தென்னே
கோடடைந்த மால்களிற்றுக் கோச் செங்கணற்கருள் செய்
சேடடைந்த செல்வர் வாழும் சேய்ஞலூர் மேயவனே
-திருஞான-48-6
3. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-169

மன்னும் அக்கோயில் சேர்மான்மறிக் கையர் தம்
பொன்னடித் தலம் உறப்புரி வொடும் தொழுதெழுந்
தின்னிசைத் தமிழ் புனைந்திறைவர் சேலூருடன்
பன்னுபாலைத் துறைப்பதி பணிந்தேகினார்' (34-364)

எனவே ஆலந்துறை கோயிலுக்கும் பாலைத்துறைக் கோயிலுக்கும் இடைப்பட்டு இக்கோயில் இருந்தது என்பதை உணரமுடிகிறது. புள்ளமங்கைப் பதியும், பாலைத்துறையும் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைவதால் இக்கோயிலும் தஞ்சையைச் சார்ந்த பகுதியிலேயே இன்றும் காணப்படும் எனலாம்.

## 182. சேற்றூர்

திருநாவுக்கரசரின் அடைவு திருத்தாண்டகம் சுட்டும் இறைத் தலங்களுள் 'ஊர்'ப்பொதுக் கூறுடன் திகழும் பெயர்களுள் ஒன்று சேற்றூர். வயல், கழனி காரணமாகச் சேறு நிறைந்த நிலையில் இப்பெயர் பெற்றிருக்கலாம். பிற விளக்கங்கள் தெளிவாகவில்லை.

நாலூரும் சேற்றூரும் நாரையூரும் (திருநா-286-4-4)

## 183. சேறை

இன்று உடையார் கோவில் என்று சுட்டப்படும் தலம். தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சைவத் தலமாகவும், வைணவத் தலமாகவும் விளங்கும் பெருமையுடையது. திருமங்கையாழ்வாருடன் சம்பந்தராலும், அப்பராலும் பாடல் பெற்ற தலம் இது.

'என்ன மாதவஞ் செய்தனை நெஞ்சமே
மின்னுவார் சடை வேத விழுப் பொருள்
செந்நெலார் வயல் சேறையுட் செந்நெறி
மன்னு சோதி நம்பால் வந்து வைகவே' (திருநா-191-2)

என்ற பாடல் நோக்க, செந்நெற் வயல்கள் காரணமாகச் 'சேறு' அடிப்படையில் 'சேறை' என்ற பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது- திருஞானசம்பந்தர் இதனைத் தமது பதிகத்தில்

344) 'வளநகர் சேறை' என்றும், 'வளநகர் செறி பொழில் தழுவிய சேறை' என்றும் சுட்டும் தன்மையை நோக்கவும், இக் கருத்து உறுதிப்படுகிறது. முதலில் சேறு நிறைந்த வயற் புறத்தில் அமைந்த கோயில் காரணமாக, பின்னர் குடியிருப்பு களும் ஏற்பட்டு 'சேறை' என்ற ஊர்ப்பெயர் செல்வாக்குப் பெற்றிருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது. மணிமாட மல்கு, செல்வத் தண்சேறை, வம்பலரும் தண்சேறை எனப் பலவாறு திருமங்கையாழ்வார் திருமால் பனுவலில் பரவுகின்றார் (நாலா—1548, 1579).

## 184. சோபுரம்

இப்பொழுது தியாகவல்லி என்ற பெயருடன் அமையும் தலம் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. முதற் குலோத்துங்கன் மனைவி மூவருள் பட்டத்து மனைவியாகிய தியாகவல்லியால் திருப்பணி செய்ய பெற்றமையின் இப்பெயர் பெற்றது என்ற எண்ணம் இது சார்பாக அமைகிறது.[1]

இங்குள்ள இறைவனின் பெயர் 'சோபுர நாதர்' என அறியும் போது சோபுரநாதரினின்றும் ஊர்ப்பெயர் அமைந்ததா? அல்லது சோபுரத்திலுள்ள இறைவன் சோபுர நாதர் எனப்பட்டாரா ? என்ற எண்ணம் தோன்றுகின்றது சோழருடன் தொடர்புடைய தியாகவல்லி என்ற பெயரை நோக்க, 'சோழபுரம்' என்ற பெயர் சோபுரம் என்று மருவி, கோயில் சிறப்பு காரணமாக, திருச்சோ புரம் எனப்பட்டதா எனவும் நோக்கலாம். சோழபுரத்தின் மரு விய நிலையே சோபுரம் எனின் இதன் பழமையும் எண்ணத் தக்கது. சம்பந்தர் பாடல் வழி 'சோலை மிக்க தண்வயல் சூழ் சோபுரம்' என்ற ஒரே குறிப்பைத் தவிர (51-11) வேறு எந்த விளக்கமும் கிடைக்கவில்லை.

## 185. சோற்றுத்துறை

திருச்சோற்றுத் துறை என்று வழங்கும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டம் சார்ந்து அமைகிறது. ஆற்றின் கரையில் கோயில் இருக்கிறது. இக்கோயிலைப் பாடியோர் சம்பந்தர், அப்பர்,

---

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்-63

சுந்தரர் மூவருமாவர். காவிரிக் கரையில் உள்ள ஊர் என்பதைப் பாடல் நிலையிலும் நாம் அறிய இயலுகிறது.

உறையும் செல்வ முடையார் காவிரி
அறையும் சோற்றுத் துறை சென்றடைவோமே
திருஞான—28-5

துனை புனற் பொன்னித் திரைவலம் கொள்
சோற்றுத் துறை தொழச் சென்றடைவார்
பெரிய 34—353

எனவே காவிரியின் கரையில் உள்ள ஓர் தலம் என்பது தெளிவாக அமைகிறது. அடுத்து 'சோற்றுத் துறை' என்பதை ஆராயின், தாவரத் தொடர்பானப் பெயர் என்பது 'துறை' என்ற பொதுக் கூறு நிலையிலும் உணரக் கூடிய ஒன்று. சோறு நிரம்பிய அல்லது நிறைந்த துறை என்ற பொருளில் இவ்வெண்ணம் அமைகிறது. 'கத்தாழை' என்றதொரு செடியின் இலையில் இருக்கும் உட்பகுதியைச் சோறு என்று சுட்டும் தன்மை இன்று வரை அமைகிறது. எனவே இந்தச் 'சோறு' நிரம்பிய அதாவது தாழை நெருங்கிய துறையாக இது அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. 'தாழை' என்ற செடி கடற்கரையில் மிகவும் செழித்து வளர்ந்து வந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. இந்நிலையில் நீர்த் துறையுடன் தொடர்புடைய இப்பெயரும் இக்காரணம் பற்றி எழுந்ததாகவே கருதலாம். பின்னர் இறைச் சிறப்பு 'திரு' என்ற அடையைப் பெய்ய, இவ்வூர் திருச்சோற்றுத் துறை என ஆயிற்று என உணர முடிகிறது.

## 186. தக்களூர்

திருநாவுக்கரசர்பாடலில்சுட்டப்பட்ட தலம் இது. 'கோயில் என்ற பதிகத்தில் (216—1) 'தருமபுரத்துள்ளார் தக்களூரார் என்று குறிப்பிடும் நிலையிலும் திருவீழிமிழலை பற்றி பாடும் போதும் (265-8) இத்தலம் பற்றி குறிப்பிடுகின்றார். 'தக்களூர்' என்று குறிப்பிடும் நிலையில் இது ஊர்ப் பெயர் என்பது தெளிவு பெறுகிறது. எனினும் பிற எண்ணங்கள் இதுபற்றி தெளிவு பெற, இல்லை.

## 187 தஞ்சாவூர்

சங்க காலத்தில் சோழர்களின் தலைநகராக உறையூர் இருந்தது. பின்னர் சங்க கால சோழர்கள், சிற்றரசர்களாக

பழையாறையையும் தலைநகராக்கிக் கொண்டு இருந்தனர். இடைக்காலத்தில் (கி. பி. 850-871) விசயாலயன் சோழ அரசை தஞ்சையில் நிலை நாட்டிய நிலையில் 'தஞ்சை' சிறப்புறத் தொடங்கியது.

'தஞ்சை' பற்றிய பிற முன்னைய செய்திகள் தெரியவில்லை. எனினும் முதலில் இது சிறப்புப் பெறாத சிறியதொரு ஊராக இருந்திருக்கலாம். சோழ மன்னன் தலைநகராகக் கொண்டு ஆட்சி தொடங்கிய பின்னர் பெரும் சிறப்பு பெற்றிருக்கலாம் என்பதையுணர இவ்வூர் பற்றிய எண்ணங்கள் துணைபுரிகின்றன.

தஞ்சாவூரில் உள்ள 'திருமருகல்' என்ற தலம் சோழன் கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயிலைக் கொண்டது என்பதும், ஞானசம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம் எனவும் அறிகின்றோம். எனவே மருகல் ஒரு பழமையான தலம், பக்தியால் பெருமை பெற்ற தலம் என்பது தெரிவது மட்டுமல்லாது இது ஒருபெரும் குடியேற்றப் பகுதியாக, நாட்டுப் பகுதியாக இருந்திருக்கின்றது என்பதும், எனவேதான் சோழனால் இங்கு மாடக் கோயில் எழுப்பப்பட்டது என்றதொரு எண்ணமும் நாம் உணர்வதற்கு வழி வகுப்பது. சேழக்கிழார் பாடிய,

'கொள்ளுமியல்பிற் குடி முதலோர் மலிந்த செல்வக் குல
பதியாம்
தெள்ளும் திரைகள் மதகு தோறும் சேறும் கயலும் செழு
மணியும்
தள்ளும் பொன்னி நீர் நாட்டு மருத நாட்டுத் தஞ்சாவூர்
(பெரிய செருத்—1)

என்ற பாடலடிகளாகும். எனவே மருகல் நாட்டின் ஒரு பகுதியாக அமைந்திருந்தது தஞ்சாவூர் என்பது தெளிவாகிறது. மேலும் பொன்னி நாட்டைச் சார்ந்தது என்பதும் புரிகின்றது. இந்நிலையில் மக்கள் வாழ்ந்த பகுதியாக இது முன்பு இருந்தாலும், இடைக்காலத்தில் சோழர்களின் தலைநகராக அமைந்த பின்னரே சீர் பெறத் தொடங்கியது என்பது தெளிவு. சுந்தரர் பாடலில் நின்றும், தஞ்சையைப் பற்றிய இவ்வொரு எண்ணமும் தெளிவாகிறது. அதாவது, அவர், பிற அடியார்க்கு எல்லாம் தான் அடியேன் என்று பாடும் நிலையில்,

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார் நம்பி யிடம்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணை தன்னடியார்க்கு மடியேன்
(39-9)

என்கின்றார் எனவே தஞ்சையை ஆண்ட மன்னவனாகச் செருத்துணை நாயனார் காட்டப்படுகின்றார். ஆயின் இவர் கதையைக் கூறும் சேக்கிழார், தஞ்சாவூரில்,

சீரின் விளங்கும் அப்பதியில் திருந்து வேளாண்குடி முதல்வர்
நீரின் மலிந்த செய்ய சடை நீற்றர் கூற்றின் நெஞ்சிடித்த
வேரி மலர்ந்த பூங்கழல்சூழ் மெய்யன் புடைய சைவரெனப்
பாரில் நிகழ்ந்த செருத்துணையார் பரவுத் தொண்டின்
நெறி நிற்றார் (பெரிய-61—2)

எனப் பாடுகின்றார். இங்கு வேளாண் குடி முதல்வர் எனக் காட்டப்படுகின்றாரே தவிர, தஞ்சை மன்னர் எனச் சுட்டப் படவில்லை. இந்நிலையில் வேளாண்குடியைச் சார்ந்த இவர் தஞ்சையை ஆண்ட குறுநில மன்னராக இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. எனவே இவ்வூரின் பழமை புலனாகிறது. மேலும் இவர் கதையிலேயே சேக்கிழார்,

உலகு நிகழ்ந்த பல்லவர் கோச் சிங்கர் உரிமைப் பெருந்
தேவி-(பெரிய-61-4)

எனப்பாடும் நிலையில், அப்பொழுது ஆண்ட மன்னன் பல்லவன் என்ற உண்மை புலப்படுகிறது. எனவே பல்லவர் ஆட்சி காலத்திலேயே இவ்வூர்ப் பெயர் பற்றிய எண்ணம் தெளிவுபடுகிறது.

இராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலுக்கு, முன்னர் அங்கு இருந்த தஞ்சைத் தளிகுலத்தார் பற்றிய எண்ணம் திருநாவுக்கரசர் பாடலில் அமைகிறது (265-8). எனினும் பெரிய கோயில் அளவிற்கு இக்கோயில் பெருமையுடன் இருந்திருக்கவில்லை என்பதை, நாயன்மார் பாடல் பெறாத நிலை காட்டுகிறது. திருவீழிமிழலை பதிகத்தில், பல கோயில் பெற்ற ஊர்களையும் சொல்லிச் செல்லும் நிலையில் 'தஞ்சைத் தளிக் குளத்தார்' என இவர் பாடும் நிலையிலேயே இவ்வூர் பற்றி தெரிய வருகின்றோம்.

'தஞ்சை' என்று மரூஉப் பெயராக அமையும் நிலையும் தஞ்சாவூர் என்றே வழங்கப்படும் நிலையும் நாம் காணும் நிலை இப்பாடல்களினின்றும் அமைகிறது. இவற்றுள் இவ்வூர்ப் பெயர் தோற்றம் குறித்த எண்ணங்கள் தெளிவு பெறவில்லை. எனினும் 'தஞ்சை' என்பது மரூஉப் பெயர் என்பதைப் பலரின் கருத்து உறுதிப்படுத்துகிறது.[1] தஞ்சாவூர் என்பதன் மரூஉவா? அல்லது தஞ்சாக்கூர் என்பதன் மரூஉவா? என்பது மேலும் ஆய்விற் குரியது. திரு. நாச்சிமுத்து தஞ்சாக்கூர் என்பதன் மரூஉவே தஞ்சை என்கின்றார்.[2] வடமொழி நூலான தஞ்சாக்கூர் புராணம், தஞ்சாக்கூரின் முன்னைய பெயர் அளகாபுரி எனவும்; தஞ்சாசுரன் என்னும் அசுரன் காரணமாக இப்பெயர் எழுந்த தாகவும், தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி என்ற நூல் இவ்வூரைக்கருடங்கோட்டை எனவும், தஞ்சாறை தஞ்சாவூர் என்பதாகவும், புகலிடம் காரணமாக இப்பெயர் அமைந்ததாக வும் போன்ற பல கருத்துகளில் இறுதி கருத்தே ஒப்புக்கொள்ளக் கூடியது என்பது தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் ஆசிரியர் கருத்து (பக்-34-35).

தஞ்சன் என்ற அசுரன் ஊர் தஞ்சாவூர் என்பது ஏற்றுக் கொள் ளக்கூடியதன்று என்ற எண்ணமும் அமைகிறது[3] புகலிடம் என்ற கருத்து பொருத்தமுடையதாயினும், தஞ்சாக்கூர் என்ற இதன் முதற்பெயர் மேலும் இவ்வூர் பற்றி ஆராயத் தூண்டுகிறது. 'ஆக்கூர்' என்றதொரு பாடல் பெற்ற தலம் தஞ்சாவூர் மாவட் டத்தில் அமைகிறது. கோச் செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில் பெற்ற தலம் இது. இங்கு வேளாளர் வாழ்ந்து சிறப்புற்ற நிலையை ஞானசம்பந்தர் பாடல் சுட்டுகின்றது. பிறருக்காக உணவு ஆக்குபவர் வாழும் ஊர் என்ற நிலையில் ஆக்கூர் என்ற பெயர் வந்தது என்பது ஆக்கூர் பற்றிய ஆய்வு தந்த கருத்து. தஞ்சை பற்றிய சேக்கிழார் எண்ணமும்வேளாளர் வாழ்ந்து சிறப்புற்றமையை நமக்கு உணர்த்துகிறது. இந் நிலையில் தஞ்சாக்கூர் என்பதன் பழம் பெயர் 'ஆக்கூராக'

---

1. மரூஉக்களுக்கு மலாடு, சோணாடு, தஞ்சை, ஆறை போன்ற பெயர்களை உதாரணமாகக் காட்டுவர் உரை யாசிரியர்கள் (தொல், எழுத்து 483)-தமிழ் இடப்பெய ராய்வு-பக்-82
2. ,, ,, பக்-82
3. வேங்கடம் முதல் குமரிவரை-பக். 169

இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. ஆக்கூரில் வாழ்ந்த வேளாளர் இங்கு வந்து குடியேறிய பின்னர் இதனைத் தனிப்படுத்த 'தம் ஆக்கூர்' எனச் சுட்டியிருக்கலாம். பின்னர் இவ்வூர் தஞ்சாக்கூர் எனத் திரிந்திருக்கலாம் எனக் கொள்ளலாம். மேலும் ஆக்கூரில் உள்ள கோயிலும் மாடக்கோயில், கோச் செங்கட்சோழனால் கட்டப்பட்டது என அறிகின்றோம். தஞ்சாவூர் இருந்த மருக நாட்டுப் கோயிலும் கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்டது என அறிகின்றபொழுது, இரண்டும் சைவப்பற்றுடையார் வாழ்ந்த நிலையிலும் ஒப்புமை காட்டுகிறது.

## 188. தருமபுரம்

காரைக்காலின் அருகில் உள்ள சிவந்தலம் இது. அறக் கடவுள் வழிபட்ட தலம் காரணமாக இப்பெயர் அமைந்தது என்பர்.[1] கொடிமதில் சூழ் தருமபுரம் என இதனைச் சேக்கிழார் குறிப்பர். ஞானசம்பந்தர் தேவாரம் (பதி 136) சிவனின் பெருமைகளைச் சுட்டியே அமைவதால் இவ்வூர் குறித்த எண்ணங்கள் தெளிவு பெறவில்லை. எனினும் செழிப்பு மிக்க இடம் என்பது இவரது பாடலடிகள் வழி தெரிய வருகின்றன.

'தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயிறரும புரம்பதியே' (136-1)

திருநாவுக்கரசரும் தம் பதிகத்தில் (216) 'தருமபுரத்துள்ளார்' என இறைவனைக் குறிப்பிடுகின்றார். இன்று வரை இப்பெயரி லேயே திகழும் நிலையில் இவ்விடம் அமைகிறது.

## 189. தலைச்சங்காடு

இன்றும் இப்பெயரிலேயே வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்தது. திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது இத்தலம்.

'வேடஞ்சூழ் கொள்கையீர் வேண்டி நீண்ட வெண்டிங்கள்
ஓடஞ்சூழ் கங்கையு முச்சி வைத்தீர் தலைச்சங்கை
கூடஞ்சூழ் மண்டபமும் குலாயவாசற் கொடித் தோன்றும்
மாடஞ்சூழ் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே' (391-4)

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக் 303

என்ற சம்பந்தர் தேவாரப்பாடல், இத்தலம் பற்றிய பல எண்ணங்களைத் தருகின்றது. தலைச்சங்கையில் உள்ள கோயில் இறைவன் இங்குப் பாடப்படுகின்ற நிலையில் 'தலைச் சங்கை' ஊர்ப்பெயர் என்பது விளக்கமாகின்றது. மேலும் கோயில் பெரிய கோயிலாகத் திகழ்ந்தது என்பது மண்டபம், கொடி போன்ற எண்ணங்கள் உணர்த்தும் எண்ணம். மட்டுமல்லாது தலைச் சங்காடு என்ற பெயரைத் தலைச்சங்கை என்று, மருவு நிலையில் குறிப்பிடும் தன்மையும் இவண் தெரியவருகின்றது. கல்வெட்டில் இப்பெயர் தலைச்சங்காடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.[1] எனவே செங்காடு என, செங்குன்றம் போன்று இப்பெயர் அமைந்திருக்கலாம். எனினும் சில எண்ணங்கள் இங்குச் சிந்திக்கத் தக்கன. சிலப்பதிகாரம் அடைக்கலக் காதையில் மாடலன் பற்றி பேசுமிடத்தில் இளங்கோவடிகள்,

> 'தாழ்நீர் வேலித் தலைச் செங்கானத்து
> நான் மறை முற்றிய நலம்புரிக் கொள்கை
> மாமறை முதல்வன் மாடலன் என்போன்

எனக் காட்டுகின்றார். அடியார்க்கு நல்லார் தாழ்ந்த நீரை வேலியாக உடைய, தலைச் செங்காடென்னும் ஊரிடத்து எனக் கூறிச் செல்கின்றார். இதற்குக் குறிப்புரை எழுதும் நிலையில் உ. வே. சா, தலைச்செங்காடென்பது காவிரிபூம்பட்டினத்திற்குத் தென் மேற்கே நான்கு நாழிகை வழித் தூரத்தில்உள்ள தேவாரம் பெற்ற சிவஸ்தலம் என்கின்றார்.[2] இந்நிலையில் இவ்வூரின் பழமையுடன் செங்குன்றம் போன்று இவ்வூர் பெயர் பெற்றமையும் தெளிவு பெறுகிறது. கல்வெட்டிலும் தலைச் செங்காடு என்ற வழக்கு அமைகிறது. பின்னர் மக்கள் வழக்கில் இவ்வூர் தலைச் சங்காடு என்று வழங்கப்பட்டு இன்று வரை அந்நிலையே நீடிக்கிறது இப்பெயரின் மரூஉவாகச் சங்கை என்பதனைத் தேவாரப் பாடல் உரைக்க, 'தலைசை' என்ற மரூஉவும் இதற்கு உண்டு என்ற எண்ணத்தையும் காண்கின்றோம்."

---

1. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்—பக்-113
2. சிலப்பதிகாரம்-பக். 398
3. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் பக். 91

## 190. தலையாலங்காடு

தலையாலங்காடு என்ற பெயர் கொண்ட ஊர் இன்றும் இப்பெயரிலேயே சுட்டப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம சார்ந்தது இது. திருவாலங்காடு என்று சென்னைக்கருகில் உள்ள, காரைக்கால் அம்மையார், தேவார மூவர் போன்ற பலராலும் பாடப்பட்ட தலத்தினின்றும் வேறுபட்ட தலம் இது. இவ்வூர் சிவன் கோயில் சிறப்பு பெற்றது. இதனைக் கபிலதேவநாயனார், அப்பர் பாடிய பாடல்கள் வழியுணரலாம்.

'தலையாலங் காட்டிற் பலிதிரிவர் என்றும்
தலையாலங்காடர் தாம் என்றும்' (93)

என்ற பாடலடி, சிவபெருமான் திருவந்தாதியில் இடம்பெறுகிறது. திருநாவுக்கரசர் இவ்வூர் இறைவனைப் பற்றிப் பாடும் பதிகத்தில் (293) இவ்வூர் பற்றி எதுவும் விளங்கவில்லை. ஞானசம்பந்தரும் 'பாடொலிநீர்த் தலையாலங்காடு (373) வணங்கிச் சென்ற நிலையைச் சேக்கிழார் பாடுதலில் அறிகிறோம். எனவே காரைக்கால் அம்மையார் திருவாலங்காட்டைப் பற்றிப் பாடிய போதிலும் தலையாலங்காடு என்ற இப்பெயரில் உள்ள 'தலை', என்ற சொல் பழமையைக் குறிக்கிறது. இந்நிலையில் பண்டைத் தமிழ் மன்னரான தலையாலங் கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் போர் செய்து வென்ற தலையாலங் கானமாக இருக்கலாமா? என்பது எண்ணற்குரியது. உ. வே. சா தன் புறநானூற்று அரும்பத அகராதியில், ஆலங்கானம் தலையாலங்கானம் என்னும் பெயரையுடைய தோரூர். இப்பொழுது தலையாலங்காடென்று வழங்கப்படுகிறது. இதில் நெடுஞ்செழியன் இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் பொருது வென்றனன் எனக்குறிப்பிடும் நிலை இவ்வெண்ணத்தை உறுதிப்படுத்துகிறது.

## 191. தலையூர்

நம்பியாண்டார் நம்பியால் சுட்டப்படும் இவ்வூர்[1]. சோழ நாட்டு ஊர்என்பது தெரிய வருகிறது. உருத்திர பசுபதிநாயனார் புராணத்தில், நாயனாரின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் நிலையில் அவர் பிறந்த ஊரினை,

---

1. பைந்தார் உருத்ரபசுபதி தன்னற்பதி வயற்கே
நந்தார் திருத்தலை யூரென் றுரைப்பர் இந்நானிலத்தே
(திருத்-திருவந்-19)

நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும் புனல் நீத்தம்
மலர்த் தடம்பணை வயல்புகு பொன்னி நன்னாட்டுக்
குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
நலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத்தலையூர்' (1)

எனப் பாடுகின்றார். இப்பாடலின் இறுதி வரி, ஊரின் தலை சிறந்த நிலைபற்றி அதன் காரணமாகப் பெயரும் அமைந்திருக்குமோ என்ற உணர்வினைத் தருகிறது. பிற எண்ணங்கள் தெளிவில்லை.

## 192. தவத்துறை

இதனை, ஞானசம்பந்தர் வணங்கிச் சென்ற தலமாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

கைதொழு தேத்திப் புறத்தணைந்து காமர்பதியதன் கட்சில நாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார் மற்றும் தவத்துறை வானவர்தாள்
எய்தி இறைஞ்சி எழுந்து நின்றே இன்தமிழ் மாலைக் கொண்டேத்திப்போந்து
வைதிக மாமணி அம்மருங்கு மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார்
(34 - 347)

ஆனைக்காவில் வணங்கிய பின்னர் இங்கு வரும் தன்மை (34-346) ஆனைக்காவிற்குப் பக்கத்தில் இத்தலம் இருக்கலாம் என்ற எண்ணத்தைத் தருகிறது. மட்டுமல்லாது, திருநாவுக்கரசரும் இக்கோயிலைக் குறிப்பிடுகின்றார்.

பண்டெழுவர் தவத்துறை வெண்டுறை (க்ஷேத்திரக்-11)
இத்தவத்துறை, பண்டெழுவர் தவத்துறை என்று

சுட்டப்படுவதால் எழுவர் சிவபிரானை நோக்கி, தவஞ் செய்து, பேறு பெற்ற தலமாதல் பற்றித் தவத்துறை என்ற பெயர் வழங்கலாயிற்று என்ற கருத்து அமைகிறது[1]. இது இன்று லால்குடி என அழைக்கப்படுகிறது. திருவானைக்காவிற்கு 12 மைல் தொலைவில் உள்ளது என்ற எண்ணமும் அமைகிறது. எனவே இது திருச்சி மாவட்டமாக அமையலாம். இவ்வூரில் புராதனச் சிற்பத் திறம் வாய்ந்த சிவாலயமொன்று உண்டு. இக்

1. ஆராய்ச்சித் தொகுதி—பக் 285

கோயிலின் செந்நிறமான கோபுரத் தோற்றத்தைக் கொண்டு சிவப்பு ஸ்தானம் என்ற பொருளுடைய லால்குடி என்ற பெயரை இதற்கு இஸ்லாமியர் வழங்கினர் என்ற எண்ணம் லால்குடி என்ற பெயர்க் காரணம் சுட்டுகிறது.[1] எனவே தவத்துறை என்ற ஊர் பற்றிய எண்ணம் திருநாவுக்கரசர் காலத்திலேயே அமைய, கோயில் அடிப்படையில் இப்பெயர் அமைந்திருக்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது. இக்கோயில் கல்வெட்டுகள் அரசியல் நிலையிலும் இக்கோயிலும் ஊரும் மிகவும் போற்றப்பட்டதைத் தெரிவிக்கின்றன.

மேலும் துறை என்று நோக்க, ஆற்றங்கரைப் பகுதியாக இருக்கலாம் என்ற எண்ணம் அமைகிறது. அருணகிரிநாதர் திருப்புகழில்,

சீரணியுந் திரை தத்தி முத்தேறி
காவிரியின் கரையொத்து மொத்திய
சீர்புனைகின்ற திருத்தவத்துறை வாழும் வாழ்வே

என்று சுட்டுவது, மேற்கண்ட கருத்தினையுறுதிப்படுத்த வல்லது

### 193. திங்களூர்

சிவத்தொண்டினால் பெருமை பெற்ற அப்பூதி அடிகளின் பிறந்த ஊர் திங்களூர். இதனை, நம்பியாண்டார் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் (29) குறிப்பிடுகின்றார். இவ்வூரினைச், சேக்கிழார், சித நீர் வயல் சூழ் திங்கள் ஊரில் அப்பூதியார் (காரைக்—66) எனச் சுட்டுகின்றனர். சந்திரனோடு இவ்வூர்ப்பெயர் தொடர்புடையது என்பது ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் கருத்து[2].

### 194. திருஇடஎந்தை

தொண்டை நாட்டுத் தலமாகிய இப்பதி, மாமல்லபுரம் சென்னை வழியில் உள்ள ஒரு சிறிய ஊர். திருமால் கோயில் கொண்ட ஊர். இறை மேலுள்ள புராணக் கதை ஒன்றின் அடிப்படையில் திரு இடவெந்தை என்ற பெயரைத் தாங்கி நிற்கிறது

1. ஆராய்ச்சித் தொகுதி—பக் 284
2. ஊரும் பேரும்—பக்-273

என அறிகின்றோம். இப்பெயர் தவிர, இவ்வூருக்கு, நித்திய கல்யாணபுரி, ஸ்ரீபுரி, வராகபுரி என்ற பெயர்களும் அன்று வழங்கின.[1] எனினும் செல்வாக்கு காரணமாகத் திருஇடவெந்தையே இன்று வரை நிலைபெற்ற பெயராக அமைகிறது. இக்கோயில் சிறப்புப்பெற்று, இப்பெயர் செல்வாக்குப் பெறுமுன்பு வேறு பெயரைக்கொண்டு இவ்வூர் திகழ்ந்ததோ என்ற எண்ணத்தைக் கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் 'அசுர குல கால நல்லூர் என்பதைக்காணும்போது ஏற்படுகிறது.[2] மேலும் இப்பெயர் செல்வாக்கில் அசுரகுல கால நல்லூர் என்ற பெயர் மறைவும் தெரியவருகிறது

திருமங்கையாழ்வார் பாடல் பெற்றது இவ்வூர் (பெரிய திருமொழி - 2).

### 195. திருத்தினைநகர்

தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்து அமையும் இவ்வூர் இன்று தீர்த்தனகிரி எனச் சுட்டப்படுகிறது.

'பெரியான் என்னும் பள்ளன் தன் நிலத்தை உழுது கொண்டு இருக்கும்போது இறைவன் அடியாராக வந்து அன்னம் வேண்டி

---

1. குனி என்ற முனிவரின் பணிப் பெண்ணாகிய கன்னிகைக் காலவ முனிவர்க்குப் பிறந்த பெரிய பிராட்டியார் அம்சமாகிய 360 கன்னியரையும் ஓர் உருவாக்கி, தம் இடப் பாகத்தில் தாங்கி, எல்லோருக்குப் ஞான உபதேசம் செய்தார். ஆண்டு முடியும் அளவும் நாடோறும் திருமணம் புரிந்து கொண்டபடியால் வராக மூர்த்திக்கு நித்திய கல்யாணப் பெருமாள்என்ற மறு திருநாமமும் ஏற்பட்டது. பெருமாளுடைய திருக்கோயிலாதலால் நித்திய கல்யாணபுரி என்று ஊருக்கு மறுபெயரும் பெரிய பிராட்டியார் அவதரித்த இடமாதலால் ஸ்ரீபுரி என்ற பெயரும், எம்பெருமான் வராக வடிவத்துடன் சேவை சாதிக்கின்றபடியால் வராகபுரி என்ற பெயரும் வழங்கலாயின.

தொண்டை நாட்டுத் திருப்பதிகள் பக் 210-11

2. ,, ,, பக் 211

வார். அவன் தன்பணியை நிறுத்தி, அடியவரை அங்கேயே இருக்கச்செய்து உணவு கொண்டு வரத் தன் இருப்பிடம் சென்றான். அவன் திரும்பி வருவதற்குள் பெருமான் அந்நிலத்தில் தினைவிளைந்திருக்குமாறு செய்து மறைந்தார். வந்த பெரியான் திகைப்புற, அவனுக்குக் காட்சி தந்தார். அதிசயமாகத் தினை விளைந்ததால் 'தினைநகர்' என்னும் பெயர் பெற்றது என்ற புராணக்கதை இந்நகருக்குரியது.

சுந்தரர் பாடல்பெற்ற இத்தலம் எவ்வாறு இப்பெயர் பெற்றது எனக் காணின் 'தினை' வளமிக்க காரணமே என்பது வெளிப்படை. 'தினைநகர்' பற்றிய சுந்தரர் பாடல்கள், (54) இதன் செழிப்பினை, 'சேறு தங்கிய திருத்தினை நகர் (1) வார் பொழில் திருத்தினை நகர் (2) செடிகொள் கான்மலி திருத்தினைநகர் (3) செந்நெலார் வயற் திருத்தினை நகர் (7) செருந்தி பொன் மலர் திருத்தினை நகர் (8) என்றெல்லாம் சுட்டுகின்றன. எனினும் ஒரே ஒரு பாடல், சிமய மார் பொழிற் றிருத்தினை நகர் (9) எனக் காட்டும் தன்மை, தினை வளரும் மலைப்பகுதியை எண்ணச்செய்கிறது மேலும் 'தீர்த்தனகிரி' என, பிறமொழி மாற்றத்தால் பெற்ற பெயரும் மலையையே எண்ணச் செய்கிறது. எனினும் இன்று இப்பகுதியில் மலைகள் இல்லாமை, சிறிது தொலைவில் மலைகள் உள்ளமை இவற்றை நோக்க, இப்பகுதி முழுமையும் இப்பெயரால் வழங்கப்பட்டு இருக்கலாம் எனத் தோன்றுகிறது. ஏனெனில் நகர் என்ற பொதுக்கூறு அதிக பரப்பைச் சுட்டும் நிலையில் இதனையே எண்ணச் செய்கிறது. மேலும் இவ்வூர் பற்றிய பிற எண்ணங்கள் விளக்கம் தரலாம்.

சுந்தரர் பாடல் பெற்றாலும், திருநாவுக்கரசரும் இத்தலம் சென்று வணங்கிப் பாடினார் என்றக் குறிப்பினை, சேக்கிழாரின் பெரிய புராணம் தருகிறது.

செல்வம் மல்கிய தில்லை மூதூரினில் திருநடம் பணிந்து ஏத்திப்
பரமர் தம் திருத்தினை நகர்பாடி—பெரிய திருநா-962

## 196. திருந்து தேவன் குடி

திருந்து தேவன் குடி என்று இன்றும் வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. ஞானசம்பந்தர் பாடல் பெற்றது இத்தலக் கோயில். ஊர் இல்லை; ஞான சம்பந்தர் பாடல் பெற்ற இக்கோயில் மட்டும் வயலுக்கு மத்தி

யில் உள்ளது என்ற குறிப்பு ஊர் இருந்து, மக்கள் பிற இடங்கட்குச் சென்ற நிலையைக் காட்டுகிறது. ஞானசம்பந்தர் பாடல் இவ்வூர் பற்றிய இறைச் சிறப்பையே காட்டுகின்றது. இருப்பினும் பெரிய புராணம் இவ்வூர் குறித்துச்சுட்டும் எண்ணங்கள், திருந்து தேவன் குடியில் இருந்த சிவன் பற்றிக் கூறும் நிலையினை இங்குக் காட்டலாம்.

செங்கண் மாலுக்கரியார் தம் திருந்து தேவன் குடிசார்ந்தார்
(திருநா-294)

எனச் சேக்கிழார் சுட்டி, மேலும்

திருந்து தேவன் குடிமன்னும் சிவபெருமான் கோயில் எய்தி
(திருஞான-295)

என்றும், மொய்திகழ் சோலை அம்மூதூர் முன்னகன்று (296) என்றும் கூறும் நிலையில் இது ஒரு ஊராக இருந்தது என்பது தெளிவாக விளங்குகிறது. 'குடி' என்ற பொதுக் கூறு குடியிருப்புப் பகுதியைச் சுட்டும் தன்மையும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது, இறைவன் கோயில் கொண்ட நிலையில் தேவர் குடியாகியிருக்க வாய்ப்பு அமைகிறது.

## 197. திருநகரி

திருநகரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தலம். திருமால் கோயில் சிறப்பு. ஆழ்வார்கள் பாடல் பெற்ற தலம்.

## 198. தில்லை

சிதம்பரம் என்ற பெயரில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள தலம் இது.

"தில்லை என்னும் மரங்கள் அடர்ந்திருந்த காரணத்தால் இத்தலத்திற்குத் தில்லை என்னும் பெயர் உண்டாயிற்று என்பது எளிதாகத் தெரியும் நிலை. புலிப்பாதர் என்னும் முனிவர் பூசித்தமையால் புலியூர் என்ற பெயர் உண்டு. சித் + அம்பரம் → சிதம்பரம். சித்-அறிவு அம்பரம்-வெட்டவெளி. பொன் வேயப் பெற்று ஒரு மலைபோல் ஓங்கிப் பொன்னொளி வீசி நாற்றிசையும் பரவியிருத்தலால் இத்தலத்திற்குத் தட்சிணமேரு என்னும் பெயரும் தோன்றி விளங்குகின்றது. இத்தலத்திற்குப் பூலோகக் கைலாசம் புண்டரீகபுரம் முதலிய வேறு பெயர்களும் உண்டு[1]. சிற்றம்பலம் என்ற

1. புண்ணிய கோயில்களும் புனிதத் தீர்த்தங்களும்-பக். 42

பெயரின் மரூஉ சிதம்பரம் என்பர்[1] ஊர் தில்லை எனவும் சிதம்பரம் கோயிலையும் குறித்து நிற்கிறது. எனினும், இன்று ஊரையும் சிதம்பரம் என்று சுட்டும் வழக்கே அமைகிறது. கோயில் என்றாலே சிதம்பரம் கோயில் என்று சுட்டும் தன்மை இக்கோயிலின் மிகுந்த செல்வாக்கைத் தெரிவிக்கும் வண்ணம் அமைகின்றது. வைணவ நூல்கள் இவ்வூரைத் தெற்றி அம்பலம் என்றும், திருச்சித்திரகூடம் என்றும் குறிப்பிடுகின்றன.[2] 'அனைத்துலகும் தொழும் தில்லை' என மாணிக்கவாசகர் இவ்வூரைச் சிறப்பித்துள்ளது இக்கோயில் பெருமையைச் சிறப்பாகப் பறைசாற்ற வல்லது.

## 199. திலதைப்பதி

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர் இன்று வழக்கில் திலதர்ப்பணபுரி எனவும், மதிமுத்தம் எனவும் வழங்கப் படுகிறது.[3] அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள இத்தலம் ஞானசம்பந்தர் பாடல்பெற்ற கோயிலைக் கொண்டது.

பொடிகள் பூசிப்பல தொண்டர் கூடிப்புலர் காலையே
அடிகளாரத் தொழுதேத்த நின்றவ் வழகன்னிடம்
கொடிகளோங்கிக் குலவும் விழவார்திலதைப்பதி
வடிகொள் சோலைம் மலர் மணங்கமழும் மதிமுத்தமே

(254-1)

என்று இவர் பாடும் நிலையில் திலதைப்பதி ஊர்ப்பெயர் என்பதும், மலர் மணங்கமழும் மதிமுத்தம் கோயிற்பெயர் என்பதும் தெளிவுறுகின்றன. இக்கோயிற் பெயர் பின்னர் செல்வாக்குப் பெற்று, திலதைப்பதியைச் செல்வாக்கிழக்கச் செய்துவிட்டதை இன்று 'மதிமுத்தம்' எனச் சுட்டும் வழக்கு தருகின்றது.

அரிசிலாற்றங்கரையில் அமைந்த இவ்வூரினை,
'தெண்டிரைப்பூம் புனல் அரிசில் சூழ்ந்த திலதைப்பதி'

(254-2)

என்ற சம்பந்தர் பாடலடிகள் உணர்த்துகின்றன. மேலும் இவ்வூரின் செழிப்பும் இவர் பாடல்களில் புலனாகின்றது

---

1. கோயில்-பக். 197
2. ,, பக். 198
3. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-313

திலதைப்பதி என்ற ஊர்ப்பெயரின் பொருளை நோக்க, சில எண்ணங்கள் புலனாகின்றன. இயற்கைச் செழிப்புள்ள இடமிது. இந்நிலையில் 'திலதை' என்பது மரவகையாக இருக்குமோ எனக் காணின், திலகம், திலதம் என்ற இரண்டு சொற்களாலும் குறிக்கப்பட்ட மஞ்சாடி மரத்தைப்பற்றிய செய்தி தெரியவருகின்றது.

'தெரிமுத்தம் சேர்ந்த திலதம்' என கலித்தொகையும் (92)
'மரவமும் நாகமும் திலகமும் மருதமும்' எனச் சிலம்பும்
(13-152)

இதனைச் சுட்டுகின்றன. இந்நிலையில் மஞ்சாடி மரங்கள் நிறைந்த இடம் என்ற நிலையில் 'திலதப்பதி' என்ற இடம் திலதைப் பதி ஆகியிருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது. ஆயின் இங்குள்ள கோயில் சிறப்பு பெற்று, பக்தியின் செல்வாக்கு மிக்க காலத்தில், திலதைப்பதி என்று பாடல் பெற்ற இத்தலம் திலதர்ப் பணபுரி என பிற மொழியாளர்களால் பெயர் மாற்றம் செய்யப் பட்டு, அதற்கேற்ற புராணக் கதையையும் பெற்றுவிட்டது[1] எனக் கருத வாய்ப்பு அமைகிறது. சேக்கிழார் காலத்திலும் ''திலதைப்பதி' என்றே கருதப்பட்ட நிலை (34-549) இதன் பழம் பெயரை யுணர்த்தும், இக்கதையின் உண்மையின்மையையும் காட்டும்.

## 200. துடையூர்

திருநாவுக்கரசரின் 'அடைவுத் திருத்தாண்டகப் பதிகத்தில் சுட்டப்படும் ஊர் இது.

'துறையூரும் துவையூரும் தோழூர் தானும்
துடையூரும் தொழவிடர் கடடொடரா வன்றே' 285-4

## 201. துருத்தி

இன்று குத்தாலம் என வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டம் சார்ந்து அமைகிறது. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற பலரால் பாடல் பெற்ற சிறப்புடையது.

---

1. இராம இலக்குமணர் தம் தந்தையாருக்குத் திலதர்ப் பணம் செய்த இடம் என்பர்.
—சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 313

கும்பகோணம் மாயூரம் இருப்புப்பாதையில் உள்ள புகை வண்டி நிலையம் இது எனக் காண்கின்றோம்.[1] மேலும் காவிரிக்குத் தென் கரையில் உள்ள இடம் என அறியும்போது அன்று குறிப்பிட்ட பகுதியைச் சுட்டிய இவ்வூர்ப் பெயர் இன்று பரந்ததொரு பகுதியைச் சுட்டுவதையும் நாம் காண்கின்றோம். மேலும, அன்று காவிரியின் நடுவில் இருந்த தலம் இன்று கரையில் இருக்கிறது என்பதை அறிய நீரின் போக்கு மாற்றமும் உணர இயலுகின்றது.

பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல்பொலிந்து போற்றும்
துன்னிய துருத்தியான் —திருநா-42-5
திடைத்தடம் பொன்னிசூழ்திருத் துருத்தியினில்
—பெரிய-34-486

காவிரிக்கரையில் இதன் இருப்பிடத்தை, காவிரிக்கரைத் தலைத் துருத்தி என ஞானசம்பந்தர் இயம்புகின்றார் (234-1). இங்குள்ள இறைவன் சிறப்பை,ஷேத்திரக் கோவை வெண்பா, 'திருத்துருத்தியான் பாதம்சேர் (5) எனவும், திருவாசகம் துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும் (கீர்த்தி 86) எனவும் பேசுகின்றன.

நீரின் போக்கு மாறி, காவிரியின் தென்கரையில் அமர்ந்ததன் காரணமாகத் தான் 'துருத்தி' என்ற இதன் பெயர் செல்வாக்கு இழக்க, குற்றாலம் என்ற பெயர் சிறப்புற்றதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

ஒரு வகை ஆத்தி மரம் தலவிருட்சமாக அமைந்த காரணத்தால் குத்தாலம் எனப் பெயர் பெற்றதாக இப்பெயர்க் காரணம் சுட்டுகின்றனர்[2] ஆல் நிறைய இருந்ததால் என்றும், கோயில் தல விருட்சமாகிய உத்தாலம் என்னும் மரத்தின் காரணமாகவே இவ்வூருக்கு இப்பெயர் வந்தது என்றும் சுட்டப்படுவதும் அமைகிறது.[3]

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-70
2. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 93
3. தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்-பக். 89

202. துவையூர்

திருநாவுக்கரசரின் அடைவுத் திருத்தாண்டகத்தில் சுட்டப் படும் ஊர் இது (285 4).

203. துறையூர்

சுந்தரர் பாடல் பெற்ற இவ்வூர் இன்று 'திருத்தளூர்' என வழங்கப்படுகிறது. திருத்தலூர் எனவும் வழங்குவர். தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. இன்றும் பெண்ணையாற்றின் கரையில் காணப்படும் இதனைச் சுந்தரர்,

மலையார் அருவித் திரள் மாமணியுந்திக்
குலையாரக் கொணர்ந் தெற்றியோர் பெண்ணைவடபால்
கலையாரல்குற் கன்னியராடும் துறையூர்த்
தலைவா வுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே (1-13)

எனப் பலவாறு பாடும் தன்மை,[1] பெண்ணையாற்றினால் செழிப் புற்ற நிலையைக் காட்டும். பெண்ணையாற்றின் துறையில் அமைந்த காரணத்தில் 'துறையூர்' எனப்பெயர் பெற்றிருக்கிறது என்பதும் இவண் தெளிவாகின்றது. திருநாவுக்கரசரும் துறை யூரைச் சுட்டும் தன்மை, இதன் பழமையைக் காட்டும்.

துறையூரும் துவையூரும் தோழூர் தானும்
துடையூரும் தொழவிடர் கடடொடரா வன்றே (285-4)

இவ்வூர்க் கோயிலில் சோழமன்னர், நாயக்கர், சம்புவராயர் காலத்திய கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இக்கல்வெட்டுகளில் அனைத்தும் 'திருத்துறையூர்' என்ற பெயராலேயே இவ்வூர்ச் சுட்டப்படுவது. இக்கோயில் சிறப்புற்ற நிலை சுந்தரர்க்குப் பின் அவர் பாடல் பெற்றமைக்குப் பின் என்பதைக் காட்டுகிறது. மேலும் இன்றைய திருத்தளூர் என்ற பெயர் வழக்கு 15-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னைய வடிவமே என்பதும் தெரிகிறது.[2]

---

1. மத்தம் மதயானையின் வெண் மருப்புந்தி
முத்தம் கொணர்ந் தெற்றி யொர் பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்
அத்தா வுனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே
சுந். 13-2

2. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் ஏழாம் திருமுறை-பக். 18

## 204 தெங்கூர்

இன்றும் இப்பெயரிலேயே வழங்கப்படும் தலம், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது.

நாவுக்கரசர் 'திருத்தெங்கூராய்' என இவ்வூர் பற்றி குறிப்பிட, (239-1) ஞானசம்பந்தர் தெங்கூரில் கோயில் கொண்ட சிவனைக் குறித்து தனிப்பதிகமே அமைக்கின்றார்.

*சித்தந் தன்னடி நினைவார் செடிபடு கொடுவினை தீர்க்கும்*
*கொத்தின் றாழ்சடை முடிமேற் கோளெயிற் றரவொடு பிறையன்*
*பத்தர் தாம் பணிந்தேத்தும் பரம்பரன் பைம்புனல் பதித்த*
*வித்தன் றாழ்பொழில் றெங்கூர் வெள்ளியம் குன்றமர்ந் தாரே* (229-2)

என இவர் பதிகம் தோறும், தெங்கூர் வெள்ளியங்குன்று எனச் சுட்டும் நிலையைக் காண, தெங்கூர் ஊர்ப்பெயர், வெள்ளியங் குன்று இறை இருந்த இடம் என்பது புலனாகிறது.

பெரிய புராணத்தில் சேக்கிழாரும் தெங்கூர் பற்றி இயம்புகின்றார். திருஞானசம்பந்தர்,

'பைம்புனல் மென் பணைத்தேவூர் அணைந்து போற்றிப்
பரமர்திரு நெல்லிக் காப்பணிந்து பாடி
உம்பர் பிரான் கைச்சினமும் பரவி, தெங்கூர் ஓங்கு புகழ்த்
திருக் கொள்ளிக் காடும் போற்றிச்'
(34-574)

செல்லும் நிலையிலும் இவ்வூர் குறித்த சில எண்ணங்கள் விளக்கம் பெறுகின்றன. 'திருநெல்லிக்காவுக்குப் பக்கத்தில் உள்ளது' என்ற எண்ணம் பெரிய புராணமும் காட்டும் நிலையில் தெங்கூர் இரண்டும் ஒன்று என்பது தெரிகிறது. அடுத்து 'தெங்கூர் ஓங்கு புகழ் திருக்கொள்ளிக்காடும் போற்றி' என இயம்பும் நிலையில் வெள்ளியங்குன்று என சம்பந்தர் சுட்டிய கோயில் பெயர், பின்னர் கொள்ளிக்காடு எனவும் சுட்டப்பட்டிருக்கிறது என்பது விளக்கமாகின்றது.

அடுத்து சுந்தரர் தம் ஊர்த் தொகையில்,
'நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நடப்பானே'
(47—6)

என தெங்கூரைத் தேங்கூர் எனக் குறிப்பிடுகின்றார். இதனைக் கொண்டு 'தேங்கூர்' என்பதே சரியெனக் கொள்வர்.[1] எனினும் முதலில் நாம் காணும் பெயர் தெங்கூர் என்ற நிலையில் மட்டுமல்லாது கல்வெட்டுகளும்[2] 'தெங்கூர்' என்றே குறிப்பிடும் நிலை, 'தெங்கூர்' என்பதே சரியான வடிவம் என்பதற்குத் துணையாகின்றது.

ரா.பி. சேதுப்பிள்ளை, தெங்கூரை மரம் அடிப்படையான பெயராகச் சுட்டுகின்றார்.[3]

## 205. தெள்ளாறு

ஆற்றுப் பெயரால் பெயர் பெற்ற ஊர்ப்பெயர் கோயிற் சிறப்புமுடையது என்பது திருநாவுக்கரசரின் அடைவுத் திருத் தாண்டகப் பதிகம் மூலம் தெரிகிறது.

தெள்ளாறும் வளைகுளமும் தளிக் குளமும், நல்
இடைக்குளமும்' (285-10)

என இதனைச் சுட்டுகின்றார் இவர்.

## 206. தெளிச்சேரி

தற்போது 'கோயில் பத்து' என வழங்கப்படும் இத்தலம் காரைக்காலை அடுத்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற்றது இத்தலம் (139). இவர் பாடல்களின் நிலையில் நின்று நோக்க, இவ்வூர்ப் பெயராகத் 'தெளிச் சேரி' அமைந்திருந்தது என்பதும் செழிப்பான, மக்கள் சிறந்து வாழ்ந்ததொரு ஊர் என்பதும் புலனாகிறது.

---

1. 'திருத் தேங்கூர் என்பது சரியான பெயர். திருத் தேங் கூர்த் தலபுராணம் உள்ளது'—சேக்கிழார் வழியில் சிவத் தலங்கள்—பக்-318
2. தெங்கூர்— இவ்வூரில் ஐந்து கல்வெட்டுகள் படியெடுக் கப்பட்டன—பக்-96
   திருத்தெங்கூர் பற்றிய குறிப்பு—பக்-167—திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள்.
3. இன்னும் தேவாரப்பாடல் பெற்ற தெங்கூரும் பனை யூரும் பாகூரும் கடம்பூரும் மரங்களாற் பெயர் பெற்ற பதிகளே யாகும்—ஊரும் பேரும்-பக். 29

பூவலர்ந்தன கொண்டு முப்போதும்ம் பொற்கழல்
தேவர் வந்து வணங்கு மிகு தெளிச் சேரியீர் (139-1)

வம்படுத்த மலர்ப்பொழில் சூழ மதிதவழ்
செம்படுத்த செழும் புரிசைத் தெளிச் சேரியீர் (139-3)

தவள வெண்பிறை தோய்தரு தாழ்பொழில் சூழநல்
திவள மாமணி மாடந்திகழ் தெளிச் சேரியீர் (139-6)

திக்குலாம் பொழில் சூழ் தெளிச் சேரி (139-11)

'பற்று என்பது நன்செய் நிலமாகும். அது தென்னாட்டில் பத்து எனவும், வடநாட்டில் பட்டு எனவும் திரிந்து வழங்கும். திருக்கோவிலுக்கு நிவந்தமாக விடப்பட்ட நிலங்களையுடைய ஊர் கோவில் பத்து என்று பெயர் பெறும் என ரா.பி. சேதுப் பிள்ளை கூறும் கருத்துடன் (ஊரும் பேரும் பக். 27) இவ்வூர்ப் பெயரான கோவில் பத்து இணைத்து எண்ணத் தக்கது. இதற் குரிய காரைக் கோயிற்பத்து என்ற பெயரையும் குறிப்பிடுகின் றார் சோ. சிவபாத சுந்தரம்[1] இருப்பினும் தெளிச்சேரியில் சேரி குடியிருப்புப் பகுதியைக் குறித்து அமைய 'தெளி'க்குரிய காரணம் புலப்படவில்லை.

## 207. தென்குடித் திட்டை

தற்போது திட்டை என்று வழங்கப்படும் தலம், தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. சம்பந்தர் பாடல் பெற் றது இத்தலம். சம்பந்தர் பாடலடிகள்

மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் தென் குடித்திட்டையே (293-1)

செருந்தி பூமாதவிப் பந்தர் வன் செண்பகம்
திருந்து நீள் வளர் பொழிற் றென்குடித்திட்டையே (293-5)

வண்டிரைக்கும் பொழிற் றண்டலைக் கொண்டலார்
தெண்டிரைத் தண்புனற் றென்குடித் திட்டையே (293-10)

என இவ்வூரின் சிறப்பை எடுத்தியம்புகின்றன.

---

1. சேக்கிழார் அடிச்சுவட்டில்-பக். 189

திட்டை என்பதற்கு வெள்ளெருக்கு, மணற்றிட்டு என இரண்டு பொருட்களைத் தமிழ் லெக்ஸிகன் தரினும் 'திட்டை' மணற் திட்டுகளையுடைய ஊர்ப்பகுதியாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. சம்பந்தர் பாடல்களினின்றும் காவிரிக்கரைத் தலம் இது என்பது புரிகிறது. எனவே தெற்குப் பகுதி இவ்வூரின் திசையைச் சுட்டி, குடிமக்கள் வாழும் திட்டுப்பகுதி என்ற பொருளில் இப்பெயர் அமைந்திருக்க வாய்ப்பு அமைகிறது. இதனை ஒத்த பிறபெயராக, தஞ்சாவூர் சார்ந்த கருந்திட்டைக் குடி அமைகிறது. இவ்வூர் திருநாவுக்கரசர் தேவாரத்தில் குறிக்கப் பெறுகிறது.

## 208. தேவூர்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமையும் இவ் ஊர்ப் பெயரும் மாற்றம் எதுவும் பெறவில்லை. ஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களை இத்தலம் (218, 333) குறித்துப் பாடியுள்ளார். தெண்ணிலாமதி தவழ் தரு மாளிகைத் தேவூரினை (திருஞான. 218-1). திங்கள் சூடிய தீ நிறக் கடவுள் தென் தேவூர் என்றும் பாடுகின்றார். எனவே தெய்வம் இருக்கும் ஊர் தேவூர் எனச் சுட்டப்பட்டதோ எனத் தோன்றுகிறது. தேவர்கள் பூசித்துப் பேறுபெற்ற தலம் என்ற கருத்தும் அமைகிறது[1] 'தேவூர் நாட்டுத் தேவூர்'[2] என்ற கல்வெட்டுத் தொடர், தேவூர் நாடு, தலைநகராய்த் திகழ்ந்தமையைக் காட்டும் நிலையில் இவ்வூரின் சிறப்பு தெளிவுறுகிறது. சேக்கிழார்,

'பைம்புனல் மென் பணைத்தேவூர் அணைந்து' (574)

என ஞானசம்பந்தர் வரலாற்றில் தேவூரைக் குறிப்பிடுகின்றார்.

## 209. நணா

இன்று பெரியார் மாவட்டத்தைச் சார்ந்து அமையும் இவ் ஊர் 'பவானி' என்ற பெயருடன் திகழ்கிறது.

---

1. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 97

2. „ பக். 168

'தீங்கொன்றும் நண்ணாத் திருப்பதி ஆனதால் இதற்கு நணா என்று பெயர்' என்பர்[1]

ஞானசம்பந்தர் நணாவின் இயற்கைச் செழிப்பைக்

குன்றோங்கி வன்றிரைக் கண் மோத மயிலாலும் சாரற் செவ்வி
சென்றோங்கி வானவர்களேத்தி அடிபணியும் திருநணாவே
(208-1)

எனவும்,

ஆடை யொழித் தங்கமணே திரிந்துண்பா ரல்லல் பேசி
மூடு முருவ முகந்தா ருரையகற்று மூர்த்தி கோயில்
ஓடுநதி சேரு நித்திலமு மொய்த்த கிலுங் கரையிற் சாரச்
சேடர் சிறந்தேத்தத் தோன்றி யொளி பெருகுஞ் நணாவே

எனவும் பாடுகின்றார். எனினும் இவரது பாடலினின்றும் 'நணா' என்ற ஊர்ப்பெயர்க் காரணம் அறியவியலவில்லை. எனினும் சங்க இலக்கியம் கொண்டு, நன்றாமலையே நணாமலை என்கின்றார் மயிலை சீனி வேங்கடசாமி[2] மேலும் 'ஆறு' இருந்து வளம்படுத்திய நிலையைச்சம்பந்தர் பாடுகின்றாரே தவிர 'வானி' என்ற ஆற்றுப் பெயரை அவர் குறிப்பிடவில்லை. ஆயின்

வானி என்பதுதான் இப்பவானி ஆற்றின் பெயராகப் பண்டைத் தமிழ் நூற்களில் காணப்படுகிறது. பிற்காலத்தில் எப்படியோ பவானியாயிற்று. இது பெருவானியாகையால், மேற்குத் தொடர்ச்சி மலையில் தோன்றும் ஒரு சிற்றாற்றிற்குச் சிறுவானி என்ற பெயரும் வழங்கி வருகிறது. முன்பு பவானியானது பூவானி என்று அழைக்கப்பட்டு இருக்கலாம். பின்பு அது பவானி என மருவியிருக்கலாம் என்பது தமிழ்ப் பேராசிரியர் ஒருவரின் ஆராய்ச்சி என்றதொரு கருத்தினைக்காணும்போது[3] பவானி

---

1. கொங்கு நாட்டுக் கோயில்கள்-பக். 183
2. நன்றாமலை—நாடுகாண்நெடுவரை—செல்வக் கடுங்கோ வாழியாதன் மேல் 7ஆம் பத்தைப் பாடிய கபிலருக்கு அவ்வரசன் இந்த நன்றா மலைமேலிருந்து பரிசில் வழங்கினான் என்று ஏழாம்பத்து பதிகக் குறிப்பு கூறுகிறது... நன்றாவெனும் குன்றேறி நின்று...நன்றா பிற்காலத்தில் நணா என்று மாறிற்று-கொங்கு நாட்டு வரலாறு-பக் 29
3. கொங்கு நாட்டு வரலாறு பக்—185

என்ற ஆற்றுப்பெயர் பின்னர் ஊர்ப்பெயராக அமைந்து முற்பெயரைக் காட்டிலும் செல்வாக்குப் பெற்று, இன்றும் திகழ்கிறது என்ற எண்ணம் அமைகிறது. ஆற்றுப் பெயர்பற்றிய தனது கட்டுரையில் கி. நாச்சிமுத்து அவர்களும், ஆற்றில் விளையும் பொருளால் பெயர் பெறல் என்ற தலைப்பில் பூவானி—பவானி எனக் குறிப்பிடுவதைக் காண்கின்றோம்.[1] எனவே ஆற்றுப்பெயர் முன்பே காணப்பட்டிருக்கக் கூடும். எனினும் சம்பந்தர் காலத்துக்குப் பின்னரே ஊர்ப்பெயராக இது செல்வாக்குப் பெற்றிருக்க கூடும் எனத் தோன்றுகிறது.

மேலும் பவானி, காவிரியில் இவ்வூரில் இணைவதால் பவானிக் கூடல் என்ற பெயரும் இதற்கு அமைகிறது[2] மட்டுமல்லாது, தலவிருட்சமான இலந்தை காரணமாக 'வதரிகாசிரமம்' என்ற பெயரும் (வதரி—இலந்தை) இதற்கு உண்டு.[3]

## 210. நந்தம்பாடி

'நந்தம்பாடியில் நான்மறையோனாய்' என்பது மாணிக்க வாசகர் கருத்து (திருகீர்த்தி 21).

## 211. நந்திபுரவிண்ணகரம்

நாதன் கோயில் எனச் சுட்டப்படும் தலம் இது. திருமங்கையாழ்வார் பாடல் பெற்ற வைணவக் கோயில் இது.

'நாதன் உறைகின்ற நகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணுமனமே' என்பது இவர் பாடல் (1438) இதனை நோக்க, நகர் நந்திபுரம் என்ற கருத்து நந்திபுரம் ஊர்ப்பெயர் என்பதைக் காட்டுகிறது. விண்ணகரம் திருமால் கோயில் என்பதைச் சுட்டுகிறது. மட்டுமல்லாது நாதன் உறைகின்ற என இவர் சுட்டும் நிலையில் கோயில் இறைவன் நாதன் எனப்

1. தமிழ் இடப்பெயராய்வு—பக்-94
2. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் -பக்-343
3. கொங்கு நாட்டுக் கோயில்கள்—பக்-94

பெருமை பெற்ற நிலையில்[1] கோயில் நாதன் கோயில் எனச் சுட்டப்பட்டு இருக்கலாம். பின்னர் கோயில் பெயரே ஊர்ப் பெயராக அமைந்து இருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது. நந்தி புரம் என்ற பெயர் சிவன் கோயிலும் இவ்வூரில் இருந்ததன் காரண மாகஇப்பெயரைப் பெற்றிருக்கக் கூடும் என்ற எண்ணத்தைத் தருகிறது.

## 212. நல்லக்குடி

குயிலாலந்துறை எனப் பெயர் பெறும் இடம் மாயூரத்திற்கு ஒரு கல் தொலைவில் உள்ளது என்பதால் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது என்பது தெரிகிறது. அப்பர் இத்தலத்து இறையைச் சுட்டுகின்றார்.

## 213. நல்லம்

கோனேரி ராஜபுரம் என்று இன்று சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. 'நல்ல நகர்' என இதனைக் குறிப்பிடுகின்றார் ஞானசம்பந்தர்.

நல்லான் நமையாள்வான் நல்ல நகரானே (85-1)

மேலும் ஒளிரும் வயல் சூழ்ந்த நல்ல நகர்; நறைகொள் பொழில் சூழ்ந்த நல்ல நகர் என்றும் (85-4,10) இவர் பாடுகின்றார். திருநாவுக்கரசர், 'நணுகு நாதனகர் திருநல்லமே' (157—3) என்றும், நமக்கு நல்லது நல்லம் அடைவதே (27—4) என்றும் இதனைச் சுட்டுகின்றார். எனவே 'நல்லநகர்' என்பதே பின்னர் நல்லம் என ஆகியிருக்குமோ எனத் தோன்றுகிறது. சேக்கிழாரும்

நிலவு மாளிகைத் திருநல்லம் நீடு மாமணி' எனச் சிவனைக் குறிப்பிடுகின்றார் (34-433-35). 'கோனேரி இராஜபுரம்' அரசியல் நிலையில் பெயர் கொண்டு, இன்று இப்பெயரே செல்வாக்குடன் திகழ்கிறது.

## 214 நல்லாற்றூர்

திருநாவுக்கரசரின் அடைவுத் திருத்தாண்டகம் (பதி 295-4) சுட்டும் ஊர்ப்பெயர் இது.

---

1. சோ. ஜகந்நாதன்,நாதநாதன், விண்ணகரப் பெருமாள்— நாலாயிர திவ்விய பிரபந்தம்-பக். 842

நறையூரும் நல்லூரும் நல்லாற்றூரும்

என இதனை இவர் குறிப்பிடுகின்றார். 'ஆற்றூர்' என்பதற்கு அடையாக நல்ல என்பது அமைவது போன்று இப்பெயர்க் காரணம் நமக்கு எண்ணம் தருகிறது.

## 215. நல்லூர்

தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர் இன்றும் 'நல்லூர் எனவே சுட்டப்படுகிறது. திருநாவுக்கரசர், அப்பர் பாடல் பெற்ற தலம் இது.

ஞானசம்பந்தர் இவ்வூரினை, 'நாறும் மலர்ப் பொய்கை நல்லூர் (86-2) என்றும், நண்ணும் புனல்வேலி நல்லூர் (86-11) என்றும் குறிப்பிடுவதுடன்,

திண்ணமரும் பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த திருநல்லூர்
மண்ணமரும் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே (193-1)

.. ............திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே (193-3)

சிறைநவின்ற தண்புனலும் வயலும் சூழ்ந்த திருநல்லூர்
மறை நவின்ற சோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே (193-4)

எனவும் பாடும் நிலை, நல்லூர் ஊர்ப்பெயர் என்பதைத் தெளிவு படுத்துகிறது. சிறந்த ஊர் என்ற நிலையில் நல்லூர் எனப் பெயர்க் காரணம் இவண் பொருத்தமாக அமைகிறது. மேலும் இவர்,

நண்டிரிய நாரையிரை தேர வரை மேலருவி முத்தம்
தெண்டிரைகண் மோதவிரி போது கமழுந்திருநலூரே
(341-1)

எனச் சுட்டும் நிலையில் இவ்வூர்ப்பெயர் இடைக் குறையாக 'நலூர்' என வழங்கப்பட்ட தன்மை புலப்படுகிறது. கயிலை போன்று சிறப்புடைய பதி இது என்பதை நாவுக்கரசர்,

நடவா ரடிக ணடம்பயின் றாடிய கூத்தர் கொலோ
வடபாற் கயிலையும் தென்பானல்லூருந் தம் வாழ்பதியே
(98-3)

எனச் சுட்டுகின்றார்.

சேக்கிழார் இப்பதிபற்றி யியம்பும்போது.

அரசினுக்குத் திங்கள் முடியார் அடியளித்தத் திருநல்லூர்
(35-68-4)

எனப் பரவுகின்றார். மேலும்,

'சேலுலாம் புனற்பொன்னித் தென்கரையேறிச் சென்று

. கோலநீள் மணிமாடத் திருநல்லூர் குறுகினார் (திருநா-213)

எனக் காணும்போது பொன்னியின் தென்கரையில் இவ்வூர் இருக்கும் நிலை புலனாகிறது. எனவே செழிப்பான ஊர். நல்ல ஊராகத் திகழ்ந்திருத்தல் வேண்டும் என்பது ஐயமற விளங்குகிறது.

## 216. நல்லூர்ப் பெருமணம்

தற்போது ஆச்சாள் புரம் எனச் சுட்டப்படும் ஊர் இது. தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. சிதம்பரம் அருகில் உள்ளது.[1] சம்பந்தர் பாடல் பெற்றது, இத்தலம். 'நல்லியலார் தொழு நல்லூர் பெருமணம்' (383-4) என்ற இவர் பாடலடிகள் நல்லூர் ஊர்ப்பெயர்; பெருமணம் கோயில் என்பதையும் தருகிறது. நல்லூர் என்ற பிற ஊர்களினின்றும் தனித்துச் சுட்ட, கோயிற் பெயரையும் இணைத்துச் சுட்டினார்களோ எனத் தோன்றுகிறது. மேற்குறிப்பிட்ட நல்லூர் போன்ற நிலையில் இவ்வூர்ப் பெயரும் அமைந்திருக்க வாய்ப்புண்டு. எனினும் சேக்கிழார், திருஞானசம்பந்தர் வரலாற்றில் சுட்டும் இதனை,

ஏதமில்சீர் மறையவரின் ஏற்றகுலத் தோடிசைவால்
நாதர் திருப்பெருமணத்து நம்பாண்டார் நம்பி பெறும்
காதலியைக் காழி நாடுடைய பிரான் கைப்பிடிக்கப்
போதுமலர் பெருந்தன்மை எனப் பொருந்த எண்ணினார்
(1161)

எனக்கூறி, பெருமணம் என்ற ஊரினைக் குறிப்பிட்ட பின்னர் சேக்கிழார் மேலும்,

'வருவாரும் பெருஞ்சுற்றம் மகிழ் சிறப்ப மகட்பேசத்
தருவார் தண்பணைநல்லூர் சார்கின்றார் தாதையார்'
(1162)

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 360

என, பெருமணத்தை, தண்பணை நல்லூர் எனவும் சுட்டுகின்றார். எனவே இவ்வூர் மூங்கில்கள் நிறைந்த சிறந்த வளமுடைய ஊர் என்பது தெரிகிறது. நல்லூரில் பெருமணம் என்று சம்பந்தர் 'பெருமணம்' கோயில் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றார். ஆயின் ஈண்டு சேக்கிழார் திருப்பெருமணத்து நம்பாண்டார் நம்பி என பெருமணத்தை ஊராகவே சுட்டும் நிலை கோயிற் பெயர் பின்னர் ஊரையும் குறித்து அமைந்ததோ என்ற எண்ணத்தைத் தருகிறது. பின்னர் நல்லூர், பெருமணம் இரண்டும் வழக்கிழக்க, ஆச்சாள் புரம் என்ற பெயர் செல்வாக்குப் பெறுகிறது என்று தோன்றுகிறது. நல்லூர் சிறந்த ஊர் என்ற நிலையில் அமைந்த முதல்பெயர் பின்னர் கோயிற் பெயரையும் இணைத்து சுட்டும் நிலையும் 'பெருமணம்' ஊர்ப்பெயராக அமைந்தது என்பதைக் காட்டும்.

## 217. நள்ளாறு

காரைக்காலுக்கு அருகில் உள்ள தலம். திருநள்ளாறு எனச் சுட்டப்படுகிறது திருநாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற தலம் இது.

*மந்த முழவந்தரு விழா வொலியும் வேதச்*
*சந்தம் விரவிப்பொழில் முழங்கிய நள்ளாறே*—169-10
*நண்ணிய குளிர்புனல் புகுது நள்ளாறர்*—திருஞான-345-5
*நறவநாறும்பொழில் திருநள்ளாறு* திருநா—182-5
*நறை விரியு நள்ளாறு* சுந்—68-7

போன்ற பாடலடிகளில் நள்ளாற்றின் சிறப்பு தெரியவருகின்றது. பெரிய புராணமும் செங்கை மான் மழுவேந்தும் சினவிடையார் அமர்ந்தருளும் திருநள்ளாறு' (34-454-4) என இறைச்சிறப்பு உரைக்கும் தன்மை இதன் நிலையைத் தருகின்றது. 'நள்ளாறு' என்ற பெயரினைக் கொண்டு இதனை 'ஆறால்' பெயர் பெற்ற ஊர் என உணர இயலுகின்றது. திரு. நாச்சிமுத்து நள் என்பது நடுப்பகுதி எனக் கொண்டு, ஒப்பு நோக்கால் ஆற்றுப்பெயர்கள் அமையும் நிலையில் 'நள்ளாறு' என்பதையும் சுட்டுகின்றார்[1] இதனை உறுதிப்படுத்தும் கருத்தாக, இது அரசிலாற்றுக்கும் வாஞ்ச நதிக்கும் நடுவில் இருப்பதால் நள்ளாறு என்று

---

1. ஆறுகள் அண்மையில் உள்ள ஆறுகளோடு ஒப்பிடப் பட்டு அவற்றின் சிறுமை, பெருமை, புதுமை, பழமை இருக்கும் திசை இவைகளின் அடிப்படையில் பெயரிடப் பட்டு இருக்கின்றன.
தமிழ் இடப்பெயராய்வு-பக்-94,95

அழைக்கப்படுவதாற்று' என்ற எண்ணமும் அமைகிறது.[1] 'நளன் பூசித்த காரணம்' என்ற எண்ணமும் இப்பெயர் தொடர்பாக அமைகிறது.[2] எனினும் இது ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று. நளன் வழிபட்ட செய்தியென,

வளம் கெழுவு தீபமொடு தூப மலர் தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடு செய் நள்ளாறே

என ஞானசம்பந்தர் பாடலடிகளைத் தருகின்றனர். எனினும் இக்கதை முன்னரே இவ்வூர்ப் பெயர் குறித்து மக்களிடையே காணப்பட்டது என்ற கருத்தையே நாம் கொள்ளல் பொருத்த மானது.

## 218 நற்குன்றம்

திருஞானசம்பந்தர் திருவூர்க் கோவைப் பதிகத்தில் (175) 'குறும்பலா நீடு திருநற்குன்றம் (9) என இவ்வூர்ப் பெயரைத் தருகின்றார். பலா மரங்கள் நிறைந்த, குன்றுப் பகுதியான இடம் என்ற நிலையில் நற்குன்றம் என்ற பெயர் இங்கு பொருத்தமாக அமைகிறது.

## 219 நறையூர்

நறையூர் என்று சுட்டப்படும் இவ்வூர் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது. ஞானசம்பந்தர், சுந்தரர் இருவராலும் பாடல் பெற்ற இவ்வூர்க் கோயில் சித்தீச்சரம் ஆகும். இவர்கள் பாடல்கள் இவ்வூரின் இயற்கைச் செழிப்பை யும் எடுத்தியம்புகின்றன.

நறைகொள் வண்டு தேனார் நறையூர்ச்சித்தீச்சரமே
(திருஞான 71-1)

கடிகொள் சோலை வயல் சூழ் மடுவிற் கயலாரினம் பாயக்
கொடி கொண்மாடக் குழாமார் நறையூர்ச் சித்தீச்சரமே
(திருஞான 71-3)

1. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—முதல் திருமுறை-பக்-16
2. ,, ,, இரண்டாம் திருமுறை - பக்-101.

வாரும் மருவி மணிபொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச்சரமே (சுந். 93-1)
கழுநீர் கமழக் கயல் சேறுகளும்
செழுநீர் நறையூர்ச் சித்தீச்சரமே (சுந். 93-5)

எனவே இவற்றை நோக்க, இயற்கை நலம் மிக்க ஊராகையினால், நறை என்றால் தேன், நறு நாற்றம் என்ற பொருளைத் தரும் நிலையில் இவற்றின் அடிப்படையில் இப்பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. செழுநீர் நறையூர் எனச் சேக்கிழாரும் இவ்வூர் பற்றியியம்புகின்றார் (பெரிய ஏயர். 61).

காவிரியின் தென் கரைத்தலம் இது எனவும், சித்தர்களால் பூசிக்கப் பெற்றதன் காரணமாகச் சித்நீச்சரம் என்ற பெயர் அமைந்தது என்ற எண்ணமும் அமைகிறது[1]. கல்வெட்டுகளிலும் 'நறையூர்' என்றே இவ்வூர்ப் பெயர் குறிப்பிடப்படுகிறது.[2] நறையூரில் சிவன் கோயில் மட்டுமல்லாது நாச்சியார் கோயிலும் இருந்தது. இதனைப் பாடிப் புகழ்கின்றார் திருமங்கையாழ்வார் (நாலா-1078, 1329, 1470, 1478, 1577...).

## 220. நன்னிலம்

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த இவ்வூர் இன்றும் இப்பெயரிலேயே சுட்டப்படுகிறது. சுந்தரர் பாடல் பெற்ற இத்தலம் பின்னர் சேக்கிழாராலும் சுட்டப்படுகிறது.

பலங்கிளர் பைம்பொழிறண் பனிவெண் மதி யைத்தடவ
நலங்கிளர் நன்னிலத்துப் பெருங்கோவில் நயந்தவனே (98-2)
பண்புடை நான்மறையோர் பயின்றேத்திப்பல்கால் வணங்கும்
நண்புடை நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே (98-6)

---

1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் இரண்டாம் திருமுறை- பக். 102
2. ,, ,, பக். 198, 169

மடைமலி வண்கமலம் மலர்மேன் மடவன்னமன்னி
நடைமலி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே-(98-7)

என நன்னிலத்தின் சிறப்புகள் பலவற்றையும் சுந்தரர் பாடல்கள் இயம்புகின்றன. எனவே சிறப்புடைய அல்லது செழிப்புடைய நிலம் என்ற இயல்பு காரணமாக இவ்வூர்ப் பெயர் அமைந்தது எனக் கருதலாம். இங்குள்ள கோயில் பெருங்கோயில் எனச் சுட்டப்பட்டுள்ளது. இக்கோயில் மாடக் கோயில் என்றும், தேன் கூடுகள் இருப்பதால், மதுவனம் என்ற பெயரும் வழங்கப் படுகிறது எனவும் அறிகின்றோம்.[1]

## 221. நனிபள்ளி

புஞ்சை எனச் சுட்டப்படும் ஊராக, தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. மூவர் தேவாரமும் உடையது இக்கோயில்.

தேனலரும் கொன்றையினார் திருநன்னிபள்ளியினைச்
சாரச் செல்வன்
வானணையும் மலர்ச் சோலை தோன்றுவதெப்பதி என்ன
மகிழ்ச்சி எய்தி
பானல் வயல் திருநன்னி பள்ளி எனத் தாதையர் பணிப்பக்
கேட்டு
ஞானபோனகர் தொழுது நற்றமிழ்ச் சொல் தொடைமாலை
நவிலலுற்றார்
(பெரிய 34, 114-1-4)

என்ற சேக்கிழாரின் பாடல் இத்தலத்தின் சிறப்புக்கு ஓர் காட்டாக அமைகிறது. மேலும் 'செழுந் தரளப்பொன்னிசூழ் திருநனி பள்ளி' என்ற கருத்தும் (பெரிய 34- 112-1) பொன்னி நதி சூழக் காணப்பட்ட இத்தலத்தின் இயல்பைக் காட்டும். ஞானசம்பந்தர், உமையொரு பாகன் உகந்த நகர், என

குளிர் தரு கொம்மலொடு குயில் பாடல் கேட்ட
பெடை வண்டு தானு முரல
நளிர் தரு சோலை மாலை நரை குருகுவைகு

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 36

நனிபள்ளி போலு நமர்காள்

என நனிபள்ளியைச் சுட்டுகின்றார்.

நனிபள்ளி முதலில் பாலை நிலமாக இருந்தது என்றும், அவ்வூரினர் வேண்டுகோளின்படி நெய்தலாக்குமாறுப் பிள்ளையாரால் பாடியருளிய தென பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பியின் பாடல் குறிப்பு கொண்டு சுட்டுவர்[1]. இன்று புஞ்சை எனப்படும் தன்மை புன்செய் நிலங்களைக் கொண்ட காரணத்தால் இருக்கலாம்.

எனினும் மக்கள் வழக்கில் இவ்வூர் கிடாரம் கொண்டான் என்ற பெயரிலேயே வழங்குகிறது என்பதைத் தொ மு. பாஸ்கரத் தொண்டைமான் குறிப்பிடுகின்றார். 'பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன், எனச் சுட்டப்பட்ட இராசேந்திரச் சோழன் வெற்றிச் சின்னமாக அமைந்ததே கடாரம் கொண்டான் என்ற கிடாரம் கொண்டான் என்ற ஊர்ப் பெயர் என்கின்றார் இவர்[2] எனவே முதலில் நனிபள்ளி என்ற தலம் பின்னர் இராசேந்திரன் வெற்றிக்குப் பின்னர் கடாரம் கொண்டான் எனச் சுட்டப்பட்டு இருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது.

நனிப்பள்ளி, நன்னிபள்ளி என்ற இரண்டு விதமாகவும் இப்பெயர் அன்று சுட்டப்பட்டுள்ளது எனினும் இப்பெயர்க் காரணம் புலனாகவில்லை.

**222. நாகை**

நாகப்பட்டணம் என்ற கடற்கரைத் தலம். அன்று முதல் இன்று வரை 'நாகை' என வழங்கப்படுகிறது. நாகர்கோயில் கொண்ட 'நாகர் கோயில்' ஊர்ப்பெயர் போன்று, இதுவும் நாகர் வழிபாடு காரணமாகப் பெற்ற ஊர்ப்பெயராகக் கருதப் படுகிறது. 'ஆதி சேடன் பூசித்த தலமாதலின் இப்பெயர் பெற

---

1. நாதன் நனிபள்ளி சூழ் நகர்கானகமாக்கி யஃதே
போதின் மலிவயலாக்கிய கோன்— ஆளுடையபிள்ளை
யார் திருவந்தாதி-17

ஒண் கெழுவு ஞாலத்தினரறிய மன்னு நனிபள்ளியது
பாலைதனை நெய்தலாக்கியும்
ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை-75

2. வேங்கடம் முதல் குமரி வரை II பக். 144-45

றது. அவன் பூசித்த திருக்கோயில் மேற்கே ஒரு மைல் தூரத்தில் நாகநாதர் கோயில் என வழங்குகிறது என்ற கருத்து காணப்படுகிறது[1] கடற்கரைத் தலமாகிய இது துறைமுகமாகவும் வணிபத் தலமாகவும் பெருமை பெற்றது. தேவார மூவர் பாடல் பெற்ற சிறப்புடைய கோயில் மட்டுமல்லாது வைணவராலும் புகழப் படும் பெருமை கொண்டது. கோயில் காரோணம் என்ற பெயருடன் காணப்பட்டது என்பதை அனைத்துச் சான்றுகளும் தெரிவிக்கின்றன,

> தேரார் விழவோவாச் செல்வன் றிரை சூழ்ந்த
> காரார் கடனாகைக் காரோணத்தானே (திருஞான—84-3)
> வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
> கரையார் கடனாகைக் காரோணத்தானே ( ,, —7)
> கலங்கற் கடற்புடை சூழ்ந்த ணாகைக்
> காரோணத் தெஞ்ஞான்றும் காணலாமே (திருநா-236-5)
> கத்தூரி கமழ் சாந்தும் பணித்தருள வேண்டும்
> கடனாகைக் காரோண மேவியிருந்தீரே (சுந்-46-1)

திருமங்கையாழ்வார், இங்குக் கோயில் கொண்டுள்ள சௌந்தர்ய ராஜனைப் பாடுகின்றார். (1758-67) நாகர் என்ற தமிழ் மக்கள் அப்பகுதியில் ஆட்சி புரிந்து வந்தனர் என்ற கருத்தும் அமைகிறது.[2]

## 223. நாகேச்சுரம்

நாகேஸ்வரம் என்று தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது இவ்வூர். 'பாதாள லோகத்திலிருந்து வந்து சிவபெருமானை நாகராஜன் வழிப்பட இத்தலம் அவன் பெயர் கொண்டு நாகேசுவரம் என வழங்குகிறது என்ற எண்ணம் இப்பெயருக்கு அமைகிறது.[3] எனினும் நாகர் கோயில் இருந்தமையால் இப்பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. காவிரிக்கரையில் அமைந்த சிறப்புடைய இத்தலம், ஞானசம்பந்தரால் சிறப்புடன் புகழப்பெறுகிறது.

---

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் திருமுறை - பக்.84
2. தென்னாட்டுக் கோயில்கள்-பக். 96
3. ,, ,, -பக். 29

'குறையணி குல்லை முல்லை யளைந்து குளிர் மாதவிமேல்
சிறையணி வண்டுகள் சேர் திரு நாகேச்சுரத்து அரனே'

என்கின்றார் சம்பந்தர். இறைத் தலங்களைத்தொகுத்துரைக்கும் நிலையில் அப்பர் இதனைக் குறிப்பிடுகின்றார். சம்பகாரணியம் என்ற பெயரையும் கொண்டதாக இவ்வூர் அமைந்தது தெரிகிறது.[1] சண்பக மரங்களின் மிகுதியே இப்பெயருக்குக் காரணமாகும்.

சிவன் கோயிலுடன், உப்பிலியப்பன் கோயில் என்று சுட்டப்படும் விண்ணகரும் இங்கு உள்ளது.

திருமால் தலம் எனவே இப்பெயர் பெற்றது என்பது தெளிவு. திருமங்கையாழ்வார் பேயாழ்வார் பாடல் இத்தலக் கோயிலுக்கு அமைகிறது. துளசிவனம், மார்க்கண்டேய க்ஷேத்திரம் பிற பெயர்கள்.

'பூமரு பொழிலணி விண்ணகர்' நாலா-1457
தேனார் பூம்புறவில் திருவிண்ணகர்- ,,- 1467

224. நாங்கூர்

சீர்காழி இரயில் நிலையத்திலிருந்து எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர் நாங்கூர். எனவே தஞ்சாவூர் மாவட்டம் என்பது தெரிகிறது. வைணவத் தலங்கள் பலவற்றைக் கொண்டது. வெள்ளக்குளம், திருவண்புருடோத்தமம், வைகுந்த விண்ணகரம், மணிமாடக் கோயில், திருத்தெற்றயம்பலம், செம்பொன் செய்கோயில், அரிமேய விண்ணகரம், காவளம்பாடி, தேவனார் தொகை போன்றன அவை; நாங்கூர் நாலாயிரம் என்ற வழக்கு, நாலாயிரம் வைணவக் குடிகள் வாழ்ந்த இடத்தைக் குறிக்கும் என்ற எண்ணம் அமைகிறது[2]. ஆழ்வார்கள் பாடல், நாங்கூரின் இயற்கை அழகை மிகவும் சிறப்பிக்கின்றன.

---

1. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-28
2. சோழநாட்டுத் திருப்பதிகள்—பக்-139

பல திருமால் கோயில்களைக் கொண்டு அமையும் இதன் தன்மையை நோக்க, நான்கு ஊரில் வைணவர்கள் வாழ்ந்து பின்னர் அதுவே ஒரே ஊராக நாங்கூர் என்று சுட்டப்பட்டிருக்கலாமோ எனத் தோன்றுகிறது.

## 225. நாட்டியத்தான் குடி

திருநாவுக்கரசர் தம் அடைவுத் திருத்தாண்டகம் பதிகத்தில் குறிப்பிடும் ஊராக அமைகிறது இது.

'நல்லக் குடி நனி நாட்டியத்தான் குடி' (285-3)

இதனை நோக்க சிவன் கோயில் உளது என்பது உறுதி என்ற நிலையில் நாட்டியத்தான் சிவனைக் குறித்து அமைய, சிவன் குடி கொண்ட ஊர் என்ற நிலையில் இவ்வூர்ப்பெயர் அமைந்திருக்க வாய்ப்பு அமைகிறது.

## 226. நாரையூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. சம்பந்தர் அப்பர் பாடல் பெற்ற ஊர். நாரை வழிபட்ட தலமாதலின் நாரையூர் எனப் பெயர் பெற்றது என்ற கருத்து இப்பெயர்த் தொடர்பாக அமைகிறது.[1]

'பொன்னி வடகரைசேர் நாரையூரில்' என நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடுகின்றார் (1).

'தேம்புனல் சூழ் திகழ் மாமடு விற்றிரு நாரையூர்மேய
பூம்புனல் சேர் புரிபுன் சடையான்'

என ஞானசம்பந்தர் இவ்வூர் பற்றிய எண்ணம் தருகின்றார். எனவே நீர் வளமுடைய ஊர் என்பது வெளிப்பட, நாரைகளின் மிகுதி காரணமாக இவ்வூர்ப்பெயர் அமைந்திருக்கலாம்.

## 227. நாலூர்

நாலூர் என்று சுட்டப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. நாலூர் என்பது ஊர்ப்பெயராகவும், மயானம்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 187

கோயிற் பெயராகவும் அமைந்து விளங்கியதை அறிகிறோம். சம்பந்தர் பாடல் பெற்ற தலம் இது.

'நறையார் பொழில் புடைசூழ் நாலூர் மயானம்'

என்று சுட்டும் தன்மையில் இதுவும் ஒரு செழிப்பு மிக்க ஊராக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. நான்கு சிறு குடியிருப்புப் பகுதிகள் இருந்தமை காரணமாக இப்பெயர் பெற்றதோ என்ற எண்ணம் 'நாலூர்' என்பதை நோக்க எழுகின்றது.

228. நாவலூர்

இன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 'திருநாம நல்லூர்' என்ற பெயரால் சுட்டப்படுகிறது. சுந்தரர் பிறந்த ஊர். அவரால் பதிகம் பெற்ற சிறப்புமுடையது. சேக்கிழார்,

'பெருகிய நலத்தால் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவம் ஓங்க அருளினால் அவதரித்த
மருவிய தவத்தால் மிக்க வளம்பதி வாய்மை குன்றா
திருமறையவர்கள் நீடும் திருநாவலூராம் அன்றே'
(6:2-1-4)

என இவ்வூரினைக் குறிப்பிடுகின்றார். சுந்தரர் பாடல் நாவலூர் பற்றிக் குறிப்பிடுகின்றதே தவிர[1] இதனுள் ஊர் பற்றிய விளக்கம் எதுவும் பெற இயலவில்லை. ஆயின் சேக்கிழார் இதனைக் குறிப்பிடும் நிலையில் இதன் சிறப்புகள் தெரியவருகின்றன. கொங்கலர் சோலை மூதூர் (பெரிய 6:10-3-4) பூவலம் தடம் பொய்கைத் திருநாவலூர் (பெரிய 6:78-3) வயற்சாலி கரும்பாற் கழனித் திரு நாவலூர் (பெரிய 75-12).

மட்டுமன்றி, 'பின்பு கும்பிடும் விருப்பில் நிறைந்து பெருகு நாவல் நகரார் பெருமானும்' என்று நாவல் நகர் எனக் குறிப்பிடுவது இவ்வூர்ப்பெயர் பற்றிய விளக்கம் பெற ஏது அமைக்கின்றது. 'நாவல்' மரம் காரணமாக அமைந்த பெயராக இது அமைய வாய்ப்பு அமைகிறது. கெடில நதி அருகில் பாய்வதன் காரணமாக ஊரின் செழிப்பு, மிக்கு காணப்பட்டது எனவும் காண்கின்றோம்.

---

1. ஏவலனார் வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை யாளுங் கொண்ட நாவலனார்க் கிடமாவது நந்திரு நல்லூரே—சுந்-17-1

நாவல் மரம் இவ்வூரின் தலமரம் என அறியும்போது 'தலமரம்' காரணமாக இப்பெயர் அமைந்ததா? அல்லது ஊரில் நிறைந்து காணப்பட்ட மரம் தலமரமாக அமைக்கப்பட்டதா என எண்ணத் தோன்றுகிறது. எனினும் பெயர்க்காரணம் உறுதிப்படுகிறது.

## 229. நாவாய்

மலைநாட்டுத் திருப்பதியாக, ஷோரனூர் மங்களூர் வழியில் ஷோரனூரில் இருந்து சுமார் 25கல் தொலைவில் உள்ள ஊர் நாவாய்[1] பாரதப் புழா என்ற ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் கோயிலையுடையதாக இவ்வூர் அமைகிறது. திருமால் கோயில் கொண்ட தலம் இது. 'கடப்பதற்கு உறுப்பாக இருப்பது கப்பல்; நாவாய். அங்ஙனமே துன்பக் கடலைக் கடப்பதற்கு இத் தலத்து எம்பெருமானும் நாவாய் போன்று இருப்பதால் அவன் எழுந்தருளியுள்ள தலமும் நாவாய் என்ற பெயரால் வழங்க லாயிற்று' என்ற கருத்து இவ்வூர்த் தொடர்பாக அமைகிறது. திரு என்ற அடைமொழியுடன் அத்தலம் திருநாவாய் என்று வழக்கிலிருந்து வருகிறது.[2] ஆழ்வார்கள் பாடல்கள் அனைத்தி லும் மலை வளத்தின் பசுமையான காட்சிகள் தோற்றம் தரு கின்றன.[3] நாவாய் என்ற பெயரையும், கோயில் ஆற்றின் கரை யில் அமர்ந்து இருப்பதையும் நோக்க, ஆற்றின் கரையில் நாவாய் போன்று காணப்பட்டதன்மையால் இப்பெயர் பெற்றிருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

## 230. நின்ற ஊர்

'திருநின்ற ஊர்' என அழைக்கப்படும் இவ்வூர், இன்று செங்கல்பட்டு மாவட்டத்தைச் சார்ந்து அமைகிறது.

---

1. மலைநாட்டுத் திருப்பதிகள்-பக், 213
2. மலைநாட்டுத் திருப்பதிகள்-பக் 217
3. வெறித்தண் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய் –நாலா–3041

   நெடியானுறை சோலைகள் சூழ் திருநாவாய்– ,, 3042

   நீளார் மலர்ச்சோலைகள் சூழ் திருநாவாய் – ,, 3044

   வண்டார் மலர்ச்சோலைகள் சூழ் திருநாவாய் – ,, 3046

*நீண்டவத்தக் கருமுகிலை எம்மான் றன்னை*
*நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை*
*காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக்*
*கண்டது நான் கடல் மல்லைத் தலசயனத்தே*
(நாலா-1089)

என்றும்,

*குரு மாமணிக் குன்றினை*
*நின்றவூர் நித்திலத் தொத்தினை* (நாலா-1642)

என்றும் திருமங்கையாழ்வார் இங்குள்ள திருமால் புகழ் பாடுகின் றார். தவிர, சேக்கிழார் தமது பெரிய புராணத்தில், பூசலார் நாயனார் பிறப்பு பற்றி, கூறப்புகும் போது,

'உலகினில் ஒழுக்கமென்று முயர் பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீலமென்றும் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வ மல்கி திகழ் திருநின்ற வூராம் (2)

என்று அவர் பிறந்த ஊரினைக் குறிப்பிடுகின்றார். இந்நிலை யில் வைணவக் கோயிலுடன், பழமைமிக்க செல்வம் பொருந்திய தொரு ஊர் இது என்பதும் விளக்கமாக அமைகிறது.

இவ்வூரினை,

*மன்னியசீர் மறைநாவல் நின்றவூர்ப் பூசல்*
*வரிவளையாண் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்* (39-11)

எனச் சுட்டுகின்றார். இவற்றை நோக்க இருந்தையூர் என்பத னைச் சங்க இலக்கிய ஊர்ப்பெயர்களில் கண்டது போன்று, திருமாலின் நின்றகோலம் காரணமாக ஏற்பட்ட பெயர் எனக் கூறலாம்.

## 231. நின்றியூர்

திருநின்றியூர் எனச் சுட்டப்படும் இவ்வூர் இன்று தஞ்சாவூர் மாவட்டம் சார்ந்து அமைகிறது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் பாடல்பெற்ற கோயிலையுடையது.

சம்பந்தர் பாடல் இதனை 'நின்றியூர்' என்று மட்டுமே குறிக்க அப்பர் வழக்கிலேயே திருநின்றியூர் எனச் சுட்டப்படக் காண்கின்றோம்.

காலன் வலி காலின் னொடு போக்கிக் கடிகமழும்
நீலம் மலர்ப் பொய்கை நின்றியூரின் னிலையோர்க்கே
(திருஞான–18-1)

நிறையும் பூம்பொழில் சூழ் திருநின்றியூர்
உறையுமீசனை யுள்குமென் னுள்ளமே-(திருநா-137-4)

எனவே 'நின்றியூர்' திருநின்றியூர் என்றும் பிற பக்தி சார்ந்த ஊர்ப்பெயர்கள் போன்று 'திரு' அடை இணைந்து திருநின்றியூர் என அன்றே குறிக்கப்பட்டு இருந்ததோ என நினைக்கத் தோன்றுகிறது. ஊரின் பழமை காட்டும் தன்மையும் இங்கு அமைகிறது. இங்குள்ள இறைவன் நின்ற கோலம் காட்டிய தால் இப்பெயர் கொண்டது இவ்வூர் என்பதனை எண்ணலாம்.

'திருமகள் வழிபட்டு நிலைபேறு எய்திய தலம்' என்பர். மேலும் சோழன் ஒருவன் திருவிளக்கிட்டுத் தினந்தோறும் வழிபட்டு வந்தான். அவன் கொண்டு வந்த திரி ஒரு நாள் நின்று விடவே சிவலிங்கத்தினின்றும் ஒரு சோதி தோன்றி, அவன் வழிபாட்டிற்கு இடையூறு உண்டாகாமல் உதவியது. அதனால் திரி நின்றவூர் ஆயிற்று. இப்போது திருநின்றவூர் என வழங்குகிறது என்பது செவிவழிச் செய்தி' என்ற புராணக்கதையும் இதற்கு உண்டு.[1] பெரியபுராணம் அனைத்து இடங்களிலும் திருநின்றியூர் எனவே வழங்குகிறது.

'திருநின்றி யூரின் நிமலனார் நீள்கழல் ஏத்தி'
(33- 287)

## 232. நீடூர்

நீடூர் என்று இன்றும் சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது அப்பர், சுந்தரர் பாடல்பெற்ற தலம். இக்கோயில் தலமரமாக மகிழமரம் அமைகிறது. எனவே

---

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் திருமுறை—பக்-78

இதன் காரணமாக மகிழாரண்யம், மகிழ வனம் என்ற பிற பெயர்களும் இதற்கு அமைகின்றன. ஊழிக்காலத்தும் அழியாது நீடித்திருக்கும் தலமாதலின் இது நீடூர் என்று பெயர் பெற்றது என்பர்[1] சுந்தரர்,

'நீரில்வாளை வரால் குதி கொள்ளு நிரைபுனற்கழனிச்
செல்வ
நீடூர்' (56-1) புன்னைமாதவிப் போதலர் நீடூர் (56–2)
பைம்பொழிற் குயில் கூவிட மாடே ஆடுமாமயில்
அன்னமோடாட
வலை புனற் கழனித் திருநீடூர் (56-4) எனப் பலவாறு இவ்வூர்

செழிப்பினை இயம்புகின்றார், இதனை நோக்க, பழமையான ஊர் மக்கள் ஊரின் செழிப்பு காரணமாக நீண்டகாலம் குடியிருப்பாகக் கொண்ட ஊர் என்ற நிலையில் நீடூர் என்ற பெயர் அமைந்திருக்குமோ என்ற எண்ணம் எழுகிறது. நீண்ட அமைப்பிலும் எழுந்திருக்கலாம். சேக்கிழாரும் இவ்வூர்ச் சிறப்பினை,

மாறுகடிந்து மண்காத்த வளவர் பொன்னித் திருநாட்டு
நாறு விரைப்பூஞ் சோலைகளின் நனைவாய்திறந்து பொழி
செழுந்தேன்
ஆறு பெருகி வெள்ளிமிகும் அள்ளல் வயலின் மள்ளருழுஞ்
சேறு நறுவா சங்க மழுஞ் செல்வ நீடூர் திருநீடூர் (58–1)

எல்கின்றமை இவ்வூரின் இயற்கை வளம் மிகுதியையுணர்த்துகிறது.

## 233. நீர்மலை

திருநீர்மலை என்று, செங்கல்பட்டு மாவட்டத்தில் அமையும் வைணவத் தலம் இது. ஆழ்வார்களால் சுட்டப்படும் இத்தலம் மலையில் கோயிலைக் கொண்டது. நீர் சூழ்ந்த மலை என்ற காரணத்தினால், இப்பெயர் அமைந்தது என்ற எண்ணத்தைக் காண்கின்றோம். இத்தலத்திற்குத் திருமங்கையாழ்வார் எழுந்தருளினபோது ஏரியின் நீர்ப்பிடிப்பால் அவரால் எம்பெருமானைச் சென்று சேவிக்க முடியவில்லை என்றும் பல நாட்கள் காத்திருந்து

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-78

நீர் வடிந்த பிறகே சென்று சேவித்தார் என்றும் செவி வழிச் செய்தியினால் அறிகின்றோம். இங்ஙனம் அரண்போல் நீர் சூழ்ந்த இடத்தில் அமைந்து இருப்பதால்தான் 'நீர்மலை' என்ற காரணப் பெயர் பெற்று திரு என்ற அடைமொழியுடன் திருநீர்மலை என்ற இம்மலை வழங்கி வருகின்றது போலும் என்ற எண்ணம் ந. சுப்பு ரெட்டியாரால் தரப்படுகிறது[1] திருமங்கையாழ்வாரின் பாடல்கள் திருநீர்மலையின் செழிப்பை மிகவும் அழகாகத் தருகின்றன.

சேடார் பொழில் சூழ் திருநீர் மலையான் —(நாலா-1521)
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை —(3775-74)
கலை வாழ் பிணையோடு அணையும் திருநீர் ( ,, ,, )
மலைவாழ் எந்தை மருவும் ஊர் (நாலா-1365)

## 234. நீலக்குடி

தென்னலக்குடி என்ற பெயரால் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது இவ்வூர். அப்பர் நீலக்குடி இறையைப் பற்றிப் பாடும் நிலையில் இவ்வூர் பற்றி அறிய இயலுகிறது.

'கல்லி னோடெனைப் பூட்டியமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்கி வென் வாக்கினால்
நெல்லு நீள் வயனீலக் குடியரன்
நல்ல நாம நவிற்றி யுய்ந்தேனன்றே (186-7)

இந்நிலையில் 'நீலன் குடி' என்பது சிவன் கோயில் கொண்ட ஊர் என்பது தெளிவு. எனவே இவ்வூர்ப் பெயரை நோக்கினால் 'நீலகண்டன் குடி'யெனச் சுட்டப்பட்டு, பின்னர் நீலன் குடி ஆகி, பின்னர் நீலக்குடியெனத் திரிந்தது என்த் தோன்றுகிறது பிற எந்த சான்றுமின்மையின், இதனைப்போன்ற வகையே அமைகிறது. இன்றைய 'தென்னலக்குடி' என்ற பெயரும் நீலக்குடி, நலக்குடியாகி, பின்னர் திசை குறித்து தென்னலக் குடியென, நீலக்குடியின் திரிபாக அமைந்திருக்கலாம் என்னும் எண்ணம் தோன்றுகிறது.

## 235. நெடுங்களம்

திருநாட்டாங்குளம், திருநாட்டான்குளம் என இன்று திருச்சி மாவட்டத்தில் அமைகிறது இவ்வூர்.

---

1. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்-பக். 185

ஐயடிகள் காடவர்கோன், தம் ஷேத்திரக் கோவை வெண்பாவில்,

'தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது
பெட்டப்பிணமென்று பேரிட்டுக்—கட்டி
எடுங்கள் அத்தா என்னா முன் ஏழைமட நெஞ்சே

நெடுங்களத்தார் பாதம் நினை' என இவ்வூரினைக் குறிப்பிடுகின்றார். சம்பந்தர் பதிகமும் (52) இவ்வூருக்கு உள்ளது. எனினும் இவர்களின் பாடல்கள் இந்த ஊரைப் பற்றிய விளக்கம் எதையும் தரவில்லை. அப்பர் தனிப் பதிகம் அமைத்துப் பாடவில்லை எனினும், தம்முடைய பதினைந்தாவது பதிக்கத்தில், (பொது) 'நிழலார் சோலை நெடுங்களத்து நிலாயநித்தமணாளன் (7)எனச் சுட்டும் நிலையில், சோலைகள் செழிப்புற்ற நெடுங்களம் என்ற எண்ணம் தெரிகிறது எனவே 'களம்' என்பது செழிப்பு மிக்கப் பகுதியைக் குறிக்க, 'நெடுங்களம்' பரந்த பரப்பினைக் குறித்து அமைந்ததோ எனத் தோன்றுகிறது.

## 236. நெடுவாயில்

நெடுவாயில் என்ற இத்தலம், அப்பர், சம்பந்தர் இருவராலும் பாடலினுள் குறிக்கப் பெறுகின்றது.

நெடுவாயில் (திருநா-285-7)

நிறைநீர் மருகன் நெடுவாயில் (திருஞா-175-9) எனவே இது சிவவ் கோயில் சிறப்பு பெற்ற இடம் என்பது தெளிவு. பெரிய வாயிலையுடைய குடியிருப்பு பகுதியாக இது அமைந்து இருக்கக் கூடும்.

## 237 நெய்த் தானம்

தில்லைத்தானம் என வழங்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. கோயில் பெயராக முதலில் அமைந்து பின்னர் ஊர்ப்பெயராயிற்றோ என்ற எண்ணம் பாடல்களை நோக்க எழுகின்றது. சம்பந்தராலும் அப்பராலும் பாடல் பெற்றது இத்தலம்.

நிலா வெண்மதி யுரிஞ்ச நீண்டமாட நிறைவயல் சூழ்
நெய்த்தானம் (திருநா-215-8)
தேனிடை மலர் பாயு நெய்த்தானனை ( ,, 148-8)

போன்ற பாடல்கள் செழிப்பு சுட்டுகின்றன.

'அறையும் புனல் வரு காவிரி யலை சேர் வடகரைமேல்
நிறையும் புனை மடவார் பயில் நெய்த்தானமெனீரே'

என்ற சம்பந்தர் பாடல் காவிரியின் வடகரையில் இருக்கும் இதனைக் கூறுகிறது. மேலும்,

காலனை வீழச் செற்ற கழலடி யிரண்டும் வநதென்
மேலவாயிருக்கப் பெற்றேன் மேதகத் தோன்றுகின்ற
கோலநெய்த் தானமென்னும் குளிர் பொழிற் கோயின்மேய
நீலம் வைத்தனைய கண்ட நினைக்குமா நினைக்கின்றேனே
(திருஞா-37-1)

என்ற பாடல் கோல நெய்த்தானம் என்றும் குளிர் பொழிற் கோயில் என்று சுட்டும் நிலையில் இது கோயிற் பெயர் என்பதனைத் தெளிவாகக் காண்கின்றோம். 'நெய்' சிறப்புடைய அபிஷேகப் பொருளாக, அங்குச் சுட்டப்பட்டதன் காரணமாக இப்பெயர் அமைந்து, பின்னர் ஊர்ப்பெயராகவும் செல்வாக்குப் பெற்றது என்பதை நாம் உணரவியலுகிறது.

## 238. நெய்தல் வாயில்

'நிறை வயல் சூழ் நெய்தல் வாயில்' (285.7) என திருநாவுக்கரசரால் குறிக்கப்படும் இத்தலமும் சிவன் கோயில் பெருமை உடையது. நிறைவயல் சூழ் நெய்தல் என்ற பாடலடிகள் இவ்வூர்ச் சிறப்மைக் காட்டுகிறது. எனவே நெய்தல் பகுதியில் அமைந்த குடியிருப்புப் பகுதியோயெனத்தோன்றுகிறது.

## 239. நெல்லிக்கா

திருநெல்லிக்கா எனத் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமையும் ஊர் இது. ஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஊர் இது (150). சேக்கிழார் ஞானசம்பந்தர் செல்லும் வழியில் உள்ள கோயில்களைப் பணிந்து செல்லும் நிலையில், 'நெல்லிக்கா பணிந்து சென்றதையும் குறிப்பிடுகின்றார் (34. 674-2) மேலும் பரமர் திருநெல்லிக்கா என்ற கூற்று இங்குள்ள சிவன் கோயில் பற்றிய தெளிவைப் பெற உதவுகிறது. நெல்லிமரங்கள் அடர்ந்த சோலை காரணமாக இப்பெயர் தோன்றியது எனல் பொருத்தமாக அமையும். தல மரம் நெல்லி என்பதும் இங்கு சுட்டத்தக்கது.[1]

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 317

## 240. நெல்வாயில்

சிவபுரி எனச் சுட்டப்படும் ஊராகிய இது. இன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அமைகிறது. சம்பந்தர் இத்தலத்து இறைவனைப் பாடுகின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு அருகேயுள்ளது. நெல்லின் மிகுதி காரணமாக இப்பெயர் அமைந்திருக்கலாம்.

## 241. நெல்வாயில் அரத்துறை

திருவரத்துறை எனச் சுட்டப்படும் இடம் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ளது. தேவார மூவரும் இத்தலத்து இறையைப் புகழ்கின்றனர். ஊர்ப்பெயர் நெல்வாயில். கோயில் அரத்துறை. பிற நெல்வாயில் தலத்தினின்றும் வேறுபடுத்திக் காட்ட அரத்துறையை இணைத்திருக்கலாம். நெல்வாயில் நெல்லின் செழிப்பு காட்ட எழுந்ததே என்பது ஈண்டும் விளக்கமாகிறது. நிவாநதியின் வடகரையில் உள்ள தலம் ஆகையால் அதன் கரையில் கோயில் அமைய, 'துறை' என்பது பொருத்தமாக அமைகிறது.

நல்வாய் அகிலும் கதிர் மாமணியும்
  கலந்துந்திவரும் நிவவின் கரைமேல்
நெல்வாயிலரத்துறை நீடுறையும்
  நிலவெண் மதிசூடிய நின்மலனே

என்ற பாடல் அரத்துறையினைப்பற்றிய எண்ணம் தரவல்லது. நிவா என்பது வடவெள்ளாற்றைக் குறிக்கும்.

## 242. நெல்வெண்ணெய்

நெய்வெணை இன்று சுட்டப்படும் தலம். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் அமைகிறது. சம்பந்தர் தேவாரம் இவ்வூருக்கு அமைகிறது. இவரது பாடல்கள் இவ்வூரின் வளத்தைக் காட்டுமாறு அமைகின்றன.

நிச்சலும் மடியவர் தொழுதெழு நெல்வெணெய் (354-2)
நிரைவிரி தொல்புகழ் நெல்வெணெய் மேவிய
கரைவிரி கோவணத்திரே (354-3)
நீர்மல்கு தொல்புகழ் நெல்வெணெய் (354-4)
நீடிளம் பொழிலணி நெல்வெணெய் (354-5)

என்ற பாடலடிகளைக் காணும்போது, நெல், வெண்ணெய் என்ற சொற்கள், ஊரின் மிக்க வளத்தைக் காட்டும் நிலையில் அமைவதை எண்ணத் தோன்றுகிறது. எனவே அந்த அடிப் படையில் இப்பெயர் பொருத்தமுறுமா எனக் காணலாம்.

243. நெல்வேலி

திருநெல்வேலி என்று அழைக்கப்படும் இவ்வூர் திருநெல் வேலி மாவட்டத்தின் தலைநகராகவும் அமைகிறது.

பாண்டிய நாட்டைச் சார்ந்த இவ்வூர், ஞானசம்பந்தரால் பாடல்பெற்று அமைகிறது.

பொருந்து தண்புறவினிற் கொன்றைபொன் சொரிதரத்
துன்று பைம்பூம்
செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலி (350-1)
துன்று தண் பொழிலினுழைந் தெழுவிய கேதகைப்
போதளைந்து
தென்றல் வந்துலவிய திருநெல்வேலி (350-2)
ஈண்டு மாமாடங்கள் மாளிகை மீதெழு கொடிமதியம்
தீண்டி வந்துலவிய திருநெல்வேலி (350-4)

என்ற இவரது பாடலடிகளில் திருநெல்வேலி, இவரது காலத் திற்கு முன்னரேயே செழிப்பும், பெருமையும் பெற்று விளங்கிய நிலை தெளிவாகத் தெரிகிறது. எனவே இவர்க்கும் முன்னைய வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இதனை நோக்கத் தெரிகிறதா? எனக் காணின் சாலியூர் பற்றிய எண்ணம் அமைகிறது.

மதுரைக் காஞ்சியில்,
சீர் சான்ற உயர் நெல்லின்
ஊர் கொண்ட உயர் கொற்றவ (87,88)

என்னும் பாடலடிகள், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் புகழைப்பாட எழுந்தவை. இதற்குத் தம் பத்துப்பாட்டு உரையில், டாக்டர் உ.வே.சா. சாலியூர் எனப் பொருள் எழுதுகின்றார். மேலும் இதனை நெல்லையோடுச் சார்த்திப் பொருள் சொல்வோரையும் காண்கின்றோம்.[1]

---

1. இதற்குப் பாண்டியன் நெல்லையைக் கொண்டவன் என்று வித்துவான் தாவீது நாடார் பொருள் கூறுகின் றார். திருநெல்வேலிக்குச் சாலிப்பதி என்ற பெயர் வழங்கியுள்ளது.
—பொருநைநாடு—திருநெல்வேலி மாவட்ட வரலாறு பக்-61, 62

இவற்றைக் கொண்டு எஸ். கணபதிராமன் தம் பொருநை நாடு என்ற நூலில், இங்கு நெல்லின் ஊர் என்பது திருநெல்வேலியே எனக் குறிக்கின்றார். ஆயின், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் தொகுதிஒன்றில், ஆசிரியர் இதனை ஆந்திர நாட்டு நெல்லூர் எனச் சுட்டுகின்றார் எனினும், சங்க இலக்கியச் சான்றுகளையும் இவண் ஆராய்ந்து, முடிவுக்கு வரமுடியுமா எனக் காணலாம்.

'சாலி' என்பது சங்க காலத்தில் சிறப்பு மிக்க நெல்வகை யாகக் கருதப்பட்டது என்பது தெளிவு.

கருந்தெற்று மூடையின் இடம்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின், சிறை கொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக,
காவிரி புரக்கும் நாடுகிழவோனே

என்பது பொருநர் ஆற்றுப்படை (242-48).

'அடுத்து மதுரைக் காஞ்சி குறிப்பிடும்,
சீர் சான்ற உயர் நெல்லின்

ஊர் கொண்ட உயர் கொற்றவ என்ற அடிகளில் அமையும் நெல்லின் ஊருக்கு, உ. வே. சா உரை சாலியூர் என்று குறிப்பிடு கிறது. எனினும், நெல்லுக்கே சீர் சான்ற உயர் என்ற அடை பொருத்தமானதே. எனவே சாதரணமாகப் பார்த்தாலும், நெல்லின் ஊர் என்ற எண்ணம் பொருத்தமாக அமைகிறது. இந்நிலையில் இதனை நெல்லின் ஊர் என்று இணைத்துத்தான் சுட்டவேண்டும் என்பது இல்லை. 'நெல்லை கொண்ட ஊர்' நெல்வளமிக்க ஊர் என்ற நிலையிலும் பொருத்தலாம். எனவே பாண்டிய நாட்டினுள் உள்ள நெல்வேலியை உடைய கொற்ற வனே என்று விளித்திருக்கலாம். பாண்டிய நாட்டில் நெல்வேலி சிறப்புடன் திகழ்ந்ததன் காரணமாக இவ்வாறு சிறப்பாகச் சுட்டி அமைத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. மேலும், நெடுஞ் சடையன் பராந்தகனது வேள்விக் குடிச் செப்பேடு,

'வில்வேலி கடற்றானையை நெல்வேலி செருவென்ற

பெருவீரன் எனச் சிறப்பிக்கின்றது' என்ற எண்ணத்தையும் காண்கின்றோம்.[1] மேலும் சுந்தரர்,

1. பொருநைநாடு-பக். 63

நிறை கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நிறை சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன் (39-8)

எனச் சுட்டுகின்றார்.[1] எனவே நெல்வேலியை வெல்வது சிறப்பாகக் கருதப்பட்டது எனத் தெரிகிறது. இந்நிலையிலேயே சங்க இலக்கியத்தும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் புகழைச் சுட்டுமிடத்து, நெல்வேலியைக் கொண்ட மன்னவன் எனச் சுட்டி இருக்கலாம்.

இதன் செழிப்பினைச் சேக்கிழாரும் சுட்டுகின்றார். 'செல்வத் திருநெல்வேலி' என்பது இவர் காட்டும் நிலை. எனவே பெருநை ஆறு பாய்ந்ததன் காரணமாக நெல்வயல்கள் சூழப்பட்ட ஊராக இது அமைந்த காரணமே இப்பெயர்க் காரணம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. எனினும், புராணக் கதையும் இப்பெயர்க் குறித்து அமைகிறது.[2]

---

1. பண்டு நெல்வேலியில் வென்ற மாறன் நம்பி–திருத்-60
   நெல்வேலி செருக்களத்து -பெரிய -நின்ற-3

2. வேதசருமர் என்ற முனிவர் அந்தக் காட்டுப் பிரதேசத்தில் வசித்து வந்தார். அவர் மிகுந்த சிவபக்தியுடையர். காட்டுப் பிரதேசத்தில் விளைந்த நெல்லைத் தினமும் சேகரித்துச் சிவபெருமானுக்கு நைவேத்தியம் செய்வது வழக்கம். நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அதன் பயனாக நெல் கிடைக்கவில்லை. இறைவனுக்கு வேண்டிய நைவேத்திய உணவு சேகரிக்க முடியவில்லை. காட்டில் நெடுந்தூரம் அலைந்து சிறிது நெல்சேகரித்தார். அதைச் சிந்து பூந்துறைக்கு எடுத்துச் சென்று கரையோரத்தில் பரப்பி உலர வைத்துவிட்டு நீராடச் சென்றார். அப்பொழுது பெருங்காற்றும் மழையும் அடிக்க ஆரம்பித்தன. வேதசருமர் அரிதிற் கிடைத்த நெல்லைக் காக்க எண்ணிக் கரையேறி மேலே வந்தார். அப்போது அவர் உலர வைத்து இருந்த நெற்குவியலைச் சுற்றி ஒரு வேலியைக் கண்டார். எல்லாவற்றையும் விட மிக ஆச்சரியமான விஷயம் அந்நெற்குவியலின் மீது ஒரு துளி மழையும் விழாதது தான். முனிவர் இறைவனின் அருள் திறத்தைக் கண்டு மகிழ்ந்தார். அன்று முதல் நெல்லுக்கு வேலி அமைந்த ஊர் நெல்வேலி என்றபெயர் பெற்றது. தென்னாட்டுக் கோயில்கள்-228

## 244. நெற்குன்றம்

குன்றம் என்று முடியும் ஊர்ப்பெயர் வரிசையுள் இதனைக் குறிப்பிடுகின்றார் ஞானசம்பந்தர். 'நெற்குன்றம்' (பதி 175-9). ரா.பி. சேதுப்பிள்ளை நெற்குன்றம் என்ற ஊர் இன்று நெற்குணம் என்று சுட்டப்படுவதையும் ஆர்க்காடு நாட்டைச் சார்ந்தது என்பதையும் சுட்டுகின்றார். (பக்-4) நெல்லின் செழிப்பா? அல்லது 'நற்குன்றம்' நெற்குன்றமாயிற்றா என்பது தெளிவுறவில்லை.

## 245. பந்தணை நல்லூர்

பந்தணை நல்லூர் என்று இன்றும் சுட்டப்படும் இவ்வூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. அம்பிகை ஆடிய பந்து வந்து அணைந்ததால் பந்தணை நல்லூர் எனப்பெயர் பெற்றது என்பர்[1] சம்பந்தர், அப்பர் இத்தலத்தைப் பாடியுள்ளனர். சம்பந்தர் அப்பர் இருவருமே பந்தணை நல்லூர் என்று மட்டுமே தம் பதிகத்தில் சுட்டுகின்றனர் (224). எனவே இவ்வூர் பற்றிய விளக்கம் எதுவும் தெளிவுறவில்லை. சேக்கிழார் தம் பாடல்களில்,

பருக்கை வரை யுரித்தார் தம் பந்தண நல்லூர் (பெரிய-34—289-3)

பாங்கு பந்தண நல்லூர் (33-250-2)

என பந்தண நல்லூர் என இதனைச் சுட்டுகின்றார்.

## 246. பயிற்றூர்

திருப்பயற்றங்குடி என இன்று சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. அப்பர் பாடல் பெற்ற தலம் இது (32) எனினும் இவர் பாடல்கள் இறையைப் புகழுகின்றனவே தவிர,[2] ஊர் பற்றிய தெளிவைத் தரவில்லை இருப்பினும்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 267
2. காவியங் கண்ணளாகிக் கடல் வண்ணமாகி நின்ற
தேவியைப்பாகம் வைத்தார் திருப்பயற்றூரனாரே
—திருநா-32-7

பயற்றூர் பயற்றங்குடி தானியத்தோடு தொடர்புடையதாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

247. பரங்குன்று

திருப்பரங்குன்றம் என்ற பெயரால் அழைக்கப்படும் ஊர். மதுரை மாவட்டத்தில் அமைகிறது. பண்டு தொட்டே புகழ் மிக்கது. முருகனின் அறுவடை வீடுகளுள் ஒன்று. இதனைத் திரு முருகாற்றுப்படை,

'மாடம் மலி மறுகின் கூடற்குடவயின்
இருஞ்சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த
முள்தாட் தாமரைத்துஞ்சி......
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்று அமர்ந்து உறைதலும் உரியன் (71-77)

என மதுரைக்குக் குடபகுதியில் இருக்கும் நிலையையும் இப்பரன் குன்று 'குன்று' என்றே சுட்டப்பட்ட நிலையையும் உரைக்கிறது. இங்கு முருகன் குடிகொண்ட நிலையை அகநானூறும்,

'சினம் மிகு முருகன் தண்பரம் குன்றம்' (59: 10-11)

என்று தருகிறது. எனவே பரன் குன்று என்ற நிலையில் தலைவன் குன்று என்று பெயர் பெற்றது எனலாம். சங்கக்காலத்துச் சுட்டப்படவில்லை எனினும் பிற்காலத்தில் இங்குச் சிவன் கோயிலும்காணப்பட்டது என்பதைத் தேவாரப் பாடல்கள் காட்டுகின்றன.

'பண்ணார் மொழி மங்கையோர் பங்குடையான்
பரங்குன்றம் -திருஞா 175-2
பரங்குன்று மேயான் தன்னை —திருநாவு-248-3
பரங்குன்று மேயபரமன் —சுந்-2-11

மேலும்,

'வளர் பூங்கோங்க மாதவியொடு மல்லிகைக்
குளிர் பூஞ்சாரல் வண்டறை சோலைப் பரங்குன்றம்
தளிர் பொன் மேனித் தைய னல்லா ளொடொருபாகம்
ஒளிர் பூங்கொன்றை சூடினன் மேயநகர் தானே'
(திருஞான-100-4)

என்பது சிவன் நயந்த இடம் என்பதைத் தெளிவாகத் தருகிறது. முருகன் சிவபெருமானை இங்கு வழிபட்டார் என்ற கருத்து அமைகிறது.[1] எனினும் சங்க இலக்கியச் சான்றுகள் எதுவும் இல்லை ஆகையால், பின்னர் சிவன் கோயில் எழுந்த பின்னர் மக்கள் கொண்ட எண்ணம் இது எனக் கருத முடிகிறது.

## 248. பராய்த்துறை

திருப்பராய்த்துறை என இன்று அழைக்கப்படும் இவ்வூர் திருச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளது. சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம். இது மாணிக்கவாசகரும் இத்துறை இறைப் பற்றி பாடுகிறார். (பராய்த்துறை மேவிய பரனே போற்றி— திருவா-போற்றித்-153) நாவுக்கரசர், இத்தலம் பற்றி பாடும் போது,

'பரப்பு நீர்வரு காவிரித் தென்கரைத்
திருப்பராய்த்துறை மேவிய செல்வரே' (144-1)

எனச் சொல்லும்போது காவிரியின் தென் கரைத்தலம் இது என் பது தெரிகிறது. இன்றும் காவிரியின் தென்கரைத் தலமாக திருப் பராய்த்துறை இருப்பது நாவுக்கரசர் கருத்துக்குத் தெளிவு அளிக் கிறது. எனவே காவிரியின் தென் கரைத் துறையில் அமைந்த பரவுமிடம் என்ற நிலையில் சிவன் கோயிலைக் குறிப்பிட்ட 'பராய்த்துறை' பின்னர் அந்த இடத்திற்கும் பெயராகியிருக்கும் எனத் தோன்றுகிறது. எனின், 'விருட்சம் பராய்; விருட்சத்தால் இத்தலத்திற்குப் பெயராயிற்று' என்ற எண்ணம்[2] காணும்போது 'பராய்' என்ற தாவர வகையைப் பற்றிய எண்ணம் சிறப்பாகத் தெரியவில்லை. தமிழ் லெக்ஸிகன், பராய்-மரவகை (Paper tree) என மட்டும் கூறுகிறது. எனவே இதனைப்பற்றிய பிற விளக்கங்கள் கிடைத்தால் மட்டுமே இவ்வெண்ணத்திற்கு உறுதி கிடைக்கும்.

## 249. பரிதி நியமம்

இன்று பருத்தியப்பர் கோயில் எனச் சுட்டப்படும் இந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. பருதி நியமம் என்ற

1. பாண்டி நாட்டுத் தலங்கள்—பக்-92
2. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் திருமுறை —பக்-83

பெயர் சூரியன் கோயில் என்ற பொருள் கொண்டது[1] எனவே சிவனுக்கு கோயில் எழுமுன்னே அங்கு மக்கள் சூரியனை வழி பட்டு இருக்கலாம். எனவே அப்பெயரால் அவ்வூரைக் குறிப்பிட்டு இருக்கலாம். நாளடைவில் சிவன் கோயில் செல்வாக்கு பெற அங்குள்ள கோயில் இறைவன் பரிதியப்பர் என்று சுட்டப்படுகின் றார். இன்றும் இறைவன் பெயர் பரிதியப்பர் என்ற எண்ணம் காண்கின்றோம்[2]. இப்பருதியப்பர் கோயிலே இன்று பருத்தியப்பர் கோயிலாக மருவி அமைந்து விட்டது என்பது தெளிவான உண் மையாக அமைகிறது. இக்கோயிலை, சம்பந்தரின் பாடல் புகழ் கிறது.[3] பிற சூரியனார் கோயில் பற்றிய எண்ணமும் இது சூரியனுக்குரிய கோயிலாக இருந்திருக்கலாம் என்பதைத் தெளிவு படுத்துகிறது.[4]

## 250 பழமண்ணிப் படிக்கரை

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் இலுப்பைப்பட்டு என்ற பெயரில் வழங்கி வருமிடம். சுந்தரர் இத்தலம் பாடுகின்றார். எனினும் இறைப் புகழ் சுட்டப்படுகிறதே தவிர ஊர்ப்பெயர் விளக்கம் எதுவுமில்லை.

விடுத்தவன் கைநரம்பால் வேத கீதங்கள் பாடலுறப்
படுத்தவன் பால் வெண்ணீற்றன்பழ மண்ணிப்படிக்
கரையே -22-7

மண்ணியாற்றின் கரையில் சேய்ஞலூர் என்றதொரு தலம் இருப் பதைக் காண்கின்றோம். எனவே இவ்விடமும் மண்ணியாற்றின் கரையில் அமைந்து இருப்பதனால் முதலில் மண்ணிப்படிக்கரை எனப்பெயர் பெற்றதோ என்ற எண்ணம் தோன்றுகிறது. பின்னர் இலும்பை மரங்கள் மிகுதியாக இருந்ததால் இலுப்பைப் பட்டு எனச் சுட்டப்பட்டு இருக்கலாம்.

---

1. ஊரும் பேரும்-பக். 272
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக் 291
3. பண்கொண்ட வண்டினம் பாடியாடும் பரிதிநியமமே
—திருஞான-362-1
பாசடைத் தாமரை வைகு பொய்கைப் பரிதிநியமமே
— திருஞான ,, -8
பல்வளர் முல்லையங் கொல்லை வேலிப் பரிதிநியமமே
,, -10
4. வேங்கடம் முதல் குமரி வரை பக். 252

## 251. பழனம்

திருப்பழனம் என, தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது இவ்வூர் திருவையாற்றுக்குக் கிழக்கே இரண்டு மைலில் உள்ளது. சைவ அடியார் மிகவும் விரும்பிய தலம் இது என்பதைப் பலரின் பாடல்களும் உணர்த்துகின்றன.

சிவபெருமான் திருவிரட்டை மணிமாலையில் அதன் ஆசிரியர்,

குருகினம் சென்றிடறும் கழனிப் பழனத்தரசை' (28)
என்று போற்றுகின்றார்.

பாங்கார் பழனத்தழகா போற்றி என்கின்றார் மாணிக்க வாசகர் (திரு· போற்றித்· 157).

திருவையாற்றுக்கு அருகில் உள்ள சிவன் கோயில் வயல்களின் நடுவே அமைந்திருந்த காரணத்தால், இதனைப் பழனம் என்றே சுட்டினர் எனக் கருதலாம். பின்னர் இதனைப் பழவனம் எனக் கருதிய காரணமோ பிறவோ, இதனைக் கதலிதனம் என்றும்[1] (கதலி-வாழையின் ஒரு வகை) சுட்டினர் என எண்ணத் தோன்றுகிறது.

நல மஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின் கனிகள் திரைமுன் சேர்க்கும் பழனநகராரே
(திருஞான-67-5)
பருவரால் வயல் சூழ்ந்த பழனத்தான்—(திருநா-149-1)
வாளைபாய் புனற் பழனத் திருப்பழனம் மருங்கணைந்து
(பெரிய-திருநா-199)

போன்ற பாடல்கள் பழனத்தின் வளத்தினைக் காட்டவல்லனவாக அமைகின்றன.

## 252. பழுவூர்

திருப்பழுவூர் என்ற பெயருடன், திருச்சி மாவட்டத்தில் உள்ள ஊர் இது. கீழைப்பழுவூர் என்பதும் உண்டு.[2]

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 197
2. ,, ,, -பக். 265

குரக்கினம் விரைப்பொழிலின் மீது கனியுண்டு
பரக்குறு புனற் செய் விளையாடு பழுவூர்
(திருஞான-170-8)

மண்ணின் மிசையாடி மலையாளர் தொழுதேத்தி
பண்ணினொலி கொண்டு பயில்கின்ற பழுவூர் (,, -4)

என ஞானசம்பந்தர் பாடல்கள் பழுவூர் பற்றிய எண்ணம் தரு கின்றன. பழு என்பது ஆலமரத்தைக் குறிக்கும் நிலையில் ஆலங்காடு, ஆலந்தூர் போன்று 'பழுவூர்' என்ற ஊர்ப்பெயர் அமைந்திருத்தல் தெளிவு.

## 253. பழையாறை

பழையாறை என்று இன்றும் சுட்டப்படும் தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது. திருநாவுக்கரசர் பாடல் பெற்ற கோயில்களையுடையது. பழையாறையில் உள்ளதே வடதளி தவிர சத்தி முற்றம், பட்டீச்சரம் ஆகிய கோயில்களும் இங்கு உள்ளன. எனவே சத்திமுற்றம், பழையாறை வடதளி, பட்டீச் சரம் எப்பன இன்று ஊர்ப்பெயர் போன்று தோன்றினும், பழை யாறையின் பகுதிகள் கோயில் காரணமாகப் பெயர் பெற்ற நிலையையே இவண் காண்கின்றோம்.

பழையாறை என்ற ஊர் பற்றிய ஆய்வு சில எண்ணங்களைத் தருகிறது. பழைய ஆறை பழையாறை, என்று ஆயிற்றா? அல்லது இப்பெயருக்கு வேறு காரணங்கள் உண்டா? எனக் காண, சில எண்ணங்கள் தோன்றுகின்றன. சோழ மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் நகரங்களில் இது ஒன்று எனச் சுட்டப்படுகிறது.[1] எனினும் சங்க இலக்கியக் குறிப்புகள் ஒன்றும் இவ்வூர் பற்றிச் சுட்டவில்லை; எனவே இடைக்கால சோழர்கள் காலத்தில் தோன்றிய அல்லது முக்கியத்துவம் பெற்ற ஊராக இது இருக்க வாய்ப்பு அமைகிறது. இந்நிலையில் 'பழைய ஆறை' என்பது பொருந்துமா? என்பது எண்ணத்தக்கது.

---

1. The Cholas, it seems ruled as petty princes from Palaiyarai which is near Tanjavur.
—History of Tamil Nadu-pa-175

அடுத்து ஆறை என்பது மரூஉ என்பதும் 'ஆற்றூர்' அதன் விரி என்பதும் அறிஞர் ஒருவர் கருத்தாக அமைகிறது[1] மேலும், இந்த அறிஞரே, 'பழையாறு' என்ற ஆற்றுப் பெயர் பழைமை காரணமாக அதாவது ஆற்றின் காலப் பழமை காரணமாக ஏற்பட்ட பெயர் என்று கருதுகின்றார்[2] எனவே 'பழையாறை' என்பதை நோக்க, 'பழையாற்றூர்' என்பதன் மரூஉவாக இருக்குமா எனப் பார்க்கலாம்.

இதற்கும் பண்டைச் சான்றுகள் இல்லை. பழையாறையில் பழையாறு ஓடியதாகத் தெரியவில்லை. இன்றும் இல்லை. திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில்,

அலையினார் பொழில் ஆறை வடதளி (172-1)
அள்ளலம் புனல் ஆறை வடதளி (172-5)
பாயிரும் புனலாறை வடதளி (172-9)

என்று சொல்லும்போது, புனல் வளம் காட்டும் நிலை அமையினும் 'பழையாறு' என்ற நதிப்பெயர் அங்குக் குறிப்பிடப்பெறவில்லை. எனவே பெயர் சுட்டப்படாது, பழைமையாக உள்ள சிற்றூர் என்ற நிலையில் ஊர்ப்பெயர் குறிப்பிடப் பெற்றதோ எனத் தோன்றுகிறது. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் கருத்தும் இவண் சுட்டத்தக்கது. சோழமன்னர்களின் சிறந்த தலைநகரங்கள் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் என்பதை அறிவோம். அவற்றை ஒத்த பெருமையுடையது பழையாறை. காவிரியின் கிளை நதியான முடிகொண்டான், அரிசிலாறு இவற்றுக்கிடையே ஐந்து மைல் நீளமும் மூன்று மைல் அகலமும் உள்ள பிரதேசமே பழையாறைப் பகுதி (காவிரிக்கரையிலே—பக்-38). மேலும் கி பி 7ஆம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையில் இந்நகர், நந்திபுரம், முடிகொண்ட சோழபுரம், இராசராசபுரம் என்ற பிற பெயர்களையும் கொண்டு வழங்கி வந்துள்ளது எனத் தெரிகிறது.[3]

நம்பியாண்டார் திருத்தொண்டர்த் தொகையும் இதனை,

'மிண்டும் பொழில் பழையாறை' (7) எனவே சுட்டுகிறது.

---

1. தமிழ் இடப்பெயராய்வு-பக். 83
2. ,, ,, பக். 95
3. கல்வெட்டுகள் கூறும் உண்மைகள்—பக்-47

சேக்கிழார் இதனை,

'செறிவரை நன் மலர்ச்சோலை பழையாறு' (திருஞா-192)

என்றும்,

பாரில் நீடிய பெருமை சேர் பதி பழையாறை (13-1)

என்றும்,

செய்ய சடையார் பழையாறை (27-294)

என்றும் குறிப்பிடும் நிலையில் சேக்கிழார் காலத்தில், சோழர்கள் அரசியல் செல்வாக்கு காரணமாகவும், இங்குள்ள பல கோயில்கள் காரணமாகவும் பெருஞ்சிறப்பு பெற்றிருந்தது என்பதை மட்டுமேயுணர இயலுகிறது.

எனவே பழையாறையின் பெயர் ஆறு காரணமாக அமைந்திருக்க வாய்ப்புமிகுகிறது.

இதனை, ஆறை என்றும்[1], பழைசை என்றும்[2] கூட குறைத்தும் சுட்டினர் என்பதையும் தேவாரப் பாடல்கள் காட்டுகின்றன. இந்நிலையில் சங்ககாலத்தில் சுட்டப்படாத நிலையையும், இம்மரூஉக்களையும் நோக்க, பழையாறையின் மரூஉவே பழசை என்ற கருத்து நோக்க, ஆற்றூர் ஆறையாகி 'ஆறை'யே 'பழைய' அடை இணைப்பில் 'பழையாறை' என்று ஆயிற்றோ என்றும் தோன்றுகிறது.

பழையாறை பின்னர் அரசியல் தொடர்பு காரணமாக ஆயிரத்தளி, முடிகொண்ட சோழபுரம் என்ற பெயர்களைப் பெற்றது எனினும் இன்று வரை பழையாறையே செல்வாக்குடன் திகழ்கிறது. பழையாறை வடதளி சிவன் கோயில் அப்பர் பாடல் பெற்று அமைய, இங்குள்ள பட்டீச்சரம் கோயிலைப் பாடுகின்றார் சம்பந்தர். 'காமதேனுவின் பெண்கள் நால்வருள் பட்டி

1. ஆக்கினான் அணியாறை வடதளி —திருநா-172-2
2. பழைசையுள், மாடமழபாடியுறை —திருஞா-331-1

என்பவள் வருபட்ட தலம் என்பது புராணக் கருத்து[1] பழை யாறையுள் அள்ள பிற கோயில்கள் சிவன் கோயில்களாக அமைய, சக்திக்கென்று எழுந்த கோயிலாக இது முதலில் அமைந்திருக்க லாம் எனத் தோன்றுகிறது திருநாவுக்கரசர் பதிகம் 'திருச்சத்தி முற்றத்துறையும் சிவக் கொழுந்தே' என்று அமைகிறதே தவிர பெயர் பற்றிய விளக்கம் எதையும் சுட்டவில்லை.

சத்தி இறைவனுக்கு முத்தம் கொடுத்தால் சத்தி முற்றம் ஆயிற்று என்ற எண்ணமுண்டு.[2] எனினும் சத்தி முற்றம் முதலில் அமையும் தன்மை இப்பெயருக்கு வேறு காரணம் இருக்க வேண்டும் என்பதை யுணர்த்துகிறது. சக்தி கோயிலிருந்த இடமாக இருக்கலாம் என்பது உறுதிப்படுகிறது.

இலக்கியச் சான்றுகளுடன் கல்வெட்டுச் சான்றுகளும், இத்தலத்திற்கு அமைகின்றன. சோழ, நாயக்கர் காலத்தைச் சார்ந்தன அவை, இக்கல்வெட்டுகளில் இறைவர் திருச்சத்தி முற்றம் உடையார், திருச்சத்திவனப் பெருமாள் என்னும் திருப் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளார் எனக் காண்கின்றோம்[3] சத்தி என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன் வேம்பு, கொம்மட்டி பேய்ப்புடல் போன்ற பல தாவரங்களைப் பொருளாகத் தருகிறது எனவே இத்தாவரங்களுள் ஒன்றை முற்றத்தில் உடைய கோயில், (முற்றம்—விட்டின் முன்னிடம்) ஊரின் வெளியிடம், பரப்பு —தமிழ் லெக்ஸிகன்-IV பக்-1249) என்ற பொருவில் அல்லது, சத்தி என்னும் தாவரம் நிறை வளப்பகுதி என்ற பெயரில் இவ்வூர்ப் பெயர் அமைந்திருக்கலாம். தவிர, இது நறையூர் நாட்டுட்பட்ட ஊர் என்பதும்[4] திருச்சத்தி முற்றம் கோயில் இராசராசபுரத்தில் இருப்பதாகச் சுட்டும் நிலையும்[5] நறையூர் இராசராசபுரம் என்ற பெயர் இருந்ததோ என்ற எண்ணத்தைத் தருஎறது. தி.வை. சதாசிவப்பண்டாரத்தார் பழையாறையில் உள்ள ஒரு கோயில் இது என்கின்றார். இன்று ஊர்ப்பெயராகத் திகழ்கிறது[6]

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-293
2. ,, பக்-194
3. திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் —பக்-86
4. ,, —பக்-87
5 ,, ,,
6. கல்வெட்டுகள் உணர்த்தும் உண்மைகள்—பக்-48

254. பள்ளியின் முக்கூடல்

இன்று அரியான்பள்ளி எனச்சுட்டப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது.

அம்பர் பாடல் பெற்ற இவ்வூர் பிற முக்கூடல் போன்று இணைவு காரணமாக அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது எனினும் அவரது பாடல்கள் இவ்வூர் பற்றிய எந்த விளக்கத்தையும் தரவில்லை[1] இன்று திருவாரூர் பக்கத்தில் இவ்வூர் உள்ளது என்று மட்டுமே தெரிகிறது.[2]

255. பறியலூர்

இன்று பரசலூர் என்னும் பெயரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைகிறது.

'பறியலூர்' என்ற இடத்தில் உள்ள 'வீரட்டம்' சம்பந்தர் பாடல் பெற்ற கோயில். கருப்பறியலூர் என்றதொரு தலமும் முன்பு தெரியவந்தது. 'பறியலூர்' என்பதற்குப் பொருள் என்ன என்பது தெரியவில்லை.

திருந்து மறையோர் திருப்பறியலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே (134-2)

திரையார் புனல் சூழ் திருப்பறியலூரில்
விரையார் மலர்ச் சோலை வீரட்டத்தானே (134-7)

எனச் சுட்டும் சம்பந்தர் பாடல்கள் இப்பெயர் பற்றிய விளக்கம் தரவில்லை. எனினும், வீரட்டமே கோயில் பெயராக இருப்பதால் 'பறியலூர்' கோயில் காரணமாகப் பெயர் பெற்றிருக்க வாய்ப்பில்லாததுபோல் தோன்றுகிறது. 'பறியலூர்' என்ற பெயரில் கருப்பறியலூர் என இன்னொரு ஊரையும் பார்க்கும்போது இரண்டிற்கும் என்ன நிலையில் ஒற்றுமை இருக்க இயலும் என்ப

---

1. கானவனைக் கயிலாய மலையுளானைக்
கலந்துருகி நைவார் தம் நெஞ்சினுள்ளே
பானவனைப் பள்ளியின் முக்கூடலானைப்
பயிலாதே பாழே நானுழன்றவாறே-திருநா-283-9

2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 204

தும்நோக்கத்தக்கது. பறிவை என்பதற்குத் தமிழ் லெக்஀ிகன் சீந்தில், நந்தியாவட்டம், தாவரம், தாழை எனப் பல பொருட்களைத் தரும் நிலையில் தாவரம் அடிப்படையாக இப்பெயர் அமைந்திருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

பனங்காட்டூர் 256. வன்பார்த்தான் பனங்காட்டூர்
257. புறவார் பனங்காட்டூர்

திருப்பனங்காடு என்று இன்று சுட்டப்படும் தலம் வடஆர்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. பனைமரக்காடு காரணமாகப் பெயர் பெற்றது என்பது தெளிவு. தலமரமும் பனை இங்கு யாக அமைகிறது. சுந்தரர் பாடல் பெற்ற இத்தலம்.

மயிலார் சோலைகள் சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பயில்வானுக் கடிமைக் கட்பயிலாதார் பயில்வென்னே (86-6)

மஞ்சுற்ற மணிமாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத் தெங்கள் பிரானை நினையாதார் நினைவென்னே (86-8)

என்ற பாடலடிகள் பனங்காட்டூர் சிவன் கோயில் தோன்றிய பின்னர், மக்கள் வாழும் பகுதியாக மாறியது என்ற எண்ணத்தைத் தரும் நிலையில் அமைகிறது.

மேலும் பனங்காட்டூர் என, பனைமரம் காரணமாகம் பல ஊர்கள் பெயர் பெற்றமைய, தனிமைப்படுத்த வன்பார்த்தான் பனங்காட்டூர் எனச் சுட்டினரோ எனத் தோன்றுகிறது எனினும் 'வன்பார்த்தான்' என்பதற்குரியப் பொருள் தெளிவாகவில்லை.[1] சேக்கிழாரும் இதனை,

மாடநெருங்கு வன்பார்த்தான் பனங்காட்டூர்
செல்வமல்கு திருப்பனங்காட்டூர் (ஏயர் 193, 194) என்று புகழ்கின்றார். தவிர, புறவார் பனங்காட்டூர் என்பது இன்னொரு ஊர்ப்பெயராக அமைகிறது.

---

1. இது வன்பாக்கம் என்னும் ஊரையடுத்துப் பனையைத் தலவிருட்சமாக உடைமையால் இப்பெயர் பெற்றது என்பர்.
சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 31

சம்பந்தர் பாடல் பெற்ற இத்தலம், பனையபுரம் என்று இன்று தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காணப்படுகிறது.

நீடல் கோடல் அலர வெண் முல்லை நீர்மலர் நிரைத்
தாதளஞ் செயப்
பாடல் வண்டறையும் புறவார் பனங்காட்டூர் (189-2)

எனவும்

வாளையும் கயலும் மிளிர் பொய்கை
வார்புனற் கரை யருகெலாம்வயற்
பாளை யொண்கமுகம் புறவார் பனங்காட்டூர் (189-2)

எனவும் சம்பந்தர் பாடும் நிலையில் பனங்காடாக இருந்தபோதிலும் நீர் வளமிக்கப் பகுதிகளையும் கொண்டு திகழ்ந்தது இவ்வூர் என்பது தெரிகிறது. இங்கும் 'பனங்காட்டூர்' என்பது விளக்கமாக அமைகிறதே தவிர புறவார் விளக்கம் பெறவில்லை. இக்கோயிலில் உள்ள தலவிருட்சம் பனையாகும்.

### 258. பனந்தாள்

பனையின் தாளில் இறைவன் எழுந்தருளியிருத்தலால் கோயில் பெயர் 'பனந்தாள்' என்றாகி, பின்னர் ஊர்ப்பெயரும் பனந்தாளாக அமைந்தது எனத் தெரிகிறது. இன்று திருப்பனந்தாள் என்று வழங்கப்படும் தலம், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.

புரம் மூன்றும்,
தீச்சரத்தான் செற்றான் திருப்பனந்தாள்
தாடகைய ஈச்சரத்தான் பாதமே ஏத்து

என்பது க்ஷேத்திரக் கோவை வெண்பா (21). மேலும் புராணக் கதையின்படி தாடகை வணங்கியதன் காரணமாகத் 'தாடகையீச்சரம்' எனப்பெயர் அமைந்தது என்பது தெரிகிறது.[1]

சம்பந்தர் தம் தேவாரத்தில்,

தண்பொழில் சூழ் பனந்தாட்டிருத் தாடகையீச்சரமே
(320-1)

---

1. வேங்கடம் முதல் குமரி வரை II பக். 251

அறைமலி தண்புனலும் மதியாடரவு மணிந்த
தலையவனூர் பனந்தாட் டிருத் தாடகையீச்சரமே (320-7)

போதவிழ் பொய்கைதனுட் டிகழ் புள்ளிரியப் பொழில்
வாய்த்
தாதவிழும் பனந்தாட்டிருத் தாடகையீச்சரமே (320-10)

என இதன் செழுமை குறித்துப் பாடுகின்றார். சேக்கிழாரும் 'செழுமலர்ச் சோலைவேலித் திருப்பனத்தாள்' என (17-25-3-4) இதனை இயம்புகின்றார்.

259. பனையூர்

திருப்பனையூர் என்ற இத்தலம் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பனை காரணமாக எழுந்த இன்னொரு ஊர்ப் பெயர். தலமரமும் பனையாக அமைகிறது.

'திருப்பனையூரில் விருப்பன் ஆகியும்' என மாணிக்கவாசகர் வாசகம் இவ்வூரைச் சுட்டுகிறது (கீர்த்—87). சம்பந்தர், சுந்தரர் இருவரும் இத்தலத்தைப் பாடுகின்றனர்

கண்ணின் றெழு சோலையில் வண்டு
பண்ணின் றொலிசெய் பனையூரே (37-2)

பொடியறையார் மிகுசீர் விழமல்கப்
பறையா ரொலி செய் பனையூரே (37-5)

என, சம்பந்தரும்,

மாடமாளிகை கோபுரத் தொடு மண்டபம் வளரும் வளர்
பொழில்
பாடல்வண்டறையும் பழனத் திருப்பனையூர் (87-1)

நாறு செங்கழு நீர் மலர் நல்ல மல்லிகை சண்பகத் தொடு
சேறு செய்கழனிப் பழனத் திருப்பனையூர் (87-2)

செங்கண் மேதிகள் சேடெறிந்து தடம்படிதலிற் சேலினத்
தொடு

பைங்கண் வாளைகள் பாய் பழனத் திருப்பனையூர் (87-3) என, சுந்தரரும் இவ்வூர் வளம் பாடுகின்றனர். சேக்கிழார் 'வளமல்கிய சீர்த் திருப்பனையூர் (ஏயர்.54) எனக் காட்டுகின்றார்.

## 260. பாச்சிலாச் சிராமம்

திருவாசி எனச் சுட்டப்படும் ஊர் இது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பாச்சில் கூற்றத்து ஆச்சிராமமாதலின் பாச்சில் ஆச்சிராமம் என்று வழங்கப்படுகிறது என்ற கருத்து அமைகிறது.[1] ஆச்சிராமம் முனிவர்களின் இருப்பிடத்தைக் குறிப்பிடும் நிலையில், இப்பெயர் அமைந்ததோ எனத் தோன்றுகிறது. சம்பந்தர், சுந்தரர் பாடிய கோயில் இங்கு உள்ளது.

'அன்னமாம் பொய்கை சூழ் தரு பாச்சி
லாச்சிராமத் துறை' —சுந்-14-2
பொன் விளை கழனிப்
புள்ளினஞ் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச் சிராமத்து ,, -4

மஞ்சடை மாளிகைசூழ் தருபாச்சிலாச் சிராமத்துறைகின்றவன் (44-3) என்கின்றார் சம்பந்தர்.

## 261. பாசூர்

திருப்பாச்சூர் எனச் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர் இது. சம்பந்தராலும், அப்பராலும் பாடல் பெற்ற இவ்வூர், சிவபெருமான் மூங்கில் அடியில் தோன்றியமையின் இப்பெயர் பெற்றது என்கின்றனர்.[2] (பாசு-மூங்கில்) ஆயின் சம்பந்தர்,

பைந்தண் மாதவி சோலை சூழ்ந்த பாசூர்—196-1
பைவாய் நாகம் கோடலீனும் பாசூர்—196-3
பைங்கான் முல்லை பல்லரும் பீனும் பாசூர்—196-4
பாடற் குயில்கள் பயில்பூஞ் சோலைப் பாசூர்—196-5

என இதன் இயற்கை வளத்தையும், செழுமையையும் ஒவ்வொரு பாடலிலும் சொல்லிச் செல்லும் நிலையில், 'பசுமையான ஊர்' என்ற எண்ணத்திலேயே இவ்வூர் 'பாசூர்' எனச் சுட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது பொருத்தமாக அமைகிறது.

---

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் - பக்-58
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் பக். 224

262 பாண்டிக் கொடுமுடி

இன்று பெரியார் மாவட்டத்தில் 'கொடுமுடி' என்று அழைக்கப்படும் ஊர் இது. தேவார மூவர்களும் இத்தலத்து இறைச் சிறப்பைப் புகழுகின்றனர்.

காவிரியாற்றின் கரையில் உள்ள தலம். இதன் பழம்பெயர் கறைசை, கறையூர். கொடுமுடி என்பது சங்ககாலத்தில் வாழ்ந்த மன்னன் பெயர் எனவும், அவன் ஆண்ட இடமே கொடுமுடி என்பதும், திருப்பாண்டிக் கொடுமுடி நூல்கூறும் செய்திகளாகும் (பக். 4, 6).

அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவரும் இத்தலத்து இறையைப புகழ்கின்றனர். இதனைச் சம்பந்தர்,

ஊனமர் வெண்டலை யேந்தி உண்பலிக்கென்று உழல் வாரும்
தேனமரும் மொழிமாது சேர் திரு மேனியினாரும்
கானமர் மஞ்ஞைகளாலும் காவிரிக் கோலக் கரைமேல்
பாலை நீறணி வாரும் பாண்டிக் கொடுமுடியாரே' (205-7)

என்று பாடுகின்றார். எனவே காவிரிக் கரை இதன் இருப்பிடம் என்பது உறுதிப்படுகிறது.

263. பாதிரிப் புலியூர்

திருப்பாதிரிப் புலியூர் என்ற தலம் இன்று திருப்பாப் புலியூர் எனச் சுட்டப்படுகிறது. தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. கடலூர் என்றும் வழங்கப்படுகிறது. சம்பந்தர் அப்பர் பாடல் பெற்ற தலம். கெடில நதிக் கரையிலே அமைந்துள்ள தலம் இது.

பாதிரிவனம் இது என்பதும், இறைவன் பாதிரி மரத்தினடியில் தோன்றி, தவம்புரிந்த உமாதேவிக்கு வரம் கொடுத்தார் என்பதும், புலிக்கால் முனிவர் இங்கு இறைவனைப் பூசித்ததால் புலியூர் என்பதும் தோன்றி இரண்டன் சேர்க்கையால் பாதிரிப் புலியூர் என்னும் திருப்பெயர் இத்தலத்துக்கு அமைந்து விளங்குகிறது என்பர்[1] ஆயின்பாதிரி காரணம் என்பது தெளிவு. இன்றும் இத்தலத்திற்குரிய தலமரமாக பாதிரியே விளங்குகிறது.

---

1. புனித கோயில்களும் புண்ணிய தீர்த்தங்களும் பக் 297

## 264. பாம்பணி மாநகர்

பாமணி, என்றும் பாம்பணி என்றும் வழங்கப்படும் இத்தலம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பதஞ்சலி போலப் பாம்புரு உள்ள தனஞ்செய முனிவர் வழிபட்ட தலம் என்பர்.[1] சம்பந்தர் இக்கோயிலைப் பாடுகின்றார். கோயில் பாதாளீச்சரம் எனச் சுட்டப்படுகிறது.

அங்கமு நான் மறையும் மருள் செய்தழகார்ந்த வஞ்சொல்
மங்கையோர் கூறுடையான் மறையோன் உறைகோயில்
செங்கயனின்றுகளும் செறுவிற் றிகழ்கின்ற சோதிப்
பங்கய நின்றலரும் வயல் சூழ்ந்த பாதாளே (108-3)

என இக்கோயிலின் சிறப்பு சுட்டுகின்றார் இவர். பாதாள லிங்கம் என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன், பூமியில் ஆழப் பதிந்த சிவலிங்கம் எனப் பொருள் தருகிறது (பக்-2607). எனவே பாதளீச்சரத்திலும், சிவன் மேற்குறித்த நிலையில் காட்சிதரும் நிலையில் பெயர் பெற்றதோ எனத் தோன்றுகிறது.

பாதாளீச்சரம் என்பது கோயில் பெயராக அமைய, 'பாம்பணி' என்ற இன்றைய பெயர் அன்றும் இருந்தது என்பதைப் பெரியபுராணம் சுட்டுகிறது ஆயின் சம்பந்தர் இதனைக் குறிப்பிடவில்லை. எனவே 'பாதாளீச்சரம்' என்ற கோயில் செல்வாக்குப் பெற்ற நிலையில், மேற்குறிப்பிட்ட பாம்பு பற்றிய புராணக் கருத்தும் செல்வாக்குப் பெற 'பாம்பணி நகர்' என்ற பெயர் பின்னர் இவ்வூருக்கு அமைந்ததோ என்பது பெரிய புராணத்தில் இப்பெயர் சுட்டும் நிலை காட்டுகிற ஒரு எண்ணம்.

'பருப்பத வார் சிலையார் தம் பாம்பணி மாநகர் தன்னில்
பாதளீச்சரம் வணங்கி' (பெரிய—கழறிற்—119, 120)

## 265 பாம்புரம்

திருப்பாம்புரம் எனச் சுட்டப்படும் இவ்வூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் காணப்படுகிறது. நாகராஜன் வழிபட்ட தலம்.[2]

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்...பக். 340
2. ,, —பக். 312

ஆகையால் இப்பெயர் பெற்றிருக்கலாம். பாம்பு புரம் பாம்புரம் ஆயிற்று எனல் பொருத்தமாக அமையும்.

மஞ்சு தோய் சோலை மாமயிலாட மாடமாளிகைத் தன்மேலேறிப்
பஞ்சு சேர் மெல்லடிப் பாவையர் பயிலும் பாம்புர நன்னகராரே—41-4
மடக் கொடியவர்கள் வருபுனலாட வந்திழியரிசிலின் கரைமேல்
படைப்பையிற் கொணர்ந்து பருமணி சிதறும் பாம்புர நன்னகராரே—41-8

என்ற பாடல்கள் அரிசிலாற்றின் கரையில் பாம்புர நகர் செழிப்புற்றிருந்த நிலையைக் காட்டுகின்றன.

## 266. பாலைத்துறை

திருப்பாலைத் துறை என்று சுட்டப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. முன்னர் பாலைவனமாக இருந்த காரணத்தால் பாலைத் துறை என்று பெயர் பெற்றது என்பர்[1] பாலை என்பதற்குப் பாலைவனம் எனக் கொண்டால் 'துறை' என்பது மக்கள் இறங்கி நீராடுதற்கேற்ற இடங்களைக் குறிக்கும் நிலையில்[2] அமைந்து'இவண் முரண்பாடாக அமைகிறது. எனவே பாலைத் துறைக்கு வேறு அடிப்படை உண்டா எனப் பார்க்கலாம்.

ஞானசம்பந்தர், இக்கோயிலைப் பாடும்போது ஒரே ஒரு பாடலில்,

'குரவனார் கொடு கொட்டியும் கொக்கரை
விரவினார் பண் கெழுமிய வீணையும்
மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்
பரவுநீர்ப் பொன்னிப் பாலைத் துறை' (165-7)

'பொன்னிப்பாலைத் துறை' எனச் சுட்டுவது பொன்னிக் கரையில் இது அமர்ந்திருக்குமோ? என்ற, எண்ணத்தைத் தருகிறது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 196
2. ஊரும் பேரும்-பக். 17

ஆயின் 'பாலை' என்பது இங்கு எவ்வாறு வந்தது என்பது மேலும் ஐயத்திற்கு இடமாக உள்ளது. பரவிய துறை என்பது பாற்றுறை என்றாகி, பாலைத்துறை ஆயிற்றா என்றே சிந்தனை எழுகிறது.

## 267. பாற்றுறை

திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த ஊர் திருப்பாற்றுறை என்று வழங்கப்படுகிறது. காவிரி கொள்ளிடம் ஆகிய ஆறுகளுக்கு இடையில் இக்கோயில் உள்ளது என்ற குறிப்பு, இவ்விடத்திற்குரிய துறை, பெயருக்கு விளக்கம் தருகிறது. இருப்பினும் 'பால் என்பதற்கு மார்க்கண்டேயர் இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்குப் பால் பெருகுமாறு இறைவன் அருள் புரிந்த தலம்' என்ற கதையைச் சொல்கின்றனர் மக்கள்[1] ஞானசம்பந்தர் இதனை,

'பாரார் நாளும் பரவிய பாற்றுறை'

என்று சொல்லும்போது இது மக்கள் விரும்பி வழிபட்ட தலம் எனத் தெரிகிறது. எனவே இதுவும் பாலைத்துறை போன்று, பரவியத்துறை பரத்துறை ஆகி பாற்றுறை ஆயிற்றா? இல்லை. 'பரன் துறை' (சிவன் கோயில் கொண்ட இடம்) பரத்துறை ஆகி பாற்றுறை ஆயிற்றா? என்ற எண்ணங்கள் இங்கு அமைகின்றன.

சம்பந்தர்,

பாவந்தீர் புனல் மல்கிய பாற்றுறை (56-4) என்றும்,
பானலம்மலர் விம்மிய பாற்றுறை (56-9) என்றும்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை (56-10) என்றும்

இதனைப் பலவாறு போற்றுகின்றார்.

## 268. புகலூர்

திருப்புகலூர் எனச் சுட்டப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்று காணப்படுகிறது.

'அக்கினி பூசித்த காரணத்தால் இத்தலம் அக்கினீசம் என்றும், ஸ்ரீவாகீசமூர்த்திகள் சரணம் அடைந்த காரணத்தால்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 286

சரண்யபுரம் என்றும் பெயர் கொண்டு விளங்குகிறது. ஸ்தல விருட்சம புன்னை மரம் ஆனமையின் புன்னைவனம் எனவும் அழைக்கப்படுகிறது என்ற எண்ணம் இது தொடர்பானது.[1]

புகல் என்பதற்கு விருப்பம், இருப்பிடம், சரண் போன்ற பல பெயர்கள் தமிழ் லெக்ஸிகனில் அமைகின்றன. எனவே இறைவன் விரும்பி அமர்ந்த ஊர் அல்லது மக்கள் விரும்பிய இடம், அல்லது இறைவனிடம் மக்கள் புகல் அடையும் அல்லது அடைந்த ஊர் என்ற நிலையில் பெயர் அமைந்ததா என நோக்கலாம். எனினும், 'திருஞானசம்பந்தர் அருளிய பதிகமாகிய திருவூர்க் கோவையில் துலைபுகலூரர் அகலாதிவை காதலித்தவன் அவன் சேர் பதியே' (175-5) என்று அருளியிருப்பதால், ஏதோ வரலாற்றை உட்கொண்டு அவ்வாறு கூறியிருக்க வேண்டும். துலைபுகல் என்பது துலாபாரம் புகுதல் என்று பொருள்படும்'[2] என்ற எண்ணம் நோக்க இவ்வூர்ப் பெயருக்குப் பிற ஏதோ காரணம் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

தேவார மூவராலும் போற்றப்பட்ட சிறப்புடையது இவ்வூர் கோயில். நாவுக்கரசர் திருப்புகலூர் என்று சுட்டுவதுடன் பூம்புகலூர் என்றும் இதனை இயம்புகின்றார்.[3]

புள்ளெலாம் சென்று சேரும் பூம்புகலூர் என்கின்றார் சுந்தரர் (34-8). பூம்பொய்கை சூழ்ந்த புகலூர் என்பது சம்பந்தர் கூற்று(251-8). சேக்கிழார், 'புண்டரிகத் தடஞ்சூழ் பழனப்பூம் புகலூர் தொழ' (487) என ஞானசம்பந்தர் செல்லும் தன்மை இயம்புகின்றார். பக்தி காரணமாக இது பெரும் சிறப்பு, பின்னர் பெற்றது என்பதையே இதனைப்பற்றிய பெரியபுராண எண்ணங்கள் உணர்த்துகின்றன.[4] புகலூர் கோயில் மட்டுமல்லாது

---

1. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-54
2. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்-120
3. பூம்புகலூர் மேவிய புண்ணியனே—313-3
4. பொன்னாரும் மணிமாடப்பூம்புகலூர்-பெரிய-27-245-4
   கண்ணகன் புகலூர்—பெரிய 34-526-1

இங்குள்ள வர்த்தமானீச்சுரம் என்ற கோயிலும் சம்பந்தர் பாடல் பெற்ற சிறப்புடையது (228). வர்த்தமானீச்சுரம் என்ற பெயரை கொண்டே இது சமணக் கோயில் என்பதை அறியலாம் என்பர்.[1]

## 269. புட்குழி

'புலங்செழு பொருநீர்ப் புட்குழிபாடும்' (நாலா-1115)

என, புட்குழி என்ற தலம் பற்றி, பாடுகின்றார் திருமங்கையாழ்வார்.

## 270. புத்தூர்

திருப்பத்தூர் என்று வழங்கப்படும் ஊர் இராமநாதபுர மாவட்டத்தில உள்ளது. கோயில் 'திருத்தளி' என்று சுட்டப்படுகிறது. புதியக் குடியிருப்புப் பகுதி என்ற அடிப்படையில் பெயர் பெற்ற நிலையை இவ்வூர்ப் பெயர் தெளிவாகக் காட்டுகிறது.

மாடேறி முத்தீனும் கானல் வேலி மறைக்காட்டு மாமணி
காண் வளங் கொண் மேதி
சேடேறி மடுப்படியும் திருப்புத்தூர் —(திருஞான–290-4)

அந்தண் கானல்,

செறிபொழில் சூழ் மணிமாடத் திருப்புத்தூர் ( ,, 290-7)

இதனைக் காண்டகைய திருப்புத்தூர், என்கின்றார் சேக்கிழார் (27-402-3). புதிய குடியிருப்பினைப் புத்தூர் என்று வழங்கும் நிலை தமிழர்களிடம் பரவலாக அமைந்த ஒரு நிலை என்பதைப் பிற 'புத்தூர்' பற்றிய எண்ணங்கள் தருகின்றன (வடஆர்க்காடு மாவட்டத்தில் ஒரு புத்தூர் உள்ளது). மேலும் திருவெண்ணெய் நல்லூருக்கு அருகில் உள்ள மணம் தவிர்ந்த புத்தூர் கிராமமும் இவண் சுட்டத்தக்கது. இதன் முதல் பெயர் புத்தூர் என்பதும், இறைவன் தடுத்தாண்டமை காரணமாக மணம் தவிர்ந்த புத்தூர் என்றாயிற்று என்பதையும் வரலாறு தருகிறது (6-23; 6:72).

---

1. சமணமும் தமிழும்—பக்-140

271. புல்லாணி

திருப்புல்லாணி என்று சுட்டப்படும் ஊர், இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளது. 'ராமன் புல்லணைமேற் கிடந்து வருணனை வேண்டிய தலம் தான் திருப்புல்லணை. அதனையே திருப்புல்லாணி என்கிறார்கள் என்ற எண்ணம் இடப்பெயர்க் காரணமாக அமைகிறது.[1] இன்றும் தர்ப்பையில் சயனக் கோல மாக இருக்கிறார். புல்லாணி போன்றே இதை அடுத்துக் காணப் படும் தேவி பட்டணம், நவபாஷாணம் போன்றவையும் இராமர் வரலாற்றொடு இணைந்ததாகக் கருதப்படுகிறது[2] திருமங்கை யாழ்வார் புல்லாணி இராமனை மிகச் சிறப்பாகப் பாடும் நிலை யில் அமையும்,

'புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து அழகாயப் புல்லாணியே'
(நாலா-1768)

பொருது முந்நீர்க் கரைக்கே மணியுந்து புல்லாணியே
(நாலா - 1771)

போன்ற எண்ணங்கள் கடற்கரை சார்ந்த இவ்வூரின் நிலையை யும் சுட்டுகின்றன.

272. புலியூர்

குட்ட நாட்டு ஊரான இது, திருமால் கோயில் கொண்ட ஊர். நம்மாழ்வார் பாடல்கள் கொண்டது.

செழுநீர் வயல்குட்டநாட்டுத் திருப்புலியூர் (நாலா-2942),
புன்னையம் பொழில் சூழ் திருப்புலியூர் ( ,, -2943)
திகழுமணிநெடு மாடம் நீடு திருப்புலியூர் ( ,, -2944)
ஊர் வளம் கிளர் சோலையும் கரும்பும் பெருஞ் செந்நெலும் சூழ்ந்து
ஏர் வளம் கிளர்தண்பணைக் குட்டநாட்டுத் திருப்புலியூர்
(நாலா-2941)

போன்ற பாடல்கள் குட்டநாட்டுப் புலியூர் பற்றியியம்புகின்றன. இவரது பாடல்கள்இங்கு மக்கள் நெருங்கி வாழ்ந்திருந்தமையைப் புலப்படுத்த, முதலில் 'புலி'கள் மிக்குக் காணப்பட்டு, பின்னர் குடியிருப்புப் பகுதியாக அமைந்திருக்கலாம் எனத்தோன்றுகிறது

---

1. வேங்கடம் முதல் குமரி வரை-பக். 72
2. ,, ,, பக். 77

**273. புள்ளம் பூதங்குடி**

திருமங்கை ஆழ்வார் பாடிய பத்துப் பாசுரங்கள் இங்குள்ள திருமால் குறித்து அமைகின்றன. இப்பாடல்கள் மிகச் சிறப்பாக இங்குள்ள இயற்கைச் செழிப்பைச் சித்திரிக்கின்றன.

நறிய மலர் மேல் சுரும் பார்க்க, எழிலார் மஞ்ஞை நடமாட
பொறிகொள் சிறைவண் டிசைபாடும் புள்ளம் பூதங்குடி
(நாலா-1348)

பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனி அதனுள் போய்
புள்ளுப் பிள்ளைக் கிரை தேடும் புள்ளம் பூதங்குடி ( ,, 1349)

மேலும்,

கற்பார் புரிசை செய்குன்றம் கவினார் கூடம்மாளிகைகள்
பொற்பார் மாடமெழிலாரும் புள்ளம் பூதங்குடி ( ,, 1351)

என்ற பாடலடிகள் இங்குள்ள மக்கள் வாழ்வியற் சிறப்பையும் தருகின்றன.

இவற்றை நோக்கப் 'புள்ளம்' என்ற சிறப்பு விகுதியைப் பூதங் குடிக்கு, பின்னர் இணைத்திருக்கின்றனர் என்பதும், அழகிய புட்கள் நிறைந்த பகுதியாக இது திகழ்ந்திருத்தலே இதற்கு அடிப்படை என்பதும் தெளிவாகிறது. பூதனார் என்ற புலவர் பெயர் சங்க இலக்கியத்துள் இடம்பெற்றுள்ளது. (நற்-29, புறம் 259) பூதன் என்பது எந்த அடிப்படையில் எழுந்த பெயர் என்பது தெரியவில்லை. எனினும் அம்மரபு இருந்தமை தெளிவா கிறது. இதனை ஒட்டி; பூதன் குடி என்ற பெயரையும் நாம் சுட்ட லாம். பூதத்தாழ்வார் என்ற பெயரும் சுட்டத்தக்கது.

**274. புள்ளமங்கை**

இன்று பசுபதிக் கோயில் எனச் சுட்டப்படும் இவ்விடம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.

'கறையார் மிடறுடையான் கமழ் கொன்றைச் சடைமுடி மேல்
பொறையார் தரு கங்கைப் புனலுடையான் புளமங்கைச்
சிறையார் தரு களிவண்டறை பொழில் சூழ் திருவாலந்
துறையானவனறையார் கழல்தொழு மின் துதி செய்தே'

என சம்பந்தர் இத்தலம் குறித்துப் பாடுகின்றார் (16-3). இப்பாடலில் புளமங்கை இடத்தின் பெயர் என்பதும், ஆலந் துறை கோயில் பெயர் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. காவிரிக் கரையில் அமைந்து இயற்கைச் செழிப்பு மிக்க பகுதி யாக விளங்கிய காரணத்தால் புள் மிகுதி காரணமாக இவ்விடம் புள் மங்கலம் என்று அழைக்கப்பட்டு பின்னர் புள்ளமங்கை என வழங்கியது எனல் பொருத்தமாக அமையலாம். இன்று கோயில் சிறப்பு, இயற்கை வளங்களை மிஞ்ச இறைவன் பெயரால் பசுபதி கோயில் என்ற பெயர் வழக்கில் அமைந்து விட்டது எனல் பொருத்தமானதாகும்.

## 275. புள்ளிருக்கு வேளூர்

இன்று வைத்தீஸ்வரன் கோயில் எனச் சுட்டப்படும் தலம். தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. சம்பந்தராலும் அப்பராலும் பாடல் பெற்ற தலம் இது. சிவன் பெயரான 'வைத்தீஸ்வரன்' என்ற பெயர் கோயிலுக்கு அமைந்து, பின்னர் ஊர்ப்பெயராகச் செல்வாக்குப் பெற்றுள்ளது. புள்-சம்பாதி, ஜடாயு, இருக்கு, வேதம், வேள், முருகன் ஆகியோர் வழிபட்ட தலமாதலின் இப் பெயர் பெற்றது என்பர்[1] எனினும் புள்களின் மிகுதி காரணமாக இப்பெயர் அமைந்திருக்க வேண்டும் என்பதே பொருத்தமாக அமைகிறது. மேலும் சடாயு வழிபட்டதால் சடாயுபுரி என்ற பெயரும், கந்த பெருமான் வழிபட்டதால் கந்தபுரி என்ற பெய ரும், சூரியன் வழிபட்டதால் பரிதிபுரி என்ற பெயரும், அங் காரகன் வழிபட்டதால் அங்காரக்கபுரம் என்ற பெயரும் வழங் கப்பட்டுள்ளன எனவும் தெரிகிறது.[2]

## 276. புளிங்குடி

இன்று புளியங்குடி என்று வழங்கப்படும் ஊர், திருநெல்வேலி மாவட்டத்தில் அமைகிறது. திருமால் கிடந்த நிலையில் கோலம் கொண்ட கோயில் இங்கு அமைகிறது. 'புளி' தாவரம் குறித்து அமைந்த சிறப்பு விகுதியாக அமைகிறது. எனவே புளியமரங்கள் நிறைந்த அழகிய குடியிருப்புப் பகுதி என்று இப்பெயர்க் காரணம் அமைகிறது. நம்மாழ்வார் இத் தலத்து இறைவனைப் பாடுகின்றார்.இவரது கிடந்த கோலத்தை

1. சேக்கிழார் வழியில் சைவத்தலங்கள்—பக். 272
2. புனித கோயில்களும் புண்ணியத் தீர்த்தங்களும்-பக்.334

'கொடியார் மாடக் கோளூரகத்துப் புளிங்குடியும்
மடியாதின்னே நீ துயில் மேவி மகிழ்ந்ததுதான்'
(நாலா-2880)

என்ற பாடல் தருகிறது. மேலும் பொருநையாற்றின் கரையில் இருக்கும் நிலையை,

'தெண்டிரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த திருப்புளிங்குடி (நாலா-2975) என்ற அடிகள் சுட்டுகின்றன. இவ்வூரின் அழகினை,

கொடிக் கொள் பொன் மதிள் சூழ் குளிர் வயல் சோலைத்
திருப்புளிங்குடி (நாலா-2976)
பவள நன் படர்க்கீழ்ச் சங்குறை பொருநல்
தண் திருப்புளிங்குடி ( ,, 2979)
கலி வயல் திருப்புளிங்குடி ( ,, 2980)

என்று தருகின்றார் நம்மாழ்வார்.

## 277. புற்குடி

புற்குடி என்ற பெயர், திருநாவுக்கரசரால், தமது திருத் தாண்டகப் பகுதியுள் சுட்டப்படுகிறது.

'புற்குடி மாகுடி' (285-3) எனச் சுட்டிச் செல்கின்றார் இவர். பிற எண்ணங்கள் தெளிவாகவில்லை. சிவன் கோயில் தலம் என்பது தெளிவு. குடியிருப்புப் பகுதி என்பது 'குடி' என்ற பெயர் கொண்டு சுட்டலாம். 'புல்' மிகுதியான காரணத்தால் 'புல்குடி' புற்குடி ஆகியிருக்கலாமோ எனவும் நோக்கலாம்-

## 278. புறம்பயம்

இப்பெயரிலேயே இன்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பிரளயத்திற்குப் புறம்பாய் இருந்தமையால் இப்பெயர் பெற்றது என்பர்.[1] மூவர் பாடலும் பெற்ற நிலை இங்குள்ள சிவன் கோயில் சிறப்பைத் தெரிவிக்கும். இதனையே சம்பந்தரும்,

'அடியார் வழிபாடு ஒழியாத்தென் புறம்பயம்' எனச் சுட்டு கின்றார் (375-8). இதன் செழிப்பைச் சுந்தரர்,

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-61

மதியஞ்சேர் சடைக் கங்கையானிட மகிழு மல்லிகை
செண்பகம்
புதியபூமலர்ந் தெல்லி நாறும் புறம்பயம் (35-2)
துள்ளி வெள்ளிள வாளை பாய்வயற் றோன்று தாமரைப்
பூக்கள்மேல்
புள்ளி நள்ளிகள் பள்ளி கொள்ளும் புறம்பயம் (35-5)

எனப் பாடுகிறார். மண்ணியாற்றுக்கும் கொள்ளிடத்திற்கும் இடையில் இருக்கும் இவ்வூர், பக்கத்தே தண்ணீரையுடையது என்ற பொருளில் இப்பெயர் பெற்றது என்ற எண்ணம் இவண் சிந்திக்கத் தக்கது.[1] இங்குள்ள கோயில் பெயர் ஆதித்தேச்சுரம்.

## 279. புன்கூர்

திருப்புன்கூர் என்ற ஊர், இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. புங்க மரம் மிகுதி காரணமாகப் பெயர் பெற்ற ஊர் புங்கூர், புன்கூராக வழங்குகிறது. தலமரமும் புங்கமரமாக அமைகிறது. தேவார மூவர் பாடல் பெற்றமை இதன் சிறப்பு தரும். திருநாளைப் போவார் வணங்குவதற்காக, நந்தியை இறைவன் விலகச் செய்த தலம் இது. செழும் பொழில் திருப் புன்கூர், பூம்பொழில் திருப்புன்கூர் என்று சுந்தரர் தம்பாக்களில் இதனைச் சுட்டுகின்றார் (55). சம்பந்தர்,

பங்கயங்கள் மலரும் பழனத்துச்
செங்கயல்கள் திளைக்கும் திருப்புன்கூர்' (27-3)
தெரிந்திலங்கு கழுநீர் வயல் செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர் (27-6)

என இதன் அழகு புலப்படுத்துகிறார்.

## 280. புனவாயல்

புனவாசல் என இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். சம்பந்தரும், சுந்தரரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர்.

---

1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் —பக்-125

'கண்டலு ஞாழலும் நின்று பெருங்கடற் கானல்வாய்ப்
புண்டரீகம் மலர்ப் பொய்கை சூழ்ந்த புனவாயில்' (269-2)

என்றும்,

நரல் சுரி சங்கொடு மிப்பியுந்திந் நலமல்கிய
பொருகடல் வெண்டிரை வந்தெறியும் புனவாயிலே
(269-9)

என்றும் சுட்டும் நிலையில் இன்றும் கடற்கரையில் அமைந்திருக்கும் இத்தலம் பற்றிய எண்ணம் தெளிவுபடுகிறது. மேலும் இவர் பாடலடிகள் 'புனவாயில்' என்பது புன்னைவாயில் என்பதன் சுருங்கிய நிலையே என்பதையும் நமக்கு உணர்த்தும் நிலையில் அமைகின்றன.

அன்னமன்னந் நடையாளொடும் மமரும்மிடம்
புன்னைநன் மாமலர் பொன்னுதிர்க்கும் புனவாயிலே (269-1)

இங்குப் புன்னை மரங்கள் பற்றிய எண்ணத்தைத் தருகின்றார் சமபந்தர். கடற்கரைப் பகுதிகளில் புன்னை மரங்களின் மிகுதி பற்றி, சங்க இலக்கியத்திலும் காட்டுகள் உண்டு. தலவிருட்சம் புன்னைமரம் என்பதும் இக்கருத்துக்கு அரண் ஆகின்றது. எனவே புன்னை மரங்களின் மிகுதி காரணமாகவே இவ்விடம் புன்ன வாயில் எனச் சுட்டப்பட்டிருக்கும் என்பது பொருத்தமாக அமைகிறது. மேலும் இவ்விடம் முன்னரேயே இருந்திருக்கிறது என்பதும், சிவன் கோயில் காரணமாகச் சிறப்பு அடைந்திருக்கிறது என்பதும், சுந்தரர்,

'பத்தர் தாம்பலர் பாடிநின்றாடும் பழம்பதி
பொத்திலாந்தைகள் பாட்டறாப் புனவாயிலே'

என்று பாடும் தன்மையுணர்த்தும். 'பழம்பதி' என்ற கூற்று இவண் இதன் பழமையை உணர்த்தவல்லது. புனவாயிலுக்குப் பழம்பதி, விருத்தபுரி என்ற பெயர்கள் உண்டென்பது தெரிகிறது. 'பழம்பதி' இதன் முதுமையைக் குறித்த நிலையில் சுந்தரர் பாடலுக்குப் பின்னர் இப்பெயர் பெற்றதோ எனவும் சிந்திக்கலாம். 'சிவனார் மன்னும் ஒப்பரிய புனவாயில், என்கின்றார் சேக்கிழார் (34-391-4).

## 281. பூவணம்

திருப்பூவணம் என்று மதுரை மாவட்டத்தில் காணப்படும்

தேவார மூவராலும் போற்றப்படுகிறது. மாணிக்கவாசகரும் இதனை,

> பூவண மதனிற் பொலிந்திருந்து அருளித்
> தூவண மேனி காட்டிய தன்மையும் (கீர்த்தி—50-51)

எனப் பாடுகின்றார். இதன் பெருமையை,

> 'முறையார் முடிசேர் தென்னர் சேரர் சோழர் கடாம் வணங்கும்
> திறையார் ஒளிசேர் செம்மை யோங்குத் தென்றிருப் பூவணமே' —(64-1)

என்று சம்பந்தர் சுட்டுவது விளக்கவல்லது. மேலும் வைகைக் கரையில் அமைந்த இதன் நிலையையும்,

> 'பாரார் வைகைப் புனல் வாய்ப்பரப்பி பன்மணி பொன் கொழித்துச்
> சீரார் வாரி சேர நின்ற தென்றிருப் பூவணமே (64-3)

என்ற இவரது பாடல் சித்திரிக்கின்றது. பொழில் திகழும் பூவணம் என்று பாடுகின்றார் அப்பர் (232). சுந்தரர், சீரின் மிகப் பொலியும் திருப்பூவணம் (11-10) எனக் கூறும்போது இவ்வூரின் சிறப்பும் தெரிகிறது. பூக்கள் வனம் பூவணமாயிருக்கலாம் என நினைக்கலாம். பழையூர், புதூர், கோட்டை, நெல்முடிக்கரை என்ற நான்கு பகுதிகளையுடையது பூவணம் புஷ்பவனகாசி, பிதுர் மோட்சபுரம், பாஸ்கரபுரம், இலட்சுமிபுரம், பிரமபுரம், இரசவாதபுரம் என்பன இதன் வேறு பெயர்கள்.[1]

### 282. பூவனூர்

பூவனூர் என்ற தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பாமணி ஆற்றின் கரையில் உள்ள தலம்[2] சுக முனிவர் மலர் வனம் வைத்து வழிபட்டு அருள் பெற்ற தலம்.[3] அப்பர், இங்குள்ள சிவனைப் போற்றும்போது,

> மேவ நூல் விரி வெண்ணியின் றென்கரைப்
> பூவனூர் புகுவார் வினைபோகுமே (179-4)

---

1. பாண்டிய நாட்டுத்தலங்கள் -பக். 106
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 291
3. „ „ பக்-291

எனப்பாடுகின்றார். எனவே ஆற்றின் கரைத்தலம் இது என்பது தெளிவாகிறது. ஆற்றின் கரையில் உள்ள தலம் ஆகையால் செழிப்புடன் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேற் கண்ட புராணக் கருத்தின்படி 'மலர் வனம்' இருந்த நிலையை அறிகிறோம். எனவே மலர்வனம், பூவனம், பூவனஊர் என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்த ஊர் பின்னர் பூவனூர் எனச் வழங்கத் தொடங்கியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இறைவனின் பெயர் 'புஷ்பவனநாதர்' என்பதும்[1] இக்கருத்துக்கு வழி வகுக்கிறது.

## 283. பூழியூர்

தம் தேவாரப் பாடல்களில், சம்பந்தர் 'பூழியூர்' பற்றிச் சுட்டுகின்றார் (175-8). பிற எண்ணங்கள் தெளிவில்லை.

## 284. பெரும்புலியூர்

திருப்பெரும்புலியூர் என்று தஞ்சாவூர் மாவட்டத்தில் அமையும் ஊர் இது. வியாக்கிர பாதர் (புலிக்கால் முனிவர்) வழிபட்ட தலமாகும்[2] சம்பந்தர் பாடல் அமைந்த இவ்வூர் பற்றிய செய்திகள் தெளிவாகவில்லை.[3] எனினும், திருவையாற்றிற்குப் பக்கத்தில் காவிரியின் வடகரையில் உள்ளது என்பது மட்டும் தெரிகிறது.

## 285. பெருமங்கலம்

சேக்கிழார் ஏயர்கோன் நாயனார் வரலாற்றில்,

'நீடு வண்புகழ்ச் சோழர் நீர் நாட்டிடை நிலவும்
மாடு பொன் கொழி காவிரி வடகரைக் கீழ்ப்பால்
ஆடு பூங்கொடி மாடநீடிய அணிநகர்தான்
பீடு தங்கிய திருபெருமங்கலப் பெயர்த்தால்' (1)

என அவரது பிறந்த நாடு பற்றி பேசுகின்றார். இப்பாடலினின்றும் இது சோழநாட்டு, காவிரியின் வடகரைத் தலம் என்பதும், அன்று மிகவும் செழிப்புடன் சிறந்த குடியிருப்புப் பகுதியாக விளங்கியது என்பதும் தெரிகிறது.

## 286. பெருமிழலை

மிழலை நாட்டு மிழலை வெண்ணி நாட்டு மிழலை என, த திருநாட்டுத் தொகையுள், சுந்தரர் குறிப்பிடுகின்றார். பெரிய புராணத்தில்,

---

1. திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்-பக். 8
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக், 278
3. பெண்ணுமோர் பாகமுடையார் பெரும்புலியூர் பிரியாரே-திருஞான-203-1

சூத நெருங்கு குலைத் தெங்கு பலவும் பூகஞ்
சூழ்புடைத்தாய்
வீதி தோறும் நீற்றினொளி விரிய மேவி விளங்குபதி
நீதி வழுவா நெறியினராய் நிலவுங் குடியால் நெடு
நிலத்து
மீது விளங்கும் தொன்மையது மிழலைநாட்டு பெரு
மிழலை (29-1)

என, பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணத்தில் குறிப்பிடு கின்றார். சேக்கிழார் மேலும் 'அன்னதொன்மைத்திருப்பதி கண்' என்று குறிப்பிடும் (2) நிலை இது பண்டு தொட்டே சிறந்து விளங்குமொரு ஊராகத் திகழ்ந்தனையும் சுட்டுகிறது. இம் மிழலை நாடு பற்றிய தமது ஆய்வில், அறிஞர் ஒருவர் இராசேந்திர சிங்க வள நாடென்பது காவிரியாற்றின் வடகரையில் இருந்த ஒரு பெரியநிலப்பரப்பாகும். இவ்வளநாட்டில் சற்றேறக் குறைய இரு பது உள் நாடுகள் இருந்தன. அவற்றுள் மிழலை நாடு என்பதும் ஒன்று என்று தனது ஆய்வுக் கருத்துகளைச் சொல்லும் நிலை யில், எனவே மிழலை நாடு எனப்படுவது தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுகாவில் காவிரியாற்றிற்கு வடக்கே மண்ணி யாற்றின் தென்கரை வரையில் அமைந்திருந்ததோர் வள நாடு என்று கூறிச் செல்கின்றார். பெரு மிழலை அந்நாட்டின் தலைநகர் என்றும் உரைக்கின்றார். சங்க காலத்தில் சுட்டப் படும் மிழலைக் கூற்றம் பாண்டிய நாட்டுப் பகுதி என்பதும் இவரது எண்ணம் [1]

## 287. பெருவேளூர்

காட்டூர் ஐயன்பேட்டை என்று இவ்வூர் இன்று அழைக்கப் படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.

## 288. பேணு பெருந்துறை

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் அமையும் ஊர். திருப்பந் துறை என்று வழங்கப்படுகிறது. சம்பந்தர் பாடல் பெற்ற இத் தலம் 'துறை' காரணமாகப் பெருந்துறை பெயர் பெற்றது. கோயில் காரணமாகப் பெருந்துறை எனச்சுட்டப்பட்டிருக்கலாம். மேலும் பிற பெருந்துறை,யினின்றும் தனித்துச் சுட்ட, சம்

---

1. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு—23-பக்-163-66

பந்தர் பாடலடியான 'பேணு பெருந்துறை' என்பதில் உள்ள பேணு என்ற அடையை இணைத்திருக்கலாம்.

பெம்மான் நல்கிய தொல்புகழாளர்
பேணு பெருந்துறையாரே (42-1)

அரிசில் நதிக்கரைப் பக்கத்து இது அமைந்திருந்த நிலை,

தழையார் மாவின் றாழ்கனி யுந்தித் தண்ணரிசில்
புடை சூழ்ந்து
குழையார் சோலை மென்னடையன்னம் கூடும் பெருந்
துறையாரே (திருஞான 42-7)

என்பதில் புலப்படுகிறது.

## 289. பேர்நகர்

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவிலடி எனச் சுட்டப்படும் ஊர் இது. சங்ககாலம் தொட்டே பெரும்புகழ் பெற்று விளங்கும் இவ்வூரின் அன்றைய பெயரைப் 'பேர்ப்புறம்' என சங்க இலக்கியங்களும் திருப்பேர்த் திருப்புறம் என சாசனங்களும் சுட்டுகின்றன.[1] சோழன் செங்கணானுக்கும், சேரமான் கணைக்கால் இரும்பொறைக்கும் போர்மூண்ட களம் திருப்பேர்ப் புறம் எனத் தெரிகிறது. இவ்விடம் திருமால் கோயிலாலும், சிவன் கோயிலாலும் சிறப்பு பெற்றமையும் தெரிகிறது.

'திருப்பேர்த் திருப்புறத் துறை மகாதேவர்'
'உடையார் திருப் புறத்துறைவார்'
'திருப்புறத் துறையும் சிவபெருமானடிகள்'

என இங்குள்ள சிவன் பெருமை சுட்டப்படுகிறது.[2] இக்கோயிலே 'சடைமுடி' என அக்காலத்து வழங்கப்பெற்றது. திருநாவுக்கரசரின் திருத்தாண்டகப் பகுதி, சடைமுடியைக் குறிப்பிடுகிறது. சடைமுடியாகிய சிவன் உறை கோயில் என்ற நிலையில் திருப்பேர் நகரில் உள்ள இக்கோயில் சடை முடியெனச் சுட்டப்பட்டு இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

இங்குள்ள திருமாலைப் பரவியவர்கள் பெரியாழ்வார் திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார்.

---

1. ஆராய்ச்சித் தொகுதி—பக்-283
2. ,, ,,

'வண்டறை பொழில் திருப்பேர் வரியணையில், பள்ளி
கொண்டுறைகின்ற மாலை' என திருமங்கையாழ்வார்

(நாலா-1437) திருமாலைப் புகழ்கின்றார். பெரிய இடமாக, குடியிருப்புத் தலமாக அமைந்த காரணத்தால், இப்பெயர் தோன்றியிருக்கலாமா? எனச் சிந்திக்கலாம்.

## 290. பேராவூர்

திருநாவுக்கரசர் சிவன் கோயில் தலமாகச் சுட்டும் ஊர் இது (285-4).

## 291. பேரூர்

மேலைச் சிதம்பரம் என வழங்கப்படும் தலம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ளது. நொய்யலாறு இதன் அருகில் உள்ளது. திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் (265-8) இதனைக் குறிப்பிடுகின்றார். பெரிய குடியிருப்புப் பகுதி என்ற நிலையில் இப்பெயர் அமைந்திருக்கலாம்.

## 292 பேரெயில்

இன்று ஓகைப் பேரையூர் என்றும், வங்காரப் பேரையூர்[1] என்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர் இது. பெரிய எயில் என்ற பொருள் பொருத்தமாகலாம். அப்பர் இங்குள்ள இறையை,

அழைக்கு மன்பினராய வடியவர்
பிழைப்பு நீக்குவர் பேரெயிலாளரே (130-8)

போன்று புகழ்கின்றாரே தவிர, இப்பெயர் பற்றி எந்தக் குறிப்பையும் தரவில்லை.

## 293. பைஞ்ஞீலி

திருப்பைஞ்ஞீலி எனச் சுட்டப்படும் தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 209

மூவர் தேவாரமும் இத்தலத்திற்கு அமைகிறது. 'நீலி' என்பதை வாழையென ரா.பி சேதுப்பிள்ளை பொருள் கொள்ள, கி. நாச்சிமுத்து அதனை மறுக்கிறார்.

'அஞ்சுரும்பு அணிமலர் மாந்தித்தேன்
பஞ்சுரம் பயிற்று பைஞ்ஞீலி மேவலான்' (திருஞான-272-6)

எனவும்,

தாழைத் தண்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலி (திருநா-155-5)

எனவும்,

மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும் மன்னு
காரகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ் பைஞ்ஞீலியில் ஆரணீய
விடங்கரே' (சுந்-36-2)

எனவும், பைஞ்ஞீலியின் இயற்கைநலம் விளக்கப்படக் காணலாம். எனவே இப்பெயரில் உள்ள பைம் பசுமையைக் குறித்து எழுந்த சொல் என்பது தெளிவாகிறது 'நீலி' என்பதில் 'ஞ' என்பது மொழி முதலில் வாராதது என்ற காரணம் காட்டி கி. நாச்சிமுத்து இது 'வாழை' அன்று என்பது காட்டுகிறார். இந்நிலையில் இது எந்த சொல்லின் திரிபாக இருக்கலாம் என்பது மேலும் ஆய்வுக்குரியது.

## 294. மங்கலக்குடி

திருமங்கலக் குடி என்ற இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. காவிரியின் கரையில் உள்ள இந்தலத்தை, சம்பந்தர், அப்பர் இருவர் பாடலாலும் தெரிகிறோம்.

'காவிரியின் வடகரைக் காண்டகு
மாவிரியும் பொழில் மங்கலக் குடித்
தேவரியும் பிரமனும் தேடொணாத்
தூவெரிச் சுடர் சோதியுட் சோதியே' (187-2)

என்கின்றார் அப்பர். மேலும் செல்வம் மல்கிய மங்கலக் குடி (187-5) மாதரார் மருவும் மங்கலக் குடி (187-7) வண்டு சேர் பொழில் சூழ் மங்கலக் குடி (187-8) என்றும் இதன் சிறப்பு உரைக்கின்றார். காவிரிக்கரையில் இது அமைந்திருந்ததனைச் சம்பந்தர்,

'சீரினார் மணியும் அகில் சந்தும் செறிவரை
வாரி நீர்வரு பொன்னி வடமங்கலக்குடி'

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. சிறப்பு, பெருமை மிக்க குடிகள் வாழ்ந்த இடம் என்ற நிலையில் 'மங்கலம்' என்ற பெயர் அடை அமையப் பெற்று இருக்கலாம் எனத் தோன்றுகிறது. பெரிய புராணம் 'செஞ்சடை வேதியர்' மன்னும் திருமங்கலக் குடி' என இதனைச் சுட்டுகிறது. (34-293-4)

## 295. மங்கலம்

பெரியபுராணம் சுட்டும் ஊர், இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமங்கலம் என்ற பெயரால்வழங்கப்படுகிறது. மழநாட்டில் உள்ள ஒரு ஊராக இது இருந்தது என்பதனைச் சேக்கிழார்,

மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடுபரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இணைத்தேற
நீடு வளத்தது மேன் மழநா டென்னும் நீர்நாடு (20-1)
'பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன் மழநன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கலமாக அதற் கேயோர்
மங்கலமானது மங்கலமாகிய வாழ் மூதூர்' (30-7)

என இவ்வூர் மழநாட்டுள்மிக்க சிறந்திருந்த நிலையைக்காட்டுகின்றார். இங்குள்ள கோயில் பற்றிய வரலாறுஎதுவும்தெரியவில்லையாயினும், இன்று திருமங்கலம் எனச் சுட்டப்படும் தன்மையில் கோயில் இருந்திருக்கலாம் என்ற எண்ணம் எழுகிறது. சிறப்பான செல்வமிக்க ஊர் என்ற அடிப்படையில் இப்பெயரை இவ்வூருக்குச் சூட்டியிருக்கலாம்.

## மணஞ்சேரி 296. கீழை திருமணஞ்சேரி
## 297. மேலை திருமணஞ்சேரி

மணஞ்சேரி என்று இன்று வழங்கப்படுகின்ற இத்தலம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. 'மணஞ்சேரி' என்ற ஒரே ஊர் இன்று கீழைத் திருமணஞ்சேரி, மேலைத் திருமணஞ் சேரி என்ற இரண்டு பெயரில் அமைந்திருக்கின்றன. இவற்றின் அருகாமை, இவ்வுண்மையை உணர்த்தும். இரண்டு பகுதியிலும் சிவன் கோயில் இருந்தமையினை, இரண்டு தலங்களும் பாடல்

பெற்ற நிலை காட்டுகிறது. எனவே ஒரே ஊராக இருந்த மணஞ் சேரி, பின்னர் சிவன் கோயில் சிறப்பு காரணமாக மேலை, கீழை எனக் குறிக்கப்பட்டு இருக்கலாம். இன்று மேலை மணஞ்சேரி எதிர் கொள்பாடியென அழைக்கப்படுகிறது.[1]

மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரி, (152–1) வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரி (152–2) வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ் சேரி (152–3) மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி (182-7) என சம்பந்த ரும், அள்ளலார் வயல் சூழ் மணஞ்சேரி (201-5) சீர் பரந்த திரு மணஞ்சேரி (201-6) என அப்பரும் இந்தலம் பற்றி இயம்புகின் றனர். இவற்றை நோக்க, இப்பெயர் ஊர்ச்செழிப்பு காரண மாக, ஏற்பட்ட மணம் காரணமாக மணமுடைய சேரி என்ற பொருளில் முதலில் பெயர் பெற்று, கோயில் சிறப்பு காரணமாக 'திரு' அடை இணைந்து, பின்னர் கீழை, மேலை எனத் தனித்துச் சுட்டப்படத் தொடங்கிற்று எனக் கருதலாம். காவிரியின் வட கரைத்தலம் இது என்பதும், இவ்விடத்தின் செழிப்பினைச் சுட்டத் தக்கதாக அமைகிறது.

## 298. மணமேற்குடி

சேக்கிழார் குலச் சிறையாரின் ஊர் பற்றிப் பேசும் போது,

பன்னு தொல் புகழ்ப்பாண்டி நன்னாட்டிடைச்
செந்நெலார் வயல் தீங்கரும்பின் னயல்
துன்னு பூகப் புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையினார் மணமேற்குடி (1)

என இவ்வூரினைச் சுட்டுகின்றார். எனவே மணமேற்குடி என்பது அன்று பாண்டி நாட்டில் இருந்ததொரு ஊர் என்பது தெளிவு. மேலும், சம்பந்தர் இங்குச் சென்ற தன்மையையும் நாம் சேக் கிழார் வாயிலாகத் தெரிய வருகிறோம்.

'திருத்தொண்டர் பலரும் சூழ
மதிநிலவு குலவேந்தன் போற்றிச் செல்வ மந்திரியார்
பதி மணமேற் குடியில் வந்தார் (892)

---

1. அரசகுமாரன் ஒருவன் திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் தன்நகர் செல்லும்போது அவனுடைய அம்மானைப் போல இறைவன் இத்தலத்தில் இருந்து அவனை எதிர் கொண்டு அழைத்துச் சென்றமையால் எதிர் கொள்படி என்னும் பெயர் வந்தது.
—சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-69

இவரது பாதையை எண்ணும்போது, பாண்டிய நாட்டில் தலங்கள் சிலவற்றைத் தரிசித்து விட்டு, பின்னர் சோழ நாட்டுக்குச் செல்லும் வழியில் இங்குச் செல்கின்றமையைச் காண்கின்றோம். எனவே பாண்டிய நாட்டுக்கும், சோழ நாட்டிற்கும் இடைப் பகுதியில் பாண்டிய நாட்டுப் பகுதியில் அமைந்தது இத்தலம் என்பது புரிகிறது. சிறந்த வளமுடையது என்பது சேக்கிழாரின் பாடல் (குலச்-1) வழி புலனாகும் போது மணமே இதற்கும் காரணமோ என்ற எண்ணம் எழுகின்றது. ஆயின் மணல் மேடு அமைந்த பகுதியில் உள்ள குடியிருப்புப் பகுதி யென்ற நிலையிலும் பெயர் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இக் கருத்திற்கு, 'குருந்தவிழ் சாரல் மணமேற்குடி மன் குலச் சிறையே' என்ற நம்பியாண்டார் கருத்து (திருத்தொண்டர்-26) அரணாகிறது. 'சாரல்' மலைப் பகுதியைக் குறிக்கும் நிலையில் நில மேட்டு நிலையே பெரும்பான்மை ஆதரவு பெறுகிறது.

## 299. மணலி

சேக்கிழார் நமி நந்தியடிகள் புராணத்தில் சுட்டும் ஊர் இது.[1] இன்று திருவொற்றியூரின் அருகே 'மணலி' என்றொரு ஊர் காணப்படுகிறது. ஆயின், இங்குச் சுட்டப்பட்ட மணலி, திருவாரூருக்குத் தென் மேற்குப் பகுதியில் உள்ளது என அறிகின்றோம்.[2] எனவே இந்த மணலி திருவாரூர்க்குப் பக்கத்தில் உள்ளதால், தஞ்சாவூர் மாவட்டத்தில் இவ்வூர் இன்று இருக்கலாம் எனத் தோன்றுகிறது. சென்னையைச் சார்ந்த மணலி, கடற்கரைப் பகுதியாக இருக்கும் நிலையில், 'மணலே' திருவாரூர் அருகே உள்ள மணலிக்கும் அடிப்படையாக அமைந்திருக்குமோ எனத் தோன்றுகிறது.

## 300. மணலூர்

'இடைக்கப் பொருது மணலூரில்
கீழ்நாள் சுட்ட பரணிக் கூழ்
படைத்துப் பயின்ற மடைப்பேய்கள்
பந்தி தோறும் வாரீரே'

---

1. தேவர் பெருமான் எழுச்சி திரு மணலிக் கொருநாள் எழுந்தருள, யாவரென்னாதுடன் சேவித்து எல்லாக் குலத்தில் உள்ளோரும் மேவ—நமி-22
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-252

என கலிங்கத்துப் பரணி 'மணலூர்' பற்றிய எண்ணம் தருகிறது. போர் நடைபெற்ற இடம் என்பது மட்டும் தெரிகிறது.

## 301. மதுரை

மதுரை மாவட்டத்தின் தலை நகரம் மதுரை. நான்மாடக் கூடல் சிவராஜதானி, பூலோக கயிலாயம், துவாத சாந்தபுரம், சீவன் முத்திபுரம் ஆலவாய், கடம்பவனம் போன்ற பல பெயர்கள் இதற்கு உண்டு. பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகப் பண்டு தொட்டு இருந்துவரும் மதுரைச்சிறப்பு இலக்கியங்களில் மிக்க மணம் கமழ்கின்றது. பல கதைகள் மதுரை நகர்க்குரிய பெயர்கள் தொடர்பாக அமைகின்றன.[1]

அப்பர் சம்பந்தர் பாடல்கள் பல அமையினும், இதன் சிறப்பைச் சங்க காலத்திலிருந்தே அறிய இயலுகிறது. இதன் நகரமைப்புச் சிறப்பு, கோயில் சிறப்பு முதலியன, அங்குத் தெளிவாக இயம்பப்படுகின்றன.

மதுரைக்குரிய பெயர்கள் ஒவ்வொன்றும் காரணப் பெயராக அமைந்திருக்கக் காண்கின்றோம். இவற்றுள் பல பெயர்கள் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டவை. மதுரை நான்மாடக்கூடல், கடம்பவனம், ஆலவாய் போன்ற பிற காரணங்களைக் கொண்டு திகழ்வன போல தோன்றுகின்றன.

சங்க இலக்கியத்தில் கூடல் என்ற பெயரே பல இடங்களில் குறிப்பிடப்படுவதாகவும். மதுரை சில இடங்களில் அமைந்தாகவும் தமிழ் இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் (முதல் தொகுதி) ஆசிரியர் இயம்புகின்றார்.

---

1. சிவபெருமான் தன் சடையில் சூடிய பிறையில் உள்ள அமுதத்தைத் தெளித்து இந்நகரை நிர்மாணித்தால் இந்நகரமானது மதுரமாக இருந்திருக்கிறது.
கன்னி கரியமால் காளி ஆலவாய் என்னும் நால்வரும் பிரபலமாக இருக்கும் இடம் ஆனதால் நான்மாடக்கூடல் என்றும் பெயர் பெற்றிருக்கிறது. கன்னியான மீனாக்ஷி இருந்து அரசு புரிந்ததால் கன்னிபுரீசம் என்றும் , சிவ பெருமான் சுந்தர பாண்டியனாக இருந்து அரசாண்ட காரணத்தால் சிவராஜதானி என்றும் பெயர் பெற்றிருக்கிறது.
—வேங்கடம் முதல் குமரிவரை IV பக். 124

சங்க காலத்தில் கூடி இருந்து தமிழாய்ந்தமை காரணம் என இதற்குக் கூறுவர் (பக்-118). இது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தே. அக்காலத்தில் இத்தகைய நிலை அதிகமிருந்தமை காரணமாக, 'கூடல்' என்ற வழக்கு மிகுதியாக இருந்தது எனலாம். எனினும் கூடலை ஒத்த பழமையுடையது மதுரை என்பது இப்பெயர் காட்டும் உண்மை. ஒரு ஊருக்குப் பல பெயர் அமைவது அதன் பல சிறப்புகளையும் காட்டும் தன்மையாக உள்ளது. மதுரை இவ்வாறே தம் பல சிறப்பு காரணமாகப் பல பெயரைப் பெறுகிறது. கடம்பமரங்கள் மிகுதியாக இருந்தமையால் கடம்பவனம் என்ற பெயரையும், கோயில் செல்வாக்கு காரணமாக ஆலவாய் என்ற பெயரையும் அளித்தது போன்று மருத மரம் காரணமாகப் பெயர் பெற்றது மதுரை எனத்துணியலாம்.[1] க. ப. அறவாணன் வட இந்தியாவில் இருந்து வந்தோரால், சூட்டப்பட்ட பெயர் என்பது பொருத்தமாகத் தெரியவில்லை. நம் தமிழகத்தின் பழம் ஊர்ப் பெயரில் தாவரப் பெயர்களால், தனித்து ஒரே சொல்லாக அமைவனவற்றை நோக்கவும் இது உறுதிப்படுகிறது. மேலும் தமிழ் இலக்கியத்தில் இடப்பெயர்கள் என்ற கட்டுரையில் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் மருதமரமே மதுரைக்கு அடிப்படை என்பதைச் சிறப்பாக விளக்குகின்றார்.[2]

## 302 மயிலாடுதுறை

மாயூரம் என்றும் மாயவரம் என்றும் பிற்காலத்தில் வழங்கப் பட்டு வந்த மயிலாடுதுறை இன்று திரும்பவும் தன் பழம் பெயரைப் பெற்று இலங்குகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இவ்வூர் காவிரிக் கரைத்தலம். 'துறை' என்ற இவ்வூர்ப் பெயரின் பொதுக்கூறு, காவிரிக் கரையில் இதன் இருப்பிடத்திற்குப் பொருத்தமாக அமைகிறது. மயில்கள் மிகுதியாக இருந்தமையே இப்பெயருக்குரிய காரணமாகலாம். எனினும் பக்தி யுணர்வு, இறையோடு இப்பெயரை இணைக்கச் செய்து, கதைகளையும்

---

1. மதுரை மரம் காரணமாக என்பதே தமிழரின் பொது வான கருத்தாக அமைகிறது. தமிழ் இலக்கிய வரலாறு பக் -512
2. IV and Vth Seminar, Place Names Society of India—Mysore.

இவ்வூருக்கு என்று உருவாக்கி விட்டிருக்கக் காண்கின்றோம். அவற்றுள் அம்மை மயிலாய் ஆடிய துறை தான் மயிலாடுதுறை என்ற எண்ணமும் ஒன்று.[1]

குரவஞ் சுரபுன்னையும் வன்னி
மருவும் மயிலாடுதுறை (38-2)

எனவும்,

கந்தமலி சந்தினொடு காரகிலும், வாரிவரு காவிரியுளால்
வந்ததிரை யுந்தியெதிர் மந்திமலர் சிந்து மயிலாடுதுறை
(328-2)

எனவும் சம்பந்தர் இதனைப் பாடுகின்றார். இப்பெயரின் பொருளைத் திருநாவுக்கரசரின்

கோலும் புல்லும் ஒரு கையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயர முற்றென் பயன்
நீல மாமயிலாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர்கட்கே (153-8)

என 'நீலமாமயில் ஆடுதுறை' எனச் சுட்டும் தன்மையில் காண்கின்றோம். பெரியபுராணமும் இவ்வூரினை,

வாவி சூழ் திருமயிலாடு துறை (34-437)
மல்கு தண்டலை மயிலாடு துறை ( ,, -438)

எனக் காட்டுகிறது.

### 303. மயிலை

சென்னையின் ஒரு பகுதியாக உள்ளது. மயிலாப்பூர் என்ற பெயரிலும், மயிலை என்றும் வழங்குகிறது. கபாலீச்சுரம் கோயிற் பெயராக அமைகிறது. மயில்கள் மிகுதி காரணமாகப் பெற்ற பெயராகத் தோன்றுகிறது.

இப்போதுள்ள கோயில் முன்பு கடற்கரைக்கு அருகில் இருந்ததாகவும், பின்னர் கடல் உட்புக நேர்ந்ததால் தற்போதுள்ள இடத்தில் புதிதாகக் கட்டினர் என்றும் கருதுகின்றனர். இதற்குச் சான்று, கடற்கரைக்கு அருகில் இருந்ததாக அமையும் இலக்கியக் காட்டுகளே ஆம்.

---

1. வேங்கடம் முதல் குமரி வரை II பக் 157

ஊர் திரை வேலையுலாவும் உயர் மயிலை என்பது சம்பந்தர் தேவாரப் பாடல். இறைவி மயில் வடிவில் இருந்து வழிபட்டமை யால் மயிலை, மயிலாப்பூர் என்று பெயர் பெற்றது என் பர். எனினும் மயில் மிகுதியாக ஆர்க்கும் நிலையே இதற்குக் காரணம் என்பது, மயிலாப்பு என்ற இதன் அன்றைய வழக்கும் தெளிவாக்கும்

'வடிவுடை மங்கையும் தாமுமெல்லாம்
வருவாரை எய்திக் கண்டோம் மயிலாப்புள்ளே'
'மங்குல் மதி தவழும் மாடவீதி
மயிலாப்பிலுள்ளார்'

போன்ற தேவாரப் பாடல்களிலும் மயிலாப்பு என்ற வழக்கு அமையக் காணலாம்.

## 304 மயேந்திரப்பள்ளி

இன்று கோயிலடிப்பாளையம் என்று வழங்கப்பட்டுவரும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. மயேந்திரன் என்ற இந்திரன் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது என்பர்,[1]

திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரு அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா வெயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை யடியிணை பணிமினே -289-1
கொண்டல் சேர் கோபுரம் கோலமார் மாளிகை
கண்டலும் கைதையும் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டு சேர் விடையினான் திருந்தடிபணிமினே-289-2

என இத்தலம் பற்றிப் பாடுகிறார் ஞானசம்பந்தர்.

## 305. மருகல்

திருமருகல் என்று வழங்கப்படும் இவ்வூர் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. 'மருகல் என்பது ஒரு வகை வாழை

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 260

இது கல்வாழை எனவும் வழங்குகிறது. கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக்கோயில்களுள் இதுவும் ஒன்று. யானை ஏறாப் பெருங்கோயில் என்ற எண்ணம் இவ்வூர்த் தொடர்பாக அமைகிறது.[1]

நம்பியாண்டார் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில்,

'செழுநீர் மருகல் நன்னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே' (66)

என்று இயம்புகின்றார். பெரிய புராணமும் இக்கருத்தை,

'தெள்ளும் திரைகள் மதகு தொறும் சேலும் கயலும் செழு மணியும்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு மருக நாட்டுத் தஞ்சாவூர்' (61-1)

என்றியம்புகிறது.

இதனின்றும் மருகல் நாடு சோழநாட்டைச் சார்ந்தது என்பதும், பல ஊர்களைத் தன்னகத்தே கொண்ட மருகல் ஒரு சிறந்த நாடாக விளங்கியது என்பதும், அவற்றுள் ஒன்று தஞ்சை[2] என்ற ஊர் என்பதும் தெளிவுபடுகிறது.

ஞானசம்பந்தரும் அப்பரும் மருகல்பற்றிப் பாடி உள்ளனர். எனினும் இவர்கள் பாடல், மருகல்பற்றிய ஊர்ப்பெயர் விளக்கத் திற்குரிய எந்த கருத்தையும் நல்கவில்லை. மாடம்சூழ் மருகல் என்றும் (202-2) மாடநீண் மருகல் (202-8) என்றும் நாவுக்கரசர் சுட்ட,

மைதவழ் மாட மலிந்த வீதி மருகல் (6-1)
மடையார் குவளை மலரும் மருகல் (154-1)
கொந்தார் குவளை மலரும் மருகல் (154-2)
வலங்கொண்ட மதில் சூழ் மருகல் (154-8)

என்று சம்பந்தர் பாடுகின்றார். தலவிருட்சம் வாழை என்பதும் மருகல் வாழை காரணமாகப் பெயர் பெற்ற ஊர் என்பதும்

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-206

2. கீழைத் தஞ்சாவூர்—இது தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் வட்டத்தில் திருமருகலுக்குப்பக்கத்தில் உள்ள ஊர். சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் —பக்-407

யரவலான கருத்தாக அமைகிறது. நம்பியாண்டாரும் மருகல் பற்றி பல இடங்களில் குறிப்பிடுகின்றார்.[1]

## 306. மல்லை

மகாபலிபுரம் என்று இன்று சுட்டப்படும் ஊர். மாமல்லன் விருது பெற்ற நரசிம்ம பல்லவன், செய்த கலைப்பணிகளின் சிறப்பே, இக்கடற்கரைத் தலத்துக்குப் புகழ் அளிக்க, இவன் பெயராலேயே மாமல்லபுரம் என்று சுட்டப்பட்டது என்பது பொருத்தமாக அமைய, மகாபலியோடு தொடர்பு படுத்திப் புராண கதையை அடிப்படையாக்கல் பொருந்தாத ஒன்றாகும். திருமங்கையாழ்வார் இதனைக் கடல் மல்லை என்கின்றார். மரூஉப் பெயராக வழங்குதல் ஊர்ப்பெயர்களின் ஒரு தன்மை என்பதை இப்பெயரும் நிலைநாட்டுகிறது.

தலத்தில் சயனித்திருப்பதால் இங்குள்ள இறைவன் தல சயனன் என்றும் இடம் தலசயனம் என்றும் வழங்கி வருகிறது. திருமங்கையாழ்வார். பூதத்தாழ்வார் பாடல்கள் இத்தலத்துக்கு அமைகின்றன.

## 307. மழபாடி

திருமழபாடி எனச் சுட்டப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. சேரரில் ஒருகிளையினரான மழவரின்பாடி மழபாடி ஆயிற்று என்பர்.[2] இறைவன் மழுஏந்தி நர்த்தனம் செய்திருக்கிறார். அதனால் மழுஆடி என்று பெயர் பெற்று மழபாடி ஆயிற்றென்பது புராண எண்ணம்.[3]

மழபாடி ஆண்டானை ஆரமுதை
அன்றயன் மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை (18)

என்பது க்ஷேத்திரக் கோவை வெண்பா.

---

1. தாதமர் மருகல் சடையான்—நம்பி - திருமும்-4
   மன்னன் மருகல் விடம் தீர்த்த பிரான்—,, - திருத்-20
2. வேங்கடம் முதல் குமரி வரை III -பக். 187
3. ,, ,, ,,

'பாடெலாம் பெண்ணையின் பழம் விழப்பைம் பொழில்
மாடெலா மல்குசீர் மழபாடியே' என்று ஞானசம்பந்தர் சுட்டும் தன்மை, பனைகளின் மிகுதியைத் தருகின்றது. இந்நிலையில் இன்று தலவ்ருட்சமாகப் பனை அமைவது பொருத்தமாக அமைகிறது. இதன் தாலவனம் என்ற பெயரும் பனைகளின் அடிப்படையில் எழுந்ததே.

கொள்ளிடத்தின் கரையில் அமைந்துள்ள கோயிலை உடையது இவ்வூர். இவ்வூர் பற்றி ஆராயும்போது, மழவர் வசித்த அல்லது ஆண்ட பகுதி என்ற நிலையில் பெயர் பெற்ற ஊர் இது என்பது தெரிகிறது. மேலும், இன்று இது இரு பிரிவாகக் காணப்படுகிறது. ஒன்று மேன்மழபாடி. இன்னொன்று கீழ்மழபாடி. கீழ்மழபாடி பகுதியில் கோயில் இருந்தமை காரணமாக இது திருமழபாடி என இன்று வரை வழங்கப்பட்டு வர, மேன்மழபாடி லால்குடி என்ற பெயரால் சுட்டப்படுகிறது. மழபாடியினை, மழநாடு என்றும் சுட்டினார் என்பதை, சேக்கிழார் வாயிலாக அறிகின்றோம் (பெரிய-20-1. 7). மேலும் 'புடைவளர் மென் கரும்பினொடு, பூகமிடை மழபாடி' எனவும் இவர் இயம்புகின்றமை, மழபாடியின் செழிப்பினைக் காட்டவல்லது.

## 308. மறைக்காடு

இன்று மொழி பெயர்க்கப்பட்ட காரணத்தால், வேதாரண்யம் என்று பெயர்க்கப்பட்ட இவ்வூரின் பின்னைய பெயரே செல்வாக்குடன் திகழ்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். 'மறைக்காடு என்பது நான்கு வேதங்களாலும் பூசித்து பேறு பெற்ற இடம் ஆனதால் வேதாரண்யம் மறைக்காடு என்று பெயர் பெற்றிருக்கிறது' என்ற எண்ணம்[1] 'மறைக்காடு' என்பதற்குரிய அடிப்படையை விளக்குகிறது. எனினும் காடு 'காட்டுப்பகுதியில்' உள்ள தலம் என்பதற்கு விளக்கம் தருகிறது. இன்றைய இதன் இருப்பிடமும், கோடிக்கரை போன்ற பிற ஊர்ப்பெயர் எண்ணங்களும், இதன் கடற்கரை அருகாமையையும் காடு சூழ்ந்த பகுதியாக திகழ்ந்தமையினையும் உணரச் செய்கிறது. மரை என்பதற்கு மான் என்றும் மறை என்பதற்கு

---

1. வேங்கடம் முதல் குமரி வரை—III-பக்-132

சிவப்பு புள்ளிகளையுடைய மாடு முதலியன என்றும் பொருள் தமிழ் லெக்ஸிகன் தரும் நிலையில் முதலில் இயற்கையாக மான் அல்லது மாடுகளின் மிகுதி காரணமாக மரைக்காடு அல்லது மறைக்காடு என்று பெயர் பெற்ற இவ்விடம், பின்னர் கோயில் காரணமாகப் பெயர் பெற்று, புராணத்துடன் வேதத்துடன் இணைக்கப்பட்டு இருக்கக் கூடுமோ எனத் தோன்றுகிறது. இதற்கு வேதவனம், சத்தியகிரி, ஆதிசேது என்ற பெயர்களும் உண்டு. மறைவனம் என்னும் இத்தலத்தின் பெயரை மறைசை என்றும் இலக்கிய வழக்கு கொள்கின்றனர்.[1]

சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவராலும் பாடல் பெற்ற தலமாக மட்டும் அன்றி, பொதுவாகச் சைவர் அனைவரும் வழிபடும் இடமாக இது திகழ்ந்திருக்க வேண்டும் என்பதை நாம் இலக்கியச் சான்றுகள் மூலமாகத் தெரியவருகிறோம்.

இறையாய் மறைக் காட்டாய் மாதவனே-சிவபெரு-
திருவந்-40
மாதெய்வம் ஏத்தும் மறைக்காடா - ,, 46
மயரும் மறைக்காட் டிறையினுக்கு ஆட்பட்ட வாளுதலே-
பொன்வண்-37
சீருலாம்,மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக்காட்டுப்-
—திரு-மும்-கோ-26
இசையா அணிமறைக் காட்டுக் குரைசேர் குடுமிக்
கொழுமணிக்கதவே —நம்பி -திருமும்-4
முத்தம் கொழிக்கும் மறைக்காடு - பெரிய—திருநா-264
மருத்திகழ் பொழில்கள் சூழ்ந்த மாமறைக்காடு
—திருஞான-385-5
மதுரம் பொழில் சூழ் மறைக்காடு — ,, -173-1
வங்கக் கடல் சூழ் மறைக்காடு — ,, -2
பூக்கும் தாழை புறணி அருகெலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ் மறைக்காடரோ —திருநா-124-6
பாருர் மலிசூழ் மறைக்காடதன்தென் பால் —சுந்-32-10
அங்கக் கடல் அருமாமணியுந்திக் கரைக்கேற்ற
வங்கத்தொடு சுறவம் கொணர்ந்து எற்றும் மறைக்காடே
— ,, -71-5

1. புனிதக் கோயில்களும் புண்ணியத் தீர்த்தங்களும்
—பக்-140

### 309. மாகறல்

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். சேயாற்றின் கரையில் உள்ள ஊர். சம்பந்தர் இவ்வூரினைப் பாடியுள்ளார்.

இங்கு கதிர் முத்தினொடு பொன் மணிகள் உந்தி யெழில்
மெய்யுளுடனே
மங்கையரு மைந்தர்களு மன்னு புன லாடி மகிழ் மாகறல்
உள்ளான் (330-4)
துஞ்சு நறுநீல மிருணீங்கவொளி தோன்று மதுவார்
கழனி வாய்
மஞ்சுமலி பூம் பொழிலின் மயில் கண்ட மாடமலிமா
கறலுளான் (330-5)

என திருஞானசம்பந்தர் இவ்வூரின் சிறப்பு பற்றிக் குறிப்பிடுகிறார். இப்பாடல்களை நோக்க, செழிப்பான ஊர் என்பது தெரிகிறது. இன்று சேயாற்றின் கரையில் உள்ளது எனக் காண, 'அறல்' இருந்திருக்க வேண்டும் என்பதை யுணரவியலுகிறது. எனவே சிறந்த மணற் பகுதியையுடையது என்ற பொருளில் 'மாஅறல்' என்ற பெயர் மாகறல் ஆகியிருக்குமோ எனத் தோன்றுகிறது.

### 310. மாகுடி

திருநாவுக்கரசர் தம் திருத்தாண்டகப் பதிகத்தில் (285) சுட்டும் சிவன் கோயில் ஊர் இது.

'புற்குடி மாகுடி தேவன்குடி நீலக்குடி' (3).
நெருங்கிய குடியிருப்புப் பகுதியாக அல்லது பெரிய குடியிருப்புப் பகுதியாக இருந்ததால் இப்பெயர் தோற்றம் பெற்றிருக்கக் கூடும்.

### 311. மாட்டூர்

திருஞானசம்பந்தர் தம் திருவூர்க் கோவையுள் குறிப்பிடும் ஊர் இது.

'மாட்டூர் மடப்பாச்சிலாச்சிராம்
மயிண்டீச்சரம் வாதவூர் வாரணாசி' (175-7)

தேனூர் எனச் சங்க இலக்கியம் சுட்டும் ஊர் போன்று 'மட்டூர்' மாட்டூராகி வழங்கிற்றா என்ற எண்ணங்கள் எழினும் தெளிவில்லை.

### 312. மாணிகுடி

நாவுக்கரசர் தம் திருத்தாண்டகப் பதிகத்தில் சுட்டிய ஊர் இது (285).

'வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி.' குடியிருப்பினைக் குறிக்க, 'மாணி' என்பது என்ன பொருளில் அமைந்தது என்பது தெரியவில்லை. மாண், மாட்சிமை, அழகு, பெருமை குறிக்க, மாணி பிரம்மசாரி, குறள் வடிவம் ஆகியவற்றைக் குறிக்க, சிறந்த குடியிருப்பு என்ற நிலையில் அல்லது சிறிய குடியிருப்பு என்ற நிலையில் இப்பெயர் அமைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. 'மாணிகுழி' என்பதும் இதுதானோ என்பதும் தெளிவில்லை.

### 313. மாணிகுழி

திருமாணிகுழி எனச் சுட்டப்படுகிற இவ்வூர் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் இன்று உள்ளது. கெடில நதியின் கரையில் உள்ள இவ்வூர், சம்பந்தர் பாடல் பெற்ற சிறப்புடையது. திருமாலோடு தொடர்புகாட்டி, அமையும் சம்பந்தர், சேக்கிழார் கூற்றுகள் முதலில் திருமால் கோயில் இங்கு இருந்து பின்னர், இவ்வாறு புராணக் கதையாகத் திரிந்ததோ என்ற எண்ணத்திற்கு இடமளிக்கிறது.

> நித்த நியமத் தொழிலனாகி நெடுமால் குறளனாகி மிகவும்
> சித்த மதொருக்கி வழிபாடு செய நின்ற சிவலோகனிடமாம்
> கொத்தலர் மலர்ப்பொழில் நீடு குல மஞ்ஞை நடமாடுவது கண்
> டொத்த வரி வண்டுகளுலாவியிசை பாடுதவி மாணி குழியே

என்பது சம்பந்தர் கூற்று (33?-4).

> போர் வலித்தோள் மாவலி தன்
> மங்கல வேள்வியில் பண்டு வாமனனாய் மண் இரந்த
> செங்கணவன் வழிபட்ட திருமாணிக் குழியணைந்தார்
> (6-90-2-4)

எனச் சேக்கிழார் சுட்டுகின்றார். கெடில நதிக்கரையில் உள்ளது என்பது சேக்கிழார் பாடலில் புலனாகிறது.[1]

## 314. மாத்தூர்

வைத்தேன் எந்தன் மனத்துள்ளே
மாத்தூர் மேய மருந்தையே, எனப் பாடும் அப்பர் (15-20) பாடல் மாத்தூரில் சிவன் கோயில் சிறப்பு என்பதைச் சுட்டிவிடக் காண்கின்றோம்.

## 315. மாந்துறை

திருமாந்துறை என்று சுட்டப்படும் ஊர், இன்று திருச்சி மாவட்டத்தில் அமைகிறது. இது காவிரியின் வடகரையில் உள்ளது என்பது ஞானசம்பந்தர் பாடலாலேயே தெளிவாகத் தெரிகிறது. தலமரம் மாமரம் எனத் தெரிகிறது. மாமரங்கள் நிறைந்த பகுதியாக, காவிரியின் துறையாக அமைந்தமை இப் பெயர்க்குரிய காரணம் ஆகும். வடகரை மாந்துறையைச் சம்பந் தர் பாட அறிகின்ற நிலையில், தென்கரையும் மாந்துறை என்றே அழைக்கப்பட்டதைக் கேள்விப்படுகிறோம்.[2] எனவே ஆற்றுக்கு இருகரைகளிலும் மாந்தோப்பு காணப்பட்டது என்பதும், எனவே இரண்டும் தனித்தனியாகக் குறிக்கப் பெறவேண்டிய நிலையில் வடகரை, தென்கரை எனக் குறிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் உணர இயலுகின்றது. வடமொழியில் ஆம்ர வனம் என்று மொழி பெயர்க்கப்பட்டு, இவ்வூர் அழைக்கப் பெறுகிறது.[3]

'இலவஞாழலும் ஈஞ்சொடு சுரபுன்னையிள மருதிலவங்கம்
கலவி நீர் வரு காவிரி வடகரை மாந்துறை உறைகண்டன்'
(246-4)

இதனைப் போன்று பலவாறு ஞானசம்பந்தர், இத்துறையின் வளம் பற்றி உரைக்கின்றார்.

---

1. தேவர்பிரான் திருமாணிக் குழியும் திணைநகரும்...
காவல் செல்வத் திருக் கெடிலத்தைக் கடந்தணைந்தார்
(27-1-4)
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக். 275
3. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்-140

முத்தொள்ளாயிரம் மாந்தை எனச் சுட்டும் ஊர் இதுவாக இருக்கலாம் (118, 122, 128). மரூஉப்பெயர் நிலையில் இதனைக் கொள்ளலாம்.

## 316. மாற்பேறு

திருமால்பூர் என்று, இன்று வடஆர்க்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது இவ்வூர். பாலியாற்றின் கரையில் உள்ள இதன் அமைப்பை,

*திரையார் பாலியின் றென் கரைமாற்பேற்*
*றரையானே யருணல்கிடே* (55-6)

என ஞானசம்பந்தரும்,

*செப்பரிய புகழ்பாலித் திருநதியின் தென்கரைபோய்*
*மெய்ப்பொலியும் கண்டர் திருமாற்பேறு மகிழ்ந்து இறைஞ்சி*
(34-1002)

என சேக்கிழாரும் தருகின்றனர், இப்பெயரைக் காண, திருமாலுடன் தொடர்புடையதாக அமைகிறது. ஆயின், சிவன் கோயில் சிறப்புடன் திகழ்கிறது. இதனை நோக்க, சில எண்ணங்கள் தென்படுகின்றன.

இத்தலத்துக்கு அருகில் கோவிந்தவாடி அகரம் என்னும் ஊர் உள்ளது. என்பதும், திருமால் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்து நாடோறும் ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு அர்ச்சித்துப் பேறுபெற்ற தலம் இது என்பதும் அறிஞரின் கருத்தாகக் காண்கின்றோம்.[1] இதனை நோக்க, கோவிந்த வாடி என்ற இடத்தில் முதலில் விஷ்ணு கோயில் அமைந்திருக்கலாம். பின்னர் சைவம் ஓங்க, அங்கு ஒரு பகுதியில் அமைந்த சிவன் கோயில் செல்வாக்குடன், திருமாலைவிட பெரியவன் என்ற எண்ணமும் மக்களிடம் வலுப்பெற, திருமால் வணங்கி பேறு பெற்றதாகக் கதை கூறி, இடத்திற்கும் 'திருமாற்பேறு' எனப் பெயரைச் சுட்டத் தொடங்கி இருக்கலாமோ எனத் தோன்றுகிறது. வடமொழியாகவும் இப்பெயர் 'ஹரிச்சக்கரபுரம்' எனப் படுகிறது

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 89

மருவுகங்கை வாழ் சடையவர் மகிழ்ந்த மாற்பேறு, என்கின்றார் சேக்கிழார் (25-31-3-4). மால்பேறு இன்று 'மால் ஊர்' என்று கருதப்பட்டு, மக்கள் வழக்கில் மால்பூர் ஆயிற்று எனத் தோன்றுகிறது.

## 317. மாறன்பாடி

சேக்கிழார் திருஞானசம்பந்தர் வரலாற்றில் இவ்வூர்ப் பெயரினைக் குறிப்பிடுகின்றார். பெண்ணாகடத்திலிருந்து அரத்துறைக்குச் செல்லும் போது இடையில் தங்கியத் தலமாக மாறன்பாடிச் சுட்டப்படுகிறது. இன்று பெண்ணாகடம், நெல்வாயில் என்பன தென் ஆர்க்காடு மாவட்டம் சார்ந்து அமைகின்றன என்பதைக் காணும்போது இவற்றிற்கிடையே அமைந்த மாறன்பாடியும் இன்றுதென்ஆர்க்காடுமாவட்டத்தில் தான் இருக்கவேண்டும்என்பதில் ஐயமில்லை. 'மாறன்பாடி' என்ற பெயரில் மாறன்-பாண்டியன் என்ற பொருளில் அல்லது சடகோபன் என்ற பொருளில் அமைந்திருக்கலாம். இதனைப் பற்றி பிற விளக்கம் பெரிய புராணத்தில் இன்மையால், இது சிவன் கோயில் இல்லாத ஊராகவோ அல்லது, திருமால் கோயில் தலமாகவோ இருக்க வாய்ப்பு அமைகிறது. மாறன் என்று சுட்டும் தன்மையும், இதன் இருப்பிடமும் திருமாலுக்கே முதலிடம் கொடுக்கலாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

## 318. மீயச்சூர்

மீயச்சூர் என வழங்கப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் காணப்படுகிறது. அப்பராலும், சம்பந்தராலும் இங்குள்ள இறைவர் புகழ்பெற்றுள்ளனர். திருமீயச்சூரில் உள்ள கோயிலில் அம்பிகை வீற்றிருக்கும் கோலத்துடனும், இக்கோயிலுள் உள்ள வடக்கு சந்நிதியில் இறைவனும் (மீயச்சூர் இளங்கோயில்) உள்ளனர். அப்பர், இவ்விறைவனைப் பாடும்போது,

'தோற்றும் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுள மீயச்சூர்க்
கூற்றம் பாய்ந்த குளிர்புன் சடையரற்
கேற்றக் கோயில் கண்டீர் இளங்கோயிலே'

என இக்கோயிலைச் சிறப்பிக்கின்றார், 'மீயச்சூர்' என்ற ஊர்ப் பெயரின் பொருள் விளங்கவில்லை எனினும்,

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் புடர் புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் றாதைதன்
மீயச்சூரே தொழுது வினையை வீட்டுமே (198-1)

என்ற ஞானசம்பந்தர் பாடலடிகள், முருகன் கதைத் தொடர்பு காட்டும் நிலையில் புராண அடிப்படையில் இப்பெயர் தோற்றுவிக்கப்பட்டு இருக்குமோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

## 319. முக்குளம்

'முப்புரம் செற்றார் பாதம் சேரு முக்குளமும் பாடி' என, சிவன் கோயில் கொண்ட ஊராகச் சேக்கிழார் சுட்டுகின்றார் (34-126).

## 320 முக்கூடல்

'வடிவார் வேல்
முக்கூடல் அம்மா முருக மருங் கொன்றையந்தார்
முக்கூடமாட்டாமுலை'

என்பது சிவபெருமான் திருவந்தாதி (50).

## 321. முசிறி

முத்தொள்ளாயிரம் (110) சுட்டும் தலம் இது. சங்க காலம் தொட்டேபெயர் பெற்ற ஊர் இது. துறைமுகமாக விளங்கிய நிலையையும் அறிகின்றோம். கேரளப் பல்கலைக்கழகத்தின் முதுகலைஏடான 'தூர்ந்துபோன துறைமுகங்களில்' முசிறியின் விளக்கம் சிறப்பாக அமைகிறது.

## 322. முண்டீச்சுரம்

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். 'திருக்கண்டீச்சுரம்' என இன்று சுட்டப்படுகிறது.[1] ஈச்சுரம் என்ற கூறு

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்...பக். 183

சிவன் கோயில் காரணமாகப் பெயர் பெற்றது என்பதைக் காட்டும். அப்பர் பாடல் இங்குள்ள இறை பற்றி இருப்பினும் (299) இவ்வூர் பற்றிய எண்ணங்கள் எதுவும் இல்லை.

### 323. முதுகாடு

சிவபெருமான் திருவந்தாதியில் முதுகாடு பற்றித் தெரிகின்றது.

'முதுகாட்டுப் பொருந' (13)
'கொற்றத்துப்பில் ஒன்றை ஈன்ற
துணங்கையஞ் செல்வத் தணங்கு தரு முதுகாட்டுப்
பேய்முதிர் ஆயத்துப்பிணவின்' (19)
உழிதரல் மடிந்து கழுது கண் படுக்கும்
இடருறு முதுகாட்டுச் சீரியல் பொருந—25

என்று இது குறிக்கப்படுகிறது.

### 324. முதுகுன்றம்

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் விருத்தாசலம் என்ற பெயரில் இது இன்று வழங்கப்படுகிறது. மூவர் பாடலும் பெற்றது இவ்வூர். முதுகுன்றம் முத்தாறுவலம் செய்யும் முதுகுன்று என்றும்(சுந்-43-11)முத்தாறு வெதிருதிர நித்திலம் வாரிக் கொழிக்கும் முதுகுன்றமே என்றும் (திருஞான-131-1) மொய் கொள் மாமணி கொழித்து முத்தாறு சூழ் முதுகுன்றை (சேக்-34-181) என்றும் மணி முத்தாறு பாயும் இப்பகுதி சிறப்பிக்கப்படுகிறது. மேலும் முல்லை கமழும் முதுகுன்று (சிவபெரு - திருவிரட்-5) செழுநீர் வயல் முதுகுன்று (நம்பி-திருத்-77) போன்ற பாடலடிகள், முதுகுன்றின் செழுமையை இயம்புவன.

முதுகுன்று என்று இவ்வூர் பாடப்படினும், இதன் பழம் பெயர் பழமலையாக இருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது. இன்றைய பெயர் விருத்தாசலம், பழமலையின் வடமொழி மாற்றமே என்றும், விருத்தாசலமே முதுகுன்றம் என மாற்றப்பட்டது என்றும் அறிஞர் கருதுகின்றனர். இப்பதியில் கோயில் கொண்டுள்ள இறைவன் பெயர் பழமலை நாதர் எனவும் தெரிகிறது.[1] பழமலை,பழங்கள் நிறைந்த மலைப்பகுதி என்ற நிலையில் முதலில் பெயர் பெற்றதாகவும், பின்னர் அது விருத்தாசலம் என, பழமை

1. ஊரும் பேரும்-பக். 288

முதுமை என்ற பொருளில் முதுகுன்றம் என்று வழங்கத் தொடங்கியதாகவும் கூறப்படுகிறது. 'பிரமன் படைப்புக்கு முன் சிவபெருமான் தாமே மலை வடிவாகி நிற்கப் பிரமன் அதனையறியாது, பல மலைகளையும் படைத்து, அவற்றை நிலை பெறுத்த இடமின்றி மயங்கச் சிவபெருமான் தோன்றியருளித் தானே பழமலையாதலைத் தெளிவித்தார் ஆதலின் முதுகுன்றம் எனவும் பழமலை எனவும் வழங்குவதாயிற்று என்ற எண்ணமும் இவ்வூர் குறித்து உண்டு.[1]

## 325. முருகன் பூண்டி

திருமுருகன் பூண்டி என, கோயம்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. சுந்தரர் பாடல் பெற்ற தலம் இது. முருகப் பெருமான் வழிபட்ட தலம் எனவும், மாதவி வனம் என மற்றொரு பெயர் உண்டெனவும் அறிகின்றோம். மாதவிக் கொடிகள் நிறைந்தமையால் இப்பெயர் பெற்றிருக்கலாம். சிவபெருமான் கோயில் கொண்ட தலம் என்ற நிலையில் மேற்குறித்த புராணக் கருத்தின் அடிப்படையில் முருகன் பூண்டி எனச் சுட்டப்பட்டு இருக்கலாம் எனினும் 'பூண்டி' என்பது என்ன என்பதை நோக்க, ஊருடன், தோட்டம் என்ற பொருளையும தமிழ் லெக்ஸிகன் தருகிறது. எனவே தோட்டங்கள் மிகுந்த நிலையில் இப்பெயர் அமைந்திருக்கலாம்.

'முடுகு நாறிய வடுகர் வாழ், முருகன் பூண்டி மாநகர்'

என, சுந்தரர் இதனைச் சுட்டும் நிலையில், (49) இது ஒரு பெரிய நகரமாகத் திகழ்ந்தது என்பதையுணர இயலுகிறது. சேக்கிழாரும் இதனை உறுதிப்படுத்தும் நிலையில், 'சீருரும் திருமுருகன் பூண்டி' எனச் சுட்டுகின்றார் (கழற்-164).

## முல்லைவாயில் 326. வடதிருமுல்லைவாயில்
## 327. தென்திருமுல்லைவாயில்

முல்லையால் பெயர் பெற்ற இரண்டு முல்லை வாயில்கள் தமிழகத்தில் உள்ளன. ஒன்று தென்திருமுல்லை வாயில். இன்னொன்று வடதிருமுல்லை வாயில். திரு எனச் சுட்டும் நிலையில் இரண்டும் கடவுள் குடிகொண்ட ஊர்கள் என்பதையும், தெற்கு,

---

1. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் முதல் திருமுறை-பக் 22

வடக்கு முறையே இருக்கும் திசைகளை அறிவிக்கும் நிலையில் அமைவன என்பதும் தெளிவாகத் தெரிகிறது. வடதிருமுல்லை வாயிலைச் சுந்தரரும், தென் திருமுல்லை வாயிலைச் சம்பந்தரும் பாடியுள்ளனர். இரண்டு ஊர்க் கோயில்களிலும் தலமரம் முல்லைக் கொடியாயிருத்தலும் சுட்டத்தக்கது.

வடதிருமுல்லைவாயில் இன்று திருமுல்லை வாயில் என்று வழங்கப்படுகிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. சுந்தரர் பாலி நதி பாய்ந்து செழிக்கச் செய்யும் இதன் மாண்பை,

'சந்தன வேரும் காரகிற் குறடும்
தண்மயிற் பீலியும் கரியின்
தந்தமும் தரளக் குவைகளும் பவளக்
கொடிகளும் சுமந்து கொண்டுந்தி
வந்திழி பாலி வடகரை முல்லை
வாயிலாய்' (69-3) என்றுரைக்கின்றார்.

தென் திருமுல்லை வாயில் இன்றும் இப்பெயரிலேயே வழங்கப் படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் அமையும் இதனை, ஞான சம்பந்தர்,

'மஞ்சாரு மாடமனை தோறுமைய
முளதென்று வைகி வரினும்
செஞ்சாலி நெல்லின் வளர் சோறளிக்கொ
டிரு முல்லை வாயிலிதுவே' (224-7)

எனப் பாடுகின்றார். மேலும் பொன்னியாற்றால் வளம் பெறும் நிலையையும்,

'வரை வந்த சந்தொடகிலுந்தி வந்து
மிளிர்கின்ற பொன்னி வடபாற்
றிரை வந்து வந்து செறிதேறலொடு
திருமுல்லை வாயிலிதுவே' (224-8)
என்னும் பாடலடிகளில் காட்டுகின்றார்.

**328. முனைப்பாடி**

முனைப்பாடி நாடு என்பதே, முனைப்பாடி என்பது, பல ஊர் களைத் தன்னகத்தே கொண்டு திகழ்ந்ததொரு நிலையை இயம்ப

வல்லது. அப்பர் பிறந்த திருவாமூர் இந்நாட்டில் உள்ள தொரு ஊரே. திருஆமூர் இன்று தென்ஆர்க்காடு மாவட்டம் சார்ந்து அமையும் நிலையில், முனைப்பாடி நாடும் தென்னார்க்காடு மாவட்டப் பகுதியாக இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. மேலும் சுந்தரர் பிறந்த திருநாவலூரும் இந்நாட்டைச் சேர்ந்தது என்பது தெரிகிறது. இதனைப் பற்றி இயம்பும் சேக்கிழார்,

> தொன்மை முறைவரு மண்ணின் துகளன்றித் துகளில்லா
> நன்மை நிலை நடுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
> சென்னி மதிபுனைய வளர் மணிமாடச் செழும்பதிகள்
> மன்னி நிறைந்துளது திருமுனைப்பாடி வளநாடு (27-2-1-4)

எனவும்,

> கங்கையும் மதியும் பாம்பும் கடுக்கையும்
> அங்கணர் ஓலை காட்டி ஆண்டவர் முடிமேல் வைத்த
> தமக்கு நாடு
> மங்கையர் வதன சீதமதியிரு மருங்கும் ஓடிச்
> செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப்பாடி நாடு

என்றும் பாடுகின்றார். இதனைப் பற்றிய பிற பாடல்களினின்றும்[1] கூட, இதன் செழிப்புதான் தெரிகிறதே தவிர, பெயர்க் காரணம் அறியக் கூடவில்லை. எனினும் முனை, பாடி என்ற சொற்கள் போர்க்களத்தை நினைவூட்டுகின்றன.

### 319. மூவலூர்

ஞானசம்பந்தர் சென்ற தலமாக இது காட்டப்படுகிறது. துருத்தி என்னும் குற்றாலத்திற்குச் சென்று (தஞ்சைமாவட்டம்), பின்னர் அங்கிருந்து மயிலாடு துறைக்குச் செல்கின்றார். இடையில் வழிப்பட்ட தலமாக மூவலூர் சுட்டப்படுவதால், இது இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஓர் பகுதியாகத் தான் இருக்க வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது. எனினும் பெயர்க் காரணம் தெரியவில்லை.

---

1. தேடாத பெருவளத்தில் சிறந்த திருமுனைப்பாடி நாடு (பெரிய—நரசிங்—1)
பூவார் தண் புனற்பொய்கைமுனைப்பாடி (பெரிய—ஏயர்-260)

திரைத்தடம் புனல் பொன்னி சூழ் திருத் துருத்தியினில்
வரைத் தலைப் பசும்பொன் எனும் வண் தமிழ்ப்பதிகம்
உரைத்து மெய்யுறப்பணிந்து போந்துலவு மந்நதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுதலார் கழல் பணிந்தார்
(பெரிய-34-439)

மூவலூர் உறை முதல்வரைப் பரவிய மொழியால்
மேவு காவலில் ஏத்தியே விருப்பொடும் போந்து
பூவலம் தண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவி சூழ் திருமயிலாடு துறையினில் வந்தார்
( ,, -437)

## 330. மூழிக்களம்

மலைநாட்டுத் தலமாகிய இது, ஆலப்புழையினின்றும் பத்து மைல் தொலைவில் உள்ளது. திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும் இங்குள்ள திருமாலைப் பரவியுள்ளனர்.[1] களம் என்பது இடம் என்ற பொருளில் அமையினும், மூழி என்பதன் பொருள் விளங்கவில்லை. தமிழ் லெக்ஸிகன், 'மூழி' என்பதற்கு, அகப்பை, கமண்டலு, பாண்ட விசேடம், நீர்நிலை, சோறு போன்ற பல பொருட்களைச் சுட்டினாலும், அவை இவண் எவ்வாறு பொருத்தமுறும் என்பது புலனாகவில்லை. தவிர, மூழட்டி என்பது மிளகு குறித்தமைதலையும், மூழை என்பது குழிந்த இடம் என்ற பொருளில் அமைவதையும் மலைநாட்டு ஊர் என்ற நிலையில் நோக்க, மிளகு அல்லது குழிந்த இடம் காரணமாக மூழட்டிக்களமாகக் அல்லது மூழைக் களமாக இருந்து, பின்னர் மூழிக்களமாகத் திரிந்ததோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

## 331. மெய்யம்

இன்று 'திருமயம்' எனச் சுட்டப்படும் ஊர் இது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது. திருமங்கையாழ்வார் பாடிய திருமால்கோயிலுடன் சிவன் கோயிலும் இங்குள்ளது. மெய்யம் அமர்ந்த பிரான் (நாலா—1524), போன்று பல குறிப்புகள் அமையினும் பெயர்க்காரணம் புலனாகவில்லை. எனினும், 'வேயிருஞ் சோலை விலங்கல் சூழ்ந்த மெய்ய மணாளர்' (நாலா-

1. அணிமூழிக்களத் துறையும்—நாலா-3031
போதிரைத்து மதுநுகரும் பொழில் மூழிக் களம்—„-3035
கனங்கொள் திண்மதிள் புடைசூழ் திருமூழிக்களம்—„-3037

1760) என இறைவனாகிய மெய்யன் இருப்பதினால் திருமெய்யம் என்று அழைக்கப்பட்டதோ எனத் தோன்றுகிறது.

## 332. மோகூர்

பழையனின் ஊராக, சங்ககாலம் தொட்டே தெரியவரும் ஊர் மோகூர். திருமால் கோயில் கொண்டமையின் பாடல் பெற்றது.

திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் பாடிய இத்தலம், இன்று மதுரை மாவட்டத்தில் உள்ளது. இதனைப்பற்றி, 'திருமோகூர் தென் பறம்பு நாட்டின் பகுதியாக விளங்கிற்று என்று கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பறம்பு நாடு பாரியின் நாடு. மோகூரில் பழையன் என்பவனுடைய பலத்த கோட்டை இருந்தது. இது காவல் அரணாக விளங்கிற்று எனப் பாடல்கள் கூறுகின்றன' என்ற எண்ணங்கள் அமைகின்றன.[1] திருமால் மோகன வடிவுடைய மோகினியாக இங்குத் தோன்றியகாரணமே இப்பெயர்க்காரணம் என்ற எண்ணமும் உண்டு.[2] 'மோகம்' என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன், பல பொருட்களைக் கொடுப்பினும் பாதிரி அல்லது மோகமுடையவர் ஆகிய பொருட்களின்[3] அடிப்படையில் இப் பெயர்த் தோன்றியிருக்கக் கூடும் என்பதே பொருத்தமாக அமைகிறது.

## 333. வஞ்சைக்களம்

சங்க இலக்கியத்தில் இவ்வூர்ப் பெயர் இல்லை. மலைநாட்டில் உள்ள தலங்களுள் திருமுறைப் பாடல் பெற்ற ஊராகிய இது, திருச்சூருக்கு 32 கி.மீ. தொலைவில் உள்ள தலம். இத்தலம் பரசுபாமர் தாயைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டு வழிபட்ட தலம் எனப்படுகிறது.[4] அணியார் பொழில் சூழ்ந்த அஞ்சைக் களத்தப்பனைச் சுந்தரர், திருநாவுக்கரசர் பாடல்கள் சிறப்பிக்

1. தென்னாட்டுக்கோயில்கள்—பக் 193
2. ,, ,, -பக். 194
3. மோகம் - Trumpet-Hower. see பாதிரி (மலை)
   மோகர் - மோகமுடையவர் (சங்; அக)
   —vol VI பக். 3380
4. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 109

கின்றன. இன்று திருவஞ்சைக் களம் என்றே சுட்டப்படும் இவ் வூர் தாவரப் பெயரால் அமைந்தது எனச் சுட்டுவதற்கு வாய்ப்பு உளது. வஞ்சிக் கொடியால் பெயர் பெற்ற ஊர் குறித்து தமிழ் லெக்ஸிகன் சுட்டுகிறது. இவை அனைத்தும் மலைநாட்டுப்பகுதி யாக இருத்தல் இவண் சுட்டத்தக்கது. மேலும் இவண் வஞ்சைக் களத்திற்குக் கருவூர் கொடுங்கோளூர் இரண்டையும் சுட்டுகின்ற நிலை அமைகிறது.[1] வஞ்சிக் களமும் காணப்படுகிறது.

வஞ்சைக் களம் என்ற பெயர் பண்டு தொட்டே அமையா விடினும் 'வஞ்சி' என்ற பெயரைச் சங்க இலக்கியத்திலேயே காண இயலுகிறது. சேரமன்னன் தலைநகராகயிருந்த இவ்வூர் 'வாடாவஞ்சி' என புறநானூற்றில் சுட்டப்படுகிறது. வஞ்சி நாடு என்ற பெயர் சேர நாட்டையே குறிக்கப் பயன்படுமாற்றை, மனோன் மணீயம் சுட்டுகிறது (2,3,75). எனவே வஞ்சிக் கொடி கள் நிறைந்த நாடாகிய வஞ்சி நாட்டில் வஞ்சிக்கொடியால் பெயர் பெற்ற பல் ஊர்களுள் ஒன்றாக, சிவன் கோயில் சிறப்புடன் திகழ்ந்த ஊராக இதனைக் கொள்ளலாம். மேலும் கடற்கரை சார்ந்த தலமாக இது இருந்திருககுமோ என்ற எண்ணம், சுந்தரர் பாடல்கள் வழி எழும் ஒன்றாக அமைகிறது.

'அலைக்கும் கடலங்கரை மேன் மகோதை
யணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே'

என்றாற் போன்று (சுந்த—4-1) அடித்தார் கடல், அழைக்கும் கடல், ஆடும் கடல், அரவக்கடல், ஆர்க்கும் கடல் எனப் பல அடைகள் அமைகின்றன. மேலும் 'மகோதை' என்ற பெயர் அடையும் இவண் எல்லாப் பாடல்களிலும் அமையுமாற்றைக் காணலாம்.

அரவக் கடல் அங்கரை மேன் மகோதை
யணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே
(சுந்-4-6)

---

1. வஞ்சி 1. வஞ்சிக் கொடி
2. கரூர்: தலைநகரான கருவூர்
3. கொடுங்கோளூர்
4. வஞ்சி நாடு
—தமிழ் லெக்ஸிகன் தொகுதி VI pa. பக். 3465, 3466

மகோதை என்பதற்குத் தமிழ் லெக்ஸிகன், கொடுங்கோளூர் எனப்பொருள் தருகிறது (vol V pa I—2997). மகோதை என்பது கடல் என்ற பொருள் உடையதது. எனவே கடற்கரையைச் சார்ந்த ஊராகிய மகோதையாகிய கொடுங்கோளூரில் அமைந்த சிவத்தலமாகிய வஞ்சிக் கொடிகள் நிறைந்த இடம் என்பது பின்னர், அத்தலப் பெயராக வஞ்சைக் களம் என்றாகியதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மேலும் இப்பெயராய்வு பற்றிய தமது எண்ணத்தில், 'மலையாளத்தில் மிகப் பெரும்பான்மை வழக்காகப் படகையே வஞ்சி என்கின்றனர். வஞ்சிக் குளம் அல்லது வஞ்சிக்களம் என்பது வஞ்சிகள் அதாவது படகுகள் ஒன்று கூடும் இடம் என்று இன்றும் கொள்ளப்படுகின்றது. படகு என்னும் பொருளில் வழங்கும் வஞ்சிக்குளம் என்ற மிகச் சிறு கிராமத்தையே இக்காலத்தில் இங்குக் காணமுடிகிறது என்கின்றார் அறிஞர் ஒருவர்.[1] எனினும் இன்றைய பொருளை வைத்துக் கொண்டு, அன்று தமிழகத்தின் ஒரு பகுதியென இருந்த நிலப் பகுதியில் உள்ள வழக்கை ஆய்வது பொருத்தமானதா என்பது மேலும் சிந்திக்கத்தக்கது. மேலும் அஞ்சை (பார்வதி) நாட்டிய மாடிய அரங்கு-களம். அதனால் திருவஞ்சைக்களம் ஆகியது. அதன் திரிபுதான் திருவஞ்சிக்குளம் என்ற கருத்துமுண்டு.[2] எனவே இவற்றை நோக்க, ஒரே பெயர் பல இடங்களுக்குச் சூட்டப்படுவதும் ஒரே மரம் பல இடங்களில் இருப்பதும் உண்மை என்ற நிலையில் கருவூர் என்ற பெயரையுடையது வஞ்சி என்பது போன்று இப்பகுதியும் வஞ்சிக் களம் என்று தாவரப் பெயர் அடிப்படையில் தோற்றம் பெற்று வஞ்சைக் களமெனத் திருந்திருக்கலாம் என்பது பொருத்தமுறுகிறது.

## 334. வடுகூர்

இன்று ஆண்டார் கோயில் எனச் சுட்டப்படும் ஊர். தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. சம்பந்தர் பாடல் அமையினும் இவ்வூர்ப் பெயர்க் காரணம் புரிந்து கொள்ள இயலாததாக அமைகிறது.

---

1. கருவூரே வஞ்சி-பக். 43
2. ,, ,, -பக். 44

சுடுகூர் எரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன்றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமம் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல் சூழ்ந்த வடுகூர் அடிகளே

எனப்பாடும் சம்பந்தர் பாடலில் வடுகூர் புனல் என்பது என்ன என்பது புரியவில்லை; எனினும் தமிழ் லெக்ஸிகனைக் காணும் போது மாம்பிஞ்சு அல்லது கருமணல் என்ற இரண்டும் பொருத்த முறுகிறது. இப்பொருளில் இப்பெயர் அமைந்திருக்கலாம். இல்லா விட்டால், வடுகர் வாழ்ந்த பகுதி என்ற நிலையிலும் பெயர்பெற் றிருக்கலாம். எனினும் வடுகர் வாழ்ந்த குறிப்பு எதுவும் தெரிய வில்லை. இதன் இயற்கைச் செழிப்பை,

'பாலும் நறுநெய்யும் தயிரும் பயின்றாடி
ஏலும் சுடு நீறு மென்பு மொளிமல்கக்
கோலம் பொழிற் சோலைக் கூடி மடவன்னம்
ஆலும் வடுகூரிலாடும் மடிகளே' என்கின்றார் சம்பந்தர் (87-2).

## 335. வண்டை

'பல்லவர் கோன் வண்டை வேந்தன்' என, கலிங்கத்துப் பரணியில் (366) வண்டை என்பது ஊர்ப்பெயராக அமைகிறது.

## 336. வண்பரிசாரம்

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர் கோயில் அருகேயுள்ள ஊர் இது. திருமால் கோயில் உள்ள ஊர். நம்மாழ்வாரின் தாயார் பிறந்த ஊர் இது. இன்று திருப்பதிசாரம் என்று வழங்கப்படு கிறது.

வருவார் செல்வார் வண்பரி சாரத் திருந்த என்
திருவாழ் மார்வற்கென் திறம் சொல்லார் செய்வதென்
உருவார் சக்கரம் சங்கு சுமந்திங் கும்மொடு
ஒருபாடுழல் வானோரடியானு முளனென்றே

என்று நம்மாழ்வார் இங்குள்ள திருமாலைப் பரவுகின்றார்.

## 337. வண் வண்டூர்

வல்லவாழின் அருகேயுள்ள மலை நாட்டுத் தலம் இது. இது 'திருவமுண்டூர்' என்ற வழக்கால் அழைக்கப்படுகிறது. நம்மாழ் வார்,

வைகல் பூங்கழி வாய் வந்து மேயும் குருகினங்காள்
செய்கொள் செந்நெலுயர் திருவண் வண்டூர் உறையும்
கைகொள் சக்கரத் தென் கனிவாய்ப் பெருமானைக் கண்டு
(நாலா-2634)

போன்று பல பாடல்களிலும் இறைவனைப் புகழும் நிலையில், இவ்விடத்தின் நீர் வளத்தையும் சிறப்பிக்கின்றார். இவற்றை நோக்க, வண்டு நிறைந்த இடம் காரணமாக இப்பெயர் அமைந்து திருவண், அடையாக இணைந்து இருக்கலாமோ எனத் தோன்று கிறது.

## 338. வரகுணமங்கை

புளிங்குடி கிடந்து வரகுணமங்கை
இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே
என்னையாள்வாய் எனக்கருளி
நளிர்ந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள் கூத்தாடி நின்றார்ப்ப
பளிங்கு நீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்ப நீகாண வாராயே (நாலா—2978)

என, நம்மாழ்வார் 'வரகுணமங்கை' என்ற திருமால் கோயில் கொண்ட இடம்பற்றிக் குறிப்பிடுகின்றார். இங்குத் திருமால் இருந்த கோலத்துடன் காட்சி தருகின்றார் என்ற எண்ணம் இப்பாடல் தருகிற ஒன்று. மேலும், இவ்வூர்ப் பெயரை நோக்க வரகுணப்பாண்டியனுடன் தொடர்புடையதாக இருக்குமோ எனத் தோன்றுகிறது. வரகுணப்பாண்டியன், அந்தணர்க்குக் கொடுத்த மங்கலம் என்ற நிலையில் வரகுணமங்கலம், வரகுணமங்கை யாயிற்றோ என எண்ணிப் பார்க்கலாம். பிற சான்றுகள் கிடைப் பின் தெளிவு பிறக்கும்.

## 339. வரிஞ்சையூர்

'வளவர் காவிரி நாட்டு வரிஞ்சையூர்' (52-1) என, பெரிய புராணம் சுட்டும் ஊர்ப்பெயர் இது. சத்தி நாயனார் வரலாறுச் சொல்லப் புகும்போது அவர் பிறந்த ஊராக இதனைக் காட்டு கின்றார். இது நாகபட்டினத்திற்கு அருகில் உள்ள ஊர் என்ற எண்ணத்தைச் சேக்கிழார் அடிச்சுவட்டில் ஆசிரியர் தருகின்றார் (பக்-399). வரிஞ்சை என்ற பெயரையே நம்பியாண்டார் நம்பியும்

சுட்டும் தன்மையைக் காண, இது மரூஉப் பெயரா என்ற கேள்வி எழுகிறது.

**340. வல்லம்**

திருவலம் என, வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஊர் இது. சம்பந்தர் பாடல் பெற்ற சிவன் கோயிலையுடையது. ஞானசம்பந்தர், இறைவன் உறைவிடமாக இது அமைகிறது என்ற நிலையில் இவ்விடத்தைக் குறிப்பிடுகிறாரே தவிர,[1] வல்லம் என்ற ஊர் பற்றிய விளக்கங்கள் விளக்கப்படவில்லை.

**341 வல்லவாழ்**

மலைநாட்டுத் திருப்பதியாகிய இது இன்று திருவல்லா எனச் சுட்டப்படுகிறது. கோட்டயத்தின் அருகில் உள்ளது. திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும் இவ்விடத்தின் சிறப்பினை நன்கு எடுத்துரைக்கின்றனர். திருமால் கோயில் கொண்ட இவ்விடத்தின் செழிப்பையும், சிறந்ததொரு ஊராக இது திகழ்ந்ததனையும்

தேனார் சோலைகள் சூழ் திருவல்ல வாழுறையும்
நாலா-2612
மாடுயர்ந்தோமப்புகை கமழும் தண் திருவல்ல வாழ
நீடுறைகின்ற பிரான் -நாலா-2614
பச்சிலை நீள் கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும்
மச்சணி மாடங்கள் மீதணவும் தண் திருவல்லவாழ்- ,, 2615

எனப்பாடும் நிலை தருகிறது.

**342. வலஞ்சுழி**

திருவலஞ்சுழி என்றழைக்கப்படும் இவ்வூர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.

'பிலத்திற் சென்ற காவிரி வெளிப்படுவதற்காகத் தம்மை ஏரண்ட முனிவர் பலிதர, அது மேலே வந்து வலமாகச் சுழித்துக் கொண்டு சென்றதால் ஊருக்குத் திருவலஞ்சுழி என்று பெயர்

---

1. விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடம் திருவல்லமே - 113-1
ஆர்த்தவன் நான்முகன் தலையை அன்று
சேர்த்தவன் உறைவிடம் திருவல்லமே - 113-3

வந்ததாகச் சொல்லப்படுகிறது'[1] என்பது இத்தலப் பெயர் பற்றிய விளக்கமாக அமைகிறது. எனினும் பக்கத்தில் ஓடும் அரிசிலாறு கொண்டு நோக்க, இதனுள் நீர் வலத்தில் சுழித்துக் கொண்டு ஓடிய காரணத்தால் இவ்விடம் முதலில் வலஞ்சுழி எனச் சுட்டப்பட்டு, பின்னர் ஊர்ப்பெயராகவும் அமைந்ததோ எனத் தோன்றுகிறது.

சம்பந்தர், அப்பர், இவ்வூரில் உள்ள இறைவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

முழுமணித் தரளங்கள் மன்னுகாவிரி சூழ் திருவலஞ்சுழி
திருநா-242-2

கிண்ண வண்ண மலரும் கிளர் தாமரைத் தாதளாய்
வண்ண நுண்மணன் மேலனம் வைகும் வலஞ்சுழி ,, -138-3

சேக்கிழார், பிரசமென் மலர் வண்டறை நறும் பொழில் திரு வலஞ்சுழி (திருஞா-328) என இதனைச் சுட்டுகின்றார்.

## 343. வலம்புரம்

இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும்பள்ளம் என்னும் பெயரால் சுட்டப்படும் ஊர் இது. மகாவிஷ்ணு இறைவனைப் பூசித்து வலம்புரிச் சங்கு பெற்ற இடம் இது[2] இது கடற்கரைத் தலமாக இருந்தது என்பதனை, சுந்தரர்,

'பனைக்கனி பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினியவன் றமர்க்கினியவன் எழுமையும்
மனக்கினியவன் றனதிடம் வலம்புரமே' எனப்பாடும் தன்மை காட்டுகிறது. திருநாவுக்கரசர்,

மண் மலிந்த வயல் புடைசூழ் மாடவீதி வலம்புரம்-272-1
மங்குன் மதிதவழு மாடவீதி வலம்புரம்-272-9

என்றும், சம்பந்தர்,

வடிவுடை மேதி வயல்படியும் வலம்புர நன்னகர்-362-1
வற்றறியாப் புனல்வாய்ப் புடைய வலம்புர நன்னகர்-361-5

என்றும் இந்நகரினைச் சித்தரிக்கின்றனர்.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-47
2. ,, —பக்-75

### 344. வலிதாயம்

இன்று சென்னை மாவட்டத்தில் பாடி என்று வழங்கப்படும் ஊர் இது. ஊர்ப்பெயர்க் காரணம் தெரியவில்லை. சம்பந்தர் இத் தலத்து இறைவனைப் பாடியுள்ளார்.

கடலின் நஞ்சமதுண்டு இமையோர் தொழுதேத்த நடமாடி
அடலிலங்கை யரையன் வலிசெற்றி அருளம்மானமர் கோயில்
மடலிலங்கு கமுகின் பலவின்மது விம்மும் வலிதாயம்
உடலிலங்கு உயிர் உள்ளளவுந் தொழவுள்ளத் துயர்போமே
-3-8

### 345. வலிவலம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இவ்வூர் கரிக்குருவி (வலியன்) பூசித்த தலம் எனவே இப்பெயர் பெற்றது. என்ற எண்ண இப்பெயர்த் தொடர்பானது.[1] மாவியல் பொழில் வலிவலம் (123-1) மட்டமர் பொழில் வலிவலம் (123-2) என, சம்பந்தர் இதன் செழிப்பை யியம்புகின்றார்.

### 346. வழுவூர்

மூவர் தேவாரமும் குறிப்பிடும் ஊர் இது.

### 347. வளைகுளம்

க்ஷேத்திரக் கோவை வெண்பா,
'நெஞ்சே, வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து' (14)

என இக்கோயிலைக் குறிப்பிட, திருநாவுக்கரசரும், இக்கோயிலைச் சுட்டும் தன்மை, சிவன் கோயில் உள்ள ஊர் இது என்பதைத் தெளிவாக்குகிறது. (திருநா-273-2, 285-10) குளத்தின் வளைவு காரணமாகப் பெயர் பெற்றதோ எனக்கருதலாம்.

### 348. வன்னியூர்

இன்று அன்னூர் என வழங்கப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. அப்பர் இத்தலத்து இறைவனைப் பரவுகின்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-34

றார். மாடமதில்சூழ் வன்னியூரைக் காட்டும் நிலையிலும் (140-1) அயலெலாம் அன்னமேயுமந்தாமரை வயலெலாம் கயல் பாய் வன்னியூர் (140-3) எனக் காட்டும் நிலையிலும், ஊர்ச்செழிப்பு தெரிகிறது. பெயர்க் காரணம் தெரியவில்லை. எனினும், 'வன்னி' என்றதொரு மரம் பற்றிச் சிலப்பதிகாரம் ('வன்னிமரமுமடைப் பளியும் சான்றாக-சிலம்பு21-5)சுட்டுவதால், இந்த ஊர் வன்னி மரம்காரணம்ாகப் பெயர் பெற்றிருக்கலாம் எனத்தோன்றுகிறது.

## 349. வாஞ்சியம்

திருவாஞ்சியம் என, தஞ்சாவூரில் உள்ள ஊர் இது. இங்குள்ள சிவன் கோயில் சிறந்த செல்வாக்குடன் அன்று திகழ்ந்திருக் கிறது என்பதனைச், சைவர் பலராலும் போற்றப்பட்ட தன்மை தெரிவிக்கிறது. விரும்பத்தக்க ஊர் என்ற அடிப்படையில் இப் பெயர் பெற்றதா என்பது எண்ணமாக அமைகிறது. புத்தாறு என்னும் ஆற்றின் கரையில் உள்ள தலம் இது.[1]

'திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்'

என, மாணிக்கவாசகர் பாடுகின்றார் (கீர்த்-அக-79-80).

'தீர்த்த மாமலர்ப் பொய்கைத் திகழ் திருவாஞ்சியம்' (76-63)
'திருந்து மாடங்கணீடு திகழ் திருவாஞ்சியம்' (76-6)
அருவிபாய்தரு கழனி யலர்தரு குவளையங் கண்ணார்
குருவியாய் கிளிசேர்ப்பக் குருகின மிரிதரு கிடங்கில்
பருவரால் குதி கொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத்துறையும்
இருவரால் அறியொண்ணா விறைவன தறைகழல் சரணே
(76-7)

எனச், சுந்தரர் இயற்கையழகையும். இறையின்பத்தையும் ஒரு சேரத் தருகிறார். இந்த இயற்கைச் செழிப்பை, இவ்விடத்தினை மக்கள் விரும்பியிருக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தரும் நிலையில் இக்காரணம் பொருத்தமாகிறது.

## 350. வாட்போக்கி

தற்போது திருச்சி மாவட்டத்தில் உள்ள இவ்விடம் ஐயர் மலை என்று சுட்டப்படுகிறது. இரத்தினகிரி, மாணிக்க மலை,

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-39

சிவாய மலை என்பன வேறு பெயர்கள்.[1] மலைமேல் கோயில் உள்ளது என்ற எண்ணமும், அப்பர் பாடல் பெற்ற தலம் குறித்த எண்ணமும், (பதி- 200) வாட்போக்கி என்பது இறையுடன் தொடர்பு கொண்ட நிலையில் அமைந்த பெயராக இருக்கலாம் என்ற எண்ணத்தைத் தருகிறது.[2]

## 351. வாதவூர்

மாணிக்கவாசகர் பிறப்பால் பெருமை பெற்ற ஊர். இதனை மாணிக்கவாசகர்,

'வாதவூரினிற் வந்தினிதருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்' (திரு-கீர்த் - 52-53)

என அமைக்கின்றார். சம்பந்தரும் வாதவூரினை, சிவன் கோயில் உள்ள ஊர் எனக் குறிப்பிடுகின்றார்.

'மயிண்டீச்சுரம் வாதவூர் வாரணாசி' (175-7)

வாயு பூசித்த தலம் ஆகையால் வாதபுரி ஈஸ்வரர் என்று பெயர் பெற்றிருக்கின்றார் என்பர்.[3]

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 283

2. மாணிக்கம் வேண்டி வந்த ஆரிய மன்னன் ஒருவனுக்கு இறைவன் தொட்டி ஒன்றைக் காட்டி, காவிரி நீரால் நிரப்பச் சொன்னார். அது எப்படியும் நிரம்பாமல் இருக்கக் கண்டு, அரசன் உடைவாளை ஓச்ச, இறைவன் மாணிக்கத்தைத் தந்தருளினார். மனம் திருந்திய அரசன் அதை விரும்பாது சிவப்பணி செய்து முத்தி பெற்றான். இதனால் சுவாமிக்கு (வெட்டப்பட்டப் வாள் குறி இலிங்கத்தில் இருப்பதால்) முடித்தழும்பர் என்றுபெயர் — ., -பக்.284

3. ஆதி யாதித்தன் சோமன் அசுவினி கடமபேரால்
வேதியர் தமைவந் தேத்தி விமலனை யுகக் கண் மூன்றும்
காதலில் வணங்கக் கண்டு கடையுகம் வாதராஜன்
நீதியில் வணங்க வாதபுரமென நிகழும் மூதூர்
—வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணம் - தேவார வைப்புத்தல விளக்கம்-பக். 2

'திருவாதவூர்ச் சிவபாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக்கோவை' (158)

என்ற நம்பியாண்டார் நம்பியின் கோயில் திருப்பண்ணியர் விருத்தம், வாதவூரில் பிறந்த மணிவாசகர் பற்றிய எண்ணத்தைத் தருகிறது. 'மதுரை மாநகரத்திற்குக் கிழக்கே பதினைந்து கல் தொலைவில் இருப்பது திருவாதவூர் என்னும் ஒரு சிறிய ஊர். அவ்வூர் திருவாதூர் என்றும் பண்டு வழங்கப்பட்டுள்ளது. வாது என்றால் தருக்கம் என்பது ஒரு பொருள். அக்காலத்தில் அவ்வூரில் பல சமய தத்துவ வாதிகள் இருந்ததாகக் கருதப்படுகிறது என்ற எண்ணம் வாதவூர் பற்றியது[1]. எனவே வாதம் புரிதல் இருந்ததால் வாதவூர் என்ற பெயர் அமைந்தது என்ற எண்ணத்தை இவண் பெறுகின்றோம்.

## 352. வாய்மூர்

இன்று திருவாய்மூர் என, தஞ்சாவூர் மாவட்டத்தில் காணப்படும் இடம் இது. காவிரியின் தென்கரைத் தலம் என்ற குறிப்பினைத் தவிர, பிற எண்ணங்கள் தெளிவுறவில்லை. அப்பர், சம்பந்தர் இத்தலத்து இறைவனைக் கண்டுப் பாடியுள்ளனர். பத்துப் பாடல்களில் வாய்மூர் இறைவன் சிறப்பினைக் கூறும் சம்பந்தர், இறுதிப்பாடலில்,

'திங்களோடருவரைப் பொழிற் சோலைத்
தேனலங் கானலத் திருவாய்மூர்' (247—11) எனத் திருவாய்மூரின் இயற்கை நலம் போற்றுகிறார். அப்பர்,

எங்கே என்னை யிருந்திடந் தேடிக் கொண்
டங்கே வந்தடையாள மருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் அதென் கொலோ' (164-1)

என்று பாடுகின்றார்.

## 353. வாழ்கொளிபுத்தூர்

இன்று வாளொளிப் புத்தூர் என, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது இவ்வூர். 'விஜயனுடைய கைவாளை, சுவாமி ஒரு

---

1. செந்தமிழ்ச் செல்வி சிலம்பு-12-பக். 75

புற்றில் ஒளித்து வைத்தார். அதனால் வாள் ஒளி புற்றூர் என்றும் பெயர் வந்தது என்ற எண்ணம் அமைகிறது.[1] 'புத்தூர் இதன் முதற்பெயராக அமைய, பின்னர், இறைத் தொடர்பாக 'வாழ்கொளி' என்ற அடை இணைந்திருக்கலாம். அல்லது, கோயில் செல்வாக்கால் உருவாகிய புதிய ஊர் என்ற நிலையில் முழுப்பெயரும் தோற்றம் பெற்றிருக்கலாம் எனத் தோன்றுகிறது. சம்பந்தர், சுந்தரர் பாடல்கள், இத்தலம் குறித்து அமைகின்றன. மலைத்த செந்நெல் வயல் வாழ்கொளி புத்தூர் என்கின்றார் சுந்தரர் (57).

## 354. வாறன் விளை

மலை நாட்டுத் தலம். திருமால் கோயில் சிறப்பு பெற்றது. எர்ணா குளம், கொல்லம் தென்னிந்திய இருப்புப்பாதையில் உள்ள செங்கன்னூர் நிலையத்தில் இறங்கி, ஏழுமைல பேருந்தில் சென்று இவ்வூரை அடைதல் வேண்டும் என்கின்ற எண்ணம், இவ்வூர் இருக்குமிடத்தைத் தருகிறது[2] மக்கள் வழக்கில் ஆரன் முளை (முளா) என்று அமைகிறது. நம்மாழ்வார் பாடல்கள், இத் தலத்து இறைவனையும், இவ்விடத்தின் செழிப்பு பற்றிய எண் ணங்களையும் அளிக்கின்றன.

மாகம் திகள் கொடி மாடங்கள் நீடும் மதிள் திருவாறன்
விளை (நாலா-2844)
பாடும் பெரும் புகழ் மறை வேள்வியைத் தாறங்கம்
பண்ணினர் வாழ்
நீடு பொழில் திருவாறன் விளை (,,-2845)
வாய்க்கும் கரும்பும் பெருஞ் செந்நெல்லும் வயல்
சூழ் திருவாறன் விளை (,,-2846)

என்ற எண்ணங்கள், இங்கு மக்கள் வாழ்ந்த செய்தியையும் தரு கின்றன.

## 355 வான்மியூர்

திருவான்மியூர் என்று இன்று வழங்கப்படும் இத்தலம் இன்று சென்னை மாவட்டத்தில் உள்ளது. வான்மீக முனிவர் வழிப்பட்ட தால் இப்பெயர் என்ற எண்ணம் அமைகிறது[3] கடற்கரைத்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-68
2. மலை நாட்டுத் திருப்பதிகள்-பக் 53
3. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 223

தலம் என்பதைச் சம்பந்தரும் தம் பாடலில் குறிக்கின்றார்.

கரையுலாங் கடலிற் பொலி சங்கம் வெள்ளிப் பிவள்
திரையுலாங் கழி மீன் உகளுந்திருவான்மியூர் (140-1)
கானயங்கிய தண் கழி சூழ் கடலின் புறம்
தேனயங்கிய பைம் பொழில் சூழ் திருவான்மியூர் (140-3)

## 356. விசயமங்கை

திருவிசயமங்கை என, இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. அருச்சுனன் வழிபட்ட தலம் என்ற காரணமே இதற்குக் கூறப்படினும்,[1] வெற்றியைக் குறித்து ஏற்பட்ட ஊர்ப் பெயராக இது இருத்தலே பொருத்தமானது. சம்பந்தர், அப்பர் இக்கோயில் இறையைப் பாடுகின்றனர்.

தொடைமலி யிதழியுந் துன்னெருக் கொடு
புடைமலி சடைமுடி யடிகள் பொன்னகர்
படைமலி மழுவினர் பைங்கண் மூரிவெள்
விடைமலி கொடியணல் விசயமங்கையே (275-4)

எனப்பாடும் தன்மை சம்பந்தரிடம் அமைகிறது.

கொள்ளிடக் கரைக் கோவந்த புத்தூரில்
வெள்விடைக் கருள் செய் விசயமங்கை
உள்ளிடத்துறை கின்ற வுருத்திரன்
கிள்ளிடத் தலையற்ற தயனுக்கே—(185-3)

என்கின்றார் அப்பர். இவர்பாடலில், விசயமங்கையிருந்த இடத்தையும், அது கோயில் பெயராக, இருக்கும் வாய்ப்பு தருவதையும் காண்கின்றோம்.

கொள்ளிடக் கரையில் உள்ள கோவந்த புத்தூரில்
உள்ள விசயமங்கையில் உறைகின்ற இறைவன்

என்னும் நிலை,' அரசன் வந்தபுத்தூர்' என்பது அரசியல் தொடர்பு தந்து, அவனால் அமைக்கப்பட்ட கோயிலே விசயமங்கை எனப் பெயர் பெற்றிருக்கலாம் என்ற எண்ணம் தருகிறது. மேலும், தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் ஊர்ப்பெயரும் கோயில் பெயரும் பற்றிக் கூறுகையில், 'கோவந்த புத்தூரில் உள்ள கோயில் விசயமங்கை' எனக் குறிப்பிடுகின்றார்.[2] எனவே

---

1. சேக்கிழார் வழியில் சிவத் தலங்கள்—பக், 266
2. கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள்—பக்-86

கோவந்தபுத்தூர் ஊர்ப்பெயர்; விசயமங்கை கோயில் என்பது தெளிவு பெறுகிறது. இன்று விசயமங்கையே செல்வாக்கு பெற்றுத் திகழ்கின்றது.

## 357. விடை வாய்க் குடி

'குடி' என்று முடியும் கோயில் தலமாக விளங்கும் ஊர்ப் பெயர் வரிசையில் விடைவாய்க் குடியும் அமைகிறது. நாவுக் கரசர்,

'விற்குடி வேள்விக் குடி நல்வேட்டக் குடி
வேதி குடி மாணிகுடி விடைவாய்க் குடி' (285-3)

என இதனைக் குறிப்பிட்டுச் செல்கின்றார் இப்பாடல் அடிகளி னின்றும், பெயர், அது சிவன் கோயில் பெற்ற நிலை இரண்டை மட்டுமே நம்மால் புரிந்து கொள்ள இயலுகிறது. எனினும் பெயர் பற்றிய ஆய்வு மேலும் சில எண்ணங்களைத் தரு கின்றது. 'விடைவாய்' என்பதற்குப் பொருள் பொருத்தமாக இல்லை. விடையாயம் என்பதற்கு'ஏற்றையுடைய ஆ என, தமிழ் லெக்ஸிகன் பொருள் அமைக்கிறது (தமிழ் லெக்ஸிகன் vol pa. I பக்-3663). தவிர, 'திருவிடைவாய்' தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள ஓர் ஊர்; அவ்வூருள் உள்ளதொரு சிவன் கோயில். அங்குள்ள கற்சுவர்களில் பதிகப் பாடல்க : போன்றவற்றைத் தம் கட்டுரை ஒன்றில் விளக்கி எழுதுகின்றார் திரு.மா.வே. நெல்லையப்ப பிள்ளை[1] 'இடைவாய்' என்ற ஊர் பற்றி பிறர் பதிகங்கள் கிடைக்கவில்லை. எனினும் நாவுக்கரசரால் குறிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தலம் அன்று சிறப்பு பெற்று விளங்கியிருக்க வேண்டும் என்பதை ஊகிக்க இயலுகின்றது. எனவே இன்று 'இடைவாய்' என்று அழைக்கப்படுகின்ற ஊர் அன்று, விடைவாய்க் குடி என்ற பெயரில் இருந்ததா? என்ற எண்ணம் எழுகின்றது. மேலும் தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்களில் ஆசிரியர் 'திருவிடை வாயில்' என்ற ஊர்ப்பெயர் பற்றி எழுதும் போது, 'விடையவன் என்னும் சூரிய குலத்து மன்னன் உண்டு பண்ணிய ஊராதலின் பெற்ற பெயர் என்ப என்று கூறி, 'திரு விடைவாய்' எனவும் வழங்கப்படும் என்கின்றார் (பக்.211). எனவே இவண் முன்னைய பெயரின் சார்பினைக் காண்கின்றோம்.

---

1. செந்தமிழ்ச் செல்வி–5-பக்311

இதனை நோக்க, 'இடைவாய்க் குடி' என்ற பெயர், ஆநிரைகளின் நிறைவு காரணமாக, ஆயர்கள் நிறைந்த ஊராக இருந்து 'திரு' சேர்ந்து, திருவிடைவாய்க் குடி என்றாகி, பின்னர் 'இடைவாய்' என்ற பெயர் அடைந்து, இன்று திருவிடைவாயில் என்று வழங்கப் படுகின்றதோ என்பதே இப்பெயர் வரலாறு நமக்குத் தரும் எண்ணமாகும்.

### 358. வித்துவக்கோடு

திருமிற்றக் கோடு என்று வழங்கப்படும் தலம், மலைநாட்டுத் தலமாகும். குலசேகர ஆழ்வார் இங்குள்ள திருமாலை வேண்டிப் பாடியுள்ளார்.

'விரை குழுவு மலர்ப்பொழில் சூழ் விற்றுவக் கோடு'
நாலா—688
'விண்டோய் மதிள் புடை சூழ் விற்றுவக் கோடு' ,, 689
'மீன் நோக்கும் நீள்வயல் சூழ் விற்றுவக்கோடு' ,, 690

என இவ்விடத்தின் செழிப்பையும் அவர் பாடுகின்றார். எனினும் 'விற்றுவன் கோடு' என்ற பெயரின் அடிப்படை தெரியவில்லை. மலைப் பகுதியாகையால் கோடு மலையுச்சியைக் குறித்ததெனக் கருதினும், 'விற்றுவ' என்பதற்குரிய பொருள் விளக்கம் பெற விலலை. மேலும் இங்குள்ள கோயில் பற்றிக் கூறும்போது, 'இது கருவூரில் விற்றுவக் கோட்டு அக்ரஹாரத்தில் ஆதியிலிருந்து, இப்போது இவ்விடத்துக்கு மாற்றப்பட்டதாகச் சிலர் கூறுவர்' என்ற கருத்தும் நிலவுகிறது.[1] எனினும் பிற விளக்கங்கள் கிடைப்பின் தெளிவு கிடைக்கும்.

### 359. வியலூர்

'திருவியலூர்' என்ற பெயரில் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. திருவிசநல்லூர், விசலூர் என்பன பிற வழக்குகள்.[2] சம்பந்தர் இங்குள்ள சிவனைப் பரவியுள்ளார்.

'விம்மும் பொழில் கெழுவும் வயல் விரி நீர் வியலூரே
கடையார் தரவகிலார் கழை முத்தந் திரை சிந்தி (13-3)
'மிடையார் பொழில் சூழ் தரு விரிநீர் வியலூரே' (13-4)

1. நாலாயிரத் திவ்விய பிரபந்தம்-பக். 847
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 276

எனப்பாடும் நிலையில், அகன்ற நீர்ப்பரப்பு பொருந்திய இடம் என்பதைச் சுட்டுகின்றார். 'வியல்' என்பது அகன்ற தன்மையைக் குறிக்கும் நிலையில் பரந்த, விரிந்த அகன்ற ஊரின் இயல்பு காரணமாக 'வியலூர்' என்ற பெயர் அமைந்திருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது.

### 360. வில்லிபுத்தூர்

'ஸ்ரீவில்லிபுத்தூர்' என, அழைக்கப்படும் இவ்வூர் இன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது. திருமால் கோயில் பெருமை பெற்றது. இறைவனது சாபத்தால் வேடனாகப் பிறந்த முனிவர் வில்லி. சகோதரன் கண்டன் இறக்க, பரந்தாமன் வில்லியினதுகனவில்தோன்றி, 'இந்தக் காட்டை அழித்து நகரம் ஆக்கு. பாண்டி, சோழநாட்டு அந்தணர்களைக் கொண்டு வந்து குடியேற்று' எனச் சொல்ல, வில்லி காடு திருத்தி நாடாக்கிய நகரம் தான் வில்லிபுத்தூர்' என்ற எண்ணம் இப்பெயர்த் தொடர்பானது.[1] பெரியாழ்வாராலும், ஆண்டாளாலும் பாடல் பெற்றது இத்தலம்.

'மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல் மேல் நுழைந்த வண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாய்'

என, பெரியாழ்வார் வில்லிபுத்தூர் இறைவனைப் பாடுகின்றார் (நாலா—133).

'மென்னடை அன்னம் பரந்து விளையாடும்
வில்லி புத்தூருறைவான்றன்
பொன்னடி காண்பதோர் ஆசையினால் என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா'

என்கின்றார் ஆண்டாள் (நாலா-549).

புத்தூர் என்பது புதுவை எனவும் குறிக்கப்படுகிறது. 'ஆதியில் இத்தலம் வராகக்ஷேத்திரம் என்ற பெயர் பெற்று இருந்தது என்ற எண்ணமும் உண்டு.[2] மேலும்,

---

1. வேங்கடம் முதல் குமரி வரை—IV-பக்-135
2. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-210

'வில்லி புத்தூர்' என்பதனை 'வில்லி'யோடு தொடர்பு படுத்தி ஊர்ப்பெயர்கள் காரணம் சுட்டினாலும், நம்பியாண்டர் தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறும் செருவிலி புத்தூருக்கும் இதற்கும் தொடர்பு உண்டா என்பதும் நோக்கத் தக்கது.

'செருவிலிபுத்தூர்ப் புகழ்த்துணை
வையம் சிறு விலைத்தா
உருவிலி கெட்டுணைவின்றி' (67)

என புகழ்த்துணை நாயனார் பிறந்த இடமாக செருவிலி புத்தூர் என்ற இடத்தைச் சுட்டுவார். இதனையே சேக்கிழாரும் தமது பெரியபுராணத்தில்,

'செருவிலி புத்தூர் மன்னும் சிவ மறையோர் திருக்குலத்தார்
அருவரை வில்லாளி தனக்க கத்தடிமையாம்'
..............................
பொருவரிய புகழ்நீடு புகழ்த்துணையாரெனும் பெயரார்'

என்கின்றார் (62-1). சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள் நூலாசிரியர், செருவிலி புத்தூருக்கு எழுதும் விளக்கத்தில், இது சோழ நாட்டில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து குடவாசல் செல்லும் பாதையில் உள்ளது. தற்போது அரிசிற் கரைப் புத்தூர் என்றும், அழகார் புத்தூர் என்றும் அழகாத்ரி புத்தூர் என்றும் வழங்குகிறது என்கின்றார் (பக். 408). இதனை நோக்க, செருவிலி புத்தூரின் தற்போதைய பெயர் அரிசிற்கரைப் புத்தூர் அழகார் புத்தூர் என அமைகிறது. ஆயின் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் எட்டு மைல் தொலைவில் உள்ள 'அலைக்கும் புனல் சேர் அரிசிற்றென் கரை அழகார் திருப்புத்தூர் அழகனீரே' என்பதைப் பற்றித் தேவாரப்பாடல் அமைகிறது. மேலும் சுந்தரர், புகழ்த் துணை நாயனார் இறைவனை வழிபட்டு முத்தி அடைந்த நிலம் இதுஎன்ற கருத்தை யுடையவர் என்பதற்கு,

'வகுத்தவனுக்கு நித்தற் படியும் வருமென்றொரு
காசினை நின்ற நன்றிப்
புகழ்த் துணை கைப்புக செய்துகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர் புனிதன் நீரே

என்ற குறிப்பினையும் இவ்வாசிரியர் குறிப்பிடுகின்றார் (பக்-41).

இவற்றை நோக்க, செருவிலிபுத்தூர் அழகார் திருப்புத்தூர் என்பதே என்ற எண்ணம் இவரிடம் நிலைத்திருக்கக் காண்கின்றோம். 'அழகார் புத்தூர்' என்ற பெயரும், செருவிலிபுத்தூர் என்ற பெயரும் ஒரே கால கட்டத்தில் பயின்று வந்திருப்பதைக் காண்கின்றோம். ஒரு ஊர்ப்பெயர் பிற பல பெயர்களையும் ஒரே காலத்தில் கொண்டு திகழ்வது வரலாற்று உண்மை எனினும், அதற்குரிய சான்றுகள் தெளிவாக அமைகின்றன. ஆயின் இங்கு அரிசிற் கரைபுத்தூர் பற்றிய பாடல்கள் பல உள. சம்பந்தர் அப்பர் சுந்தரர் மூவருமே பாடியுள்ளனர்.

'முத்தூரும் புனல் மொய்யரிசிற் கரைப் புத்தூர்' என்ற நிலையில் அப்பர் பாடும் தன்மையில் அரிசிலாற்றங்கரையில் உள்ள புத்தூர் என்பதே இதற்கு அடிப்படையாக இருக்க, இதுவும் செருவிலிபுத்தூரும் ஒன்று என்பது முரணாக அமைகிறது. சம்பந்தர் பாடலும் இவ்விதமான எந்த விதக் குறிப்பையும் தரவில்லை.

சுந்தரர், அலைக்கும் புனல் சேர் அரிசிற் றென்கரை அழகார் திருப்புத்தூர் அழகாரே என இதற்குச் சிறிது மேலும் அழகு கொடுத்துப்பாடுகின்றார்.இவரது பாடல் வருணனையில் பின்னர் அரிசிற் தென்கரைப் புத்தூர், அழகார் திருப்புத்தூர் என்ற வழக்கிலும் தோற்றம் பெற்றிருக்கலாம் என்பது தோன்றுகிறது. தவிர, செருவிலி புத்தூர் என்பது இத்தலமேயாயின், இவர் மூவர் பாடலிலும் அப்பெயர் பற்றிய எந்தவொருக் குறிப்புமே இல்லாமைக்குக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது. மேலும், நம்பியாண்டர் பாடிய பின்னர், சேக்கிழாரும் செருவிலி புத்தூர் என்றே உரைக்கின்றார். சுந்தரர் பாடியது புகழ்த்துணை நாயனார் பற்றிய கருத்து என்பதாயின் பொது நிலையில் பாடியிருக்கலாம். புத்தூர் என்ற நிலையில் இரண்டின் பொருத்தமே இரண்டையும் ஒன்றெனக் கருதியதன் காரணம் எனத் தோன்றுகிறது. புத்தூர், அமைதியான குடிவாழ்க்கைக்கு ஏற்றது என்ற நிலையில் இப்பெயர் பெற்று, பின்னர் திருமால் கோயில் கொண்ட நிலையில் புராணக் கருத்துகள் ஏற்பட்டு 'வில்லி' என்ற ஆட்பெயராக மாறியதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

### 361. விளநகர்

இன்றும் விளநகர் என்றே சுட்டப்படும் ஊர், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது.

மொய்த்த காதலில் விளநகர் விடையவர் பாதம்

பத்தர் தம்முடன் பணிந்த நிலையைச் சேக்கிழார் காட்டுவார் (திருஞான-441). இவ்விளநகர் பற்றி, சம்பந்தர்பாடலும் காணப்படுகிறது.

'ஒளிரிளம் பிறை சென்னி மேலுடையார் கோவண
வாடையர்
குளிரிளம் மழை தவழ் பொழிற் கோல நீர் மல்கு காவிரி
நளிரிளம் புனல் வார் துறை நங்கை கங்கையை
நண்ணினார்
மிளிரிளம் பொறியரவினார் மேயது விளநகரத்தே'

என்கின்றார் சம்பந்தர் (214-1). விளா என்பது ஒரு வகை மரம் என்பதை அறியும்போது இம்மரங்களின் மிகுதி காரணமாக இப்பெயர் அமைந்திருக்கலாமோ எனத் தோன்றுகிறது. விழல் நகர் விளநகர் என்றாயிற்று. சுவாமிக்கு உசிரவனேஸ்வரர் என்ற பெயர் உண்டு. உசிரம் விழல், என்ற குறிப்புகள் இப் பெயர் சார்ந்து அமைகின்றன.[1] உசிரம் என்பதற்கு இலாமிச்சை என்ற தாவர வகையைக் குறிப்பிடும் தமிழ் லெக்ஸிகன், எனவே, விளாமரம் அல்லது உசிரம் மரம் காரணமாக இப்பெயர் அமைந்திருக்கிறது என்பது தெரிகிறது.

## 362. விளமர்

திருவிளமர் எனத் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் திருவாரூக்கு அண்மையில் உள்ளது என்பதும், ஓடம் போக்கி ஆற்றுக்குத் தென் கரையில் உள்ள சிறிய கோயில் என்பதும் தெரிகிறது.

'அத்தக வடிதொழ அருள் பெறு கண்ணொடுமுமையவள்
வித்தகர் உறைவது விரிபொழில் வளநகர் விளமரே' (346-1)

என விளமர் இறைவனைப் பாடுகின்றார் சம்பந்தர். இவ்வூர்ப் பெயர் விளக்கம் புலனாகவில்லை. விளநகர் போன்று தாவரப் பெயரா என்பது நோக்கற்குரியது.

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 302

## 363. விற்குடி

விற்குடி என, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. சம்பந்தர் விற்குடியில் உள்ள வீரட்டத்து இறைவனைப் பரவுகின்றார்.

'விரியுமாமலர்ப் பொய்கை சூழ் மதுமலி விற்குடி வீரட்டம்' (244—3)

'பொழில் மல்கிய மலர் விரி விற்குடி வீரட்டம்' (244-6)

என்ற எண்ணங்கள் விற்குடி பற்றி அமைகின்றன. 'விற்குடி' யில் குடி,குடியிருப்புப் பகுதியைச் சுட்ட, வில்லாளிகள் வாழ்ந்த இடம் என்ற நிலையில் இப்பெயர் அமைந்திருக்கலாமோ என்ற எண்ணம் அமைகிறது.

## 364. விற்கோலம்

கூவமென வழங்கும் நிலையில், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள இடம் இது. திரிபுரம் எரித்த மூர்த்தி, கையில் வில்லேந்தி தங்கிய இடம் என்ற குறிப்பு இத்தலத்துப் பெயராய்வுக்குச் சிறிது வழி வகுக்கிறது. இந்நிலையில் விற்கோலத்தினனாக இறைவன் காட்சி தரும் நிலையில், இப்பெயர் அமைந்தது எனக் கூறலாம். இன்று இறைவன் திருமேனியின் நிலையில் இதன் உண்மை தெளிவாகலாம். சம்பந்தர் இத்தலத்து இறைவனைப் பாடியுள்ளனர்.

இவரது பாடல் ஒன்று,

'முந்தினான் மூவருண் முதல்வனாயினான்
கொந்துலாமலர்ப் பொழில் கூக மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல் வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற் கோலமே (281-5)

என்று அமைகிறது

இதனுள் மலர்ப்பொழில் கூகமேவினான் உறைவிடம் திருவிற் கோலம் என்ற எண்ணம் காண, இன்று 'கூவம்' என்று சுட்டப்படும் பெயர் அன்றே இருந்தது என்பதும், 'விற்கோலம், என்பது இறைவன் தோற்றம் காரணமாகக்கோயிலுககுக்கொடுக்கப்பட்ட பெயரே எனவும் கொள்ள இடம் அமைகிறது. எனவே 'விற்கோலம்' என்பது கோயிற் பெயரே என்றும் கூவமென

இன்று வழங்கும் நிலை 'கூகம்' என்பதன் மரூஉ வழக்கே என்றும் சுட்டலாம். கூகம் என்பதன் பொருள் தெளிவில்லை.

## 365 வீழிமிழலை

திரு வீழிமிழலை என்ற தலம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. திருமால் இறைவனுக்குத் தம் கண்ணையே இடந்து சாத்திய தலம் தான் வீழிமழலை என்பது புராணக் கருத்து.[1] எனினும் வீழிச் செடிகளின் நிறைவு காரணமாக இப்பெயர் வந்தது என்பர். மிழலை என்ற ஊர்ப்பெயர்க் கூறினைச் சங்க இலக்கியத்திலேயே காண்கின்றோம். எனவே மிழலை என்ற பொதுக் கூறுடன் வீழிகள் சிறப்பாக இணைய, வீழி மிழலை பெயர் அமைந்தது என்று தெரிகிறது.

சைவர்களால் பெரிதும் போற்றப்பட்ட நிலையை மேற்குறித்தப் புராணக் கதை இயம்புகிறது. மேலும், பலராலும் பாடல் பெற்ற சிறப்பும் இங்குள்ள கோவிற் பெருமையை நிலை நாட்டும்.

'தோற்றம் கண்டான் சிரமொன்று கொண்டீர் தூய
வெள்ளெரு தொன்
றேற்றங் கொண்டீர் எழில் வீழி மிழலை யிருக்கை
கொண்டீர்'

என்பது திருநாவுக்கரசர் தேவாரம் (96–7). மேலும் இவர் பாடல்கள், 'திருவீழி மிழலையானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே' என்ற இவரது கருத்தை யுமுணர்த்துகிறது (264).

ஏரிசையும் வடவாலின் கீழிருந்துஅங்
கீரி ருவர்க் கிரங்கி நின்று
நேரிய நான் மறைப் பொருளை உரைத்தொளிசேர்
நெறியளித் தோனின்ற கோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற் கிள்ளை வேதங்கள்
பொருட் சொல்லும் மிழலையாமே (132-1)

---

1. வேங்கடம் முதல் குமரி வரை, II பக். 211

என உரைப்பர் சம்பந்தர். மேலும் இந்நகர்ச் சிறப்பினை,

'வாதைப்படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடனஞ்சை யுண்டான் உறைகோயில்
கீதத் திசையோடும் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலியோவா வீழி மழலையே' என்றும்

உரைக்கின்றார் (82-2). மிழலை என்றும் வீழி மிழலை என்றும் இவர்கள் சுட்ட, சுந்தரர்,

நம்பினோர்க் கருள் செய்யுமந்தணர் நான் மறைக்கிடமாய வேள்வியுள்
செம்பொனேர் மடவாரணி பெற்ற திருமிழலை
உம்பரார் தொழுதேத்த மாமலை யாளொடும்முடனே உறைவிடம்
அம்பொன் வீழி கொண்டீரடியேற் குமருளுதிரே' (88-1)

எனப் பாடுகின்றபோது, மிழலையுள் உள்ள வீழியில் உள்ள இறைவன் என்ற நிலை அமைகிறது. எனவே மிழலை என்ற ஊரில் வீழிச் செடிகள் நிறைந்த இடத்தில் இறைவன் கோயில் கொண்ட காரணத்தினால், அவ்விடம் வீழி எனச் சுட்டப்பட்டு, பின்னர், வீழி மிழலை இரண்டும், இணைந்து அப்பகுதி வீழி மிழலை என்று வழங்கத் தொடங்கியதோ எனத் தோன்றுகிறது. மேலும் இன்றும் இக்கோயிலின் தலவிருட்சம் வீழிச் செடி என அறியும்போது இவ்வெண்ணம் சரியாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 366. வெஞ்சமாக் கூடல்

வெஞ்சமாக் கூடல் என்ற பெயரிலேயே இன்றும் திருச்சி மாவட்டத்தில் உள்ளது இவ்விடம். பொதுவாகக் கூடும் இடத்தைக் கூடல் என்று அழைக்கும் வழக்கினைத் தமிழர் கொண்டு இருந்தனர் என்பதைப் பிற ஊர்ப்பெயர்களும் புலப்படுத்துகின்றன. இவ்வூர்ப் பெயரும், இக்கருத்தடிப்படையில் பிறந்ததே.

'தாம்பிரபரணியின் உபநதியான சிற்றாறு குற்றாலத்தில் மலையின் மடுவில் விழுந்து உண்டாக்குவது பொங்குமாங்கடல். அமராவதியின் கிளைநதி சிற்றாறு. அது அமராவதியுடன் கூடும் துறையில் உண்டான ஊரின் பெயர் வெஞ்சமாக் கூடல். இச் சிற்றாற்றைக் குடவன் ஆறு என்றும் குழகன் ஆறு என்றும்

கூறுவர்' என்ற எண்ணம் இவ்விடம் பற்றி இயம்பும்.[1] வெஞ்சமன் என்ற அரசன் ஆண்டமை காரணமாக இப்பெயர் அமைந்தது என்ற எண்ணமும் உண்டு.[2] அன்று பெரிய ஊராய்த் திகழ்ந்த வெஞ்சமாக் கூடல் இன்று சிற்றூராய்க் காட்சியளிக்கின்றது. இதன் அன்றையச் செழிப்பைச் சுந்தரர்,

எறிக்கும் கதிர் வேயுதிர் முத்தமொ
டேலமிலவங்கம் தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுட்பெய்து கொண்டு மண்டித்
திளைத் தெற்று சிற்றாறதன் கீழ்க்கரைமேல்
முறிக்கும் தழை மாமுடப் புன்னை ஞாழல்
குருக்கத்தி கண்மேற்குயில் கூவலறா
வெறிக்கும் கலைமா வெஞ்சமாக் கூடல்
விகிர்தா வடியேனையும் வேண்டுதியே'

என்கின்றார். எனவே இவ்விடம் இவர் பாடல் மூலமும் சிற்றாற்றங்கரையில் அமைந்திருந்தமை தெளிவாகிறது. எனினும் கூடல் என்ற பெயருக்குரிய பொருள் விளக்கமாகிறதே அன்றி வெஞ்சமா என்ற பெயர்க்கூறுக்குரிய பொருள் விளக்கமாக வில்லை.

## 367. வெண்காடு

திரு வெண்காடு என தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. சீகாழிக்குத் தென் கிழக்கு ஏழு எட்டு மைல் தூரத்தில் இருக்கும் இடம் இது. முக்குளம், ஆல், வில்வம், கொன்றை என்ற மூன்று தலவிருட்சங்கள் இக்கோயிலின் சிறப்பு. திருவெண் காடு என்பதும், சிவன் கோயிற் சிறப்பும், இவ்விடம் காடு சார்ந்த பகுதியாக இருந்து, பின்னர், இறைச் சிறப்பால், குடியிருப்புப் பகுதியாக மாறியிருக்கக் கூடும் என்ற எண்ணத்தைத் தருகிறது. சைவர்களால் பெரிதும் போற்றப்பட்ட கோயில் இது என்பதைப் பலரின் பக்திப் பாடல்கள் சுட்டுகின்றன.

'விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்
குருந்தின் கீழ் அன்று இருந்த கொள்கையும்'
(திரு. கீர்த்தி–60-61)

---

1 கொங்கு நாட்டுக் கோயில்கள்—பக். 245
2. ,, ,, —பக். 250

என மாணிக்கவாசகர் இக்கோயில் இறைவனைப் புகழ்கின்றார். திருநாவுக்கரசர்,

> 'பாகிடுவான் சென்றேனைப் பற்றி நோக்கிப்
> பரிசளித் தென் வளைகவர்ந்தார் பாவியேனை
> மேக முகிலுரிஞ்சும் சோலை சூழ்ந்த
> வெண்காடு மேவிய விகிர்தனாரே (249-4)

எனப்பாடுகின்றார்.

## 368. வெண்டுறை

திருவண்டு துறை என இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது.

பிருங்கி முனிவர் வண்டு வடிவில் உமையொருபாகன் வடிவத்தைத் துளைத்து இறைவனை மட்டும் வழிபட்ட தலம் இது என்பர்.[1] சேக்கிழார் இதனைத் 'திருமலி வெண்டுறை' என்பார் (34-574). சம்பந்தர் பதிகம் இறைவன் விரும்புமிடம் வெண்டுறை என்பதை எல்லாப் பாடல்களிலும் குறிக்கிறது (319). துறை என்பது ஆற்றுத் துறையாக இருக்கலாம். வெண்ணிலம் என்பதற்கு வெறுந்தரை, மணற்பாங்கான தரை என்று தமிழ் லெக்ஸிகன் பொருள் உரைப்பதை நோக்க, 'மணற்பாங்கான துறை' என்ற நிலையில் வெண்டுறை என்ற பெயர் அமைந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

## 369. வெண்ணி

'வெண்ணி' என்ற பெயரிலேயே இன்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. பொருநர் ஆற்றுப்படை 'வெண்ணிப் பறந்தலை' என்ற ஊரில் கரிகாலன் வென்ற செய்தியைக் குறிப்பிடும்.[2] இங்குக் குறிப்பிடப்படும் வெண்ணியும் சோழ நாட்டு ஊர் என்ற நிலையில் இரண்டும் ஒரே ஊராக இருக்க வாய்ப்பு அமைகிறது. முன்னையை, வெண்டுறை என்ற ஊர்ப் பெயர் அமைந்தது போன்று இதுவும், வெறுந்தரையைக் குறித்து அமைந்திருக்க

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 318
2. இருபெரு வேந்தரும் ஒரு களத்து அவிய வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாள், கண்ணார் கண்ணி கரிகால் வளவன்-பொருநர்-146-148

லாம் எனத் தோன்றுகிறது. இங்குள்ள ரயில் நிலையம் கோயில் வெண்ணி எனச் சுட்டப்படுவது கோயிலின் சிறப்புக்கும், செல் வாக்குக்கும் பின்னைய நிலை எனத் தோன்றுகிறது. எனவே முதலில் மண்தரையாகக் குடியேற்றம் இன்றி இருந்த வெண்ணி, போருக்கு பின்னர், குடியிருப்புப் பகுதியாகத் தோற்றம் கொண்டது எனலாம்.

திருஞானசம்பந்தர், தம்பாடலில்,

'சடையானைச் சந்திரனொடு செங்கண்ணரா
உடையானை யுடைதலை யிற்பலி கொண்டூரும்
விடையானை விண்ணவர் தாம் தொழும் வெண்ணியை
உடையானை அல்லதுள் காதென துள்ளமே' (150-1)

என்கின்றார். சேக்கிழார், சோலை சூழ் பழுதில் சீர்த்திரு வெண்ணி (பதி-34, 358) என இதனைக் குறிப்பிடுகின்றார். திரு நாவுக்கரசர், 'வெண்ணித் தொன்னகர்' (131-2) என இதனைச் சுட்டும் நிலையும் இதன் பழமையை யுணர்த்தவல்லது.

## 370. வெண்ணெய் நல்லூர்

திருவெண்ணெய் நல்லூர் என்ற தலம், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இருக்கிறது. தனை ஆட்கொண்ட நிலைமையை வெண்ணெய் நல்லூரில் வைத்தெனை ஆட்கொண்ட எனப்பாடு கின்றார் சுந்தரர் (17-11). இங்குள்ள கோயில்பெயர் திருஅருள் துறை. இதற்கு அருகாமையில் உள்ள கிராமம் மணம் தவிர்ந்த புத்தூர். இவற்றை நோக்க நல்லூர், புத்தூர் என்பன சிறப்பு அடைகள் என்பதும் புலனாகின்றன. 'உமாதேவி பசு வெண்ணெ யினால்கோட்டைக் கட்டி கொண்டு, அதனிடையே பஞ்ச அக் கினியை வளர்த்துத் தவம் புரிகின்றாள். அப்படித் தவம் புரிந்து பேறுபெற்ற தலம் ஆனதினாலேதான் இத்தலத்துக்கு வெண் ணெய் நல்லூர் என்று பெயர்'[1] என்ற புராணக் கதை இப்பெயர் குறித்து அமைகின்றது.

'பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால்
வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்

---

1. வேங்கடம் முதல் குமரிவரை II-பக். 38

அத்தா உனக்கு ஆளாய் இனி
அல்லேன் எனலாமே'

பெண்ணையாறு இவ்வூரை வளம் பெறச் செய்தது என்பது தெரிகிறது. வெண்ணெய் நல்லூர் கம்பனாலும் தன் புகழை மேலோங்கச் செய்தது என்பதனைக் கம்பராமாயணம் காட்டும்[1].

அண்மையில் பெண்ணையாறு இருக்கிறது என்பதை அறியும் போது பெண்ணையாற்றங்கரையில் இருக்கும் நல்லூர் ஆகையால் பெண்ணை நல்லூர் என வழங்கப்பட்டு, பின்னர் மக்கள் வழக்கில் வெண்ணெய் நல்லூர் என்று திரிந்ததோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

## 371. வெண்பாக்கம்

சென்னை மாவட்டத்துள் இருந்த தலம். 'சென்னைக்கருகில் உள்ள பூண்டி நீர்த் தேக்கத்துள் மூழ்கியது. நீர்த் தேக்கக் கரையில் புதிய கோவிலொன்று கட்டப்பட்டுள்ளது என்ற எண்ணம் இதனைக் குறித்து அமைகிறது.[2] சுந்தரர் பதிகம் இதனைக் குறித்தமைகிறது. 'ஏராரும் பொழிலிலவு வெண்பாக்கம் இடம் கொண்ட காராரு மிடற்றான்' எனப் பாடுகின்றார் இவர் (99-41).

---

1. வண்ணமாலைக் கை பரப்பி உலகை வளைத்த இருள் எல்லாம்
உண்ண எண்ணி தன் மதியத்து உதயத்து எழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசை அனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநல்நீர்ப்
பண்ணை வெண்ணெய்ச் சடையன் தன் புகழ் போல் எங்கும் பரந்துளதால் (கம்ப-552)
தண்ணெனும் கானம் நீங்கி, தாங்க அருந்தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து ஆன சடையன் வெண்ணெய்
அண்ணல் தன் சொல்லே அன்ன படைக்கலம் அருளினானே (கம்ப-394)
விஞ்சையில் தாங்கினான்-சடையன் வெண்ணெயில்
தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மைபோல் (கம்ப-6682)
2. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 29

## 372. வெள்ளறை

திருமால் பெருமை கொண்ட ஊர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளது. திருவெள்ளறை என்று சுட்டப்படும் தலம். வெண்மையான பாறைகளாகிய ஒரு சிறு குன்றின் மேல் பெருமாள் எழுந்தருளியிருக்கின்றார் என்ற கருத்தை நோக்க[1] இவ்வூர்ப்பெயரின் காரணமும் விளக்கம் பெறுகின்றது. வெண்மையான பாறை வெள்ளறை என்று சுட்டப்பட்டது. திரு மால் கோயில் சிறப்பு 'திரு'வைத் தந்தது. இந்நிலையில் திரு வெள்ளறையாயிற்று.

'மன்றில் மாம்பொழில் நுழைதந்து மல்லிகை மௌவலின்
போதலர்த்தி
தென்றல் மாமணம் கமழ் தர வருதிரு வெள்ளறை'
(நாலா-1368)

'உயர் கொள் மாதவிப் போதொடு லாவிய
மாருதம் வீதியின் வாய்
திசையெல்லாம் கமழும் பொழில் சூழ் திரு வெள்ளறை
( ,, 1369)

என, திருமங்கையாழ்வார் இதன் செழிப்பை யுணர்த்துகிறார்.

## 373. வெள்ளியங்குடி

'திருவிடை மருதூருக்கு வடக்கே ஆறு மைலில் திருவெள்ளி யங்குடி என்ற விஷ்ணு ஸ்தலம் இருக்கிறது என்ற கருத்து[2], இது தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் என்பதை உணர்த்துகிறது. 'இறைவனைப் பூசித்து இழந்த கண்ணைப் பெற்றதனால் திரு வெள்ளியங்குடி என்று தலம் பெயர் பெற்றது' என்ற கருத்து.[3] எவ்வாறு பொருந்துகிறது என்பது புரியவில்லை. குடி என்பது குடியிருப்பையுணர்த்துகிறது. வெள்ளி என்பது சுக்கிரனைக் குறித்து அமையினும் வெள்ளி அம்குடி என்று சொல் நிலையில் பொருத்தமுறுகிறதே தவிர, இது அடிப்படையாக இருக்குமா? என்பது கேள்விக்குரியது.

---

1. தென்னாட்டுக் கோயில்கள்—பக்-106
2. தென்னாட்டுக் கோயில்கள்-பக். 33
3 ,, ,,

இவ்விடம் மிகவும் செழிப்பு மிக்கது என்பதை,

'காய்த்த நீள் கமுகும் கதலியும் தெங்கும்
எங்கும் ஆம் பொழில் களினடுவே
வாய்த்த நீர்பாயும் மண்ணியின் தென்பால்
திருவெள்ளியங் குடியதுவே' (நாலா 1338)

'துறை துறைதோறும் பொன் மணிசிதறும்
தொகுதிரை மண்ணியின் தென்பால்
செறிமணி மாடக் கொதிக்கதிரணவும்
திருவெள்ளி யங்குடி அதுவே' (நாலா 1341)

போன்ற திருமங்கை ஆழ்வாரின் பாடல்கள் தெளிவாக்கு கின்றன. மண்ணியாற்றின் கரையில் உள்ள இடம் இது என்பதும் தெரியவருகிறது. மேலும் இவரது பாடல் ஒன்று,

'படமிறப் பாய்ந்து பன்மணி சிந்தப்
பல்நடம் பயின்றவன் கோயில்,
படவர வல்குல் பாவை நல்லார்கள்
பயிற்றிய நாடகத் தொலிபோய்,
அடைபுடை தழுவி அண்டம் நின்றதிரும்
திருவெள்ளியங்குடியதுவே' (நாலா–1340)

என உரைக்கிறது. எனவே இங்குக் கலைகள் சிறப்புற்றிருந்தன என்பதை உணர இயலுகிறது. இதனைக் கொண்டு நோக்க, வெஃ + இயம் + குடி என இப்பெயர் அமைந்திருக்குமா எனத் தோன்றுகிறது. மணற்பாங்கான தரையையுடையதும், இயங்கள் ஒலிக்கக்கூடியதுமான குடியிருப்புப் பகுதி, திருமால் கோயில் கொண்டமையால் திருவெள்ளியங்குடி என அழைக்கப் பட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

374. வெற்றியூர்

திருநாவுக்கரசர் சுட்டும் ஊர் இது.

பற்றற்றர் சேர்பழம் பதியைப் பாசூர் நிலாய பவளத்தைச்
சிற்றம்பலத்தெந் திகழ் கனியைத் தீண்டற்குரிய
திருவுருவை
வெற்றியூரில் விரிசுடரை விமலர் கோனைத் திரை சூழ்ந்த
ஒற்றியூரெ முத்தமனை யுள்ளத்துள்ளே வைத்தேனே (15-1)

எனப் பாடும் தன்மை வெற்றியூரில் உள்ள சிவன் பெருமையைச் சுட்டுகிறது.

## 375. வேங்கடம்

இன்று திருப்பதி என்ற வைணவத்தலச் சிறப்பால் பெருமை யுடையது. தமிழ் நாட்டின் எல்லையாக அமைந்திருந்தது வேங்கட மலை. வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறுநல்லுல கம் (தொல் எழுத்து சிறப்பு-3). சங்க இலக்கியத்தில் மிகச் சிறந்த மலையாக இருந்ததையும், புல்லி என்ற அரசனின் ஆட்சி இங்கு நடைபெற்றதையும் (அகம் 61, 85) காண்கின்றோம். சிலப்பதி காரத்தில் திருமாலின் சிறப்பு பாடப்படும் நிலையில் இம்மலை யுடன், இங்குள்ள திருமால் கோயிலும் பழம் சிறப்புடையவை என்பது விளங்குகிறது. இங்கு மக்கள் குடியிருப்பும் இருந்ததை என்பதை

'மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும்' (அகம்-61-10-13)
'கல்லா இளையர் பெருமகன் புல்லி
வியன் தலை நல் நாட்டு வேங்கடம்' ( ,, 85-8-10)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. எனவே சங்க இலக்கியம் திரு மால் கோயில் பற்றிச் சுட்டாத நிலையில் முதலில் மக்கள் வாழ்ந்து இருப்பினும், பின்னர் தான் அவர்கள் திருமால் கோயிலை உருவாக்கியிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

சிலப்பதிகாரத்தில்,

வீங்கு நீர் அருவி வேங்கடமென்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடை நிலைத்தானத்து
மின்னுக் கோடியுடுத்து விளங்கு விற்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போல
பகையணங்காழியும் பால் வெண் சங்கமும்
தகை பெறு தாமரைக் கையினேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும் (காடு-41-51)

என்ற பாடலடிகளில் இங்குள்ள இறைச் சிறப்பு காட்டப்படு கிறது.

திருமாலின் சிறப்பு நாளுக்கு நாள் பெருகியது என்பதைப் பின்னர் தொண்டரடிப் பொடியாழ்வாரைத் தவிர, மற்ற ஒன்பது

ஆழ்வார்களாலும் ஆண்டாளாலும் பாடல் பெற்ற தலமாக இது திகழ்ந்தமை காட்டுகிறது.

இம்மலையின் பெயரை நோக்க வேம்கடம் என்ற நிலையில் அமைந்ததோ எனத் தோன்றுகிறது. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் என்ற நூலில் நா. சுப்புரெட்டியாரும் இப்பெயர் பற்றி இயம்புகின்றார். 'வேங்கடம்' என்ற பெயர் இந்த ஊரையும் குறித்து அன்று அமைந்த நிலை மறைந்து, இன்று 'திருமால்பதி யால்' செல்வாக்கு பெற்று, 'திருப்பதி' என்பதே வழக்குக்கு வந்து விட்டதைக் காண்கின்றோம்.

## 376. வேட்களம்

திருவேட்களம் என்ற பெயரில், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஊர். சிதம்பரத்திற்குப் பக்கத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை ஒட்டியுள்ளது[1] என்ற எண்ணம் அமைகிறது. 'வேட்களம்' என்ற நிலையில் பார்க்கும்போது, வேட்டையாடும் நிலை வாய்ந்த களம் என்ற பொருள் அமைகிறது. எனவே வேடர்கள் வாழ்ந்த பகுதியாக இருந்திருக்கலாம். சம்பந்தர், அப்பர் இத்தலத்து இறைவனைப் பாடிப் பரவியுள்ளனர்.

'திரைபுல்கு தெண்கடல் தண் கழியோதம்
தேனலங்கானலில் வண்டு பண்செய்ய
விரைபுல்கு பைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன்னகராரே' திருஞான 39-4

வேட்களம் பின்னர் சிவன் கோயிலால் பெருமைபெற, 'இறைவன் வேடனாக வந்து அர்ச்சுனனுக்கு அருள் வழங்கினார் என்பது வரலாறு. இதனை, 'வேடனார் உறைவேட்களம்' என்ற அப்பர் வாக்கு விளக்கும்' என்ற புராணக் கதையும் பெருமை பெறுகிறது.[2]

## 377. வேட்டக்குடி

வேட்டக்குடி என, காரைக்காலுக்கு அருகில் அமைந்துள்ளது இவ்வூர். அர்ச்சுனன் தவம் செய்யுங்கால் இறைவன் வேடவடிவத்

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-187
2. திருஞான சம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—பக்-53

தில் வெளிப்பட்ட தலம் என்பது இவ்விடம் பற்றிய எண்ணம்.[1] வேட்களம் போன்றே இதற்கும் அர்ச்சுனனைத் தொடர்பு படுத்துகின்ற நிலை விளங்குகிறது எனினும் வேட்டம் குடி வேட்டையாடும் மக்கள் வாழ்ந்த குடியிருப்புப் பகுதி (வேட்டை-வேட்டையாடுதல்) என்பதே பொருத்தமாக அமைகிறது. சம் பந்தர் இங்குள்ள சிவனைப் புகழ்கின்றார்.

> வண்டிரைக்கும் மலர்க் கொன்றை விரிசடை மேல்
> வரியரவம்
> கண்டிரைக்கும் பிறைச் சென்னிக் காபாலி கழல்கள்
> தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங் கொளிநீர்ச்
> சுடர்ப்பவளம்
> தெண்டிரைக் கண் கொணர்ந்தெறியும் திருவேட்டக்குடி
> (324-1)

எனப்பாடும்போது, இது கடற்கரைத் தலமாக இருக்கும் என்பது தெரிகிறது. மேலும்,

> பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின் றெங்கும்
> காசினியிற் கொணர்ந்தட்டும் கைதல் சூழ் கழிக் கானல்
> போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகார்
> தீ யெரிகை மகிழ்ந்தாரும் திருவேட்டக்குடி (324-2)

எனும் பாடலில், இக்கருத்துடன், இவ்வேட்டக்குடி வேடர்கள் வாழ்ந்த குடியிருப்பாக இருந்திருக்கலாம் என்பது, காட்டுப்பகுதி என்ற எண்ணத்தாலும் உறுதிப்படுகிறது.

### 378. வேதிகுடி

திருவேதிகுடி எனத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. குடமுருட்டியாறு அருகில் உள்ள ஊர் இது. வேதங்கள் வழி பட்ட தலம்[2] என்ற கருத்தைவிட, வேதியர்களின் குடியிருப்புப் பகுதி என்பது ஏற்புடையது. சிறந்த சீர்த் திருவேதி குடி என இதனைச் சுட்டுவார் சேக்கிழார் (34-356).

---

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்—பக்-302
2. ,, ,, -பக். 288

'நீறு வரியாடரவொடாமை மன வென்பு நிரை
பூண்பவரிடபம்
ஏறு வரியாவரு மிறைஞ்சு கழல் ஆதியர் இருந்த இடமாம்
தாறுவிரி பூகமலி வாழை விரை நாறவிணை வாளை மடுவில்
வேறு பிரியாது விளையாட வளமாரும் வயல் வேதி குடியே'

என்கின்றார் சம்பந்தர் (336-1). திருநாவுக்கரசர்,

செய்யினினீல மணங்கமழும் திருவேதி குடி (90-1)
செய்த்தலை வாளைகள் பாய்ந்துகளும் திருவேதிகுடி (90-2)

என இதன் இயற்கை வளம் இயம்புகின்றார்.

## 379 வேலம்புத்தூர்

மாணிக்க வாசகர் சுட்டும் ஊர் இது.

வேலம்புத்தூர் விட்டேறருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்
(திரு-கீர்த்தி29-30)

என இதனை யுணர்த்துகின்றார். வேலம் மரங்கள் மிகுந்த புதிய குடியிருப்புப் பகுதி என்ற நிலை இதற்கு அடிப்படையாக லாம்.

## 380. வேள்விக்குடி

வேள்விக்குடி என்ற பெயரில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. இது திருவேள்விக் குடி என்றும் அன்று அழைக்கப் பட்டு இருந்தது என்பது பெரியபுராணம் சுட்டும் நிலை(35-121-3). அரசகுமாரன் ஒருவனுக்கு மணம்புரிய நிச்சயித்திருந்த பெண்ணை மணம் நிறைவேறு முன் அவன் தாய் தந்தையர் இறக்கவே, அவள் சுற்றத்தார் கொடாது மறுத்தனர். அரசகுமாரன் சிவனை நோக்கி, தவம் செய்து வேண்டினான். இறைவன் அப்பெண்ணை ஒரு பூதத்தால் எடுத்துக் கொண்டு வந்து அவனுக்குத் திருமண வேள்வி செய்தருளினார். ஆதலின் திருவேள்விக் குடி என்று பெயர் பெற்றது என்பர்.[1] திருநாவுக்கரசர்,

'வேள்விக் குடியெம் வேதியனே'(15-10) எனப்பாட, சுந்தரர்
மூப்பதுமில்லை பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை

1. சேக்கிழார் வழியில் சிவத்தலங்கள்-பக். 70

சேர்ப்பது காட்டகத்தூரினுமாகச் சிந்திக்கினல்லால்
காப்பது வேள்விக் குடிதண்டுருத்தியெங் கோனரைமேல்
ஆர்ப்பது நாகமறிந்தோமேனா மிலர்க் காட்படேமே (18-1)

என்று புகழ்கின்றார். வேள்வி நடந்த இடமாக இருக்கலாம் அல்லது வேள்வி செய்யும் வேதியர்கள் வாழுமிடமாக இருந்திருக்கலாம் என்பது இப்பெயருக்குப் பொருத்தமாக இருக்கலாம்.

### 381. வேற்காடு

திருவேற்காடு என, செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கும் ஊர் இது. அன்று சிவன் கோயில் சிறப்பு பெற்றதாக அமைய, இன்று கருமாரியம்மன் கோயில் காரணமாகப் பெரும் புகழுடன் திகழும் ஊர். 'தலமரம் வேலமரம்' என அறிகின்றபோது வேல மரங்களின் மிகுதி காரணமாக இப்பெயர் அமைந்துள்ளது என்பது விளக்கமாகத் தெரிகிறது. காடுவெட்டியாறு என்ற பழைய பாலாற்றங்கரையில் உள்ளது இத்தலம்.

பன்மணிகள் பொன் வரன்றி அகிலும் சந்தும்
பொருதலைக்கும் பாலிவட கரையில் நீடு
சென்னி மதி அணிந்தவர், திருவேற்காடு சென்று
அணைந்தார் திருஞான முண்ட செல்வர் (பெரிய—34-1029)

என்கின்ற சேக்கிழார் பாடலும் பாலியாற்றங்கரையில் இதன் இருப்பிடத்தைச் சுட்டுகிறது. 'விண்டமாம் பொழில் சூழ் திரு வேற்காடு' என்கின்ற சம்பந்தர் (58-11) தண்டலை சூழ் திருவேற்காட்டூர் (நம்பி-திருத்-38) என்ற பாடலடிகள் வேற்காட்டூரின் செழிப்பைக் காட்டுகின்றன.

### 382. வைகல்

தஞ்சாவூரில் வைகல் என்ற பெயரில் இன்றும் அமைந்துள்ள இடம். இங்குள்ள மாடக்கோயில் சிறப்பு பெற்றது. சம்பந்தர் இங்குள்ள சிவனைப் பாடியுள்ளார். கோச்செங்கட் சோழனால் கட்டப்பட்ட மாடக்கோயில் இது.

கொம்பியல் சோதை முன்னஞ்சக் குஞ்சரத்
தும்பியதுரி செய்த துங்கர் தங்கிடம்
வம்பியர் சோலை சூழ் வைகன் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்கணான் செய்கோயிலே (276-4)

என்று சம்பந்தர் இதனைக் காட்டுகின்றார். மேலும்,

விட மடை மிடற்றினர் வேதநாவினர்
மடமொழி மலை மகளோடும் வைகிடம்
மடவன நடைபயில் வைகன்மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக் கோயிலே (276-5)

என்றியம்பும் தன்மையில் வைகல் மாநகர்க்குக் குடதிசையில் இருந்தது மாடக்கோயில் என்ற குறிப்பினைக் காண்கின்றோம். எனவே இதனை நோக்க வைகல் என்பது ஒரு சிறந்த நகராக விளங்கியிருக்கிறது என்பது தெளிவு தங்குதற்குரிய சிறந்த குடியிருப்புப் பகுதி அல்லது மக்கள் தங்கிய இடம் என்ற நிலையில் வைகல் என்ற பொருள் பொருத்தமுறுகிறது.

## 383. வைகாவூர்

திருவைகாவூர் என்று, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஊர் இது. கொள்ளிடநதிக் கரைத் தலம் இது.

'தாழையின் நீர் முதிய காய் கமுகின் வீழ நிரைதாறு சிதறி
வாழை யுதிர் வீழ்கனிகள் ஊறி வயல் சேறு செயும்
வைகாவிலே (329-1)

என்பது சம்பந்தர் சித்திரிக்கும் நிலை. வைகு என்பது தங்குதல் என்ற பொருளைத் தர, கா, சோலையைக் குறிக்கும் நிலை இவற்றை நோக்க, சோலைகள் சூழ்ந்த தங்குமிடம் என்ற பொருளில் இப்பெயர் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் எனத் தோன்றுகிறது.

## 384. வைகுந்தம்

'புளிங்குடி கிடந்து வரகுண மங்கை
இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகங் குழியாதே
என்னையாள்வாய் எனக்கருளி' (நாலா-2978) என்றும்
'திங்கள் சேர் மாடத் திருப்புளிங்குடியாய்
திரு வைகுந்தத்துள்ளாய்' ( ,, 2982)

என்றும் நம்மாழ்வாரால் பாடல் பெற்ற தலம் இது. அமர்ந்திருக்கும் நிலையில்திருமால் கோயில் கொண்ட ஊர், இன்று ஸ்ரீவைகுண்டம்என்று வழங்கப் பெறுகிறது. வைகுந்தம் என்ற பெயர் முதலில் திருமால் கோயில் பெயராக இருந்து, பின்னர், ஊர்ப் பெயராகவும் சுட்டப்பட்டது என்பதைத் தெளிவாகத் தருகிறது

## 385. வைப்பூர்

வளம் பொழில் சூழ் வைப்பூர் (பெரிய-34-480) என்ற நிலையில் வைப்பூர் என்ற ஊர்பற்றி அறிய இயலுகிறது. பிறஎண்ணங்கள் தெளிவில்லை.

# ஊர்ப்பெயர் அமைப்பு முறைகளும் தோற்றக் காரணிகளும்

பொதுக்கூறு, சிறப்புக் கூறு அமைந்தும், இவ்விரண்டும் அமை யாது ஒரே சொல்லாக அமைந்தும் விளங்குவன ஊர்ப்பெயர்கள். பொதுக்கூறு குறிப்பிட்ட இடத்தினை யுணர்த்த, சிறப்புக் கூறு மேலும் அதனை விளக்கி நிற்கிறது. பொதுக் கூறுகளை நோக்க இவை பெரும்பான்மையும் மரபாகப் பயில, காலந்தோறும் புதிதாக இணைவனவும் உண்டு. சிறப்புக் கூறுகளும் இயற்கை யமைப்பு. தாவரம், விலங்கு போன்ற சில நிலையில் மரபு பயிற்சி கொள்ளினும், சில புதிய கூறுகளில் மாற்றம் காட்டுவது காலச் சூழலில் இயல்பாக அமையும் நிலை.

பொதுக்கூறு: கிடைத்துள்ள இடைக்கால ஊர்ப்பெயர்களில் 55 பொதுக்கூறுகள் காணப்படுகின்றன[1] இவை அனைத்திலும் ஊர் தொடர்ந்து செல்வாக்கு பெறுகிறது. சங்க காலத்திலும் ஊரே மிகுதியாகப் பயிலப்பட்டு வந்துள்ளது என்பதைச் சங்க இலக்கிய ஊர்ப்பெயர்கள் ஆய்வு தருகிறது. இவண் 120 பெயர் களில் ஊர் இடம் பெறுகிறது. பொதுவாகத் தமிழகப் பெயர்கள் அனைத்திலும் இதுவே மிகுதியாக இருக்கலாம் என்ற எண்ணம் பிற ஆய்வுகள் பலவும்தரும் எண்ணம். அடுத்த நிலையில் குடி 29 இடங்களில் அமைந்து பெரும்பான்மையிடம் பெறுகிறது. பிற பொதுக்கூறுகளாக அமைவன— துறை, மங்கலம், பள்ளி, சுரம், காடு, பாடி, வாயில், குன்றம், புரம், ஆறு, நகர், மலை, இல், இலி, கரை, கா, களம், தானம், எயில், குழி, சேரி, பட்டினம், பதி, வனம், அகம், அணை, அறல், குன்று, கூடல், கோட்டம், கோடு, கோயில், சுழி, தாள், திட்டை நகரம், நியமம், நிலம், பாக்கம், பாலை, பூளை, பூண்டி, பொழில், பேர், மாகாளம், மிழலை, முட்டம், முடி, விளை, வாய், வேலி, ஆச்சிராமம், பாழி[2]

---

1. சங்க இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்—பக்-52
   43 விதமான பொதுக்கூறுகள் சங்க இலக்கியத்தில் இருப் பதாகச் சுட்டுவர் ஆர். ஆள வந்தார்.
2. மிகுதி நிலையில் இவை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

ஊர்

120 பெயர்களில் அமையும் இப்பொதுக் கூறு தனிச்சிறப்புடையது. ஊர் என்று எல்லா குடியிருப்புப் பகுதிகளையும் சுட்டும் பெயராக விளங்கும் நிலையே இதன் பழமை, செல்வாக்கு, எளிமை ஆகியவற்றை யுணர்த்தவல்லது. தமிழரின் பழைய வாழ்வியல் நிலையையும் இப்பெயர் சுட்டுமோ என்ற எண்ணம் இவண் அமைகிறது. மனிதன் வாழ்வின் தொடக்கம் ஒரே இடத்தில் நிலைத்து இருந்தது அன்று. நாடோடிகளாகத் திரிந்து பல இடங்கட்கும் சென்றது தான். தங்கட்கு ஏற்ப வாழ்க்கைச் சூழல் வசதி ஆகியவற்றைக் கண்டபோது ஒரு குழுவாக ஒரு இடத்தில் குறிப்பாக நதிகளின் அருகில் தங்கள் குடியிருப்பினைத் தொடங்கியிருப்பான் என்ற நிலையில் ஊர்ந்து ஊர்ந்து சென்று, ஒரு இடத்தில் குடியிருப்பினை ஏற்படுத்திக் கொண்ட நிலையில் 'ஊர்' என்ற சொல் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் கூறும் எண்ணம் இவண் ஏற்புடையதாகிறது.[1] சிற்றூர், பேரூர், மூதூர், புத்தூர், நல்லூர் போன்றனவற்றிலும் ஊர்களின் சிறப்பும், பழைமையும், அளவும் தெரியவருகின்றன. இன்றுவரை சிறப்புடன் திகழ்ந்து வரும் 'ஊர்' என்ற பொதுக் கூறு அமைந்த, இடைக்கால இலக்கிய ஊர்ப்பெயர்களாக அமைவன. 1. அரிசிற்கரைப்புத்தூர் 2. அவளிவணல்லூர் 3. அழுந்தூர் 4 அளப்பூர் 5. அரகண்ட நல்லூர் 6. அன்னியூர் 7. ஆக்கூர் 8. ஆதனூர் 9. ஆப்பனூர் 10. ஆமாத்தூர் 11. ஆரூர் 12. இடைமருதூர் 13. இந்தளூர் 14. இலம்பையங்கோட்டூர் 15. உடுப்பூர் 16. ஊற்றத்தூர் 17 எயினனூர் 18. எருக்கத்தம்புலியூர் 19. எவ்வுளூர் 20. ஏமப்பேறூர் 21. ஒற்றியூர் 22. ஒத்தூர் 23. ஓமாம்புலியூர் 24 கச்சூர் 25. கஞ்சனூர் 26. கஞ்சாறூர் 27. கடவூர் 28. கடுவாய்க் கரைப்புத்தூர் 29. கண்டியூர் 30. கரம்பனூர் 31. கருகாவூர் 32. கருப்பறியலூர் 33. கலயநல்லூர் 34. கலிகாமூர் 35. கன்றாப்பூர் 36 காட்டூர் 37. காரூர் 38. கானாட்டு முள்ளூர் 39. கானூர் 40. குண்டையூர் 41 குருகாவூர் 42. குருகூர் 43. குறும்பொறையூர் 44. குன்றியூர் 45. கூடலூர் 46. கூடலையாற்றூர் 47. கூரூர் 48. கொட்டையூர் 49. கொடிமாடச் செங்குன்றூர். 50. கொடும்பாளூர் 51. கொள்ளம்பூதூர் 52. கோட்டியூர் 53. கோட்டூர் 54. கோவலூர் 55. சண்டியூர் 56. சாந்தம்புத்தூர் 57. செங்குன்றூர் 58. சேய்ஞலூர் 59. சேலூர் 60. சேற்றூர் 61. தக்க

---

1. The Place Names in early Tamil Literature–pa. 2.

ளூர் 62. துவையூர் 63. தலையூர் 64. திங்களூர் 65. தஞ்சாஊர் 66. துறையூர் 67. தெங்கூர் 68. தேஊர் 69. நல்லாற்றூர் 70. நல்லூர் 71. நறையூர் 72. நாங்கூர் 73. நாவலூர் 74. நாரையூர் 75. நாலூர் 76. நின்றஊர் 77. நின்றியூர் 78. நீடூர் 79. பந்தணைநல்லூர் 80. பயற்றூர் 81. பழுவூர் 82. புறவார் பனங்காட்டூர் 83. வன்பார்த்தான் பனங்காட்டூர் 84. பனையூர் 85. பறியலூர் 86. பாசூர் 87. பாதிரிப்புலியூர் 88. புகலூர் 89. புத்தூர் 90. புலியூர் 91. புள்ளிருக்குவேளூர் 92. புன்கூர் 93 பூவனூர் 94 பூழியூர் 95. பெரும்புலியூர் 96. பெரும்வேளூர் 97. பேராவூர் 98 பேரூர் 99. மணலூர் 100. மாட்டூர் 101. மாத்தூர் 102. மீயச்சூர் 103 மூவலூர் 104. மோகூர் 105. வடுகூர் 106. வண்வண்டூர் 107. வரிஞ்சையூர் 108. வழுவூர் 109. வன்னியூர் 110. வாதவூர் 111. வாய்மூர் 112. வாழ்கொளிபுத்தூர் 113. வான்மியூர் 114. வியலூர் 115. வில்லிபுத்தூர் 116. வெண்ணெய்நல்லூர் 117. வெற்றியூர் 118. வேலம்புத்தூர் 119. வைகாவூர் 120. வைப்பூர்.

குடி

ஊருக்கு அடுத்தாற் போன்று 'குடி' என்ற பொதுக் கூற்றின் மிகுதியைக் காண (29 இடங்கள்) ஊர்ப்பெயர்கள் வரலாற்றைச் சுட்டுவது போன்றதொரு உணர்வினைப் பெறுகின்றோம். ஊர்ந்துசென்று பல பகுதிகளிலும் குடியிருப்பினை அமைத்துக் கொண்ட நிலையை இவண் காண்கின்றோம். 'குடி' என்பது குடியிருப்புப் பகுதியைச் சுட்டும் நிலையில் அமைகிறது. இப்பெயர்களாக அமைவன. 1. இளையான் குடி 2. கடையக்குடி 3. கண்ணங்குடி 4. கருக்குடி 5. கருந்திட்டைக்குடி 6. கற்குடி 7. குருந்தங்குடி 9. கோத்திட்டைக்குடி 10. சாத்தங்குடி 11. சிறுகுடி 12. செங்காட்டாங்குடி 13. திருந்து தேவன் குடி 14. நல்லக்குடி 16. நீலக்குடி 17 புளிங்குடி 18. புள்ளம் பூதங்குடி 19. புள்குடி 20 மங்கலக்குடி 21. மணமேற்குடி 22 மாகுடி 23. மாணிகுடி 24. விடைவாய்க்குடி 25. விற்குடி 26. வெள்ளியங்குடி 27. வேட்டக்குடி 28. வேதிகுடி 29. வேள்விக்குடி.

துறை

12 பெயர்களில் துறை என்ற கூறு அமைகிறது. நீர்த்துறைகளில் அமைந்த குடியிருப்புப் பகுதிகளாக இவை அமைகின்றன. 1. திருவாவடுதுறை 2. கடம்பந்துறை 3. குரங்காடுதுறை 4. சோற்றுத்துறை 5. தவத்துறை 6. பராய்துறை 7. பாலைத்

துறை 8. பாற்றுறை 9. பேணு பெருந்துறை 10. மயிலாடு துறை 11. மாந்துறை 12. வெண்டுறை.

## பள்ளி

சங்க காலம் தொட்டே அமையும் ஊர்ப்பெயர்க் கூறுகளுள் ஒன்று. 1. அகத்தியான் பள்ளி 2. அரன்பள்ளி 3. இடைப் பள்ளி 4. காட்டுப்பள்ளி, 5. சக்கரப்பள்ளி 6. சிராப்பள்ளி 7. செம்பொன் பள்ளி 8. நனிபள்ளி 9. மகேந்திரப்பள்ளி.

சமணர் வரலாற்றொடு இதனைத் தொடர்புபடுத்தும் தன்மை மரபாக அமைகிறது.

## மங்கலம்

அன்றைய நிலையில் மங்கை என்று வழங்கப்பட்ட பொதுக் கூறுகள் அனைத்தையும் 'மங்கலம் என்பதன் திரிபாகக் கொள்ள லாம் எனத் தோன்றுகிறது. 1. அதியரைய மங்கை 2. உத்தர கோச மங்கை 3. கணமங்கலம் 4. கொடி மங்கலம் 5. சங்க மங்கை 6. சாத்தமங்கை 7. சிரீவரமங்கை 8. புள்ளமங்கை 9. பெரு மங்கலம் 10. வரகுணமங்கை 11. விசய மங்கை.

## சுரம்

காடாக இருந்த இடம், குடியிருப்புப் பகுதியாக மாற்றப் பட்ட பின்னர், அதன் முன்னைய நிலையில் அழைக்கப்படு வது ஊர்ப்பெயர் வழக்கில் இயல்பாக அமைகிறது. சுரம் போன்று காடு (7) வனம் (2) போன்றவற்றையும் இவண் சுட்ட லாம். மேலும் 'சுரம்' என்ற பொதுக் கூறினை நோக்க, அனைத் தும் இறைவன் கோயில் எழுப்பிய பெயர், பின்பு அந்த பகுதியி னைக் குறிக்க எழுந்த பெயராக அமைகின்ற நிலையை நாம் காண்கின்றோம். 1. அக்கீச்சுரம் 2. அகத்தீச்சுரம் 3. அத்தீச் சுரம் 4. அயனீச்சுரம் 5. இடைச்சுரம் 6. இராமேச்சுரம் 7. நாகேச்சுரம் 8. முண்டீச்சுரம். அடுத்து காடு என நோக்க, 1. ஆலங்காடு 2. காரைக்காடு 3. தலைச் சங்காடு 4. தலை யாலங்காடு 5. மறைக்காடு 6. முதுகாடு 7. வெண்காடு 8. வேற்காடு என்பனவும் வனம் என்று காணின் 1. இடும்பவனம் 2. பூவனம் (வனம்) என்பனவும் அமைகின்றன.

**பாடி**

முல்லை நிலம் சார்ந்த பகுதி 'பாடி'.

1. ஆப்பாடி 2. ஆய்ப்பாடி 3. எதிர்கொள்பாடி 4 நந்நம் பாடி 5. மழபாடி 6. மாறன்பாடி என்ற ஊர்ப்பெயர்கள் இவண் அமைகின்றன.

**வாயில்**

வாயிலாக இருந்த இடம் 'வாயில்' என்ற ஊர்ப்பெயர்க் கூறாக அமைந்துள்ளதாகக கருதலாம். 1. குடவாயில் 2. நெடு வாயில் 3. நெய்தல் வாயில் 4. நெல்வாயில் 5. புன்னை வாயில் 6. முல்லை வாயில்.

**புரம்**

1. சிவபுரம் 2. சோபுரம் 3. தருமபுரம் 4. பாம்புரம் 5. வலம்புரம் என்பன புரம் பொதுக் கூறாக அமைந்த பெயர்கள். குடியிருப்புப் பகுதியைக் குறிக்கும் பெயரில் இதனைச் சுட்டுகின் றார் கி. நாச்சிமுத்து[1].

**குன்றம்**

1. கழுக்குன்றம் 2. கொடுங்குன்றம் 3. நற்குன்றம் 4 நெற்குன்றம் 5. முதுகுன்றம் தவிர, மலை, குன்று, கோடு போன்றனவற்றையும் இங்கு இணைத்துப் பார்க்கலாம். பரன் குன்றுடன், 'மலை'யைப் பொதுக் கூறாகக் கொண்டு 1. அண்ணா மலை 2. ஈங்கோய்மலை 3. எறும்பியூர் மலை 4. நீர்மலை என் பனவும், வித்துவக்கோடும் இவண் காணக்கூடுகின்றன.

**களம்**

இடம் என்ற பொருளிலும் போர்க்களம் என்ற பொருளி லும், தோட்டம் என்ற பொருளிலும் அமையும் இச்சொல், நான்கு ஊர்ப்பெயர்களில் அமைகின்றது. நெடுங்களம், மூழிக் களம், வஞ்சைக்களம், வேட்களம் என்பன அவை,

**நகர்**

1. தினைநகர், 2. பாம்பணி மாநகர், 3. பேர்நகர், 4. விள நகர் என நான்குப் பெயர்கள் நகர் முடிவு பெறுகின்றன.

---

1. தமிழ் இடப்பெயராய்வு–பக். 134

## ஆறு

ஆறுகளின் அருகில் உள்ள குடியிருப்புப் பகுதிகளைச் சுட்டும் நிலையில் இவை அமைகின்றன. ஐயாறு, கோட்டாறு, தெள்ளாறு, நள்ளாறு என்ற ஆற்றுப்பெயர்கள் ஊர்ப்பெயர்களாக அமைந்துள்ளன. அழகு, வளைவு, தெளிவு (நீர்) நடு என்ற நிலையில் ஆற்றின் தன்மைகளை இப்பெயர்கள் புலப்படுத்துகின்றன. ஆறோடு, அறல், கூடல், சுழி போன்றவற்றையும் இணைத்து நோக்கலாம். மணல் 'அறலாக'க் காணப்படும் தன்மையும் (மாகறல்), பள்ளியின் முக்கூடலில் கூடலையும், சுழியினைத் திருவலஞ்சுழியிலும் காண இயலுகின்றது. கரை என்பதையும் இவண் இணைக்கலாம் (அக்கரை, காட்கரை, காரிக்கரை).

## கா

சோலை என்ற பொருளில் அமையும் சொல், சோலைகளில் அமைந்த, அல்லது சோலை சூழ்ந்த குடியிருப்பினை உணர்த்துவன. ஆனைக்கா, குரங்குக்கா, கோடிகா, கோலக்கா, நெல்லிக்கா என்ற பெயர்கள் அமைகின்றன. தவிர, ஆலம்பொழிலும் இவண் அமைகிறது.

## தானம்

இடம் என்பது பொருள். உசாத்தானம் கடித்தானம், நெய்த்தானம் என்ற ஊர்ப்பெயர்கள் அமைகின்றன.

## இலி

அரசிலி, கருவிலி, கோளிலி என அமையும் நிலையில், இருப்பவன் என்ற பொருளில், இறையிருப்பிடத்தைக் குறித்து எழுந்த பொதுக்கூறாக இது அமைகிறது.

## பட்டினம்

நெய்தல் நிலத்திற்கு அருகில் உள்ள குடியிருப்புகளைக் குறிப்பது பட்டினம் என்ற சொல். காவிரிப்பூம்பட்டினம் தொன்று தொட்டே புகழ் பெற்ற இடம். கடற்கரைச் சார்பும் இவண் சுட்டத்தக்கது.

**இல்**

அன்பில், கள்ளில் என்ற பெயர்களில் அமையும் பொதுக் கூறு, 'இல்' என இடம் குறித்து எழுந்தது போல் தோன்றுகிறது.

**பதி**

இடம் என்ற பொருளில் அமைவது. திலதைப்பதி.

**குழி**

குழிந்த பகுதியில் உள்ள குடியிருப்பாக இருக்கலாம். புட்குழி, மாணிகுழி என்ற பெயர்கள் இத்தகையன.

**எயில்**

மதில்களைக் கொண்ட நிலையில், இப்பகுதிகள் 'எயில்' என்று சுட்டப்பட்டு இருக்கக்கூடும்.

காறாயில், பேரெயில் என்பன இத்தகையன.

**சேரி**

குடியிருப்புப் பகுதியைக் குறித்து எழுந்த பெயர், இதன் சிறப்பு இழந்து நிற்கிறது. மணஞ்சேரி, தெளிச்சேரி-

**நிலம்**

இடம் என்ற பொருளில் அமைவது. நன்னிலம்.

**பூண்டி**

திருமுருகன் பூண்டியில் பூண்டி என்ற பொதுக்கூறு அமைகிறது.

**வேலி**

காவலைக் குறிப்பிடுவது. வேலியாக நெல்லையுடையது திருநெல்வேலி.

**பூளை**

தாவரப் பெயரால் அமைந்தது. பூளைச் செடியால் பெயர் அமைந்த ஊர் இரும்பூளை. இரும்புதலையும் இத்துடன் இணைக்கலாம்.

முடி

கடைமுடி என்ற பெயரில் அமையும் இது. கோடி இடம் என்ற பொருள் தருவது. பாண்டிக் கொடுமுடியும் இப்பொதுக் கூறு உடையது.

மிழலை

மிழலைக் கூற்றம்பற்றிய உணர்வு சங்க இலக்கியத்தில் காணப்படும் ஒன்று. எனினும் இதன் பொருள் விளங்கவில்லை இங்கு அமையும் ஊர் வீழி மிழலை.

நியமம்

பரிதி நியமம் என்ற ஊர்ப்பெயரில் அமையும் இதனை நோக்க நியமம் கோயில் என்ற பொருளில் அமைந்திருக்குமோ எனத் தோன்றுகிறது. எனினும் சங்க இலக்கியத்திலேயே 'நகரம் அல்லது இடம் எனப் பொருள் தரும் நியமம் என்னும் சொல் நாளடைவில் ஒரு குறிப்பிட்ட ஊருக்கே பெயராய் அமைந்து விட்டது போலும்'[1] என்ற எண்ணம், சூரியன் கோயில் இருக்கும் இடம் என்ற நிலையில் குடியிருப்புப் பகுதி என்ற பொருளில் தோன்றியிருக்கலாம் என்பதைத் தருகிறது.

விளை

பொருட்கள் விளையுமிடம் விளையாகும். ஊர்ப்பெயர் வாறன் விளை.

திட்டை

மணல் மேடு என்ற பொருளில் அமைந்த ஊர்ப்பெயர்க் கூறு தென்குடித் திட்டை.

கோயில்

கோயில் இருந்த பகுதி காரணமாகப் பெயர் அமைந்ததை இது காட்டுகிறது கண்ணார் கோயில். சக்கரக் கோட்டமும் இத்துடன் சுட்டத்தக்கது.

---

1. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்-பக். 149

**பாக்கம்**

அச்சிறுபாக்கம் என்ற ஊர்ப்பெயரில் அமைகின்றது.

**அகம்**

இடம் என்ற பொருளில் அமையும் இதனை 'ஏடகம்' காட்டு கிறது.

**முட்டம்**

குரங்கணில் முட்டம் என்ற பெயரில் அமைவது முட்டம்.

**பேர்**

கானப்பேரெயில் என்ற, சங்க இலக்கியம் சுட்டிய பெயர். எயிலை விட்டு, கானப்பேராக அமைகிறது.

**பாலை**

கழிப்பாலையில் பாலை என்ற கூறு அமைகிறது.

**கால்**

காரைக்கால் தருவது இக்கூறு. 'காயல்' என்பது ஊர்ப்பெயர் விளக்கத்திற்குரிய காரணமாக அமையின், காயலின் மரூஉ என இதனை உரைக்கலாம்.

**ஆச்சிரமம்**

பாச்சிலாச்சிரமம் என்ற பெயரில் அமைகிறது.

**பாழி**

அரதைப் பெரும் பாழியில் இடம்பெறும் பொதுக்கூறு.

**மாகாளம்**

அம்பர் மாகாளம், இடும்பை மாகாளம் எனவும், பெருமணம் என நல்லூர் பெருமணம் போன்றன கோயில் தொடர்பால் அமைந்த பொதுக் கூறுகளாகத் திகழ்கின்றன.

பொதுக்கூறுகளை முழுமையாகக் காணும்போது, இயற்கைப் பொருட்கள், குடியிருப்பு, மிகுதியாகவும், பிற குறைவாகவும்

அமைகின்ற, நிலையைக் காண்கின்றோம். கோடு, காடு, குன்றம், சுரம், மலை, கா, வனம், பொழில், நிலம், குழி, தாள், பூளை, விளை, திட்டை, வனம், களம் போன்றன இயற்கை அமைப்பு நிலையிலும், நீர் நிலைப்பகுதிகளாக, துறை, ஆறு, கரை, கூடல் அறல், சுழி, பாழி எனபனவும், செயற்கை அமைப்பு என்ற நிலையில் நோக்க, வாய், வாயில், வேலி, கோயில், கோட்டை, சாலை, எயில், கோட்டம் என்பனவும், குடியிருப்புப் பகுதியாக ஊர், குடி, புரம், நகரம், நகர், பள்ளி, மங்கலம், சேரி, பாடி, இல், பட்டினம், பாக்கம், பதி, அகம் போன்றனவும் அமைகின்றன. இவற்றைத் தவிர, பூண்டி, மிழலை, நியமம், அணை, இலி, மாகாளம், பேர், பாலை, முடி, முட்டம் போன்றனவும் பொதுக் கூறாக அமைகின்றன.

சங்க இலக்கியம் சுட்டும் பொதுக்கூறுகளாக அமைவனவற்றுள் அகம், ஆறு, இல், ஊர், காடு, குடி, குன்றம், குன்று, கூடல் கூற்றம், கோட்டம், கோடு, சேரி, துறை, மலை, முற்றம், வாய், வாயில் போன்றவற்றை இங்கும் காண்கின்றோம். ஆயின், அம்பலம், காரம், கிரியம், பேரி போன்ற ஒரு சில இவண் காணக் கிடைக்காத காரணத்தால் இவை இக்காலத்தில் மறைந்து விட்டன எனக் கூறல் இயலாது. மேலும், இங்குப் பல புதிய பொதுக் கூறுகள், கோடு, சுரம், வனம் போன்ற பல புதியதாக இணைத்திருப்பது ஊர்ப்பெயர்கள் பெருகியமை காரணமாக எனல் பொருத்தமாகும். பல இடங்களிலும் மக்கள் தங்கள் வாழ்பகுதிகளை உருவாக்கியமை காரணமாக, அந்தந்த சூழல், மக்கள் மன நிலைக்கு ஏற்ப, ஊர்ப் பெயர்களில் இடம் பெறும் தன்மையை இவண் எண்ணக் கூடுகிறது.

### சிறப்புக்கூறு

சிறப்புக் கூறுகள் என நோக்க, இயற்கை மிகுந்த இடம் பெறக் காண்கின்றோம். அடுத்த நிலையில் இறைத் தொடர்பானவை அமைகின்றன.

### இயற்கை அமைப்பு தாவரம்:—

1. அரசு, அரதை, அரிசில், ஆர், ஆல், மருது, இந்தளம், ஈங்கோய், எருக்கு, காஞ்சி, கடம்பு, கரும்பு, காரை, சண்பை, குருந்து, குன்றி, கொட்டை, கொடி, கோள், சந்தனம், சோறு, தினை, திலதை, தென்னை, நாவல், நெல், பயறு,

பழு, பனை, பாதிரி, புளி, புல், புங்கு, புன்னை, பூ, முல்லை, வஞ்சி, வீழி, வேல்.

2. நீர்நிலை—ஊற்று, கூடல், கூடலையாறு, துறை, ஆறு, நீர், கடுவாய்க்கரை.

3. விலங்கு—ஆமா, ஆனை, உடும்பு, குரங்கு.

4. பறவை-கழுகு, நாரை, புள், மயில்.

5. இலறத் தொடர்பு—அகத்தியன் அக்கீ, அயன், அரன், இராமன், கண்ணன், கரம்பன், சிவன், சேய், தெய்வம், நாகர், நாட்டியத்தான், நின்ற, நீலன், பரன், பாம்பணி, மறை, முருகன் போன்றன அமைகின்றன. பிற சிறப்புக் கூறுகளாக, அந்த, ஆக்கு, அதியரையன், ஆதன், ஆய், இரும், இளையான், உத்தரகோசம், உத்தரம், எதிர்கொள், எயினன், எறும்பு, ஏடு, ஏமம், ஐ, ஒற்றி, கடை, கடு, கலி, கானம், கானாட்டுமுள், குடம், செங்குன்று கொடுங்குன்று, கோட்டம், சக்கரம், சிரா, சிறிய, செம்பொன், சோழர், தலை, நான்கு, நீட்டம், நெடுமை, பரிதி, புதுமை, பெரிய, மழவர், மாறன், மூதூர், மூழி, வலம், வளை, வியல், வெண் போன்ற பல காண்கின்றோம்.

பொதுக்கூறு, சிறப்புக்கூறு எனப் பிரிவில்லாமல் ஒரே தனிச் சொல்லாக அமையும் பெயர்களாக, அரங்கம், அரதை, அவிநாசி, ஆடானை, ஆறை, காழி, குளந்தை, குறுக்கை, கோகழி, சிற்றேமம், சுழியல், சேறை, தில்லை, துருத்தி, நணா, நல்லம், நெல்வெண்ணெய், புல்லாணி, மங்கலம், மணலி, மல்லை, மதுரை, மாற்பேறு, முசிறி, மெய்யம், வல்லம், வண்டை, வலி தாயம், வாஞ்சியம், வாட்போர், விளமர், விற்கோலம், வெண்ணி, வைகல், வைகுந்தம் என்பன அமைகின்றன.

இத்தகைய மூன்று நிலைப்பட்ட ஊர்ப்பெயர்களை ஆராயும் போது, சில எண்ணங்கள் தோன்றுகின்றன. பண்டைய ஊர்ப் பெயர்களில் பொதுக்கூறுகள், மிகுதியானவை இயற்கை சார்ந்து அமையினும், குடியிருப்பு நிலையில் அமைவனவும் சரி பங்கு வகிக்கின்றன. இந்நிலை தரும் அன்றைய தமிழர் நிலை என்ன என நோக்கும்போது,

மனிதன் இயற்கையோடு நெருங்கியத் தொடர்புடையவன். இயற்கையே அவனது பல்வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைந்திருந்த நிலையை வரலாறு தரும். இந்நிலையில் இயற்கைச் சூழலில் வாழ்ந்த மனிதன் படிப்படியாக முன்னேறத் தொடங்கும் நிலையில், தனிப்பட்ட குடியேற்றங்களை உருவாக்குகின்றான். ஆற்றங்கரைகளிலும், மலைப்பகுதிகளிலும், காட்டுப் பகுதிகளிலும் வாழ்ந்த மனிதன், பின்னர் குடியிருப்புகளை உருவாக்கும்போது, காடுகளை அழித்தும், கரையோரங்களிலும் புதிய ஊர்களை அமைக்கின்றான். இத்தகையதொரு தலை சிறந்த நாகரிகமுற்ற சமுதாயமே, நமக்குத் தமிழரின் முதல் வரலாற்று நிலையில் தெரியவரும் ஒன்றாக அமைகிறது. சங்க இலக்கியம் சுட்டும் பெயர்கள் பல குடியிருப்புகளை அவர்கள் அமைத்த தமையினைக் காட்டும். அவற்றைச் சிற்றூர், ஊர், பேரூர், நகர் எனப் பிரித்து நோக்கிய திறன் சுட்டும். நகரமைப்புக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்த விதத்தினை மதுரை, காஞ்சி, காவிரிப்பூம் பட்டினம் வழி தரும். எனவே இங்கு நாம் காண்பது ஊர்கள் பற்றிய, ஊர் அமைப்பு பற்றிய சிறந்த அறிவுபெற்ற சமுதாயத்தினரை. எனவே இவர்கள் ஊர்ப்பெயர்களையும் திட்டமிட்டுச்சிறந்ததொரு அடிப்படையிலேயே அமைத்திருக்கவேண்டும் என்பது புரிகிறது. இந்நிலையில் இவர்களின் முன்னோர்களின் ஊர்ப் பெயர்கள் எத்தன்மையில் அமைந்திருக்கக்கூடும் என்பதையும் நாம் உணர இயலுகிறது.

இடப்பெயராய்வாளர், பொதுக்கூறு, சிறப்புக்கூறு இல்லாத ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்றுரைப்பர். இதனை அடிப்படையாகக் கொண்டும், நம் சங்க இலக்கிய நிலையினின்றும் நோக்கி இயற்கைப் பெயருள்ளும் தாவரப்பெயர்களே முதன் முதலில் தோற்றம் பெற்றிருக்க இயலும் என்பதை நிறுவுகின்றார் டாக்டர். எஸ். வி. சுப்பிரமணியன்.[1] இக்கருத்து மிகவும் பொருத்தமானது.

சிறப்புக்கூறு என்ற நிலையில் நோக்கவும் இயற்கை முதலிடம் வகிப்பது தமிழரின் சங்க கால வரலாறு முதல் இடைக்காலம் வரையிலும் உள்ள ஆய்வில் தெரியவரும் உண்மையாகும். எனி

1. The Place Names in early Tamil Literature - Dr. S.V. Subramanian

னும் இயற்கை அளவிற்கு இடைக்காலத்தில் பக்திக்குச் செல்வாக்கு இருந்தமையினையே இடைக்கால ஊர்ப்பெயர் சிறப்புக் கூறுகள் தருகின்றன. எனவே கால வளர்ச்சியில், மக்கள் மனது பக்தியின் பாற் செலுத்தப்பட்டமை இதனுள் தெரிய வருகிறது.

பொதுக்கூறு, சிறப்புக்கூறு இல்லாத பல பெயர்கள் விளக்கம் தெளிவாகாத நிலையில் அமையும்போது இவை பண்டைய தாவரப் பெயர்களான வஞ்சி, காஞ்சி போன்றனவா? இல்லை, மரூஉப் பெயர்களா? என்பது பற்றிய எண்ணங்கள் விளக்கமாக வில்லை. எனினும் சில பெயர்கள் பற்றிய எண்ணங்களினின்றும் இறைப்பெயர், பிற பொருட்பெயர் போன்றவற்றின் தாக்கம் அல்லது மக்களின் ஈடுபாடு, அப்பெயர்களை அவ்வாறே அவ்விடத் திற்குச் சூட்டச் செய்து விடுகின்ற நிலையைக் காண்கின்றோம். சான்றாக அவிநாசி என்ற இறைப்பெயரை அவ்விடம் கொள் வதும், அரங்கம் என்ற ஆற்றிடைக் குறையை அவ்வாறே இடத் திற்குக் கொள்வதும் போன்றன ஒரே சொற்பெயர்களாக அமைய வாய்ப்பு அமைக்கின்றன.

இடைக்கால இலக்கியங்களினின்றும் தெரியவரும் ஊர்ப் பெயர்களின் தோற்றக் காரணிகள் மேலும் பலவித கருத்துகளை நமக்குத் தருகின்றன.

சங்க காலம் போன்றே இவண் இயற்கைச் சார்ந்த பெயர் களில், தாவரங்கள் மிகுதியான இடம் வகிக்கின்றன. அரசு, ஆர், ஆல், மருது, பூளை, இந்தளம், சாந்தம், சோறு, தினை, திலதை, தென்னை, நாவல், நெல், பயறு, பனை, பாதிரி, புல், இலம்பை, ஈங்கோய், எருக்கு, ஏடு, காரை, சண்பை, கொட்டை, கரும்பு, காஞ்சி, கடம்பு, புளி, புல்கு, புன்னை, வஞ்சி, வேல், முல்லை, மா, வன்னி, வீழி போன்ற அனைத்து தாவரங்களும், உறுப்புகளும் ஊர்ப்பெயர்க் கூறுகளாகக் அமையக் காண்கின் றோம்.

இத்தாவர வகைகள் அனைத்தும் இன்றும் நம் நாட்டில் காணப்படுபவை. எனவே இவை தமிழகத்தில் பண்டு தொட்டே மரபாகக் காணப்படும் தாவரங்கள் எனக் கூறல் இயலுகிறது.

தாவர வகைகளை அடுத்து, இயற்கைப் பெயர்களாக மலை, நிலம், நீர் நிலைகள் இடம்பெறக் காண்கின்றோம்.

இயற்கைப் பொருட்கள் என்ற நிலையில் நோக்க விலங்குகள் குறைவான இடத்தில் அமைகின்றன. இவற்றிற்குரிய காரணம் என்ன எனக் காணும்போது சில எண்ணங்கள் தோன்றுகின்றன.

முதலில் தமிழரின் பண்டைய வரலாறு முதல் இன்றைய வரலாறு வரையிலும் நோக்கலாம். மனிதன் தன் வாழ்வு சிறப்பாக இருக்க எண்ணுபவன். எனவே வசதியும், வளமும் நிறைந்த இடத்தையே விரும்புவது மனித இயல்பு. இந்நிலையில் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த இடத்தில் தன் குடியிருப்புகளை அமைத்துக் கொள்கின்றான். இது மனித வரலாற்றின் தொடக்கமே காட்டும் எண்ணமாகும். ஆற்றங்கரைகளில் நாகரிகம் செழித்து வளர்ந்தது என்பது சுட்டும் கருத்துமாகும். நதிக்கரைகள் இவ்வாறு மிகுதியான குடியிருப்புகளைப் பெற, தாவரப் பெயர்கள் மிகுதியான பெயர்களில் அமைவதற்குரிய காரணம் என்ன என நோக்கின், மேலும் சில எண்ணங்கள் புலப்படுகின்றன.

மக்கள் தேர்ந்தெடுக்கும் இடங்கள் இயற்கை வளம் பெற்ற இடம் என்ற நிலையில் தாவரங்கள் நிறைந்த இடங்கள் செழிப்புள்ள இடங்கள் எனவே அத்தகைய தாவரங்கள் மிகுதியை அழித்து அல்லது அதற்குப் பக்கத்தில் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் இன்று வரையிலும் நாம் காணக் கூடிய ஒரு நிலை. இந்நிலையில் அன்றும் தாவரங்கள் மிகுதியான இடங்களின் பக்கத்திலும் அல்லது அவற்றை அழித்தும் குடியிருப்புகளை ஏற்படுத்தியமையைக் காட்டுவன இத்தாவரத் தொடர்பான ஊர்ப்பெயர்கள் எனக் கொள்ளலாம். தாவரங்களின் மிகுதியையும் இவண் உணரக் கூடுகின்றது. இந்நிலையில் விலங்குகள் ஊர்ப்பெயர்களில் குறைவாக இருப்பதையும் நாம் எண்ணக் கூடுகிறது.

"ஊர்ப்பெயர்கள் ஒரு இடத்தைக் குறியீட்டு நிலையில் உணர்த்தி அமைவன; எனவே அவ்விடத்திற்கு அடையாளமாக அங்குள்ள மரங்கள் அமைய, விலங்குகள், போன்றன வழங்கும் இடத்தின் பக்கத்தில் மக்கள் நெருங்கவும், மக்களைக் கண்டு அஞ்சி ஓடும் விலங்குகளை அடையாளங்களாகக் கொள்ள இயலாமையும் காரணமாக விலங்குகள் ஊர்ப்பெயர்களில் மிகுதியாக அமையவில்லை' என்ற எண்ணம் பண்டைய ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆய்வில் அமைகிறது[1]. எனவே மக்களுடன் நெருங்கிப்

---

1. The Place Names in early Tamil Literature - Dr. S.V. Subramanian

பழகும் அல்லது மக்கள் வாழ்பகுதியில் வழங்கும் சில விலங்குப் கள் மட்டுமே இவண் இடம் பெறுகின்ற நிலையைக் காணலாம். இடைக்காலத்திலும் இந்நிலையே தொடருகிறது. இங்கு இடம் பெறும் விலங்குகளாகப் பாம்பு, குரங்கு, ஆ, ஆனை போன்றவற் றைக் காண்கின்றோம். பறவைகளாகக் கழுகு, குருகு, புள், மயில் போன்றன அமைகின்றன.

இவை தவிர செயற்கை அமைப்பு ஊர்ப்பெயர்களாக எயில், கோட்டை, கோயில் பெயர்கள் அமைகின்றன. மேலும் புதிய ஊர்களைப் புத்தூர் என்றனர். சிறந்த ஊர்களை நல்லூர் என்று குறித்தனர். திசை குறிக்கும் நிலையில் குட வாயில், குடந்தை அமைகின்றன. கோடிகா, கோடிக்கரை போன்றன இருக்கும் எல்லையைச் சுட்டுவன. ஆட்பெயர்களை, குடிப்பெயர்களை, அதிகைமங்கலம், ஆதன்குடி, எயினனூர், வேட்டங்குடி என்பனவற்றுள் காணலாம். இவ்வாறு பல அடிப் படைகளில் தோற்றம் பெற்ற நிலையைப் பண்டைக் காலம் தொட்டே காணும் நிலையை, இடைக்கால ஊர்ப்பெயர்களி லும் தொடர்ந்து காண்கின்றோம். இருப்பினும் காலம் தோறும் மக்கள் வாழ்விற்கிணங்க புதிய எண்ணங்கள் ஊர்ப்பெயர்களிலும் தாக்கம் செலுத்துவதை இடைக்காலம் சிறப்புறக் காட்டுகிறது.

இடைக்காலத்தில் பக்தி இலக்கியம் சுட்டும் ஊர்ப்பெயர்கள் பெரும்பாலான இயற்கை, தாவரச் சூழலைக் கொண்டு அமை யினும், இவற்றிற்கு ஒத்த நிலையின, இறையோடு தொடர்பு கொண்டு அமைகின்றன என்பதையும் நாம் காண இயலுகிறது. இந்த இறைத் தொடர்பான ஊர்ப்பெயர்களைச் சில முறைகளில் பகுத்துக் காணலாம்.

1. ஊர்ப்பெயர்கள் இறைப் பெயரால் அமைதல்

சிவபுரம், கண்ணபுரம் போன்ற பெயர்கள் இறை காரண மாகப் பிறந்தவை என்பது தெளிவாக அமைகிறது. சிவன்கோயில் கண்ணன் கோயில் இருக்கும் தன்மை காரணமாகப் பிறந்தவை எனலாம்.

2- குறிப்பிட்ட கோயிலில் உள்ள இறைவன் பெயரால் ஊர்ப் பெயர்கள் அமையும் தன்மை.

புக்கொளியூர் என்ற இடம் கோயம்பத்தூர் மாவட்டம் சேர்ந்தது. இங்குள்ள சிவன் கோயில் இறைவன் நாசங் களை அவிப்பவன் என்ற கருத்தில் 'அவிநாசி' என்றழைக் கப்பட்டான். இன்று 'அ வி நா சி' என்ற இறைப்பெயர் செல் வாக்கு காரணமாக, ஊர்ப்பெயரான புக்கொளியூர் மறைந்து அவிநாசியே ஊர்ப்பெயராகத் திகழும் தன்மை அமைகிறது.

3. கோயில் பெயர் ஊர்ப்பெயராக அமையும் தன்மை, பல ஊர்ப்பெயர்களில் காணக் கூடிய ஒன்று.

அகத்தீச்சுரம், இராமேச்சுரம், திருவாவடுதுறை, காளையார் கோயில் போன்ற பலவற்றை இவண் காணலாம்.

4. கோயிலில் உள்ள தலமரப் பெயரையும் ஊர்ப்பெயராகக் கொள்வர். திருப்பாதிரிப் புலியூரில் பாதிரியைத் தலமரமாகக் காண்கின்றோம்.

இவ்வாறு தோற்ற அடிப்படைகள் மட்டுமல்லாது, பக்தியின் தாக்கம் வேறும் பல நிலைகளில் ஊர்ப்பெயர்களில் அமைந்திருப் பது எண்ணத்தக்கது

1. திரு என்ற சொல்லடை. இறைத் தொடர்பான ஊர்ப் பெயர்களில் 'திரு' என்ற சிறப்புக்கூறு தனிநிலையில் அமைகிறது. இறைச் சிறப்பையும் செல்வாக்கையும் சுட்டும் நிலையில் இவை அமைந்து அவ்வூரின் சிறப்பைத் தருகின்றன மக்களின் பக்தி மேம்பாட்டை இவ்வடை தருகின்றது பெரும்பாலும் பல ஊர்ப் பெயர்களில் காணப்படும் இதன் தொடக்கம் பற்றிய ஆய்வு காலந்தோறும், சூழல், மக்கள் உணர்வு எவ்வாறு மாறிக் கொண்டே வந்திருக்கிறது என்பதனைச் சுட்டத்தக்கதாக அமை கிறது.

சங்க இலக்கியப் பெயர்களுள் பல இயற்கைச் சார்ந்த பெயர் களே. தவிர குடியிருப்புப் பெயர்கள், ஆட்பெயர்கள் போன்றன வும் அமைகின்றன. இவற்றுள் 'திரு' என்ற அடை இல்லை. பல கோயில்கள் பற்றிய எண்ணம் அமையினும் 'திரு' என்ற அடை இவற்றுக்கும் இல்லை. ஆயின் 'திருவரை' என ஒரு சில பெயர்

களைக் காணும்போது[1] 'திரு' என்ற சிறப்புக்கூறின் தோற்றமும், அதனைக் குறித்த எண்ணமும் புலப்படுகிறது. சிறப்பு நிலையில் சுட்டப்பட்ட இந்தச் சொல், பக்தி காலத்தில் கோயில் சிறப்பு சுட்டும் தன்மையில் அமைய, பின்னர் கோயிலால் சிறப்புற்ற ஊர்கள் அனைத்தும் 'திரு' என்ற சிறப்புக் கூறால் இணைக்கப்பட்டமை, சிறிது சிறிதாக, பக்தி, ஊர்ப்பெயர்களில் இடம் பெற்ற தன்மையைக் காட்டுவதாக அமைகிறது.

2. ஒரே ஊர்ப்பெயர் பக்தி காரணமாக, இறைச் செல்வாக்கு காரணமாக மேலும் பல பெயர்களையும் பெற்றமை பக்தி இலக்கிய ஊர்ப்பெயர்கள் உணர்த்தும் ஒரு உண்மையாகும்.

காஞ்சி பெருமையும் சிறப்பும் கொண்ட தாவர அடிப்படையில் பெயர் பெற்ற நகரம். இதனுள் கோயில்கள் பெருகப் பெருக இது மேலும் பல பெயர்களைப் பெற்றமையை ஊர்ப்பெயராய்வு தருகிறது. குற்றாலம் 21 பெயர்கள் கொண்டமை, மதுரை, ஆலவாய் போன்ற பிற பெயர்களைக் கொண்டமை, போன்ற பல சான்றுகளை இவண் சுட்ட இயலுகிறது. கழுமலம் என்ற ஊர் பன்னிரு பெயர்களைக் கொண்டமையும் சிறப்பான சான்று. புராண எண்ணம் காரணமாக ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்றமையை, தேவாரப்பாடல்களும் இயம்புகின்றன. சம்பந்தர், பிரமபுரம் பதிகத்தில் (1)

'கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர் காலம்
மிதுவென்ன
பெருமை பெறற பிரமாபுரம்'

என்றியம்புகின்ற பாடலில், ஊழிக்காலத்தில் கடல் உலக முழுமையும் கொள்ள, தோணிபோல் மிதந்தது தோணிபுரம் என்பதை எடுத்தியம்புகின்றார்.

3. தமிழர் வளைந்து கொடுக்கும் மனப்பான்மையர் என்பது பொதுநிலை எண்ணம். இடப்பெயர்களும் இதனையே தெரிவிக்

---

1. ஏழுலமாளி திருவரை மேல் அன்பு எளிது. பரி 8-64
திரு என்ற அடைமொழியும் திருப்போர்ப்புறம், திருமருதமுன்றுறை திருவெஃகா போன்ற பெயர்களில் காணப்படுகிறது.
தமிழ் இடப்பெயராய்வு-பக். 136

கின்றன. பக்தி காரணமாகப் பிறமொழி தம் மொழியில் புகவும், ஊர்ப்பெயர்கள் அதனால் மாறவும் இவர்கள் அநுமதித்தனர் என்பதனை, தமிழ்மொழிப்பெயர்கள் வடமொழிப்பெயர்களாகமாறிய நிலை காட்டுகிறது. முதுமலை விருத்தாச்சலமாகவும், மறைக்காடு வேதாரண்யமாகவும் மாறிய தன்மை இவ்வடிபடையிலேயே எனினும் தமிழரின் தமிழுணர்வு குறைந்து விடவில்லைஎன்பதை, மயிலாடுதுறை மாயூரம் என்றழைக்கப்பட்ட நிலையைத் திரும்பவும் மயிலாடுதுறை என மாற்றிய தன்மை தரும்.

4. இறைப்பற்று சாதாரண ஊர்ப்பெயர்களையும், சிறப்புப் பெற்ற ஊர்களையும் கோயில் காரணமாகச் சிறப்பு பெறச் செய்தமையையும் இவண் காண இயலுகிறது. காஞ்சி, சங்க காலத்தில் சிறந்த நகரமெனக் கருதப்பட்டாலும் இடைக்காலத்தில் மிகுந்த கோயில்கள் காரணமாக முதல் கோயில்கள் நிறைந்த நகரமெனப் பெயர் பெற்றமையை அறிகின்றோம்.

அடுத்து கழுமலம். குடமூக்கு போன்ற ஊர்கள், இடைக்காலத்தில் கோயில்கள் காரணமாகப் பெருஞ்சிறப்பு பெற்றமையும் இவண் சுட்டத்தக்கது.

# முடிவுரை

இடைக்கால ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆய்வில் ஊர்ப்பெயர் ஆய்வு தரும் பயன், ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்யும் முறையுடன் தமிழரின் அன்றைய வாழ்வியல் பற்றிய சில எண்ணங்களும் வெளிப்படுகின்றன. பயன்கள் என நோக்க,

1. மக்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்கேற்ப குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்த நிலை தெரிகிறது. மானிடவியலின்படி மாந்தர் தம் வாழ்க்கை வசதிக்கேற்ப குடியிருப்புப் பகுதிகளை அமைத்துக் கொள்ளுவர் என்பது இயல்பான ஒன்று. எனவே வெப்பம் மிகுந்த நாட்டுப் பகுதியைச் சார்ந்த தமிழர்கள் நீர்நிலை, தாவரம் மிகுபகுதிகளில் மிகுந்த குடியிருப்புப் பகுதிகளை அமைத்துக் கொண்டனர் என்பதும், அப்பெயர்களையே தம் பகுதிக்கு இட்டனர் என்பதும் மிகப் பொருத்தமாக அமைகிறது. வெப்ப நாட்டு மக்கட்கு நீர்நிலை தாவரம் மீது மதிப்பு இருந்தது என்ற க. ப. அறவாணன் கருத்தில், மதிப்பு அவர்களின் தேவையடிப்படையில் எழுந்த ஒன்று என்பதை இவ்வூர்ப் பெயராய்வு உறுதிப்படுத்துகிறது.

2. தமிழகத்தில், இடைக்காலத்தில் காணப்பட்ட இயற்கை வளமான தாவர வளம், விலங்கு வளம், பறவை வளம் போன்றவற்றை அறிந்து கொள்ள இயலுகிறது. பெரும்பான்மையும் மிகுதி காரணமாகவும், சிறப்பு காரணமாகவும் அமையும் தன்மை கருதி இவற்றை நம் நாட்டில் அமையும், பண்டு தொட்டே அமையும் வளம் எனக் கருதலாம்.

3. மக்களின் உளவியல் காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப, அரசியலுக்கேற்ப மாறுபடும் என்பதும் அதற்கேற்ப அவர்கள் ஊர்ப்பெயர்களிடும் முறையும் மாறுபடும் என்பதும் தெரிய வருகின்றன. இடைக்கால மக்களின் வாழ்வைப்பக்தி எவ்வாறெல்லாம் தாக்கின என்பதற்கும், அவர்கள் அதனை எவ்வாறு ஏற்றுக் கொண்டனர் என்பதற்கும் சான்றுகளாக இவ்வூர்ப் பெயர்கள்

அமைகின்றன. இறையின் மேற் மிகுந்த ஈடுபாடு கொண்ட அவர்கள் பிற மொழியை ஏற்றுக் கொண்டனர் மட்டுமல்லாது, புராணங்களிலும் நம்பிக்கைக் கொண்டு திகழ்ந்தமையினையும் நாம் அறியக் கூடுகின்றது. வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பல ஊர்ப்பெயர்கள் திருப்பதியின் புகழ் காரணமாகத் திருமால் தொடர்பாக அமைந்துள்ளதாகத் தெரிய வருவதும் இங்கு இணைத்து நோக்குதற்குரியது.

4. சங்க காலத்தையும், இடைக்காலத்தையும் கொண்டும், இன்று காணப்படும், இன்று புதிதாகச் சூட்டப்படும் பெயர்களை யும் காண ஊர்ப்பெயர் வரலாறு பற்றிய எண்ணம் ஒன்றையும் நாம் பெற இயலுகிறது. தமிழர் வாழ்வில் இயற்கைப் பெயர் களே முதல் பெயராக அமைந்திருக்க முடியும் என்பதும், சங்க காலத்தில் குடியிருப்புப் பெயர்களும் மிகுந்த பயிற்சி பெற்றன என்பதும் இடைக்காலத்தில் இயற்கையோடு பக்தி மிகுந்த இடம் பெற்ற நிலையையும் நாம் கண்டோம். அன்று ஒரு சில ஊர்ப் பெயர்களில் பயிற்சி பெற்ற ஆட்பெயர்களைக் கொண்ட ஊர்ப்பெயர்கள் இன்று பயிற்சி மிக்கமைகின்றது. சென்னையைச் சுற்றி இன்று பல புதிய குடியிருப்புகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. பெரும்பான்மையும் ஆட்பெயர் சிறப்புக் கூறாகக் கொண்ட பெயராக அமைவதைக் காண்கின்றோம். இவை பற்றி மிக்க ஆய்வு மேலும் பல எண்ணங்களைத் தரலாம். எனவே மக்கள் வாழ்விலும், உளத்திலும் பெறும் செல்வாக்கு நிச்சயமாக ஊர்ப்பெயர்களில் பிரதிபலிக்கும். அதனால் ஊர்ப் பெயர்களும் தோற்றக் காரணிகளால் மாறுபட்டுக் கொண்டிருக் கும் என்பதை இவண் உறுதியாகக் கூறலாம்.

5. அடுத்த நிலையில் பார்க்கும்போது பல இடைக்காலப் பெயர்கள் இன்று பிற பெயர்களாகவும், திரிந்தும் அமைந்திருப் பதைக் காண்கின்றோம். மொழியியல் நோக்கில் நோக்கினால் தமிழ்மொழி வரலாற்றுக்குப் பயனாக இவை அமையும்.

2. நெறிமுறைகள்:- பயன்களாக இவை போன்றன அமைய, ஊர்ப்பெயர் ஆய்வு முறை என்ற நிலையிலும் இரண்டு நெறி முறைகள் இவண் சுட்டப்படவேண்டிய நிலையில் அமைகின்றன.

1. இலக்கியங்கள் நோக்கம் வேறுபட்டவை ஆகையினால், ஊர்ப்பெயரின் தோற்றம் விளக்கம் பெறுதல் இவற்றுள் இல்லை. எனவேபிற பல வருணனைகள், இன்றைய நிலை போன்ற பல

எண்ணங்களையும் கொண்டே அவற்றை நாம் உணர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது என்பதை முன்னரேயே கண்டோம். எனினும் இங்கு இடைக்கால இலக்கியங்களில் அமையும் பல ஊர்ப் பெயர்கள் பக்தியோடு தொடர்புடையதாக அமைகின்ற நிலையைப் பார்க்கும்போது, மேலும் ஒரு எண்ணத்தை இவண் குறிப்பிட வேண்டியுள்ளது.

இங்குத் தெரியவரும் பல ஊர்ப்பெயர்களைவிளக்க முனைந்த அறிஞர் பெரும்பாலானவற்றுக்கும் புராணச் சார்பு இணைத்து, பெயர்த் தோற்றத்திற்குரிய காரணங்களை உருவாக்கியுள்ளனர். அழுந்தூர் என்ற ஊர்ப்பெயர் சங்க இலக்கியம் சுட்டும் ஒன்று. இன்று அழுந்தை எனவும் சுட்டப்படும். 'கம்பன் பிறந்த திருவழுந்தூர் இது எனக் கருதலாம் என்பர் திரு. ஆளவந்தர் (இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் பக்-65). எனினும் பக்தி இலக்கியத்தில் அமையும் அழுந்தூர் குறித்து சைவ, வைணவக் கதைகள் இரண்டும் காணப்படும் நிலையில், இக்கருத்துகள் பிற்காலத்தன என்பதை நாம் உணர இயலுகிறது.

இதனை நோக்க, இடைக்கால இலக்கிய ஊர்ப்பெயர்களைப் பார்க்கும்போது, பிற அடிப்படை பெயர்களுக்குப் புராண அடிப்படை விளக்கங்கள் பல இருப்பினும் அவற்றை ஒதுக்கி விட்டு, ஊர்ப்பெயரின் பொருள் போன்ற பிற காரணங்களை நோக்கியே ஊர்ப்பெயர்த் தோற்றம் காணுதல் தேவையான ஒன்று என்பது சுட்டத்தக்கது. இந்நிலையில் பொது நிலையிலும் ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்யும்போது, ஊர்ப்பெயர்கள் தோன்றிய காலம், மக்கள் உளவியல், அக்காலச் சமுதாயம், அரசியல் போன்ற பலவற்றையும் நோக்கியே தோற்றம் காண வேண்டும் என்பது புலனாகின்ற ஒன்று.

2. ஊர்ப்பெயர் ஆய்வு நெறிமுறைகளில் மேலும் ஒன்றாக, நோக்கவேண்டியது நில அமைப்பு. எந்தப் பகுதியை நோக்குகின்றோமோ அதற்கேற்ற நிலையில் இந்நில அமைப்பு நோக்கல் அமையும். இவண் பக்தி இலக்கியம் காட்டும் ஊர்ப்பெயர்களை நோக்குகின்றபோது, இவ்விலக்கியங்கள் தோற்றம் பெற்ற தமிழகத்தின் அமைப்பு என்ன என்பதை நோக்க வேண்டும். இன்றைய தமிழகத்தை விட அன்றைய தமிழகம் பரப்பில் பரந்தது. சங்கப் பாடல்கள் சுட்டும் தமிழக அமைப்பே இடைக்காலம் வரையிலும், இருந்திருக்கக் காண்கின்றோம். தொல்காப்பியம், புறநானூறு, மதுரைக் காஞ்சி (70–71) தமிழகத்தின் எல்லையைக் கூறுகின்றன.

வடவேங்கடம் தென் குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம் என, தொல்காப்பியப்பாயிரமும்,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உரு கெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடு கடற் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்

என புறநானூறும் (6) திசையியம்பும் நிலையினைக் காண, தமிழகத்தின் எல்லைகளையும், அதன் நில அமைப்பையும் உணர்ந்து காட்சியறிவைப் பெறமுடிகிறது. எனவே இங்குக் குறிப்பிட்ட ஊர்ப்பெயர்களைத் தமிழகத்திற்குள் அடங்கிய பெயர்களாக நாம் கொள்ளவும், இவ்வரலாற்றடிப்படையிலும், இங்குள்ள மக்கள் வாழ்வியல் நிலையிலும் நாம் இப்பெயர்களைப் புரிந்து கொள்ளவும் இயலுகிறது இதனைத் தொடர்ந்த இலக்கியங்களே பக்தி இலக்கியங்கள். இக்காலத்திலும், தமிழகத்தின் நில அமைப்பில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. எனவே இன்றைய திருப்பதி, மைசூர், கேரளம், இன்று வேறுபகுதியாகப் பிரிந்திருந்தாலும். அன்றைய தமிழகத்திற்குள் இருந்தவை என்ற நிலையில் நாம் நோக்கவேண்டும். எனவே அங்கு இன்று காணப்படும் ஊர்ப்பெயர்கள் நம் பண்டை இலக்கியத்தில் காணப்படும்போது, அவற்றிற்கு விளக்கம், அங்குள்ள இன்றைய சூழலைக் கொண்டு நோக்காது, அன்றைய தமிழகம் என்ற நிலையில், நோக்குதல் இன்றியமையாதது.

இடைக்கால ஊர்ப்பெயராய்வு, தமிழகம் பற்றிய மேலும் சில எண்ணங்களையும் தோற்றுவிக்கும்படியாக அமைகிறது.

1. தமிழ் நாட்டு வரலாறு பற்றி பேசும்போது கி.பி. 6 முதல் 9 வரையான காலப்பகுதியைப் பக்தி இயக்க காலம் என்பர். எனினும் இப்பக்தி இலக்கிய ஊர் பெயர்கள் பற்றிய ஆய்வு இப்பக்தி இயக்கம் இதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்னரேயே தொடங்கியிருக்க வேண்டும் என்ற கருத்திற்கு வழிவகுக்கிறது. இறைத் தொடர்பான ஊர்ப்பெயர்களாகப் பல பெயர்களைச் சங்க காலம் காட்டுகிறது. திருமுருகாற்றுப்படை, படைவீடுகள் பற்றிய எண்ணத்தைச் சிறப்புறத் தருகின்றது. பரிபாடலில் மதுரை சார்ந்த திருமாலிருங்குன்றம், இருந்தையூர் போன்ற பல ஊர்களைக் காண்கின்றோம். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் பக்தியோடு தொடர்புடைய பல பெயர்களைத் தரு

கிறது. சோழன் கோச்செங்கணான், திருமூலர், காரைக்கால் அம்மையார் ஆகியோரின் பக்தி மேம்பாடு, அவர்கள் தொடர்பான கோயில் பற்றிய எண்ணங்களையும், வரலாறு சிறப்பாக நமக்குத் தருகின்றது. முதலாம் ஆழ்வார்களாகக் கருதப்படும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமங்கையாழ்வாரின் காலம் கி.பி. 460-620 என்பர்.[1]

இவை எல்லாவற்றையும் நோக்க, எவ்வாறு பக்தி இயக்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்ததென்பதை யுணரக் கூடுகின்றது. மேலும் இவை அனைத்திற்கும் அரணாக, அடிப்படைசான்றாக இருப்பன இங்கு, பக்தி இலக்கியத்தில் சுட்டப்பட்ட தலங்கள். திருநாவுக்கரசர், சம்பந்தர் காலம் 7ஆம் நூற்றாண்டு எனக் காண்கின்றோம். இவர்கள் சென்ற கோயில்கள், சென்று இறைவனைப் பாடிய கோயில்கள் அனைத்தும் இவர்கட்கு முன்னரேயே கட்டப்பட்டவை என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்நிலையில், இத்தகைய மிகுதியான கோயில்கள் இருந்த நிலையில், பக்தி இயக்கம் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தொடக்கம் பெற்றது என்பது ஏற்றுக் கொள்ள இயலாத ஒன்று. எனவே பாடல்கள் பல பிறந்த நிலையில் இவ்வியக்கம் தீவிரமடைந்ததே தவிர, இவ்வியக்கம் மக்களிடம் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது என்பதும், இவ்வியக்கத்தின் வெளிப்பாட்டைக் கோயில்களைத் தொடர்ந்து பாடல்கள் நடத்தின என்பதையும் நாம் உறுதியாகக் கொள்ளலாம். ஏ.வி. சுப்ரமணிய அய்யரின் எண்ணமும்[2] இக்கருத்திற்கு அரணாகிறது.

---

1. இலக்கியக் கொள்கை—தொகுதி 1 - பக். 164.

2. Even during the period from the 4th to 6th centuries, generally considered a dark one in the history of the Tamils, a revolution was silently taking place in their lives. The period is not a dark or as decadent as it was once thought to be. A revival of Hinduism and its principal sects of Saivism and Vaishnavism was taking place at this time and devoloped later into a popular up heaval in the 7th century A.D. which came into complict with Jainism and Buddhism and successfully overthrew them.

— A. V. Subramaniya Aiyar, Tamil Studies,
First Series 1969-pa. 133.

2. இவ்வாய்வு தரும் இன்னொரு கருத்தாக அமைவது தமிழகத்தின் அன்றைய குடியிருப்பு நிலையைப் பற்றியதாகும். பக்தி இலக்கியம் சுட்டும் பெயர்கள் பல காவேரியின் பக்கத்தில் உள்ள தலங்களாக அமைகின்றன. இன்று இவை திருச்சி தஞ்சாவூர் மாவட்டங்களில் அமையக் காண்கின்றோம். தவிர, சில ஊர்கள் பாண்டி நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு சார்ந்தனவாகக் காணப்படுகின்றன. ஆயின் ஒன்றிரண்டு பெயர்களே தமிழகத்தின் தென்பகுதியுள் உள்ளனவாக அமைகின்றன. திருவட்டாறு, திரு அனந்தபுரம், அகத்தீச்சுரம் போன்ற சில அவை. இவ்வாறு தமிழகத்தின் நடுப்பகுதியில் நிறைய குடியிருப்புப் பகுதிகள் தெரிய வரும்போது தென்பகுதியில் ஏன் தெரியவில்லை? என்ற கேள்வி எழுகிறது.

தங்கள் சொந்தஇடங்கட்குப் பக்கத்தில் உள்ள இடங்களை மட்டுமே இவர்கள் பாடினர் எனின் இது ஒத்துக் கொள்ள இயலாத ஒன்று. வடஇந்தியா, ஈழம் போன்ற பகுதி ஊர்ப்பெயர்கள் இவண் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். இதே போன்று தென்பகுதியில் கோயில்கள் இருந்தால் குறிப்பிட்டிருப்பர் என்பது உறுதி. இந்த பதிலையே பயணம் அன்று எளிதானதன்று என்ற வினாவிற்கும் அளிக்கலாம்.

பண்டைய இலக்கியச் சான்றுகள் மிகுதியான வரலாற்றுக் குறிப்புகளைத் தராவிடினும், தெற்குப் பகுதியுள் உள்ள சில இடங்களைப் பற்றிய எண்ணங்களைத் தருகின்றன. அழகிய பாண்டியபுரம், ஒல்லையூர் போன்றவற்றை அதியன், பூதபாண்டியன் ஆண்ட வரலாறு நமக்குத் தெரிகிறது. அதங்கோட்டு ஆசான் பற்றித் தொல்காப்பியம் இயம்புகிறது. எனினும் மிகுதியான சான்றுகள் இப்பகுதி பற்றி கிடைக்கவில்லை. சுசீந்திரம் கோயில் இன்று மிகச்சிறப்பான கோயில். தவிர, திருமலை, திருக்குறிஞ்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை, பன்றிப்பாதம், மேலங்கோடு, திருவிடைக்கோடு, திருப்பன்றிக்கோடு, திருநட்டாலம் போன்ற 12 சிவன் கோயில்கள் பற்றியும் அறிகின்றோம்.[1] எனினும் இவற்றுள் ஒன்றுமே இடைக்கால இலக்கியங்களில் இடம் பெறவில்லை. சுசீந்திரம் கோயில் பற்றிக் குறிப்பிடும்போது, ம. நயினார் இங்குக் கிடைக்கும் பல கல்வெட்டுகளிலும் பழமையானது கி. பி. 8 அல்லது

1. இதயம் பேசுகிறது 1-7-84 இதழ்-பக் 50, 51

9 நூற்றாண்டைச் சார்ந்தது என்கின்றார். பழைய வரலாற்றை அறியவும் வேறு சான்றுகள் இல்லை என்கின்றார்.[1]

இவற்றை நோக்க, முதலில் தமிழகத்தின் தென்பகுதியில் நடுப்பகுதி போன்று குடியேற்றங்கள் இருந்திருக்கவில்லை எனத் தோன்றுகிறது. வளமும் வசதியும் காவேரிக் கரையில் மிகுதியாக அன்று இருந்திருக்க வேண்டும் என எண்ணலாம். மேலும் இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊர்ப்பெயர்கள் பற்றிக் காணும்போது திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து நிறைய மக்கள் இங்குக் குடியேறினர் எனக் கேள்விப்படுகின்றோம். எனவே இடைக்காலத்தில் மக்கள் இங்கு வாழ்ந்தாலும் தமிழகத் தின் நடு பகுதிப் போன்று மிகுதியாக இல்லை; நெருங்கிய குடி யிருப்புகள் இவண் இருந்திருக்கவில்லை எனக் கூறலாம். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியும் இவண் எண்ணத்தக்கது. அப்பர் தம் பாடலில் இதனையே

திருக்கோயில் இல்லா ஊர் ஊரன்று என்று பாடுகின்றார்.

இந்நிலையில் இடைக்காலத்தில் உள்ள ஊர்ப்பெயர்கள் மேலும் மிகுதியாகப் பிறச் சான்றுகள் வழியே கிடைக்கும்போது இங்குக் கருதப்பட்ட எண்ணங்கள் மேலும் தெளிவாக அமையும் என்பது உறுதி.

1. சுசீந்திரம் கல்வெட்டுகளில் இடப்பெயராய்வு-ம. நயினார்

# பின்னிணைப்பு

## ஊர்ப்பெயர்கள்—தமிழகத்தின் பிறபகுதி

1. அங்கநாடு

விசயவரன் என்னும் அரசனுடைய நாடு[1]. இதன் தலைநகர் சண்பை. பெருங்கதையில் சுட்டப்படும் இந்நாடு பற்றி கம்பனும், 'அங்கநாடு; இதுவும் அக்காரணக் குறியுடைக் காமன் ஆச்சிரமே' (345) என்கின்றார்.

2. அச்சுவபுரம்

ஒரு வித்தியாதர நகரம்[2]. சூளாமணி.

3. அயோத்தி

கம்பன் காவியம் காட்டும் ஊர். ஆழ்வார்கள் பாடல் பெற்ற ஊர். பெரியாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் இவ்விடம் குறித்துப் பாடுகின்றனர்.

4. அனேகங் காவதம்

கதங்காவதம் என்ற பெயரில் பாடல் பெற்ற இத்தலத்திற்கு திரு அனேகங் காவதம் என்ற பெயரையும் காண்கின்றோம். வடநாட்டுத் தலம் இது.

5. இலங்கை

இலங்கை என்றும் ஈழம் என்றும் இருபெயராலும் வழங்கப்படும் இந்நாடு, சங்க காலத்திற்கு முன்னரேயே தமிழர் தொடர்பு கொண்டது என்பலதச் சங்க இலக்கியங்கள் முதல் இன்று வரை

---

1. அபிதான சிந்தாமணி-பக்-13
2. „ „ -பக்-26

யான அதன் வரலாறு காட்டுகிறது. குமரித்துறைக்கு மிக அருகில் இருப்பதும் இத்தொடர்புக்குரிய காரணமாகும். அரங்கம் துருத்தி போன்று ஆற்றிடைக் குறையால் ஏற்பட்ட பெயரே இலங்கை என்பது அறிஞர் ஒருவர் எண்ணம். அப்படியென்றால் அன்று ஆறுகளின் இடையில் அமைந்திருந்ததா? அல்லது கடலின் இடையில் அமைந்திருப்பதைச் சுட்டுகிறாரோ? எனினும் இன்று கடலின் இடையில் இதன் நிலை காரணமாக இதனைத் 'தீவு' என்றும் சுட்டுகின்றனர்.

'ஈழம்' என்ற பெயரும் சங்க காலம் தொட்டே காணப்படும் ஒன்று.

இடைக்கால இலக்கியங்களில, பெரும்பாலும் எல்லா இலக்கியங்களிலும் இதனைச் சுட்டக் காணலாம். இப்பெயராய்வு நமக்கு ஊர்ப்பெயராய்வு பற்றியதொரு எண்ணத்தையும் தந்து அமைகிறது. அதாவது பக்தி இலக்கியங்களில் இலங்கை பற்றிய கருத்துகளை நோக்கும்போது, பெரும்பாலும் இராவணன் தொடர்பாகவும். பிற, கலிங்கத்துப்பரணி போன்ற அரசர் புகழ் பாடும் அரசியல் தொடர்பையும் காட்டுகின்றது. எனவே இலக்கியங்களுக்குத் தகக்கினடக்கும் ஊர்ச்செய்திகள் மாறுபடுவதை இவண் காண்கின்றோம்.

பொருகடல் இலங்கை மன்னன்—திருநா-60-10
இலங்கையர் கோன்—சுந்த-46-7

கருங்கடற் றுறையிலங்கு மன்னன்-திருஞா-310-8
குரக்கினத்தாலே குரைகடல் தன்னை
நெருக்கி அணைகட்டி நீணிரிலங்கை
அரக்கர் அவிய அடுகணையாலே
நெருக்கிய கைகளால் சப்பாணி
-நாலா—பெரியாழ்-திரு. மொ. 1-6-88

இராக்கதர் வாழ் இலங்கை ,, திருப்-3

மின்னிடைச்சீதை பொருட்டா இலங்கையர்
மன்னன் மணிமுடி பத்துமுடன் வீழ -நாலா பெரியாழ்-திரு மொழி-2-6:8

இலங்கை மாநகர் நொய்தின் சென்று
எய்தினான்-கம்ப. 3066 73

அன்றிலங்கை பொருதளித்த அவனே அப்
பாரதப் போர் முடித்துப் பின்னே

வென்றிலங்கு கதிராழி விசயதரன்
　　என உதித்தான் -கலிங்-232

இலங்கை எறிந்த கருணாகரன் தன்
　　இகல் வெஞ்சிலையின் வலிகேட்பீர்
கலிங்கம் எறிந்த கருணாகரன் தன்
　　களப்போர் பாடத் திறமினோ -கலிங்-64

## 6. இலாடபூமி

'அறங்கள் நீடும் இலாடபூமி' என்றதொரு குறிப்பினைச் சேக்கிழார் (29-3528) தருகின்றார். திருநாவுக்கரசர் சென்ற தலத்துள் இதுவும் ஒன்று.

## 7. ஏமகூடம்

நாம யோசனைகள் கொண்டது. ஆயிரம் நடுவு நீங்கி
ஏமகூடத்தின் உம்பர் எய்தினான் (8748)

என, கம்பர் பாடுகின்றார்.

## 8. கண்டங்குடி நகர்

கங்கைக் கரையில் காணப்படும் தலம் இது. பெரியாழ்வாரின் திருமொழியில் இவ்வூர் சிறப்புடன் போற்றப்படுகிறது.

கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற
கண்ட மென்னும் கடிநகரே —தாலா-391

## 9. கம்பிலி

கம்பிலிச் சயத்தம்பம் நட்டதும் -கலிங்-203

என்ற பாடலடியில் 'கம்பிலி' பற்றிய எண்ணம் அமைகிறது.

## 10. கலிங்கம்

கலிங்கம் என்ற ஊர்த் தொடர்பு பண்டு தொட்டே தமிழரிடம் அமைந்தது. கலிங்கப்பட்டு தமிழர் விரும்பிய ஒன்று. வாணிபத் தொடர்புடன் அரசியல் தொடர்பையும் இடைக்காலம்

நமக்குக் காட்டுகிறது. கலிங்கப் போர், கலிங்க வெற்றி காட்டும் கலிங்கத்துப்பரணி, இந்நாடு பற்றிய சில எண்ணங்களைத் தருகின்றன.[1]

## 11. கிட்கிந்தை

கம்பன் காவியம் சுட்டும் இடம் (4283).

## 12 கூடற்சங்கமம்

குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்ற கோனபயன்
குவலயம் காத்தளித்த பின்னே -கலிங்-206

## 13. கேகயம்

கம்பன் காட்டுவது சேகய நாடு.

## 14. கேதாரம்

வடநாட்டுத் தலம். இமயமலையில் உள்ளது. உத்தரப் பிரதேசத்தில் உள்ளது. 'கேதார் நாத்' என்று இன்று சுட்டப் பெறுகிறது. ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற தலம். சேக்கிழாரும் இத்தலத்தைக் குறிப்பிடுகின்றார் (ஏயர் 198, திருமூல-3).

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டு பாட மயிலால மான்கன்று துள்ள வரிக்
கெண்டைபாயச் சுனை நீல மொட்டலரும் கேதாரமே-
திருஞா-250-1

முளைக்கை முகமன் சொலி முது வேய்களையிறுத்துத்
துளைக்கைக் களிற்றினமாய் நின்று சுனை நீர்களைத் தூவி
வளைக்கைப் பொழி மழை கூர் தரமயின் மான்பிணை நிலத்தைக்
கிளைக்க மணி சிந்தும் திருக் கேதார மெனீரே-சுந்-78-8

## 15 கேதீச்சரம்

திருக் கேதீச்சுரம் என்று சுட்டப்படுவது இன்று. ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்ற ஈழநாட்டுத் தலம். இதன் இருப்பிடத்தைச் சுந்தரர்,

---

1. கடற் கலிங்கம், (471) ஏழ்கலிங்கம், (444) கலிங்க மலை ஏழினும் (396) வடகலிங்கக் குலவேந்தன் (375).

அங்கம் மொழியன்னாரவ ரமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடன் மாந்தோட்ட நன்னகரில்
பங்கம் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத்தானே (80-3)

எனச் சுட்டுகின்றார். ஞானசம்பந்தர்,

பூவுளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி
மேவிநாடி நுன்னடியிணை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர் மன்னித்
தேவி தன்னொடுந் திருந்து கேதீச்சரத் திருந்தவெம் பெருமானே

என மாதோட்டத்தில் இக்கோயிலின் இருப்பிடம் காட்டுகின்றார். பெரிய புராணமும் இதனையே சுட்டுகிறது.

இதன் மூலம் மாதோட்டம் என்ற ஊர் தெரிய வருகிறது.

16. கொப்பை

கலிங்கத்துப் பரணியில் சுட்டப்படும் ஊர்.

உலகுயக்கொளப் பொருது கொப்பையிற்
பொருகளத்திலே முடிகவித்தவன் - கலிங்-204

17. கோகரணம்

துளுவ நாட்டைச் சார்ந்த கோகரணம் ஞானசம்பந்தரால் பாடல் பெற்று அமைகிறது.

'பேதை மடமங்கை யொரு பங்கிடமிகுந்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலிலெழுந்த விடமுண்ட சிவன் வாழுமிடமாம்
மாதரொடு மாடவர்கள் வந்தடி யிறைஞ்சிநிற மாமலர் கடுய்க்
கோதை வரி வண்டிசை கொள் கீத முரல்கின்றவளர் கோகரணமே' (337-2)

போன்ற பாடல்கள் அமைந்து, கோகரணத்தின் சிறப்பு சுட்டுகின்றன. மேலும் கடல்சூழ அமைந்த இதன் சிறப்பை,

'மாகடல் சூழ் கோகரணம்' என திருநாவுக்கரசர் தன் பத்து பாடல்களிலும் (263) சுட்டும் நிலை காட்டும். சிவபெருமான் திருவந்தாதியும் இதனைச் சுட்டுகிறது (80).

18. சாளக்கிராமம்

வட இந்தியாவில் நேபாளப் பகுதியில் உள்ள தலம் இது. பனிக்கட்டி மிகுந்துள்ள நேபாள தேசத்தில் அம்மகாமராஜா உத்தரவு பெற்றே இத்தலத்தைத் தரிசிக்க முடியும் என்று அறிகிறோம் (நாலா-பக் 840).

19. சிங்க வேள் குன்றம்

விளக்கம் தெரியவில்லை.

20. சிங்கள நாடு

புலமன்னிய மன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன்னிய புகழ்க் கோகனநாதன்- நம்பி-திருத்-50

21. சித்திர கூடம்

கம்பராமாயணத்தில் அமையும் மலைப்பகுதி இடம்.

22. திருக்கோணமலை

ஈழநாட்டு தலம். ஞானசம்பந்தர் பாடல் பெற்ற ஊர். கடற்கரை சார்ந்த ஊர் என்பது இவர் பாடல் உணர்த்தும் நிலை.

கரைகடற் சந்தும் காரகிற் பிளவு
மளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை (381-1)

23. நீலப்பருப்பதம்

'ஏற்றின் மிசை வருவார் இந்திரன் தன் நீலப்பருப்பதமும் பாடி' என, சேக்கிழார் திருஞானசம்பந்தர் பாடியத் தலமாகச் (34-1027) சுட்டுகின்றார். இவர் 'கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோகரணம் பாடி, திருப்பருப்பதத்தின் கொள்கைபாடி, பின்னர் இந்திரன் தன் நீலபருப்பதமும் பாடி' என்று குறிப்பிட்டுச் செல்லும் நிலை அமைகிறது.

இது இமயமலைச் சாரல் பகுதியாகும். பருப்பதம் மலை என்ற பொருளில் இங்கு பெயர்க்குத் தோற்றமாகிறது.

## 24. நேபாளம்

சேக்கிழார்,
'மாமுனிவர், பன்னு புகழ்ப் பசுபதி நேபாளத்தைப் பணிந்து ஏத்தி' (திருநீல-3) என நேபாளம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

## 25. பருப்பதம்

இன்று ஸ்ரீசைலம் எனவழங்கப்படும் ஊர் (மல்லிகார்ச்சுனம்) ஆந்திர நாட்டில் உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரா லும் பாடல் பெறும் நிலையில், இங்குள்ள சிவன் கோயில் சிறப்பு தெளிவாகும். மலையில் உள்ள கோயில் என்பதைச் சுந்தரர்,

'பூமா மரமுரிஞ்சிப் பொழிலூடே சென்றுபுக்குத்
தேமாம் பொழினீழற்றுயில் சீபர்ப்பத மலை'-(79-1)

எனப்பாடும் தன்மை காட்டும்.

## 26. மிதிலை

கம்பன் காட்டும் ஊர் இது. மைதிலியின் பிறந்த ஊர் எனக் குறிப்பிடப்பெறும் ஊர்.

விரியும் வார் புனல் மருதம் சூழ் மிதிலையர் கோமான்
அகன் பணை மிதிலை நாடு என்றும் (457)

என்று கம்பன் இதனை விளக்குகின்றான். கலிங்கத்துப் பரணி யும் இதனைக் காட்டுகிறது (101).

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 1 | அக்கரை | தென்னார்க்காடு | திருவக்கரை | ஆற்றின் அக்கரை | கரை | (அந்த) |
| 2 | அக்கீச்சரம் | — | அக்கீச்சரம் (வன்னிக்கரந்தை) | கோயில் | சுரம் | அக்கி |
| 3 | அகத்தியான் பள்ளி | தஞ்சாவூர் | அகத்தியான்பள்ளி | கோயில் | பள்ளி | அகத்தியன் |
| 4 | அகத்தீச்சுரம் | கன்னியாகுமரி | அகத்தீச்சுரம் | கோயில் | சுரம் | அகத்தியன் |
| 5 | அச்சிறுபாக்கம் | செங்கல்பட்டு | அச்சரபாக்கம் | புராணக்கதை/ அந்த சிறுபாக்கம் | பாக்கம் | அச்சிறு |
| 6 | அண்ணாமலை | வடஆர்க்காடு | திருவண்ணாமலை | புராணக்கதை/ மலை | மலை | அண்ணா |
| 7 | அத்தங்குடி | — | — | கோயில் | குடி | அத்தன் |
| 8 | அத்தீச்சுரம் | திருநெல்வேலி | அத்தீச்சரம் | கோயில்/புராணம் | சுரம் | — |
| 9 | அதிகை (அதியரையமங்கை) | தென்னார்க்காடு | திருவதிகை | ஆட்பெயர் | மங்கலம் | அதியரையன் |
| 10 | அம்பர் | தஞ்சாவூர் | அம்பர் | — | ஒரே சொல் | |
| 11 | அம்பர் மாகாளம் | ,, | கோயில் திருமாகாளம் | கோயில் | மாகாளம் | அம்பர் |
| 12 | அயனீச்சரம் | — | — | கோயில் | சுரம் | அயன் |
| 13 | அரங்கம் | திருச்சி | ஸ்ரீரங்கம் | ஆற்றிடைக்குறை | ஒரே சொல் | |
| 14 | அரசிலி | தென்னார்க்காடு | ஒழிந்தியாபட்டு | அரசமரம்/ இறைவன் | இலி | அரசு |
| 15 | அரதைப் பெரும் பாழி | தஞ்சாவூர் | அரித்துவார மங்கலம் | தாவரம் | பாழி | அரதை |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 16 | அரிசிற் கரைப் புத்தூர் | " | அழகா புத்தூர் | தாவரம் | ஊர் (புது) | அரிசிற்கரை |
| 17 | அல்லிக்கேணி | சென்னை | திருவல்லிக்கேணி | மலர்+நீர்நிலை | கேணி | அல்லி |
| 18 | அவளிவணல்லூர் | தஞ்சாவூர் | அவளிவணல்லூர் | புராணம்/வனம் | ஊர் (நல்) | அவளிவளம் |
| 19 | அவிநாசி (புக்கொளியூர்) | கோயம்புத்தூர் | அவிநாசி | இறைப்பெயர் | ஒரே சொல் | |
| 20 | அழுந்தூர் | தஞ்சாவூர் | தேரழுந்தூர் | — | ஊர் | — |
| 21 | அளப்பூர் | — | — | அளம் | ஊர் | அளம் |
| 22 | அறப்பள்ளி | — | — | — | பள்ளி | அரன் |
| 23 | அறையணி நல்லூர் | தென்னார்க்காடு | அரகண்ட நல்லூர் | பாறை | ஊர் (நல்) | அறையணி |
| 24 | அன்பில் (ஆலந் துறை) | திருச்சி | திருமாலயன் துறை, கீழன்பில், அன்பில் | — | ஒரே சொல் | |
| 25 | அன்னியூர் | தஞ்சாவூர் | பொன்னூர் | ஆட்பெயர் | ஊர் | அன்னி |
| 26 | ஆக்கூர் | தஞ்சாவூர் | ஆக்கூர் | வெள்ளாளர் இயல்பு | ஊர் | ஆக்கு |
| 27 | ஆடானை | இராமநாதபுரம் | திருவாடானை | புராணக்கதை | ஒரே சொல் | |
| 28 | ஆதனூர் | தஞ்சாவூர் | ஆதனூர் | குடிப்பெயர் | ஊர் | ஆதன் |
| 29 | ஆப்பனூர் | மதுரை | ஆப்புடையார் கோயில் | புராணம் | ஊர் | ஆப்பு |
| 30 | ஆப்பாடி | தஞ்சாவூர் | திருவாப்பாடி | ஆய்/தாவரம் | பாடி | ஆ |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 31 | ஆமத்தூர் | தென்னார்க்காடு | திருவாமாத்தூர் | விலங்கு | ஊர் | ஆமா |
| 32 | ஆமூர் | — | ஆமூர் | — | ஊர் | — |
| 33 | ஆய்ப்பாடி | — | — | குடிப்பெயர் | பாடி | ஆய் |
| 34 | ஆரூர் | தஞ்சாவூர் | திருவாரூர் | தாவரம் | ஊர் | ஆர் |
| 35 | ஆலங்காடு | செங்கற்பட்டு | திருவாலங்காடு | ,, | காடு | ஆல் |
| 36 | ஆலம் பொழில் | தஞ்சாவூர் | ஆலம் பொழில் | ,, | பொழில் | ஆல் |
| 37 | ஆவி | ,, | திருவாவி | புராணம்/ஆலை | ஒரே சொல் | |
| 38 | ஆவடுதுறை | ,, | திருவாவடுதுறை | விலங்கு | துறை | ஆவடு |
| 39 | ஆவூர் | ,, | ஆவூர் | விலங்கு/தாவரம் | ஊர் | ஆ |
| 40 | ஆறை(மேற்றளி) | — | — | கோட்டை பாறை | ஒரே சொல் | — |
| 41 | ஆனைக்கா | திருச்சி | திருவானைக்காவல் | விலங்கு | கா | ஆனை |
| 42 | இடும்பாவனம் | தஞ்சாவூர் | இடும்பாவனம் | புராணம் | வனம் | இடும்பன் |
| 43 | இடைக்குளம் | ,, | மருத்துவக் குடி | நீர்நிலை | குளம் | இடை |
| 44 | இடைச்சுரம் | செங்கற்பட்டு | திருவிடைச்சுரம் | கோயில் | சுரம் | இடை |
| 45 | இடைப்பள்ளி | — | — | — | பள்ளி | இடை |
| 46 | இடை மருதூர் | தஞ்சாவூர் | திருவிடைமருதூர் | தாவரம் | ஊர் | இடைமருது |
| 47 | இந்தளூர் | ,, | இந்தளூர் | தாவரம் | ஊர் | இந்தளம் |
| 48 | இராமேச்சுரம் | இராமநாதபுரம் | இராமேச்சுரம் | இறைப்பெயர் | சுரம் | இராமன் |
| 49 | இருக்குவேளூர் | — | — | — | ஊர் | — |
| 50 | இரும்புதல் | தஞ்சாவூர் | இரும்புதலை | தாவரம் | புதல் | இரும் |
| 51 | இரும்பூளை | தஞ்சாவூர் | ஆலங்குடி | தாவரம் | பூளை | இரும் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 52 | இரும்பைமாகாளம் | தென்னார்க்காடு | இரும்பைமாகாளம் | தாவரம்+புராணம் | மாகாளம் | இரும்பை |
| 53 | இலம்பையங் கோட்டூர் | செங்கல்பட்டு | இலம்பையங் கோட்டூர் | தாவரம் | ஊர் | இலம்பை |
| 54 | இளையான்குடி | — | — | — | குடி | இளையான் |
| 55 | இன்னம்பர் | தஞ்சாவூர் | இன்னம்பர் | நீர்நிலை | ஒரேசொல் | — |
| 56 | ஈங்கோய்மலை | திருச்சி | திருவிங்கநாதமலை | தாவரம் | மலை | ஈங்கோய் |
| 57 | உசாத்தானம் | தஞ்சாவூர் | கோயிலூர் | கோயில் | தானம் | உசா |
| 58 | உடுப்பூர் | ஆந்திரா | — | விலங்கு | ஊர் | உடும்பு |
| 59 | உத்தரகோச மங்கை | இராமநாதபுரம் | — | — | மங்கலம் | உத்தரகோசம் |
| 60 | உத்தராபதி | — | — | — | பதி | உத்தரம் |
| 61 | உறந்தை | திருச்சி | உறையூர் | — | ஊர் | உறை |
| 62 | ஊற்றத்தூர் | — | — | நீர் | ஊர் | ஊற்று |
| 63 | ஊறல் | வடஆர்க்காடு | தககோலம் | நீர் | ஒரேசொல் | |
| 64 | எதிர்கொள்பாடி | தஞ்சாவூர் | மேலைத் திரு மணஞ்சேரி | சுந்தரர்ண வாழ்வு | பாடி | எதிர்கொள் |
| 65 | எயினனூர் | — | — | — | ஊர் | எயினன் |
| 66 | எருக்கத்தம்புலியூர் | தென்னார்க்காடு | ராஜேந்திர பட்டணம் | தாவரம் | ஊர் | எருக்கு |
| 67 | எவ்வுளூர் | செங்கற்பட்டு | திருவள்ளூர் | கோயில் | ஊர் | — |
| 68 | எறும்பியூர் மலை | திருச்சி | திருஎறும்பூர் | — | மலை | எறும்பு |
| 69 | ஏடகம் | மதுரை | — | ஏடுஒதுங்கிய இடம் | அகம் | ஏடு |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 70 | ஏமப்பேறூர் | சோழநாடு | — | — | ஊர் | ஏமம் |
| 71 | ஐயாறு | தஞ்சாவூர் | திருவையாறு | ஆறு | ஆறு | ஐ |
| 72 | ஒற்றியூர் | செங்கற்பட்டு | திருவொற்றியூர் | — | ஊர் | ஒற்றி |
| 73 | ஒத்தூர் | வட ஆர்க்காடு | திருவத்தூர், திருவத்திபுரம், செய்யாறு | — | ஊர் | ஒத்து |
| 74 | ஓமாம்புலியூர் | தென்னார்காடு | ஓமாம்புலியூர் | — | ஊர் | ஓமாம்புலி |
| 75 | கச்சி | செங்கற்பட்டு | காஞ்சி, காஞ்சிபுரம் கஞ்சிபுரம், ஏகம்பம் | தாவரம் | ஒரேசொல் | கச்சபம் |
| 76 | கச்சூர் | செங்கற்பட்டு | திருச்கச்சூர் | புராணம் | ஊர் | |
| 77 | கஞ்சனூர் | தஞ்சாவூர் | கஞ்சனூர் | — | ஊர் | கஞ்சன் |
| 78 | கஞ்சாறூர் | — | — | தாவரம் | ஊர் | கஞ்சாறு |
| 79 | கடந்தை (பெண்ணாகடம்) | தென்னார்க்காடு | திருக்கடந்தை | தாவரம்/புராணம் | துறை | கடம்பு |
| 80 | கடப்பந்துறை | திருச்சி | குழித்தலை | தாவரம் | துறை | கடம்பு |
| 81 | கடம்பூர் | தஞ்சாவூர் | மேலைக்கடம்பூர் | தாவரம் | ஊர் | கடம்பு |
| 82 | கடலூர் | ,, | திருமெய்ஞ்ஞானம், திருக்கடவூர் | தாவரம்/கோயில் | ஊர் | கடம்பு |
| 83 | கடிக்குளம் | ,, | கற்பகனார் கோயில் (குளம்) | மணம் | குளம் | கடி |
| 84 | கடிகை | மலை நாடு | சோளங்கிபுரம் | கலாசாலை | ஒரேசொல் | |
| 85 | கடித்தானம் | மலை நாடு | திருக்கடித்தானம் | மணம் | தானம் | கடி |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 86 | கடுவாய்க்கரைப் புத்தூர் | தஞ்சாவூர் | ஆண்டார்கோயில் | ஆற்றின்கரை | ஊர் | கடுவாய்க்கரை |
| 87 | கடைமுடி | தஞ்சாவூர் | — | — | முடி | கடை |
| 88 | கடையக்குடி | — | — | — | குடி | கடை |
| 89 | கண்டியூர் | தஞ்சாவூர் | திருக்கண்டியூர் | | ஊர் | கண்டி |
| 90 | கண்ணங்குடி | — | திருக்கண்ணங்குடி | இறைவன் பெயர் | குடி | கண்ணன் |
| 91 | கண்ணபுரம் | தஞ்சாவூர் | திருக்கண்ணபுரம் | ,, | புரம் | கண்ணன் |
| 92 | கண்ணார்கோயில் | தஞ்சாவூர் | குறுமாணக்குடி | வாணிபர் வாழ்ந்த இடம் இறைவன் பெயர் | கோயில் | கண்ணார் |
| 93 | கணமங்கலம் | — | கணமங்கலத்திடல் | இறைவற்பெயர் | மங்கலம் | கண்ணன் |
| 94 | கரம்பனூர் | — | உத்தமன் கோயில் | — | ஊர் | கரம்பன் |
| 95 | கரவீரம் | தஞ்சாவூர் | கரையபுரம் | தாவரம் | ஒரேசொல் | |
| 96 | கருக்குடி | ,, | மருதாந்தநல்லூர் | — | குடி | — |
| 97 | கருகாவூர் | ,, | காளாவூர் | புராணம் | ஊர் | — |
| 98 | கருந்திட்டைக்குடி | — | — | — | குடி | கருந்திட்டை |
| 99 | கருப்பறியலூர் | தஞ்சாவூர் | மேலைக்காழி, தலைஞாயிறு | தாவரம் | ஊர் | கரும்பு |
| 100 | கருவிலி | ,, | கருவிலி | புராணம் | — | ஒரேசொல் |
| 101 | கருவூர் | திருச்சி | கரூர் | புராணம் | ஊர் | கரு |
| 102 | கலயநல்லூர் | தஞ்சாவூர் | சாக்கோட்டை | கமலம் | ஊர் | கலயம் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 103 | கலிக்காமூர் | ,, | அன்னப்பன் பேட்டை | கழி | ஊர் | கலி |
| 104 | கழிப்பாலை | தென்ஆர்க்காடு | கழிப்பாலை | கழி | பாலை | கழி |
| 105 | கழுக்குன்றம் | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் | கழுகு | குன்றம் | கழுகு |
| 106 | கள்ளில் | செங்கற்பட்டு | திருக்கள்ளம், திருக்கண்டலம் | தாவரம் | இல் | கள்ளி |
| 107 | களந்தை | — | — | — | ஓரேசொல் | |
| 108 | களர் | தஞ்சாவூர் | திருக்களர் | நிலம் | ஓரேசொல் | |
| 109 | கற்குடி | திருச்சி | உய்யகொண்டான் மலை | மலை | குடி | கல் |
| 110 | கறைக்காடு | — | — | காரைக்காடு | காடு | கறை |
| 111 | கன்றாப்பூர் | தஞ்சாவூர் | கண்ணாப்பூ | புராணம் | ஊர் | கன்று ஆப்பு |
| 112 | காட்கரை | மலைநாடு | திருகாட்கரை | தாவரம் | கரை | — |
| 113 | காட்டுப்பள்ளி | தஞ்சாவூர் | திருக்காட்டுப்பள்ளி | கோயில் | பள்ளி | காடு |
| 114 | காட்டூர் | — | ஆரணியேசுவரர் கோயில் | காடு | ஊர் | காடு — |
| 115 | காம்பீலி | — | — | — | — | — |
| 116 | காரிக்கரை | ஆந்திரநாடு | — | ஆற்றுப்பெயர் | கரை | காரி |
| 117 | காரூர் | — | — | — | ஊர் | கார் |
| 118 | காரைக்கால் | காரைக்கால் | காரைக்கால் | தாவரம்/காயல் | கால் | காரை |
| 119 | காவிரிப்பூம்பட்டினம் (புகார், பூம்புகார்) | தஞ்சாவூர் | பூம்புகார் | ஆற்றின் கரை | பட்டினம் | காவிரி—பூ |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 120 | காழி (பன்னிருபெயர்கள்) | தஞ்சாவூர் | சீர்காழி | — | ஒரேசொல் | — |
| 121 | காறாயில் | ,, | திருக்காறைவாசல் | காரைஎயில் | எயில் | காரை |
| 122 | கானப்பேர் | இராமநாதபுரம் | காளையார்கோயில் | காட்டுப் பகுதி | பேரர் | கானம் |
| 123 | கானாட்டுமுள்ளூர் | தஞ்சாவூர் | கானாட்டம்புலியூர் | காட்டுப்பகுதி/ தாவரம் | ஊர் | கானாட்டுமுள் |
| 124 | கானூர் | ,, | திருக்கானூர் | காட்டுப்பகுதி | ஊர் | கான் |
| 125 | குடந்தை, குடமூக்கு | ,, | கும்பகோணம் | திசை/புராணம் | மூக்கு | குடம். |
| 126 | குடப்பாச்சில் | — | — | — | ஒரேசொல் | — |
| 127 | குடவாயில் | தஞ்சாவூர் | குடவாசல் | திசை | வாயில் | குடக்கு |
| 128 | குண்டையூர் | — | — | — | ஊர் | குண்டை |
| 129 | குரங்குக்கா | தஞ்சாவூர் | குரக்குக்கா | விலங்கு | கா | குரங்கு |
| 130 | குரங்கணில் முட்டம் | வடஆர்க்காடு | குரங்கணில்முட்டம் | தாவரம் | முட்டம் | குரங்கணில் |
| 131 | குரங்காடுதுறை (வட, தென்) | தஞ்சாவூர் | வடகுரங்காடுதுறை ஆடுதுறை | குரங்கு நீர்நிலை | துறை | குரங்கு — |
| 132 | குருகாவூர் | ,, | திருக்கடாவூர் | பறவை | ஊர் | குருகு |
| 133 | குருகூர் | திருநெல்வேலி | ஆழ்வார் திருநகரி | பறவை | ஊர் | குருகு |
| 134 | குருந்தங்குடி | — | — | தாவரம் | குடி | குருந்து |
| 135 | குளந்தை | — | பெருங்குளம் | குளம் | ஒரேசொல் | |
| 136 | குற்றாலம் | திருநெல்வேலி | குற்றாலம் (21 பெயர்கள் | மரம் | ஒரேசொல் | |
| 137 | குறுக்கை | தஞ்சாவூர் | குறுக்கை | தாவரம் | ஒரேசொல் | |
| 138 | குறுங்குடி | திருநெல்வேலி | திருக்குறுங்குடி | இடம் | குடி | குறும் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 139 | குறும்பொறையூர் | — | — | — | ஊர் | குறும்பொறை |
| 140 | குன்றியூர் | — | — | மரம் | ஊர் | குன்றி |
| 141 | கூடலூர் | தஞ்சாவூர் | ஆடுதுறைப் பெருமாள் கோயில் | ஆறுகள் கூடுமிடம் | ஊர் | கூடல் |
| 142 | கூடலையாற்றூர் | தென்னார்க்காடு | கூடலையாற்றூர் | " | ஊர் | கூடலை ஆற்று |
| 143 | கூரூர் | — | — | — | ஊர் | — |
| 144 | கைச்சினம் | தஞ்சாவூர் | கச்சினம் | — | ஒரே சொல் | |
| 145 | கொட்டையூர் | " | கொட்டையூர் | தாவரம் | ஊர் | கொட்டை |
| 146 | கொடிமங்கலம் | — | — | — | — | — |
| 147 | கொடிமாடச் செங்குன்றூர் | சேலம் | திருச்செங்கோடு | செம்மைநிறம் | ஊர் | செங்குன்று கொடும் |
| 148 | கொடுங்குன்றம் | இராமநாதபுரம் | பிரான்மலை | மலை | குன்றம் | |
| 149 | கொடும்பாளூர் | — | — | — | ஊர் | — |
| 150 | கொள்ளம்புதூர் | தஞ்சாவூர் | கொள்ளம்புதூர் | — | ஊர் | |
| 151 | கோகழி (திருப் பெருந்துறை) | — | ஆவுடையார் கோயில்/காளையார் கோயில் | புராணம் | ஒரே சொல் | |
| 152 | கோட்டாறு | இராமநாதபுரம் | திருக்கோட்டியூர் | அமைப்பு | ஊர் | கோட்டம் |
| 153 | கோட்டியூர் | — | கொட்டாரம் | வளைந்த ஆறுப் பகுதி | ஆறு | கோட்டம் |
| 154 | கோட்டூர் | தஞ்சாவூர் | கோட்டூர் | அமைப்பு | ஊர் | கோட்டம் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 155 | கோடி | தஞ்சாவூர் | கோடிக்கரை, குழகர் கோயில் | முனை | ஓரேசொல் | கோடி |
| 156 | கோடிகா | ,, | திருக்கோடிகா | முனை-சோலை | கா | கோடி |
| 157 | கோத்திட்டைக்குடி | — | — | — | குடி | கோத்திட்டை |
| 158 | கோலக்கா | தஞ்சாவூர் | கோலக்கா திருத்தாளமுடையார்கோயில் | இயற்கை | கா | கோலம் |
| 159 | கோவலூர் | தென்னார்க்காடு | திருக்கோயிலூர் | — | ஊர் | |
| 160 | கோழம்பம் | தஞ்சாவூர் | கோழம்பம் | — | ஓரேசொல் | கோவல் |
| 161 | கோளிலி | தஞ்சாவூர் | திருக்குவளை | தாவரம் | இலி | கோள் |
| 162 | சக்கரக்கோட்டம் | — | — | — | — | — |
| 163 | சக்கரப்பள்ளி | தஞ்சாவூர் | ஐயம்பேட்டை | — | பள்ளி | சக்கரம் |
| 164 | சங்கமங்கை | — | — | — | மங்கலம் | சங்கம் |
| 165 | சண்டியூர் | — | — | — | ஊர் | சண்டி |
| 166 | சாத்தங்குடி | — | — | — | குடி | சாத்தர் |
| 167 | சாத்தமங்கை | தஞ்சாவூர் | திருச்சியாத்தமங்கை | — | மங்கலம் | சாத்தர் |
| 168 | சாந்தம் புத்தூர் | — | — | தாவரம் | ஊர் | சாந்தம் |
| 169 | சிக்கல் | தஞ்சாவூர் | சிக்கல் | — | ஓரேசொல் | |
| 170 | சிராப்பள்ளி | திருச்சி | திருச்சிராப்பள்ளி | முனிவர் பெயர் | பள்ளி | சிரா |
| 171 | சிரீவரமங்கை | திருநெல்வேலி | நாங்குநேரி, வானமாமலை | இறைப்பெயர் | மங்கலம் | ஸ்ரீ |
| 172 | சிவபுரம் | தஞ்சாவூர் | சிவபுரம் | இறைப்பெயர் | புரம் | சிவன் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 173 | சிற்றேமம் | ,, | சிற்றாய்மூர், சிற்றாம்பூர், எழிலூர், நேமம் | — | ஏமம் | சிறு |
| 174 | சிறுகுடி | ,, | சிறுகுடி | சிறியகுடியிருப்பு | குடி | சிறு |
| 175 | சிறுபுலியூர் | ,, | சிறுபுலியூர் | விலங்கு | ஊர் | சிறுபுலி |
| 176 | சுழியல் | இராமநாதபுரம் | திருச்சுழி | — | ஓரேசொல் | |
| 177 | செங்காட்டங்குடி | தஞ்சாவூர் | செங்காட்டம்குடி | — | குடி | செங்காடு |
| 178 | செங்குன்றூர் | மலைநாடு | செங்குன்றூர் | செம்மை நிறமான குன்று | ஊர் | செங்குன்று |
| 179 | செம்பொன்பள்ளி | தஞ்சாவூர் | செம்பொன்னார் கோயில் | கோயிற்பெயர் | பள்ளி | செம்பொன் |
| 180 | சேய்ஞலூர் | ,, | சேங்கனூர் | இறைப்பெயர் | ஊர் | சேய் |
| 181 | சேலூர் | ,, | — | — | ஊர் | சேல் |
| 182 | சேற்றூர் | — | — | — | ஊர் | சேறு |
| 183 | சேறை | தஞ்சாவூர் | உடையார் கோயில் | சேறு | ஓரேசொல் | |
| 184 | சோபுரம் | தென்னார்காடு | தியாகவல்லி | சோழர்-புரம் | புரம் | சோழர் |
| 185 | சோற்றுத்துறை | தஞ்சாவூர் | திருச்சோற்றுத்துறை | தாவரம் | துறை | சோறு |
| 186 | தக்களூர் | — | — | — | ஊர் | — |
| 187 | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | தஞ்சாவூர், தஞ்சை | ஆக்கூர் (வேளாளர்) உணவு ஆக்கும் நிலை | ஊர் | தம்ஆக்கு |
| 188 | தருமபுரம் | காரைக்கால் | தருமபுரம் | — | புரம் | தருமம் |
| 189 | தலைச்சங்காடு | தஞ்சாவூர் | தலைச்சங்காடு | செம்மை நிறமான காடு | காடு | தலை, செம்மை |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறந்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 190 | தலையாலங்காடு | தஞ்சாவூர் | தலையாலங்காடு | தாவரம் | காடு | தலை |
| 191 | தலையூர் | — | — | — | ஊர் | ஆல் |
| 192 | திங்களூர் | — | — | — | ஊர் | திங்கள் |
| 133 | தவத்துறை | திருச்சி | லால்குடி | கோயிற்பெயர் | துறை | தவம் |
| 194 | திருஇடஎந்தை | செங்கல்பட்டு | திருவிடஎந்தை | புராணம் | ஒரேசொல் | |
| 195 | திருத்திணைநகர் | தென்னார்க்காடு | தீர்த்தனகிரி | தாவரம் | நகர் | திணை (திரு) |
| 196 | திருந்துதேவன்குடி | தஞ்சாவூர் | திருந்துதேவன்குடி | இறை | குடி | திருந்துதேவன் |
| 197 | திருநகரி | ,, | திருநகரி | — | — | — |
| 198 | தில்லை | தென் ஆர்க்காடு | சிதம்பரம் (பல பெயர்கள்) | ,, | ஒரேசொல் | |
| 199 | திலதைப்பதி | தஞ்சாவூர் | திலதர்ப்பணபுரி, மதிமுத்தம் | தாவரம் | பதி | திலதை |
| 200 | துடையூர் | — | — | — | — | |
| 201 | துருத்தி | தஞ்சாவூர் | குற்றாலம் | ஆற்றிடைக்குறை | ஒரேசொல் | |
| 202 | துவையூர் | — | — | — | ஊர் | துவை |
| 203 | துறையூர் | தென் ஆர்க்காடு | திருத்தளூர்/திருத்தலூர் | இருப்பிடம் (நீர்நிலை | ஊர் | துறை |
| 204 | தெங்கூர் | தஞ்சாவூர் | தெங்கூர் | தாவரம் | ஊர் | தென்னை |
| 205 | தெள்ளாறு | — | — | ஆறு | ஆறு | தெளிவு |
| 206 | தெளிச்சேரி | காரைக்கால் | கோயிற்பத்து | — | சேரி | தெளி |
| 207 | தென்குடித்திட்டை | தஞ்சாவூர் | திட்டை | திட்டுப்பகுதி | திட்டை | (தென்)குடி |
| 208 | தேவூர் | ,, | தேவூர் | இறை | ஊர் | தெய்வம் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்பிக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 209 | நணா | பெரியார் | பவானி | நன்றாமலை | ஒரேசொல் | |
| 210 | நந்தம்பாடி | — | — | — | பாடி | நந்தன் |
| 211 | நந்திபுரவிண்ணகரம் | — | நாதன்கோயில் | இறை | விண்ணகரம் | |
| 212 | நல்லக்குடி | தஞ்சாவூர் | குயிலாலந்துறை | — | குடி | நல்ல |
| 213 | நல்லம் | ,, | கோனேரிராஜபுரம் | நல்லநகர் | ஒரேசொல் | நந்திபுரம் |
| 214 | நல்லாற்றூர் | — | — | நீர்நிலை | ஊா | நல்லஆறு |
| 215 | நல்லூர் | தஞ்சாவூர் | நல்லூர் | நல்லஊர் | ஊர் | நல்ல |
| 216 | நல்லூர்ப்பெருமணம் | ,, | ஆச்சாள்புரம் | நல்லஊர்/கோயிற் பெயர் | பெருமணம் | நல்லூர் |
| 217 | நள்ளாறு | காரைக்கால் | திருநள்ளாறு | ஆற்றுபெயர், நடுவு | ஆறு | நடு |
| 218 | நற்குன்றம் | — | — | சிறந்தகுன்றம் | குன்றம் | நல்ல |
| 219 | நறையீர் | தஞ்சாவூர் | நறையூர் | இயற்கைவளம் | ஊர் | நறை |
| 220 | நன்னிலம் | தஞ்சாவூர் | நன்னிலம் | இயற்கைச்செழிப்புநிலம் | | நல்ல |
| 221 | நனிபள்ளி | ,, | புஞ்சை, கிடாரம் கொண்டான் | — | பள்ளி | நனி |
| 222 | நாகை (நாகைப்பட்டினம்) | ,, | நாகப்பட்டினம் | நாகம் இறை, நாகர் குடி | பட்டினம் | நாகம் |
| 223 | நாகேச்சுரம் | தஞ்சாவூர் | நாகேச்சுரம் | நாகம் | சுரம் | நாகர் |
| 224 | நாங்கூர் | ,, | நாங்கூர் | நான்கு ஊர் | ஊர் | நான்கு |
| 225 | நாட்டியத்தான்குடி | — | — | இறைப்பெயர் | குடி | நாட்டியத்தான் |
| 226 | நாரையூர் | தஞ்சாவூர் | நாரையூர் | பறவை | ஊர் | நாரை |
| 227 | நாலூர் | ,, | நாலூர் | நான்கு ஊர் | ஊர் | நான்கு |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 228 | நாவலூர் | தென்ஆர்க்காடு | திருநாமநல்லூர் | தாவரம் | ஊர் | நாவல் |
| 229 | நாவாய் | மலைநாடு | திருநாவாய் | — | ஒரேசொல் | — |
| 230 | நின்றஊர் | செங்கல்பட்டு | திருநின்றஊர் | இறைக்கோலம் | ஊர் | நின்ற |
| 231 | நின்றியூர் | தஞ்சாவூர் | திருநின்றியூர் | இறைக்கோலம் | ஊர் | நின்ற |
| 232 | நீடூர் | " | நீடூர் | இயல்பு | ஊர் | நீட்டம் |
| 233 | நீர்மலை | செங்கல்பட்டு | திருநீர்மலை | இயற்கை | மலை | நீர் |
| 234 | நீலக்குடி | தஞ்சாவூர் | தென்னலக்குடி | — | குடி | நீலன் |
| 235 | நெடுங்களம் | திருச்சி | திருநட்டான்குளம் | பரப்பு | களம் | நெடுமை |
| 236 | நெடுவாயில் | — | — | பரப்பு | வாயில் | நெடுமை |
| 237 | நெய்த்தானம் | தஞ்சாவூர் | தில்லைத்தானம் | இறை | தானம் | நெய் |
| 238 | நெய்தல்வாயில் | — | — | இயற்கை | வாயில் | நெய்தல் |
| 239 | நெல்லிக்கா | தஞ்சாவூர் | திருநெல்லிக்கா | தாவரம் | கா | நெல்லி |
| 240 | நெல்வாயில் | தென்ஆர்க்காடு | சிவபுரி | தாவரம் | வாயில் | நெல் |
| 241 | நெல்வாயில்/ அரத்துறை | " | திருவரத்துறை | " | வாயில் | நெல் |
| 242 | நெல்வெண்ணெய் | " | நெய்வெணை | — | ஒரேசொல் | |
| 213 | நெல்வேலி | திருநெல்வேலி | திருநெல்வேலி | தாவரம் | வேலி | நெல் |
| 244 | நெற்குன்றம் | — | — | — | குன்றம் | நெல் |
| 245 | பந்தணைநல்லூர் | தஞ்சாவூர் | பந்தணைநல்லூர் | " | ஊர் | பந்தணை |
| 246 | பயற்றூர் | " | திருபயற்றங்குடி | தாவரம் | ஊர் | பயறு |
| 247 | பரங்குன்று | மதுரை | திருப்பரங்குன்றம் | இறை/இயற்கை | குன்று | பரன் |
| 248 | பராய்த்துறை | திருச்சி | திருப்பராய்த்துறை | இயற்கை | துறை | பராய் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 249 | பரிதி நியமம் | தஞ்சாவூர் | பருத்தியப்பர் கோயில் | இறை | நியமம் | பரிதி |
| 250 | பழமண்ணிப்படிக் கரை | ,, | இலுப்பைப்பட்டு | ஆற்றுப்பெயர் | கரை | பழமண்ணியாறு |
| 251 | பழனம் | ,, | திருப்பழனம் | இயற்கை | ஒரே சொல் | |
| 252 | பழுவூர் | திருச்சி | திருப்பழுவூர் | தாவரம் | ஊர் | பழு |
| 253 | பழையாறை | தஞ்சாவூர் | பழையாறை | — | ஆறை | பழைய |
| 254 | பள்ளியின்முக் கூடல் | ,, | அரியான் பள்ளி | ஆறுகள்கூடுமிடம் | கூடல் | மூன்று |
| 255 | பறியலூர் | ,, | பரசலூர் | — | ஊர் | பறியல் |
| 256 | பனங்காட்டூர் (புறவார்) | தென்னார்க்காடு | பனையபுரம் | தாவரம் | ஊர் | பனங்காடு |
| 257 | பனங்காட்டூர் (வன்பார்த்தான்) | வடஆர்க்காடு | திருப்பனங்காடு | தாவரம் | ஊர் | பனங்காடு |
| 258 | பனந்தாள் | தஞ்சாவூர் | திருப்பனந்தாள் | ,, | தாள் | பனை |
| 259 | பனையூர் | ,, | திருப்பனையூர் | ,, | ஊர் | பனை |
| 260 | பாச்சிலாச்சிராமம் | ,, | திருவாசி | — | ஆச்சிராமம் | பாச்சில் |
| 261 | பாசூர் | செங்கல்பட்டு | திருப்பாச்சூர் | இயற்கைச் செழிப்பு | ஊர் | பசுமை |
| 262 | பாண்டிக்கொடு முடி | பெரியார் | கொடுமுடி | ஆட்பெயர் | கொடுமுடி | பாண்டி |
| 263 | பாதிரிப்புலியூர் | தென்னார்க்காடு | திருப்பாப்புலியூர் | தாவரம் | ஊர் | பாதிரி (புலி) |
| 264 | பாம்பணிமாநகர் | தஞ்சாவூர் | பாமாணி, பாம்பணி | புராணம் | நகர் | பாம்பணி |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 265 | பாம்புரம் | " | திருப்பாம்புரம் | " | புரம் | பாம்பு |
| 266 | பாலைத்துறை | " | திருப்பாலைத்துறை | நீர்த்துறை | துறை | பாலை |
| 267 | பாற்றுறை | திருச்சி | திருப்பாற்றுறை | நீர்த்துறை | துறை | பால் |
| 268 | புகலூர் | தஞ்சாவூர் | திருப்புகலூர் | — | ஊர் | புகல் |
| 269 | புட்குழி | — | — | — | குடி | புள் |
| 270 | புத்தூர் | இராமநாதபுரம் | திருப்புத்தூர் | புதியகுடியிருப்பு | ஊர் | புதிய |
| 271 | புல்லாணி | " | திருப்புல்லாணி | இறை | ஒரேசொல் | |
| 272 | புலியூர் | குட்டநாடு | திருப்புலியூர் | விலங்கு | ஊர் | புலி |
| 273 | புள்ளம்பூதங்குடி | — | — | — | குடி | புள்-அம்பூதன் |
| 274 | புள்ளமங்கை | தஞ்சாவூர் | பசுபதி கோயில் | புள் | மங்கலம் | புள் |
| 275 | புள்ளிருக்குவேளூர் | " | வைத்தீஸ்வரன் கோயில் | புள் | ஊர் | புள்-இருக்கு வேள் |
| 276 | புளிங்குடி | திருநெல்வேலி | புளியங்குடி | தாவரம் | குடி | புளி |
| 277 | புற்குடி | — | — | தாவரம் | குடி | புள் |
| 278 | புறம்பயம் | தஞ்சாவூர் | புறம்பயம் | — | — | — |
| 279 | புன்கூர் | " | திருப்புன்கூர் | தாவரம் | ஊர் | புங்கு |
| 280 | புனவாயில் | இராமநாதபுரம் | புனவாசல் | தாவரம் | வாயில் | புன்னை |
| 281 | பூவணம் | மதுரை | திருப்பூவணம் | தாவரம் | வனம்(வணம்) | பூ |
| 282 | பூவனூர் | தஞ்சாவூர் | பூவனூர் | தாவரம் | ஊர் | பூவனம் |
| 283 | பூமியூர் | — | — | — | ஊர் | பூமி |
| 284 | பெருமபுலியூர் | தஞ்சாவூர் | திருப்பெரும்புலியூர் | — | ஊர் | புலி |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 285 | பெருமங்கலம் | — | — | — | மங்கலம் | பெரிய |
| 286 | பெருமிழலை | தஞ்சாவூர் | — | — | ஒரேசொல் | |
| 287 | பெருவேளூர் | தஞ்சாவூர் | காட்டூர், ஐயன் பேட்டை | — | ஊர் | பெருவேள் |
| 288 | பேணுபெருந்துறை | தஞ்சாவூர் | திருப்பத்துறை | நீர் நிலை, கோயில் | துறை | பெரிய |
| 289 | பேர் நகர் | ,, | கோவிலடி | — | நகர் | பேர் |
| 290 | பேராவூர் | — | — | — | ஊர் | |
| 291 | பேரூர் | கோயம்புத்தூர் | மேலைச்சிதப் பரம் | பரப்பு | ஊர் | பெரிய |
| 292 | பேரெயில் | தஞ்சாவூர் | ஓகைப்பேரையூர், வங்காரப்பேரையூர் | பெரியஎயில் | எயில் | பெரிய |
| 293 | பைஞ்ஞீலி | ,, | திருப்பைஞ்ஞீலி | சிறப்பு | ஒரே சொல் | |
| 294 | மங்கலக்குடி | ,, | திருமங்கலக்குடி | ,, | குடி | மங்கலம் |
| 295 | மங்கலம் | ,, | திருமங்கலம் | ,, | ஒரே சொல் | |
| 296 | மணஞ்சேரி | தஞ்சாவூர் | கீழைமணஞ்சேரி | வளம் | சேரி | மணம் |
| 297 | மேலை மணஞ்சேரி | ,, | எதிர்கொள்பாடி | ,, | ,, | ,, |
| 298 | மணமேற்குடி | பாண்டிய நாடு | — | — | குடி | மண்மேல் |
| 299 | மணலி | தஞ்சாவூர் | மணலி | மணல் | ஒரேசொல் | |
| 300 | மணலூர் | — | — | — | — | — |
| 301 | மதுரை | மதுரை | மதுரை | தாவரம் | ஒரே சொல் | |
| 302 | மயிலாடுதுறை | தஞ்சாவூர் | மயிலாடுதுறை | பறவை | ,, | |
| 303 | மயிலை/மயிலாப்பு | சென்னை | மயிலாப்பூர் | பறவை | துறை | மயில் |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 304 | மயேந்திரப்பள்ளி | தஞ்சாவூர் | கோயிலடிப் பாளையம் | — | பள்ளி | மகேந்திரன் |
| 305 | மருகல் | ,, | திருமருகல் | தாவரம் | ஒரே சொல் | |
| 306 | மல்லை | செங்கற்பட்டு | மகாபலிபுரம் | மன்னன் பெயர் | ,, | |
| 307 | மழபாடி | தஞ்சாவூர் | திருமழபாடி | மக்கள் | பாடி | மழவர் |
| 308 | மறைக்காடு | ,, | வேதாரண்யம் | — | காடு | மறை |
| 309 | மாகறல் | செங்கற்பட்டு | மாகறல் | அறல் | அறல் | மா |
| 310 | மாகுடி | — | — | குடியிருப்புநெருக்கம் | குடி | மா |
| 311 | மாட்டூர் | — | — | — | ஊர் | மட்டு |
| 312 | மாணிகுடி | — | — | — | குடி | மாணி |
| 313 | மாணிகுழி | தென்ஆர்க்காடு | திருமாணிகுழி | — | குழி | மாணி |
| 314 | மாத்தூர் | — | — | — | ஊர் | மா |
| 315 | மாந்துறை | திருச்சி | திருமாந்துறை | — | துறை | மா |
| 316 | மாற்பேறு | வட ஆர்க்காடு | திருமால்பூர் | புராணம் | ஒரே சொல் | |
| 317 | மாறன்பாடி | தென்னார்காடு | மாறன்பாடி | — | பாடி | மாறன் |
| 318 | மீயச்சூர் | தஞ்சாவூர் | மீயச்சூர் | — | ஊர் | — |
| 319 | முக்குளம் | — | — | — | குளம் | மூன்று |
| 320 | முக்கூடல் | — | — | — | கூடல் | மூன்று |
| 321 | முசிறி | — | — | — | ஒரே சொல் | |
| 322 | முண்டீச்சுரம் | தென்னார்க்காடு | திருக்கண்டீச்சுரம் | கோயில் | சுரம் | — |
| 323 | முதுகாடு | — | — | — | காடு | முது |
| 324 | முதுகுன்றம் | தென்னார்க்காடு | விருத்தாச்சலம் | மலை | குன்றம் | முது |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 325 | முருகன்பூண்டி | கோயம்பத்தூர் | திருமுருகன்பூண்டி | புராணம், இயற்கை | பூண்டி | முருகன் |
| 326 | (தென்) முல்லை வாயில் | தஞ்சாவூர் | தென் திருமுல்லை வாயில் | தாவரம் | வாயில் | முல்லை |
| 327 | (வட)முல்லைவாயில் | செங்கற்பட்டு | திருமுல்லைவாயில் | ,, | ,, | ,, |
| 328 | முனைப்பாடி | தென்னார்க்காடு | — | — | பாடி | முனை |
| 329 | மூவலூர் | — | — | — | ஊர் | — |
| 330 | மூழிக்களம் | மலை நாடு | மூழிக்குளம் | — | களம் | மூழி |
| 331 | மெய்யம் | புதுக்கோட்டை | திருமயம் | — | ஒரேசொல் | |
| 332 | மோகூர் | — | — | — | ஊர் | — |
| 333 | வஞ்சைக்களம் | மலை நாடு | திருவஞ்சைக்களம் | தாவரம் | களம் | வஞ்சி |
| 334 | வடுகூர் | தென்ஆர்க்காடு | ஆண்டார்கோயில் | — | ஊர் | — |
| 335 | வண்டை | — | — | — | ஒரேசொல் | |
| 336 | வண்பரிசாரம் | கன்னியாகுமரி | திருப்பதிசாரம் | — | — | — |
| 337 | வண்வண்டூர் | மலைநாடு | திருவமுண்டூர் | — | ஊர் | |
| 338 | வரகுணமங்கை | — | — | — | மங்கலம் | வரகுணன் |
| 339 | வரிஞ்சையூர் | தஞ்சாவூர் | — | — | ஊர் | — |
| 340 | வல்லம் | வடஆர்க்காடு | திருவலம் | — | ஒரேசொல் | |
| 341 | வல்லவாழ் | மலைநாடு | திருவல்லா | — | — | — |
| 342 | வலஞ்சுழி | தஞ்சாவூர் | திருவலஞ்சுழி | நீர் நிலை | சுழி | வலம் |
| 343 | வலம்புரம் | தஞ்சாவூர் | பெரும்பள்ளம் | — | புரம் | வலம் |
| 344 | வலிதாயம் | சென்னை | பாடி | — | தாயம் | வலி |
| 345 | வலிவலம் | தஞ்சாவூர் | — | — | வலம் | வலி |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 346 | வழுவூர் | — | — | — | ஊர் | வழு |
| 347 | வளைகுளம் | — | — | அமைப்பு | குளம் | வளை |
| 348 | வன்னியூர் | தஞ்சாவூர் | அன்னூர் | தாவரம் | ஊர் | வன்னி |
| 349 | வாஞ்சியம் | ” | திருவாஞ்சியம் | — | ஒரே சொல் | |
| 350 | வாட்போக்கி | திருச்சி | ஐயர்மலை | இறை | ஒரே சொல் | |
| 351 | வாதவூர் | மதுரை | திருவாதவூர் | தர்க்கம் | ஊர் | வாதம் |
| 352 | வாய்மூர் | தஞ்சாவூர் | திருவாய்மூர் | — | ஊர் | — |
| 353 | வாழ்கொளிபுத்தூர் | ” | வாளொளிபுத்தூர் | இறை | ஊர் | வாழ்கொளி |
| 354 | வாறன்விளை | மலைநாடு | ஆரன்முளா | — | விளை | வாறன் |
| 355 | வான்மியூர் | சென்னை | திருவான்மியூர் | — | ஊர் | வான்மி |
| 356 | விசயமங்கை | தஞ்சாவூர் | திருவிசயமங்கை | வெற்றி | மங்கை (மங்கலம்) | விசயம் |
| 357 | விடைவாய்க்குடி | ” | திருவிடைவாயில் | — | குடி | விடை |
| 358 | வித்துவக்கோடு | மலைநாடு | திருமிற்றக்கேடு | — | கோடு | — |
| 359 | வியலூர் | தஞ்சாவூர் | திருவியலூர் | பரப்பு | ஊர் | வியல் |
| 360 | வில்லிபுத்தூர் | — | ஸ்ரீவில்லிபுத்தூர் | — | ஊர் | வில்லி |
| 361 | விளநகர் | தஞ்சாவூர் | விளநகர் | தாவரம் | நகர் | விள |
| 362 | விளமர் | ” | திருவிளமர் | — | ஒரே சொல் | |
| 363 | விற்குடி | ” | விற்குடி | மக்கள் | குடி | வில் |
| 364 | விற்கோலம் | செங்கற்பட்டு | கூவம் | இறை | ஒரே சொல் | |
| 365 | வீழிமிழலை | தஞ்சாவூர் | திருவீழிமிழலை | தாவரம் | மிழலை | வீழி |

| எண். | ஊர்ப்பெயர் | மாவட்டம் | இன்றைய பெயர் | பெயர்க் காரணம் | பொதுக்கூறு | சிறப்புக்கூறு |
|---|---|---|---|---|---|---|
| 366 | வெஞ்சமாக்கூடல் | திருச்சி | வெஞ்சமாக்கடல் | ஆறுகள்கூடுமிடம் | கூடல் | வெஞ்சமா |
| 367 | வெண்காடு | தஞ்சாவூர் | திருவெண்காடு | காடு | காடு | வெண் |
| 368 | வெண்டுறை | தஞ்சாவூர் | திருவண்டுதுறை | ஆறு | துறை | வெண் |
| 369 | வெண்ணி | ,, | வெண்ணி | மண்தரை | ஒரேசொல் | |
| 370 | வெண்ணெய் நல்லூர் | தென் ஆர்க்காடு | திருவெண்ணெய் நல்லூர் | — | ஊர் | வெண்ணெய், நல் |
| 371 | வெண்பாக்கம் | சென்னை | இன்றுஇல்லை | — | பாக்கம் | வெண் |
| 372 | வெள்ளறை | திருச்சி | திருவெள்ளறை | பாறை | அறை | வெண் |
| 373 | வெள்ளியங்குடி | தஞ்சாவூர் | திருவெள்ளியங்குடி | — | குடி | வெள்ளியம் |
| 374 | வெற்றியூர் | — | — | — | ஊர் | வெற்றி |
| 375 | வேங்கடம் | ஆந்திரநாடு | திருப்பதி | வேகும்கடம் | கடம் | வேகும் |
| 376 | வேட்களம் | தென் ஆர்க்காடு | திருவேட்களம் | வேடர்கள் வாழ்ந்த களம் | களம் | வேடர் |
| 377 | வேட்டக்குடி | காரைக்கால் | வேட்டக்குடி | ,, | குடி | வேடர் |
| 378 | வேதிகுடி | தஞ்சாவூர் | திருவேதிகுடி | வேதியர்குடி | குடி | வேதியர் |
| 379 | வேலம்புத்தூர் | — | — | — | ஊர் | வேலம் |
| 380 | திருவேள்விக்குடி | தஞ்சாவூர் | வேள்விக்குடி | — | குடி | வேள்வி |
| 381 | வேற்காடு | செங்கற்பட்டு | திருவேற்காடு | தாவரம் | காடு | வேல் |
| 382 | வைகல் | தஞ்சாவூர் | வைகல் | மக்கள் தங்குமிடம் | ஒரேசொல் | |
| 383 | வைகாவூர் | தஞ்சாவூர் | — | — | ஊர் | |
| 384 | வைகுந்தம் | இராமநாதபுரம் | ஸ்ரீவைகுண்டம் | இறைப்பெயர் | ஒரே சொல் | |
| 385 | வைப்பூர் | — | — | — | ஊர் | |

# முதல் நூற் பட்டியல்


1 திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள் (1, 2, 3) —கழக வெளியீடு, சென்னை, 1973.

2 திருநாவுக்கரசர், சுந்தரர் தேவாரப் பதிகங்கள் (4,5,6,7) —கழக வெளியீடு, சென்னை, 1973 (2).

3 திருமந்திரம்—கழக வெளியீடு, சென்னை, 1969.

4 திருவாசகம் — V. இராமநாத பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை, 1968.

5 நாலாயிரதிவ்வியபிரபந்தம் — திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973.

6 பதினோராம் திருமுறை — திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, 1950.

7 பெரியபுராணம் — சைவ சித்தாந்த மகா சமாஜம், மயிலாப்பூர், சென்னை, 1937(2).

8 சீவக சிந்தாமணி—உ.வே.சா. (பதிப்பு), சென்னை, 1969(7)

9 கம்பராமாயணம்—கம்பன் கழகம், சென்னை, 1976.

10 கலிங்கத்துப்பரணி — கழக வெளியீடு, சென்னை, 1971.

11 முத்தொள்ளாயிரம் — ந. சேதுரகுநாதன் பொருள் விளக்கவுரை, கழக வெளியீடு, சென்னை, 1970.

12 நந்திக் கலம்பகம் — கழக வெளியீடு, சென்னை, 1976.

# துணை நூற் பட்டியல்


1 ஆராய்ச்சித் தொகுதி — மு. இராகவையங்கார், பாரி நிலையம், சென்னை, 1964.

2 இலக்கிய ஆய்வு — பி. எல். சாமி, சேகர் பதிப்பகம் சென்னை, 1982.

3 இலக்கிய சாசன வழக்காறுகள் — மு. இராகவையங்கார் தமிழ்நாடு அரசு, 1973.

4 இலக்கியமும் கல்வெட்டுகளும் — தி. வை. சதாசிவப்பண்டாரத்தார், மணிவாசகர் நூலகம், சென்னை, 1977.

5 ஊர்ப்பெயர் மாற்றங்கள் — மா. நயினார், 10ஆவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, இ. ப. க. த. ம. வெளியீடு, 1978.

6 ஊரும் பேரும் — ரா. பி. சேதுப்பிள்ளை, இராஜன் அச்சகத்தார், சென்னை, 1946.

7 கருவூரே வஞ்சி — புலவர் பெ. இராமலிங்கன், அசோகன் பதிப்பகம், சென்னை, 1977.

8 கல்விக் கழகக் கட்டுரை — வெள்ளிவிழா நினைவுமலர், கல்விக் கழகம், புதுச்சேரி, 1951.

9 கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் — ஆர். ஆளவந்தார், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

10 கல்வெட்டுக்கள் கூறும் உண்மைகள் — தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977.

11 காரைக்கால் முஸ்லீம்களின் பண்பாடும் பேச்சு வழக்கும் — மு. சாயபு மரைக்காயர் ஆய்வு மன்றக் கருத்தரங்கு (15), 26-9-81 (உ. த. நி).

12 குமரி மாவட்டக் கோட்டைகள் — எஸ். பத்மநாபன், குமரன் பதிப்பகம், நாகர்கோயில், 1978.

13 குறவஞ்சி — மு. அருணாசலம், இரா இளங்குமரன் (பதிப்பு) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1980.

14 கொங்கு நாட்டுக் கோயில்கள் — சிவகளை சுப்பையா, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச்சங்கம், சென்னை, 1967.

15 கொங்கு நாட்டு வரலாறு — மயிலை சீனிவேங்கடசாமி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1974.

16 கொங்கு நாட்டு வரலாறு (முதற்பாகம்) — கே. ம. இராமச் சந்திரன் செட்டியார், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோவை, 1972.

17 கோயில் — சோமலே (பதிப்பு), சோமு நூலகம், சென்னை, 1979.

18 கோவிலூர் — திருக் குடநீராட்டு மலர், சோமலே (பதிப்பு), சோமு நூலகம், சென்னை, 1978.

19 சமணமும் தமிழும் (முதற்பகுதி) — மயிலை சீனி வேங்கட சாமி, கழக வெளியீடு, சென்னை, 1970.

20 சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரத் திருப்பதி சங்கம், 7ஆம் திருமுறை, வெளியீட்டு எண் 556, தருமை ஆதினம், 1964.

21 செந்தமிழ் செல்வி, தொகுதி—5, 19.

22 சென்னை மாநகர் — மா. சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம் சென்னை, 1973(2).

23 சேக்கிழார் அடிச்சுவட்டில் — சோ. சிவபாத சுந்தரம், வானதி பதிப்பகம், சென்னை, 1978.

24 சேதுப்பிள்ளை ரா.பி வெள்ளிவிழா மலர் — பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1961.

25 சேலம் மாவட்டக் கோயில்கள் — அ. இராசேந்திரன், ஜெய குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோயில், 1973.

26 சைனரின் தமிழிலக்கண நன்கொடை — க. ப. அறவாணன், சைன இளைஞர் மன்றம், சென்னை ,1974.

27 சோழநாட்டுத் திருப்பதிகள் (பகுதி-2) — ந. சுப்பு ரெட்டியார், பாரி நிலையம், சென்னை, 1981.

28 தகடூர் யாத்திரை — இரா. இளங்குமரன் (உரையாசிரியர்), கழக வெளியீடு, சென்னை, 1976.

29 தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் — மெய். சந்திரசேகரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

30 தந்திவனப்புராணம் — தா. வே. வீராசாமி, (பதிப்பு) உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1981.

31 தமிழ் இடப்பெயராய்வு—கி.நாச்சிமுத்து, கேரளப்பல்கலைக் கழகம், திருவனந்தபுரம், 1984.

32 தமிழ் இலக்கியத்தில் ஆறு—ச. வே. சுப்ரமணியன் – இலா. குளோறியா சுந்தரமதி (தொகுப்பு) — தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.

33 தமிழ் இலக்கிய வரலாறு (இரண்டாம் பாகம்) — சு. கு. அருணாசலனார், சு.கு சோம சுந்தரனார், சேலம், 1968.

34 திரு அம்பர் புராணம் — உ.வே.சா. (பதிப்பு), சென்னை 1965.

35 திருக் கீழ் வேளூர் உலா— அ. இராசேந்திரன் (பதிப்பு), தமிழ் நாடு தொல்பொருள் ஆய்வுத் துறை, 1981.

36 திருக் குற்றாலக் குறவஞ்சி — ஸ்ரீ. எஸ். கல்யாண சுந்தர அய்யர், கலாஷேத்திரம், சென்னை, 1963.

37 திருக் குற்றாலத் தலவரலாறு — ஏ.சி. சண்முக நயினார் கோயில் வெளியீடு, குற்றாலம், 1967.

38 திருக் குற்றால நாதர் உலா—உ.வே.சா. (பதிப்பு) சென்னை 1955.

39 திருக் குற்றாலத் தலபுராணம் — திருகூடராசப்ப கவிராயர், கோயில் வெளியீடு, மீனாட்சி பிரஸ், தென்காசி 1951.

40 திருக்கோயில் — திங்கள் வெளியீடு, 1972.

41 திருச்செந்தூர் முருகன் கோயில் வரலாறு — ந. கல்யாண சுந்தரம், திருக்குமரன் பதிப்பகம், திருச்செந்தூர், 1980.

42 திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத்திருப் பதிகங்கள் — வெளியீடு எண் 290, ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம், 1953.

43 திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள்—(இரண்டாவது திருமுறை), வெளியீடு எண் 317, தருமபுரம் ஆதினம், 1954.

44 திருத் தலப்பயணம் — ரா. ய. சொக்கலிங்கம், க. வெ. சித. வெ. வேங்கடாசலம் செட்டியார் வெளியீடு, அழகப்பா அற நிலையச் செயலர், காரைக்குடி, 1966.

45 திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் — (நாலாம் திருமுறை) வெளியீடு எண் 391, தருமபுர ஆதினம், 1957.

46 திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரந் திருப்பதி கங்கள் — (ஐந்தாம் திருமுறை) வெளியீடு எண் 500, தரும புர ஆதினம், 1961.

47 திருப்பாண்டிக் கொடுமுடி வரலாறு — கொங்கு வெளியீடு, ச. பிரகதம், சென்னை, 1947.

48 திருப் பூவணநாதர் உலா — உ.வே.சா. (பதிப்பு), சென்னை, 1956.

49 திருப் பெருந்துறைப் புராணம் — ச. பாலசுந்தரம் (பதிப்பு), தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் வெளியீடு - 158, 1976.

50 திருமயிலை யமகவந்தாதி — உ. வே. சா. (பதிப்பு), சென்னை, 1975.

51 திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புகள் — மு. அருணாசலம், சைவ சித்தாந்த மகாசமாஜ அறுபதாண்டு நிறைவு விழா மலர், சிதம்பரம், 1965.

52 திருவானைக்காக் கோயில் — திவான் பகதூர் தி. மு. நாராயண சாமிப்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழகம், 1976.

53 திருவெண்ணெய் நல்லூர் தலபுராணமாகிய திருவருட்டுறைப் புராணம், தருமையாதீனம், 1964.

54 திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும் — ந சுப்புரெட்டியார், பாரி நிலையம், சென்னை, 1975.

55 தென்னாட்டுக் கோயில்கள் (இரண்டாம் பாகம்) - ம. ராதா கிருஷ்ணபிள்ளை, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை 1957.

56 தேவாரவைப்புத்தல விளக்கம் — ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், 1973.

57 தொண்டை நாட்டுத் திருப்பதிகள் — ந. சுப்பு ரெட்டியார் எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, புத்தக வெளியீட்டாளர் திருநெல்வேலி, 1973.

58 தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்—சா. குருமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை,. 1974.

59 தொல்லியல் ஆய்வுகள் — கே. வி. இராமன், சேகர் பதிப்பகம், சென்னை.

60 நடந்தாய் வாழி காவேரி — சிட்டி, தி. ஜானகிராமன், புக் வெஞ்சர், சென்னை, 1971.

61 நெல்லைக் குடைவரைக் கோயில்கள் — தி. இராசமாணிக்கம், கழக வெளியீடு, சென்னை, 1980.

62 நெல்லை மாவட்டக் கோயில் வரலாறு — இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, அற நிலையத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை, 1962.

63 பண்டைய கேரளம் — இளங்குளம் குஞ்ஞன் பிள்ளை, தமிழ் புத்தகாலயம், சென்னை, 1970.

64 பாண்டி நாட்டுத் தலங்கள் — முருகவேள் (தொகுப்பு), தருமையாதீனம் சமயப் பிரச்சார நிலையம், சென்னை, 1963.

65 பிற்காலச் சோழர் வரலாறு — தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1971.

66 புகழ் பெற்ற பேரூர்கள் — புலியூர்க் கேசிகன், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1965(3).

67 புனிதக் கோயில்களும் புண்ணியத்தீர்த்தங்களும்—சி.முத்துப் பிள்ளை, இலக்குமி நிலையம், சென்னை, 1981.

68 பேரூர் திருக்கோயில் வரலாறு — கே. ந. முத்துக்குமாரசாமி, கழகப் பொன் விழா மலர், கழகவெளியீடு, சென்னை, 1970.

69 பௌத்தமும் தமிழும்—மயிலை. சீனி வேங்கடசாமி, க. ர. வள்ளிநாதன் (பதிப்பு), சென்னை, 1940

70 மண்ணிப் படிக்கரைக் குறவஞ்சி — மு. அருணாசலம், இரா. இளங்குமரன் (பதிப்பு),தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1980.

71 மதுரை மூதூர் — சு. வே. நடராசன், பூமகள் பதிப்பகம், நாகர்கோயில், 1967.

72 மலைநாட்டுத் திருப்பதிகள் — ந. சுப்புரெட்டியார், எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலி, 1971.

73 மூவருலா — கழக வெளியீடு, சென்னை, 1970(2).

74 வடநாட்டுத் தலங்கள் — சி. முத்துப்பிள்ளை, பைலட் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1980.

75 வாட்போக்கிக் கலம்பகம் — உ.வே.சா. (பதிப்பு), சென்னை, 1976.

76 வேங்கடம் முதல் குமரி வரை — பாலாற்றின் மருங்கினிலே —தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். ஆர். சுப்பிர மணிய பிள்ளை பப்ளிகேஷன்ஸ், திருநெல்வேலி, 1960,

77 வேங்கடம் முதல் குமரி வரை — பொன்னியின் மடியிலே — மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை பப்ளிகேஷன்ஸ், திருநெல்வேலி, 1961.

78 வேங்கடம் முதல் குமரி வரை—காவிரிக் கரையிலே — தொ, மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். ஆர். சுப்ரமணிய பிள்ளை பப்ளிகேஷன்ஸ், திருநெல்வேலி, 1961.

79 வேங்கடம் முதல் குமரி வரை — பொருநைத் துறையிலே — தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எஸ். ஆர் சுப்பிர மணிய பிள்ளை பப்ளிகேஷன்ஸ், திருநெல்வேலி, 1962.

80 Encyclopaedia Britannica--vol. 15.

81 History of Tamil Nad—N. Subramaniyan, Koodal Publishers, Madurai, 1972.

82 Hydronomic Place Name Suffixes in Coimbatore District. — Journal of the Department of Tamil, vol III, University of Kerela, Trivandrum, 1972.

83 Place Naming Practices—K. Naccimuthu, Research Papers, vol. V, Department of Tamil, University of Kerela, Trivandrum, 1974.

84 Place Names in Pandinad — The Papers of Dr. Navalar Soma Sundara Bharathiyar, Selected by S. Sambasivan, Navalar Puthaka Nilayam, Madurai, 1967.

85 Place Names of Agricultural Regions of Marutham —R. P. Sethu Pilli. Tamil Culture, vol IV No. 1, January—1955.

86 Studies in Indian Place Names, vol, III, The Place Name Society of India,

87 Tamil Lexicon-I—VI volumes, University of Madras, 1982.

88 Tamil Studies, First Series — A. V. Subramaniya Aiyer, Amuda Nilayam, Madras, 1969.

89 The Place Names in Early Tamil Literature — Dr. S. V. Subramanian, All India Conference of the Place Name Society of India, Mysore 20-22—4—84.

# சொல்லகராதி

**எண்—பக்க எண்**


அக்சுரை 10
அக்கீச்சுரம் 12, 13
அகத்தியபக்தவிலாசம் 12
அகத்தியர் 12, 13
அகத்தியான் பள்ளி 12
அகத்தீச்சுரம் 13, 20
அங்காரக்கபுரம் 211
அசுரகுலகால நல்லூர் 153
அட்டபுயகரம் 68
அடியார்க்கு நல்லார் 149
அண்ணாநாடு 15
அண்ணாமலை 14, 15
அத்தங்குடி 15
அத்தி 36
அத்திரிமுனிவர் 16
அத்தீச்சுரம் 16, 20
அதமன் கோட்டை 17
அதிகமான் 16
அதிகமான் நெடுமான் அஞ்சி 17
அதிகை 16, 17
அதிகை மங்கை 16
அதிகை மாநகர் 18
அதிமங்கை 17
அதியமான் கோட்டை 17
அதியரைமங்கலம் 17
அதியரைய மங்கை 16, 124
அதியரையன் 17
அதியேந்திரன் 17
அதிராசமங்கலம் 16, 17
அதிராசமங்கலியபுரம் 17
அதிராசன் 17
அபிதான சிந்தாமணி 12
அச்சரப்பாக்கம் 14
அச்சிறுபாக்கம் 13, 14
அம்பர் 18, 19, 55
அம்பர்நகர் 19
அம்பர் மாகாளம் 18, 19, 20
அம்பாசமுத்திரம் 46
அம்புக் கோயில் 31
அயவந்தி 132
அயனீச்சுரம் 13, 20
அரங்கம் 20, 21
அரசியல் தொடர்பு 6
அரசிலி 21
அரகண்டநல்லூர் 30
அரிசிப்புல் 24
அரிசில் 24
அரிசிலாறு 18, 19, 20, 85, 169, 249, 260
அரிசிற்பெருந்துறை 24, 25
அரிசிற்கரைப்புத்தூர் 24,25, 259, 360
அரியான்பள்ளி 198
அருணாசலம் 15
அருணாசலப் புராணம் 15
அருணைக் கலம்பகம் 15
அல்லிக்கேணி 25
அல்லி புட்கரணி 25
அவளிவணல்லூர் 25, 26
அவிநாசி 26
அழகாத்ரிபுத்தூர் 259
அழகாபுத்தூர் 25, 259
அழகார் திருப்புத்தூர் 260
அழகியசிறுபாக்கம் 14

அழுந்தூர் 27, 28, 29
அழுந்தை 27
அளப்பூர் 29
அறப்பள்ளி 29
அறவாணன் க.ப. 225, 296
அறையணி நல்லூர் 30
அன்னப்பன்பேட்டை 86
அன்பில் 30, 31
அன்பில் ஆலந்துறை 30
அன்னிகுடி 31
அன்னியூர் 31
அஷ்டாக்ஷர மகா மந்திர சித்தி ஷேத்திரம் 80
ஆ 42
ஆக்கூர் 32, 147
ஆச்சா மரம் 42
ஆச்சாள்புரம் 168
ஆட்பெயர் 293, 297
ஆடானை 32, 33
ஆடுதுறை 108
ஆடுதுறைப் பெருமாள் கோயில் 115
ஆண்டார் கோயில் 77,78 245
ஆத்திமலை 37
ஆதன் 33, 34
ஆதனூர் 33, 34
ஆப்பனூர் 35
ஆப்பாடி 35
ஆப்புடையார் கோயில் 35
ஆமத்தூர் 36
ஆமூர் 37
ஆய் 37
ஆய்ப்பாடி 36, 37
ஆய்வு நெறிமுறை 6
ஆரணியேசுரர் கோயில் 91, 92
ஆரூர் 37, 38, 198
ஆல் 40
ஆலங்காடு 39, 40, 150
ஆலங்குடி 40, 51
ஆலத்தூர் 40
ஆலந்துறை 31
ஆலம்பொழில் 40
ஆலவாய் 224
ஆலி 40
ஆவடுதுறை 41, 42
ஆவுடையார் கோயில் 121
ஆவூர் 41
ஆழ்வார் குறிஞ்சி 12
ஆழ்வார் திருநகரி 109
ஆறை 43, 196
ஆறைமேற்றளி 42
ஆனைக்கா 43, 151
ஆர்க்காடு நாடு 189
இடப்பெயர் 2, 3
இடப்பெயராய்வாளர் 8
இடும்பன் 44
இடும்பாவனம் 44, 45
இடைக்குளம் 45
இடைச்சுரம் 45, 46
இடைப்பள்ளி 46
இடைமருதூர் 46, 47
இடைவாய்க்குடி 257
இந்தளமரங்கள் 49
இந்தளூர் 48, 49
இந்துபுட்கரணி 49
இயற்கை 3, 8, 289, 292
இயற்கை சார்ந்த பெயர் 290, 293
இயற்கைத் தொடர்பான பெயர் 7
இயற்கைப் பெயர் 290, 291, 297
இராகவையங்கார். மு. 17, 45, 51, 78, 136
இராசமாணிக்கம். மா. 11
இராசராசபுரம் 195, 197
இராமநாதபுர மாவட்டம் 32, 49, 57, 121, 137, 208, 209 213, 258

இராமனதீச்சுரம் 49
இராமேச்சுரம் 13, 49, 50
இருக்குவேளூர் 50
இரும்புதல் 51
இரும்பூளை 51
இரும்பை 52
இரும்பை மாகாளம் 52
இலக்கியப் பயிற்சி நிலை 6
இலந்தை 165
இலம்பை 53
இலம்பையங் கோட்டூர் 53
இலவமலர் 54
இலுப்பைப்பட்டு 192
இளையாங்குடி 54
இறை ஈடுபாடு 297
இறைத்தலம் 6
இறைதொடர்பான பெயர்கள் 292
இறைப்பெயர் 292, 293
இன்று இருக்கும் ஊர்ப்பெயர் அமைப்பு 7
இன்றையபெயர் 9
இன்னம்பர் 18, 54, 55
ஈங்கை 55
ஈங்கோய் 56
ஈங்கோய் நாதன் மலை 56
ஈங்கோய்மலை 55
உசாத்தனம் 56
உசிரம் 261
உடுப்பூர் 56, 57
உடையார்கோயில் 142
உத்தமன் கோயில் 82
உத்தரகோசமங்கை 57
உத்தராபதி 58
உய்யக்கொண்டான்மலை 89,90
உரசபுரம் 59
உளவியல் 3, 4
உறந்தை 58
உறையூர் 5, 58, 59, 133
ஊர் அமைப்புக் கலை 7
ஊர்ப்பெயர் அமைப்பு 9
ஊர்ப்பெயர் ஆய்வு முறை 9
ஊர்ப்பெயர் தோற்றம் காணுதல் 298
ஊர்ப்பெயர் வரலாறு 297
ஊர்ப்பெயராய்வுப்பயன் 596
ஊரகம் 68, 69
ஊற்றத்தூர் 59
ஊறல் 59
எதிர்கொள்பாடி 60
எயினனூர் 60
எருக்கத்தம்புலியூர் 61
எவ்வுளூர் 61
எழிலூர் 136
எழினியவனிகா 17
எறும்பியூர்மலை 62
ஏகம்பம் 66, 67
ஏடகம் 62
ஏமப்பேறூர் 63
ஐயம்பேட்டை 127
ஐயாறு 63, 64, 65
ஒழிந்தியாபட்டு 21
ஒற்றிநகர் 65
ஒற்றியூர் 72
ஓகைப்பேரையூர் 219
ஓடம்போக்கி ஆறு 261
ஓணகாந்தன் தளி 68
ஓத்தூர் 59, 66, 73
ஓமாம்புலியூர் 34, 66
கச்சப ஊர் 70
கச்சி 66, 75
கச்சி அநேகங்காவதம் 68
கச்சிநெறிக் காரைக்காடு 67
கச்சி மேற்றளி 67
கச்சினம் 116, 117
கச்சூர் 70
கஞ்சனூர் 70
கஞ்சாறூர் 60, 70, 71

கஞ்சிபுரம் 66
கந்தபுரி 21
கடந்தை 71, 72
கடம்பந்துறை 72, 74
கடம்பர் கோயில் 72, 73
கடம்பவனம் 224, 225
கடம்பூர் 73, 74
கடவூர் 74,75
கடவூர் மயானம் 74, 75
கடவூர் வீரட்டானம் 74, 75
கடிகருளம் 76
கடிகை 76, 77
கடித்தானம் 77
கடுவாய்க்கரை 78
கடுவாய்க் கரைப்புத்தூர் 77,78
கடைமுடி 78
கடையக்குடி 88
கண்டலம் 89
கண்டியூர் 79
கண்ணங்குடி 79, 80
கண்ணபுரம் 80
கண்ணமங்கலம் 82, 124
கண்ணாப்பூர் 90
கண்ணார் கோயில் 80
கணபதி ராமன். எஸ். 187
கணபதீச்சுரம் 138
கணமங்கலம் 81, 82
கணமங்கலத்திடல் 81
கரக்கோயில் 73
கரம்பனூர் 82
கரவீரம் 83
கருக்குடி 82
கருந்திட்டைக்குடி 83, 163
கருப்பறியலூர் 83, 198
கருவிலி 83
கருவூர் 84, 244
கருவூர்த் திருவானிலை 85
கரூர் 84
கரையபுரம் 82
கல்வெட்டுச் சான்று 7
கலயநல்லூர் 85, 86
கலிக்காமூர் 86
கவீரப்பட்டினம் 96
கழிப்பாலை 86, 87, 88
கழுக்குன்றம் 88
கழுமலம் 99
கள்வனூர் 68
கள்ளம் 89
கள்ளில் 88
களந்தை 89
களர் 89
கற்குடி 89, 90
கற்பகனார்குளம் 76
கற்பகனார் கோயில் 76
கறைக்காடு 90
கறைசை 203
கறையூர் 203
கன்றாப்பூர் 90
கன்னியாகுமரி மாவட்டம் 13, 110, 121, 246
காகாவூர் 83
காஞ்சனபுரம் 67
காஞ்சி 4, 75
காஞ்சிபுரம் 66
காட்கரை 91
காட்டுப்பள்ளி 91
காட்டூர் 92
காப்பியாற்றுக் காப்பியனார் 35
காம்பீலி 92
காமக்கோட்டம் 67
கார்வானம் 68
காரிக்கரை 93
காரைக்காடு 90
காரைக்கால் 93, 148, 161, 169, 377
காரைக்குடி 44
காரூர் 93
காரோணம் 174

காலச் சூழல் 6
காவிரிக்கரை 58, 64
காவிரிப்பூம்பட்டினம் 94, 96
காழி 97
காளாவூர் 83
காளையார் கோயில் 100, 102
121
காளத்தி 101
காளேச்சுரம் 102
காறாயில் 100
கானப்பேர் 100, 101
கானப்பேரூர் 100, 101
கானப்பேரெயில் 101
கானாட்டம் புலியூர் 102
கானாட்டுமுள்ளூர் 102
கானூர் 103
கிருஷ்ணாரண்யக்ஷேத்திரம் 80
கீழ்க்கோட்டம் 103
கீழம்பில் 30
கீழூர் 78
கீழைத்திருக்காட்டுப்பள்ளி 91,92
கீழைத்திருமணஞ்சேரி 221, 222
கீழைப்பழுவூர் 193
கீழையூர் 78
குட்டநாடு 209
குடந்தை 103, 104, 105, 106
குடந்தை வாயில் 105, 106
குடப்பாச்சில் 105
குடமுருட்டி 91, 92
குடமூக்கு 103, 104, 105, 106
குடவாசல் 105
குடவாயில் 105, 106
குடியிருப்புநிலை 300
குடியிருப்புப்பகுதி 296
குடியிருப்புப் பெயர் 7,8, 293,
குண்டையூர் 106
கும்பகோணம் 45, 103,104,105
குயிலாலந்துறை 166
குரக்குக்கா 106
குரங்கணில்முட்டம் 107
குரங்காடுதுறை 108
குருகாவூர் 108
குருகாவையூர் 109
குருகூர் 109
குருந்தங்குடி 110
குருந்தங்கோடு 110
குழகர்கோயில் 123
குழித்தண்டலை 73
குழித்தலை 72, 73
குளந்தை 110
குற்றாலம் 110, 111, 112, 113,
157
குறுக்கை 113
குறுக்கைக் குடி 113
குறுங்குடி 113, 114
குறும்பொறையூர் 114
குறும்பலா 111,112
குறுமாணக்குடி 80
குன்றி 114
குன்றியூர் 114
கூகம் 263
கூடல் 225
கூட லூர் 115
கூடலையாற்றூர் 115
கூரூர் 116
கூவம் 54, 262
கெடிலநதி 177
கேரளம் 91
கைச்சினம் 116, 117
கொகுடிக் கோயில் 83
கொட்டையூர் 117
கொடிமங்கலம் 117
கொடிமாடச் செங்குன்றூர்
118, 139
கொடுங்குன்றம் 119
கொடுங்கோளூர் 244, 245
கொடும்பாளூர் 119
கொடுமுடி 203

கொள்ளம்புதூர் 33, 34, 120
கொள்ளிடக்கரை 36
கொள்ளிடம் 87, 213
கோகழி 120, 122
கோச்செங்கட்சோழன் 18, 148
கோட்டாறு 121
கோட்டியூர் 121
கோட்டீச்சுரம் 117
கோட்டூர் 122
கோடி 123
கோடிக்கரை 123
கோடிகா 123
கோத்திட்டைக்குடி 124
கோமாதுருபுரம் 36
கோயம் பத்தூர் மாவட்டம் 26, 219, 239
கோயில்திருமாகாளம் 19
கோயில் பத்து 161
கோயில் பெயர் 293
கோயிலடிப்பாளையம் 227
கோயிலூர் 56
கோலக்கா 125
கோவந்தபுத்தூர் 255, 256
கோவல் 126
கோவலூர் 126
கோவிலடி 78, 218
கோழம்பம் 127
கோழியூர் 58
கோளி 128
கோளிலி 127, 128
கோனேரிராஜபுரம் 166
கோஷ்டியூர் 122
சக்கரக்கோட்டம் 129
சக்கரப்பள்ளி 129
சங்கஅலக்கியஊர்ப்பெயர்கள் 5
சங்கஇலக்கியம் 5, 7, 33, 34, 50, 244, 271
சங்க காலம் 101
சங்க நூல்கள் 110
சங்க மங்கை 129, 130
சடாயுபுரி 211
சண்டியூர் 130
சண்பை நகர் 99
சத்திமுற்றம் 194, 197
சதாசிவப்பண்டாரத்தார் தி.வை. 34, 42, 66, 134, 197
சம்பாபதி 95
சமுதாயம் 3,4
சரண்யபுரம் 207
சலசயனம் 137
சாக்கோட்டை 85
சாமிநாதய்யர் உ.வே. 149, 150, 186, 187
சாத்தங்குடி 130, 131
சாத்தமங்கை 131
சாத்தனூர் 41, 42
சாந்தம்புத்தூர் 132
சாய் 97
சாய்க்காடு 96
சாயாவனம் 96
சாலியூர் 186
சிக்கல் 133, 134
சித்தீச்சுரம் 25, 170
சிதம்பரம் 155, 156, 272
சிரபுரம் 99
சிராப்பள்ளி 5, 133
சிரீவரமங்கை 135
சிலப்பதிகாரம் 5, 7, 271
சிவசைலம் 16
சிவபுரி 185
சிவராஜதானி 224
சிவபாதசுந்தரம் சோ. 162
சிவபுரநகர் 136
சிவபுரம் 121, 135
சிவாயமலை 252
சிற்றாம்பூர் 136
சிற்றாறு 139
சிற்றேமம் 136

சிறப்பு அடை 267
சிறப்புக்கூறு 8, 9, 287, 260
சிறுகுடி 136
சிறுபாணாற்றுப்படை 37
சிறுபுலியூர் 136, 137
சீயாத்த மங்கை 132
சீர்காழி 97, 98, 99
சீவன் முத்திபுரம் 224
சுகந்தாரணிய க்ஷேத்திரம் 49
சுசீந்திரம் 11
சுப்பிரமணியன் ச.வே. 225, 289
சுப்புரெட்டியார். நா. 272
சுழியல் 137
சூழல் 4
செங்கற்பட்டு மாவட்டம் 14. 39, 45, 53, 61, 66, 70 88, 181, 202, 232, 240, 262
செங்காட்டம்குடி 137, 138
செங்காடு 138, 149
செங்குன்றம் 149
செங்குன்றூர் 118, 139
செண்பகக்கா 112
செம்பொன்பள்ளி 140
செம்பொனார்கோயில் 140
செய்யாறு 65, 120
செயற்கை அமைப்பு 292
செருவிலிபுத்தூர் 25, 256, 260
சென்னப்பூண்டி 78
சென்னை மாவட்டம் 254, 266, 268
சேங்கனூர் 140
சேதுப்பிள்ளை. ரா.பி. 31, 152, 161, 189, 220
சேய்ஞலூர் 140, 141, 192
சேயாறு 232
சேரி 3
சேலூர் 141
சேற்றூர் 142
சேறை 142
சோபுரம் 143
சோழபுரம் 77
சோழஸிம்ஹபுரம் 77
சோளங்கிபுரம் 76
சோற்றுத்துறை 143
தக்களூர் 144
தக்கோலம் 59
தஞ்சாக்கூர் 147
தஞ்சாவூர் மாவட்டம் 24, 27, 31, 32, 33, 37, 40, 41, 44, 45, 46, 48, 51, 54, 57, 60, 63, 70, 73, 77, 78, 79, 80, 82, 83, 85, 89, 90, 91, 97, 100, 102, 103, 105, 108, 113, 115, 116, 117, 120, 122, 123, 125, 127, 129, 134, 136, 140, 142, 144, 145, 147, 148, 150, 154, 156, 157, 160, 162, 166, 167, 170, 172, 174, 175, 176, 179, 180, 282, 184, 189, 191, 192, 193, 194, 198, 201, 211, 212, 213, 215, 217, 218, 219, 221, 225, 227, 229, 230, 236, 240, 241, 248, 249, 255, 256, 257, 261, 262, 263, 265, 266, 269
தஞ்சைத் தளிக்குளம் 146
தமிழ் மொழிப் பெயர் 295
தர்மபுரி 17
தருமபுரம் 148
தலமரப்பெயர் 289, 293
தலவிருட்சம் 111
தலைச்சங்காடு 148, 149
தலைச்சங்கை 149
தலைசை 149
தலைஞாயிறு 83
தலையூர் 150
தலையாலங்காடு 150
தலையாலங்கானம் 188
தவத்துறை 151

தாடகையீச்சுரம் 200
தாமிரபரணி நதி 109
தாயூர் 36
தாவரப்பெயர் 8, 40, 49, 61
தாவரம் 16, 291 292,
தாவரவகை 290
தான் தோன்றி மாடம் 32
தாவரவளம் 292
திங்களூர் 152
திட்டை 162, 163
திரிகூடமலை 112
திருஅருள்துறை 267
திருஇடஎந்தை 152
திருஎவ்வளூர் 61
திரு எவ்ற சொல்லடை 293
திருஎறும்பூர் 62
திருச்சுழி 137
திருக்கச்சி அத்திகிரி 68
திருக்கடந்தை 71
திருக்கடவூர் 74, 75
திருக்கடாவூர் 108
திருக்கண்டலம் 88
திருக்கண்ணார்கோயில் 81
திருக்கழுக்குன்றம் 88
திருக்கள்ளம் 88
திருக்களர் 89
திருக்காட்கரை 91
திருக்காட்டுப்பள்ளி 91
திருக்காளத்தி 93
திருக்காறைவாசல் 100
திருக்கானூர் 103
திருக்குவளை 127
திருக்குறுக்கை வீரட்டம் 113
திருச்சிராப்பள்ளி மாவட்டம்21, 30, 43, 55, 58, 62, 72, 84, 89, 133, 182, 191, 193, 206, 234, 264, 269
திருச்சூர் 243
திருத்தண்கா 68, 69
திருத்தண்டலை நீணெறி 81
திருத்தினைநகர் 153, 154
திருத்துறைபூண்டி 132
திருநகரி 155
திருநட்டான்குளம் 182
திருநின்றவூர் 178
திருநின்றியூர் 179, 180
திருநீர்மலை 181, 182
திருநாமநல்லூர் 177
திருநாவாய் 178
திருநெல்வேலிமாவட்டம் 46, 109, 110, 113, 135, 186, 211
திருந்துதேவன்குடி 154
திருப்பதி 271
திருப்பத்தூர் 208
திருப்பதிசாரம் 246
திருப்பராய்த்துறை 191
திருப்பாச்சூர் 202
திருப்பாதிரிப்புலியூர் 203
திருப்பாம்புரம் 204
திருப்பெரும்புலியூர் 216
திருமருகல் 145
திருமயம் 204
திருப்புடர்ஜீனம் 47
திருமால்பூர் 235
திருமாலயன் துறை 30
திருமிற்றக்கோடு 257
திருவக்கரை 11
திருவஞ்சைக்களம் 244, 245,
திருவண்டுதுறை 255
திருவத்திபுரம் 65
திருவத்தூர் 65
திருவதி 16
திருவதிகை 16
திருவழுண்டூர் 246
திருவரங்கம் 21
திருவரத்துறை 185
திருவல்லா 248

திருவல்லிக்கேணி 25
திருவலம் 248
திருவள்ளூர் 61
திருவாசி 262
திருவாதவூர் 253
திருவாரூர் 241
திருவாமூர் 251
திருவானைக்காவல் 43
திருவிங்கநாதமலை 55, 56
திருவிசநல்லூர் 257
திருவிடமருதூர் 47
திருவிடைமருதூர் 123, 269
திருவிடைவாயில் 256, 257

திருவெஃகா 68
திருவெண்காடு 91
திருவெள்ளியங்குடி 270
திருவையாறு 193
தில்லை 21, 155, 156
தில்லைத்தானம் 183
திலதைப்பதி 156, 157
துடையூர் 157
துருத்தி 21, 153
துளசிவனம் 25
தூங்கானைமாடம் 72
தெங்கூர் 160, 161
தெள்ளாறு 161
தெளிச்சேரி 162
தென் ஆர்க்காடு மாவட்டம் 11, 16, 30, 36, 61, 66, 71, 86, 115, 126, 143, 153, 155, 177, 185, 200, 203, 233, 236, 237, 241, 245, 267, 272
தென்குடித்திட்டை 162
தென்குரங்காடுதுறை 108
தென்திருமுல்லைவாயில் 239
தென்னலக்குடி 182
தேரழுந்தூர் 27, 29
தேவிபட்டணம் 209
தேவூர் 163
தொண்டை நாடு 152
தொல்காப்பியம் 1, 5, 33
பதாணிபுரம் 99
தோற்றக்காரணம் 4,6,9, 290
நகர் 3
நகரமைப்புக்கலை 289
நணா 163, 164
நந்தம்பாடி 165
நந்திபுரம் 195
நந்திபுரவிண்ணகரம் 165
நல்லக்குடி 166
நல்லம் 166
நல்லம்பர் 55
நவ்லாற்றூர் 166
நல்லூர் 167
நல்லூர்ப் பெருமணம் 168, 169
நவபாஷாணம் 209
நள்ளாறு 169
நற்குன்றம் 170
நறையூர் 170, 171, 197
நன்னிலம் 171
நனிபள்ளி 172, 173
நாககிரி 119
நாகை 173, 247
நாகர்கோயில் 173
நாகேச்சுரம் 174
நாங்கூர் 175
நாச்சிமுத்து. கி. 17, 24, 165, 169, 220
நாட்டியத்தான்குடி 176
நாடு 3, 7
நாதன்கோயில் 165, 166
நாரையூர் 176
நாலூர் 176, 177
நாவலூர் 177
நாவாய் 178
நான்மாடக்கூடல் 224
நிலஅமைப்பு 298

நிலாத்திங்கள் துண்டம் 68
நிவாநதி 185
நின்றயூர் 178
நின்றியூர் 179, 180
நீடூர் 180
நீர்மலை 181, 182
நீரகம் 68
நீலக்குடி 182
நெடுங்களம் 182, 183
நெடுவாயில் 183
நெய்தல்வாயில் 184
நெய்த்தானம் 183, 184
நெய்வெணை 185
நெல்லிக்கா 184
நெல்லையைப்பிள்ளை, மா. வே. 256
நெல்வாயில் 185
நெல்வாயில் அரத்துறை 185
நெல்வேலி 186, 187, 188
நெற்குன்றம் 189
நெறிமுறை 298
நேமம் 136
நேரிமலை 34
பக்தி 294, 295, 297
பக்தி இலக்கியம் 5, 6
பக்தியியக்க காலம் 11, 299
பக்தியியக்கம் 300
பக்தியின் செல்வாக்கு 8, 290
பசுபதிக் கோயில் 210
பசுபதீச்சுரம் 85
பட்டினப்பாலை 95
பட்டீச்சுரம் 194, 196
பதினெண்கீழ்க்கணக்கு 5, 7
பந்தணைநல்லூர் 189
பயற்றங்குடி 189
பயற்றூர் 189
பரங்குன்றம் 190
பரங்குன்று 190
பரசலூர் 198
பரமேச்சுவர விண்ணகரம் 68
பராய்த்துறை 191
பரிதிநியமம் 191
பருத்தியப்பர் கோயில் 191
பல்லவனீச்சுரம் 94, 96
பவானி 162, 163, 165
பழம்பதி 214
பழமண்ணிப்படிக்கரை 192
பழனம் 193
பழுவூர் 193, 194
பழைசை 196
பழையனூர் 39
பழையாற்றங்கரை 121
பழையாறை 145, 194, 196
பழையாறை வடதளி 194
பள்ளியின் முக்கூடல் 198
பறம்புமலை 119
பறவைவளம் 296
பறியலூர் 198
பனங்காட்டூர் 199
பனங்காடு 199
பனந்தாள் 200
பனையூர் 201
பாச்சிலாச்சிரமம் 202
பாசூர் 202
பாடகம் 168, 169
பாடி 3, 35
பாண்டிக்கொடுமுடி 203
பாதிரிப்புலியூர் 203
பாம்பணி 204
பாம்புரம் 204, 205
பாமணி 204
பாரதப்புழா 178
பாரிஜாதவனம் 89
பாலியாறு 236
பாலைத்துறை 205
பாற்றுறை 206

பாஸ்கரத் தொண்டைமான்
தொ. மு. 17, 195
பாஸ்கரபுரம் 85
பிரமபுரம் 98
பிரான்மலை 119
பிரான்மலைச்சீமை 119
பிறமொழியாளர் தொடர்பு 4
புக்கொளியூர் 26, 27
புகலி 99
புகலூர் 206
புகார் 94, 95, 96
புஞ்சை 172
புட்குழி 208
புத்தூர் 24, 78, 208
புதுக்கோட்டை மாவட்டம் 242
புராணக் கதை 33
புல்லாணி 209
புலியூர் 209
புள்ளம் பூதம் குடி 210
புள்ளமங்கை 210
புள்ளிருக்கு வேளூர் 211
புளிங்குடி 211
புளியங்குடி 211
புற்குடி 212
புறநானூறு 101
புறம்பயம் 212
புறவம் 99
புறவார் பனங்காட்டூர் 199, 200
புன்கூர் 213
புன்னை வனம் 207
புனவாசல் 213, 214
பூந்தராய் 99
பூலோக கயிலாயம் 224
பூலோக வைகுண்டம் 21
பூவணம் 214, 215, 216
பூழியூர் 216
பூளைவளஆறு 52
பெண்ணாகரம் 71, 72
பெண்ணையாறு 168
பெயர்க்காரணம் 8
பெயர்த்தோற்றம் 2
பெயராய்வுத்துறை 1
பெயரிடுமுறை 5
பெரியார் 163
பெருங்கதை 7
பெருங்குளம் 110
பெருந்துறை 120, 121
பெரும்பள்ளம் 249
பெரும்புலியூர் 216
பெருமங்கலம் 216
பெருமிழலை 216
பெருவேளூர் 217
பேணுபெருந்துறை 217, 218
பேர்நகர் 218
பேர்ப்புறம் 218
பேராவூர் 219
பேரூர் 219
பேரெயில் 219
பைஞ்ஞீலி 219, 220
பொத்தப்பி நாடு 56
பொதுக்கூறு 8, 9, 289, 290
பொருநர்ஆற்றுப்படை 266
பொருநையாறு 212
பொருள் உணர்ந்து கொள்ளல் 6
பொன்னூர் 31
போகமண்டபம் 21
மக்கள் உளவியல் 296
மகாபலிபுரம் 229
மகிழவனம் 181
மகிழாரண்யம் 181
மகோதை 245
மங்கலக்குடி 220
மங்கலம் 17, 221
மண்ணியாறு 141, 192, 213, 270
மணம்தவிர்ந்த புத்தூர் 208, 267
மணமேற்குடி 222
மணலி 223
மணலூர் 223

மணிமேகலை 5, 7
மத்திய அர்ஜுனம் 47
மதிமுத்தம் 156
மதுரை 4, 224, 225
மதுரை மாவட்டம் 35, 62, 190 214, 243
மயானம் 74, 75
மயிலாடுதுறை 44, 49, 225, 241
மயிலை 25, 226
மயேந்திரப்பள்ளி 227
மருகல் 238, 227
மருகல் நாடு 248, 228
மருத்துவக் குடி 45
மருதாந்த நல்லூா 82
மருதூர் 47
மருந்தீச்சுரர் கோயில் 232
மரூஉப்பெயர் 72
மல்லிகார்ஜுனம் 46
மலைநாட்டுத் தலம் 246, 248, 254
மலைநாடு 242, 243, 244
மலையாளநாடு 77
மழபாடி 229
மறைக்காடு 230, 232
மனோன்மணீயம் 244
மாகறல் 232
மாகாளம் 19, 52
மாகாளன் 53
மாகுடி 232
மாட்டூர் 232
மாடக்கோயில் 32, 172
மாணிகுடி 233
மாணிகுழி 233
மாத்தூர் 234
மாந்துறை 234
மாயவரம் 225
மாற்பேறு 235
மாறன்பாடி 236
மிழலை நாடு 217
மீயச்சூர் 236
முக்கீச்சரம் 59
முக்குளம் 237
முக்கூடல் 237
முசிறி 237
முடிகொண்டசோழபுரம் 295
முண்டீச்சரம் 237
முதல் வரலாறு 289
முதுகாடு 238
முதுகுன்றம் 238
முருகன் பூண்டி 239
முல்லைவாயில் 239
முள்ளூர் 202
முன்னைய பின்னைய ஊர்ப் பெயர் தொடர்பு 7
முனைப்பாடி 17, 37, 240, 241
மூவலூர் 241
மூழிக்களம் 242
மெய்யம் 242
மேலைக் கடம்பூர் 73
மேலைக்காழி 83
மேலைச் சிதம்பரம் 219
மேலைத் திருக்காட்டுப்பள்ளி 91, 92
மேலைத் திருமணஞ்சேரி 60
மேற்காநாடு 66
மொழியியல் நோக்கு 297
மோகூர் 243
ராஜேந்திரப்பட்டிணம் 61
லால்குடி 151
வங்காரப்பேரையூர் 219
வஞ்சி 84, 244
வஞ்சைக் களம் 243, 245
வட்டம் 4
வடஆர்க்காடு மாவட்டம் 14, 59 107, 199, 235, 248
வடகுரங்காடுதுறை 108
வடதிருமுல்லைவாயில் 239
வடமொழிப்பெயர் 295

வடுகூர் 245
வண்டை 246
வண்பரிசாரம் 246
வண்வண்டூர் 246
வரகுணமங்கை 247
வரலாற்றுமூலம் 4, 5
வராகக்ஷேத்திரம் 258
வரிஞ்சையூர் 247
வருணனை 7
வல்லம் 248
வல்லவாழ் 248
வலஞ்சுழி 248, 249
வலம்புரம் 249
வளர்ச்சிபெற்ற சமுதாயம் 7
வன்பார்த்தான் பனங்காட்டூர் 199
வன்னிக்கரந்தை 72
வாஞ்சநதி 169
வாட்போக்கி 251, 252
வாதவூர் 252
வாழ்வியல் 3, 4, 5
வாள் ஒளி புத்தூர் 254
வாறன் விளை 254
வான்மியூர் 254
வானமாமலை 135
விசயமங்கை 255, 256
விசலூர் 256
விடைவாய்க்குடி 256
வித்துவக்கோடு 267
வியலூர் 257
விருத்தபதி 214
விருத்தாசலம் 238
வில்லிபுத்தூர் 258, 259
விலங்குப்பெயர் 291
விலங்குவளம் 296
விளக்கங்கள் 7
விளநகர் 261
விளமர் 261
விற்குடி 262
விற்கோலம் 262
வீரசோழபுரம் 48
வீரட்டானம் 74
வீழிமிழலை 263, 264
வெஞ்சமாக்கூடல் 264
வெங்குரு 99
வெண்காடு 265
வெண்டுறை 266
வெண்ணி 266
வெண்ணிப் பறந்தலை 266
வெண்ணெய் நல்லூர் 267
வெண்பாக்கம் 268
வெள்ளறை 268
வெள்ளாறு 50
வெள்ளியங்குடி 269
வெற்றியூர் 301
வேங்கடசாமி.மயிலைசீனி95, 164
வேங்கடம் 271
வேட்களம் 272
வேட்டக்குடி 272
வேணுபுரம் 99
வேதாரண்யம் 12, 230
வேதாரண்யம் வட்டம் 33
வேள்விக்குடி 60
வேள்விக்குடிச் செப்பேடு 187
வேளுக்கை 68, 69
வைகுந்தம்
வைத்தீஸ்வரன் கோயில் 80, 211
வைப்பூர் 30
ஜம்புகேஸ்வரம் 43
ஸ்ரீசைலம் 46
ஸ்ரீரங்கம் 20, 43
ஸ்ரீவில்லிபுத்தூர் 258

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

1. தமிழர் தோற்கருவிகள் ... ரூ. 10-00
2. தமிழும் தமிழரும் ... ரூ. 5-00
3. தமிழர் எண்ணங்கள் ... ரூ. 16-00
4. உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? ... ரூ. 6-00
5. தமிழ் இலக்கியக் கொள்கை-8 ... ரூ. 20-00
6. எண்பத்தொன்றில் தமிழ் ... ரூ. 65-00
7. பாரதியார் வாழ்க்கை கொள்கைகள் ... ரூ. 8-00
8. ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள் ஓர் மதிப்பீடு ... ரூ. 20-00
9. தொல்காப்பியம் புணரியல் ... ரூ. 10-00
10. தொல்காப்பியம் - தொகை மரபு ... ரூ. 8-00
11. தொல்காப்பியம் - புள்ளிமயங்கியல் ... ரூ. 15-00
12. தொல்காப்பியம் - குற்றியலுகரப்புணரியல் ... ரூ. 11-00
13. தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் ... ரூ. 12-00
14. தொல்காப்பியம் - விளிமரபு ... ரூ. 6-00
15. தொல்காப்பியம் - பெயரியல் ... ரூ. 12-00
16. தொல்காப்பியம் - வினையியல் ... ரூ. 20-00
17. தந்திவனப்புராணம் ... ரூ. 15-00
18. திருமயிலை உலா ... ரூ. 7-00
19. ஊஞ்சல் இலக்கியம் ... ரூ. 10-00
20. மீனாட்சியம்மன் திருப்புகழ் ... ரூ. 10-00
21. வெள்ளைக்காரன் கதை ... ரூ. 7-00
22. சிந்து இலக்கியம் ... ரூ. 8-00
23. மெய்க்கீர்த்திகள் ... ரூ. 20-00
24. பிரபந்த தீபிகை ... ரூ. 12-00
25. திராவிடமொழி இலக்கியங்கள் ... ரூ. 35-00
26. தமிழில் விடுகதைகள் ... ரூ. 12-00
27. இஸ்லாம் வளர்த்த தமிழ் ... ரூ. 15-00
28. தஞ்சைமாவட்ட ஊர்ப்பெயர்கள் ... ரூ. 12-00
29. சித்திரக்கவிகள் ... ரூ. 25-00
30. கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள் ... ரூ 12-00
31. தமிழ்ச் சுவடிகள் அட்டவணை ... ரூ. 6-00
32. கண் மருத்துவம் ... ரூ. 50-00
33. தமிழரின் தாயகம் ... ரூ. 10-00
34. தமிழ் இலக்கியக் கொள்கை - 9 ... ரூ. 20-00
35. தன்வந்திரி குழந்தை வாகடம் ... ரூ. 14-00
36. Language and Grammar-Heritage of the Tamils ... Rs. 22-00
37. Cultural Heritage of the Tamils ... Rs. 20-00
38. Literary Heritage of the Tamils ... Rs. 50-00
39. Philosophical Heritage of the Tamils ... Rs. 22-00
40. Heritage of the Tamils - Art & Architecture ... Rs. 25-00
41. Epigraphical Evidences for Tamil studies ... Rs. 10-00
42. Papers on Tamil Studies ... Rs. 15.00
43. Tamil Drama ... Rs. 20-00
44. A Study of the Perunkatai ... Rs. 12-00
45. Thiru Murugan ... Rs. 5-00
46. Dr. Mu. Va. ... Rs. 20-00
47. Tamil Research through Journals ... Rs. 7-50
48. Dissertations on Tamilology ... Rs. 10-00
49. Tamil writers Directory ... Rs. 10-00
50. Tamil-Text (An-Auto Instructional Course) ... Rs. 25-00
51. Heritage of the Tamils-Siddha Medicine ... Rs. 45-00
52. Siddha Medical Manuscripts in Tamil ... Rs. 8-00
53. Karaikkal Ammaiyar ... Rs. 6-00